ஆறாம் உலகச் சைவ மாநாடு

SIXTH WORLD SAIVA CONFERENCE

DEC 19 - 21, 1997



ஆய்வுச் சுருக்கம்

ABSTRACTS

T.12548

TAMIL UNIVERSITY
THANJAVUR - 613 005.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

ஆறாம் உலகச் சைவ மாநாடு
SIXTH WORLD SAIVA CONFERENCE



ஆய்வுச் சுருக்கம்
ABSTRACTS

GENERAL EDITOR
Dr. G. BHASKARAN



தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர்
TAMIL UNIVERSITY , THANJAVUR

1997

விலை : ரூ 110 /-

SIXTH WORLD SAIVA CONFERENCE

Patrons :

1. **Thava - Thiru Kasivasi Muthukumaraswami Thambiran**
   (Kasi Mutt, Tirupanandal)

2. **Thava-Thiru Santhalinga Ramasamy Adigalar**
   (Perur-Mutt)

3. **Thava-Thiru Siva Nandi Adigalar**
   (Meykandar Mutt-London)

4. **Prof. Dr. K. Karunakaran,**
   Vice-Chancellor, Tamil University, Thanjavur.

Abstract Committee

1. **Dr. P. Krishnan,** Prof. & Head, Dept. of Saiva Siddhanta, University of Madras, Chennai.

2. **Dr. S. Rajendiran,** Associate Professor, Dept.of Philosophy, Annamalai University, Annamalainagar

3. **Dr. G Kulathuran,** Associate Professor, School of Philosophy, Tamil University, Thanjavur.

4. **Dr. S. Krishnamoorthy,** Associate Professor, Dept. of Scientific Tamil and Tamil Development, Tamil University.

5. **Dr. T. Eswarapillay,** Associate Professor, Dept. of Literature, Tamil University.

6. **Dr. J. Rengasamy,** Associate Professor, School of Philosophy, Tamil University.

FOREWORD

It is heartening to note that the Tamil University in collaboration with the Tiruppanandal Mutt and World Saiva Council, London and with the patronage of the Saiva Mutts of Tamilnadu is holding the Sixth World Saiva Conference from 19th to 21st December 1997 in the Tamil University Campus. This conference has as its main theme the title **"Saivism for Universal brotherhood and Human upliftment".** The Conference concentrates on various aspects of Saiva Philosophy as well as its significance in the cultural domain of the Tamils. Topics such as Saiva Philosophy, Religion, Saiva Texts, Saiva Festivals, Saiva Temples, Arts and Culture, Siddhars, Saiva Mutts, Saiva Iconography and Thirumurais form the main core of research papers, lectures and group / panel discussions.

This kind of international programme under the auspices of the Tamil University because this University is considered as quite significant has its academic - research - extension activities centering around language, literature, culture, society, philosophy and so on. This conference is the sixth of its kind, and it is being conducted in Tamilnadu for the second time and under the auspices of the Tamil University for the first time.

There are papers of international standard both in English and Tamil, as well as papers on comparative and contrastive studies, and conceptual studies. As many as 480 papers are to be presented in the seminar sessions and this volume consists of 450 abstracts.

I am indeed very happy that the Centre for Philosophy of this University is able to organise such an international conference

which has its main theme viz. Saivism for Universal brotherhood and Human upliftment. I am sure the conference will evoke keen interest and deep involvement both through academic and research activities among scholars.

I am sure the papers to be presented in the seminar are revised and published in a book form in due course, certainly it will be useful for academicians, researchers as well as for common users, for different purposes. I take this good opportunity to wish the conference all success, and I am sure the papers will be discussed in the real academic and research spirit and involvement.

(K. KARUNAKARAN)
Vice- Chancellor.

நூன்முகம்

உலகெலாம் பரவி உலப்பிலா ஆனந்த வெள்ளத்தை உருவாக்கும் அலகில் சைவநெறி , தான் பிறந்த தமிழ் மண்ணில் ஆறாம் உலக மாநாட்டினை இனிது காண்கின்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையமும் , திருப்பனந்தாள் காசி மடமும் , இலண்டன் உலகச் சைவப் பேரவையும் இணைந்து இம்மாநாட்டைச் சிறப்புற நிகழ்த்துகின்றன. தமிழகத்தின் சைவத் திருமடங்கள் , உலகெங்கிலுமுள்ள சைவ நெறிக் காவலர்கள் , சைவ சமயச் சான்றோர்கள், சைவ சமய ஆர்வலர்கள் , பேராசிரியர்கள் , ஆராய்ச்சியாளர்கள் , பத்திரிகையாசிரியர்கள் ஆகியோரெல்லாம் இம்மாநாட்டிற் கலந்து கொள்கின்றனர்.

ஆறாம் உலகச் சைவ மாநாட்டின் மையப் பொருண்மை **'உலகச் சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டுக்குமான சைவம்'** என்பதாகும். உலகெங்கும் பரந்துள்ள மனிதகுலம் கை கோத்து ஒரு நெறிய மனத்தராய் மனிதநேயத்தை வளர்ப்பதற்கும் , மனிதனை மாமனிதனாக உயர்த்துவதற்கும் இம்மாநாடு அடிகோலும். இப்பொருண்மையை விளக்கும் நெறியில் மாநாட்டில் நிகழும் ஆய்வரங்கிற்கு உலகின் பல பகுதிகளினின்றும் 482 ஆய்வுக் கட்டுரைகள் வந்துள்ளன. இவை கீழ்வரும் பிரிவுகளுக்குரியன.

(1) சைவ தத்துவம் - 62
(2) சைவ சமயம் - 55
(3) சைவ நூல்கள் - 32
(4)சைவத்திருவிழாக்கள் - 17
(5) சைவத் திருக் கோயில்கள் -39
(6) கலையும் பண்பாடும் - 37
(7) சித்தர்கள் - 37
(8) சைவத் திருமடங்கள் - 14
(9) சிவ மூர்த்தங்கள் - 11
(10) திருமுறைகள் - 86

இக்கட்டுரைகளின் சுருக்கக் கோவை தங்கள் கைகளில் தவழ்கின்றது. இக்கட்டுரைகள் சைவ நெறியின் பரப்பையும் ஆழத்தையும் ஒருங்குணர்த்துவன.

எல்லாம் வல்ல சிவனருளால் இம்மாநாடு நடத்துவதற்கு அருள்பாலித்த எம்பெருமான் திருவடிகளுக்கு அடியேனின் பணிவான வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன். இந்த எளியேனுக்கு உலகத்தார் போற்றும் சிவ நெறியாளர்களின் ஆறாம் உலகச் சைவ மாநாட்டினை நடத்துவதற்கும் இந்த ஈடில்லாப் பணியை மேற்கொள்ளுவதற்கும் அருள் கூர்ந்து வாய்ப்பளித்த திருப்பனந்தாள் காசி மடம் , அருட்பெருந் திரு முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் , அருட்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் , உலகச் சைவப் பேரவை - லண்டன்

அருட்பெருந்திரு சிவநந்தி அடிகளார் ஆகியோரின் திருப்பாதம் நோக்கி வணங்குகின்றேன்.

இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய மாண்புநிறை துணைவேந்தர் பேராசிரியர் கி. கருணாகரன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி என்றென்றும் உரித்தாகும். மேலும் இம்மாநாட்டு ஆய்வுக் கருத்தரங்க ஆய்வுச் சுருக்க நூலுக்கு அணிந்துரை வழங்கியமைக்கும் நன்றி.

இந்த ஆய்வுச் சுருக்கத்தைச் செம்மைப்படுத்த அமைக்கப்பெற்ற குழுவினர் :

(1) முனைவர் பி. கிருட்டிணன் , (2) முனைவர் எஸ். இராசேந்திரன் , (3) முனைவர் க. குளத்தூரான் , ,(4) முனைவர் சா. கிருட்டின மூர்த்தி , (5) முனைவர் தா. ஈசுவரபிள்ளை , (6) முனைவர் ஜெ. அரங்கசாமி , . இவர்கள் அறுவரின் சலியா உழைப்பினால் இக்கோவை உருவாகியுள்ளது. இந் நூலின் மெய்ப்புத் திருத்தத்தை முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களும் , முனைவர் தா. ஈசுவர பிள்ளை அவர்களும் பசி நோக்காது கண்துஞ்சாது செய்தளித்தனர். ஆய்வுச் சுருக்க அமைப்புக் குழுவினர் அனைவர்க்கும் என் நன்றி உரியது.

ஆய்வுச் சுருக்க உருவாக்கத்திற்கு மாநாட்டின் அமைப்புச் செயலகத்தில் பணியாற்றும் திரு. கு. திருமாறன் , திரு. க. ஆறுமுகம் , திரு கு. சுகுமாறன் ஆகியோர் பெரிதும் துணை நின்றனர் ; இவர்கட்கு என் நன்றி உரியது.

ஆய்வுச் சுருக்கத்தை அழகுற அச்சிட்டு உதவிய எக்ஸலண்ட் கிராஃபிக்ஸ் நிறுவனர் திரு.க. ரூபன் அவர்களுக்கும் உதவியாளர் செல்வி ஆர். ஜெயலட்சுமி அவர்களுக்கும் என் நன்றியும் பராட்டுதலும் உரியன.

முனைவர் க. பாஸ்கரன்
இயக்குநர் , தத்துவமையம்
அமைப்புச் செயலாளர்
ஆறாம் உலகச் சைவ மாநாடு
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

பொருளடக்கம்

		பக்கம்
1.	சைவ சித்தாந்தம்	1
2.	சைவ சமயம்	48
3.	சைவ நூல்கள்	104
4.	சைவத் திருக்கோயில்கள்	129
5.	திருவிழாக்கள்	138
6.	கலையும் பண்பாடும்	173
7.	சித்தர்கள்	207
8.	சைவத் திருமடங்கள்	247
9.	சிவ மூர்த்தங்கள்	258
10.	திருமுறைகள்	267
11.	இணைப்பு	335

அமர்வு ஒன்று

சைவ சித்தாந்தம்

1.1 சைவ சித்தாந்தமும் திருவள்ளுவரும்

க.சி. அகமுடைநம்பி
பொறியாளர், நாகப்பட்டினம்

சைவத்தின் கருப்பொருள், பதி-பசு-பாசம் என்ற முக்கோணம் . பதி சிவனையும் , பசு தனித்தனி உயிரினங்களையும் , பாசம் உயிர்களைப் பிணைத்துள்ள தளைகளையும் குறிப்பனவாம்.

மாயையில் கட்டுண்டிருக்கும் உயிரினங்களைச் சிவனாகிய இறைப்பேராற்றலுடன் இணையுமாறு ஆற்றுப்படுத்துகிறது சைவம்

பாசம் என்ற தளை மூன்று மலங்களைக் கொண்டது. அவை ஆணவ மலம், கர்ம மலம் ,மாய மலம் என்பனவாம்.

ஆன்மா தனது ஆற்றலை உணராமல் , உடல் அளவிலேயே தன்னைக் கருதிக்கொள்கிறது. இதுவே ஆணவ மலம். இதனால் உடல் அளவிலான இன்பங்களையே துய்ப்பதும் புற வாழ்வில் உழல்வதுமாக இந்த ஆன்மா , கர்மமலத்திற்கும் பிறவிச் சுழற்சிக்கும் காரணமாகிறது. மூன்றாவதாகிய மாய மலம் , பொருள்கள் மீது பற்று வைப்பதால் உண்டாகிறது.

ஆன்ம ஞானம் பெறும் நிலையில் கர்ம மலம் , மாய மலம் ஆகிய இரண்டிலிருந்தும் மனிதன் விடுபடலாம்.எச்சமயத்தையும் சாராமல், மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நெறிமுறைகளை வகுத்தளிப்பது வள்ளுவம். அது போழ்து , உலக ஒருமைக்கு உறுதுணையாக விளங்குகின்ற சைவம் போன்ற சமய நெறிகளை வள்ளுவம் உயர்த்திப் பிடிக்கிறது.

'' அன்பே சிவம் '' என்பதை '' அன்பின் வழியது உயிர்நிலை '' என்றும் , ''ஒன்றே குலம் '' என்பதைப் '' பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் '' என்றும் ''ஒருவனே தேவன் '' என்பதை '' ஆதிபகவன் முதற்றே உலகு'' என்றும் , வள்ளுவம் சைவத்தோடு இணைந்து இசைக்கிறது.

ஆகவே, வள்ளுவத்தின் துணை வலுவுடன் சைவ நெறியை முன்னெடுத்துச் சென்றால் , உலகச் சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் இன்னும் அதிகமான அளவில் சைவம் துணை போக முடியும் என்பதைச் சைவ நெறியாளர்கள் கருதிப் பார்க்கலாம்.

1.2 சிவப்பிரகாசம் உணர்த்தும் சித்தாந்தம்

முனைவர் தி. அரங்கநாதன்
அரசினர் ஆடவர் கல்லூரி ,கும்பகோணம்

சிவப்பிரகாசம் நூற்பெயர் விளக்கம் - காலம் - ஆசிரியர் - முதனூல் - வழிநூல் - தனித்தன்மை.

பதி இயல்பு - பதி இலக்கணம் - சிருட்டி முறை - பிற சமய மறுப்பு - சிவஞான போதம் - சிவஞான சித்தியார் ஒப்பீடு - தனித்தன்மை - உணர்த்தும் முறை - புதிய கருத்துக்கள் - உவமைகள்.

பசுஇயல்பு - பசு இலக்கணம் - ஆணவ மல இயல்பு - சாத்திரநூல்கள் கூறும் கருத்து - தனித்தன்மை - உணர்த்தும் முறை - புதிய கருத்துக்கள் - உவமைகள்.

பாச இயல்பு - சாத்திர நூல்கள் ஒப்பீடு - சிவப்பிரகாசம் தனித்தன்மை - உணர்த்தும் முறை - உவமைகள் - புதிய கருத்துக்கள்.

மாயை - தத்துவங்கள் உதிக்கும் முறை - உலக உயிர்கள் படைப்பின் வேறுபாட்டுக்கான காரணம் - விளக்கம்.

கன்மம் - கன்மம் விளக்கம் - சாத்திர நூல்கள் ஒப்பீடு - தனித்தன்மை - உணர்த்தும் முறை.

நூலின் சிறப்பு ஆராய்தல் - காரணங்களைப் பாடலிலேயே விளக்கும் முறை - வடசொல் , தமிழ்ச் சொல் கலந்து பொருள் விளக்கும் முறை -பிற சமய மறுப்பு உணர்த்தல்.

1.3 சைவ, ஸ்ரீவைணவ சமயங்களில் இறைவன் ,உயிர், உலகம் என்னும் முப்பொருள் இணைப்பு - ஓர் ஒப்புநோக்கு

முனைவர் ஜெ. அரங்கசாமி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தென்னிந்தியாவில் தழைத்தோங்கி வளர்ந்த சைவ, ஸ்ரீவைணவ சமயங்கள் அனுபவிக்க வேண்டிய முதற்பொருளாம் இறைவன், அவ்வனுபவத்தைப் பெறும் உயிர்கள், அவ்வனுபவத்திற்குத் தடையாகவிருக்கும் கட்டுகள், அக்கட்டுகள் நீங்கக் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள் மற்றும் உயிர் அத்தடைகளைத் தாண்டி இறைவனுடனிருந்து பேரின்பத்தை அனுபவித்தல் என்னும் ஐந்து பொருண்மைகளைப் பற்றிய கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன.

இவற்றின் ஊடாக ' இறைவன்-உயிர்-உலகம் ' என்னும் முப்பொருள் இணைப்புப் பற்றிய உண்மைகளைப் பன்முக நோக்கில் ஆய்வதுடன் இக்கருத்துக்கள் இங்ஙனம் அமைவதற்கு எங்ஙனம் சமுதாய மற்றும் கலாச்சார-பண்பாட்டுக் கூறுகள் காரணங்களாக அமைகின்றன என்பது குறித்தும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சைவ சமயத்தின்படி முப்பொருள்கள் ஒரே குழுமமாய்ச் சுத்தாத்துவித நிலையில் பிரிக்கமுடியாதவாறு தொடர்பு பெற்றிருக்கின்றன. இவற்றில் இறைவன் தனது 'உண்மை இயல்பில்' சத்சித்தானந்தமாகவும், 'பொது இயல்பில்' சக்தியாகவும் மாறியுள்ளான். உயிர்கள் இச்சை, ஞானம், கிரியை என்னும் முச்சக்திகளைக் கொண்டு அறிவுடையனவாயும் 'செம்பிற் களிம்பென' ஆணவ மலம் என்னும் சகசக் குற்றமுள்ளனவாயும் இருக்கின்றன. பாசம் அவித்யை, கர்மம், மாயை என முன்று நிலைகளில் உயிர் இறைவனை அறியத் தடையாக இருக்கின்றது.

ஸ்ரீவைணவ சமயத்தின்படி, முழுமுதற்பொருளாம் ஸ்ரீமன் நாராயணன் கணக்கிடமுடியாத மங்களக் குணங்களைக் கொண்டு குணியாகவிருக்க, அவனுக்குச் சேதன அசேதன பொருள்கள் குணங்களாக, அவை 'அப்ரதக்சித்த விசேச' நிலையில் எக்காலத்தும் பிரிக்கமுடியாதவாறு பிரகார-பிரகாரி, ஆதார-ஆதேய, சேச-சேசி முதலாக ஒன்பது வகைகளில் விசிஷ்டாத்துவித நிலையில் தொடர்பு பெற்றிருக்கின்றான்.

இவ்விரு சமயங்களும் புலன்கடந்த இறைநிலையைப் பற்றி வேறுவேறு கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அவற்றின் ஊடாகவுள்ள ஒற்றுமைகள் இக்கட்டுரையில் பகுத்து, ஆய்ந்து வகைப்படுத்தப்பெறும். இவ்விறைநிலையைப் பின்னணியாகக் கொண்டு பின்வரும் உண்மைகளை முன்வைத்து அவை அங்ஙனம் அமைவதற்கான காரணங்கள் பற்றி நுணுகப்பெறும் . இறைவன் 'உண்மை இயல்பு', 'பொது இயல்பு' என இரு நிலைகளில் இருக்கிறான் ; உயிர்கள் பல; கட்டு ஆணவம், கன்மம், மாயை என மூன்றாகவிருக்கிறது; உயிர் இறைவனுடன் இரண்டறக் கலக்காது, பிரிந்தேயிருந்து இறையின்பத்தை அனுபவிக்கிறது; இறைவனை அடையப் பொதுவழிகள் ஏற்கப்பெறினும் சிறப்புநிலையில் குறிப்பிட்ட வழிகள் முன்மொழியப் பெறுகின்றன; முப்பொருள் குழுமமாய் இருக்கின்றது.

கட்டுரையில் இறுதிசெய்யப்பெறும் கருத்துக்கள் எங்ஙனம் தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உதவி, அவர்களை இறைநிலைக்குப் பக்குவமடையச் செய்து, இவ்வுலகிலும் இறையுலகிலும் செம்மையுற வாழ வழியமைக்கும் என்ற உண்மை முடிவில் சிறப்பாக நோக்கப் பெறும்.

1.4 உமாபதி சிவாச்சாரியார் அருளிய சத-ரத்ன-சங்க்ரஹம்

எஸ். அருணசுந்தரம்
சமஸ்கிருதக் கல்லூரி , சென்னை

உமாபதி சிவாச்சாரியார் கி.பி. பதின்முன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சைவப் பெரியார் ஆவார். சிதம்பரத்தில் வாழ்ந்த இவர் அங்கு ஒரு மடத்தையும் நிறுவிச் சைவ சமயத்தைப் பரப்பி வந்தார். அங்குச் சிதம்பர நாதன், காமேச்வரீ மற்றும் பல தேவதைகளை இவரே ஸ்தாபனம் செய்தார்.

தமிழில் 14 சாத்திரங்களுள் ''உண்மை நெறி விளக்கம்'' முதலிய 8 நூல்களை இயற்றிய இவர், வடமொழியிலும் பல நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்றே ''சத-ரத்ன-சங்க்ரஹம்'' என்ற நூல் ஆகும்.

சத-ரத்ன-சங்க்ரஹம்

இந்நூல் உமாபதி சிவாச்சரியார் (உமாபதி) அவர்களால் தொகுக்கப்பட்ட ஒன்றாகும். சத-நூறு, ரத்ன-ரத்தினங்கள், சங்க்ரஹம்-திரட்டு. அதாவது '' நூறு ரத்தினங்களின் திரட்டு'' என்று பொருள். ரத்தினங்களுக்கு ஒப்பான நூறு ஆகம ஸ்லோகங்களை இந்நூலில் திரட்டியுள்ளார்.

நூற்பொருள்

'' சிவம் ப்ரணம்ய '' என்ற ஆகம ஸ்லோகத்துடன் தொடங்கும் இந்நூலானது, சைவ சிந்தாந்தம், சைவமதம், தத்துவ நிரூபணம், ஆத்மார்ப்பணம், சாத்திரங்களில் முழு நம்பிக்கை, சடங்குகளின் பொருள், யோக விஷயங்கள், சிவனை அடையும் வழி, சத்திநிபாதம், தீட்சை ஆகியவற்றைத் தெளிவுபடக் கூறுகிறது.

முக்தியைப் பரமுக்தி, அபரமுக்தி என இருவகையாய்ப் பிரிப்பது, அத்வைத சாத்திரங்களில் காணப்படுவது போல '' ஜீவன் முக்தநிலை'' என்பதை விளக்குவது, முக்தி நிலையை அடைந்தவனுக்கும் உடல் உண்டா? அதன் காரணம், கன்மமலம் தொலையும் விதம் ஆகியவற்றை விளக்குவது இதன் சிறப்புத் தன்மையாகும்.

1.5 சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மைகள்.

வ.சா.அபிராமவள்ளி
எத்திராஜ் கல்லூரி , சென்னை

சமயம் என்பதன் பொருள் விளக்கம் - சமயத்தின் வேறுபாடுகள் - அகச்சமயம் - புறச்சமயம், சைவம் என்பதன் பொருள் விளக்கம். சித்தாந்தம் என்பதன் பொருள் விளக்கம். சந்தானா சாரியர்கள் என்பவர் எவர்? அகச்சந்தானா சாரியர்கள் விளக்கம் - புறச்சந்தானா சாரியர்கள் விளக்கம். நந்தியம் பெருமான் - சனற்குமார முனிவர் - சத்தியஞானதரிசினிகள் - பரஞ்சோதிமுனிவர் - மெய்கண்டார் - அருள் நந்திசிவாசாரியார் - மறைஞான சம்பந்தர் - உமாபதிசிவம் - பதினான்கு - சாத்திர நூல்கள் பெயர்ப்பட்டியல். சித்தாந்த வழிமுறை - சித்தாந்தப் பொருள்வகை - மெய்கண்டார் கூறும் விளக்கம் -பிரமாணம் - இலக்கணம் - சாதனம் - பயன் என நான்கு பற்றிய விளக்கம். முப்பொருள் உண்மைகள் பதி - பசு - பாசம் - முப்பொருள் அநாதி. பதி உண்மை சற்காரியவாதம் - பதி இலக்கணம் பதி, பசு, பாசங்களின் தொடர்புகள் - பதியின் பொது இயல்புகள் - சிறப்பு இயல்புகள், இறைவனை அறியும் வகை - மூவகைத் திருமேனிகள். பசு உண்மை - உயிர் என்பதன் விளக்கம். உயிர்களின் உண்மை இயல்பு - பொது இயல்பு. அவத்தைகள் - காரணம் - காரியம் - கேவலம், சகலம் , சுத்தம், மூவகை உயிர்கள் - விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர், பாதம் மூன்று - ஆணவம், கன்மம் - மாயை ஆணவப்பொருள் விளக்கம் - அதன் உண்மை - பொது இயல்புகள் - ஆணவம் உண்மை. கன்மம் மலம் என்பதன் விளக்கம் - தூலகன்மம் - சூக்குமகன்மம். ஆகாமியம், சஞ்சிதம் - பிராரத்தங்கள் - மாயாமலம் - மலங்களில் மூன்று வகை - சித்தமாயை - அசுத்த மாயை - பிரகிருதி மாயை - சிவதத்துவம் - வித்தியாதத்துவம் - ஆன்மதத்துவம் - அந்தக்கரணம் - ஞானேந்திரியம் - கன்மேந்திரியம் - தன்மாத்திரை - பூதங்கள் - இருவகை உலகம் - காரணப்பிரபஞ்சம், காரியப் பிரபஞ்சம் - நால்வகைவாக்கு - தாத்துவிகங்கள் - பஞ்சகலைகள் - ஆத்துவாக்கள் பதிஞானம் - பசுஞானம் - பாசஞானம் - பாசநீக்கம் - சிவப்பேறு - அடையும் வகைகள் - ஞானத்தின்பயன் பற்றிய விளக்கம் - முத்தி - பரமுத்தி - அபரமுத்தி - பதமுத்தி. சீவன் முத்தி - சித்தாந்தமுத்தி.

1.6 சைவ சித்தாந்தத்தில் குரு

கி. ஆதிநாராயணன்
அரசினர் கலைக் கல்லூரி, செய்யாறு

சைவ சித்தாந்தத்தில் இறைவனே மானிடச் சட்டை தாங்கி 'குரு' வடிவமாக வந்து உயிர்களை ஆட்கொள்வான்.

குரு சொற்பொருள் விளக்கம் - ' கு ' என்ற எழுத்து இருளைக் குறிக்கும்; ' ரு' என்ற எழுத்து அவ்விருளைப் போக்குபவரைக் குறிக்கும். அஞ்ஞான இருளைப் போக்கி மெய்ஞ்ஞான ஒளியைத் தரும் பிரமம் குருவே. மேலும் ஒளி , ஒளி நெறி, ஒளிமண்டலம் , நந்தி என்ற பொருள்களும் உண்டு.

சமய வாழ்வில் குருவின் தேவை

உயிரறிவை மறைக்கும் அஞ்ஞானத்தை அகற்றி ஞானத்தை ஊட்டக் கூடிய குருவின் துணை தேவை. குருவைக் காட்டிலும் அதிக மான தத்துவம் இல்லை, குருவைக் காட்டிலும் அதிகமான தவம் இல்லை, குருவைக் காட்டிலும் அதிகமான ஞானம் இல்லை.

குருசீடர் உறவு

ஆன்மாவினை ஊக்கி விடத்தக்க தூண்டுதல் சக்தி இன்னோர் ஆன்மாவிடமிருந்தே வரவேண்டியுள்ளது. எந்த மனிதனுடைய ஆன்மாவிலிருந்து இத்தகைய தூண்டுதல் வருகிறதோ அவரைத்தான் குரு, ஆசாரியர் என்று அழைக்கிறோம். எவனது ஆன்மா இந்தத் தூண்டுதலை ஏற்கிறதோ அவனைச் சீடன் மாணவன் என்கிறோம்.

குருவைத் தியானிக்கும் முறை

ஆயிரம் இதழ் கொண்ட தாமரையில் (பிரம்ம ரந்திரம்) அ, க,த, என்ற அட்சரங்களை முதலாகக் கொண்ட மூன்று பத்மங்களை உடைய ஹம்ச முக்கோணத்தின் மத்தியில் குருவைத் தியானிக்க வேண்டும்

முடிவுரை

அவர் (குரு) வழிநின்று அவன் (இறைவன்) தாள் அடைவோமாக.

1.7 சத்திநிபாதம்

முனைவர் வீ.உண்ணாமலை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சத்திநிபாதம் என்பதன் பொருள் சக்தி-திருவருள்; நிபாதம்-வீழ்தல்; பக்குவமுடைய ஆன்மாவில் திருவருள் பதிகை. ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். இம்மூவகை ஆன்மாக்களில் உள்ள மும்மலங்களை இறைவன் அருவமாய், குரு வடிவமாய், தன்னிலை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவகை நிலைகளில் தன்னை உணர்த்துகின்றான். மந்த தரம், மந்தம், தீவிரம், தீவிர தரம் என்னும் நால்வகை சக்தி பாதங்கள் வீழுங்காலத்து இம் மும்மலங்கள் ஓடப்பெற்று ஆன்மா தூய்மை பெறுகின்றது. உயிர்கள் வினைப்பயனை நுகரமாட்டாமல் மறைத்து வினையை ஊட்டும் சக்தி '**மறைப்பாற்றல்**' எனப்படும். இவ்வருள் மறைப்பாற்றல் '**திரோதான சக்தி**' எனப்படுகின்றது. இதன் ஆற்றலை அருளாளர்கள் தத்தமது அனுபவத்தால் உணர்ந்துள்ளனர்.

இறைவனின் திருவருள் பெற ஞானகுரு நன்கு வாய்த்தல் வேண்டும்; ஆன்மாவும், ஆசானும் மும்மலமறுத்து இருத்தல் வேண்டும் என்பது சித்தாந்தக் கோட்பாடாகும். அப்போதுதான் இறைவன் அருள்பாலிப்பான். சத்திநிபாதம் கிட்டிய நிலையில் ஆன்மா பித்து நிலையை எய்திவிடுகின்றது. இத்தகைய ஆன்மாவே மெய்ப்பொருள் உணர்ந்து வீடுபேறு எய்துகின்றது. உயிர்கட்கு ஞானம் நல்கும் தருணம் வராவிடினும் உயிர்களின் பிறவி மயக்கத்தை ஒழித்து வீடுபேறு அடையச் செய்வது இறைவனின் கடமை என அருளாளர்கள் குறிப்பிடுகின்றனர். சத்திநிபாதம் சொல்லாலும், பொருளாலும், அளவையாலும் தொடர முடியாதது என்னும் பேருண்மையைத் தாயுமானவர் வாக்கால் அறிய முடிகின்றது.

1.8 சைவ சித்தாந்தமும் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கமும்

ஊரன் அடிகள்
வடலூர்

சைவராய்ப் பிறந்த வள்ளலார் பின்னாளில் சமரச சுத்த சன்மார்க்கம் என்றொரு புதிய நெறியைக் காணுதல் - மறைமலை அடிகளும்

திரு.வி.கா.வும் தங்களைச் சீர்திருத்தச் சைவர் என்று சொல்லிக்கொள்ளல் - சைவத்தில் வள்ளலார் சீர்திருத்தம் செய்ய எண்ணினாரா? அல்லது புதிய ஒரு சமயத்தையே உண்டாக்கினாரா? - வள்ளலார் தம் இளமைக் காலத்தில் முருகனை வழிபடு கடவுளாகவும் திருஞானசம்பந்தரை வழிபடு குருவாகவும், திருவாசகத்தை வழிபடு நூலாகவும் கொள்ளல் - திருக்குறள் ,திருமந்திரம் ,திருவாசகம் ஆகிய மூன்றையும் முக்கிய பிரமாண நூல்களாகக் கொள்ளல் - சமயக்குரவர் நால்வரையும் போற்றி நான்கு பாமாலைகள் செய்தல் - திருவருட்பாவில் பல இடங்களில் நால்வரைப் போற்றுதல் - சிவத்தலங்களைத் தரிசித்தல் ,பாடுதல் - வள்ளலார் கண்ட சிதம்பர ரகசியம் - தில்லைச் சிதம்பரத்தைப் பூர்வஞான சிதம்பரம் என்றும் தாம் ஞானசபை அமைத்த வடலூரை உத்தர ஞான சிதம்பரம் என்றும் வள்ளலார் கூறுதல் - சைவசித்தாந்தம் கூறும் மார்க்கம் நான்கில் நான்காவதாகிய சன்மார்க்கத்தைச் சமரச சுத்த சன்மார்க்கமாக வள்ளலார் விளக்கி அமைத்தல் - அது ஷடாந்த சமரசம் எனல் - நான்கு மார்க்கங்களையும் பற்றி இதுவரை கூறப்பெற்றுவந்த விளக்கத்துக்கு மேல் ஒரு புதிய விளக்கத்தை வள்ளலார் கூறுதல் - புதிய புருடார்த்தங்கள் 1. ஏமசித்தி , 2. சாகாக்கல்வி ,3. கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் , 4. தத்துவநிக்கிரகம் - சைவசித்தாந்தத்தில் கூறப்பெறாத சாகாக்கலை , வேகாக்கால் ,யோகாப்புனல் என்ற மூன்றையும் வள்ளலார் முக்கியமாகக் கூறுதல் - முடிந்த முடிவான பேரின்பப் பேற்று நிலையை '' முத்தி '' என்று சைவசித்தாந்தம் கூற , ''சித்தி'' என்று வள்ளலார் கூறுதல் - முத்திக்கும் சித்திக்கும் உள்ள வேறுபாடு - சைவ உணவுக்கொள்கை சைவத்தைவிடச் சன்மார்க்கத்தில் அதிமாக வற்புறுத்தப் பெறுதல் - இறந்தவர்களைப் புதைப்பதும் அவ்வாறே அதிகம் வற்புறுத்தப் பெறுதல் - சரியை , கிரியை , யோகம் , ஞானம் , திருநீறு, பஞ்சாக்கரம் போன்ற சாதனங்களை உடன்படும் வள்ளலார் இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஜீவகாருண்ய ஒழுக்கத்தையே முதற்சாதனமாக , முக்கிய சாதனமாக , முடிவான சாதனமாகக் கொள்ளல் - சைவ சித்தாந்தம் கூறும் அனுபவ நிலைகள் பலவற்றையும் வள்ளலார் கூறுதல் , அனுபவித்தல் - சைவசித்தாந்தத்தைப் பூர்வமாக்கிச் சமரச சுத்த சன்மார்க்கத்தை உத்தரமாக்குதல் - சைவசித்தாந்தத்துக்கும் சமரச சுத்த சன்மார்க்கத்துக்கும் உள்ள ஒற்றுமை , வேற்றுமைகள் .

1.9.அறிவியல் உலகில் சைவசித்தாந்தம்

க. கணேசலிங்கம்
பொறியாளர் (ஓய்வு), சென்னை

அறிவியல் விஞ்ஞான வளர்ச்சியால் மனிதனின் எண்ணமும் செயலும் மாற்றமடைகின்றன. வளமான வாழ்க்கையைக் காண அவன் விழைகிறான். இது மனிதனின் புறநிலை தொடர்பானது.

உலகச் சகோதரத்துவத்துக்கும் மனித மேம்பாட்டுக்கும் அடிப்படையான அகநிலை வளர்ச்சியையும் மாற்றத்தையும் அறிவியல் அளிக்க முடியாதிருக்கின்றது. இவற்றுக்குச் சமயங்கள் துணைபுரிகின்றன. சமயத் தத்துவங்கள் வாழ்வியல் நோக்கை நெறிப்படுத்தி அகநிலைப் பண்புகளை வளர்ப்பன.

எதிர்கால உலகம் அறிவியல் சார்ந்த சமயத் தத்துவங்களையே ஏற்றுக்கொள்ளும். சித்தாந்த அணுகுமுறைகள் அறிவியல் சார்ந்தவை. அதன் கொள்கைகள் விஞ்ஞானக் கருத்துக்களுக்கு உடன்பாடானவை. சித்தாந்தம் கூறும் உலகத் தோற்றமும் ஒடுக்கமும் பற்றிய கருத்துக்களும், சற்காரியவாதம் போன்ற கொள்கைகளும் பிறவும் விஞ்ஞானக் கருத்துக்களாகவே உள்ளன. எதனையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்க்க விழையும் எதிர்கால உலகில் சைவ சித்தாந்தத்துக்கு முக்கிய இடமுண்டு.

அன்னியமதத்தினர் பலர் சைவசித்தாந்தத்தை அறிவதிலும் ஆய்வு செய்வதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களின் நோக்கம் எதுவாக இருப்பினும் பிறமதத் தத்துவக் கொள்கைகளில் சைவசித்தாந்தம் பெருமாற்றத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது. பல்வேறு சமயங்களிடை ஒருங்கிணைந்த ஒரு தத்துவச் சிந்தனையையும்அதன் மூலம் உலகச் சகோரத்துவத்தையும் உருவாக்க இது உதவும்.

பல பிறவிகளை எடுத்து , அனுபவம் பெற்று, அதன் மூலம் அறிவு விளங்கி , அனைத்தையும் கடந்த அருளே உருவான பொருளைக்கண்டு, நிலைத்த இன்பம் துய்க்கலாமென அறிவியலுக்கு முரண்படாத விளக்கம் அளிக்கிறது சைவசித்தாந்தம். ஆன்ம வளர்ச்சியைத் தந்து , ஒன்றே குலம் ஒருவனே தேவன் என உணர்த்தி ஒருமைப்பாட்டை வளர்ப்பதன் மூலம் மனித மேம்பாட்டுக்கு வழிவகுக்கிறது.

அன்பும் அமைதியும் கொண்ட மனத்தினாற்றான் உலகச் சகோதரத்துவத்தையும் மனித நேயத்தையும் வளர்க்க முடியும். பொறி புலன்களின் வழிச் சென்று இன்பந்துய்க்க விழைபவரால் இந்த அகநிலைப் பண்புகளைப் பெற முடியாது. எமது உண்மை இயல்பு ஐம்புலன்களின் வழிச் செல்வதல்லவென்றும் இறை வழியில்

செல்வதென்றும் உணரும் போது தன்னலமும் தற்செருக்கும் நீங்கி மனித நேயம் மலர்கிறது. இதற்குத் துணைபுரிவது சித்தாந்த அறிவு. சிவஞானபோதம் இதனை விளக்கி உலகச் சகோதரத்துவத்துக்கும் மனித மேம்பாட்டுக்கும் வழி காட்டும் பாங்கு போற்றற்குரியது.

1.10 சைவ சித்தாந்தத்தில் பதி - பசு - தொடர்பு

பி. கரிகாலன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சைவ சித்தாந்தம் என்றும் உள்ள நித்தப் பொருள்களாகப் பதி , பசு , பாசம் ஆகிய மூன்றை உணர்த்துகின்றது.

இப்பொருட்கள் பதி - இறைவன் என்றும் , பசு - உயிர்கள் என்றும் பாசம் - தளை , உலகம் என்றும் கூறப்படுகின்றது. இம் முப்பொருள்களில் பாசம் - ஆணவம் , கன்மம் ,மாயை என்று மூன்றாகப் பிரிகின்றது.

சைவ சித்தாந்தத்தில் இறைவன் அறிவிக்காமலேயே அறியும் பொருள் ஆதலால் இறைவன் , முற்றறியுடையவன் , பேரறிவுடையவன் , உயிர்களின் அறிவுக்கறிவானவன் என்றும் , உயிர் அறிவித்து அறியும் பொருள் ஆதலால் உயிர்ப்பொருளைச் சிற்றறிவுடையது என்றும் , அறிவாகிய உயிரைக் கட்டி நிற்கும் பாசம் அறிவற்ற சடப்பொருள் என்றும் உணரப்படுகின்றது.

நித்தப் பொருட்களான கடவுள் , உயிர் , ஆணவம் , கன்மம் , மாயை ஆகிய இவ்வைந்து பொருள்களும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியது என்றும் , ஒன்றைப் பிரித்தொன்றை உண்டாக்கியது என்று கூறும் கருத்துக்களுக்கு இடமின்றி இப்பொருள்கள் தொடக்கமும் முடிவுமற்ற அநாதிப் பொருள்கள் என்று அறியப்படுகின்றது.

சைவ சித்தாந்தம் இவ்வைந்து பொருள்களும் சிறப்பியல்பு (சொரூப இலக்கணம்) , பொது இயல்பு (தடத்த இலக்கணம்) என்று இரண்டு இயல்புகள் கொண்டதென்று கூறுகின்றது.

இறைவனின் பொது இயல்பு இரண்டு விதமாக உள்ளது. அதில் ஒன்று ''தன் பேரருளால் உயிர்களோடும் பிற சடப்பொருள்களோடும் ஒன்றாயும் ,வேறாயும் , உடனாயும் ஒரே நேரத்தில் நிற்பதாகும் இதற்குக் காரணம் , ''உயிர்கள் மல நீக்கம் பெற்று இறை இயல்பை அடையவேண்டும் என்னும் பெருநோக்கே ஆகும் '' (பகுத்தறிவுச் சிந்தனைகள் - 10)

இறைப்பொருள் எப்பொருளையும் பற்றாதது; தனித்தது.

உயிர்பொருள் சார்ந்தது ஆகையால் அது பாசத்துடன் தொடர்பு கொண்டது. அதனால் சைவசித்தாந்தம் உயிர் மல நீக்கம் பெற்றுத் தனது திருவடியை அடைய வேண்டும் என்பதற்காக இறைவன் மாயையை தொழிற்படுத்துகின்றான். ஆக இறைவனின் பொது இயல்பு என்பது இறைவனுக்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பையே தெளிவாகக் காட்டுகின்றது என்பதனால் இக்கட்டுரை சைவ சித்தாந்தத்தில் பதி - பசு-தொடர்பு என்ற தலைப்பில் பேரறிவுடைய இறைவனுக்கும் , சிற்றறிவுடைய உயிர்க்கும் உள்ள தொடர்பு பற்றிப் கருத்துக்களை ஆராய்கின்றது.

1.11 சைவ சித்தாந்தம் சுட்டும் பதிக் கொள்கையும் தாயுமானவர் பாடல்களும்

இரா. காஞ்சனா
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே - அல்லாமல் வேறொன்று '' அறியா மனப்பக்குவம் பெற்றவர் தாயுமானவர். அதற்கு அடிப்படையாக நின்றது எல்லா உயிரையும் தன்னுயிர் போல் எண்ணியமையும் , எவ்வுயிரிலும் இறைவனைக் கண்டதுமே காரணம் . இறைவனை ஒளியாய் , ஒளியின் உணர்வாய் , உவகை பொங்கும் களியாய் , ஆனந்தக் கடலாய்க் கண்டவர் தாயுமானவர் . இவரது பாடல்களில் சைவ சித்தாந்தம் சுட்டும் 'பதி' க் கொள்கை எவ்வாறெல்லாம் வெளிப்படுகிறது என்பதையும் , சைவ சித்தாந்த நூல்கள் சுட்டும் பதியியல்பை எவ்வாறு இப்பாடல்கள் எளிமையாக்கி ,இன்று தத்துவக் கல்வி அதிகம் பெறாத ஒருவரும் எளிதில் புரிந்து கொள்வதற்கு ஏற்ப உலகியல் சார்ந்த உவமைகளுடன் விளக்குகின்றன என்பதையும் இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

உமாபதி சிவாசாரியார் 'திருவருட் பயனில்' உலக உயிர்கட்கெல்லாம் தலைவனான பதியின் இயல்பு , பதி முதுநிலை ,பதி இவ்வுலக உயிர்கட்கு இரங்கி , அருட்கடலாம் தன்மை , இறை உண்மை, இறைவனின் மூவகைத் திருமேனிகள் , இறைவனின் சொரூப இலக்கணம் , இறைவன் சிவசக்தியாகவும் , சதாசிவனாகவும் , அம்மையப்பராகவும் இருக்கும் நிலைகள் ,இறைவன் ஐந்தொழிலாற்றி உலக உயிர்களை உய்விக்கச் செய்யும் தன்மை , இறை உணர்த்த உணரும் உயிர்கள் , இறைவனின் பேரருளை உணர்த்தல் போன்ற சித்தாந்தக் கருத்துகள் தாயுமானவர் பாடல்களில் பொதிந்திருப்பதை எடுத்துரைப்பது கட்டுரையின் நோக்கமாகும்.

தாயுமானவரின் பாடல்களுள் பரசிவ வணக்கம் , பரிபூரணானந்தம், பொருள் வணக்கம் , சின்யமாந்த குரு, கருணாகரக் கடவுள் , சச்சிதானந்த சிவம் ,தேஜோ மயானந்தம் ,ஆகாரபுவனம் , சிதம்பர ரகசியம் , சொல்லற்கு அரிய சுகவாரி , சிவன் செயல் , பாயப்புலி , பராபரக்கண்ணி , எந்நாள் கண்ணி, ஆனந்தச் சிரிப்பு , அகவல் பாடல்கள் போன்ற பல பாடல் தொகுப்புகளிலும் இறையாற்றலும் , இயல்பும் அருளாம் தன்மையும் , அதை நாடும் உயிராகிய தாயுமானவரின் மன இயல்புகளும் ஆழ்ந்த தத்துவக் கருத்துகளை எளிமையாக்கிக் கூறுகின்றன. தாயுமானவர் பாடல்கள் இன்றைய மக்களைச் சைவச் செந்நெறியில் கொண்டு செலுத்துபவை எனக் காட்ட முயல்கிறது இக்கட்டுரை.

1.12 சின்முத்திரையின் சிறப்பு

கா. காளிதாசன்
தியாகராசர் கல்லூரி ,மதுரை

தொன்மைச் சிறப்புடைய தமிழினம் பெற்று விளங்கும் தனிச்சிறப்புடைய முகங்கள் இரண்டு. உடல் சார்ந்த உலக வாழ்க்கைக்கு உரிய பொருளிலக்கணம் ஒன்று . உயிர்நிலை சார்ந்த தத்துவ வாழ்க்கைக்குரிய சைவசித்தாந்தம் மற்றொன்று - இரண்டும் முப்பொருள் பார்வை உடையன. சைவசிந்தாந்தம் , என்றும் உள்ள அழிவில்லாத முப்பொருள்களான பதி (இறைவன்) பசு (உயிர்) பாசம் (மும்மலம்) ஆகியவற்றின் மூலம் தத்துவ வாழ்வான உயிரின் படிநிலை வளர்ச்சியினை விளக்கம் செய்கிறது.

உயரின் தன்மை - சத்துப்பொருள் - சார்ந்ததின் வண்ணமாகும் இயல்பு . உயிர் சார் பொருள்கள் -அசத்துப் பொருள் - சித்துப் பொருள் - உயிரின் சார்புநிலைப் பண்பு - சதசத்து - சிவசத்து . உயிரின் படிநிலை வளர்ச்சி - தொல்காப்பியம்- திருவாசகம் - அறிவியலார் கருத்து - உயிர்தன்னை உணர்தல் - தன்சார்பு உணர்தல் - கூடும் சார்பும் - கூடாச் சார்பும் இஃது என உணர்தல் - சின்முத்திரையின் சிறப்பு - உணர்த்த உணர்ந்த மாணிக்கவாசகம் கருத்து. சிவத்தின் தடத்த நிலைத்தோற்றம் - மனித இனங்களுக்கு , மானிடத்தத்துவங்களுக்குத் தமிழர் தந்த அருங்கொடை - சைவசித்தாந்த முப்பொருள் உண்மை விளக்கம் - சின்முத்திரைக் குறிப்பு.

1.13 சைவ சிந்தாந்தத்தில் சன்மார்க்கம்

திரு. மு.பெ. சத்தி வேல் முருகன்
பொறியாளர் (ஓய்வு), சென்னை.

சன்மார்க்கம் என்பது சைவசித்தாந்தம் கூறும் மார்க்கங்களில் முடிவான நான்காவது மார்க்கம். அம்மார்க்கங்களாவன :

1. தாசமார்க்கம் 2. சற்புத்திரமார்க்கம்
3. சக மார்க்கம் 4. சன்மார்க்கம்

இம்மார்க்கங்கள் நான்கும் எந்த ஒன்றிலும் ஈடுபடும் போது ஆன்மா சந்திக்கும் மார்க்கமாகும். சன் மார்க்கம் என்பது ஏறுநெறி என்ற பொருள் தரும். ஏறுநெறியில் எதிலும் நான்கு கட்டங்களை ஒருவன் சந்தித்தே ஆக வேண்டும். முதலில் எதில் தொடர்பு கொள்கிறானோ அதற்கு அடிமையாதல். இதனைத் தாச மார்க்கம் என்றனர் பெரியோர். பின்னர் அந்த நெறியில் பழகப் பழக அந்த நெறியில் தனக்கு ஓர் உரிமை தோன்றும். அப்பாவின் சொத்தில் பிள்ளைக்கு வரும்உரிமை போல: இவ்வுரிமை தோன்றுவதால் இதனை சற்புத்திர மார்க்கம் என்றனர். உரிமை பெற்ற நெறியில் மேலும்மேலும் பழக அந்த நெறிக்கும் தனக்கும்தோழமை போன்று மிக நெருங்கிய நெருக்கம் ஏற்படும். இதனைச் சகமார்க்கம் என்றனர். இதற்கும் மேலாகப் பழகப் பழக நெருக்கம் என்பது போய் அதுவே தானாக ஒன்றிவிடும் நிலை ஏற்படும். இதைச் சன்மார்க்கம் என்றனர் பெரியோர்.

இந்த நான்கு மார்க்கமும் உலகியலானாலும் அருளியலானாலும் எல்லாவற்றிற்கும் பொது. இறைவனுடன் அவனே தானாகும் சன் மார்க்கம் சட்டென்று எளிதில் கிடைக்காது . முன்னே குறிப்பிட்ட ஏறு நெறியில் தாச, புத்திர , சக , சன்மார்க்க படிமுறையில் ஒவ்வொரு தத்துவத்தையும் ஏறிக் கடந்து 36- ஆவது தத்துவமாகிய நாத தத்துவத்தையும் கடந்து இறைவனை அருட்சத்தியின் உதவியால் அடைதல் வேண்டும்.

இதுவரை இறைவனை மட்டும் எண்ணிப் பத்தியில் ஏறிய ஆன்மா இனி இறைவனை எல்லா உயிர்களிலும் கண்டு அவ்வழியில் சன்மார்க்க நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இதுவே வேதாந்த , சித்தாந்த அனுபவத்திற்கு ஆன்மாவை ஏற்றிவிடும் . இதுவே ஈசனுக்கு அன்பில்லார் , அடியவர்க்கு அன்பில்லார், எவ்வுயிர்க்கும் சூத்திரப் பகுதியில் வலியுறுத்தப்பட்டது ,இந்த சன்மார்க்கமே நாம் கைக் கொள்ள வேண்டியது.இதுவே பேரா இயற்கைப் பேரின்பமாகிய ஆன்ற நலத்தை அருளுவது

சன்மார்க்கமே தழைக !

1.14 அறிவாராய்ச்சியியல் , அருளியல் இணைப்பு விளக்கத்தில் அறிதல் நிகழ்ச்சி முறைமை

முனைவர் சா. சரவணன்
சென்னைப் பல்கலைக்கழகம்

இக்கட்டுரை அறிவான் , அறியப்படும் பொருள் , அறிவு என்ற மூன்றனுக்குமுள்ள தொடர்புகளை விளக்குகிறது. அறிவு பிழையானதாகவோ சரியானதாகவோ இருக்கலாம். அறிவியல் உண்மை, பொருளியல் தன்மை இரண்டும் வெவ்வேறானவை எனக்கூறிய திருவள்ளுவர் வழி நின்று கட்டுரை விளக்குகின்றது. ஆன்ம சித்சக்தியின் இன்றியமையாமையும் இறைவனின் அருளும் அறிவியல் வளர்ச்சிக்கு எத்துணை இன்றியமையாதது என்பதைக் கட்டுரை விளக்குகிறது. பல பிரமாணங்கள் இருந்தாலும் அனுபவத்தில் ஒரே அறிதல் நிகழ்ச்சி முறை உள்ளது என்பதை இக்கட்டுரை மெய்கண்ட சாத்திரம் வழி நின்றும் மணிவாசகத்தின் வழிநின்றும் விளக்குகிறது.

1.15 சற்காரிய வாதமும் சைவமும்

ஆ. சிவலங்கனார்
மயிலம்

முன்னுரை

சத்-உள்ள பொருள் ; காரியம் - அதன் நிலை மாற்றமாகிய வெளிப்படுபொருள். மண் சத்துப்பொருள் ; குடம் அதன் காரியப்பொருள் உள்ள பொருளே காரியப்பொருளாக மாறும். அதனால் , 'உள்ளதே தோன்றும்'; இல்லது தோன்றாது என்பது பெறப்படும். அதனால் 'உள்ளது அழியாது என்பதும் பெறப்படும். அதனால் உள்ளது அழியாது இல்லது தோன்றாது ' என ஒரு வாதம்கொண்டனர் சாங்கியர். அது 'சற்காரிய வாதம், எனப்படும். அவ்வாதத்தைப் பிற மதத்தார் சிலரும் ஏற்றனர். அவருள் சைவரும்சேர்வர்.

சைவர் பதி, பசு, பாசம் என்னும்மூன்றும் உள்ள பொருள் என்பர். பாசம் உயிரைப்பற்றியது . அது ஆணவம் , கன்மம் , மாயை என மூவகைப்படும் என்பர். ஆணவம் எப்போதும் உயிரைப்பற்றி உடன் இருப்பது. அது உயிர் முத்தியடையும் போது எப்படியாகும் ? இவ்வினாவுக்கு உயிரைவிட்டு நீங்கிவிடும் என்பாரும் , நீங்காமல் இருக்கும் என்பாரும் உளர். இதைச் சற்காரிய வாதப்படி பார்க்கலாம்.

ஆணவம்

ஆணவ மலம் அநாதியே உயிரைப் பற்றியதாயின் உள்ளது அழியாது என்பதற்கேற்ப முத்திநிலையிலும் உயிரைப் பற்றியே நிற்கும் என்பது உறுதி. சிவஞான தீபம் எனும் நூல் இதைத் தெளிவுபடுத்தும் . ஆணவத்தின் தொழில் மறைத்தல். உயிர் பெத்த நிலையில் உள்ள போது ஆணவம் அதற்குக் கடவுளை மறைத்து உலகைக் காட்டும். முத்திநிலையில் உள்ள போது உலகை மறைத்துக் கடவுளைக் காட்டும். எனவே எப்போதும் ஆணவம் உயிரைப் பற்றியே நிற்கும். இது சற்காரிய வாதத்திற்கு ஏற்றதாம்.

இட்டலிங்கம்

சைவருள் ஒரு பிரிவினராகிய வீரசைவர் தம் உடம்பில் இட்டலிங்கம் அணிந்திருப்பர். அதன்நோக்கம் எங்கும் உள்ள இறைவன் உடம்பிலும் உள்ளான் என்பதைத் தெரிவிப்பதாகும். இறைவன் மண் முதலிய பஞ்சபூதங்களாக உள்ளவன் என்பதற்குத் திருவையாறு (மணி), திருவானைக்கா (நீர்) , திருவண்ணாமலை (தீ) , திருக்காளத்தி (காற்று), சிதம்பரம் (ஆகாயம்) ஆகிய தலங்களிலுள்ள இலிங்கங்களைக் கூறுவர் சைவர். பஞ்சபூதங்களில் கலந்திருக்கும் அல்லது பஞ்சபூதவடிவினனாக இருக்கும் இறைவன் பஞ்சபூத பரிணாமமாகிய உடம்பிலும் இருக்கிறான் என்பதைக் காட்டுவதே இட்டலிங்கம் அணிதல் என்பர் வீரசைவர்.

எனவே அழியாப் பொருள் காரியப்படும்போது அதன் அடையாளமும் காரியத்துள் இருக்கும் என்பதாம். இது சத்காரிய வாதம்.

1.16 இசைப் பேருரையில் சைவ சித்தாந்தம்

வி. சுப்பராமன்
ஆய்வாளர், சென்னை

முகவுரை

'வையத்துள் வாழ்வாங்கு வாழ', ' நிறைமொழி மாந்தர்தம் மறைமொழி' வழிகாட்டியாக அமைந்துள்ளது. இறையருள் பெற உதவும் தோத்திரங்களும் , சாத்திரங்களும் நமக்கு மறை மொழிகளேயாம். அவை கூறும் 'சைவ சித்தாந்த'க் கருத்துக்களை நாம் புரிந்து கொண்டு , அதற்கேற்ப வாழ, சான்றோர் வாழ்க்கை வரலாறு நமக்குப் பேருதவி புரிகிறது. சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் 'திருத்தொண்டர் புராணத்தில்' காணலாம். அவற்றை எளிமைப்படுத்தி நமக்குப் புரியும் வண்ணம் கூறும் முறைகளில் ஒன்றே 'இசைப்பேருரை' யாகும்.

அறிமுகம் :

இதற்குப் பல்வேறு பெயர்கள் உள்ளன. 'ஹரிகதா ', 'கதா காலட்சேபம் ', 'உத்யாசம் ' , 'ப்ரவசனம் ', 'ஹரிகதை ', 'பஜனாவளி ', 'பஜன் ', ' கீர்த்தனை நாடகம்' , 'பக்தி இசைச் சொற்பொழிவு ' என்ற பெயர்கள் ' இசைப் பேருரையை 'த்தான் குறிக்கும். எளிய ,இனிய இன்னிசைப் பாக்களாலும் , 'சின்னஞ்சிறிய கதை நிகழ்ச்சிகளாலும் கூற வேண்டிய கருத்தை எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் பல வழிகளைக் கையாளும் நிலை இந்த ' இசைப் பேருரை' க்கு மட்டும் உண்டு. திருக்கோவில்களின் திருவிழாக்காலங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறும். அவற்றுள் இசைப்பேருரையும் ஒன்றாகும்.

ஊத்துக்காடு வேங்கடசுப்பையர்

இவர் 'இசைப்பேருரை'க் கெனப் பாடிய நீண்ட நெடிய பாடல்கள் பல உள்ளன. சைவத்திற்கும் , வைணவத்திற்கும் பற்பல இசைப்பாடல்களை இயற்றி நற்றொண்டாற்றியுள்ளார். ' சைவசித்தாந்த ' கருத்துக்களைக் கதைப் போக்கில் கதை மாந்தர்கள் எளிதாக எடுத்துக் கூறும் முறையில் பாக்கள் பலபுனைந்துள்ளார். மிகச் சிறப்பாக அறுபத்து மூன்று நாயன்மார்களின் சிவத்தொண்டை மையமாகக் கொண்டு பாடிய பாக்களில் இதனை மிகுதியாகக் காணலாம் , 'திருநாளைப் போவார் ' , ' விறன் மின்டார் ' வரலாற்றில் இடம் பெற்ற பாக்களை இங்கு எடுத்துக் கொண்டு ஆய்ந்து பார்க்கலாம்.

முடிவுரை

இவ்வாறு, இசைப்பேருரையில் கூறப்படும் கதைகளின் வாயிலாகவும் , பாடும் பாடல்களின் வாயிலாகவும் சித்தாந்தக் கருத்துக்களை மிக எளிதாக எடுத்துக் கூறிக் கேட்போர் புரிந்து கொண்டு மனத்திற்கொண்டு வாழ்வில் போற்றுகின்ற நிலையை இன்றும் பரவலாகக் காணலாம். கேட்போருக்குக் கதை நன்கு தெரிந்திருக்கும். மேலும் , அடிக்கடிக் கேட்ட ஒன்றாகத் தான் இருக்கும். எனவே ,கதைகளுக்கிடையே கூறப்படும் பயனுள்ள கருத்துக்களைக் கேட்கவே பக்தர் விரும்புவர். அதற்கு 'இசைப் பேருரை' பக்திநனிச் சொட்டச் சொட்டப் பாக்களைப் பாடுவதற்கும் , சித்தாந்தக் கருத்துக்களைப் புரியும் வண்ணம் கூறுவதற்கும் நல்லதொரு பயனுள்ள சாதனமாகும்.

1.17 சைவ சித்தாந்தமும் மனித மேம்பாடும் - ஓர் ஆய்வு நோக்கு

பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

இந்தியச் சமூகத்தில் - குறிப்பாகத் தமிழர் சமூகத்தில் - பயில் நிலையிலுள்ள சமயத் தத்துவங்களில் முதல் வரிசைச் சிறப்புக்குரிய ஒன்று சைவ சித்தாந்தம். தமிழரின் பண்பாட்டு வளத்துக்கு மிக முக்கிய பங்களிப்புச் செய்துள்ள சிந்தனை மரபுகளுள் ஒன்றாக இத்தத்துவம் கணிக்கப்படுகிறது ; போற்றப்படுகிறது.

இறை , உயிர் , மலம் எனப்படும் முப்பொருள்களின் இருப்பை வலியுறுத்தும் இத்தத்துவம் உயிரின் வளர்ச்சியை முக்கிய நோக்காகக் கொண்டது. உலகியல் சார்ந்த 'துன்ப - துயர ' ங்களில் உழலும் உயிர் அவற்றினின்று படிப்படியாக விலகி இறையனுபவத்தை நோக்கி முன்னேறுவதே இத்தத்துவத்தின் தொனிப் பொருள் ஆகும். அவ்வகையில் இது மனித மேம்பாடு பற்றிப் பேசுவது என்பது வெளிப்படை. சிந்தாந்த சாத்திரங்கள் யாவும் இந்த உயிர் வளர்ச்சியை - மனித மேம்பாட்டைச் சிறப்பாக எடுத்துப் பேசுகின்றன என்பது தெளிவு. ஆயினும் இம் 'மனித மேம்பாடு' நடைமுறையில் எந்த அளவு சாத்தியமாகியுள்ளது ? என்பது எம்முன் நிற்கும் முக்கிய வினாவாகும்.

சைவ சித்தாந்தம் மட்டும்மனித மேம்பாட்டு நிலை , அதன் முக்கிய பயில் களமாகவுள்ள தமிழர் சமூகத்தில் எவ்வெப் பிரிவினரால் உரியவாறு 'தெரிந்து - தெளிந்து' கொள்ளப்பட்டது ? இதனைச் சாதனைப் படுத்தியவர்கள் எத்தனை சதவீதத்தினர் ? தமிழர் சமூகத்திலும் அனைத்துலக மட்டத்திலும் நிலவும் மனித நேயமற்ற - கீழ்த்தர - நடைமுறைகளை மாற்றியமைக்க இத்தத்துவம் எந்த அளவுக்குப் பயன் பட்டுள்ளது ? பயன்படவல்லது ? மனித சமூக மேம்பாடு பற்றிப் பேசும் சமகால அனைத்துலகச் சிந்தனைப் போக்குகளைச் சைவ சிந்தாந்தம் எந்த அளவுக்கு எதிர் கொள்ள வல்லது ?

மேலே நாம் நோக்கிய முதல் நிலை வினாவின் விரிவாக அமையும் துணை நிலை வினாக்கள் இவை. சைவ சிந்தாந்தம் விரித்துப் பேசப்பட்ட சோழப் பெருமன்னர் காலம் முதல் , அனைத்துலக மட்டத்தில் இத்தத்துவம் பரவியுள்ள இன்றைய காலம் வரையான நீண்ட வரலாற்றுக் கால கட்டத்தை மையப்படுத்தி நுனிந்து நோக்கி விடை காணவேண்டிய வினாக்கள் இவை ; இம் முயற்சியில் உருவாவதே இந்த ஆய்வுக் கட்டுரை.

1.18 ஆணவ மலம்

– பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்
சென்னைப் பல்கலைக்கழகம்

சைவ சிந்தாந்தத்தின் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் பொருள்கள் பதி , பசு, பாசம் என்பன. பாசங்கள் ஆணவம் , கன்மம் , மாயை என்பன. அறிவுடைய பொருளாகிய ஆன்மாவை அறியாமையுடையதாகச் செய்வது ஆணவத்தின் இயல்பு. இம்மலம் நெல்லிற்கு உமிபோலவும் ,செம்பிற்குக் களிம்பு போலவும் அநாதியே ஆன்மாக்களுக்கு இயற்கைக் குற்றமாய் அமைந்தது. ஆணவம் ஆன்மாக்களை மறைத்து நிற்கிறது. இம்மலம் தொன்று தொட்டு ஆன்மாவுடன் சேர்ந்தே இருப்பது. ஆணவமலம் கேவலம், சகலம் , சுத்தம் என்ற மூன்று நிலைகளில் செயற்படும். ஆணவமலம் இருளோடு ஒப்பிட்டு விளக்கப் பெறுகின்றது. ஆயினும் இஃது இருளைவிடக் கொடியது. இருள் தன்னிடத்திலுள்ள பொருள்களை மறைக்கும் ; தன்னை மறைக்காது . ஆணவமோ தன் செயலை மறைப்பதோடன்றித் தன்னையும் மறைத்துக் கொள்வது . 'அறிவு போல் அடர்த்தெழும் அறியாமையின் வலியாம்' என்பர்மாதவச் சிவஞான யோகிகள். ஆணவம் முதலிய மலங்கள் ஆன்மாக்களையும் பிணிக்கும் வகையில் மூவகைப்படும். ஒரு மலம் உடைய ஆன்மாக்கள் 'விஞ்ஞான கலர்' என்றும் , இருமலம் உடைய ஆன்மாக்கள் 'பிரளயா கலர் ' என்றும் , மூன்று உடைய ஆன்மாக்கள் 'சகலர்' என்றும் வழங்கப் பெறும். ஆணவமலம் - அதாவது மூலமலம் - ஆன்மாதோறும் பிணிப்பின் வேறு பாட்டிற்கு ஏற்ப , மற்றைய மாயை கன்மங்களும் அமையும் என்பது தெளிவு . ஆன்மாதோறும் ஆணவத்தின் பிணிப்பு ஒருவகையாய் மறையாது , பல்வேறு வகையாய் மறைத்து நிற்றலின் , ஆன்மாக்கள் அப்பிணிப்பினின்றும் நீங்கி 'வீடு' பெறுதலும் ஒரு காலத்தில் நிகழாமல் பல்வேறு காலங்களில் நிகழ்கின்றது என்பது அறியப்பெறும்.

1.19 வினைக் கோட்பாடு

மு. செல்வநான்
P.G. ஆசிரியர் , சோளிங்கர்

இன்றைய உலகியல் வாழ்வு சிக்கல் மிகுந்ததாய் , ஒரு வகையில்

பொருளற்றதாய்க் காணப்படுகிறது. இன்று மிக விரைவாகப் பரவி வரும் நுகர் பொருள் வாழ்க்கை முறையால் உயிர் குடி கொண்டுள்ள உடம்பும் , உடம்புகள் வாழ்கின்ற உலகும் உயிர் வாழ்வுக்குக் கேடு சூழ்வனவாய் மாறிக் கொண்டிருக்கின்றன. நோயற்ற உடம்பைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. ஓசோன் படலத்தில் ஓட்டை எனும் செய்தி அச்சுறுத்துகிறது.

அறிவுத் தெளிவே அச்சத்தை , அழிவுப் போக்கை அகற்றும் . சைவ சித்தாந்த வினைக்கோட்பாடு அறிவுத் தெளிவு தரும்.

வினையானது நம் மனத்தாலும் , வாயாலும் ,உடம்பாலும் செய்யப்படுகிறது.

நம் ஆன்மாவோடு ஆதியில் இறைவன் கூட்டுவித்த பஞ்ச சுகங்களில் ஒன்றான வித்தையால் அறிதலும் ,கலையால் செயல்புரிதலும், அராகத்தால் விரும்புதலும் தொடங்குகின்றன. ஆன்மா வித்தையைக் கொண்டு அறிவுப் பொறிகளை ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சியின் மீது செலுத்துகிறது. அப்போது அப்பொருளைப் பற்றிய பொதுவான அறிவு கிடைக்கிறது. பிறகு அப்பொருள் மீது ஆன்மா மனத்தைச் செலுத்தும் . மனம் சித்தமாய் நின்று சிந்திக்கும். முடிவு காணும் எழுச்சியை அகங்காரம் தோற்றுவிக்கும் . புத்தி நிச்சயிக்கும். அதன் பின் புத்தி தத்துவத்தின் குண பாவகங்களில் ஒன்றாகிய அராகத்தால் அப்பொருளின் மீது விருப்பம் ஏற்படுகிறது. அவ்விருப்பத்தை நிறைவேற்ற கன்மேந்திரியங்களைக் கொண்டு ஆன்மா செயல்புரிகிறது.

செய்கின்ற வினை ஆகாமியம் . செய்து முடித்தது சஞ்சிதம். அனுபவிக்கும் வினைப்பயன் பிராரத்தம் . எநத வினையின் பயன் எப்போது நம் அனுபவத்துக்கு வரும் என்பது இறைவன் ஒருவனுக்கே தெரியும். அனுபவத்துக்கு வரும் பிராரத்தம் ஆதியான் மிகமாக , ஆதி பௌதிகமாக ,ஆதி தெய்வீகமாக வந்து , நலம் தீங்கு தரும்.

புத்தி தத்துவத்தின் குணங்களாகிய எட்டு பாவங்களில் முதலாவது தன்மம். இது இயமம் , நியமம் என இருவகைப்படும். <u>பிற உயிர்களைக் கொல்லாமை , பிறர் பொருள்களைத் திருடாமை</u> ,மெய்ம்மை, பிரம்மச்சரியம் , அகம் தூய்மை ஆகியவை இயமம் . கோபம் கொள்ளாமை, வழிபாடு , <u>உடலையும் , வாழும் இடத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல்</u> ,மகிழ்ச்சியாய் இருத்தல் , எதையும் செப்பமாகச் செய்தல் ஆகியன நியமம்.

இயம , நியமங்களை உலக மக்கள் நன்கு புரிந்து கொள்ளுமாறு செய்து விட்டால் ,உயிர் குடி கொண்டுள்ள உடம்பும் ,உடம்புகள் வாழ்கின்ற உலகும் கேடு அடையா நிலையை உருவாக்கி விடலாம்.

1.20 சைவ சித்தாந்தம் கூறும் ஞான நெறியும் மனித மேம்பாடும்

திருமதி. ஞானபூங்கோதை
மதுரை

முன்னுரை

மனிதப் பிறப்பின் குறிக்கோள் இந்த உலக வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கி, அதன் நிலையிலிருந்து மேலே உயர்ந்த நிலையை அடைவதேயாகும். சைவ சித்தாந்தம் கூறும் நன்னெறிகள் எவ்வாறு மனித வாழ்க்கையை மேம்படுத்துகின்றன என்பதை இங்குக் காண்போம்.
சைவ சித்தாந்தம் கூறும் ஞானமும் அதனைப் பெறும் வழிகளும் .

'ஞானம்' என்பது எப்பொருளையும் உள்ளது உள்ளவாறு உணர்ந்து அதன் உட்பொருளை அறிவது ஆகும். ஞானம் , பரஞானம் அபரஞானம் என இரு வகைப்படும். கல்வி கேள்விகளால் உண்டாகும் ஆராய்ச்சி ஞானமே அபரஞானம். பரம் பொருளை , உணரும் ஞானமே பரஞானம். நன்னெறியாகிய இப்பரஞானத்தால் தான் வீடு பேற்றை அடைய முடியும். 'அபரஞானம் ' பரஞானத்திற்கு வாயிலாகத் திகழ்கிறது.

ஞானத்திற்குச் சாதனமாவது தவம். இறைவனை நோக்கிச் செய்யும் சரியை , கிரியை ,யோகம் ஆகிய வழிபாடும் , தொண்டுமே உண்மையான தவம் ஆகும். இத்தவத்தின் பயனாக ஆன்மாவிற்கு அறிவு மேம்படும் பொழுது , அதன் பக்குவநிலைக்கு ஏற்ப , இறைவனது திருவட்சக்தி , படிப்படியாக வளர்ந்து முழுமைபெறும். இதனைச் சத்திநிபாதம் என்பர். அதே சமயம் ஆணவ மலமும் படிப்படியாகத் தேய்ந்து இல்லாது ஒழியும் . இதனை மலபரிபாகம் என்பர். இந்நிலையில் மனித உள்ளத்தில் இரு வினை ஒப்பு ஏற்படும். இப்பக்குவத்தை அடைந்த ஆன்மாவிற்கு இறைவனே குருவாக வந்து ஆட்கொண்டு ஞானத்தை நல்குவான்.

1.21 சைவசித்தாந்தத்தில் மனித நேயம்

ஆதி. துரைரங்கம்
தாகூர் கலைக்கல்லூரி, புதுவை

கட்டுரை நோக்கம் : மனித வாழ்வில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணாமல் மேலுலக வாழ்க்கைக்கு மட்டுமே முக்கியத்துவம் மற்றும் தன்னல ஆன்மீக முன்னேற்றம் என்னும் சிலகுறைகள் தற்போதுள்ள இறைச் சமயங்களைப் பற்றிப் பொதுவாகக் கூறப்படுகின்றன. இத்தகைய

குறைகள் சைவ சித்தாந்தத் தத்துவப்பிரிவில் எவ்வகையில் தீர்க்கப்பட்டுள்ளனது என்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

சைவ சித்தாந்த மெய்ப்பொருளியியல் விளக்கம் மெய்கண்டாரின் சிவஞான போதம் மற்றும் தி.ப. சித்தலிங்கய்யாவின் மெய்யுணர்வு மலர்கள் ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டது. கனவியலறம் என Humanatarianism என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழாக்கமாகச் சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் கூறப்பட்டுள்ளது. ஜெ.பி. திரொக்ஸ் அறவியல் என்னும் நூலில் கனவியலறத்திற்கு விளக்கம் கொடுத்துள்ளார். வாழ்வின் மதிப்பு , நன்மை சரியான செயல் நீதி , வாய்மை மற்றும் தனி மனித செயலுரிமை ஆகிய ஐம்பெரும் ஒழுக்கங்களைப் பின்பற்றினால் சமயம் மற்றும் சமயம் சாராமை, குறிக்கோளையும் தனிமனிதம் மற்றும் சமூகம் ஆகிய அறிவியல் கூறுகளின் சிக்கல்கள் தீர்ந்துவிடும் என மேலும் ஜெ.பி. திரொக்ஸ் கூறியுள்ளார்.

ஜெ.பி. திரொக்ஸின் கனவியலறவிளக்கம் ,சைவ சித்தாந்த வீடுபேற்றுப் பகுதியில் ,சரியை கிரியை யோகம் மற்றும் ஞானம் ஆகிய படிகளின் வழியே கூறப்பட்டுள்ளது. அன்பே சிவம் , சிவமே அன்பு என்று சைவ சமயக் குரவர்கள் அன்பை அனைத்து ஒழுக்கங்களுக்கும் அடிப்படையாகக் கூறுகின்றனர்.

இத்தகைய சைவ சித்தாந்த விளக்கம் கனவியலற விழுமியங்களைத் தெள்ளெனக் கூறுகிறது. எனவே சைவ சித்தாந்தம் மனித நேயத்துடன் அப்பாலை மனித வாழ்வையும் (metaphysical life) கூறிச் , சமயத்திற்கு எதிராகக் கூறப்படும் குறைகளுக்குத் தீர்வு காண்கின்றது என்பது கட்டுரையின் கருப்பொருள் ஆகின்றது.

1.22 சைவசித்தாந்தம் கூறும் குருதத்துவம்

ச. திருஞானசம்பந்தம்
அருள்மிகு கே.கே.எஸ் கலைக்கல்லூரி, திருவைகுண்டம்

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இந்துக்களில் பெரும்பாலோர் சைவர்கள். இவர்களில் மிகப்பெரும்பாலோர் சைவசமயத்தைப் பற்றி முழுமையாக அறியாதவர்கள். ஆயினும் சைவசமயக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள். சைவசமயத்தின் கோட்பாடுகளே சைவசித்தாந்தம் என்று அழைக்கப்படுகிறது.

அக்கோட்பாடுகளில் மிகவும் முதன்மை வாய்ந்தது குருதத்துவம்.

பல்வேறு பிறப்புகளை எடுத்துழல்வன உயிர்கள். அவை ஈடேற்றம் பெறுவதற்குச் சாதனமாகத் திகழ்வது சைவம் சார்ந்த மானுடப் பிறப்பாகும். இப்பிறப்பே இனிப்பிறவாமைக்கு உறுதுணை புரிவது. மானுடப் பிறப்பெடுத்த உயிர் தன்னைப் பற்றிய பாசத்தை இறைவனின் திருவருளால் நீங்கிச் சிவப்பேறடையும் உயிர்களின் தன்மைக்கேற்ப இறைவன் ஞானத்தை உணர்த்துவான். இச்செயலையே இறைவனின் அருளல் தொழிலெனச் சாத்திரங்கள் பேசுகின்றன.

இம்மானுடப் பிறப்பெய்திய மும்மலமுடைய சகலர்க்கு இறைவன் குருவாக - மானுட உருவம் தாங்கி வந்து அருளுவான். இது பார்வை விலங்கைக் கொண்டு அதே இன விலங்கைப் பிடிப்பது போன்றதாகும். இறைவனே உயிர்களின் உண்மைநிலையை அறிபவன். அவனையன்றி உயிர்களின் நிலையை வேறு எவராலும் அறியமுடியாது. எனவே குருவாக வருபவரை மனிதராக எண்ணாமல் இறைவனாகக் கருதி அவரின் உபதேச வழி நின்றால் மட்டுமே உயிர்நலம் பெறும். எனவே குருவருளின்றித் திருவருளில்லை என்பதே சைவசமயத்தின் முடிந்த முடிவு.

இத்தகு சிறப்புப் பொருந்திய குருதத்துவத்தைச் சில போலிகள் புகுந்து பாழ்படுத்தி வருகின்றனர். இந்த நிலை நீடிப்பது நாட்டுக்கும் சமயத்திற்கும் தீது. மேலும் போலித் துறவிகளைச் சமயத்திற்குப் புறம்பாக இனங்காட்டுவதோடு நல்ல பல திட்டத்தால் சமய வளர்ச்சியைத் தழைக்க வைப்பதும் உண்மைச் சைவர்களின் கடமை.

1.23 சைவசித்தாந்த நோக்கில் பிரார்த்தனை தமிழ் வினைமாற்றம்

புலவர் ச.நீலாயதாட்சி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அரிதாய் வந்து பிறந்துவிட்டோம். ஏன் பிறந்தோம் ? வினைப்பயன்களின் தொடர்பால் ! அதனால் தான் பிறந்துவிட்ட உயிர்களுள்ளும் ஏற்றத்தாழ்வுகள் . வந்துபோகும் இன்ப துன்பங்களுள் வேற்றுமை வித்தியாசங்கள் உள்ளன. இதிலிருந்து மீள்வது எப்படி ? உயிர் , உலகம் ,வினை என்ற எல்லாவற்றிற்கும் மூலமுதலுமான இறையின் கருணையால் மட்டுமே வினைப் பயனின் அடர்வினை குறைத்திடவோ அல்லாமல் செய்திடவோ முடியும் ''. இது ஞானிகளின் அனுபவ வாக்கு ; - சாத்திரங்கள் சொல்லும்

சாட்சியங்கள். பொதுவாக நாம் அதை ஏற்றுக் கொண்டவர்களாகத் தான் இருக்கிறோம்.

''பகுத்தறிவின் மூலமாகவோ , மூடநம்பிக்கையின் காரணமாகவோ ஏதாவது ஒரு வகையில் மனிதன் தனக்கு தெய்வீகமான தொடர்பு இருப்பதை ஒப்புக் கொள்கிறான். முதல் தரமான நாத்திகர் கூட ஒரு தார்மீகக் கொள்கையை அனுசரிப்பதே நல்லது என்றும் அவ்வாறு அனுசரிக்கவில்லையெனில் அது தீங்கு என்றும் கருதுகிறார். இப்படி காந்திஜி கூறுகின்றார். எப்படியோ பேராற்றல் மிக்க ஒரு சக்தி இருக்கத்தான் வேண்டும் என அறிந்தவர்கள் தான் நாம். எல்லாம்வல்ல அந்தப் பேராற்றல் மிக்கசக்தியினை நமக்குச் சாதகமாக்கத் துணைவேண்டி நிற்பவர்கள் தான் நாம். அந்த வேண்டுதலின் கராணமாக எழுந்த பக்தியின் வெளிப்பாடே பிரார்த்தனை எனப்படுகிறது. இந்தப் பிரார்த்தனையின் முழுவிளக்கம் என்ன ? அதனால் நம்மைத் தொடரும் வினைப்பயனை எந்த மாற்றத்திற்கு உள்ளாக்க முடியும் ? அத்தோடு பிரார்த்தனை என்ற பேராற்றலோடு 'தமிழ்' என்ற தனிச்சிறப்பும் சேரும் போது வினைப்பயனில் மாற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கின்றதா என்றெல்லாம் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.24 சைவசித்தாந்தம் - திருஐந்தெழுத்து

திரு. பூமிநாதன்
ஆசிரியர் , இராஜபாளையம்

1. முன்னுரை

மிகப்பழங்கால முதலே நம் நாட்டில் மந்திரமொழியை உச்சரித்து உருவேற்றி வந்துள்ளனர்.

சிவ மந்திரமாகிய திருஐந்தெழுத்தைப் (நமசிவய) பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

2. மந்திர மொழி

''நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்ப ''

என்பது தொல்காப்பியம்

'' மறை மொழி காட்டிவிடும் ''

- குறள்

வசைபாடி - பாடியபடியே நடந்த நிகழ்ச்சிகள்
நச்செழுத்து , மங்கல எழுத்து பாட்டியல் நூல்கள் கூறுவன.

3. ஐந்தெழுத்து மந்திரம்

நமசிவய - யந்திரமாகிய சக்கரங்களில் பயன்படுத்துவது ; இதன் பலன்கள்:

4. ஐந்தெழுத்து அமைப்பு

ஆன்ம தத்துவம்
கன்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5
தொழிற்கருவி 5, அவத்தை 5
உடல் உறுப்புகளில் கால் ,கை விரல்கள் ஐந்து
விலங்கு , பறவை கால் விரல்கள் ஐந்து
பறவை இறகு - கை - எலும்பமைப்பு ஐந்து
பூக்களில் ஓரடுக்கு அல்லிவட்டம் இதழ்கள் ஐந்து
பல அடுக்கிலும் எண்ணிப்பார்க்கின் ஐந்தின் மடங்கு (சத இதழ்த் தாமரை போல்)

5. ஐந்தெழுத்து வகை

1) அகாரம் , உகாரம் , மகாரம் , நாதம் , விந்து
2) நமசிவய

ஐந்தெழுத்தின் விளக்கம் , தன்மை ,நூல்கள் கூறும் விளக்கம் ஆகியன இக்கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பெறும்.

1.25 சைவசித்தாந்தம்

இரா. மயில்வாகனம்
இலங்கை

தொன்மைத் தென்னாட்டுச் செந்தமிழின் நன்மைத் திருநெறி சிவநெறியாகும். அந்நெறிக்குரிய மறைநூல்கள் திருமுறைகள் எனப்படும். திருமுறைகள் செந்தமிழின் உயிரெழுத்தொப்பப் பன்னிரண்டு. இப் பன்னிரண்டுள் திருமூலநாயனராருளிய '' திருமந்திரம் , பத்தாந்திருமுறையாகும். அப்பத்தாந் திருமுறை முத்திற வாழ்க்கையின் இலக்கணங்களைச் செம்மைபெற எடுத்தோதும் சீரிய அருள் நூல்.

அந்நூல் ஒன்பது தந்திரங்களையுடையது? அவற்றுள் முதல் நான்கு தந்திரங்களும் அறம் , பொருள் , இன்பம் ,வீடு என்னும் நான்கையும் குறிப்பனவாகும். பின்னுள்ள ஐந்தும் திருக்கோயிலமைப்பு நெறிமுறைகள், வழிபடுமியல்புகள், பெறற்கரும் பேறு முதலியன குறிப்பன. எனவே செந்தமிழ்த் திருமந்திர நூலென்றே தனித்தமிழ் மறைநூலும் முறைநூலும் ஆகும். மறை - வேதம் ,முறை - ஆகமம் , முத்திற வாழ்க்கை : - இம்மை வாழ்க்கை , உம்மை வாழ்க்கை ,அம்மை வாழ்க்கை என்பனவும் இணைந்துள்ளன.

சித்தாந்தம் என்பது ஆகமம். சித்தாந்தப் பரம்பரை எவ்வாறெனில் அநாதி சதாசிவ மூர்த்தி , மகேஸ்வரனுக்கு அனந்தர் , ஸ்ரீகண்ட உருத்திரம் (சகலர்களுக்கு) தெய்வம் , நந்தியெம் பெருமான் சனற்குமாரர் , சத்தியஞான , தரிசனர் - பரஞ்சோதி ,இவர் அகச்சந்தனாசாரியர் என்பர். சத்தியஞான தரிசனியார் மெய்கண்டார் அருணந்தி சிவாசாரியார் மறைஞான சம்பந்தர். உமாபதி சிவாசாரியர் புறச்சந்தானகுரவர்.

சித்தாந்தம் இச் சொற்றொடரைச் சித்தர் + அந்தம் ,அல்லது சித்த + அந்தம் என இரு சொல்லாக்கத்தில் பொருள் கொள்ளலாம் . ஆனால் சித்து என்னும் சொல்லே தொடக்கமாக இருக்கவேண்டும். சித்தம் என்றும் சொல் சித்துக்குப்பின் வந்தது,மனம்,புத்தி, சித்தம் ,அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக் கரணம் எனப்பெறும் இவற்றில் மனம் ஒன்றை நினைக்கும் ; புத்தி நிச்சயிக்கும் ; அகங்காரம் முனைப்பைத் தோற்றுவிக்கும்; சித்தம் மூன்றுக்கும் காரணமாகும். மேலும் சித்தத்தின் சலனம் பிராணவாயுவின் சலனத்தையும் பிராணனின் சலனத்தையும் பொறுத்தது. பிராண வாயுவின் அசைவே சித்தத்தின் அசைவு , இவ்வுண்மையை உணர்ந்தே சித்தர்கள் பிராணயாமத்தை வலியுறுத்தினர். எனவே பிராணாயாமத்தின் மூலம் பிராணனும் சித்தமும் ஒடுங்கிய நிலையே சித்தர் நிலையாகும்.

சித்தாந்தம் சித்தர்கள் கண்ட வாழ்க்கைத் தத்துவமே சித்தாந்தமாகும். பொதுவாக இச்சொல்லுக்கு சித் -அந்தம் (அறிவின் முடிவு அல்லது அறிவர் முடிவு) என்பதும் பொருந்தும்.

1.26 சைவ அறங்களும் பௌத்த அறங்களும்

சு . மாதவன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

'சைவ அறங்களும் , பௌத்த அறங்களும்' என்னும் தலைப்பிலமைந்த இவ்வாய்வுக் கட்டுரை இருதிறப்பட்ட அறநெறிகளுக்கிடையேயான ஒப்புமைக் கூறுகளையும் , தனித்துவத் தன்மைகளையும் ஆராய்கிறது.

சரியை , கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவ அறநெறிகளோடு, பௌத்த எண்வகை நெறிகள் மற்றும் பிறவற்றையும் ஒப்பு நோக்கி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். அவற்றுள்ளும் , குறிப்பாக,சைவ அட்டாங்க யோக நெறிகளும், பௌத்த அட்டாங்க மார்க்க நெறிகளும் ஒப்பு நோக்கப்படுகின்றன.

இரு நெறிகளுமே மனித வாழ்க்கையைக் குலைக்கும் தீய எண்ணங்களிலிருந்து விடுபட்டு , மனிதன் உன்னத நிலையை அடைவதற்கான வழிகளை எடுத்தியம்புகின்றன. மனித சமூகக் கருத்தாக்க வளர்ச்சியின் அறிவுக் கருவூலங்களிலிருந்து தத்தம்அடிப்படையை உருவாக்கிக் கொண்டுள்ளன.

சைவயோக நெறி எட்டும் , பௌத்த மார்க்க நெறி எட்டும் ஒழுக்கம் , ஞானம் , மனஒருமை (Virtue, wisdom, Concentration) ஆகிய மூன்று பொருண்மைப் பிரிவுகளைக் கொண்டதாய் அமைந்துள்ளன.ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஞானம் கைகூடும். ஞானம் கைகூடினால் சலனமற்ற மனஒருமை நிலையை எய்தலாம். மனஒருமை நிலை உயிர் விடுதலையை அளிக்கும் என்ற காரண - காரிய இயைபைஇரு நெறிகளுமே பெற்றுள்ளன.

சைவநெறி சிவனை முன்னிறுத்தியதாகவும் , பௌத்த நெறி உண்மைத் தேட்டத்தை முன்னிறுதியதாகவும் செயல்படுகின்றன. சைவ நெறி சிவனை வழிபடுவதற்குரிய நெறிகளையும் , பௌத்த நெறி வாழ்வியல் மாற்ற நெறிகளையும் முன்னிலைப்படுத்துகின்றன. எனினும், இரண்டுமே உலகத் தளைகளிலிருந்து உயிர்விடுதலை அடைவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

1.27 சிவஞான சித்தியின் தனிநிலை

டாக்டர் . பழ. முத்தப்பன்
கணேசர் செந்ததமிழ்க் கல்லூரி , மேலைச்சிவபுரி

சைவசித்தாந்த வளர்ச்சியில் இலக்கிய நூல்களும் திருக்கோயில்களும் சிறப்பிடம் பெறுகின்றன. திருமந்திரம் நூல் சைவ சமயச் சாத்திர ,தோத்திர நூல்களுக்கு முதன்மை நூலாக விளங்குகின்றது. இதன் பின்னணியில் தோன்றிய சிவஞான போதத்தால் ஈர்க்கப்பெற்றவர் அருள் நந்தி சிவாச்சாரியார். அவர் இயற்றிய சித்தியாரும் சிவஞான போதமும் சைவ சமயத்திற்கு மணிமகுடங்களாக விளங்குகின்றன. அவை முதல் நூல் , வழிநூல் என்ற அடிப்படையில் அமையும். கட்டுரை சிவஞானசித்தியார் என்ற நூலின் நோக்கம் பகுப்புகள் என்ற தலைப்பில் விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ளது.

1.28 சைவ சித்தாந்தமும் சகஜமார்க்கமும்

திரு.மு. முத்துசாமி
மன்னர் சரபோசி அரசு கல்லூரி, தஞ்சாவூர்

இராம் சந்தர் என்னும் மகான் ஆன்மிகத்தில் புதிய சகாப்தத்தை உண்டாக்கியுள்ளார். பாரதத்தில் வெகு காலத்திற்கு முன்பே (தசரத மாமன்னனுக்கு 72 தலை முறைகளுக்கு முன்) பயன்பாட்டிலிருந்து மறைந்து போன '' பிரணாகுதி '' என்ற 'இறை சக்தியைப் பயிற்சியாளர் இதயத்தில் செலுத்தி (Transmission) ஆன்மீக யாத்ராவை நிகழ்த்தும் முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளார்.

இறையுடன் இரண்டறக் கலத்தலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது சகஜ மார்க்கம். காலம் , இயற்கை ஆகியவற்றின் தேவைக்கேற்ப மதம் ,இனம் , நாடு , பால் வேறுபாடின்றி எல்லோரும் ஆன்மீகம் முன்னேற்றமடைய வேண்டும் என்பதையே சகஜ மார்க்கம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆன்மீக ஈடுபாடு உலக மக்களிடம் மிகுதியாகும் பட்சத்தில் , உலகச் சிக்கல்களுக்குக் காரணமான தனிமனிதனின் சிக்கல்கள் தீர்ந்து,உலகச் சிக்கல்கள் தீர்ந்துபோகும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இறையுணர்தலுக்குச் சைவசித்தாந்தப்படி மூன்று நிலைகளைக் கடக்க வேண்டும். ' கேவலநிலை, சகலநிலை சுத்த நிலை' என்பவையே

அவை. ஆணவம் , கன்மம் என்ற சுமையுடன் ஒரு ஆன்மா சகல நிலையை அடைகின்றது. இந்த 'சம்சார ' நிலையில் ஆணவத்தால் மயக்கமுற்று , கர்மாவால் பலனை அனுபவிக்கப் பிறவிகள் ஏற்படுகின்றன. பிறவியின் நிலையின்மையை உணர்ந்த ஆன்மாவிற்கு. இறைவன் குரு வடிவில் வந்து வழிகாட்டி 'ஜீவன் முக்தி ' கொடுத்து 'சுத்த' நிலையை உருவாக்குகிறார்.

இக்கருத்தைத்தான் சகஜ மார்க்கமும் கூறுகின்றது. குருநாதர் தனது ஆன்மீக சத்தியால் பயிற்சியாளரின் ஆன்மாவின் மேலுள்ள 'வினைப்பதிவுகளை (சமஸ்காரா - பாவம் மற்றும் புண்ணியம்)' சுத்தம் செய்கின்றார். பின் அடிமனத்தில் ஆன்மீக விதையை ஆழமாக ஊன்றிவிடுகின்றார். பயிற்சி செய்யச் செய்ய அவ்விதைகள் முளைவிட்டு ஆன்மீக விழிப்புணர்வு ஏற்படுகிறது. சிறிது காலத்திற்குப் பிறகு இன்னும் விரிவடைந்து 'சூட்சும மனத்தில் ' (Astral Mind) பரவிப் பின் 'வழிநிலை மனத்தை' (Conscious Mind) தக அமைக்கிறது.

இவ்வுண்மையைச் சைவசித்தாந்தத்துடன் ஒப்பு நோக்கி மதிப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.29 பரமாத்துவிதம் - ஒரு சைவநெறி

டாக்டர் கி. முப்பால் மணி
அரசு கலைக்கல்லூரி , கோவை

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 1878 - இல் சைவ அனுபூதிஞானம் பெற்றார். இவ்வனுபூதி தத்துவராயரால் முறைப்படுத்தப்பட்ட பரமாத்துவிதச் சைவத்தை அடிப்படையாகக் கொண்டது. பன்மைமட்டும் உண்மை என்றால் இருமை பிளவு தோன்றும் . இதனால் உண்மை விளங்காது . இந்நிலையா மாயை என விளக்கப்படுகிறது. ஆனால் இது உண்மை அன்று. ஏனெனில் மாயை என்பதால் ஒன்று மில்லை. காலம் , இடம், பொருள் என்ற திரிபதார்த்த நிலை இந்நெறியில் முன்னிலைக்கு வரல், உலகியல் பொருள்களில் பிரம்மத்தின் இருக்கையும் பன்மையின் உண்மையும் விளக்கப்படுகிறது. தனிப்பட்ட ஆன்மாக்களும் உண்மை. எதுவும் மாயை யில்லை.தனிப்பட்டது. எல்லாமானதிலிருந்து சுதந்திரமானது எனக் கருதினால் சாவு நிகழும்.

ஆங்கிலேயர் மேற்காட்சி வாதம் , கிறித்தவ உரையாடல்கள் , சுதந்திரச் சிந்தனை , பகுத்தறிவு, நாத்திகம் என்ற கோட்பாடுகளை இக்கட்டுரை மறுக்கிறது. சமூகநிலையில் ,தேசிய வாழ்வில் நிலவும்

மொழி நலங்கள் பொலிவுபெறப் பரமாத்துவிதம் எங்ஙனம் துணைபுரிகிறது என்பதைக் கட்டுரை விளக்குகிறது.

1.30 சைவ சிந்தாந்தம்

பேராசிரியர் . வை . முருகேசன்
திருவத்திபுரம்

உலகு ,இறை, உயிர் என்னும் முப்பொருள்களை அடித்தளமாகக் கொண்டது சைவசித்தாந்தம் . உயிர் சத்தாகிய இறையையும் அசத்தாகிய உலகையும் அறிந்து அனுபவிக்கும் திறமுடையது. ஆகவே அது சதசத்து. இருள் நிலை , மருள்நிலை , தெருள்நிலை என்ற படி நிலை வளர்ச்சியில் இறையருளால் வாழ்வின் முழுப்பயனை உயிர் அடைகிறது. உயிரின் இந்நெடிய வரலாற்றை மெய்கண்டாரின் சிவஞானபோத நெறி நின்று இக்கட்டுரை விளக்குகிறது.

1.31 தேவை ஒரு புதிய அணுகு முறை

சி. மெய்கண்டான்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி , திருச்சி

உலகு , உயிர் , இறை ஆகியவை பற்றிய ஒரு பொதுவான தத்துவத்தை மெய்கண்டார் அளித்துள்ளார். நாடு , மொழி, இனம் ,மதம் அனைத்தையும் கடந்த பொது உண்மையை விளக்கும் நூலாக இந்நூல் விளங்குகிறது. 12 சூத்திரங்களிலும் சிவன் என்ற சொல் குறிக்கப்படவில்லை. சிவசத்து என்னும் சொல் சித்து என்பதையே குறிக்கிறது. பாசங்களை அறுப்பவன் என்ற பொருளில் '' அரன்'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மெய்கண்டார்க்குக் காணப்பட்ட உரைகள் சமயங்கள் சார்ந்த உரைகளாகவே உள்ளன. தீட்சை பற்றிய கருத்து சிவஞான போதத்தில் இல்லை. சிவஞான முனிவரில் காணப்படும் சில கருத்துக்கள் உடன்பாடானவை அல்ல என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. எனவே ஒரு புதிய அணுகுமுறை தேவை. அதுவே உலகளாவிய உடன்பிறப்புரிமைப் பண்பை வலுப்படுத்தும்.

1.32 கட்டு நீத்தலும் கடவுட் பற்றும்

முனைவர் மு. வள்ளியம்மை பழநியப்பன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இறைவன் ஒருவன் ; உயிர்கள் எண்ணற்றன ; இடைப்பட்டுத் தடையாய் நிற்பன ஐந்து என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை.

உயிர்களாகிய நாம் தடைகளை விலக்கி இறைவனை உணர்வது எவ்வாறு என்பதே இக்கட்டுரையின் பொருள்.

கட்டு என்றால் என்ன? நன்மையை அடையமுடியாதவாறு தடைகளாக இருப்பவை அனைத்தும் கட்டுக்கள் -சைவசித்தாந்தம் அவற்றைப் ''பந்தங்கள் '', ''பாசங்கள் '', ''மலங்கள் '', ''தளைகள் '' எனக் கூறும்.

கட்டுக்கள் ஐந்து - திரோதாயி , மாயேயம் , ஆணவம் , கன்மம் , மாயை என்பன - விளக்கம்

திரோதாயி என்றால் சிவனின் மறைப்பாற்றல் - விளக்கம் - பாசங்களில் ஒன்றாக இதைக் கொள்வது ஏன் ? - மாயேயம் என்றால் என்ன - மாயையின் பருமையான வெளிப்பாடு - தனு , கரண , புவன, போகம் - ஆணவம் என்பது அநாதியான தீயசக்தி - ஆணவத்தின் இயல்பு - தோற்றமும் இறுதியும் இல்லாதது - கன்மம் என்பது நாம் செய்யும் செயல்கள் கன்மத்திற்கு இணையான சொற்கள் இருள்சேர் இருவினை - மாயை என்பது சிவனின் வைப்பு ஆற்றல் - பரிக்கிரக சக்தி - தானாக இயங்கும் ஆற்றலின்மை - மாயையால் உயிர்கள் பெறும்பயன் - மாயை ஒரு கட்டே

கட்டு நீத்தல் எவ்வாறு ? - மும்மலப் பிணிப்பு - பிணித்த நிலை உணராத் தன்மை - நிலை பேறுடையவையாதலாலும் தீயசக்திகளை உடையதாதலாலும் அவற்றை ஒடுக்க வேண்டும். நம்மால் இயலாது எனவே பேராற்றலை ,அவற்றை ஒடுக்க நாடவேண்டும். அதுவே கடவுட்பற்று - சிவபெருமானே மும்மலங்களையும் ஒடுக்க வல்லவன் - கட்டுக்களை நீக்கக் கடவுளை நம்புவதே தலையாயது .

கடவுள் யார் - அவர் தன்மை என்ன - அவருக்கும் நமக்கும் உள்ள உறவு என்ன - பரசிவமே கடவுள் - சிவம் என்ற சொல் விளக்கம் - தொல்காப்பியத்தில் சிவன்.

கடவுட்பற்று - உயிர்கள் சிற்றறிவன - இறைவன் நுண்மையானவன் - பேருருவினன் - உணர்வினால் , சிந்தையினால் தான் உணரமுடியும் - அன்பு செய்தல் - மெய்த்தவநெறிகூறல் - நால்வகை நெறிகள் - சரியை , கிரியை , ஞானம் , யோகம் - விளக்கம் - இன்பநிலை.

கட்டினை நீக்கக் கடவுளின் அருள் வேண்டும் - ஆன்மாக்களின் அழுக்கினைப் போக்கி இறைவனிடம் சேரப் பக்குவப்படுத்துகிறாள் ஆதிசக்தி - தூய்மையடைந்த ஆன்மாக்களிடம் 'அருளல்' தொழிலைச் செயற்படுத்துகிறான் இறைவன் - கட்டுநீத்தலே சத்திநிபாதத்திற்கு வழிகாட்டுகிறது - கட்டினை நீக்கிக்கொள்ள , கட்டிலிருந்து விடுபட , இறையருள் பெற அவன் தாள் வணங்குவோம்.

1.33 திருக்குறளில் சைவ சித்தாந்தம்

கு. வைத்தியநாதன்
திருவிடைமருதூர்

தோற்றுவாய்

திருவள்ளுவர் காலத்தில் தமிழகத்தில் கிறித்துவம் முதலிய வெளிநாட்டு மதங்கள் இருந்ததில்லை. ஆதிசங்கரரின் ஏகான்ம வாத மதமும் , இராமாநுசரின் வைணவமும் தோன்றி இருக்கவில்லை. வடநாட்டு மதங்கள் ஆகிய சமணமும் பௌத்தமும் தமிழ்நாட்டில் ஓரளவு பரவியிருந்தன. ஆயினும் ,திருவள்ளுவர் சிவாகமச் செய்திகளையே திருக்குறளில் வலியுத்தியுள்ளார். எனவே, திருக்குறள் ஒரு சைவ நூல் என்பது போதரும்.

பிற மதங்கள் பொருந்தாமை (பரபக்கம்)

திருக்குறளில் மோட்சம் , சுவர்க்கம் , நரகம் , மறுபிறப்பு , ஊழ்பற்றிய செய்திகளை உடன்பட்டுத் திருவள்ளுவர் பேசுகிறார். எனவே, உலோகாயத மதத்தை அவர் ஏற்கவில்லை.

துறவறத்தைவிட இல்லறமே சிறந்தது - உயிர்க்கு வினைப்பயனை இறைவனே ஊட்டுகிறான் - கொல்லாமை மட்டுமன்று, புலால் மறுத்தலும் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பன போன்ற கருத்துக்களைத் திருக்குறள் பேசுகிறது. எனவே சமணத்தையும் பௌத்தத்தையும் திருவள்ளுவர் ஏற்கவில்லை.

மறு பிறப்பு உண்மையைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். எனவே கிறித்துவத்தையும் இசுலாமியத்தையும் அவர் ஏற்கவில்லை.

3) சைவ சித்தாந்தம் (சுபக்கம்)

இறைவன் எண்குணங்களை உடையவன் -அம்மையப்பராக இருக்கிறான் - உயிர்கள் பல - உடல் வேறு ; உயிர் வேறு - உயிர் சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடையது - மூவகை உயிர்கள் உள்ளமை - அறியாமையே துன்பத்திற்குக் காரணம் அவைமலச்சார்போடு செய்வதே

வினை ஆகும் - திருவருட்டுணையால் ஊழை வெல்லலாம் - பிறவி நீங்கப் பெற்ற உயிர்க்கு மாயா காரியமாகிய உடல் தேவை இல்லை - என்பன போன்ற சைவ சித்தாந்தக் கொள்கைகளைத் திருக்குறள் தெளிவுறுத்துகின்றது.

4) திருக்குறள் சிவ வாக்கே

பன்னிரு திருமுறைகள் சிவ வாக்கு என்பது சித்தாந்தச் சைவர்களின் கொள்கை . இத்திருமுறைகளில் திருக்குறட் சொற்களும் செய்திகளும் மேற்கோளாகக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே திருக்குறளும் சில வாக்கே என்பது பெறப்படும்.

5) சைவர்களுக்கு வேதம் திருக்குறளே

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருகை தருமுன்னரே இங்குச் சைவ சமயம் சிறந்து விளங்கியிருக்கிறது. சமயம் என்று ஒன்றிருந்தால் ,அதற்கு வழிகாட்ட வேதம் ஒன்று இருந்திருக்க வேண்டும். அவ்வேதம் அறம் , பொருள் , இன்பம் , வீடு என்பனவே என்று திருமுறைகள் முழக்குகின்றன. திருக்குறளும் இந்நான்மறை குறித்தே பேசுகின்றது. எனவே சைவர்களுக்கு வேதம் திருக்குறளே என்பது தெளிவாகும்.

1.34 சைவமும் வள்ளுவமும் காட்டும் வினைக்கோட்பாடு

முனைவரி திருமதி . ஜலஜாகோபிநாத்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சைவ சித்தாந்த நெறியின் அடிப்படை '' உள்ளது போகாது இல்லது வாராது '' ஆகும். இந்நெறியில் இறை , உயிர் , தளை என மூன்றும் என்றும் உள்பொருளாகக் கருதப்படுகின்றன.

சைவ சித்தாந்தத்தில்உயிரைப் பற்றிச் சில கொள்கைகள் உண்டு. இவ்வுயிர் என்றும் உள் பொருள் , உயிர் யாராலும் படைக்கப்பட்டதன்று ; உயிர்க்குத் தோற்றமும் இல்லை ; அழிவும் இல்லை என்று சித்தாந்தம் கூறுகின்றது. உயிரின் இன்பதுன்பத்திற்குக் காரணங்களாக ஆணவம் , கன்மம் ,மாயை ஆகிய மூன்றும் அமையும். கன்மம் என்பதற்கு வினை அல்லது செயல் என்பது பொருள். இவ்வினைவழிப்பட்ட இன்ப துன்பங்களைத் துய்ப்பதற்காகவே உயிர் பிறவிச்சுழற்சியில் அகப்படுகின்றது. வினையின் காரணமாகப் பிறப்பும் , பிறப்பின் காரணமாகக் கன்மமும் மாறிமாறி வருகின்றன. இந்த வினைகளைச்

சித்தாந்தம் மூவகையாகப் பிரிக்கிறது. அவையாவன . 1. பழவினை (சஞ்சிதம்) 2. நிகழ்வினை அல்லது துய்ப்பு வினை (பிராப்தம்) அல்லது ஊழ்வினை 3. எதிர்வினை அல்லது (ஆகாமியம்) வருவினை என்பன.

உலகப் பொதுமறையாகத் திருக்குறள் விளங்குகிறது. வள்ளுவர் 'ஊழ்' என்னும்அதிகாரத்தின் வழி ஊழின் வலிமையை விளக்குகிறார். ஆகூழ், போகூழ் , ஆகலூழ் , இழவூழ் என்றும் கூறி ஊழை விளக்குவர் . ஆகூழ் என்பது ஆக்கம் தரும் ஊழ் எனவும் ,போகூழ் - என்பது போக்கும் - நீக்கும் - இழப்பிக்கும் ஊழ் எனவும் இழவூழ் என்பது பேதைமையை உண்டாக்கும் எனவும் ஆகல் ஊழ் என்பது அறிவகற்றும் எனவும் விளக்குவர்.

இந்த ஊழ் என்பதற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கத்தால் முற்பிறப்பில் செய்த வினை , மறுபிறப்பில் விளையும் முறை , விதி, வினைப்பயன் ஆகிய நியதி தெய்வம் எனப் பலபொருள்களைப் பெறமுடிகிறது.

வள்ளுவர் காட்டும் ஊழ்வினைக் கோட்பாட்டையும் சைவ சமயம் காட்டும் வினைக்கோட்பாட்டையும் ஒப்பிட்டுக்காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

1.35 சைவசித்தாந்த வாழ்வியல் கோட்பாடு

முனைவர் வேலா. ஜெயராமன்
தாகூர் கலைக்கல்லூரி, புதுச்சேரி

சைவ சித்தாந்தம் வாழ்வின் செயல்முறை என்பது சித்தாந்திகளின் உள்ளார்ந்த அனுபவம். மெய்கண்டார் சித்தாந்தக் கருத்துக்களை முறைப்படுத்தி எடுத்துரைத்துள்ளார். தற்காலச் குழல் , வாழ்க்கைக் கோட்பாடு , அறிவியல் கோட்பாடு , வினைக் கோட்பாடு , வாழ்க்கையின் இலக்கு என்ற தலைப்புகளில் இக்கட்டுரை பல கருத்துக்களை விளக்குவதோடு சைவ சித்தாந்தம் எவ்வாறு வாழ்வியல் கோட்பாட்டிற்குத் துணையாக அமைகிறது என்பதைச் சின்னத் திரையில் மின்னும்சித்திரம் போல் காட்டுகிறது.

1.36 சுத்தாத்தவித ஆனந்த நிலை

முனைவர் எஸ்.ஆர். ஜெயவேலு
சென்னை

சிவனேயாய இறைவனை எந்த வகையிலும் வழிபாடு செய்தல் நம்மனோர்க்கு எற்புடைத்தே. ஆனால் சிவனை மறந்து வெறும் பொருள்களையும் , பொருட்தன்மைகளையும் மட்டும் உணரும் நெறி சைவ வழிபாடு ஆகாது. எல்லாவற்றிலும் சிவனேயிருந்து அருள் பாலிக்கிறான் என்ற தெளிவு வேண்டும். சிவனை மறந்த வழிபாடு சிறு தெய்வ அல்லது மூட நம்பிக்கை வழிபாடாகிவிடும்.

96 தத்துவங்களையும் சிவ சிந்தனையில் வைப்பதே சிவ வழிபாடாகும். இவை அனைத்துமே நம் சித்தத்திற்குட்பட்டநிலைகளாகும்.

ஆன்மா , தன்னைத் தவறாக உடலுடனும் , உலகாய தங்களுடனும் முற்றொருமைப்படுத்திக் கொண்ட உணர்வு நிலையிலிருந்து மாறி , ஞானத்தின் துணைக் கொண்டு விடுபடுதல் முத்தியாகும். அது வீடு பேற்றின் தொடக்கம் ஆகும். மேலும் ஒரு படி உயர்ந்து பருவுடம்பையும் , அதன் வாயிலான அநுப வங்கள்அனைத்தையும் இறையுணர்வு , மற்றும் ஒளி அல்லது ஞான உடம்பாக மாறி நிற்கும் நிலை சித்தி நிலையாகும் . இஃது , இறுதியான வீடு பேறு ஆகும். இங்குச் சித்தி என்பது 'சித்திக்கப்பெற்ற', ' கைவரப்பெற்ற' பேரா நிலை என்பதையும் , சித்தாந்தம் என்பதும் சித்தத்தின் முடிந்த முடிவு என்று கொள்ளலாம். அதே சமயம் , சித்தாந்தம் என்பது அதனினும்மேலாய ' சித் , அசித் ,ஈஸ்வரன்' எனும்போது குறிப்பிடும் சத்தாகிய , உண்மையாகிய உயிர்ப்பொருளின் முடிந்த முடிவு என்றும் கொள்ள வகையுண்டு.

ஆணவம் , முத்தி நிலையிலும் ஒடுக்க நிலையிலும் செயலிழந்து இருக்கும் என்பர் சைவ சித்தாந்த வல்லுநர். அதையும் கடந்த ஒளி உடம்பு, ஞான உடம்பு , பெற்று ஆணவத்தினின்றும் விடுபட்டு ஆன்மா இருக்கும் என்ற ஒரு கருத்தும் உள்ளது . இஃது ஆராய்ச்சிக்குரியது.

ஆணவமும்விடுபட்டஇந்த அனுபவம் ஆனந்தம் (ஆ அல்லது ஆன் + அந்தம்) அதாவது கன்மம் ,மாயையோடு ஆணவத்தினின்றும் கூட விடுபட்ட சுத்த ஆத்மாவின் அந்தமாகிய நிலை , இந்த நிலையின் அநுபவத்தை ஆனந்தக் களிப்பு என்று வள்ளல் பெருமானும் , திருமூலரும் குறிப்பர்.

இறைவனும் ஆன்மாவும் கலந்து ,ஏனைய தத்துவங்கள் அத்தனையும் ஒளி உடம்பாக மாறிய நிலை சுத்தாத்து வித ஆனந்த நிலையாகும்.

1.37 சைவாகமங்களும் - மலம் நீங்க இன்பும் சாதனங்களும்

சு. விசுவநாதன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சிவ சம்பந்தமுடையது எல்லாம் சைவும் ஆகும். அச்சைவ சமயத்தைப்பற்றிய , வழிபாட்டு முறைகள் , ஆலய நிர்மாணம் பிரதிமைகள் பற்றிய அமைப்புமுறை , சரியை, கிரியை, யோகம் ,ஞானம் என்ற நால்வகைச் சாதனங்கள் முதலான இன்ன பிறவற்றையும் விரிவாக எடுத்துப் பேசுவது சைவாகமங்கள். பொதுவாக ஆகமம் என்ற சொல்லுக்கு வந்தது என்ற பொருள். மேலும் சிறப்பாக ஆன்மாக்கள் மோட்சமடைய மலநாசம் செய்விப்பது என்ற பொருளையும் 'ஆகமம்' என்ற சொல் விளக்கி நிற்கிறது. இவ்வாகமங்கள் இருபத்தெட்டாகும். அவ்வாகமங்களில் பேசப்பெறுகின்ற சிவ நெறிமுறைகள் பற்றியும் , அச்சாதனங்கள் (சரியை, கிரியை , யோகம் , ஞானம்) பற்றியும் இந்த ஆய்வின் வழியாக விளக்கப் பெற்றுனள்ள.

1.38 சிவன் எனும் செம்பொருள்

முனைவர் பே.க. வேலாயுதம்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி , திருச்சி

அச்ச உணர்வு காரணமாகவும் நன்றியுணர்வு காரணமாகவும் வழிபாடு தொடங்கியது. இயற்கைப் பொருட்களை உருவகித்துக் கடவுளாக நினைத்து மக்கள் வழிபடத் தொடங்கினர். உலகப் பொருட்களின் படைப்பே இறையியல் கோட்பாட்டை அடியொற்றி அமைந்தது என்பதைச் சான்றுகள் மூலம் இக்கட்டுரையில் எடுத்துக் கூறப்பெற்றுள்ளது. யோகநிலை, ஆடும் சிவன் , முயன்கள் , கடவுளரின் தேவியர் போன்ற இறைப் பொருண்மைகளுக்குரிய தொடர்புகள் இக்கட்டுரையில் சுட்டப் பெற்றுள்ளன. அடிப்படையாக நிலத்திலும் வானிலும் பொருத்திப் பார்க்கப்பட்ட சிவன் வடிவை உணர வேண்டும் என்ற கருத்தும் இக்கட்டுரையில் தெளிவாகச் சுட்டப்பெற்றுள்ளன.

1.39 THE POETRY OF JOHN KEATS AND SUBRA MANIYA BHARATHI

Dr. K. Chellappan
Chennai

Whereas Subramaniya Bharathi has been studied in the light of Saiva Siddhanta along with Vedanta, John Keats, the 19th Century British Romantic poet has not been seen in this perspective. Keats's ' ode to a Nightingale ' shows the need for the world even to trancend it and to Keats, as to the Siddhantins, the world is impermanent but not unreal. The poet's perception of the eternal is based on his acceptance of the world and his epistemology also has affinities with Siddhanta. Finally his concept of the world as a vale of soul making and how feelings and intelligence evolve into identities is also like the Siddhanta view.

In all this he is like Subramaniya Bharathi whose " Kuyil Pattu " is not only like the Nightingale Ode but has a clear Siddhanta framework. The female bird is the soul which is said to be brought up by the hunters who can be linked with "Aimbula Vedars" of "Sivagnanbodham". Bharathi also accepts the need of the world for soul's salvation and in this respect he is more a Siddhantist than a Vedantist.

1.40 JIVA AND SUDDHAM

Dr. P. Chidambaram
Arignar Anna Arts Collage , Nagercoil

Ganga which streams from the clouds and continues life after death still continues. This Jiva too migrates from one body to another until with the Grare of Hara it reaches the destined goal where it exhausts all Karmic experiences, good and evil.

This Jiva is his own friend and foe here and hereafter. He is the master of Himself also. To know the self is the State of Suddham.

The three states Kevala, Sakala and Suddham are the three

States - conditions of Jiva

This article tries to expose the knowledge about Kevala, Sakala and Suddham. These ways and approaches are advocated by, Saint Thirumoolar, Thirumoolar comments about Hindu, the states of bondage and liberation, self - realisation and even beyond Turiya-tita that is void . Hence the noblest principles proclaimed by Thirumantiram is being translated into English and eventually advises to seek Him, the birthless and the greatest. He will definitely redeem us.

1.41 SAIVASIDDHANTA THE ESSENCE OF THE VEDANTA

Mr. T. Ganesan
French Institute , Pondicherry

Umapati states in Sivappirakasam (verse 7) that Saivasiddhanta (hereafterwards Siddhanta) is essentially a refinement of the Vedanta (Vedantattelivam caivacittantat tiraninkut terikkalurram) In what way it is a refinement of the Vedanta ? For, neigher in the Civananapotam, nor in the Civananacittiyar Ôe find any reference to the Vedanta school except the mayavada(school) which is taken up only for refutaion. On the other hand Manavacakankatantar states that he is explaining "truths"(Siddhanta?) without ever going against the Agamas (akamanul vaitta porulvaluva unmaivilakkam, verse 55). One may ask why Umapati states Siddhanta to be the refinement of the Vedanta and not of any other saiva school of Philosophy such as aikyavadasaiva or sivasamavada (which are all based on the Agama-s) in which case his task would have been easier. For, the Vedanta based not accept 36 tattva-s which is one of the basic principles for any system of saiva philosohy. Now in order to prove that Siddhanta is superior to the Vedanta Umapati (and his successors) had to refute not only mayavada but also other basic concepts like ekatmavada (in the case of advaita vedanta) sabdabrahmavada, jivanmukti, etc.

One may surmise that Umapati formed a rapproachment, as it were, between the Vedanta and Siddhanta and to make Siddhanta

to be superior to the Vedanta made it appear as a 'refinement' of the latter as Vedanta was such as influential and widely prevalent system of though at that period which tendency is also perceptible in the case of later Siddhanta - writers such as Sivagrayogin, Civananacuvamikal and others.

In the sequel I propose to analyse some of the arguments and explanations of Umapati to verify whether he has achieved his objective.

1.42 SOCIAL DIMENSIONS OF THE LAW OF KARMA

Dr. S. Gangadaran
Madurai Kamaraj University

It has been accepted as secondary instrumental cause of the experience of the human beings, the sakti of Siva being the prime instrumental cause as explained in the second sutra of Sivajnana Bodham.

Law of Karma determines the actions of human beings but also gives from for freedom depending on the say the human being responds to the given situations provided by God for meeting the moral concerns. Law of karma explained in Jainism & Budhism is different from the conception of law explained in Siva Siddhanta. The difference is due to the acceptance of God in Saiva Siddhanta.

Law of Karma can be applied in social sphere too. Saivism in the present 20th century is the result of the activities of the saivites for 2000 years or so. This is only one aspect of the law. Siva teaches through the pitfalls that saivites need to avoid and also show the direction to achieve the ideal state for saivism

Application of the law by the samaya acaryas and Santana acaryas, in addition to the explication of the term in the scripture. Attitude of sundarar when he hears the auspicious sound and inauspicious sound at the same time from two houses - Attitude of sambandar towards the lady who lost her husband through a snake bite in the temple at Tirumarugal and similar other incidents in the lives of teachers. Since God alone knows the operation of the law of Karma in totality, our knowledge of the law is only partial and we need to

show love instead of saying that the person suffers due to the law of karma.

Application of the law with regard to others should be carefully made . In certain situations inspite of all efforts we could not succeed. We may apply the law in some special situations to oneself and this is like the goat going backward temporarily in order to gain strength and again coming to fight.

Law of karma is a double - edged weapon. We must use of this poperly for our spiritual welfare by understanding the spirit of the law and also by not accruing bad karma by applying without proper insight especially when our neighbour suffers.

1.43 ANMA - CITSAKTI

Its meaning and soteriological significance in Siddhanta

V.S. George Joseph
University of Madras

Siddhanta gives great importance to the sourcen aturem content of knowledge and the cognitive processes involved in knowing. According to the school , it is ignorance that has led the souls to bondage which in turn, is the cause of innumerable miseries of the world. True knowledge, then, is the only panacea for all miseries and suffereings of the world. Thus, according to Siddhanta., a genuine epistemology (pramana sastra is essential) to man, not only for a deep ontlogical understanding of the entire reality consisting of pati, pasu and pasa as revealed in the Agamas but more so for his soteriological experience of liberation of this earth.

Anma - citsakti and its significance in Siddhanta

Anma - citsakti, according to Siddhanta is that instrument of knowledge without which no knowledge is possible. Its corolary is that a real instrument of knowledge can never become an object of knowledge at all. It is not merely an essential epistomological character of the self but as well as an ontological character (uyir iyalpu) itself.

Anma - citsakti : the centre of consciousness

Anma - citsakti is as well as the centre of consciousness. Self does not know itself independent of the object which it knows. For,the consciousness of the self is always consciousness of the object, and when it is thus conscious, it becomes conscious of itself. Therefore, the self knows iteself, it and when it knows either sat or asat. Self as the centre of consciousness includes not only cognition but aslo affection and vollition, Citsakti is only a comprehensive term used by the Siddhantin to refer to the organic nature of the self. It is anma - citsakti, in and through these qualities and means of knowledge, obtains valid knowledge. The validity of the knowledge is totally attributed to the self- consciousness of the person, the knower. It is in fact true, in the ultimate sense, as affirmed by Sivajnanamunivar and other Siddhantins, that the anma - citsakti is guided by Citsakti of Siva Himself, thus this citsakti is considered to be the ground of knowledge and the means of true salvation.

Anma - citsakti and its soteriological significance

It is only a sound pramana (epistemology) obtained through the anma - citsakti that could reveal the real laksana (nature) of the sentient (of both the paramanma and Jivanma) and the insentient beings (pasa, jada) and thus pava the way for a true sadhana (means) in order to attain the ultimate payan (goal) which is mukti (vidu-peru) for which the Siddhanta strives for. The ultimte realization of Siva (Uyar Sivajnanam) is the ultimate goal of Siddhanta. It is evident thus, that anma- citsakti, according to Siddhanta, is not merely an imperative for a genuine ontology but even for a true soteriology.

1.44 THE CONCEPT OF KARMA

Dr. P. Krishnan
University of Madras,

It has generally been understood that the law of karma logically implies fatalism and that the idea of freedom is contradictory to

the law of karma. This paper seeks to refute the above view by systematically exploring the law of karma in the context of atma-cit-sakti, advaita, maya, satkaryavada and other relevant siddhantic concepts. This paper argues that the notion of moral responsibility and freedom are intelligible only within the framework of karma. It also analyses the Western philosophical theories of human behaviours including the scientific theory, and shows that they fail to account for moral responsibility, freedom and progres. in the course of exploiding the concepts of karma, this paper makes a distinction between the freedom of the self in the spatio-temporal existence and the freedom of transcendence (freedom to act and freedom to be) and points out how karma makes the self mature to receive the latter through the former. This paper concludes that the Siddhantic concept of karma is not ony philosophically enlightening but also religiously more satisfying in inspiring.

1.45 SAIVA SIDDHANTA MAYA AND ITS EVOLUTES

P.G. Thamaraiselvi
District Judge, Coimbatore

01. Saiva Siddhanta - constituting an Independent School - enunciated with relevant Literature - " MEYKANDA SASTHRAM".
02. Siva - The supreme being - Manifested through the authorities viz., "THIRUMURAI", AGAMAS & of course with VEDAS.
03. Maya - Its nature.
04. A general Account - the way in which they evolve
05. Suddha and Asuddha Maya and Evolutes
06. Classification of Tattvas.
07. Resolution of Tattvas.
08. Tattvas in the Siddhanta - Compared with Sankya.
09. Justification of the extra Tattvas by Siddhantins, and the Criticism.
10. Maya, Anava & Karma - " MALAS" and their inter-relation
11. The three "Malas" and the absolute nature of God

Problems

1. How the soul can be fettered ?

2. How the soul can be eternal inspite of undergoing the gross and Subtle States ?
3. An attempt to evoluate the way to fight out Maya - as spoken by " Manichavasaka."
4. How the contemporaries of Manichavasaka were able to free the soul from Maya ? - illustrating with Ramalinga Vallalar.

1.46 THE NATURE OF SOUL AND ITS LIBERATION IN SAIVA SIDDHANTA

Mr. V. Murugaiyan
Madras Christian College

Saiva Siddhanta postulates the existence of the three Padarthas namely Pati, Pasu and Pasa . All these three entities are eternal. Pasu or soul is the recipient of grace of God. He is encased in mala or pasa from eternity and hence he is ignorant.

The eternal unbound soul is an eminent and glorious being. It is intelligent and its has knowledge. But is intelligence is obsecured by the ower of anavalmala or ignorance, a power under whose dominance the soul lies from the eternal ages. Anava is undestructible and eternal and from eternity it is inseperably linked with the individual soul

Three foul classifications of the soul

There are three stages of development in the soul according to saiva siddhanta : They are :

1. KEVALA STATE (Clouded by anava)
2. SAKALA STATE (Ignorance due to by anava, maya & Karma)
3. SUDDHA STATE (Free from the three malas)

According to Saiva Siddhanta the Soul is considered as Sat-Asat. The God is Sat or unchangeble and the universe is asat or changeable. The soul is called Sat-Asat, because it is both changable and unchangeable. The soul cannot stand alone. The soul is said to have this dual nature.

Liberation means the union of Soul with God. The soul was

bound by three malas. If the malas are removed by selfless action the soul will attain liberation or moksa.

This ancient system, Saiva Siddhanta thought and religion continues to move the hearts of millions mould their lives and afford spiritual consolation because it presents a comprehensive system which attempts to reconcile many seeing contradictions such as reason and authority, pluralism and monism and claims of the work -a - day world and those of spirituality.

1.47 CONCEPT OF GRACE IN SAIVA SIDDHANTA

Dr. D. Nesey
University of Kerala

The paper is an attempt to examine the state of bondage and release of the soul according to Saiva Siddhanta and the relevance of the doctrine of Grace in the whole process. An attempt is also made to compare and contrast the principle of Grace as is traced in Dvaita Vedanta and Christianity. Saiva Siddhanta takes the individual soul as eternally free, pure consciousness and perfect will. But it lies obscured because of avidya as mala or contamination from which the soul is to be recovered and reinstated. The perfect freedom can be realised only upon the will of the Absolute or Divine Grace designate as Saktipada or the descending of the divine energy in to the heart of the Sadhaka. This requires human aspiration and effort. Grace in the Christian tradition means Emmanuel, God with us . The locus of Grace is Jesus. God owes nothing to man. Man is taken as a powerlesss creature, sinner through his own fault and who walks in the shadow of death. But he is not given over and left to himself, to his misery. Whatever he is, Grace accepts man. It is God's free gift to man. Man has to bow before it and give thanks for its. Dvaita Vedanta attribute the cause of Jiva's bondage to Brahman- god's maya and hence it can be removed only by God himself. This consists in withdrawing the power of maya and this is an act of Grace. Hence the Dvaita conclusion that nothing but God's Grace can free the soul from bondage. But the flow of Grace is to be facilitated by the human aspiration and

endeavour. Human Sadhana is recognised as a subsidiary condition for the effective operation of Grace. In short, a fine reconciliation of Grace and human effort founded on the understanding of the majesty of God is worked out as the principal means of salvation.

1.48 SAIVA PHILOSOPHY-SAIVA SIDDHANTA

Mrs P.Ragoobar
Mahatma Gandhi Institute, Mauntius

Science and Technology are inventions of the human mind. They are the best aids to mankind in making life smooth and prosperous. It is the Atma Vidya, Para Vidya, Adhyatma Vidya which alone can save the destiny of many from the twin ghosts of cosmic pollution and nuclear supremacy.

The worship of Siva or Rudra goes back to the Vedas. The whole universe is the manifestation of Rudra.

Saiva Siddhanta calls itself " Shuddhadvaita", means Shudha 'Unqualified ', Advaita - 'Dvaita devoid of duality '. Though matter and souls are real but are inseparably united with Siva.

Siva is the Supreme reality and is called "pati". Siva is the first cause, His Shakti is the instrumental cause and Maya is material cause. The relation of Siva and shakti is identical.

The individual souls are called Pasu, they are bound by the rope of Avidya to this world. The soul is all - pervading, eternal, conscious agent and enjoyer.

The fetters which bind the souls are called "Pasa" and are threefold - Avidya, karma and maya. To attain liberation the soul has to get rid of these three impurities. And for this God's grace is absolutely essential.

After the removal of the Pasa, the soul unites with Siva. It becomes co-pervasive with Him and Shares His glory and greatness.

1.49 THE SAIVA CONCEPT OF GOD, SOUL AND UNIVERSE

Dr. S. Radha
Calicut University, Kerala

The aim of the proposed paper is to give a detailed systematic account of God, Soul and Universe and their relation to each other. The liberation of self is brought about by devine grace. The soul after attaining liberation should guard itself against falling in the lower stage of conciousness. It is unique that Saivism has the concept that the annihilation of avidya is only through God's grace. The paper concludes with a note on the contemporory relevance of Saiva Philosphy.

1.50 THE PHILOSOPHY OF SATARATNA SANGRAHA

Dr. Rama Ghose
Arya Mahila Degree College,Varanasi

Sataratna Sangraha, a compilation of about one hundred versus, the gems of Agama Scriptures on the salient principles of the religious philosophy of Saivism in general and Saiva Siddhanta in particular by the renowned saint Philosopher Umapati Sivacharyar flourished in Southern India at the end of the thirteenth and the early years of the fourteenth Century and the celebrated author of the eight scriptures out of the fourteen of the Saiva Siddhanta Philosophy of the Southern India. Umapati following the traditions of his own preceptors and the other famous Saiva Preceptors namely Sadyojoti, Ramakantha & narayan Kantha etc., compiled about one hundred brillient gems of many obscured Agamas illuminating the real nature of the tattvas, and ultimately leading to the moksa and the unity with Sivam of the human life. After stating the epistemological view regarding the means of knolwedge, Umapati enunciated the nature of the catagories namely Pati, Pasu and Pasa, their relations and ultimately the realisation of the Reality and the attainment of the Truth.

Pati, the Lord, the omniscient, Omnipresent, omnipotent, Prime

mover, ever free, causaui and at the same time substratum If all beings, an immutable Principle, is endowed with His power which is inseperably related to it is the rays remains in the Sun. Panchakrtya or the fivefold actions is the prerogative of God only.

Pasu, the soul, though of the nature of consciousness, is enveloped with the nescience beginninglessly and consequently suffers the cycle of birth and death in order to enjoy the fruit of actions performed by him. All merciful God with His ever compassionate power pierces the thick veil of ignorance and awakens the soul by enkindling the knowledge within and thus gradually takes the soul out of the clutches of mala and bestows liberation. God, with His parigraha sakti namely maya, manifests the wordls of multiplicity. Guru, none but Siva Himself, destroys the bonds by initiation and makes the disciple fit for final attainment.

1.51 SCIENCE IN SAIVA SIDDHANTHA

Dr.. A.S. Subbiah,
Annamalai University,

The all- pervasive God dwells in our human body also.

Our human body is not a mere composition of flesh and blood or of bones and nerves. It is a sacred constitution wherein the divine insight and intuition are blessed on the soul.

The great Saiva yogis and Gnanis are blessed with the insights of Divine images in their physical frame work itself. This is more like modern scanning.

Our heart is not a mere blood bank. It is a seat for Lord Shiva and His family. And our brain is more than a bundle of nerves. It is our unexplored treasury of unrealised virtues. The abundant super - human potentials inside, have to be profitably used for the uplift of soul towards the eternal bliss.

Cerebrum, midbrain and cerebellum clearly symbolize the "Somaskanthaa" of Shiva, Skantha and Sakthi. So also is the spinal chord which enables us to visualise the various postures of Lord Muruga.

Soul is never a master of itself. It is either enslaved by the

evil entities, or embraced by the Eternal Bliss. The present material life is not a full fledged one, by itself. This has been bestowed upon us only to gain momentum of experience, and to transcent beyond the present empowering material accomplishments.

The soul thus enlightened of this eternal truth experiences the Divine Bliss in the present life itself.

1.52 CONCEPT OF SOUL IN SAIVA SIDDHANTA AND ADVAITA VEDANTA

Dr. S. Mathivanan
Madras Christian College

A positive account of the treatment and consideration of Soul in Saiva Siddhanta and Advaita Vedanta is taken up for presentation in this paper.

In Siddhanta and Vedanta, the ontological status of soul is that of oneness with the Divine. Both these schools acknowledge and accept the dictum and doctrine Thou art That Tat Twam Asi. Vedanta turns to the soul and proclaims the Thou art That. Siddhanta turns to God, the soul of all souls and asserts Satasat Thou art That Unique Reality.

The need of the hour is not to harp on doctrinal differences. But to understand the principles comparing them to build bridges of harmony and understanding in order to achieve peace and harmony at the spiritual and physical levels.

This paper is an humble attempt in this direction.

அமர்வு இரண்டு

சைவ சமயம்

2.1 தாயுள்ளங்கொண்டது சைவ சித்தாந்தம்

சா.கோ. அரங்கசாமி
தஞ்சாவூர்

மனத்துயரங்களிலிருந்து விடுபடப் பாசங்களிலிருந்து மனிதன் விடுபடவேண்டும். பதியைச் சார்ந்தால் பாசம் நீங்கும். சைவ சித்தாந்தம் வழிநின்று இறைவன் யார் என்பதையும் இறைவனை அணுகுவது எங்ஙனம் என்பதையும் இக்கட்டுரை விளக்குகிறது. அன்புடையோர் சிவமாகவே ஆவர். முழுமுதற்பொருளாம் சிவனைப் பற்றிச் சான்றோர்கள் கூறிய கருத்துக்களையும் இக்கட்டுரை விளக்குகின்றது. சைவத்தின் மனித நேய நோக்கினைத் திருவாசகம் போன்ற நூல்களின் எடுத்துக்காட்டுகளோடு இக்கட்டுரை நிறுவுகிறது.

2.2 இராமலிங்கரின் இலக்கியப் படைப்புகளில் சைவ சமயச் சிந்தனைகள் - ஆய்வு அறிமுகம்

முனைவர் (செல்வி) பா. அருள்செல்வி
தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை

இராமலிங்கரின் வாழ்க்கைப் பின்புலம் (1823 - 1874)

பிறப்பு - மருதூர் தென்னார்க்காடு மாவட்டம் - சென்னை வாழ்க்கை, சமயம் சார்ந்தது - சென்னையை விட்டு அகன்ற வாழ்க்கை , பெரும்பாலும் சமரச சுத்த சன்மார்க்க நெறியை மக்களுக்கு அறிமுகப்படுத்தித் தாமும் பின்பற்றல் - ஆன்ம ஈடேற்ற முயற்சியின் இறுதிநிலை.

இலக்கியப் படைப்புகள்

பாடல் உரைநடை என வடிவங்கள் இரண்டு - பாடல்கள் திருவருட்பா, திருவருட்பாவில் சேராத தனிப்பாடல்கள் - உரைநடை - கைப்பட எழுதியவை வாய்மொழி அறிவுரைகள் உரைநடைகளாகக் கருதப்பெற்றமை - சைவ சமயம சார்ந்த படைப்புகள் - திருவருட்பாவில்

முதல் ஐந்து திருமுறைகளும் , உரைநடைகள் சிலவும் - பிற படைப்புகளின் வழி அறியலாகும் செய்திகள்.

இலக்கியப் படைப்புகளில் சைவ சமயம் சார்ந்த சிந்தனைகள்

சைவ சமயம் பொதுப் பார்வை - தமிழகத்தில் சைவ சமயம் வள்ளலாருக்கு முன் தமிழகத்தில் சைவ சமயம் - இறையடியார்களின் சைவ சமயத் தொண்டு - திருமுறைகளில் சைவ சமயம் கையாளப் பெற்றுள்ள திறம் - இராமலிங்கரின் படைப்புகளில் சைவ சமயக் கருத்துக்கள் - திருத்தல வழிபாடுகள் - இறையடியார்களைப் போற்றல் - சைவ சித்தாந்தக் கருத்துகளை எடுத்துக்காட்டியமை - உருவ வழிபாடு சிவனின் தோற்றங்கள் -அருள் செய்யும் பான்மை - புராணக் கருத்துகள் - சித்தாந்தக் கருத்துகள் - சமரச சுத்த சன்மார்க்க வளர்ச்சியில் சைவ சமயம் பெறும் இடம்.

முடிவுரை

இராமலிங்கர் முதல் ஐந்து திருமுறைகளைச் சைவ சமயத்தைச் சார்ந்து எழுதியுள்ளார். இவை இவர்தம் ஆன்மீக வாழ்வின் தொடக்கத்தில் இயற்றப்பெற்றவை.

2.3 சைவ - கிறித்தவ சமயங்களில் சமுதாய நலச் சிந்தனைகள்

முனைவர் வே. சா .அருள்ராஜ்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சமயம் என்பது சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு அமைப்புகளில் ஒன்றாகும். சமயம் சமுதாய மக்களால் பின்பற்றப்படுகின்றது. அதனால் சமயம் பெரு வளர்ச்சியுற்று விளங்குகிறது. எல்லாச் சமூக அமைப்புகளிலிருந்தும் சமயம் தனிச் செல்வாக்கு பெற்று விளங்குவதைக் காணலாம். சமயம் பெயரளவில் பல்வேறு நிலைகளில் காணப்பெறினும் குறிக்கோள்களால் , சிந்தனைகளால் , கொள்கைகளால் ஒன்றுபட்டு சமுதாயச் சூழல்களுக் கேற்பப் பல்வேறு பிரிவுகளாகக் காணப்படுகின்றது. ஆனால் , அனைத்துச் சமயங்களும் இறைவனின் புகழைப் பரப்பல் , அருள் திறன்களைப் போற்றுதல் ,இறையருள் பெற வேண்டி மக்களை ஆற்றுப்படுத்தல் ஆகிய செயல்களை மேற்கொள்கின்றன.

சமயம் முற்கூறிய நிலைகளில் மட்டும் தம் கடமையை

நிறுத்திவிடுவதில்லை. சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் நல்ல சமுதாய உறுப்பினர்களாக , சிறந்த மனித நேயம் மிக்கவர்களாக , ஒழுக்கம் உள்ளவர்களாக ,பண்பாட்டில் மேம்பட்டவர்களாக வாழ்ந்து ,இறைத் தொண்டுகளில் ஈடுபட்டு மறுமையில் இறைவனின் பேரருளைப் பெறுவதற்கு உரிய வழிவகைகளை எடுத்து மொழிகின்றது. அனைத்துச் சமயங்களும் இப்பணிகளிலேயே ஈடுபடுகின்றன.

இவ்வகையில் சைவ சமயச் சான்றோர்கள் இயற்றியருளிய பன்னிரு திருமுறைகளில் 4,5,6 - ஆம் திருமுறைகளை இயற்றியருளிய அப்பர் பெருமானின் தேவாரப் பாடல்கள் இவண் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஒப்பீட்டு நோக்கில் இக்கட்டுரை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தேவாரப் பாடல்கள் கிறித்துவ சமயத்திலுள்ள விவிலியத்தோடு ஒப்பீடு செய்யப்படுகின்றன. விவிலியம் 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த காரியங்களையும் மக்களை நல்வழிப்படுத்தப் பல்வேறு நீதிக் கருத்துக்களையும் கூறியிருப்பது சைவ சமயப் பாடல்களோடு பெரிதும் ஒத்து வருவதைக் காணலாம்.

இரு சமய நூல்களும் , இறைவனின் பெருமைகளைக் கூறும் போக்கிலும் , இறை அன்பர்களின் பண்புகளை வலியுறுத்தும் போக்கிலும் சமுதாய மனிதர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியதிகள் எவை எவை எனக் காட்டுகின்றன. இவற்றால் சமுதாய மேம்பாடு எவ்வாறு உண்டாகிறது என்பதை ஒப்பிட்டு இரு சமயங்களும் ஒத்திசையும் நிலை இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்படுகின்றது.

2 . 4 இக்காலச் சமுதாயச் சூழலில் சைவ சமயக் கொள்கைகளின் தேவை

க. அன்பழகன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

உலகின் அனைத்து மக்களின் குற்றங்களைக் களைந்து , பக்குவப்படுத்திப் பேரின்பப் பெருநிலைக்கு வழிகாட்டுவதே சைவ சமயத்தின் நோக்கம் . சைவ சமயத்தின் நெறிகள் பகுத்தறிவாதிகளாலும் ஏற்கும்படியாக உள்ளன. அன்பு , மனிதநேயம் ,ஒழுக்கம் , புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, பிறன் மனை விழையாமை ,சகோதர நேயம் முதலான பண்புகளைச் சைவ சமய நெறிகள் வளர்க்கின்றன. ஆணவம் , கன்மம், மாயை என மும்மலங்களில் சிக்குண்டு தவிக்கும் உயிர்களை விடுவிக்கச் சைவம் வழிகளைக் கூறுகிறது. ஆனாலும் இந்நெறிகள் முழுமையாக

மனித குலத்தால் பின்பற்றப்படாத நிலையில் மக்கள் அடையும் துன்பத்தின் எல்லை விரிவடைந்து கொண்டே போகிறது. இக்காலச் சமுதாயச் சூழலுள் மேற்குறிப்பிட்ட நெறிகள் பின்பற்றப்படாமல் பிறழ்ந்த நிலை நிலவுவதால் தான் , உயிர்ப்பறிப்பும் , உயிர் இழப்பும் , கற்புநெறிப்பிறழ்வும் , மனித உறவுகளுக்குள் சாதீய வேறுபாடுகளால் குருதிச் சிந்தலும் எனத் தொடங்கி இன்று உயிர்க்கொல்லி நோய் எனப்படும் எய்ட்ஸ் வரை வளர்ந்து சமுதாயத்தின் வேர் அறுபடும் நிலை காணப்படுகிறது.இன்றைய சூழலில் மானிடச் சமுதாயத்தின் இத்தகைய அழிவுகளுக்கு ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன.

இந்நிலையில் சைவ சமயத்தின் நெறிகளை உணர்ந்து கொள்ளலும், அதனைப் பின்பற்றி நடத்தலும் ஆகிய செயல்களும் எதிர்காலச் சமுதாயத்தைச் சிறந்த நெறிகளுக்குத் திசை திருப்பவும் , இக்காலச் சமுதாயத்தில் புரையோடிப்போயிருக்கும் தீமைகளைக் களைதலுக்குமான வழியைக் காணவும் வழிவகுக்கும் என்ற நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது. சைவ சமய நெறிகள் இக்காலச் சமுதாயச் சூழலில் தனிமனித உயர்வுக்கும், சமுதாய மேன்மைக்கும் எவ்வெவ்வகைகளில் பயனுடையனவாய் அமைகின்றன என்பது தெளிவாக விளக்கப்பெறும்.

2.5 யாழ்ப்பாணத்துப் புனைகதைகளில் சைவம்

ம. இரகுநாதன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணத்து மண்ணைக் களமாகக்கொண்டு சங்க இலக்கியம் படைத்த ஒரு சில படைப்பாளிகளின் படைப்புக்களை வகை மாதிரிகளாகக் கொண்டு சமூக மெய்ப்பொருளை எடுத்துக்காட்ட இக்கட்டுரை விழைகின்றது. நம்பிக்கை சமூகவியல் நோக்கில் எதார்த்த பூர்வமாக ஆராயப்படுகிறது.மதப்படைப்பாளிகளுக்கிடையே இருக்கும் வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது. யாழ்ப்பாணத்தில் தோன்றிய நாவல், சிறுகதை ஆகிய ஆக்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அவைகளில் சைவம் எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது என்ற ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வின் முடிவாக யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பின் ஆணிவேராக உள்ள சாதி அமைப்பு தன்னைப் பேணிக்கொள்ள ஒரு கருவியாக மதத்தைப் பயன்படுத்தியிருக்கின்றது என்ற கருத்து முன் வைக்கப்படுகின்றது.

2.6 சைவ சமயப் பரப்புதலில் நாவல் , சிறுகதைகளின் பங்கு

ந. இரவி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சமுதாய , அரசியல் , பொருளாதார , சமயச் சூழல்களுக்கேற்பவும், சமுதாய மாற்றங்களுக்கேற்பவும் , மக்களின் வாழ்க்கை நிலைகளுக் கேற்பவும் காலந்தோறும் பல்வேறு வகையான இலக்கிய வகைகள் தோன்றி வளர்ந்து இலக்கிய உலகை வளப்படுத்தி வருகின்றன. இவ்வகையில் காணப்பெறும் இலக்கிய வகைகளில் நாவல் , சிறுகதை இலக்கியமும் அடங்கும்.

இக்காலத் தமிழ் இலக்கியத்திற்கு மிக்க வளம் சேர்த்தல் ,சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டல் , தனிமனிதச் செயல்பாடுகளைப் படம்பிடித்துக்காட்டுதல் , தனிமனித , சமுதாய மேம்பாட்டுக்கான வழிவகைகளையும் அறிவுரைகளையும் கூறல் எனப் பல்வேறு தொண்டுகளைச் செய்வதாக நாவல் ,சிறுகதை இலக்கியங்கள் திகழ்கின்றன.

மக்கள் இவ்வுலகில் சிறந்த சமுதாய உறுப்பினர்களாக, பண்பாடு மிக்கவர்களாக , ஒழுக்கம் நிறைந்தவர்களாக வாழ்ந்து , தமக்கும், சமுதாயத்திற்கும் பயனுள்ள செயல்களில் ஈடுபட்டு , மறுமையில் பேரின்பப் பெருநிலையை அடைய வழிகாட்டுதலே சமயம்.

சமயம் மக்கள் அன்றாட வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டும் நாவல் , சிறுகதை இலக்கியங்கள் சமயத்தின் அடிப்படையில் மக்களால் பின்பற்றப்பட்டு வரும் நம்பிக்கைகள் ,சடங்குகள் , வழிபாட்டு முறைகள் ஆகியவற்றையும் கதைப்பாத்திரங்கள் வாயிலாகவும் கதைப்போக்கின் இடையேயும் விளக்கமாகவும் குறிப்பாகவும் காட்டுகின்றது.

இவ்வகையில் நாஞ்சில் நாடன் நாவல் , சிறுகதைகளின் பாத்திரப்படைப்பு, கதைப்போக்கு , அறிவுரைகள் , பண்பாட்டு விளக்கம் முதலிய நிலைகளில் காட்டப்படும் சைவ சமயம் பற்றிய குறிப்புகளையும் செய்திகளையும் எடுத்துக்காட்டி இந்நாவல் , சிறுகதைகள் சைவ சமய வளர்ச்சிக்கும் சைவ சமயக் கொள்கைகளைப் பரப்புதலுக்கும் தம் பங்களிப்பை எவ்வகையில் செலுத்தியுள்ளன என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

2.7 திருநீறு அணிதல் : லக்கானிய உளப்பகுப்பாய்வு விளக்கம்

முனைவர்.தி.கு. இரவிச்சந்திரன்
பாளையங்கோட்டை

உலக மதங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு முறைமைகளை (orders) அடிப்படையாகக் கொண்டு விளங்குபவையாகும். அந்த முறைமைகளுள் பல விதிகள் (Laws) அடங்கியுள்ளன.மதங்களின் விதி முறைகளே ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுகின்றன. செவ்விய மதங்கள் (classical Religion) அனைத்திலும் மதக்குறிகள் உள்ளன. மதக்குறிகளை அணிந்து கொண்டு தன்னை அடையாளம் காட்டிக் கொள்கின்ற வழக்கம் அனைத்து மதத்தினரிடத்திலும் உண்டு. சைவர்கள்திருநீற்றையும் வைணவர்கள் நாமத்தையும் முகமதியர்கள் குல்லாவையும் கிறித்தவர்கள் சிலுவையையும்அணிந்து கொண்டு தம்மை வெளிப்படுத்துகின்ற முறைமையைக் காணலாம். மதக்குறிகள் மனிதனுக்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. ஒருவனை அடையாளம் காண முகம் முக்கியமானதாக விளங்குவது போல் அவனுடைய மதத்தை அடையாளம் காண மதக்குறி முக்கியமானதாக விளங்குகிறது.

மதக்குறியைத் தோற்றுவிப்பது உள்ளமே ஆகும். உள்ளத்தின் இயக்கங்கள் (psychic mechanism) தயாரித்த பொருள்களில் மதக்குறியும்ஒன்று. சைவர்களின் மதக்குறியாகிய 'திருநீறு' தோன்றுவதற்கான காரணத்தையும் அதைத் தோற்றுவித்த இயக்கமுறையையும் லக்கானிய அணுகுமுறைப்படி (Lacanian approach) இங்கே பகுப்பாய்வு செய்யப்படுகிறது. குழந்தைப்பருவ எண்ணகங்களே (Infantile phantasy) அனைத்து உளச் செயல்களுக்கும் (Psychic process) அடிப்படையாக விளங்குகின்றன என்கிற ஃப்ராய்டிய கோட்பாட்டினை (Frendian theory) உறுதிப்படுத்துகின்ற வகையில் 'திருநூறு அணிதல்' குழந்தைப்பருவ அனுபத்தோடு தொடர்புடையதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. ஃப்ராய்டிய உள இயக்கமும் லக்கானிய உள இயக்கமும் வெவ்வேறு தன்மைகள் கொண்டவை. 'திருநீறு அணிதல்' செயலில் லக்கானிய உளவியல்படி (lacanian Psychology) என்னென்ன நிகழ்கின்றன என்பதை அலசிப்பார்க்கிறது இந்தக் கட்டுரை. குறிப்பாக திருநீறு அணிதலில் தன்மோகமும் (Narcissim) வெளிப்படுமோகமும் (Echibitionism) பொதிந்து கிடக்கின்றன. குறியீட்டு முறைமையில் (Symbolic order) திருநீறு என்கிற மதக்குறி மொழியின் 'சொல்' (Word) போன்று செயல்படுகின்றது என்பதை விவரிப்பதே

இக்கட்டுரையின் நோக்கமாகும். இச்சொல்லில் லக்கானிய உருவகத் தன்மையும் (lacaniam Metaphoric) ஆகுதன்மையும் (Metanymic) இடம்பெற்றுள்ள பாங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திருநீறு மட்டுமல்லாமல் அனைத்து மதக்குறிகளும் நனவிலிக் குறிப்பான்களின் (Unconscious Signifiers) வெளிப்பாடுகளே என்பதை விளக்கி அவை நனவியலில் உள்ள மற்றதின் வேட்கையை (Desire of eh Other) உணர்த்திநிற்கின்றன என்பதையும் எடுத்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

2.8 சிலப்பதிகாரத்தில் சைவம்

க. லதா
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்

பல்சமயக் காப்பியம் எனக் கூறப்படும் சிலப்பதிகாரத்தில் சைவசமயம் பெறும் இடத்தைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

காப்பியத்தில் இச்சமயத்திற்குக் கொடுக்கப்பட்ட தனிச்சிறப்பு என்னவெனில் , பிறமதக் கடவுளரை ,அருகன் , கண்ணன் , மாயோன் எனப் பல பெயரிட்டழைத்தாலும் ,சைவ சமயக் கடவுளரைப் 'பெரியோன்' இமையோன் எனக் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

சைவ சமயத் தலைவன் சிவன். சிலப்பதிகாரத்தில் முதன் முதலில் சிவன் பற்றிய குறிப்பு மனையறம் படுத்த காதையில் காணப்படுகிறது. கண்ணகியின் நுதலுக்கு உவமை இறைவனின் தலையில் அமையும் பிறைத்திங்கள். சிவபெருமானைக் குறித்துப் பாதாதிகேச வருணனை காணப்படுகிறது. பிறவா யாக்கைப் பெரியோன் எனும் குறிப்பும் காணப்படுகிறது. இறைவன் செய்யும் ஐந்தொழில்களுள் காத்தல் , அழித்தல், அருளல் எனும் முத்தொழில்கள் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

இறைவனுடைய திருத்தலங்கள் பற்றிக் குறிப்புண்டு. ஊர்தி பற்றிய குறிப்பும் உண்டு. இளங்கோவடிகள் சைவசமயத்தைப் பற்றித் தமது காப்பியத்தில் மிக விரிவாக விளக்கவில்லை எனினும் பிற சமயங்களுக்கு ஈடாகக் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

2.9 சைவநெறியும் சுந்தரரும்

முனைவர் து. லலிதா
அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை

சிவனை முதன்மையாகக் கொண்டது சைவ சமயம். தேவாரப் பாடல்கள் சைவ சித்தாந்தப் பொருண்மைகளைக் கூறுகின்றன. அவ்வகையில் சுந்தரர் பாடல்களிலிருந்து சைவ நெறி பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. முப்பொருள் உண்மை , திருஐந்தெழுத்து, நால்வகை நெறிகள் , அட்டமூர்த்தங்கள் ,96 தத்துவங்கள் , ஆறு அங்கங்கள் , ஆறு காலப்பூசைகள் , இறைப்பேரின்பம் முதலிய சைவப் பொருண்மைகளைச் சுந்தரர் பாடல்களில் காண முடிகின்றது. மேலும் இளமை நிலையாமை , யாக்கை நிலையாமை பற்றிய கருத்துக்களும் காணப்படுவதன் மூலம் சைவ நெறி பற்றிய செய்திகள் சுந்தரர் பாடல்களில் எவ்வகையில் காணப்படுகின்றன என்பதை இக்கட்டுரை ஆய்கின்றது.

2.10 சைவ சமய மரபில் தமிழில் வழிபாடு

முனைவர் பா இறையரசன்
அ.வீ.பா.நி.திருபுட்பம் கல்லூரி, பூண்டி

சிந்து வெளி காலத்திலிருந்து சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் அறியப்படுகிறது. ஆரியர் வருகைக்குப் பின்னர்ச் சமயத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் அரசியலிலும் ஆரியமயமாதல் நிகழ்ந்தது. திராவிடர்களாலும் ஆரியர்களாலும்வேதம் சமஸ்கிருதத்தில் உருவாக்கப்பட்டது. உயிர்க்கொலை, சடங்குகள் முதலியவற்றை எதிர்த்துச் சமண பௌத்த சமயங்கள் எழுந்தன. சமண பௌத்த மதத்தினர் மக்கள் மொழிக்குத் தம் சமயத்தில் இடம் கொடுத்தனர். சமண பௌத்த வளர்ச்சியை எதிர்க்கத் ,தமிழ்நாட்டில் சைவமும் வைணவமும் தமிழை முன்னெடுத்துக் கொண்டன. அதனால் தேவாரமும் நாலாயிர திவ்விய பிரபந்தமும் தோன்றின.

சமண பௌத்த மதங்கள் நீக்கப்பட்டபின் சோழர்காலத்தில் சைவமும் வைணவமும் தம் மேலாதிக்க மொழியாகத் தமிழை ஏற்றுக்கொண்டன. இதற்குச் சோழப் பேரரசர்கள் வடநாட்டிலிருந்து பிராமணர்களை அழைத்து வந்ததும் , சமஸ்கிருதக்கல்லூரிகளைப் பல

இடங்களில் நடத்தியதும் காரணங்கள் ஆகும். சோழர்காலத்தில் சைவமே சிறப்புற்றிருந்தது. எனவே வைணவத்தில் தமிழுக்குப்பெருமை சேர்த்து இன்றும் தமிழில் வழிபாடு உள்ளது. நாலாயிர திவ்விய பிரபந்தத்தை 'வேதம்' என்றே கூறி ஓதுகின்றனர். கிறித்துவரும் தமிழில் 'பைபிள்' மொழி பெயர்ப்பைக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். சைவக் கோயில்களில் சமஸ்கிருதம் மட்டுமே வழிபாட்டு மொழி என்றனர்.

மந்திரம் என்பது சமஸ்கிருத்தில் இருப்பது என்றும் சமஸ்கிருதமே தேவபாடை தமிழ் நீசபாடை , பைசாச பாடை என்றும் கூறித் தமிழ்நாட்டில் தமிழை இழிவுபடுத்தும் நிலை ஏற்பட்டது. தேவாரம் , பெரியபுராணம், சித்தர் பாடல் ஆகியவற்றில் தமிழ் வழிபாட்டுக்கான சான்றுகள் உள்ளன. மந்திரம் என்பது மூத்தோர் வழங்கிய சிறப்புடைச் சமயச் சொற்கள்

புரிந்த மொழியில் புரிந்து வழிபடவேண்டும். வள்ளலார் மறைமலையடிகள் , சுத்தானந்த பாரதியர் , குன்றக்குடி அடிகளார் , வ.சுப.மாணிக்கனார் முதலியோர் தமிழ் வழிபாட்டுக்கு ஆதரவு தந்தனர். இன்று தமிழக அரசும் முன்வந்துள்ளது. தமிழ்நாட்டில் சைவ மரபில் சைவக் கடவுளரைத்தமிழில் வழிபடும் மரபே சரியானது.

2.11 சைவ சமயம் - மென்சமயம் சைவ நெறி - சழக்கில்லா அருள்நெறி

முனைவர் சு. உலோகாம்மாள்
அரசு கல்லூரி , சித்தூர், கேரளா.

நான் யார் என்ற கேள்விக்கு விஞ்ஞானத்தில் விடை இல்லை. நான் யார் என்பதை உணரும் போது மெய்ஞ்ஞானம் பிறக்கிறது. விஞ்ஞானத்தால் விளக்கமுடியாத புதிர்களுக்கு மெய்யறிவே விடையாக அமைகிறது. மெய்ஞ்ஞானம் பெற்ற ஞானியர் பலருக்கும் பயன்படும் உள்ளம் தம் அனுபவத்தை வெளிப்படுத்துகின்றனர். அதுவே சமய நெறியாக மாறுகின்றது. சைவ சமய வரலாறு இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகிறது. அன்பை அடிப்படையாகக் கொண்டது சைவ சமயம். உலகே மாயம் என்று உடல்களை வருத்தும் கொள்கைகளையும் மறுத்து உலகையும் உடலையும் உன்னத நிலைக்கு உயர்த்துவது சைவம். சைவ சமயம் ஒரு அருட்சமயம் . தன்நிறைவு பெற்ற சமயம். மனிதனை மனிதனாகக் காண்கிற சமயம். அச்சமயம் உலகளாவிய ஏற்றத்திற்குத் தகுதிபெற்றது.

2.12 சைவசமயமும் தாவோக் கொள்கையும்

(Saivism and Taoism)

முனைவர் ந. கடிகாசலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

இந்தியத் திருநாட்டின் பழமையான சமயங்களில் ஒன்று சைவசமயம் . தமிழ் நாட்டின் ஆதிசமயம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிலவியது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்வது என்பதன் அடிப்படையில் அன்பே சிவம் என்றுரைக்கிறது. 'இறைவன் ஒருவனே' உயிர்கள் பல எனும்உண்மைப் பொருளினை எடுத்தோதுகிறது. காமம், குரோதம் முதலான பகைகளை வென்று , தான் என்பதை அழித்து, சேவையில் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டிய வாழ்க்கை முறையை விளம்புகிறது.

சீனாவின் மூன்று முக்கிய சமயங்களில் ஒன்று தாவோ. சீனாவில் தோன்றி வளர்ந்த சமயம் . ஸங் தாவ்லிங் (? - 156) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.மக்கள் கூறிவந்த நீதிக்கருத்துக்களை நெறிப்படுத்தியவர் லாவோட்ஸே (Lao - tsze)இவர்தான் , 'தாவோ' என்னும் பெயர் தந்தவர். இச்சொல்லுக்கு மார்க்கம் அல்லது நெறி என்பது பொருள் . தாவோ - தே-சிங் (Tao - te - Ching) எனும் நூலில் தாவோக் கொள்கைகளை அவர் வெளிப்படுத்துகிறார். தீமை செய்தவருக்கும் நன்மையே செய் ; எல்லா உயிர்களுக்கும் அன்பு காட்டு ; அடக்கமாயிரு என்பன மனிதனுடைய விழுச் செல்வங்களாம். சாந்தம் , சிக்கனம் , அடக்கம் எனும் வாழ்வியல் முறையை விளம்புவது தாவோ.

சைவ சமயக் கொள்கைகளுக்கும் தாவோ கொள்கைகளுக்கும் இடையே நிலவும் ஒற்றுமைகளை இக்கட்டுரை ஆராய்கிறது. இதனால் இவ்வி ரு சமயங்களும் ஒத்திசையும் நிலை புலப்படலாம்.

2.13 சமுதாய நோக்கில் சைவம்

டாக்டர் (திருமதி) வெ.கனகசுந்தரம்
இராணிமேரி கல்லூரி, சென்னை

சைவம் உணர்த்தும் அன்பும் சிவமும் - உண்மையின்பத்தை உணர்த்தும் ஒரு சமயம் உண்டு ; அதுவே சைவம் - சைவம் என்றால் உண்மையின்பவழியென்று பொருளாகும் - அஃது அன்பினால்

உண்மையின்பத்திற்கு ஆன்மாவை நடத்துவது - விளக்கம்.

'' இன்று உலக சமரசத்திற்கு ஒரு பொதுநெறி உண்டானால் அது சைவமே'' - அடிகள் சுத்தானந்த பாரதியார் -காரணம் அதில் அடங்காத தத்துவமில்லை - சமுதாயம் - மக்கட்கூட்டம் - விளக்கம் - சைவம் உயிர்களது ஈடேற்றம் கருதுவது - முப்பொருள் உண்மையைத் தெளிவாக விளக்கி அதற்குரிய இடம் தருவது சைவமே - சமுதாய நோக்கில் செயல்படுவது - உலகை மறுக்காது வெறுக்காது - உலகை இறைவனாலயமாகவும் , ஆடரங்காகவும் காண்பது - உடல்களை நடமாடும் கோயில்களாகக் காணும் ; உயிர்த்தொகுதிகளை இறைவன் அருள் உடலாகக் காணும் ; சாதி சமய பேதமில்லாமல் அருளடியார்களையெல்லாம் கொண்டாடும் - இலக்கியச் சான்று காட்டி விளக்கம்.

சமுதாய நோக்கில் ஆற்ற வேண்டிய பணிகள் / செய்ய வேண்டிய செயல்களின் விவர அடங்கல் - எல்லாருக்கும் எளிதில் விளங்கும்படி சில புதிய நூல்கள் எழுதவேண்டும் - பன்னிரு திருமுறைகள் , மெய்கண்ட சாத்திரங்கள் - ஔவையார் ,தாயுமானவர் ,பட்டினத்தார் , அருட்சோதி வள்ளலார் ,அருணகிரியார் பாடல்கள் ,தலபுராணங்கள் ,வடமொழியிலுள்ள ஆகமநிகமதாந்திர நூல்கள் , வேதம் , உபநிடதம் முதலிய முனிமொழிகள் இவற்றை ஆராய்ந்து காலத்திற்கேற்ற புதிய முறையில் சைவ நூல்களை எழுதி உதவ வேண்டும்.

சைவ நெறி - இல்லறநெறி - சமுதாய நெறி மனித வாழ்வின் போக்கு - நடமாடும் கோயில் - படமாடும் கோயில் - மக்கள் பூசையே மகேசன் பூசை - மக்கள் நம்பிக்கை - அறநெறி - சமயவுணர்வு - வையத்து வாழ்வாங்கு வாழ்தல் - முடிவுரை.

2.14 சிவபெருமான் அழித்தற் கடவுளா ?

திரு.வ. கிருஷ்ணன்
அறிஞர் அண்ணா அரசு கல்லூரி, ஆத்தூர்

மனிதன் விலங்கின வாழ்க்கையிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்து நாகரிக நிலையை அடைந்துள்ளான். இயற்கையே இறைவழிபாட்டின் தொடக்ககாலம். அதன்பின் உருவ வழிபாடு தோன்றியது. தன்னைப் போன்ற உருவம்கொண்ட கடவுளைப் படைத்தான். தன்னிடம் காணப்பட்ட உறவுமுறைகளைக் கடவுளுக்கேற்றி வழிபட்டான். பின்பு மதப்பிரிவுகள் தோன்றின. அவற்றில்

சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம் எனப்படுகிறது. உருத்திரன் என்ற கருத்து வளர்ச்சி அடைந்து தென்னாடுடைய சிவன் பசுபதி என்று வளர்ந்தது. புராணங்களை அடிப்படையாக்கொண்டு சிவபொருமான் அழித்தற்கடவுளா என்ற ஆய்வினை இக்கட்டுரை மேற்கொள்கின்றது.

2.15 சைவத்தின் சமரச நெறி

சு. கோவிந்தராஜ்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

இன்பப் பொருளாம் இறைவனை அடைவதற்கு உயிர்கள் கடைப்பிடித்தொழுகும் ஓர் அறவழியே சமயமாகும். இவ்வுலகில் நம்மிடையே பல்வேறு சமயங்கள் காணப்படினும் ,வழிபடும் முறையாலும், கொண்ட கொள்கை அல்லது நெறியாலும் சமயங்கள் பலவானாலும் இறைவன் ஒருவனே. எந்நாட்டினரும் எம்மொழியினரும் எவரும் எல்லாரும் சகோதரரே என்ற எண்ணத்தைத் தருவதும் , வேற்றுமை நாட்டமுடையாரை ஒற்றுமைப்படுத்துவதும் சமயமே ஆகும். சாதி , மத , நாடு ,மொழி , நிற வேற்றுமைகளைப் பாராட்டாது எல்லா உயிர்களிடத்தும் ஒரே வித அன்பு செலுத்துமாறு மக்களை ஏவுவதும் கைம்மாறு கருதாப் பணியாற்றுமாறு போதிப்பதும் , தனக்கென வாழாது பிறர்க்கென வாழுமாறு அறிவுறுத்துவம், தியாக உணர்வு நல்குவதும் , உயர்வு தாழ்வுகளை ஒதுக்குவதுமாகிய விழுமிய நோக்கங்களையுடைய சமயம்எதுவோ அதுவே சமரச சமயம் ஆகும்.

'சமரசம்' என்ற சொல்லுக்கு '' எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தும் உண்மை நெறி '' எனப் பொருள் கொள்ளலாம். இவ்வகையில் சைவ சமயமானது, பிற சமயங்களை அன்புடன் நோக்கித் தன் பக்கமாகச் சேர்த்துப் போற்றும் பான்மையைக் கொண்டுள்ளது. இவ்வுண்மை நெறி சைவ சமய இலக்கியங்களிலும் , சாத்திரங்களிலும் , தோத்திரங்களிலும் பெரிதும் பேசப்படுவதைக் காணலாம்.

சைவ சமயத்தின் வழி நின்று சமரச நெறியை இவ்வுலகிற்கு அளித்த சமரச சன்மார்க்க ஞானிகளான திருமூலர் ,தாயுமானவர் , வள்ளலார் ஆகியோரின் சமரச நெறியை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமும் பயனுமாக அமைகின்றது.

2.16 சைவ சமயம்

புலவர் சு.சண்முகசுந்தரம்
தியாகராஜர் கல்லூரி, மதுரை

''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்'' என்று சிறப்பித்துக் கூறுப்படுவது நமது தமிழகம். இங்கே வாழும் தமிழ் மக்களிடையே வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே வழிவழியாக வழங்கி வருவது சிவநெறி என்கின்ற சைவசமயம்.

சிவனை வழிபடும் செந்நெறி சிவநெறி. சிவன் என்னும் செஞ்சொல்லையே சைவம் என்று வழங்கத் தொடங்கிற்று. இத்தகைய சைவ சமயத்தின் தோற்றம் கற்பனைக்கு ஏட்டாத காலமாகும். உங்கள் மிகப்பழைய உயிரோட்டமுள்ள சமயம் சைவமே என்று ''சர்ஜான் மார்ஷல்'' கூறுவதும் இங்கு எண்ணத்தகும். வேறு சிலர் சைவ சமயம் வேதகாலத்து உருத்திர வழிபாட்டிற்கு முற்பட்டதென்றும் கூறுவர்.

இவ்வாறு தமிழ்மொழியோடும் தமிழர் மரபுகளோடும் இணைந்து பழங்காலந்தொட்டு வளர்ந்து வந்த சைவசமயக் கருத்துக்கள் 13ஆம் நூற்றாண்டில் மீண்டும் மறுமலர்ச்சி பெற்று ஓர் உன்னதத் திருப்பம் அடைந்தன என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால் 13ஆம் நூற்றாண்டு சைவசமயக் கருத்துக்கள் வலிமை பெற்று வளர்ச்சியடையத் தொடங்கிய காலமாகும். அதன் விளைவாகவே சைவசமயம் புத்தொளியும் புதுமலர்ச்சியும் பெற்றதெனலாம். அதற்குத் துணைபுரிந்த சைவப் பெரியோர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர்கள் திருமூலர், திருமுறையாசிரியர்கள், சேக்கிழார், மெய்கண்டதேவர், அருணந்திசிவம், மறைஞானசிவம், உமாபதிசிவம், தாயுமானவர், சைவ எல்லப்ப நாவலர் என்பவராவர்.

இத்தகைய சைவ சமயம் வளர்ந்து வாழ்ந்த வரலாற்றை நால்வகை வேதங்கள், சைவ ஆகமங்கள், பதினெண்புராணங்கள், பன்னிரு திருமுறைகள் முதலியவற்றின் வாயிலாய் நன்கு அறிந்து கொள்ளலாம். மேலும் தமிழகத்தில் தோன்றிய சைவத் திருமடங்கள் சைவசமயத்தை வளர்த்த பெருமைக்குரியன.

2.17 சைவமும் முருக நெறியும் ஒத்திசையும் நிலைகள்

S.N.P. சண்முகம்
முருகன் கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை,ஈரோடு

தமிழ்ச் சமுதாயம் பழமையான ஒன்றாகும், நால்வகை நிலம், ஐந்திணைப் பகுப்பு பாகுபாடுகளைக் கண்டு வாழ்ந்து வந்தனர். இதனுள் சிவனுக்கென்று தனிநிலம் ஒதுக்கப்படவில்லை. சேயோன் என்று சுட்டப்பட்டுள்ளது முருகக் கடவுளேயாகும். இந்தச் சேயோன் என்பதை உருத்திரன், சிவன் என சிவப்பு வண்ணத்தைக் கொண்ட கடவுளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இந்தச் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவன் என்று கந்தபுராணம் கூறுகிறது. இதனால் முருகன் வேறு சிவன் வேறு என்று கருத இயலா நிலை தோன்றும். நக்கீரன் திருமுருகாற்றுப் படை, குமரகுருபரர் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள் மற்றும் பல ஞானிகளின் பாடற் கருத்துக்களிலிருந்து சைவமும் முருகநெறியும் ஒத்திசையும் கூறுகள் பற்றி இக்கட்டுரை தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

2.18 இந்திய கிறித்தவ இறையியலாளர்களின் சிந்தனையில் சைவ சித்தாந்தத் தாக்கம்

த.சந்திரசேகரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சமய சித்தாந்தங்கள் (DOCTRINES) சமய வளர்ச்சிக்கு உறுதுணை. சித்தாந்தங்கள் ஒவ்வொரு கால கட்டத்திலும் சமயத்தைத் தழைக்கச் செய்துள்ளன.

சமயங்கள் ஒன்றுடன் ஒன்று சந்திக்கும் போது ஒவ்வொரு சமயமும் தாக்கம் பெறுகின்றது. சிறப்பாகச் சமயங்களங சித்தாந்தங்கள் தாக்கத்தின் இலக்காக விளங்குகின்றன.

கிறித்தவ சமயம் இந்நாட்டிற்கு வந்தபோது சைவ சித்தாத்தந்தின் தாக்கத்திற்குத் தப்பவில்லை. இந்தியக் கிறித்தவ இறையியல் சிந்தனையாளர்கள் சைவ சித்தாந்தத்தைத் தழுவிய கிறித்தவ இறையியலை (Christian Theology) வளர்க்க முற்பட்டது சிறப்பானது ஆகும்.

இவ்வாய்வில் இந்தியக் கிறித்தவ இறையியல் சிந்தனையாளர்கள்

(Indian Christian Theologians) பேராயர், அப்பாசாமி, சக்கரை, செஞ்சையா போன்றோர்களின் இறையியலாக்கத்தில், சைவ சித்தாந்தத்தின் தாக்கம், எந்தெந்த வகையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆராய்கின்றது.

2.19 சைவ சமயத்திற்குத் தமிழ்நிகண்டுகளின் பங்களிப்பு

முனைவர் மா. சற்குணம்
ஸ்ரீ.சி.பா.சு.தமிழ்க் கல்லூரி, மயிலம்

தமிழ் நிகண்டுகள் கி.பி.8 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தோன்றின. இவை வெவ்வேறு சமயத்தவர்களால் இயற்றப் பெற்றன. இருப்பினும் தத்தம் காலத்தின் தேவைக்கேற்பப் பல்துறைச் செய்திகளைக் குறிக்கும் சொற்களைத் தொகுத்து அவற்றிற்குச் செய்யுள் வடிவில் பொருண்மை சுட்டியுள்ளனர்.

அவ்வகையில் முதல் நிகண்டாகிய சேந்தன் திவாகரம் முதல் ஏறத்தாழ இருபத்தைந்து நிகண்டுகள் மொழிநோக்கில் சொற்பொருள் குறிப்பனவாக இயற்றப்பெற்றுக் கிடைத்துள்ளன. இவற்றுள் சில பக்தி இலக்கிய காலத்திலும், மிகப்பல கி.பி.16, 17 ஆகிய நூற்றாண்டுகள் அளவிலும் தோன்றின. இவற்றுள் சைவ சமயம் தொடர்பான செய்திகள் பல்வற்றைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றியும் இவை தொடர்பான சாத்திரக் கருத்துகள், புராண அடிப்படையிலான செய்திகள், வரலாறு, சடங்கு, வழிபாடு முதலிய பல்வகையானவை பற்றிய செய்திகளும், கலைச்சொற்களும் நிகண்டுகள் வழி அறியக் கிடைக்கின்றன. இவற்றைக் காலநிரல்படி தொகுத்து நோக்கின் சைவ சமயத்திற்கு வரலாற்று நோக்கில் பயன்படும் செய்திகள் பலவற்றை அளிப்பனவாய் நிகண்டுகள் அமைந்துள்ளன என்பது தெரியவரும்.

இக்கட்டுரையில், நிகண்டுகளின் ஒருபொருள் குறித்த பல்பெயர்த் தொகுதிகளில் இடம் பெறும் சொற்களுள் சைவ சமயம் குறித்தனவற்றை அறிமுக நோக்கிலும், தொகைப்பெயர்த் தொகுதிகளில் இடம்பெறும் சொற்கள் நுண்ணாய்வு நோக்கிலும் தொகை, வகை செய்து தரப்பெறுகின்றன. இவற்றின்வழிப் புலனாகும் உண்மைகள் இறுதியில் அளிக்கப் பெறுகின்றன.

2.20 வாழ்வியலுக்குச் சைவசமயம்

முனைவர் ச. சிவகாமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' ; 'எல்லோரும் ஓரினம்; எல்லோரும் ஓர் நிறை' என்ற ஒன்றிய உணர்வு இன்றைய உலகின் உடனடித் தேவையாவதை அன்றாட நிகழ்ச்சிகள் வலியுறுத்துகின்றன. இனப்போராட்டம், உரிமைப்போராட்டம், வன்முறை, வறுமை என்று உலகை இன்று சீரழித்துக்கொண்டிருக்கும் தீய சக்திகளிடமிருந்து காப்பதற்குச் சமயங்கள் உறுதியாகத் துணைநிற்க முடியும். ''ஒருவரின் சீரிய வாழ்க்கைக்கும் சமூக மேம்பாட்டிற்கும் சமயம் உதவுகிறது. பிறந்தது முதல் ஒவ்வொருவரும் சமயத்தின் ஓர் அங்கமாக வளருகின்றனர். அதன் காரணமாகச் சமயம் ஒருவனது உள்ளத்தில் ஆழ்ந்த விளைவினை ஏற்படுத்தியிருப்பதோடு அவனது நடத்தையையும் கட்டுப்படுத்துகிறது'' எனும் கூற்றும் இதனை வலியுறுத்தக் காணலாம்.

எனவே சைவ சமயம் நடைமுறை வாழ்க்கைக்குக் காட்டும் வழி எப்படி உலக அமைதியை, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என மானுட நேயத்தோடு வாழக் கற்றுத்தந்துள்ளது என்பதைக் காண இக்கட்டுரை முற்படுகிறது. 'அன்பே சிவம்' 'யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி', ' யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே', 'யான் பெற்ற இன்பம்பெறுக இவ் வையகம்' என மிக எளிய முறையில் நடைமுறை வாழ்க்கையில், இயல்பாகக் கடைப்பிடித்து ஒழுகக்கூடியவாறு, நல்வாழ்க்கையை வரையறுக்கும் 'திருமந்திரத்தின்' துணைக்கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

2.21 சைவமும் பிற சமயங்களும் - ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

வெ. சிவப்பிரகாசம்
அரசு ஆடவர் கல்லூரி , கும்பகோணம்

அனைத்துச் சமயங்களும் கீழ்த்திசை நாடுகளில் தான் தோற்றம் பெற்றுள்ளன. அதிலும் இந்தியத்துணைக்கண்டம் மிக முக்கியமானது. இங்குப் பல சமயங்களும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. சமூகக் கலாச்சாரப் பின்னணியில் அவை வெவ்வேறு தோற்றுவாய்களை

உடையவை. திராவிடமும் ஆரியமும் ,சனாதன மதமும் இந்து மதமும் , சைவமும் வைணவமும், சைவ சமயம் ,வேதங்களும் சமயங்களும் என்ற தலைப்புக்களில் இக்கட்டுரை பல ஆய்வுக்கருத்துக்களை வெளியிடுகிறது. சைவ சமயம் ஆரியச் சார்புடையதா ? திராவிடச் சார்புடையதா ? என்ற சர்ச்சைக்குரிய கருத்து பற்றிச் சுவையான கருத்துக்கள் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன.

2.22 கர்நாடகத்தில் வீர சைவம்

Dr. R. Srinivasan
Govt. R.C.College of Commerce, Bangalore

கருநாடகத்தில் வீர சைவம் தோன்றிய நிலை அதற்குரிய காரணம் - ஆதரவும் எதிர்ப்பும் , 'வீர சைவ உயிர்' பசவண்ணரால் வீர சைவம் வளர்ந்த நிலை - அவர் வலியுறுத்திய வீர சைவக் கொள்கைகள் - 'குரு-லிங்க - ஜங்கம்' என்ற மும்மணிகள் - சாதி நிகர் சமானமும் சாதி மறுப்பும் - ஆண் , பெண் சம உரிமை ஆலய எதிர்ப்பு - இஷ்ட லிங்கத்தின் மகிமை அதனைக் கட்டிக் கொள்பவருக்கு அமையும் சிறப்பு நிலை - பசவண்ணர் கூறும் வீர சைவ சித்தாந்தக் கொள்கைகள் - வீரசைவரின் பிறப்பு - வளர்ப்பு - திருமணம் மற்றும் ஈமச் சடங்குகள் , வீர சைவத்திற்கும் சைவத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் - வீர சைவர்களின் விழா பசவ ஜயந்தி பற்றிய விளக்கம் - கருநாடகத்தில் வீர சைவத்தைத் தழைத்தோங்கச் செய்த சமயச் செம்மல்கள் - வீர சைவ வளர்ச்சியால் கருநாடகத்தில் தற்பொழுது வரை ஏற்பட்டுள்ள விளைவுகள்.

2.23 சைவ சமயம் உணர்த்தும் உலக ஒருமைப்பாட்டு உணர்வு

எம். சுசீலா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

ஒரே வானம் , ஒரே பூமி , ஒரே இனம் - மனித இனம் என இறைவனால் படைக்கப்பட்டது உலகம் . மனித இனத்தினாலேயே செயற்கையாக நாடு , இனம் , கலாச்சாரம் , மொழி, சமயம் எனப் பல்வேறு பிரிவுகளுக்குட்பட்டுக் கிடப்பதை நாம்அறிவோம். இந்நிலை

இன்று,நேற்று அல்ல' கிறித்து பிறப்பதற்குப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்ட ஒரு நிலை. மனித இனம் முழுமைக்குமான இந்த அவலநிலை உலகில் தோன்றிய பெரியார்கள் அனைவரையும் ஆழ்ந்த சிந்தனைக்கு உட்படுத்தித் தீர்வு காணும் வழியைத் தேடத் தூண்டியது. தென்தமிழ் நாட்டில் தோன்றிய சைவ சமயப் பெரியார்களும் இதற்கு விலக்கல்ல. சிவனைப் பாடுவதோடு நில்லாமல் தாம் வாழ்ந்த காலகட்டத்தில் நிலவிய சமுதாய நிலையை நோக்கி வருந்தி ஒருமைப்பாட்டு உணர்வை நிறுவுவதையும் தலைமையான பணியாக அவர்கள் கொண்டனர். 'மண்ணில் நல்ல வண்ணம் வாழும் ' வழியைக் காட்டினர். இவ்வாறு சைவசமயம் உணர்த்தும் உலக ஒருமைப்பாட்டு உணர்வை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

2. 24 சைவ சமயம்

இரா. சுப்பிரமணியன்
பிராஞ்ச் கலைக்கழகம், புதுவை

சைவம் என்னும் சொற்பொருள் ; சைவத்தின் பிரிவுகள் ; நூல்களால் அறியப்பெறும் சிவவழிபாட்டின் பழமை ; சைவத்தில் சைவத்தில் வைதிக நெறி ; ஆகமநெறி; உலகியல் நெறி ; இவற்றின் தொடர்பு ; சிவ வழிபாட்டின் காலங்கடந்த பழமையும் சைவம் ஆற்றிய மக்கள் தொண்டும் ;இதன் விரிந்த நிலையும் ; வானில் இலங்கும் கதிரவன் அனைவருக்கும் உரியவனாவதைப் போன்று உயிருடையவைகளான தாவரம் முதல் மனிதர்கள் ஈறாக அனைவருக்கும் சைவம் பொதுவானது என்பதை விளக்குதலும்.

2.25 பெரியபுராணம் காட்டும் சைவ அறவியல்

முனைவர் செல்வி. தி. செந்தமிழ்ச்செல்வி
தமிழ்த்துறை விரிவுரையாளர் ,நாகப்பட்டினம்

அறவியல் என்பது ஒழுகலாறு; தனிமனித வாழ்வையும் , சமூக வாழ்வையும் வரையறுப்பது அறவியலாகும். தனிமனிதன் தன் வாழ்வோடும் , சமூக வாழ்வோடும் தன்னை இணைத்துக்கொண்டு வாழும் நிலையில் காலம், இடம் ,சூழ்நிலை ஆகியவைகளை

அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுத்தவைகளைச் செம்மையான முறையில் செயற்படுத்தவும் செயல்களின் பயனை உள்ளவாறு துய்க்கவும் ஆகிய நிலைகளிலே அவன் செயல்படுவதற்கு வேண்டிய செயலறிவைத் தருவதே அறவியலாகும். அறவியல் என்பது மனிதவாழ்வின் பொருள் பொதிந்த உயர்நிலை எனப்பெறும் குறிக்கோள் பற்றிய ஆராய்ச்சியாகும்.

ஒவ்வொரு தனிச்செயலும் அறமனிதனின் உயர்வாழ்வு நிலையை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கும் போது சரி என்றோ , தவறு என்றோ முடிவு செய்யப்பெறுகின்றது என்ற அறவியல் விளக்கத்தின் அடிப்படையிலேயே பெரியபுராணம் சைவ சித்தாந்தத்தின் அறவியல் கோட்பாடுகளைக் கொண்டு விளக்கப்பெறுகின்றது.

தனிமனிதன் தனது உண்மையான இன்பத்திற்காகவும் மேம்பாட்டுக்காகவும் செய்யும் செயல்களை நெறிப்படுத்திக் காட்டுவது அறமாகும். இவ்வறவியல் தனித்து நில்லாது ஆன்ம இயலைச் சார்ந்து இருக்கவேண்டும் என்பது சித்தாந்தத்தில் வற்புறுத்தப்பெறுகின்றது. இதன் அடிப்படையில் சமய வாழ்க்கை நெறியாகவும் , சமுதாயத்தை மேம்படுத்தும் வாழ்வியல் நெறியாகவும் அமைந்த அன்பு நெறியினைப் பற்றியும் , தொண்டு நெறியினைப் பற்றியும் சிந்திக்கின்றோம்.

சைவ சித்தாந்தத்தின் சமய ,சமுதாயக் கோட்பாடுகளின் வழி அன்பே இறைபக்திக்கும் அடிப்படை , சமுதாய அறவியலுக்கும் அதுவே அடிப்படையாகும். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம்ஒரே குலம் என்ற உணர்வுடன் ஒற்றுமையாகவும் அன்புடனும் வாழவேண்டும் என்று வற்புறுத்துவது சைவ சமயமேயாகும்.

சேக்கிழார் காலத்தில் சைவம் நன்கு நிலைபெற்றிருப்பினும் உள்ளீடற்றதாகப் போய்விட்டது. எனவே அச் சைவ சமயத்தினை மறுபடியும் தொண்டு , அன்பு என்ற இரண்டின் மேல் நிற்குமாறு செய்தால்தான் உண்மையில் சைவம் தழைக்கும் என்னும் இக்கருத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

மேலும், இன்றையச் சமுதாயத்திற்கு ஆக்கமளிக்கின்ற எண்ணற்ற கருத்துக்களைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறியுள்ளார்.

இந்நிலையில் தான்,பெரியபுராணம் எனும் இலக்கியக் கடலினுள் காணப்பெறுகின்ற அன்பு, தொண்டு போன்ற கோட்பாடுகளை வெளிப்படுத்த முயலுவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

2.26 சைவமும் சமூக சேவையும்

முனைவர் அர.செயச்சந்திரன்
கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி, விருத்தாசலம்

சமூகச் சேவைப் பண்பே சைவ நெறியின் அடித்தளமாக அமைந்துள்ளது. எனவே அதன் இலக்கியச் சித்தாந்தப் பண்புகளை ஆராயும் அளவிற்குச்சைவத்தின் சமூகச் சேவைப் பண்பையும் ஆராய வேண்டும். பலன் கருதாச் சேவையைச் சமூக சேவை எனலாம்.

திருத்தொண்டர் தொகை , திருத்தொண்டர் திருவந்தாதி , திருத்தொண்டர் புராணம் என்பவை சைவத்திற்கும் தொண்டிற்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றன. சரியை நெறியும் சைவ குரவர் நால்வர் , நாயன்மார்கள் ஆகியோர் ஆற்றிய சமூகத் தொண்டுகளும் குறிப்பிடத்தக்கன.

திருநாவுக்கரசர் , உழவாரப்படை அமைத்துத் தொண்டாற்றியமை, அப்பூதி அடிகள் , நாவுக்கரசர் பெயரில் அறச்சாலைகள் நடத்தியமை, சம்பந்தரும் நாவுக்கரசரும் நோய் , பாம்பின் நஞ்சு , வறுமை முதலியவற்றால் பாதிக்கப்பட்டவரின் துயர் தீர்த்தமை ஆகியவை சமூக சேவையின் தொடக்கப் பணிகளாக அமைந்தன.

நிறுவனமயமாகும் கொள்கையே பயன்தரும் எனும் அடிப்படையில் சைவத்திருக்கோயில்களும் திருமடங்களும் தமிழ் வளர்ச்சி, கலை ,கல்வி, வேலைவாய்ப்பு , மருத்துவம் , பசிநீக்கம் , வெள்ளம் - வறட்சி நிவாரணம் , தேசிய - உலக ஒருமைப்பாடு ,சமய நல்லிணக்கம் முதலிய சமுதாயப்பணிகளை நிகழ்த்தி வருகின்றன.

சைவநெறி மனித சமுதாயத்தின் புறத்தேவைகளை நிறைவேற்றியதோடு அகக் கருத்து வளர்ச்சி நிலைகளாகிய மனித நேயம், ஆன்மநேயம் , இயற்கை நேயம் முதலியவற்றை உருவாக்கியது . கொல்லாமை நெறி ஆன்ம நேயத்தை வளர்த்தது. தலமரம் வளர்த்தல், குளம் வெட்டுதல் ,தாவரப் பொருள்களைக் கொண்ட இயற்கை முறையிலான சிவ வழிபாடு என்பன இயற்கை நேயத்தை உருவாக்கின. இன்றைய 'சூழல் இயல் ' தத்துவத்தினர் கண்ணோட்டத்திலும் சைவ நெறி பெரிதும் போற்றத்தக்கதாகிறது.

சமூக சேவை பண்பினாலேயே சைவ நெறி தமிழரை பிறசமயத்தாக்குதல்களிலிருந்து இயன்றவரை மீட்டுள்ளது. மேலும்தாயுமானவர் ,சித்தர்கள் ,வள்ளலார் முதலியோரின் சமூகச் சீர்த்திருத்தங்கள் நிகழச் சைவமே வித்திட்டது எனலாம். தன்னாட்சி உரிமைகளை வழங்குவதன் மூலம் சைவ மடங்களும் ,கோயில்களும்

மக்களுக்கு மேலும் சிறந்த முறையில் தொண்டாற்றும் எனலாம். மேற்கண்ட கருத்துகள் கட்டுரையில் விரிவாக விளக்கப்பட உள்ளன.

2.27 நாட்டுப்புற மக்களுக்கான சைவ சமய உருவாக்கமும் சமூகப் பின்னணியும்

சிலம்பு நா. செல்வராசு
புதுவை மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

நாட்டுப்புற மக்களுக்கான சைவ சமய உருவாக்கமும் சமூகப் பின்னணியும் எனும் இக்கட்டுரை நாகை மாவட்டம் சீர்காழி வட்டத்தை ஆய்வுக் களமாகக் கொண்டது. தேவார மூவருள் தலைமை மிக்கவராகப் போற்றப்பெறும்திருஞான சம்பந்தர் தோன்றியதும் , ஞானப்பால் உண்டதும், அருளிச் செயல்கள் நிகழ்வுற்றதும் இம்மண்ணிலே தான். இத்தகு சிறப்புமிகு மண்ணில் கடந்த சில நூற்றாண்டுகளாகச் சைவசமயத்தை நாட்டுப்புற மக்களுக்கான, பொது மக்களுக்கான சமயமாக மாற்றுவதில் அச்சமயத்தின் இயக்கம் எவ்வாறு அமைந்திருந்தது, அவ்வாறு இயங்க வேண்டிய தேவை அச்சய்த்திற்கு ஏன் ஏற்பட்டது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் மையப்பொருளாகும்.

வைதீக சமயமாக உருவெடுத்திருந்த சைவமும் வைணவமும் நாட்டுப்புறச் சமயத்தின் மீது பேராதிக்கம் செலுத்தி அச்சமயத்தின் மேனிலையாக்கத்திற்குக் காரணமாக அமைந்திருந்தாலும் நாட்டுப்புறத் தெய்வங்களான மாரி , காளி ,அங்காளம்மன் , ஐயனார் , முதலான எல்லாத் தெய்வங்களும் முழுமையும் சிவனையோ ,திருமாலையோ முன்னிறுத்தவில்லை. புராண அளவில் தொன்மமாக மட்டுமே இத் தெய்வங்களைச் சைவமும் வைணவமும் அரண் செய்திருந்தன. நடைமுறையில் மக்கள் இத்தகு தெய்வங்களை மாரியாகவும் , காளியாகவும் ,அங்காளம்மனாகவும் எண்ணியே வழிப்பட்டனர். எனவே சைவம் என்பது பெருந்தெய்வக் கோயில்களில் மட்டும் வழக்கத்தில் இருந்தது.

பிற்காலச் சோழர் காலத்தில் பெற்றிருந்த ஏற்றத்தைச் சைவம் அதற்குப் பின்னர் எய்தவில்லை. நாயக்கர் காலத்திலும் அதற்குப் பின்னரும் வைணவமே ஏற்ற நிலையில் இருந்தது. நாயக்கர் வழி தெலுங்கு நாட்டுப் பாளையக்காரரும் அதன் பின் குறுநிலத்தலைவர்களும், ஜமீன்களும் வைணவத்தைச் சார்ந்திருந்தமையால் அச்சமயம் பெரிய அளவில் பொதுமக்களிடையே ஆதிக்கம் செலுத்தியிருந்தது.

இந்நிலை சீர்காழி வட்டத்தில் சற்றுக் கூடுதலாகவே இருந்தது. இம்மண்ணை ஆண்ட குறுநில மன்னர்கள் ஐமீன்கள் ; பெரும்பான்மை வைணவத்தை முன்னிறுத்திய தெலுங்கர்கள் ஆவர். இம்மண்ணில் சின் ன வகுப்பு பெரிய வகுப்பு போன்ற ஜமீன்களும் , ஏனைய நிலக்கிழார்களும் , பெரும்பான்மையாகத் தெலுங்கர்களாக இருந்துள்ளனர்.இவர்களும் முழுவதும் வைணவத்தைச் சார்ந்திருந்தமையால் இப்பகுதியில் வாழும் மக்களிடையே வைணவம் பெரிய அளவில் அவர்தம் பண்பாட்டோடு கலந்து இருந்தது.

இந்நிலையில் இப்பகுதியில் சைவ சமயத்தை மக்களிடையே பரப்புவதற்கான செயல்முறைகளும் வழக்கில் இருந்தன. இவற்றுள் உருத்திராபதியார் வழிபாடும் ,காமன் வழிபாடும் குறிக்கத்தக்கன. இரண்டு வழிபாடும் ஊர் தோறும் நடத்தப்பட்டன. காமன் வழிபாடு தெருக்கள் தோறும் நடத்தப்பட்டது. உருத்திராபதியார் வழிபாடு சிறுத்தொண்டர் புராணத்தை அடியொற்றி நிகழ்த்து கலையான சடங்குகள் மூலம் நடத்தப்பட்டது. காமன் வழிபாடு சிவன் காமனை எரித்தது உயிர்ப்பித்தது ஆகிய நிகழ்வுகளை அடியொற்றி நிகழ்த்து கலையாக நடத்தப்பெறுவது.

இவ்விரண்டு வழிபாடும் மக்களிடையே எத்தகு தாக்கத்தை ஏற்படுத்தின ? இந்த வழிபாடு மட்டும் மக்கள் வழிபாடாக ஆகியமைக்குக் காரணங்கள் யாவை ? இவற்றால் சைவம் பெற்ற ஏற்றங்கள் யாவை ? இவ்வழிபாட்டிலும் வைணவம் எவ்வாறு ஊடுருவியது ? இதற்கான காரணங்கள் யாவை ? முதலிய வினாக்களுக்கான விடைகளையே இக்கட்டுரை சற்று விரிவாக முன் வைக்கிறது.

2.28 சைவமும் , கிறித்துவமும் - தத்துவக் கோட்பாடு ஒப்புமை

முனைவர் சேம். கிறிஸ்டோபர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சைவம் ,கிறித்துவம் ஆகியவற்றின் சில தத்துவக் கோட்பாடுகள் ஒப்புமையாகக் காணப்படுகின்றன.

சைவமும் , கிறித்துவமும் ஓரிறை தத்துவக் கோட்பாட்டையுடைய சமயங்களாகும். ஆகவே இவற்றின் இறைத்தன்மை ,மானிடம் ,மீட்பு , பக்தி , பாவம் , மன்னிப்பு ஆகிய கோட்பாடுகளை ஒப்புமையாகக் காணலாம்.

இச்சமயங்களில் ஆட்கொள்ளும் இறையன்பு அணைக்கும் அன்புமாகும் என்பதை விரிவாக எடுத்துக்காட்டுகின்றது. அடியார்கள்

தங்கள் பிழைகளையுணர்ந்து அவற்றை இறைவனிடம் அறிக்கை செய்து வேண்டும் போது இறையன்பு அவர்களுக்கு அணைக்கும் அன்பாக - குற்றங்களை மன்னித்தருளும் பேரன்பாகக் கிடைக்கப் பெறுகின்றது.

கிறித்துவத்திலும் , சைவத்திலும் இறைவனை அருவாய் , உருவாய், அருவுருவாய் ஆகிய மூன்று தத்துவக் கோட்பாட்டு நிலைகளிலும் வைத்துச் சிறப்பிக்கின்றது. சைவம் உயிர்களும் , இறைவனும் ஒருவரையொருவர் சார்ந்து உள்ளனர் என்பதை விளக்குகிறது. கிறித்துவத்தில் இறைவனின்றி நாம் எதையும் செய்தல் முடியாது ; நம்மையின்றி எதனையுஞ் செய்ய இறைவன் விருப்பம் கொள்ளார் என்ற கோட்பாடுகளை விளக்குகின்றது.

சைவத்தில் தீட்சை முறையுள்ளது ,வயதுவந்த ஆண்கள் முறைப்படி பெறும்தீட்சை சமய தீட்சை எனப்படும். அத்தகையோர் பெறும் மற்றொரு தீட்சை விசேஷ தீட்சை எனப்படும். இத்தீட்சை பெற்றோர் ஓதுதல் வழிபடுதல் ஆகியவற்றில் சில சிறப்பொழுக்கங்களைக் கடைப்பிடித்தல்வேண்டும். இவ்விரு தீட்சைகளும் கிறித்துவத்தில் திருமுழுக்கு , திருவுறுதி நிலைப்படுத்தல் போன்றவை ஆகும். நிருவாண தீட்சை பெறுவோர் சமயத்திருப்பணி செய்வர். இத்தீட்சை கிறித்துவத்தில் திருவருட்பொழிவு போன்றதாகும். சைவத்தில் ஆச்சார்யாபிஷேகம் என்பது சமயத்தலைவர் நியமனம் பெறும் போது அருளப்படுவதாகும். இது கிறித்துவத்தில் பேராயர்கள் பெறும்அபிஷேகம் போன்றதாகும்.

சைவமும் கிறித்தவமும் பல அடிப்படைத் தத்துவக் கோட்பாடுகளாகிய இறைத்தன்மை , மானிடம் ,மீட்பு ,இறையன்பு கோயில், உய்வுநிலை , தீட்சை முதலியவற்றில் ஒப்புமையாகக் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

2.29 தண்டபாணி சுவாமிகளின் சமயப் பொதுநோக்கு

டாக்டர் நெல்லை ந. சொக்கலிங்கம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தண்டபாணி சுவாமிகளின் சமயப் பார்வை

அவரவர் தனித்தனியே சிவனையும் ,திருமாலையும் சக்தியையும் முருகனையும் விநாயகரையும் பாடிப் பரவியுள்ளனர். ஆயின் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆறுசமயங்களையும் சமயக் கடவுளர்களையும் தாமே பாடி ஓர் ஒருமைப்பாட்டை உருவாக்க முனைந்து

பணியாற்றியுள்ளார். ஆங்கிலேயரின் வரவால் நம் சமயமும் பண்பாடும் அழிந்து போகும் என்று கருதியே தண்டபாணிசுவாமிகள் அறுசமயக் கடவுளரையும் போற்றிப் பாடத் துணிந்திருக்க வேண்டும்.

சமயக் காழ்ப்பு நம் மக்களையே அழிவுப் பாதையில் இட்டுச் சென்றுவிடும் என்று அஞ்சியதன் விளைவால் சுவாமிகள் ,சமய நல்லிணக்கத்தை மக்கள் நடுவிலே வேரூன்றச் செய்ய வேண்டும் என்ற அழுத்தமான சிந்தனையுடனும் ஆறு சமயங்களைப் பாடியிருக்க வேண்டும்.

வாரத்தில் ஏழுநாட்கள் அமைந்தள்ளமைக்குக் கூடச் சுவாமிகள் சமயக்காரணம் காட்டுவார். ஞாயிற்றுக்குக் கதிரவன் ; திங்களுக்குச் சிவன்; செவ்வாய்க்குச் சக்தி ; புதனுக்குத் திருமால் ; வியாழனுக்குக் கணபதி ; வெள்ளிக்குக் குருபரன் . சனிக்கிழமைக்குப் பொதுநிலை என்பார். அதாவது சனிக்கிழமைக்குச் சமயாதீதம் என்று இவர் கூறுவார். இவ்வாறு சமயக் கடவுளர்களைப்பாடித் தமிழ்மக்கள் உள்ளத்தில் ஓர் ஒற்றுமை உணர்வை - இணக்க மனப்பான்மையை - சமயப் பொதுப்பார்வையைத் தண்டபாணிசுவாமிகள் ஏற்படுத்தியுள்ளார். அவர்தம் படைப்புகளிலிருந்து இம்முடிவிற்கு நாம் வர முடிகின்றது.

2.30 சைவ சமயம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

ஸ்ரீ. தங்கராசு
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மாண்புமிக்க மனிதப் பிறவியானது முழுமையடைய மதங்கள் ஆற்றும் உதவிகள் அளவிடற்கரியன. மனிதன் இயற்கை கட்டுக்களிலிருந்து விலகி ,இயற்கையைத் தன் கட்டுப்பாட்டில் யோக முறைகளில் அடக்கித் தன் வாழ்வில் முழுமையைத் தேடுகின்றான். இத்தகைய முயற்சியில் சைவ சமயம் உறுதுணையாற்றுவதோடு ,மனித மேம்பாட்டிற்கு எவ்வணம் உதவுகின்றது என்பதை இக்கட்டுரை ஆய்கிறது.

கருத்து முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கலாச்சாரத்தில் உலகம் பொய் என்று கூறப்படுகின்றது. இது சமூகத் தத்துவ வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. ஆனால் சைவ சமயம் உலகை முப்பெரும்உண்மைப் பொருள்களில் ஒன்றாக ஏற்றுக் கொண்டு சமூகத் தத்தவ வளர்ச்சிக்கும் ,மனித மேம்பாட்டிற்கும் வழி வகுக்கின்றது. உலகை வெறுப்பதைத் தவிர்த்து , மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று

போதிக்கின்றது. மனிதகுலம் முழுமையையும் ஒன்றாகக் காணும் நோக்கு எங்கும் ஒரே தேவனைக் காணும் பார்வை ,மனித ஆன்மாவை சிவனெனக் கொள்ளும் கொள்கை , முதலானவை உலகச் சகோதரத்துவத்திற்கும் , மனித மேம்பாட்டிற்கும் நல்லதோர் அடித்தளத்தை அமைக்கின்றன.

சாதி வேறுபாடுகளும், பெண்ணடிமையும் உலகச் சகோதரத்துவத்திற்கும் , மனித மேம்பாட்டிற்கும் மிகப்பெரும் தடைக்கற்களாகும் . சைவ சமயத்தில் சாதிகளுக்கு இடம் இல்லை என்பதைச் சுந்தரரின் வாழ்விலிருந்து அறிய முடிகிறது. நாயன்மார்களில் பல்வேறு சாதிகளைச் சார்ந்தவர்கள் இருப்பது சைவத்தில் சாதி இல்லை என்பதைக் கட்டியம் கூறுகின்றது. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பெண்களின் வளர்ச்சி இன்றியமையாததாகும். அவர்களுக்குச் சம உரிமையும் ,அறிவிற்கு வாய்ப்பும் அளித்தல் இன்றியமையாதன. சைவசமயத்தின் அர்த்த நாரீஸ்வரர் வழிபாடு பெண்ணடிமையை ஒலித்து, பெண்ணுரிமையைப் பறை சாற்றுகின்றது.

கடவுளின் எண்வகைக் குணங்களும் , எல்லையற்ற அன்பும் ஒன்றாகும். கடவுளை அன்புவடிவத்தில் காணும் வழிபாடு அன்பர்களிடத்தில் அன்பைத் தோற்றுவிக்கும் என்பதும் ,அவ்வன்பெனும் பண்பைக்கொண்ட அன்பர்கள் பிறரிடத்தில் அன்புகொண்டு , அன்பின் விளைவான தியாகச் செயல்களில் மனத்தைச் செலுத்துவர் என்பது வெள்ளிடைமலை. மேலும் கடவுளுக்கும் உயிருக்கும் உள்ள அத்தகைய நிலையானது மக்கள் தொண்டை மகேசன் தொண்டாக மாற்றும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய அன்பும் தொண்டும் உலகச் சகோதரத்துவத்திற்கும் ,மனித மேம்பாட்டிற்கும் உறுதுணைபுரிகின்றன.

2.31 கிறித்துவ சமயத்தில் சைவ சமயத் தாக்கம்

அருள்திரு ஜெ. துரைராஜ்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டில் கிறித்துவ சமயம் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே தூய தாமஸ் மூலம் வித்திடப்பட்டது. ஆயினும் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர்தான் வளர்ந்து பெருகிற்று. கி.பி 15 ஆம் நூற்றாண்டு முதல் இக்காலம் வரை கிறித்துவ சமயத்தில் சைவ சமயத்தாக்கம் வளர்ந்து வந்திருக்கிறது.

சமயங்கள் தழைக்கவே சமய வளர்ச்சிக்குக் கல்வி , கலை , கலாச்சாரம் , பண்பாடு நாகரீகம் , இலக்கியம் ஆகியவை உறுதுணை

புரிந்திருக்கின்றன.மனித வாழ்வில் கலாச்சாரங்களிலும் சமயங்களிலும் ஒன்றன் செல்வாக்கு மற்றொன்றில் தாக்கம் பெறுவதுஇயல்பானது . எந்த ஒரு கலாச்சாரமோ , சமயமோ மற்றொன்றின் செல்வாக்கு தன்னிடத்தில் இல்லையென்றும் , தனது செல்வாக்குத் தான் பிறிதோன்றில் உண்டென்றும் தற்பெருமை கொள்ள இயலாது.பொதுவாகக் கலாச்சார சமயச் செல்வாக்குகள் சமுதாய மக்களிடையே அவர்தம் முயற்சி இன்றி இயல்பாக நடைபெற்று விடுகின்றன. கிறித்துவ சமயத்தில் சைவ சமயத்தின் தாக்கம் எந்தெந்த வகையில் ஏற்பட்டிருக்கிறது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

தமிழகத்தில் கிறித்தவர்கள் , மேலை நாட்டுச் சமயப் பரப்பாளர்கள் ஆகியோர் சமயத்தைப் பரப்பப் பின்பற்றிய வழிகள் : சைவத் தாக்கம் - கிறத்தவச் சமயத்தைத்தமிழகத்தில் பரப்புவதற்குப் பிற சமயச் சூழலில் பின்பற்றிய வழிமுறைகள் - கிறித்துவ சமய இலக்கியத்தில் சைவ சமயத்தாக்கம் - கிறித்துவ சமயக் கருத்துக்கள் -இறையியல் ஆகியவை ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்யப்படுகின்றன.

2.32 சைவ சமயம் இந்திய நாட்டின் தனி முதற் சமயம்

எ. நடராசன்
வழக்குரைஞர் , திருவையாறு

இந்திய நாட்டில் ஆரம்பத்தில் தோன்றிய வழிபாடு தாய் வழிபாடு. தாய்க் கடவுளைக் கொற்றவை காளி முதலிய பெயரால் வழிபட்டனர். தாய்க்கடவுள் வழிபாடு மக்கள் , விவசாயத்தை அறியாத காலத்தில் தொடங்கியதாகும்.

தாய்க்கடவுள் வழிபாடு நடைபெற்ற காலத்தில் திருமண முறை தோன்றியது. எனவே தந்தையே அதிகாரம் உடையவனாவான். ஆகவே தந்தை வழிபாடு உண்டாயிற்று. முற்காலத்தில் இந்திய மக்களுக்கு எருதுகளே வாகனமாகப் பயன்பட்டன. எனவே இடபத்தை ஊர்தியாக உடைய வழிபாடும் தோன்றிற்று. தந்தைக் கடவுளுக்குஇடபம் சிறந்த ஊர்தியாக ஆக்கப்பட்டது. இவ்வாறு அம்மை அப்பர் வழிபாடுகள் ஆதியில் தனித்தனியே தோன்றின.

பின்பு மக்கள் இவர்களை மனைவி , கணவன் என்னும்முறையில் வழிபட்டனர். கடவுள் ஒருவரே என உணர்ந்த மக்கள் அம்மை அப்பரின்அருட்குறிகளே இறைவனின் ஆண் தன்மை பெண் தன்மைகளை உணர்த்தும் எனக் கொண்டனர். ஆண் தன்மை , பெண்

தன்மைகளை விளக்கும் அறிகுறியாக அவர்கள் ஆண் குறி பெண் குறி வடிவான அடியாளங்களையும் வணங்கினர்.

பின்னர் இவ்விரண்டும் ஒன்று சேர்க்கப்பட்டுக் கடவுள் ஆண் பெண் இயல்பினர் என்னும் தத்துவத்தில் வழிபடப்பட்டது. மொகஞ்சதரோவில் ஆண் கடவுளைக் குறிக்க ஆண் உருவமும் பெண் கடவுளைக் குறிக்கப் பெண் உருவமும் பயன்படுத்தப்பட்டன. மொகஞ்சதரோவில் .அம்மை மீன் கன்னி எனப்பட்டாள். இப்பெயரே இக்காலத்தில் மீனாட்சி என வழக்கத்திலுள்ளது.

இப்படிப்பட்ட சைவ நாகரீகம் 5000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்து நதிக்கரையில் வளர்ந்து இருந்ததை சர்ஜான் மார்ஷல் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட அகழவாராய்வுக் குழுவினர் 1922 - இல் கண்டுபிடித்துள்ளனர். அக்கால மக்கள் யானை ,புலி , எருமை போன்ற விலங்கினங்கள் சூழ யோக நிலையில் உள்ள சிவனுக்குப் பசுபதி என்று பெயர் சூட்டி வழிபட்டனர். அக்கால இந்திய மக்கள் முப்பொருள் உண்மைகளையும்சிந்தனையை அடக்கிச் சும்மா இருக்கின்ற யோக முறைகளையும் முழுமையாக அறிந்திருந்தனர் எனத் தெள்ளத் தெளிவாக நாம் உணர முடிகிறது.

2.33 திருச்சிற்றம்பலம் - ஐந்து புலன்களும் ஆரத்துய்த்தல்

பேராசிரியர் முனைவர் புரிசை. ச. நடராசன்
தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்

சைவ சமயம் பற்றியும் , சிவப்பரம்பொருள் பற்றியும் இன்று தமிழக மக்கள் மத்தியில் தெளிவான சிந்தனையில்லை. உண்மைக்குப் புறம்பாகப் பல செய்திகள் மக்களிடையே இன்று பரவியுள்ளன. சைவம் - உலகப்பற்றை அறத்துறந்தவர்களுக்கே உரியது ; நிலையாமைத் தத்துவத்தை அதிகமாக எடுத்துரைப்பது ; இல்லற நெறியை விடத் துறவற நெறியை வற்புறுத்துவது; இம்மை வாழ்வின் ஏற்றத்திற்கு வழி சொல்லுவதைவிட மறுமை வீடு பேறு பற்றியே அதிகம் கவலைப்படுவது; திருமால் நெறிபோல இவ்வுலக வாழ்வுக்குத் தேவையான பொன்னும் பொருளும் பற்றிச்சிந்தனை செய்யாதது என்றெல்லாம் கருத்து நிலவுகின்றது.

நம்முடைய தொல்பழம் சமயமாகிய சைவம் காலந்தோறும் சந்தித்து வரும் எதிர்ப்புகள் பலவிதம். இன்று நாட்டில் மேலே காட்டிய வண்ணம் இச்சமயத்தைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்தியும்

அச்சமும் நிலவி வருவதை இவ்வாய்வாளர் பல ஊர்களில் நேரிடையாகக் கேட்டும் கண்டும் உணர்ந்திருக்கிறார்.

நம்முடைய சைவசமயம் , உயிர் வாழ்வாங்கு இம்மை வாழ்வு வாழ்ந்து அதனடிப்படையில் பிறவாப் பெருநெறியில் தலைப்படுதல் வேண்டும் என்பதற்கான வழிகளை வகுத்துரைப்பதாகும். நம்முடைய திருமுறைகள் செம்மையான இல்லற வாழ்வினை வற்புறுத்தி உரைப்பன. இல்லற நெறியிலேயே துறவறத்திற்கு அடிப்படையான தன்னலமறுப்பினை ஒருவன் பெற்று உயர்வடைய வேண்டும் என்று வழிகாட்டுவன.

சிவமோ - பரம்பொருளுக்குரிய தன்மைகளோடு வேண்டுதல் வேண்டாமை அற்றநிலையில் , நிலவும் முரண்பாடுகள் என்று கருதும்பலவற்றை ஒருங்கே வைத்துச் செம்மாந்து இருப்பதாக நம்முடைய அருளாளர் பாடிச் சென்றுள்ளனர். அதனைத் தெளியவுணராது மக்கள் சிவத்தைப் போற்றாது நாளை வறிதே போக்கி வருகின்றனர்.

எனவே , இந்த ஆய்வுக்கட்டுரையில் பரம்பொருளால் உயிர்க்குப் படைத்தளிக்கப்பெற்ற தனு - கரண-புவன-போகங்களைச் செம்மையாக அனுபவிப்பதற்கே சைவ சமயம் முன்னுரிமை தருகின்றது என்ற கருத்து பட்டினத்தார் திருவாக்கால் '' ஐந்து பலன்களும் ஆரத்துய்த்தல்'' என்ற தலைப்பின் கீழ் விளக்கமுற எடுத்துரைக்கப்பெறும்.

2.34 எந்நாட்டவர்க்கும் இறைவன்

டாக்டர் எஸ். பத்மநாபன்
நாகர்கோயில்

இந்த உலகிலே பழமையான பகுதி கடல்கொண்ட குமரிக்கண்டம் என்பது தொல்லியல் ஆய்வாளர்கள் கருத்து. இன்றைய குமரியின் தெற்கே நீண்டு பரந்து கிடந்த நிலப்பரப்பை குமரிநாடு என்று பண்டைய தமிழ் இலக்கியங்கள் கூறும். அதனை இலெமூரியா என்று மேல்நாட்டு அறிஞர்கள் கூறுவர்.

தொன்மையான இந்த நிலப்பகுதியிலேதான் மனித இனம் முதன் முதலில் தோன்றியது என்பர் ஆய்வாளர்கள். அதுவே தென்னாடு என்று அழைக்கப்பட்டது. அந்தத் தென்னாட்டிலே தான் தமிழர்கள் சங்கம் வைத்து மொழி வளர்த்தனர். அங்குதான் சிவவழிபாடும் தோன்றியது. அதனால் தான் சிவன் தக்ஷணாமூர்த்தி என்றும் , தக்ஷணா பதி என்றும் அழைக்கப்படுகிறார். மேலும் நடராஜர் திருவுருவம் உருவானதும் ,

பஞ்சபூதத் தத்துவம் தோன்றியதும் கடல்கொண்ட தென்னகத்திலே தான் என்று அறிய முடிகிறது. இந்த அடிப்படையிலே தான் தக்ஷணாமூர்த்தியும், நடராஜப் பெருமானும் கடல்கொண்ட தென்னாட்டை நினைவூட்டும் வண்ணம் தெற்கு நோக்கிக் காட்சி தருகின்றனர். சிவனது பஞ்சபூதத் தலங்களும் , தமிழ் நாட்டிலே தான் அமைந்துள்ளன.

கடல்கொண்ட தென்னாட்டில் தோன்றிய சிவவழிபாட்டின் தாக்கத்தை இவ்வுலகில் பல்வேறு பகுதிகளில் காணமுடிகின்றது. உலகமொல்லாம் சிவநாமம் பல்வேறு நிலைகளில் ஒலிக்கக் கேட்கலாம். எபிரேயர்கள் , பாபிலோனியர்கள் ஆகியோரின் மாதங்களில் ஒன்று சிவன் என்று அழைக்கப்பட்டது. எகிப்து நாட்டிலுள்ள பாலைவனப் பசுந்தரை ஒன்று சிவன் எனப்பெயர் பெற்றிருந்தது. ஆப்பரிக்க நாட்டில் சிவ வழிபாடு இருந்து வந்தது. எகிப்திய ஆற்றங்கரையில் சிவலிங்கச் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க நாட்டிலுள்ள மாயன் நாகரிக மக்களிடம் சிவ வழிபாடு இருந்தது. ஆஸ்திரேலியா நாட்டுப் பழங்குடி மக்கள் நெற்றியிலே கண்ணை வரைந்து ஆடும்நடனம் சிவநடனம் என்று அழைக்கப்படுகிறது. ரோம் நாட்டில் யூட்டுருஸ்கான் இனத்தவர் சிவலிங்கத்தை வழிபட்டனர் என்பதை வேட்டிகன் அருங்காட்சியத்தில் காணப்படும் சிவலிங்க உருவங்கள் தெரிவிக்கின்றன. இஸ்லாமியர் வணங்கும் ஹஸ்ருல் அஸ்வத் என்றழைக்கப்படும் கருங்கல்லால் உருவாக்கப்பட்ட திருவுருவம் சிவலிங்கமே என்று கூறுவார் உண்டு. அரபு நாட்டிலுள்ள மக்காவில் சிவனடியார் குடியிருப்பு ஒன்று இருந்தது என்பாரும்உண்டு. '' சாயர் உல் ஒக்குதல்'' என்ற அரபு மொழி நூலில் மகாதேவர் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

2.35 புட்பவிதி

டாக்டர். அ.மா.பரிமணம்
தமிழ்ப்பேராசிரியர் (ஓய்வு) , தஞ்சாவூர் .

இறை வழிபாட்டில் மலர்களின் பயன்பாடு பற்றிப் புட்பவிதி என்னும் நூலினைக் கமலை ஞானப் பிரகாசர் இயற்றினார். அவர் சைவ சமய ஒழுக்கம் பற்றியும் , சாத்திரம் பற்றியும் பல நூல்கள் செய்துள்ளார்.

புட்பவிதி விநாயகர் காப்பொடும் சிவபெருமான் துதியோடும் 53 விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்டது. அது , 'புட்பவிதிமாலை' எனவும் கூறப்படும். 'புட்பபயன்' என்பது மலர்கள் பற்றிக் கூறும் பிறிதொரு நூல். அதன் ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. 'புட்ப விதி' மலர்களைத்

தொகுத்து விதிகூற , 'புட்ப பயன் ' தனித்தனி மலரின் தன்மை பற்றிக் கூறுகிறது.

பழந்தமிழர் நாகரிகம் மலர்ப்பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. மலரின் மருத்துவ , உணவுப் பயன்களின் மேலாக அழகியல் பயன்பாடு பெரிதும் போற்றப்பட்டது. அதுவே அவர்களின் இறைவழிபாட்டில் அர்ச்சனை , அலங்காரங்கட்குப் பயன்படுத்தப்பட்டது. மக்கள் , சூடும்பூ சூடாப்பூ எனப்பகுத்துப் பயன்கொண்டாலும், இறைவனுக்கு அவ்வேறுபாடு இல்லை. தமிழ் மக்கள் பூக்களை இடுபூவாகவும் , தொடுபூவாகவும் பயன்படுத்தினர்.

'புட்பவிதி' மலர்களைக் கோட்டுப்பூ , கொடிப்பூ , நீர்ப்பூ , நிலப்பூ என்னும் நால்வகைப்படுத்திக் கூறுகிறது. மலரினைப் போலவே இலைகளும் இறைவனுக்கு உரியவாமாறு காட்டப்பட்டுள்ளது. எட்டுநாள்மலர் என்னும் மரபு சைவத்தில் தோன்றியது. அதுவே பின்காலை, பகல் , இரவு , எல்லாக் காலங்கட்குமுரியன என்று வகை செய்யப்பட்டன. பஞ்ச வில்வங்கள் என்றொரு தொகுப்புக் கொள்ளப்பட்டது.

மலர்களைக் கொய்யும் நாள் , முறை முதலின கூறப்பட்டன. சில இலைகளை ஒருமுறைக்கு மேல் பயன்படுத்தலாம் என்பது சுட்டப்பட்டது. மலர் தூய்மை கெடாது பயன்படுத்தப்படுவதனைச் சான்றுகளுடன் ஆசிரியர் காட்டியுள்ளார். வழிபாட்டில் நீராட்டு சிறப்புடையதாதலின் பால் அபிடேகம் போல்வன உடன் கூறப்பட்டன.

மலர் வழிபாட்டில் வழிபடுவோரின் அன்புடைமை வற்புறுத்தப்பட்டுள்ளது. அஃதின்றேல் , எத்தகைய மலரிடுதலாலும் பயனில்லை. மலர் விதிகள் சைவ ஆகமங்களிற் கண்டவாறு தொகுத்துக் கூறுப்பட்டுள்ளன.

'புட்பவிதியிலுள்ள விதிகளைச் சிறிதும் தவறாது பின்பற்றுவது இல்லறத்தில் இருந்து சிவபூசை மேற்கொள்வோர்க்கு அரிதாகும். துறவியர்க்கு ஒரு கால் பொருந்தக்கூடும். உள்ளன்போடு சிறிய இலையினை இட்டு வழிபட்டாலும் அதனை இறைவன் ஏற்றருள்வான் என்பது திருமுறை உணர்த்தும் உண்மை. இந்நூலிற் கூறப்படாத உரோசா போன்ற மலர்களும் இன்று நடைமுறையில் இடம் பெற்றுள்ளன.'

2.36 சைவமும் கிறித்தவமும் ஒத்திசையும் நிலைகள்

ஞா. பால்வசந்தகுமார்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

அனைத்துச் சமயங்களும் இறைவன் உலகுக்கு அருளிய அருட்கொடைகள் ஆகும். அவை மனித வாழ்வை மேம்படுத்துகின்றன. சைவமும் கிறித்துவமும் ஓர்இறைக் கோட்பாட்டைக் கொண்ட சமயங்களாகும். இறைவனின் இயல்புகள் , வீடுபேறடைதல் , சீவன்முக்தி நித்திய ஜீவன் , அருவ ,உருவ , அருவுருவத் திருமேனி ஆகிய கருத்துக்களின் அடிப்படையில் சைவத்திற்கும் கிறித்துவத்திற்கும் உள்ள இயைபினை இக்கட்டுரை தெளிவாக விளக்குகிறது. சவமும் கிறித்துவமும் இறைவனின் இயல்புகளை இயம்புவதிலும்அருட்தன்மைகளை விளக்குவதிலும் நன்னெறிகளை வகுப்பதிலும் ஒன்றுபடுகின்றன.

2.37 சிவநெறியும் செய்வினைக் கோட்பாடும்

முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சிவமென்னும் செம்பொருளை உணர்ந்தொழுகு நெறியே சிவநெறி எனப்பெறும். என்செயலாவதொன்றில்லை எனவும் ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே எனவும் இயல்பு மலம் ஒடுங்கிய நிலையில் ஆன்றோர் அந்நெறிக்கண் அகலாது நின்று சிவநெறியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெறுவர்.

இத்தகைய உயிர்களைச் சிவபெருமான் சிவமாக்கித் தம்மின் வேறின்றி ஆண்டுகொள்வன். அந்நெறிப்படுமுன் உயிர்கள் வினையிலே கிடந்துழன்று, வினைக் கணக்குக்கேற்பப் பிறவிப் பெருங்கடற்கண் அழுந்தித் துயருற்று,, அவனருளாலே அவன்தாள் வணங்கப்பெற்று உயர்வர். சிவநெறியொன்றே உயிர்கள் மலங்களைந்து பக்குவம் பெறுதலையும் , செய்வினை நீங்கிப் பிறப்பற்ற பெருநிலை எய்துதலையும் உரைக்கும்.

வினைக்கோட்பாடு தொடக்கத்தே சிவநெறிக்கே உரியது. தொன்நெறியாம் சிவநெறி செய்வானும் செய்வினையும் அதன்பயனும் சேர்ப்பானும் என்னும் நான்கையும் உய்யுநெறி தலைப்படுவார்க்கு உரைத்தன. இவற்றுள் செய்வினை என்பது முக்காலத்துக்கும் உரியதாய் ,

நல்வினை தீவினை எனும் இரு பகுப்பினதாய் நின்றது. இக்கோட்பாட்டின் வலிமையையும் அறிவார்ந்த மெய்ம்மை நிலையையும் கண்டுணர்ந்த அயற்சமயிகள் , தத்தம் சமய நெறிகளுடே இதனையும் சேர்த்துக் கொண்டு தமக்கே உரிய மெய்யியற் கோட்பாடு போல இதனைப் போற்றினர். அறிஞர் இராதாகிருட்டினன் கருமக் கோட்பாடு என்று உரைக்கப்பெறும் வினைக்கோட்பாடு வைதிகநெறிக்கு உரியதன்று என்பர். அறிஞர் ஏ.எல். பாஷம் இக்கோட்பாடு பழந்திராவிடர்களின் சிந்தனைப் பள்ளிக்குரியதென்பர்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் செய்வினைக் கோட்பாடு பற்றித் தெளிவுறக் கூறுகின்றன. இந்தக்கருத்து வளர்ச்சியை ஏனைச் சமயநூல்களிலும் சைவத் திருமுறைகள் தெளிவுறக் காட்டுகின்றன.

இருவினையொப்பு பற்றிய செய்திகளைச் சித்தாந்த சாத்திரங்கள் பேசுகின்றன. வினை , வினைக்கோட்பாடு என்பனவற்றின் படிமுறை வளர்ச்சி சித்தாந்த சாத்திர நூல்களாலும் வழிபாட்டு நூல்களாலும் நன்கு விளக்கப் பெறுகின்றது. எனவே வினை பற்றிய அடிமூலக்கருத்து தமிழர்க்குரியது என்றும் சிவநெறியே இதனை முதற்கண் எடுத்தியம்பியதென்றும் இக்கட்டுரை நிறுவுகின்றது.

2.38 உலக அமைதிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் சைவம்

டாக்டர் பெ. பொன்னழகு
தத்துவ மையம் , தமிழ்ப் பல்கலைக்கழகம்

உலகில் வாழ்கின்ற அனைத்து மக்களும் அவரவர் அறிவுநிலைக்குத் தக்கவாறு இன்பத்தை நாடிப்பெறுவதற்கு வழிகாட்டி உயர்ந்து நிற்கும் செந்நெறியாக விளங்குவது சைவ சித்தாந்தப் பெருநெறியாம் சைவநெறியேயாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த சைவ சமயநெறி இன்று வளர்ந்து வரும் பல்வேறு அறிவியல் முன்னேற்றங்களுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் இடம் தந்து விளங்கி வருகிறது.

அறிவியல் முன்னேற்றமும் அறிவு வளர்ச்சியும் மிகுந்த இந்நாட்களில் , மனிதன் அடிப்படை அறநெறிகளிலிருந்து பிறழ்ந்து பண்பாட்டுச் சீரழிவுகளை ஏற்படுத்துவதோடு மட்டுமன்றித் தன்னையும்அழித்துக் கொண்டு ,தான் வாழ்கின்ற சமுதாயத்தையும் அழித்து , அவன் வாழ்ந்ததற்கு சுவடேதும் இல்லாமல் செய்துவிடுவானோ

என்ற அச்சஉணர்வு நம்மிடையே நிலவுகிறது. இந்நிலையில் சைவசமயமானது வழிபாட்டுச் சமயமாக நின்று சடங்குகளை மட்டும் போதிக்கும் சமயமாக நின்றுவிடாது பொருள் பொதிந்த வாழ்க்கைச் சமயமாக மாறி , அறநெறி போதித்து உலகமக்கள் அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகள் - சகோதரர்கள் என்ற உணர்வினை நம்மிடையே விதைத்து உலகளாவிய சகோதரத்துவத்தை (Universal Brotherhood) நிலைநிறுத்தி வருகிறது. உலகச் சகோதரத்துவம் நிலை நாட்டப்பெற வாழ்வில் அன்பும் மனிதநேயமும் இன்றியமையாததாகிறது. மனித நேயத்திற்கே அடிப்படையான அன்பினை ஒரு குறிக்கோளாகக் கொண்டு வாழும் நெறியாக விளங்குவது சைவப் பெருநெறியேயாகும்.

சைவ சமயம் தன்னை ஒரு நிலைக்குள் அல்லது எல்லைக்குள் அடக்கிக் கொள்ளாமல் பரந்து - இன , மொழி , சாதி போன்ற பல்வேறு பேதங்களையெல்லாம் கடந்து , காலத்தால் அழியாததாக நிலைத்து நிற்பதாகும். அறிவியல் மயமான பொருண்முதன்மைச் சமுதாயத்தில் மக்களைச் சிக்கித் தவிக்கவிடாமல் அன்பு, மனிதநேயம் , சகோதரத்துவம், சமய , இன, மொழி ,பால்பேதம் பாராட்டப்படாத சமத்துவம் , அறநெறி ஒழுகல் , சமயப்பொறை ஆகிய அனுபவங்களோடு பொருந்தி நிற்கச் செய்து என்றும் இன்ப வாழ்வில் நிலைக்கச் செய்வது சைவ நெறியேயாகும். சமயம் என்ற நிலையிலும் , சித்தாந்தம் என்ற நிலையிலும் சிறந்து விளங்கும் இந்நெறியினை உலகம் அறிதல் வேண்டும் - அதனைப் பின்பற்றி ஒழுகல் வேண்டும் - அதுவே உலக அமைதிக்கும் உலக ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுக்கும் என்ற நோக்கத்தினை நிறைவு செய்யும்வகையில் இக்கட்டுரை அமைகிறது.

2.39 அசாம் மாநிலத்தில் சைவ மதம் : தோற்றமும் வளர்ச்சியும்

க. மகாலிங்கம்
கௌகாத்திப் பல்கலைக்கழகம்

இந்திய நாட்டின் பிறமாநிலங்கள் போல் அல்லாமல் அசாம் மாநிலத்தில் எப்போதுமே ஒரு வேறுபட்ட மாறுபட்ட, சூழல் நிலவி வந்துள்ளது. மக்களின் குடியேற்ற முறை , பழக்க வழக்கம் , நாகரீகம் , போன்றவை ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்து ,ஒன்றன் தாக்கத்துக்கு இன்னொன்று உட்பட்டு இருந்து வந்து இருக்கின்றன. வட இந்தியர்கள் , குறிப்பாக ஆரியர்கள் மற்றும் திபெத் , நேபாளம் , சைனா,

மங்கோலியா,பர்மா, தாய்லாந்து . ஒன்றுபட்ட வங்காளம் போன்ற நாட்டு மக்கள் இங்குப் பல்வேறு கால கட்டத்தில் குடியேறினர் . சமுதாய அமைப்பு முறை இப்படி இருந்தாலும் இவ்வளவு சிக்கலான , குழப்பமான அமைப்பு முறை இருந்தாலும் சைவமதம் கட்டுக்கோப்பாகவே இருந்து வந்து இருக்கிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் தொன்றுதொட்டு இங்கு வாழ்ந்துவந்த மலைவாழ்மற்றும் பழங்குடி மக்கள் சைவ மதத்தைக் கடைபிடித்துச் சிவனை வழிபட்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆக இந்தப் பின்னணில் சைவ மதமும் சிவன் வழிபாடும் இங்குச் செழித்து வளர்ந்தவிதம் , ஆரம்ப காலத்தில் அரசர்கள் சைவ மத வழிபாட்டுக்கு ஊக்கம் அளித்தவிதம்(Patronage), ஆயிரக்கணக்காகச் சிவன் கோயில்கள் உருவானவிதம் , இடைக்கால சங்கர் தேவ காலத்தில் வைஷ்ணவ மதம் ஓங்கி இருந்த காலத்தில் கூடச் சைவ மதம் நிலைத்து நின்ற விதம் , சைவ புராணங்கள் , செப்பேடுகள் இப்படிப்பட்ட செய்திகளை விளக்கி எழுதுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2.40 சிவ வழிபாடு

ம. மதியழகன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

மிகத் தொன்மைக் காலம் தொட்டுச் சிறப்பு வாய்ந்த சமயமாகச் 'சைவ சமயம்' கருதப்படுகிறது. இச்சைவசமயக் கடவுளான சிவபெருமானே ஏனைய பிறவற்றுக்கும் மூலகர்த்தாவாகத் திகழ்பவரும் முதல் தெய்வமும் ஆவார். பண்டைத் தமிழ்ச் சான்றோர் திருத்தொழில்கள் ஐந்தனுக்கும் உரிய முழுமுதல் பொருளானவனாக ஐந்து சிரங்களையுடைய சிவபெருமானையே வழிபட்டுள்ளனர். இவ் இறைவனை அனைவரும் அன்புடன் பூசனை செய்து தற்போது வழிபடுகின்றனர். அவ்வாறு வழிபடும் போது மக்கள் தங்கள் பிணி நீங்கி மேன்மை பெறுவதாகக் கருதுகின்றனர். விசேட நாட்களிலும் , பண்டிகைகளின் போதும் சிவ ஆலயங்களுக்கு மக்கள் சென்று வழிபடுவது இன்றும் வழக்கமாக உள்ளது. சிவ ஆலயங்களிலும் சிறப்புப் பூசைகள் அவ்வப்போது நடைபெறுகின்றன. தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை அருகில் உள்ள சைவத்திருத்தலம் ஆகிய திருச்சிற்றம்பலத்தில் உள்ள 'புராதனேஸ்வரர்' ஆலயம் பற்றியும் ,அதில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குரிய சிறப்புகளையும் ,

வழிபாட்டுமுறைகளையும் இக்கட்டுரை விரிவாக விளக்குகிறது.

2.41 அன்றும் இன்றும்

முனைவர் சி. மனோகரன்
எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்

காலத்திற்குக் காலம் உலகில் யாவும் மாறுபட்டு வருகின்றன. மாறுதல் இயற்கை என்றாலும் அது தத்துவங்களுக்குப் பொருந்தாது என்பது அறிஞர்தம் கருத்து. மாறாத தத்துவங்களை உருவாக்கிய சமயங்களை மனிதர்கள் மாற்றி வருகின்றனர் என்பது இக்கட்டுரையின் கருத்து.

வேண்டுதல்

பண்டுதொட்டு இன்றுவரை இறைவனிடம் வேண்டுதல் தொடர்ந்துள்ளது. பண்டைய வேண்டுதலுக்கும் இன்றைய வேண்டுதலுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

'' வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை'' என்பது திருக்குறள். மானுடர்க்கு வள்ளுவர் கூறிய அறிவுரையும் ஆகும். '' யாஅம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால் அன்பும் அருளும் அறனும் உருளிணர் கடம்பின் ஒளி தாரோயோ'' என்பது பரிபாடல் . '' நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா'' என்பது ஔவை வாக்கு. இவை இறைவனிடம் - அன்றைய வேண்டுதல்கள்.

'' வந்த எங்களைப் பாரப்பா கந்தா செல்வம் சேரப்பா'' எனச் செல்வம் சேர்க்கலாம் என்ற நோக்கத்திலும் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் தேடவும் , நோயைப் போக்கவும் இன்றைய வேண்டுதல்கள்.

சைவம் - சைவர்

சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சிவம் > சைவம். வழிபடுபவர் சைவர் , சைவமல்லாதது அசைவம் - சைவமல்லாதவர் அசைவர். இது அன்றைய நிலை.

சைவம் மரக்கறி உணவு , அசைவம் புலால் உணவு. மரக்கறி உணவு மேற்கொள்பவர் சைவர் . சிவனை முழுமுதற்கடவுளாக வணங்கினாலும் புலால் உணவு மேற்கொள்பவர் அசைவர். இது இன்றைய நிலை. அது சகோதரத்துவத்திற்கும் சமத்துவத்திற்கும் இடையூறான நில என்பதைக் கட்டுரை விளக்குகிறது.

2.42 திருமுறை காட்டும் கோமானும் யப்பானியக் கமியும்

மனோன்மணி சண்முகதாஸ்,
ககஸிதின் (GAKUSHUIN) பல்கலைக்கழகம் , ஜப்பான்.

தமிழில் பாடப்பட்டுள்ள திருமுறைப் பாடல்கள் சமய ஒப்பீட்டு ஆய்வுத் தரவுகளாக இன்று கணிக்கப்படுகின்றன. சைவ சமயக் கடவுளர் பற்றிய செய்திகள் திருமுறைப்பாடல்களில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழிபாட்டு நிலையில் உலகில் தோன்றியுள்ள சமயங்கள் யாவும் அடிப்படையில் ஒற்றுமையானவை என்ற கருத்தும் உண்டு. எனினும் சமயங்களின் தோற்றநிலை, வளர்ச்சி, செல்வாக்கு என்பன பற்றிய ஆய்வில் அவற்றின் வேறுபாடு வெளிப்பட்டு நிற்கிறது. சைவம் பற்றிய ஆய்வுகளில் பண்டைய தமிழர் சமயநிலையும் நன்கு தெளிவுபெறத் திருமுறைப் பாடல்களே உதவுகின்றன.

சைவம் காட்டும் 'கோமான்' என்ற கருத்து தமிழர் சமயநெறியிலே வளர்ச்சி பெற்ற ஒரு கோட்பாடாகவுள்ளது. இக்கோட்பாடு யப்பானியர் சமய நெறியிலே காணப்படும் 'கமி' என்ற கருத்துடன் நெருங்கிய தொடர்புடையது. இன்று யப்பானிய 'கமி' பற்றிய விளக்கம் யப்பானியரிடையே தெளிவற்றிருக்கின்றது. ஆனால் 'கோமான்' என்னும் சைவம் காட்டும் கருத்தின் விளக்கம் யப்பானிய 'கமியை' நன்கு விளங்கப் பெரிதும் உதவும் என்பதே இக்கட்டுரை காட்டும் தெளிபொருளாகும்.

கோமான் , கமி என்னும் இரு சொற்களின் சொற்பொருள் விளக்கமும் கருத்துநிலை விளக்கமும் மொழியியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் விளக்கப்பட்டு இரு மொழி இலக்கியத் தரவுகள் மூலம் அவற்றின் தொடர்பு நிலை எடுத்துக்காட்டப்படும். திருமுறை காட்டும் கோமான் , சங்கப்பாடல்களிலே பயின்ற சொல்லாகும். சிவனைக் குறிக்கும் சொல்லாக அது வளர்ச்சி பெற்ற நிலைகளை விளக்க யப்பானிய 'கமி'யின் பண்புகளை உணரக் 'கோமான்'பயன்படுவதை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் இலக்காகும்.

இறைவனின் மேலான நிலையைச் சைவம் , கோமான் எனக் குறித்து யப்பானியர் , கமி எனக் குறித்தனர் இயற்கைநிலையில் தமிழர் - யப்பானியர் சமயம் இணைவதை இச்சொற்களே உணர்த்துகின்றன. இன்று கமி பிறசமயச் செல்வாக்கால் மக்கள் உணரமுடியா ஒன்றாகி நிற்கிறது. கோமான் , கமியின் தன்மையை யாவரும் அறிய உதவும்.

சைவத்தின் பழமை உலகச் சமயங்களின் கருத்து ஒற்றுமை நிலையைத் தெளிவாக்கும் திருமுறைப்பாடல்கள் இயற்கையை மனிதன் இறைவனாகக் கண்டு பணிந்து வாழ்ந்ததை விளக்குகின்றன. செயற்கை இறைவழிபாட்டைத் தடை செய்கிறது. கோமானாக இயற்கையே எம்மை

எப்போதும் ஆள்கிறது. அதுவே கமியாகக் காலங்காலமாக நிலைத்து நிற்பது.

2.43 சைவ சமயம்

சி. மாசிலாமணி
வழக்குரைஞர் , சென்னை

ஒன்று என்று இரு. உண்டு என இரு - பட்டினத்தார் படைப்புக்காலம் தொடங்கி இருந்து வரும் மிக தொன்மையான தமிழ்க்கடவுள் சிவன். தமிழர் தமிழகத்தின் முதுகுடி மக்கள் - உலகத்தின் ஆதி மக்கள் - மனிதனின் மிகப்பழைய நாகரீகம் தென் இந்தியவில் இருந்தது. சைவம் - சிவ சம்பந்தம் உடையது. சைவர்களுக்குத் திருக்குறள் நீதிநூல் மட்டும் அல்ல பொதுமறை. தோத்திர நூல்கள் / பன்னிரு திருமுறைகள் - தர்க்க ரீதியாக அமைந்துள்ளன. பதினான்கு சாஸ்திர நூல்களும் சைவர்களுடைய நூல்கள். சிவன் ஒருவன் தான் முழுமுதற்கடவுள். மற்றைய தேவர்கள் ,உயிர்கள் அவர்களுக்குப் பிறப்பு இறப்பு உண்டு - நம் சான்றோர் இதைத் தெளிவாக எடுத்துரைத்தும் கூட நம்மில் பலர் சிறு தெய்வ வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். நவக்கிரகங்கள், பரிவார தேவர்கள் , கிராம தேவதைகள் , எல்லைகளைப் பாதுகாக்கும் தேவர்கள் - அய்யனார் - இவர்களை வழிபடுகின்றனர்.திருக்குறள் கடவுள் வாழ்த்தில் ஆதி பகவன் , வாலறிவன் , மலர் மிசை ஏகினான் மாணடி , வேண்டுதல் வேண்டாமை இலான் , இறைவன் பொறிவாயில் ஐந்தவித்தான். தனக்குவமை இல்லாதான் , அறவாழி அந்தணன் தாள் எண்குணத்தான் என்ற தொடர்களால் சிவனைக் குறிக்கின்றது. சிவன் பிறப்பிலி; அழிவதும் ஆவதும் கடந்தோன், தாயுமிலி , தந்தையிலி பிறப்பில் பெருமான் , பிறவாதே தோன்றிய பெம்மான் என்று நால்வர் பெருமக்கள் கூறுகின்றனர். சிவனைத் தேவர்கள் வழிபடுகிறார்கள். திருமால் வழிபட்ட ஸ்தலம் திருவாழ்கொளிபுத்தூர் , இராமர் - இராமேஸ்வரம் , வாமனர் - திருமாணிக்குழி, சூரியன் - திருநீடூர் , சிவன் ஒருவனே பிறவா நிலை - வீடு பேறு கொடுப்பவன். கடவுள் ஒருவனே என்று தெரிந்தும் சிறு தெய்வ வழிபாடு செய்வது தெளிவின்மையால் தான் என்றால் மிகை ஆகாது - எனவே சைவ சமயத்தைச் சார்ந்தவர் சிவன் ஒருவன் முழுமுதற்கடவுள் , அந்தச் சமயத்திற்குப் பொதுமறை திருக்குறள், தோத்திர நூல் , திருமுறைகள் இலக்கண நூல் சாத்திரங்கள் என்று சித்தத் தெளிவுடன் வாழ்க்கை நடத்துவதே சிறந்தது.

2.44 இசுலாமிய இலக்கியத்தில் சைவத்தின் தாக்கம்

பேராசிரியர் திருமலர்.எம்.எம்.மீரான் பிள்ளை
அரசு கல்லூரி , திருவனந்தபுரம்

தமிழகத்தில் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலேயே அறபு - தமிழ் சமூகப் பிணைப்பு உருவாகி விட்டது. அறபிகளின் அரசியல், சமய, சமூக வணிகத் தொடர்பின் விளைவால் இசுலாத்தை ஏற்றுக் கொண்ட தமிழர்கள், சில சமயப் பண்பாடுகளைத் தொடர்ந்து கையாண்டும் வந்தனர். புராண இதிகாசக் கதா காலட்சேபங்களைப் பார்த்துக் கேட்டுப் பழகிய அவர்கள் புதிய பின்னணியிலும் அதை எதிர்பார்த்தனர். இதனால் இசுலாமியப் பின்னணியில் பல புதிய இலக்கிய வடிவங்கள் உருப்பெறத் தொடங்கின. இவற்றில் பல சைவப் பண்பாட்டுக் கூறுகளைக் காண இயலும். இது பற்றிய ஆய்வு சமய சம நேயத்திற்கு வழி வகுப்பதாகும்.

பீரப்பா,குணங்குடியார் போன்ற மெய்ஞ்ஞானிகளின் பாடல்களில் சைவச்சுவடுகள் பதிந்துள்ளன. காப்பியங்களிலும் , சிற்றிலக்கியங்களிலும் இந்நிலை உண்டு. '' படைப்போர்'' எனும் முசுலீம் வீரப்பாடல்களில் காணப்படும் சைவச் சுவடுகளை இங்குக் காண்போம்.

படைப்போர் இலக்கியத்தில் , சல்கா , செய்தத்து , நபுசு , மலுக்கு முலுக்கு எனும் காப்பியங்களும் , சக்கூன் , ஐந்து , காசீம்எனும் நாடார் கதைப்பாடல்களும் இடம் பெறுகின்றன. கரம் கூப்பி வணங்குதல் , பாதங்கள் பணிதல் , தாலிகட்டுதல் , குறிகேட்டல் , நிமித்தம் பார்த்தல் , ஆலத்தி எடுத்தல் , தேர்வலம் வருதல் , சடலம் எரித்தல் , விக்கிரகம் வழிபடுதல் , பூசை செய்தல் , நடனம் ஆடுதல் , நாடகம் நடித்தல் , நட்டுவம் பாடுதல் , குரவையிடுதல் , மந்திரம் ஓதுதல் , அபிஷேகம் செய்தல் ,போன்ற சைவப் பழக்க வழக்கங்கள் சித்திரிக்கப்படுகின்றன. தேவர்கள் ,இந்திரன் இந்திராணி , சந்திரன் , எமதர்மன் ,ஆதி சேடன் , வாசுகி பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

2.45 சைவசமயமும் உலக மனித இனமேம்பாடும்

முனைவர் இரா. முத்துக்குமாரசாமி
திட்ட இயக்குநர் - யுனெஸ்கோ , மாத்தூர்

சைவ சமயம் என்ற சொல்லுக்குரிய விளக்கம் யாது ?

உலகம் , மனித இனம் மேம்பாடு என்ற சொற்களுக்குப் பொருள் யாவை ? சைவசமயத்திற்கும் உலக மனித இன மேம்பாட்டிற்கும்உள்ள தொடர்புகள் யாவை ? மனித இன மேம்பாட்டிற்குரிய இடையூறுகள் யாவை? அவற்றை நீக்கும் வழிகள் யாவை ? அவ்வழிகளைச் சைவ சமயம் கொண்டுள்ளதா? ஆம் எனில் அவ்வழிகளையுடைய சைவ சமயத்துணையை எவ்வாறு மனித இன மேம்பாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்வது என்பதற்கான தடை விடைகளை இருமையறிவு பெற்ற திருமூலர் ஞானத்தைக் கொண்டும்இவ்வுலக அறிஞர்களின் அறிவைக் கொண்டும் ஆய்ந்து கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கம். மேலும் , சமய விளக்கம் திருமூலர் கருத்து - உலகமும் மனித இனமும் -மேம்பாடு - வகைகள் -சைவ சமயம் - மனித இன மேம்பாடு - தொடர்புகள் - இடையூறுகள் -இடையூறுகள் நீக்கும் வழிகளைச் சைவசமயம் கொண்டுள்ளதா ? -சைவ சமயத்துணையை எவ்வாறு வேறுபாடுகளை நீக்கி ஒற்றுமை ஏற்படுத்திடப் பயன்படுத்துவது என்பவனவற்றை இவ்வாய்வுக்கட்டுரை விரிவாக எடுத்து ஆராயும்.

2.46 சைவ சமய உணர்வில் மானுடப் பொதுமைகள்

தே. முருகசாமி
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி

சைவ சமய நூல்களைச் சாத்திரங்கள் என்றும் தோத்திரங்கள் என்றும் இரண்டாகப் பிரிப்பர். இவை இறைமையை மையப் பொருளாகக் கொண்டுள்ளன. திருவருள் சார்ந்த இறைமை மானுடத்தின் வாழ்வாங்கு வாழும் முறைகளைப் பற்றி எடுத்துக்கூறும்.இந்த மானுடம் முழுமை பெற வேண்டுமானால் திருவருட் கலப்பு வேண்டும். இதனால் ஆண்டவனும் ஆன்மாவும் நித்தியப் பொருட்களாகின்றன. உலகச் சமயங்கள் அனைத்தும் இக்கருத்தையே வெவ்வேறு போக்கில் எடுத்துக் கூறுவதைக் காணலாம். ஆலகால விஷம் உண்ட சிவனும் சிலுவை சுமந்த ஏசுவும் கல்லடி பெற்ற நபிகள் நாயகமும் மானுடத்தை வாழ்விக்க வந்தவர்களாவர். இவ்வகையில்

உலகச் சகோதரத்துவம் , இரக்கம் , தொண்டு,அன்பு போன்ற நல்லுணர்வுகளை மானுட மேம்பாட்டிற்காக எடுத்துக்கூறும் நிலையில் சைவ சமயம்அமைந்துள்ளது என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது.

2.47 சைவ சித்தாந்தச் சமய உறவுகள்

பேராசிரியர் ஆதி. முருகவேள்
திருச்சிராப்பள்ளி

இன்றைய சமுதாயப் பின்னணியில் நன்மை பெறுவதற்கான வழியினை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது. இதுவே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.தமிழர் கோட்பாடாகிய சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மை பற்றிப் பேசுகிறது. இறைவன் , மனிதன் , உலகம் பற்றிய கருத்துக்களையும் இறைவனின் அருள்நிலை உயர் வாழ்க்கைக்குத் தேவையான உழைப்பும் அதன் பயனான வீடுபேறு ஆகிய கருத்துக்களையும் தெளிவாக இக்கட்டுரை விளக்குகிறது. மக்கள் சமயத்தால் வேறுபட்டிருப்பினும் கருத்தால் அனுபவத்தால் ஒன்றுபட்டு , வேற்றுமை மறந்து ஒன்றுகூடி வாழவேண்டும் என்ற கருத்தை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

2.48 அப்பாலும் அடி சேர்ந்தார்

வேடசந்தூர் பாவா
பழனி

'அனைத்தும் சைவம் , எல்லாம் சிவமயமே' அதற்கும் மேற்பட்டுத் தமிழக எல்லை கடந்த உலக நாடுகளிலெல்லாம் சைவ நெறியைப் பின்பற்றி வருபவர்கள் இன்றும் உள்ளனர். இதுவல்லாமல் கிறித்துவம் , இசுலாம் , சீக்கியம் என்று பேசப்படும் நிலையிலும் இறைத் தூதுவர்கள் , தொண்டர்கள் , அடியார்கள் இறையன்பைப் பேணியும் , தமது வாழ்வில் கடைப்பிடித்தும் மக்கள் கூட்டத்தை ஆட்படுத்தும் தொண்டினையும் செய்து வந்துள்ள ஏசுபிரான் , நபிகள்நாயகம் , குருநானக் போன்றவர்களும் அடியார் திருக்கூட்டத் தவர்களாகவே கொள்ளச் சைவம் இடமளிக்கின்றது. சைவத்திற்கு அன்னியமானது என்று ஒன்று இல்லை. நிற்பதுவும் சைவம்,

நடப்பதுவம் சைவம் என்றால் , அனைத்து உயிர்த் தொகுதியும் சைவத்துள் அடங்குமல்லவா !

என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன் , தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாரே ! - என்று அருள்வார் தமது திருமந்திரத் திருமுறை - மறையில் வித்தகச் சித்தர் திருமூலர் , ஞான சம்பந்தப் பெருமான் தம்மைத் தமிழ்ஞானசம்பந்தன் என்றும் , 'தமிழ்த் திருமுறை ' என்றும் ,மறை ஞான சம்பந்தன் ' என்றெல்லாம் அருளியுள்ளார் ! சிந்திக்க வேண்டும்.

2.49 சைவமும் பௌத்தமும்

பா. ஜம்புலிங்கம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

இறைவனை மதித்து வழிபடுவது மதம். இம்மையிலேனும் மறுமையிலேனும் இறைவனை அடையச் செய்வது சமயம்.

உலகிலுள்ள அனைத்துச் சமயங்களுக்கும் முற்பட்ட தொன்மையுடையது சைவம்.

சமயமாக மட்டுமிராமல் பல இன மக்களின் கல்வி , அறிவு , ஒழுக்கங்களை மாற்றிய இயக்கம் பௌத்தம்.

தமிழர்களின் வேதமாகவும் , சித்தாந்தச் சைவர்களின் வேதமாகவும் கருதப்படுவது பன்னிரு திருமுறைகள்.

பௌத்தம் வலியுறுத்திய அறங்களில் முதன்மையானதும் முக்கியமானதும் ஆகக் கருதப்படுபவை பஞ்சசீலங்களான கொல்லாமை , கள்ளாமை , காமமின்மை , பொய்யாமை , கள்ளுண்ணாமை.

பஞ்சசீலக்கொள்கைகள் பன்னிரு திருமுறைகளில் காணப்படுதலை இக்கட்டுரை தெளிவுறுத்துகிறது.

சமயக் காழ்ப்புணர்வு கொண்டு மனித நேயத்தை மறந்து மனித உறவுகளைச் சின்னாபின்னமாக்கும் நிலை காணப்படும் இக்காலச் சூழலில் இவ்விரு சமயச்சிந்தனைகளும் பொதுவானவையே என உணர்த்துதலை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2.50 SAIVISM - A LIVING FORCE IN MAURITIUS

Arunachalam pushparatham
Mauritius

Since the early days of Tamil immigrants in Mauritius, worship of Murugan became well established. This is born out by the construction of a Temple dedicated to Thandayudapani Swamy at Climencia in the eastern part of the island and another one at Quartre Bornes in the west. Both these temples were erected on the slopes of the hills, reminiscent of "Arupadai Veedu " in their ancestral land. A third temple was constructed in the capital port Louis, dedicated to Sockalingam and Meenatchi Ammen, popularly called "Kylasom " It is the only temple constructed on the agamic principles.

Thai poosam Kavadi is celebrated in every temple of the island. This festival is of particular importance to Maintain of Tamil origin. It is also a public holiday. Mahasivatratri is particularly observed in Sockalingam Meenatchi Ammen Temple were Karthigai Theebam is also celebrated. During funeral rites, verses from Thiruvasagam are chanted by one and all.

Organised efforts were undertaken to revitalise saivam by a group of young people. Chanting of Thevaram according to "Pan" , Thiruvasagam, Thiruvarutpa and Thiruppugaz have become practice before and after "Poosai" in all our temple . Discourses to explain the meaning of a particular festival and the verses on the religious connotations are also in practice.

"Mauritius Mani manram " was founded by a group of dedicated young people with the specific aim of propagating saivam. The "Manram" organised Eistedfods on the model of those held by the Natal Tamil Vedic society and on the advice of our regretted periyaar, M.C.Naidoo. Chief guests of the stature of prof. T.M. Mahadeva were invited to give lectures on saivam during the Eistedfods. Working in close collaboration with Mr. N.C. Naidoo , Lalgudi Swaminathan was invited to give performances on Thirumurai. All these efforts had salutary effect as our children were given pure saiva names like Kannappan, Thirunavukarasu, Mangaiyarkarasi, Isaijnani, Thanigai Mani and so on.

Mention also must be made of the efforts undertaken by Sivaya

Subramanya Swamy of Hawai, USA. A saivite movement was launched to be propagated and uphold saiva religion and principles It has established an " ashram " Owing to certain controversial stands, the movement could not become popular.

2.51 THE KASHMIRIAN SAIVA SIDDHANTA AND ITS WANING INFLUENCE ON SOUTH INDIAN THINKERS.

Dr. Dominic Goodall
French Institute of Pondicherry

The label Saiva Siddhanta today most often denotes a theological school whose adherents are Tamilians and many of whose seminal writings are in Tamil. Some centuries ago, however, the Saiva Siddhanta was spread over much of North India and flourished with especial vigour in the Kashmir valley in the ninth and tenth centuries. It was here that theologians debated, formulated and shaped the doctrines of the school, basing their interpretations on the Siddhantatantras transmitted to them. The formative influence of their writing, particularly those of Bhatta Ramakantha II (c. 950-1000AD), on South Indian Saiddhantika writers was huge. Aghora sivacarya, the celebrated exegete of the Cola court in the twelth century, followed Bhatta Ramakantha II in almost all points of doctrine, calqued many passages of interpretation on passages from Ramakantha's works, and almost invariably cited the same sources as Ramakantha to substantiate his exegesis.

Gradually Ramakantha's influence appears to have waned in South India, and this decline in his popularity can be attributed to a fundamental theological shift within the Saiva Siddhanta : South Indian thinkers fell under two powerful influences - that of devotionalism and that of Advaita Vedanta. They still contiued to quote Ramakantha's ingenious interpretations of particular points of doctrine (such as on the doctrines of karmasamya or iruvinaioppu and malaparipaka); but they no longer upheld his tenets about such fundamental doctrines as the natural of moksa or the workings of diska. Six centuries later one thinker, Salivatinivasi - Jnanaprakasaguru of Sri Lanka, attempted to

reinstate the old Saiddhantika theology as it had been formulated by Ramakantha, and quotes with approval profusely from Ramakantha's fine works of sastra, but he seems to have been a reactionary minority and was vilified by other saiddhantikas in particular for upholding the then heretical doctrine that the liberated soul became indentical to (as opposed to identical with) Siva (sivatulyatavada).

2.52 DREAD, WONDER AND MIRACLE A SAIVAITE PERSPECTIVE

Dr. R. Gopalakrishnan
University of Madras

In this paper an attempt has been made to elucidate the concepts of fear, wonder and miracle as experienced and envisaged by St. Manickavacakar. The contents of the hymns under these titles are not exoteric but esoteric in the sense that they require careful study, accurate analysis and deep understanding. Fear is a common phenomenon but the saint is seriously afraid of those who do not adhere to the path of saivism sincerely, though he is not afraid of those things which human beings are afraid of such as shake etc. As wonder he exclaims the gracious gesture of Lord Siva in taking him into His fold and uniting with fellowmen, who was wondering to taste earthly pleasures.

Usually miracle is a supernatural event performed by both god and god-men to reveal the nature of grace, but not to expose the accumulated power an egoity. In this context St. Manickavacakar expresses his gratitude to Lord Siva with a sense of wonder for bestowing His grace upon him and redeemed him from the empirical shackles. The lesson that we drive home from these decades is that as Saivites, let us be true to our religion, adhere to the disciplines ardently pray to Lord Siva to shower His benevolent grace and enjoy it abundantly.

2.53 BHAIRAVAM BASAVA AND LINGA CULTS AMONG THE KATTUNAYAKAN

Dr. Jakka parthasarathy
Uthagamandalam

Religion is a kind of human behaviour which can be classified as belief and ritual concerned with supernatural beings, powers and forces. Religion provides support and reinforcement for other social institutions in a society and legitimates it values and goals. In primitive tribal societies, religion is an animison which is the belief in spiritual beings. These spirits are the souls of people that continue after death or they many be spirits that dwell in animals or places or they may be free wandering beings. Revitalization movements to reinstate old social orders or to create new ones are often cast in a religious frame. These movements result from contact with a technologically superior societies.

This paper looks into the animistic beliefs and its passage to Saiva - Hindu cults among the Katgtunayakans, a scheduled tribe inhabiting at the foot hills of Nilgiri district in Tamilnadu. The Kattunayakans are identified as tree cave dweller, worshippers of animals and trees in the forest and the best musicians. Their belief system allowed them to worship their ancestral spirits in the form of Bhairava(Dog) and Basava (Bull). In the process of hill development, their forest settlements are now accessible to neighbouring Hindus, Christians and Muslims. Through their contact, the Kattunayakans accepted Saiva-Hindu-Linga worship which they argued is very nearer to their Bhairava and Basava cults. The study found that the nativistic movements of the Kattunayakans have reinstated their animistic order and created new ones in their religious frame. This new order is indentifying the Linga, a form of Shiva, under a tree and its worship for human and forest development, the study accepts that the innovative Saiva cult is contributing the cohesion are solidarity within the Kattunayakan society and provides support to their social institutions like family, marriage and kinship.

2.54 VAIKUNDASWAMI - A SOCIAL REVOLUTIONARY

T. Lakshmanan Nadar
Thiruvananthapuram

Sri. Vaikundaswami (1809 to 1851) was born in 1809 in Poovandanthop, Thamarakulam Village, Kannayakumari District. His father was Ponnu Nadar and his mother Vailalamma. Many wonders occured at the time of his birth. The parents and the villagers loved and adored the divine child.

During that period social injustice and apartheid attained its culminating point. Casteism was predominent in the society. The lower caste people were treated as slaves. There were traditional customers to de-humanise people belonging to backward communities. A low caste man or woman was not permitted to wear upper clothes. They were not hold umbrella. They should not wear chappals. They should not enter the temple etc. They were the main challenges he had to fight aganist.

His first name was Muthukutty. In AD 1833 he attained divinity. After that he has been known as Vaikundaswami.

After attaining Godhead Vaikundaswami concentrated his attention to eradicate the social apartheid and free mankind from all fetters of casteism. To achieve this goal he established a society called samatwasamajam. He preached the way of simple living and boosted the morale of the depressed people to fight for social justice.

Vaikundaswami was arrested and was put in jail . He was tortured but he could overcome all the inhuman treatment at the hands of upper caste authorities. Finally the king of Travancore had to relent and was released. Later on Vaikundaswami continued his social and spiritual work for the upiiftment of downtrodden people till his Mahasamadhi in 1851.

2.55 SIVA WORSHIP AMONG THE TRIBES

R. Murali ,
Tamil University

Man has been living on earth as a member of society or a group from time inmemorial. No one can say clearly when societies were formed in different parts of the world. Anthropologists and Sociologists and other have been doing research on the ways of life, traditions and customs, life-habits of these different groups of human society from time to time.

In course of time, each group or society evolved its own language and life - habits. These have become inseparable from their lives; chiefly, the languages they spoke and their traditions, have continued to exist with little or no change down the ages.

Some change owing to the impact of other groups upon them must have been unavoidable. However their individuality as a group or a tribe, could never be totally affected or lost.

Many groups of tribal people with varying customs life-habit and languages, continue to live in the forests and hill-tracts of Tamilnadu.

The purpose of this paper is to highlight the saivaite way of life and religious habits of the Kota tribals who live in Kuntha Kotagiri alone(not the other Kotas lving elsewhere). Their methods and modes of worshipping LordSiva, their annual celebrations of Sivarathri. The rituals undertaken by them during the festival, their habit and customs, the actual worship of the God, the garments and ornaments they wear during the worship , their offerings to the God during the worship from the subject-matter of this monograph. These have been gathered after a systematic study undertaken after my field work.

2.56 ROLE OF SAIVISM AMONG NILAGIRI TRIBAL COMMUNITIES

R. PERIALWAR
Tamil University

Nilagiri district is one of the smallest districts is Tamil Nadu. Nilagiri district is divided into two parts viz Nilagiri pleateau and wynad valley. Nilagiri pleateau consists of three taluks viz Udhagamandalam, Coonoor and Kotagiri. Wynad Valley consists of only one taluk viz. Gudalur. It is an abode of ten tribal communities. Out of ten tribal communities four of them are living in Nilagiri Pleateau. They are Todas, Kotas, Alukurumbas and Irulas. The remaining six tribal communities viz Paniyas, Mullukurumbas, Bettakurumbas, kattunayakas, Kasavas and Soligas are found in Wynad Valley.

Basically all tribal communities are animists. Once these ten tribal communities are alone found in the Nilagiri district. Later economically, socially and numerically dominated Non-tribal community namely Badaga community. After the migration of Badaga community Tamilians, Malayalees, Kannadigas and north Indians settled in Nilagiri district. Now-a-days all the tribal communities are worshiping small deities like Mariyamma, Kaliyamma and etc.

Saivasim is found in all the tribal communities of Nilagiri district. This may be a later religious development of acculturation due to the contact of Tamilians, Badagas, Kannadigas, Malayalees and others. The present author is going toexmine the influence of Saivism among Kotas, Alukurumbas and Irulas in his paper. Irulas have Rangasamy God cult. They worship Karamadai God Rangasamy of Rangasamy Bettu of Nilagiri District. God Rangasamy is a Vashnavite God.

2.57 SAIVISM AND THE 21 ST CENTURY

V. RAJAPPAN ASHOK KUMAR
Sultanate of Oman

In the evolution of mankind humanity has been witness to great religions from time immemorial.

My paper deals with the necessities of reviving or modernising saivaism, to deal with the socio - economic aspects of humanity in the 21st century. I am trying to focus on the imperativeness of modelling the saiva religion to be more people - oriented rather than only spiritual - oriented.

In the process, I recommend the setting up of a Saiva University of International Standard, to coordinate, plan, organise, and implement various programmes pertaining to saivism. The Saiva University will function as the nerve-centre in promoting the religion and its various activities.

I also recommend the setting up of an International Saiva Fund for the organisation and implementation of major programmes pertaining to saivism.

2.58 SAIVISM FOR UNIVERSAL BROTHERHOOD AND HUMAN UPLIFTMENT

Dr. A. Ramakrishnan
Palani

The Chosen disciple of Nandiswara from Kailash Thirumulanath thought it fit to renew the friendship with the very great Siddha sage Agatheswara of Southern Pothigal Hills of equally holy Divine Southern Kailash. On his way, out of pity for agonied herd of Cows entered into the body of Mula the Cow herds man who was found dead. By now Thirumula began to direct the Cows towards the native Village Sattanur in Thanjavur Dist. As his own body could not be restored, he could not but use the ordinary human body of Mula. Hence by resorting to Kaya Kalypa Sadhana, he had revitalised the

body so as to endure for all eternity.

And he has revealed Thirumantra Veda of 3000 verses which gives importance for Human body . In this sacred work

" If one gives to a Shrine of Human Construction,
That will not be of use for real human beings
If he were to do for the good of human welfare
Then it would also be of use for the Lord in the Shrine " 1857.

According to Tirumantra Veda

" The Human Body is the very form of Sivalinga
The Human Body is the very form of Chidambara
The Human Body is the very form of Sadasiva
The Human Body is the very form where the Lord Siva enacts the Divine Sports " 1726.

The Bliss I have got may also be the possession of the World.
The Real import of Veda of the very Heaven
The Mantra of Human Compassion, is Closely Connected with the Human body. Hence one

Begins to assert and developes so much love and Compassio for others - 85

Hence Thirumula Siddha a devotes of Saivism has contributed through 3000 holy versus to the Saivism by his lord outlook stressing the held for the Universal Bothhood and the human upliftment.

2.59 SAIVA RELIGION

S. Shanmugavel
Telecom, Tuticorin

Formation of World Apex Council

A person who accepts Sivalinga Worship as the Supreme Worship is considered to be a Saivite. "Let the glorious Saiva justice prevail all over the globe"

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக
உலகம் எல்லாம்

is the declared motto of Savism. In implementation of the said motto, a World Apex Council should function. All Saivite institutions/

Councils /Sabas-- whatever may be its label should affiliate themselves with the W.A.C.

Function of W.A.C

This council should not function like the Vatican Ecumenical Council or like the Bureaucratic administration.

(1) W.A.C should not interfere in the internal administration of N.A.C and the N.A.C. in turn. should not interfere in the affairs of State / District councils.

(2) W.A.C. should not support or oppose or criticise any school of thought/ religious rites within the mother Saiva Religion. In other words, the W.A.C. should not cherish what is called the 'odium theologicum'

(3) W.A.C. should maintain data about all Saivite forums etc. spreading over the world, the Saivite population in each country, Saivite religious faiths/different/peculiar religious rites observed.

(4) W.A.C. would give protection through appropriate forums to Saivite minorty in any country when being harassed for various reasons.

(5) W.A.C. may publish useful informatin booklets/episodes in Englishwhich may create an awareness among the Saivite students from Nursery School level.

(6) W.A.C. may prescribe minimum religious code of conduct that a Saivite should follow in life.

2.60 SAIVISM : A SOCIO- RELIGIOUS MOVEMENT

Dr. I. Singaram
Madurai Kamaraj University

The Saivism of Tamil Nadu is none of these and has not been any of these at any period in its history. It is not a ritual or superstition- ridden religion given to unclean ways of living and primitive practices. The saivism of the south, that is of Tamil Nadu, is a religion based on a higher philosophy of Truth and love. Known as the Saiva Siddhanta, if does not have any of the dutious practices of the other so called Saiva sects found in some other parts of India, in the by-

gone days. It has its own system of Metaphysics, its own system of philosophy and its own distinctive practices of formal religion which can yet be a model for all mankind. Other religions in South India sprouted in the remote past from a basic saivism which yet continuous to maintain its classical purity through several millennia.

The great virtue about the saiva religion is that it has the greatest volume of philosophical and religous literature in the language of its people of Tamil. Saivism is not a mere religion with age old beliefs and practices, it is not more worship ; it is not any abstract philosophy it has been all these and moral it was and is a way of life. That Saivism has been a way of life is a statement which requires the greatest reverence and attention. The Tamil Language possesses the greatest volume of devotional songs which have not been equalled by any other language in the world both in depth and in volume. Those songs belongs to the two sects Saivism and Vasihnavism.

The paper attempts to focus on the important aspects like Saiva worship, Saiva rituals and Saiva ethics.

2.61 SAIVISM: THE IMPREGNABLE FORCE

Mr. SRIDHARAN
Mahe, Seychelles

It is highly admirable to note that Savism not only survived through the centuries but had propagated to other parts of the world. The Duality concept of man and God as different or Prakriti and Parama Brahman are different as opposed to Advaita of Vaishnavism poses an interesting scenario for Indians in particular since both form part of Hinduism having ancient roots. Both have scriptures, devotional literature, puranas and ritualistic mantras/prayers that have become part of day to day life of Hindus. Saivism has deep roots in South India though the Supreme Lord Siva's abode traditionally believed to be in Kailash Mount in Himalayas (this Kailash Mountain also is different to the Great Kailash the Ultimate Abode of Siva as per Skanda Purana!) and also the famous shrine of Kasi is in the North.

The Dravidians in South India took to Saivism which spread through travellers, traders accross the sea and later through migratory labour force to other parts of the world in Indian and Pacific oceans. The Ariyans a dominant force in the North seem to have embraced Vaishnavism and along with Saivism took the onslaught of other religions like Islam, Budhism , Jainism and Christianity. The face that the three kingdoms of the South like Chera, Chola and Pandiya were not challenged for long by the major ruling kingdoms gave the opportunity for Savism to flourish in the South.However the Tamil Devotional Literature has many instances of other religions like Jainism trying to make in roads unsuccessfully despite some patronage by the then rulers. Unlike the Vaishnavism that has Two mighty Epics in Ramayana and Mahabhartha (strong potent forces to engulf the majority of population inthe North in Advaita Philosophy) Saivism does not have that head start yet the rich contributions from Thirumoolar, Arunagirinathar, Nakkeerar, the Four Samaya Kuravars, Auvvaayaar, Pamban Swamigal and Vallalar Thiru Ramalinga Swamigal to cite a few have contributed tremendously cupled with regular addition of Siva temples helped the Saivism dominate the scene. The Divine literature from the Saints cited above have been from real life experiences that cannot be disputed. Survival of Saivism has been more resilient despite the known fact that Saiva Siddhantham is not that easy to grasp.

2.62 CONTRIBUTION OF TAMILNADU TO SAIVISM

Dr. C.S. Sundaram
Emeritus Professor , Chennai

Saivism has a strong hold in Tamilnadu since very early times, The Nayanmars contributed richly to the growth of this religion through their psalms, dripping with the honey of Bhakti.

The two great Philosophers Sankara and Ramanuja refer to the followers of this religion. Several tracts both in Sanskrit and Tamil expounding the religious tenets and philosophical concepts were composed between the 10th century and 18th centuries. Even kavyas and natakas based upon the heroic deeds of Lord Siva and the beliefs

and practices of Saivities were composed. Innumerable stotras, abounding in the thoughts of this school were also written. The lives of Nayanmars also formed the theme for some of the poems.

There were royal patronage of the school of Saivism. The Pallava, pandya and Chola rulers wher not only ardent supporters of this religion but some of them got converted to this, setting aside the religion followed by them earlier. The inscriptions also bear evidence to the construction and patonage of Siva Temples as also to the several endowments made by these kings . Thus Saivism has a strong foot-hold in Tamilnadu by the Saint singers and religious leaders and also through royal patronage.

Apart from these there was also the development of several sects of Saivism as Pasupatas, Kapalikas, Karunika Siddhantins and Mahesvaras.

Among the prominent figures who wrote treatises in Sanskrit in the field of Saivism are Srikantha Sivacarya (10 th cent A.D.) Haradatta (C.1110 A.D.) Umapati Sivacarya (14th cent.) , Aghora Sivacarya (of 11th cent) , Jnanasambhu who wrote the Sivapujastava, Nigamajnanasambhu, Arunadeva, Sivagrayogi (16th cent.) Appayya Diksita and Nilakantha Diksita, (16th 17th Cent.) Maraijnana Desika, Sarvatmasambhu, Krsnananda Sarasvati and others.

A few works of these authors will be taken up for the present paper.

2.63 PLACE ACCORDED TO RELIGION IN THE EDUCATIONAL CURRICULUM OF SRI LANKA

R. Yoganathan
Sri Lanka

1. Historical Background

1.1 British period

During the British peirod educations was the sole responsibility of the Church. Schools were managed by a Commission headed by the Anglican Bishop. With the establishment of a Department of

Public Instruction a layman was appointed to head this institution.

1.2 Religious Revival

The latter half of the 19th Century was makred by the development of intense religious feeling. The Buddhist Theosophical Society, the Mahabodhi Society and the Saiva Paripalana Sabhai were formed during this time which accelerated the process of establishment of Assisted Schools

1.3 Education Ordinance of 1920 , and Educational Commission of 1929

Where by children were allowed to study the religion of the parents and emphasized the neutral stand of the State.

1.4 Donoughmore Constitution of 1931

For the first time an elected Minister of Education was appointed. Ordinance No. 31 of 1939 helped to bring about a National System of Education. The Special Committee on Education of 1943 recommended that State Schools should exist side by side with Denominational Schools

1.5 Education (Amendment) Ordinance No. 26 of 1947

If provided for the introduction of religion into the curriculum of State Schools. More and more children were now getting the opprotunity of learning the religion of their parents.

1.6 Assisted Schools and Training Colleges (Special Provisions) Act No. 5 of 1960

This act provided for the taking over of all Assisted Schools by the State which hitherto had received grants from the State.

2. Need for Religious Education

The justification for Religious Education is the development of an all round personality in an individual. It is all the more so in the context of a multi-religious and multi-racial society such as Sri Lanka and

3. The Ministry of Education and Higher Education seek to

implement these enactments through

i. formualtion of syllabi and course guides

ii. the text books for use are approved by an Advisory Committee.

4. Policy Options for the Future

4.1 More emphasis to be paid to practice of religion as against academic knowledge and examination.

4.2 Strengthening the students moral character through value and spiritual oriented approach.

4.3 Adequately trained Cadre of teachers.

4.4 Close supervision and evaluation

4.5 Creation of proper religious environment such as temple, shrine room in the school

4.6 Active participation of parents and the community.

அமர்வு மூன்று

சைவ நூல்கள்

3.1 வானரவீர மதுரைப் புராணம்

முனைவர் சி. இலட்சமணன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

வானரவீர மதுரை என்னும் தலம், மதுரைக்குக் கிழக்கே இரண்டு காத தூரத்தில், வைகை நதியின் மேற்கரையில் அமைந்துள்ளது. இத்தலம் வாணாதிராயர்களின் ஆட்சியில் இருந்தமையால் வாணாதிராய மதுரை எனப் பெயர் பெற்றிருந்தது. பின்னர் வாணராய மதுரை என்றும் வாணர மதுரை என்றும் வழங்கப்பெற்று மானாமதுரை என மருவி வழங்குகிறது.

வானரவீர மதுரையின் சிறப்புகளைக் கூறும் வகையில் இப்புராணம் அமைந்துள்ளது. இந்நூலில் 12 சருக்கங்களும் 500 பாடல்களும் உள்ளன. காளையார் கோவிலுக்குக் கோபுரம் அமைத்துக் கொடுத்துத் தேரும் செய்தளித்த மருதுபூபன் கேட்டுக்கொண்டதற்கிணங்க இப்புராணம் பாடப்பட்டதாகும். வடமொழி வாயுசங் கிதையின் மொழிபெயர்ப்பு என்றும் கூறுவர்.

இப்புராணத்தின் ஒரு பிரதி மட்டும் ஓலைச்சுவடி நிலையில் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் இருந்தது. இச்சுவடியைத் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை 1981இல் சுவடிப் பதிப்பாக வெளியிட்டுள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் அரங்க. சீனிவாசன் என்பவராவார்.

இந்நூல் சருக்கங்களுள் சந்திரன் கயம் தீர்த்தது. தூலகன்னன் சாயுச்சியம் பெற்றது, உக்கிர பாண்டின் பூசை, இராமன் கதை மற்றும் வானரத்தின் கதை, சிவபுண்ணியம் உரைத்தது, வாதவூர் அடிகள் பூசை, ஆனந்தன் முத்தி, அர்ச்சனை போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும்.

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த மதுரை தெய்வ சிகாமணி மகனார் சுப்பிரமணியம் என்பவர் இந்நூலை இயற்றியவராவார். இவர் தமிழ் இலக்கிய இலக்கண்ப் பயிற்சி மிக்கவர். சிறந்த சிவபக்திச் செல்வர். சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஆழ்ந்து கற்றவர். எத்தகைய நுட்பமான கருத்துக்களையும் எளிமையாகக் கூறும் ஆற்றல் பெற்றவர். சிவனடியார்கள் மீது பேரன்பு கொண்டவர். சிவபூசையில் மிக்க ஆர்வமுடையவர்.

இந்நூலில் பொதிந்து கிடக்கும் சைவ சமயச் சிந்தனைகளை விளக்க முற்படுவதே இவ் ஆய்வுரையின் நோக்கமாகும்.

3.2 இதழ்களில் சைவச் சுவடிப்பதிப்பு நூல்கள்

மோ.கோ.கோவைமணி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலந் தொடங்கி இன்றுவரை பல தமிழ் இதழ்களில் (மாத இதழ், காலாண்டிதழ், அரையாண்டிதழ், ஆண்டிதழ்) சுவடிப்பதிப்புநூல்கள் முழுமையாகவும் பகுதி பகுதியாகவும் வெளியாகியுள்ளன. பல்வேறு பொருள் கொண்ட நூல்கள் இவ்விதமான இதழ்களில் வெளியாயின. இவற்றில் முக்கிய இடம்பிடித்தது சமய நூல்களே. சமய நூல்களில் சைவ நூல்களே பெரும்பான்மை இடம்பெற்றுள்ளன.

இச்சைவ சமய நூல்கள் சிவனைப் பற்றியும் சிவனடியாரைப் பற்றியும் விளக்குவனவாக அமைந்துள்ளன. இறைவனையும் அடியாரையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் அமைந்த ' இருபுராண விருத்தம் என்னும் பெயரில் அமைந்த நூலை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். மேலும், இறைவனைப் பற்றியும், இறைத்தொண்டர்களைப் பற்றியும் புராணங்களும் சிற்றிலக்கியங்களும் பதிகங்களும் தனிப்பாடல்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

அந்நூல்கள் எவையெவை? என்ன நோக்கத்திற்காக அந்நூல்கள் இதழ்களில் வெளியிடப்பெற்றன? இதழ்களில் வெளியிடப்பெற்ற சைவ நூல்களில் தனி நூல்களாக வெளியிடப்பெற்றவை எவையெவை ? வெளியிடப்பெறாத நூல்கள் எவையெவை? இதழ்களில் வெளியிடப்பெற்றதனால் நூலும் மக்களும் பெற்ற பயன் என்ன? இதழ்களில் நூல் வெளியிடப்பெற்றது சரியா? அதற்கான காரணங்கள் இன்னோரன்ன பிறவற்றையும் இக்கட்டுரை ஆய்வு செய்ய முற்படுகிறது.

3.3 மனதற்ற பரிசுத்த நிலை

இரா. சத்தியமூர்த்தி
தலைமையாசிரியர் , புதுக்கோட்டை

மெய்ப்பொருளை உணர்வதே மனிதப் பிறவியின் நோக்கம். இப்பேருண்மையை எல்லா ஞானிகளும் போதித்துள்ளனர். சிவம் என்னும் செம்பொருளை உணர்ந்து வாழும் வாழ்வே மெய் வாழ்வாகும். அதன் விளைவாகப் பேரின்பம் கிட்டுகிறது. இதற்காகவே இவ்வுலகம் படைக்கப்

பட்டுள்ளது. பேரின்பப் பெரு வெளியை அனுபவிக்க மனதற்ற பரிசுத்த நிலைவாய்க்க வேண்டும். இக்கருத்தினைப் பல சைவ நூல்களின் வழி நின்று இக்கட்டுரை விளக்குகிறது.

It is only when the totality of the mind is still, that the creative, the nameless comes into being - J.Krishnamurthy.

3.4 ஞானவுலாவில் உயிர் மேம்பாடு

திருமதி சு. சந்திரா
மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி

'' கார் கொண்ட கழறிற்றறிவார்'' எனப்படுபவர் சேரமான் பெருமாள்நாயனார். சேர அரசர்களுள் ஒருவர்; சுந்தரர் காலத்தவர். அவர் அருளிய நூல்கள் மூன்று: 1.பொன் வண்ணத்தந்தாதி , 2. திருவாரூர் மும் மணிக்கோவை , 3. திருக்கயிலாய ஞானவுலா

இந்நூல்கள் '' பிரபந்தமாலை '' எனப்படும் பதினோராம் திருமுறையில் இடம் பெறுகின்றன.

சுந்தரரோடு கைலை சென்ற சேரமான் பெருமாள் நாயனார் இறைவன் திருமுன்பு அரங்கேற்றிய நூல் ஞானவுலா. இவ்வுலா நூலே இங்கு ஆய்வுப்பொருளாகின்றது.

முதனிலையில் பதியாம் சிவபெருமானின் பரத்துவமும் அவரது அலங்காரங்களும், தெய்வச் சின்னங்களும், தேவர்களும் புடைசூழப் பல்லியம் முழங்க இறைவன் உலாவரும் மாட்சியும் சித்திரிக்கப்படுகின்றன.

''பின்னெழுநிலை '' என்ற பிற்பகுதியில் பேதை முதலாய எழுபருவப் பெண்டிரும் இறைவன் மீது காதல் கொள்ளும் நிலைகள் இடம் பெறுகின்றன.

இறைவன் தலைவனாகவும், அவனருளை விரும்பிய மன்னுயிர்கள் அத்தலைவன்பாற் காதல் கொண்டு மயங்கிய பெண்களாகவும் வைத்துப் பாடப் பெற்றது ஞானவுலா.

அவ்வழி இறைவனை அடைய முற்படும் உயிர்மேம்பாடு பருவ முதிர்ச்சியடையும் மகளிர் வழி விளக்கம் பெறுகின்றது என்பது இந்த ஆய்வுக் கட்டுரையின் செல் நெறியாகும்.

3.5 தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் சைவ சமயத் தாக்கம்

முனைவர் மு. சற்குணவதி
சென்னைப் பல்கலைக்கழகம்

மனித வாழ்க்கையில் ஊடுருவுகின்ற நிகழ்ச்சிகளின் தாக்கத்தால் எழுகின்ற பல்வேறு உணர்ச்சிகளும் சிந்தனைகளும் தான் பல முறைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. அப்படிப்பட்ட முறைகளில் உழைக்கும் மக்களின் வெளியீட்டு வடிவமாக நாட்டுப்புறப்பாடல்கள் திகழ்கின்றன. அவ்வாறு உருவாகும் பாடல்கள் வாய்மொழி மூலம் பரவுகின்றன. கதைப் பாடல்கள் தவிர மற்றப் பாடல்கள் நாட்டுப்புற வாழ்க்கையின் அன்றாட சம்பவங்களையே பொருளாகக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கையின் சம்பவங்களான பிறப்பு, குழந்தைப்பருவ நிகழ்ச்சிகள், காதல், திருமணம், குடும்ப நிகழ்ச்சிகள், தொழில் முதலியன யாவும் நாட்டுப் பாடல்களின் பொருள்களாக அமைந்துள்ளளமையையும் காணமுடிகின்றது. அத்தகைய பொருள்கள் குறித்துச் செய்திகள், விளக்கங்கள், நுட்பங்கள் யாவும் எளிய வெளியீட்டமைப்பில் நாட்டுப்புறப் பாடல்களாக வலம் வந்து பல தரப்பு மக்களையும் ஈர்ப்பதாக இருப்பதையும் காணமுடிகிறது.

இத்தகைய சைவ சமயம் பற்றிய செய்திகளும், சைவ சமயத் தத்துவங்களும் முழுமையாக நாட்டுப்புறப் பாடல்களில் தென்படவில்லை என்றாலும் சைவ சமயத் தத்துவக் குறிப்புகளைக் காண முடிகின்றது. தங்கள் பாடலின் சிறப்புக்களைத் தாங்களே உணராத நாட்டுப்புற மக்கள் இக்கருத்துக்களையும் உள்ளடக்கிப் பாடியுள்ளமையையும் அறியமுடிகிறது.

சைவ சமயத் தாக்கம் நாட்டுப்புறப் பாடல்களிலும் ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். சைவ சமயம் என்ற ஒன்றைப் பகுத்தறிய இயலாத நிலையில் நாட்டுப்புற மக்கள் இருந்தாலும் அவர்களிடமும் இயல்பாகச் சைவ சமயத்தின் தாக்கம் வாழ்வியலின் பல கூறுகளிலும் ஏற்பட்டுள்ளது எனலாம்.

3.6 தஞ்சை சரசுவதி மகாலில் மராத்தியர் காலச் சைவ நூல்கள்

ம.சீராளன்
சரசுவதி மகால் நூலகம் , தஞ்சாவூர்

தஞ்சையை ஆட்சி செய்த மராத்திய மன்னர்கள் (கி.பி. 1676 - 1855) பல அரும் பணிகளைச் செய்துள்ளனர். 'சைவத்தின் மேல் சமயமில்லை' என்பதை நன்குணர்ந்த இம்மன்னர்கள் சிறந்த சிவ பக்தர்களாக விளங்கினர். பல சைவ சமய நூல்கள் தோன்ற ஊக்கமளித்தனர். பல அரிய நூல்களைப் பேணிக்காத்தனர். அந்நூல்களை தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் ஓலைச் சுவடிகளிலும் காகிதங்களிலும் பல மொழிகளில் எழுதி வைத்துள்ளனர்.

இரண்டாம் சரபோசி மன்னர் (கி.பி.1798 - 1832) தம் ஆட்சியாண்டில் தஞ்சை அரண்மனையில் பல புலவர்களைத் தம் அவையில் அமர்த்திப் பல சைவ நூல்களை எழுதச் செய்தார். காசி வரை யாத்திரை சென்று பிறமொழி சைவ நூல்களையும் சேகரித்து வந்தார். பிற மொழி நூல்களை மொழி பெயர்ப்புச் செய்தார். தமது அச்சுக் கூடத்தில் சைவ நூல்களை அச்சிட்டுள்ளார்.

இந்நூல் பற்றிய விவரங்களைச் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடிகளின் விவரப்பட்டிகளும் , அச்சு நூல் பட்டிகளும் கூறுகின்றன. பழைய நூல்களும் காணக்கிடைக்கின்றன. தஞ்சை அரசு ஆவணங்கள் (Tanjore Raj Records) எனப்படும் மராத்தியர் கால மோடித் தமிழாக்கத் தொகுதிகளிலும் சைவ நூல் பற்றிய குறிப்புகள் உள்ளன. மேலும் பல ஆய்வு நூல்களின் துணைக்கொண்டு இக்கட்டுரை அமைக்கப்பெறும் .

3.7 சித்த வேதம் - என்ற மோட்ச சூத்திரம்

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
தமிழ்ர்

சித்த சமாஜ நிறுவனர் சுவாமி சிவானந்த பரமஹம்சர் 1922-ல் மலையாள மொழியில் முதலில் எழுதி வெளியிட்டார். 1928-ல் தமிழில் வெளியிடப் பெற்றது. 1934-ல் கன்னட மொழியில் வெளிவந்தது. 1941-ல் தெலுங்கு மொழியில் வெளியிடப்பெற்றது. பின்பு, இந்தியிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப் பெற்றுள்ளது. ஆறு மொழிகளில் பல

பதிப்புகளைக் கண்டுள்ளது சித்தவேதம்.

தமிழில் இதுவரை 1928, 1948, 1972, 1978 , 1991 ஆக ஐந்து பதிப்புகள் வந்துள்ளன.

அடிப்படைத் தத்துவம், ஜீவன் சிவனாகும் என்பது இந்தப் பயிற்சிக்குப் பெயர் சித்த வித்தை. இதைக் கற்றவன் சித்த வித்தியார்த்தி ஆகிறான். சீவனே இறைவன் என்றும், சிரசே கோவில் என்றும் சித்த வித்தைப் பயிற்சியாகிய பிராணாயாம முறையே இறைவழிபாடு என்றும் சுவாமிகள் கூறுகிறார்.

மனம் தான் குரு. மனம் ஜீவனில் ஒன்றி ஜீவன் மூலஸ்தானமாகிய இருதயமாம் புருவமமையத்தில் அசையாமல் நிலைத்து நிற்கின்றது. ஒன்றாகிக் கலந்து தன்மயமாகும் போது அற்புத அனுபவங்கள் ஏற்படுகின்றன.

நமது ஜீவன், ஏழு வாயில்கள் மூலம் அழிவுறுவதைத் தடுத்து நிறுத்தி, சிரசின் கலசத்தில் குதம் வழியாக மேல்கதிபெறப் பயிற்சி ஏக கதியாக்கித் தன் பிறப்பிடமாம் புருவமையத்தில் ஒடுங்கச் செய்வதே இறை வழிபாடு. அதுவே சித்த வித்தைப் பயிற்சி பிராணாயாமம்.

கண்களும், செவிகளும் நான்கு கோபுர வாசல்கள், அவற்றைக் கடந்து சுற்றம் பலம் என்று கூறப்படும் வாயினுட் செல்ல மூன்று வாசல்கள்உள்ளன. அவை மூக்குத்தூவரங்களும் வாய் வழியுமாகும்.

‘ குதம் ‘ என்பது மூக்குத்தூவரங்களும், அண்ணாக்குத் தூவரங்களும் சேர்கின்ற புருவமையத்தின் நேர் கீழ் உள்ள பகுதியைக் குறிப்பிடுகிறோம். குதம் எனில் கோவினைத் தானம் செய்து கோ-ஒலி, ஒளி மயமான இறைவன் சலிக்கப்பெற்று, ஒலி வடிவாகி வாயுவாய், ஜீவனாய் வெளியே வரவும், உள்ளே திரும்பிச் செல்லவும் ஒன்று கூடும் இடமே குதமாகும்.

இப்போது ஜீவன் உள்ளும் வெளியும் சென்று நாசமடையாமல், குதத்திலிருந்து நேர்மேல் சென்று கர்ப்பக்கிரகத்தை அடைந்து ‘ தான் ‘ இறைவனோடு இரண்டறக் கலந்து சோதிமயமாகிறது.

3.8 சிலம்பில் சைவக் கடவுளர்கள்

முனைவர் ந. சுப்பிரமணியன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சிலப்பதிகாரம் சமணம் சார்ந்த காப்பியம் . இருப்பினும் அகச்சமயக் காழ்ப்பு அக்காப்பியத்துள் காணப்படவில்லை. சமணம் செல்வாக்குப்

பெற்ற காலத்தில் தோன்றிய காப்பியமானாலும் அகச்சமயம் பற்றிய செய்திகளும் ,அகச் சமயக் கடவுளர் பற்றிய குறிப்புகளும் இதனுள் பரவலாகக் காணப்படுகின்றன. வைணவக் கடவுளாகிய திருமால் பற்றிய குறிப்புகளோடு சைவக் கடவுளர்களாகிய சிவபெருமான்,முருகன் , கொற்றவை ஆகியோரைப் பற்றிய செய்திகளும் உருவநிலையிலேயும் வழிபாட்டு நிலையிலேயும் காணப்படுதல் சிததனைக் குரியதாகும்.

சங்கப் பாடல்களில் காணப்பட்டதைப் போல ,இறைவனின் பெயர்நிலை ஆட்சி சிலம்பிலும் அவ்வண்ணமே அமைந்துள்ளது. முருகனைப்பற்றிப் புராணக் கூறுகளை உள்ளடக்கிய நிலையில் சுட்டப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அறுபடைவீடு என்ற கருத்தாளுமை சிலம்பில் செய்திகள் சுட்டப்படவில்லை. முருகன் , கொற்றவை பற்றிய செய்திகளில் முழுவதும் வழிபாட்டுநிலைக் குறிப்புகள் பொதிந்துள்ளன. இது கௌமாரமும் சாக்தமும் வழிபாட்டு நிலைச் சமயநிலை அளவிற்கு வளர்ந்ததைச் சுட்டுகின்றது.

இப்பொருண்மைகள் , இக்கட்டுரையில் ஆய்ந்து கூறப் பட்டுள்ளன.

3.9 திருமுருகாற்றுப்படை காட்டும் தமிழர் வாழ்வியல்

முனைவர் பெ. சுப்பிரமணியன்
அ.வீரையா வாண்டையார் நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி

முன்னுரை

சங்க இலக்கியங்களின் தொன்மை - பத்துப்பாட்டின் முதற்பாடல் - முருகாற்றுப் படை ஆசிரியர் மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரர் - தமிழர் வாழ்வியலில் சமயம் இயைந்த நிலை - இயற்கையோடு இயைந்த வாழ்வியல் முறை இந்நூலில் இடம் பெற்றுள்ளமை.

திருமுருகாற்றுப்படை அமைப்பு

நூல் அமைப்பு - முருகப்பெருமான் எழுந்தருளிய இடங்கள் - நூலின் தொடக்கம் - முடிவு பிற - நூலின் பெயர்க்ககாரணம் - ஏனைய ஆற்றுப்படைகளுக்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை.

தமிழர் தம் வாழ்வியலில் சமயம்

'சமயம்' விளக்கம் - சமயம் வாழ்வியலுடன் இயைந்தது - தமிழர்

தம் வழிபாட்டு முறைகள் - தொல்காப்பிய நிலத்தெய்வங்கள் - சேயோன் மேயமை வரை உலகம் - சிவவழிபாடும் முருக வழிபாடும் - சங்க இலக்கியங்களில் முருகன் - முருக வழிபாட்டை உணர்த்தும் முதல் நூல் முருகாற்றுப்படை.

நூலின் செய்தி

திருப்பரங்குன்றம் : முருகன் தோற்றம் - சூரமகளிர் தோற்றம் - அவர்கள் ஆடும் சோலை - பேய்மகள் ஆடும் துணங்கைக் கூத்து - செவ்வேள் சிறப்பும்

திருச்சீரலைவாய் : முருகன் செயல்கள் - முருகனது ஆறு முகங்களின் செயல்கள் - அவனது பன்னிருகைகளின் செயல்கள் - சிறப்பு.

முருகனைப் பற்றிய புராணச் செய்திகள்

கந்தபுராணம் போன்றவற்றில் முருகன் பிறப்பு பற்றிச் சொல்லப்படும் கருத்து - முருகாற்றுப்படை முதலான சங்க இலக்கியங்கள் கூறும் கருத்து.

முருகனை வழிபடும் முறைகள்

அந்தணர்கள் வேத அடிப்படையில் செய்யும் பூசனை பாமர மக்கள் - குறிஞ்சிநிலத்து மக்கள் தங்கள் விருப்ப உணவுப் பொருள்களைப்படைத்துப் பலியிட்டு வழிபடும் முறை பிற.

தமிழர் வாழ்வியல் வளத்திற்குத் திருமுருகாற்றுப்படையின் பங்கு

குறிஞ்சிநில மக்கள் வாழ்வு - குறிஞ்சிக் கிழவோன் - மலைநிலக் கடவுள் - அருள்பெற வெறியாடும் முறை - குறிஞ்சிக்குரிய யாழ் ,பறை , முதலான இசைக்கருவிகள் - ஆடல், பாடல் முதலான கலைகள் - பழக்கவழக்கங்கள் - நம்பிக்கைகள் - விழாக்கள் பிற.

திருமுருகாற்றுப்படைகாட்டும் உயர் குறிக்கோள்

மனிதமனம் செம்மைப்படுதல் - முருகன் திருவடிப்பேறாகிய வீடு அடைய வழிகாட்டுதல் ஆகியன.

முடிவுரை

திருமுருகாற்றுப்படையின் வழிப் புலனாகும் தமிழர் வாழ்வியல் உண்மைகள்.

3.10 யாழ்ப்பாணத்துக் கந்தபுராணம்

செல்வி. செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் கந்தபுராணத்தினை வழிபாட்டு நூலாகவும் வாழ வழிகாட்டும் நூலாகவும் பேணி வருகின்றனர். நொந்த உள்ளத்திற்கு ஆறுதலளிப்பது கந்தபுராணம் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்து மக்கள். கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் '' நோய்நீக்கம், செல்வம் , புத்திரபாக்கியம், சத்துருஜெயம், இராஜவசியம் முதலிய பயன்களைத் தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அனுபவத்தினால் நிச்சயிக்கப்பட்ட விசயம். இது சத்தியம் சத்தியம் முக்காலும் சத்தியம்'' என்று ஆறுமுகநாவலர் குறிப்பிடுகின்றார். ஆறுமுகநாவலரது கூற்று யாழ்ப்பாணத்து ஆண்கள், பெண்கள் என்ற இருபாலாரிடையேயும் ஊறிய ஒன்றாகவே அமைந்துள்ளது. சைவர்கள் வாழும் பகுதிகளிலே கந்தபுராண படனம் சிறப்புற்று விளங்கிய பிரதேசம் யாழ்ப்பாணமேயாகும். புராண படனம் எவ்வாறு செய்யவேண்டும் என்ற விதியினை ஆறுமுகநாவலர் எடுத்துக் காட்டியுள்ளார். புராணபடன மரபு யாழ்ப்பாணத்துக்கே உரியது. இத்தகைய மரபு யாழ்ப்பாணத்தில் ஐந்நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே பயிலப்பட்டு வருகின்றது.

இங்குள்ள பள்ளிகள், பல்கலைக்கழகம் ஆகியவற்றிலே பாடநூலாக இது படிக்கப்படுகின்றது. உயர்பட்ட ஆய்வுக்கு இந்நூல் நுண்ணாய்வு செய்யப் பட்டுள்ளது. இவைபற்றிய விரிவான தகவல்கள் இக்கட்டுரையிலே தரப்படவுள்ளன.

''யாழ்ப்பாணத்தவருடைய கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம்'' என்று இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை தன்னுடைய கந்தபுராணக் கலாசாரம் என்னும் நூலிலே குறிப்பிட்டுச் சென்றுள்ளார். இதன் பொருத்தப்பாடு இக்கட்டுரையிலே விரிவாக ஆராயப்படவுள்ளது.

கந்தபுராணத் தொடர்பால் முருகன் கோயில்கள் பெருவாரியாக யாழ்ப்பாணத்தில் எழுந்தனவா அல்லது பெருந்தொகையான முருகன் கோயில்கள் இருந்தமையால் கந்தபுராணம் மக்களிடையே பரவலாகியதா என்பது பற்றியும் ஆராயப்படும். இவ்விடத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முருகன் கோயில் தொடர்பான இலக்கிய வெளியீடுகள் குறிப்பிடப்படும்.

கந்தபுராணம் தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கே தனித்துவமான சில நடைமுறைகள், நம்பிக்கைகள், உரை மரபு, மொழிப் பிரயோகங்கள், நாட்டார் வழக்காற்றியல்புகள் ஆகியன இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப் படவுள்ளன.

3.11 ஞானச் சிறப்பும் ஞானாமிர்தமும்

ஐ. செல்வராஜ்
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயக் கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர்

பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களுள் பசு பாசத்தை விட்டு நீங்கிப் பதியை அடையும் நெறியைச்சித்தாந்த நூல்கள் விளக்குகின்றன. வாகீச முனிவரால் எழுதப்பட்ட 'ஞானாமிர்தம்' , சித்தாந்த நூல்களுள் காலத்தால் முற்பட்டது. இந்நூல் சரியை , கிரியை ,யோகம் , ஞானம் என்னும் நான்கு பாதங்களை உடையது ; ஆனால் ஞான பாதம் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நூல் சொற்செறிவுடன் அமைந்த எழுபத்தைந்து அகவற்பாக்களை உடையது. இதனுள் பாயிரம் முதல் பாசமோசனம் முடிய ஒன்பது இயல்கள் உள்ளன. இவற்றுள் ஞானத்திற்குச் சிறப்பிடம் தரப்பட்டிருப்பதை உணர முடிகின்றது.

சித்தாந்தம் கூறும் ஞானம் என்பது 'ஆன்மா அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு இறையடியைச் சேரவைக்கும் உண்மைச் சாதன அறிவாகும்.' ஞானம் , அஞ்ஞானக் கடலிலிருந்து தோன்றும் (ஞானா. 6 : 26-28) என்று ஞானாமிர்தம் கூறுகின்றது. அஞ்ஞானத்திலிருந்து ஞானம் தோன்றுமெனில் , 'இல்லது தோன்றா' (ஞானா.22) என்னும் சத்காரியவாதத்திற்கு முரணாய் முடியும் . எனவே விறகும் தீயும் போல அஞ்ஞானமும் ஞானமும் ஆன்மாவுடன் கலந்தே உள்ளன (ஞானா 70) எனலாம். ஞானம் ,அஞ்ஞானக் கடலிலிருந்து பிரிந்து (ஞானா.6) : அஞ்ஞானத்தைச் சுட்டெரித்தும் (ஞானா.70) தோன்றும். அஞ்ஞானத்தைச் சுட்டெரித்துத் தோன்றும் ஞானம் ஞானியர்க்கு உரியதாகக் (ஞானா. 45:8 - 10) கருதலாம்.

ஆன்மாவிற்கு ஞானம் தோன்றத், தீட்சை இன்றியமையாதது (ஞானா .70) தீட்சையும் நல்வினையே ஆகும் (ஞானா.73:4). தீட்சையைத் தருபவர்கள் ஞானியர்களே. அவர்கள் பிறப்பு அற எறியும் அறப்போர் வாழ்க்கையர் (ஞானா. 5:9-10). அவர்கள் அந்தரங்க சுத்தியும் வேறுபாடும் உடையவர்கள் (ஞானா .43) கன்ம விடயங்கள் அவர்களைப் பாதிக்காது (ஞானா.44:13-16 ; 46:20-21 ; 51). ஞானியரின் உபதேசம் பக்குவ ஆன்மாவிற்கு நன்மையும் ,அபக்குவ ஆன்மாவிற்குக் குற்றமும் தரவல்லன (ஞானா. 49).

ஆன்மாவின் நல்வினை தீவினை ஆகிய இரண்டுமே பிறவியைத்தரும். மனம் ,வாக்கு ,காயங்களால் நாற்பத்து நான்கு நல்வினைகளைச் செய்து (ஞானா.24) ஆன்மா பக்குவமுறும். ஞானியரின் உபதேசம் பக்குவ ஆன்மாக்களின் கன்மங்களைச் சிதைத்து முக்தியை

எய்துவிக்கும். இவற்றின் விரிவைக் கட்டுரையில் காணலாம்.

3.12 திருமுருகாற்றுப்படை - ஓர் ஆய்வு

முனைவர் P. ஞானம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாட்டின் இயல்புகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது .தொல்காப்பியர் காலம் தொட்டுச் சிவ வழிபாடு வளர்ந்த விதத்தை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது. திருமுருகாற்றுப்படையின் சிறப்பும் பெருமையும் என்ற தலைப்பு திருமுருகாற்றுப் படை திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது. திருமுருகாற்றுப் படையில் முருகவழிபாடு பற்றிய நுணுக்கமான செய்திகளைச் சைவ சமயக் குரவர்களின் கருத்துக்களோடு இணைத்து ஆய்வு செய்கிறது. திருமுருகாற்றுப் படையினை ஓதுவதால் ஏற்படும் பயன்களை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

3.13 பெரியபுராணம் (ஒரு வகைதொகைப்படுத்தம்)

பேராசிரியர் டாக்டர் தாயம்மாள் அறவாணன்
சி. கந்தசாமி மகளிர் கல்லூரி, கடலூர்

சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் தொடர்ந்து சைவர்களால் போற்றப்பட்டு வருகிறது. சைவ சமய வராலற்றிலும் தமிழ்ச் சமுதாய வரலாற்றிலும் ஒரு திருப்பு முனையாகத் திகழுகிறது. இந்நூலை வகை தொகைப்படுத்தி அட்டவணை மூலமாக எளிமைப்படுத்திக் காட்டுகிறது இக்கட்டுரை . இவ்வகை தொகைக்கு அறிஞர் சிலர் பதிப்பித்த பெரியபுராணப் பதிப்புகளும் ,ஆய்வுரைகளும் துணையாக இருந்தன. 63 நாயன்மார்கள் பெயர்கள் அகரவரிசை , பாடல் தொகை , அவரவர்க்குரிய நாடு, ஊர் , பாடல் எண்ணிக்கை , குலங்கள் , பாவிழுக்காடு, பெண்டிர் பங்கு முதலியவை தொகுத்து வகைப்படுத்தப்பட்டுள்ளன. அறியலாகும் இன்றியமையாதவையாக 1.பெரியபுராண நாயன்மார்களுள் மிகத் தொன்மையானவர் கோச்

செங்கணான் 2. தில்லையில் அரங்கேற்றப்பெற்ற திருவாசகத்தை , தில்லையிலே இருந்து எழுதப்பெற்ற திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பேசாதது ஒரு புதிரே 3. பல்லவர் காலம் முதலாகவே சேக்கிழார் வாழ்ந்த மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்து ஈழநாட்டுத் தொடர்பு இருந்து வந்துள்ளது. எனினும் ஈழநாட்டார் யாரும் பெரிய புராணத்துள் இடம் பெறாதது சிந்திக்கத்தக்கது 4. 4286 திருவிருத் தங்களில் , மூவரே பெண் நாயன்மாராக இருந்து 70 பாடல்களை (1.6 %) எழுதியுள்ளனர் 5. அந்தணர் பன்னிருவர் இருப்பதும் 1474 விருத்தங்கள் அமைவதும் (34.39) ஆதிசைவ அந்தணர் நால்வரோடு தில்லைவாழ் அந்தணரையும் சேர்த்தால் (3016) (40 -55 %) அந்தணச் செல்வாக்கு மிக்கு இருப்பதை உணரலாம். 6.- பெரியபுரா ணக்காப்பியத்தலைவர் சுந்தரருக்குத் (245) திருவிருத்தங்களைவிட ஞானசம்பந்தருக்குக் கூடுதலான திருவிருத்தங்கள். 7. தனி நாயன் மார் புராணத்தில் தொகையடியார் பேசப்படுவது பொருந்துமாறு இல்லை.

3.14 திருப்புகழில் 'மும்பொருள்'

முனைவர் சு. திருநாவுக்கரசு
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்

திருப்புகழ் நூலாசிரியர் , நூற்பொருள் , நூல் பற்றிய அறிமுகக் குறிப்புகள். சைவத் திருமுறைகள் வழிவந்தது - சைவம் முதலான அறு சமயங்களைக் காணும் சமயக் காழ்ப்பற்ற பொதுமை நூல் - அறுமுகச் சிவனாகிய முருகனின் புகழைப்பாடும் தோத்திர நூலாயினும் ,சைவத்தி ருமுறைகளைப் போலவே சாத்திரக் கருத்துக்களை உள்ளீடாகக் கொண்டமைந்து உள்ளமை.

ஆய்வுக்குரிய கருப்பொருள்களின் தொகுப்பு

உடலோடு தோன்றி உலகில் வாழும் உயிரானது , உலகு, உலகப்பொருள்கள் வழங்கும் இன்பத்தின் நிலையாமையை உணர்ந்து, அவற்றின் மீது கொண்ட பற்றுகளை விடுத்து , நிலைத்த இன்பப் பொருளாகிய இறைவன்பால் அன்பு செலுத்தி , நெறிநின்று , பிறவிப் பயனை எய்தும் . இவ்வகை உயிர்க்கு , உலகும் , உடலும் , உள்ளமும் சாதனங்களாக அமைதல் - உயிர்க்கு அருள்வழங்கும் இறைநிலைகள் - திருப்புகழானது உயிர் இறைவனை அடைவதற்குரிய நெறி 'சைவசித்தாந்தச் செந்நெறியே' என்பதைப் புலப்படுத்துதல் - முதலியன

உயிர்களின் நலத்திற்காக உதவும் உலகின் இயல்பு - பயன்கொள்ளும் முறை - முதலியன. உயிரானது , உலகு பற்றி உணர்ந்து , பண்பட்டு, இறையருள் பெறுவதற்குத் துணையாக அமையும் உடல் பற்றிய கருத்துக்கள் - முதலியன. உயிரானது உலகியலை விடுத்து இறையருளில் திளைப்பதற்கு உதவும் உள்ளம் பற்றிய கருத்துகள் - முதலியன. உயிரின் இயல்புகள் - செயல்கள் - உயிர் நெறிப்படுத்துதற்கான வழிகளுள் எளிமையானதும், மேலானதும் ஆவது பத்தி நெறியே - முதலியன. பக்குவமற்ற உயிர்களைத் தன் தாள் நீழலில் சேர்த்துப் பேரின்பம் வழங்குவதற்கு இறைவன் கொள்கின்ற மூவகைத் திருமேனிகள் - வழங்கும் காட்சி - ஆட்கொள்ளும் நிலை முதலியன.

சைவசித்தாந்த நெறி

உயிர் , இறையருள் பெற மேற்கொள்ளும் நால்வகை நெறிகள் - அவற்றால் அடையும் பயன்கள் - சீவன் சிவனாகும் நிலை - சைவ சித்தாந்த நுண்பொருட் கருத்துக்களாகிய தொம்பதம் - சோகம்பாவனை - முப்பொருள் உண்மை - முதலியவை அருணகிரிநாதர் மேற்கொண்டதும் எடுத்துரைப்பதுமாகிய சமயநெறி சைவசித்தாந்தச் செந்நெறி என்பதனைத் திருப்புகழ் உணர்த்துகின்றமை.

3.15 மெய்கண்ட சாத்திரங்களில் மனிதமேம்பாட்டுச் சிந்தனைகள்

திருமதி எம். தேவகி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பதிக்கொள்கையும் மனிதமேம்பாடும்

மனிதன் மேம்பாடடையை உலகத்தே பல சமயங்கள்தோன்றின. அவற்றுள் சைவசமயமும் ஒன்று. இச் சமயம் சொல்லும் கொள்கைகள் மன்பதைக்கு உய்வு காட்டுவன. கடவுள் ஒருவர் உண்டு எனப் பல்வேறு காரணங்களால் நிலைநிறுத்துவது சைவ சித்தாந்தம் ; கடவுள் உண்டு எனும் உணர்வு இருந்தால் தான் , பிறர்க்குத்தீங்கு செய்ய மனம் துணியாது , கடவுள் உணர்வு உடையவர்களே , மன்பதை வாழப் பலவிதமான தொண்டுகளைச் செய்துள்ளனர் என்பது தெளிவு எனவே , முழுமுதற்பரம்பொருளாகிய சிவபெருமான் ஒருவன் உண்டு எனும்பதிக்கொள்கை உடைய சைவ சமயத்தைச் சார்ந்த நாமும் எவ்வுயிர்க்கும் இரங்குதலாகிய கருணை உள்ளம் கொண்டு நம்மாலான

உதவிகளை மற்றவர்களுக்குச் செய்தல் கடமையாகும்.

'வினை'க் கொள்கையும் மனித மேம்பாடும்

மெய்கண்ட சாத்திரங்கள் கூறும் முப்பொருள்களில் 'கன்மம்' என்பதும் ஒன்று. அஃது அவரவர் செய்யும் வினையைக் குறிக்கும். இவ்வினை , '' நல்வினை , தீவினை'' என இருவகைப்படும். இவ் இருவினையின் பயன்களை உயிர்களுக்குக் கூட்டுவிப்பவன் இறைவனே.

'' செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன்என் றுணர் ''

(திருவருட்பயன் :அறியும்நெறி:3)

என்பது திருவருட்பயன். நல்வினைக்கும் தீவினைக்கும் ஏற்றபலன் உண்டு என்று அறிந்தால் தான் பிறர்க்கு நன்மைசெய்ய இயலும். '' அன்பே சிவம்'' என்பது சைவ சித்தாந்தம். நாம் நல்வழியில் நடப்பதன்றி , ஏனையோரையும் நல்வழிப்படுத்த இவ்வினைக்கொள்கை துணைபுரியும். இன்பம் வரும்போது அனைவரும் மகிழ்வர் ; துன்பம் வரும்போது அதனால் எல்லையில்லாத்துயர் உறுவர். இவ்விரண்டையும் சமமாகக் கருதச் சாத்திரங்கள் கூறும் 'இருவினை ஒப்புக் கொள்கை துணைபுரியும். மேலும் நால்வகை நெறியும் மனிதமேம்பாடும் என்பது பற்றியும் காணலாம்

இவ்வகையில் மெய்கண்ட சத்திரங்கள் மனிதமேம்பாட்டுக்கும் உய்வுக்கும் துணைபுரிகின்றன எனலாம்.

3.16 சுப்ரபேதாகமத்தில் ஞானபாதம் - ஒரு விளக்கவியல் ஆய்வு

பா. நடராசன்
வைணவக் கல்லூரி, சென்னை

சுப்ரபேதாகமம் ஆகம வரிசையில் பத்தாவதாக உள்ளது. ஆகமங்கள் பொதுவாக சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம் , ஞானபாதம் என நான்கு பிரிவுகளாக அமைந்து விளங்கும். மூலாகமங்கள் இருபத்தெட்டினுள்பல நமக்குக் கிடைக்கவில்லை சுப்ரபேதாகமம் நான்கு பாதங்களைக் கொண்டு கிடைக்கிறது என்றாலும் முழுமையாகக் கிடைக்கவில்லை என்றே சொல்லவேண்டும். இவ்வாகமம் மூன்றுகோடி கிரந்தங்கள் (முப்பத்திரண்டு எழுத்து கொண்டது ஒரு கிரந்தம்) கொண்டது என்ற குறிப்பு காணப்படுகிறது. ஆனால் கிடைக்கக்கூடியவை மிகச் சிலவே.

இவ்வாகமம் விக்னேசுவரர் கேட்கத் தசேசர் அருளியது என்று காமிகாகமும் சுப்ரபேதாகமும் கூறும். சரியாபாதம் பன்னிரண்டு படலங்களும். ஞானபாதம் மூ ன்று படலங்களும் ஆக எழுபத்து நான்கு படலங்கள் கொண்டு இவ்வாகமம் விளங்குகிறது. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட ஞானபாதம் சிவ சிருட்டிவிதிப் படலம் (பதி) பசுசிருட்டி விதிப்படலம் (பசு) அத்வாவிதப்படலம் (பாசம்) என மூன்று படலங்கள் கொண்டு விளங்குகிறது. இவை முறையே எழுபத்திரண்டரை, முப்பது, இருநூற்று நாற்பத்தொன்பதரை சுலோகங்கள் கொண்டு விளங்குகின்றன. ஆக ஞானபாதம் முன்னூற்று ஐம்பத்திரண்டு சுலோகங்களைக் கொண்டு விளங்குகிறது.

சிவசிருட்டிவிதி படலத்தில் பிரத்தியக்சம் முதலிய நான்கு பிரமாணங்கள் விளக்கப்பட்டுள்ளன. பரசிவத்தின் தன்மையும் நிட்கலம், சகலம் , சகலநிட்கலம் ஆகியவற்றின் தன்மைகளும் விளக்கப்பட்டுள்ளன. பஞ்சசாதாக்கியம் பராபரம் போன்றவையும் மனோன்மணி போன்ற சக்திகளின் தன்மையும் இதில் உள்ளன. 'ஞானத்தால் மட்டுமே முக்தி கிடைக்கும்' என்ற செய்தி இதில் வலியுறுத்தப்படுகிறது. பசுசிருட்டி விதி படலத்தில் பசுவின் தன்மையும் அனாதி மலத்தால் அது கட்டுண்டு கிடப்பதும் மலங்களின் தன்மையும் சிறப்பாக உள்ளன. அத்வா விதி படலத்தில் ஆறு அத்வாக்களைப்பற்றிய முழு விவரங்கள் உள்ளன. பதினான்கு உலகங்களின் விரிவான விளக்கமும் இதில் உள்ளன. இப்படலம் மிருகேந்திராகமத்தில் உள்ள புவனாத்வ விதிப் படலத்தோடு ஒப்பிடத்தக்கதாக உள்ளது. இவ்வாகமத்தின் ஞான பாதத்தைத் தோத்திர சாத்திர நூல்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதும் அவசியமாகிறது. மேற்கண்ட கருத்துகளை இக்கட்டுரை விளக்கமாகக் கூறுகின்றது.

3.17 சைவ நூல்களில் மனித நேயம்

பெ. பார்வதி

அவினாசிலிங்கம் பெண்கள் பல்கலைக்கழகம், கோவை

சமுதாய வாழ்வியல் அமைப்பில் மனிதத்தன்மை எனும் இயல்பால் மனிதன் பிரித்து உணரப்படுகிறான். அவனது உயர்வும் , தாழ்வும் அதன் அடிப்படையிலேயே அமைகிறது. மனித வாழ்வில் மனிதன் எனும் நற்பண்புக்கே முதன்மை இடம் உள்ளது. ஒவ்வொரு மனிதனுள்ளும் பொதுவான கூறுகளும் (Universal features) சிறப்புக் கூறுகளும் (Unique features) உண்டு. ஒவ்வொரு மனிதனும்

தனித்தன்மை வாய்ந்தவனே. உளவியல் அறிஞர் கிம்பால் யங் (Kimball young) இவ்வுண்மையைக் கீழ்வருமாறு கூறுகிறார்.

ஒவ்வொரு மனிதனும் சிற்சில கூறுகளில்

1. எல்லா மனிதரைப் போல் இருப்பான்
2. சில மனிதர்களைப்போல் இருப்பான்
3. ஒருவரையும் போல் இல்லாமலும் இருப்பான்

பொதுப்படையான நிலையில் முதல் இரு கூறுடையவர்களாகத் தோன்றினாலும் ஒருவரையும் போல் இல்லாமல் இருக்கும் தனித்தன்மையே சிலரைத் தனித்தன்மை உடையவராய்க் காட்டுகிறது.

தனித்தன்மையான மனிதமே சைவத் தொண்டர்களை வீடுபேறாம் உன்னத நிலைக்குக் கொண்டு சென்றது. அவர்கள் வாழ்க்கை முறையால் எளியவர்களாகவும் , செயலாலும் , கொள்கைப்பிடிப்பாலும் வன்தொண்டர் களாகவும் விளங்கினர். அவர்களது ஒவ்வொரு செயலிலும் மனிதம் வெளிப்பட்டது. மனிதத்தின் முழுமையான கூறுகளையும் வெளிப்படுத்தும் வெவ்வேறு வாழ்க்கை முறையை ஒவ்வொருவரும் கொண்டிருந்தனர் ; எனினும் தன்னை மறந்த வாழ்வினை வாழ்ந்தவர்களாக விளங்கியதாலும் , உன்னத நிலையடைந்தமையாலும் ஒருங்கு வைத்து எண்ணப்படும் பேறுடையவரானார்.

''உளங்குளிர்ந்த போதெல்லாம் உவந்துவந்து பாடுவேன் '' (வள்ளலார்) எனப் பாடியதும் மனித நேயத்தின் வெளிப்பாடு ஆகும். தொண்டர்சீர் பரவியதும் மனிதத்தை இனங்கண்டு வெளிப்படுத்தியதன் வெளிப்பாடே ஆகும்.

வள்ளலார் உயிர்களுக்காக உருகும் உணர்வுக் கூறுடைமை, பொறையும் பணிவும் உடையவராய் உயர்ந்து நின்றமை , உயிர்ப்பிணியான பசியினைப் போக்க விழையும் வாழ்வியல் அறமுடைமை என மனித நேயத்தின் எல்லையைத் தொட்டு நிற்கும் அனைத்துக் கூறுகளும் சைவப் பாடல்களின் உள்ளீடாக விளங்குகின்றன.

சாதி, சமய ஏற்றத்தாழ்வு ஒழிந்து ஆன்மநேய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் போக்கிலும் சைவப்பாடல்கள் விளங்குகின்றன.

3.18 தாயுமானவர் பாடல்களில் உவமைகள்

சொ. மணிவண்ணன்
அரசர் கல்லூரி, திருவையாறு

தமிழ் உலகில் தொன்மையான சமயமாகத் திகழ்வது சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சைவ சமயமாகும் .சைவ தோத்திரங்களாகப் பன்னிரு திருமுறைகளும் சைவ சாத்திரங்களாகத் திருவுந்தியார் , திருக்களிற்றுப் படியார் முதலிய பதினான்கு நூல்களும் விளங்குகின்றன. இவை சைவ சமயப் பேரொளியை உலகில் பரவச் செய்யும் விளக்குகளாக நின்று நிலவுகின்றன. அவ்வரிய பெருமைக்குரிய சைவ சமயத்தின் பெருமைகளை மேலும் விளக்குதற்பொருட்டுத் தோன்றிய பல சைவ அடியவர்களுள் தாயுமானவர் சிறப்பான இடத்தைப் பெறுபவராவார். இவருடைய பாடல்கள் உபநிடதங்களின் விளக்கமாகத் திகழ்கின்றன. இவர்தம் பாடல்களில் உவமையாக இடம் பெற்ற நிலை ஈண்டு விளக்கப்படுகின்றது. உவமைகள் அமையும் முறை வான்பொருட்கள் , நிலப்பொருட்கள் , நீர்ப்பொருட்கள் , தீப்பொருட்கள் என்று பகுக்கப்படுகின்றன.

வான்பொருட்கள்

வானத்திலிருந்து தோன்றும் மழை , மேகம் ,மின்னல் போன்ற பலவும் உவமைகளாக அமைந்து இறையுணர்வின் மேன்மையையும் அடியவர்களின் நல்லுணர்வையும் விளக்குகின்றன.

நிலப்பொருட்கள்

நிலத்தில் வாழும் உயர்திணை மாந்தர்கள் , அஃறிணை உயிர்கள் மற்றும் , தாவரங்களான விதை, மலர் , கனி முதலியவை இறைவனின் பெருமைக்கும் பக்தர்களின் சிறப்பிற்கும் உவமைகளாகக் காட்டப்படுகின்றன.

நீர்ப் பொருட்கள்

காலில் நீர் , நீர்க்குமிழி, அருவி , கடல் போன்ற நீர்த்தொடர்பான பொருட்கள் உவமைகளாகி , மெய்யடியார்களின் பக்தி உணர்வையும் , தீ வலிமைப் பயன்களால் தோன்றும் பிறவிகளின் கொடுமை நிலையையும் எடுத்துக்காட்டுகின்றன.

தீப்பொருட்கள்

தீயின் வெம்மை அருளின் பெருக்கத்தை எடுத்துக்

காட்டுவதற்கும் அத்தீயில் உருகும் மெழுகு அருளில் உருவாகும் மனநிலைக்கும் உவமைகளாக இடம் பெறுகின்றன.

முடிவுரை

தாயுமானவர் ,சைவசமய உபநிடதங்களை எளிமைப்படுத்தி , மானுட உயிர்களுக்குத் தருவதே நோக்கமாகக் கொண்டு பாடல்களைப் பாடினார். அவர் தம் பாடல்கள் அவர் பயன்படுத்தும் உவமைகளால் பக்தி உலகிற்கு மட்டுமின்றித் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் இலக்கியத் தரமுடையனவாகத் திகழ்கின்றன.

3.19 திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

பொன். முத்தையன்
அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்

முன்னுரை

திருவிடைமருதூர் தல அமைப்பு - வரலாறு - மூர்த்தி - தீர்த்தம் - தலப்பெருமை - தலம் பற்றிப் பாடினோர் - புராணச் செய்திகள் - வரகுண பாண்டியன் வரலாறு - கல்வெட்டுகள் - திருவிழாக்கள்.

மும்மணிக்கோவை - விளக்கம் - சிற்றிலக்கியங்களில் ஒன்று. பல்வேறு மும்மணிக்கோவை நூல்கள் . அவை பற்றிய சிறு குறிப்புகள். பட்டினத்தடிகள் வரலாறு. - பூம்புகார் வணிகர் - இயற்பெயர் திருவெண்காடர்- சிவபுண்ணியச் சீலராக வாழ்தல். சிவகலையை மணந்து இல்லறம் - மகப்பேறு இன்மை - மருதவாணர் என்ற மகனாகப் பிறத்தல் . மருதவாணர் பதினாறு வயது நிறைதல். கல்வி கலை வல்லவராதல். மகனைக் கப்பல் வணிகத்திற்குப் பட்டினத்தார் அனுப்பல். மருதவாணர் பெரும் பொருளீட்டித்திரும்புதல். மகனைக் கண்டு மகிழ்ந்து தழுவும் போது மருதவாணர் மறைதல். மகன் தந்ததாக மனைவி கொடுத்த ஓலை நறுக்கில் '' காதற்ற ஊசியும் வாராது காண் நும் கடை வழிக்கே'' என்ற உபதேசம் கண்டு பட்டினத்தார் திருவருளை வியத்தல். அப்பொழுதே முற்றாகத் துறவு பூணல். இரந்து திரிதல். தாயார் மறைவின் பின் திருவிடைமருதூரை அடைதல். மும்மணிக்கோவை பாடுதல்- பல தலங்களுக்குச் சென்று பாடுதல். பத்திரகிரியார் சந்திப்பு , மீண்டும் தலவழிபாடு மீண்டும் திருவிடைமருதூரை அடைந்து கீழ்க் கோபுரவாயிலில் இருத்தல் பத்திரகிரியார் மேலக் கோபுர வாயிலில் இருத்தல் - பத்திரகிரியார் முதலில் சிவ பதம் அடைதல் - பட்டினத்தார் பல

தலங்களுக்கும் சென்று நிறைவாகத் திருவொற்றியூரில் சிவயோகத்தில் அமர்ந்து சிவலிங்க வடிவமாதல்.
பட்டினத்தார் பாடிய நூல்கள் - தாயுமானவர் பாராட்டு

நூல் அமைப்பும் அழகும்

நூலின் அமைப்பு - பொருளமைதி -யாப்பு - இறைவன் பெயர்கள் முனிவர் - தேவர்கள் - தேவார மூவர் - மணிவாசகர் முதலானோர் பற்றிய குறிப்புகள் - வரகுண பாண்டியர் வரலாறு.

சிறந்த சிந்தனைகள்

திருநீறு - உருத்திரசாதனம் - ஐந்தெழுத்து - அடியார்க்கு அடியாராதல் - செல்வம் வாழ்வு - தொண்டர் வாழ்வு - நரகத் துன்பம் - பச்சிலை அருச்சனை.
அணிகள் உவமை - உருவகம் தற்குறிப்பேற்றம் போல்வன. சிறந்த சொல்லாட்சிகள் - பழ மொழிகள்.

3.20 ஆடல் வல்லானின் அமஞ்சி வேலை

ச.முருகானந்தம்
இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை

பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணத்தில் , திருவாலவாய்க்காண்டத்தில் 'மண்சுமந்த படலம்' எனும் ஒரு படலம் இடம் பெற்றுள்ளது.

வந்தி எனும் பெயரிய , பிட்டு சுட்டு விற்றுப் பிழைக்கும் வயதான மூதாட்டியின் பொருட்டுக் கூலியாள் வடிவில் வந்த சிவபெருமான் வைகைக் கரை அடைப்பது போல் செயல்பட்ட திருவிளையாடலைக் கூறும் பகுதி இது.

குடிமக்கள் , அரசு விதிக்கும் அமஞ்சி வேலையைச் செய்யக் கடமைப்பட்டவர்கள். தம்மால் செய்ய இயலாத நிலையில் குடிமக்கள் கூலியாளைப் பயன் கொள்ளலாம். கொடுப்பரேயல்லாமல் அரசு கூலி கொடுக்காது.

இவ்வேலையைச் செய்ய வந்த ஆடல்வல்லானின் அருள் செயலால் நாம் அறிய வருகிற அக்காலத்திய சமுதாயப் பொதுச் செயல் நடைமுறை , மக்கள் பணிக்கும் இறைப்பணிக்குமான இயைபு , அன்புக்கும் அருளுக்குமான படிநிலை வளர்ச்சித் தொடர்பு ,அமஞ்சி

வேலை குறித்து நடைமுறையிலான பேச்சு வழக்கு ,கல்வெட்டு ஆதாரங்கள் இன்ன பிறவற்றை இக்கட்டுரை ... விளக்குவதாக அமைகிறது.

மக்கள் பண்பாட்டின் ஒரு சரித்திரச் சான்றாதாரமாகப் பிட்டுக்கு 'மண்சுமந்த படலம்' விளங்குவதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

3.21 திருக்குறளில் சைவசமயத்தாக்கம்

முனைவர் அரங்க. மு. முருகையன்
தாகூர் கலைக்கல்லூரி , புதுச்சேரி

தென்னாடுடைய சிவனே போற்றி ; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி 'என்பார் மாணிக்கவாசகர். சைவம் தென்னிந்தியாவின் மிகப்பழைய சமயமாகும் .பண்டைய தமிழ்மக்கள் எல்லாவற்றையும் கடந்து நின்ற ஒரு சக்தியைக் கடவுளாக வழிபட்டு வந்தனர்.

சங்ககால இலக்கியங்களில் அவ்வக்கால மக்களுடைய பண்பாடு , நாகரிக வளர்ச்சி , நம்பிக்கைகள் ,சமயவளர்ச்சி போன்றவை காணக்கிடைக்கின்றன. எட்டுத்தொகை நூல்வரிசையில் அகம் , புறம் , கலித்தொகை ஆகியவற்றில் சிவன் பற்றிய செய்திகளை அறியமுடிகின்றது. உதாரணமாகத் தாழ்சடை உடையவன் ; (புறம் - 1). நீலமணிமிதற்றன் (புறம் . 56), முக்கண்ணன் (கலி - 2) போன்றவரிகள் சிவ வழிபாட்டின் பரவலைப் புலப்படுத்தும்.

சங்க காலத்தின் அடுத்தக்கட்ட இலக்கியமான அறநெறிக்கால இலக்கியத்தில் முதன்மை வகிக்கும் திருக்குறளில் சிவன் வழிபாடும் , சித்தாந்தக் கருத்துக்களும் வெளிப்படையாகவே கூறப்பட்டுள்ளன. இறைவனைத் திருக்குறளின் முதல் அதிகாரம் ஆதிபகவன் , வாலறிவன் , மலர் மிசை ஏகினான் ,வேண்டுதல் வேண்டாமைஇலான் ,ஐந்தவித்தான் , எண்குணத்தான் எனப் பலவாறு உரைக்கிறது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிவனின் ஆற்றல், தொழில் போன்றவற்றை எடுத்தியம்புகின்றன. எனவே வரலாற்று நிகழ்வில் , இலக்கியங்களின் வாயிலாகச் சைவ சமயத்தின் வெளிப்பாடு அவ்வப்போது அதன் தன்மையினைப் புலப்படுத்தி உள்ளது.

இவ்வடிப்படையில் திருக்குறளில் வெளிப்படும் சைவம் ,அதன் கருத்துப்புலப்பாடு , அது மக்களிடையே கொண்டிருந்த நிலை போன்றவற்றை இவ்வெழுத்துரை வெளிக்கொணருகிறது. திருக்குறளில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் உள்ளதை முன்பே டாக்டர். மு. தெய்வநாயகம் , டாக்டர் சோ.ந.கந்தசாமி, டாக்டர் சி.பி.சித்தலிங்கம்

போன்றோர் ஆய்ந்துள்ளனர். அதன் வழியிலேயே இவ்வெழுத்துரையும் அமைகிறது.

3.22 சைவ சமய இதழ்கள்

முனைவர் கா. வாசுதேவன்
அரசு ஆடவர் கல்லூரி , கும்பகோணம்

தமிழ் இதழியல் வளர்ச்சியில் சமய இதழ்களின் பங்களிப்பு

தமிழ் மொழி இதழ்களில் சமய இதழ்கள் - கிறித்துவம் , இசுலாம், சைனம் போன்ற பிற சமய இதழ்கள் - சிறப்பாகச் சைவ சமய இதழ்கள்.

சமயப் பரப்பலில் இதழ்களின் பணிகள்

சமயப் பரப்பலுக்கும் நிலைப்புத் தன்மைக்கும் இதழ்கள் அடிப்படைக் காரணம் என்பதைச் சுட்டுதல் - குறிப்பாகச் சைவ சமய வளர்ச்சிக்கு இதழ்கள் ஆற்றும் பணிகளை எடுத்துக்காட்டுதல்.

இன்றைய சைவ சமய இதழ்களின் வகைப்பாடு

சைவ சமய இதழ்களின் பட்டியல் -மடங்கள் , நிறுவனங்கள் , தன்னார்வ அமைப்புகள் , தனியார் வெளியீடுகள் - கடல் கடந்து வரும் சைவ சமய இதழ்கள் என்ற பார்வையில் இதழ்களை வகைப்படுத்திக் காணுதல்.

சைவ சமய இதழ்களின் உள்ளடக்க ஆய்வு

சைவ சமய இதழ்களின் உள்ளடக்கப் பகுப்பு - கட்டுரை , கவிதை, தலவரலாறு , சமயத் தொடர்புடைய பிற கருத்துக்கள் ஆகியவற்றைப் பற்றிய கருத்துரை - மதிப்பீடு

தொகுப்புரை

உள்ளடக்க நிறை குறைகளைச் சுட்டுதல் - சைவ சமயப் பரவலுக்கு இதழ்கள் ஆற்ற வேண்டிய பணிகளைத் தொகுத்துக் கூறுதல் - இன்றைய சைவ சமய இதழ்களின் நோக்கையும் , போக்கையும் புலப்படுத்துதல் - இதழ்களில் தவிர்க்கப்பட வேண்டிய செய்திகளைச் சுட்டிக் காட்டி நிறைவு செய்தல்.

3.23 கல்லாடமும் இறைவன் திருவிளையாடல்களும்

செல்வி ம. ஷிலா
கன்னியாக் குமரி

திருக்கோவையாரின் சிறப்புணர்த்தும் நிலையில் எழுந்த நூல் கல்லாடம். புராணச் செய்திகளுடன் சிவபெருமானின் பல்நிலையிலான திருவிளையாடல் செய்திகளும் இதில் கலந்து பேசப்பட்டுள்ளன. அடியார்கள் பற்றியும் , மதுரை நகரில் நிகழ்ந்த இறைவன் திருவிளையாடல்கள் பற்றியும் , முப்புரம் , காமதகனம் ,தாருகவனம் பற்றியும் எனப் பலவகையான திருவிளையாடல் செய்திகள் இதில் வந்துள்ளமையால் இது ஒரு முன்னோடி ஆய்வாக உள்ளது.

திருவிளையாடல் பற்றிச் செய்யப்பட்டுள்ள பல ஆய்வுகளும்பெரிய புராணத்தை அடிப்படையாகக் கொண்டனவே. பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணம் பற்றிய ஆய்வொன்றும் உள்ளது. இவ்வகைமைக்குள் கல்லாடத்தில் அமைந்தள்ள பொதுவான திருவிளையாடல்கள் அடங்காமையின் இங்கு வேறொரு வகைமை தேவைப்படுகின்றது.

அடியார்க்கருளல் , முழுமுதல் எனும்நிலையில் மருள் தீர்த்தல் , அறிவுறுத்தலும் அறிவூட்டலும் ,மறவருள் புரிதல் ,வினைப்பழி தீர்த்தலும் தவப்பயன் வழங்கலும் , துயர்போக்கல் அடையாளங்காட்டல் எனும் ஏழு நிலைகளில் கல்லாடத்திலமைந்துள்ள திருவிளையாடல்களை வகைப்படுத்தலாம். அடிமுடிகாணல் , நடனக்காட்சிகள் போல்வன பரவலான ஆட்சி பெறும்இறைவன் திருவிளையாடல்களாகும். முத்தேவர்களுக்கும் முதல்வன் ; அடியார்க்கு எளியன் ; மறவருள் புரிபவன் போல்வன ஏனைய திருவிளையாடல்கள் உணர்த்தும் செய்திகளாம்.

3.24 LIBERTY, EQUALITY, FRATERNITY IN SAIVA LITERATURE

A.S. Ilangovan
Sahitya Akademi, Bangalore

Saivism - contemporary relevant principle for sustaining and ameliorating life. Saiva literature not only entertains but serves as 'friend, philosophy and guide'. It is modern in outlook and utilitarian

for practice.

Liberty - tengents of saivism incorporated in poems of Appar liberates man from fear, superstitious practices, alienation and missery, compared to Basaveshwara's vachanas, Veerasaiva principles, lingayat practices, Anubhavamantapa - revolt against status quo.

Equality - Sekkizhar s Tiruthondarpuranam - egalitarian consideration - versus economic and social divisions. Manikkavachakar's hymns incorporating relevant principles.

Fraternity - Cardinal principles of Ramalingar promoting universal brotherhood. Comparison from thinkers and poets from other regions and countries.

Conclusion - Saivism a tolerant perfect model for worthwhile living.

3.25 POEMS IN PRAISE OF CEVVEL IN THE PARIPATAL

Dr .A. Kandiah
University of NSW, Australia

In the Paripatal , 14 poems, six in praise Tirumal and eight in praise of Cevvel, are exclusively religious. This brief survey will cove only the eight poems in praise of Cevvel. The predominant theme Saivam and the treatment of bhakti in these poems in praise of Cevvel will be examined. The eight poems, their authors, the names of the composers of music and the pan will also be analysed comparing with those of Tevaram.

This survey will clearly prove how bhakti originated and developed gradually into its full form as the means of libration, illumination and bliss for the devotees.

In this survey it will be established that the eight poems in praise of Cevvel might also be regarded as Saiva literature which are not only excluded from the Pnnirutirumurai but also not chanted in temples and in houses during religious ceremonies at present, even though in many respects they show close affinity to Tirumurukarruppatai and Tevaram.

Dravidian and Aryan aspects, sacred trees, introduction of akam

into religious poetry, modes of worship and allusion to mythology are the other important aspects which will be examined in this survey.

3.26 SIVA GNANA DEEPAM (Revana Siddhar -16th century, AD.)

Dr. M. Kuppuswamy
New Delhi

The most ancient school of philosophical knowledge Saiva Siddhanta, is also the most modern in the world. Ancient because of its origin in the hoary past and modern because of the very rational and logical dispensation inherent therein. As in the physical sciences, so in spiritualism there has been a steady increase over the years in our understanding of the basic aspects relating to the bond between man and God. Saiva Siddhanta, the essence of Heavenly Revelations, a veritable fountainhead of all spiritual understanding, has been well documented in both Tamil and Sanskrit for the benefit of all mankind -vide the fourteen canonical works, the twelve Thirumurais and many such compilations penned at various points of time by inspired scholars and savants. A significant treatise on basic saivite thelogy, shorn of abstruse metaphysical expostulations, and yet exhaustive in coverage in Saiva Gnana Deepam which was brought out in the sixteenth century A.D. by the revered Saint Revana Rathria Desihar, of whom little else is known beyond his authorship of a Tamil Lexicon and Siva Gnana Deepam ... but who is often quoted by many a latter day scholar in order to emphasize and elucidate terse and recondite phenomena in thelogical dissertation. Paradoxically enough, this rare composition has largely remained inaccessible to a vast majority of folks in this busy 'work a day ' world, as there are no reprints on full length commentaries on this sacred exegesis. In order therefore to preserve and popularise this monumental contribution to saivism, an English translation of certain portions of the Text has been attempted by us here, which we hope would help create an abiding interest in a fulle imbibation of the import of the original document. May this monography light up as an escapade from the conundrum of clitches

and conventions that stalk the many prevailing systems of thelogical obduracy and regimentation.

3.27 SOCIAL AND POLITICAL AND ECONOMIC IDEAS IN THE FOURTEEN SIDDHANTA SASTRAS

Dr. D. Velappan
Nagercoil

In these Sastras, Varnasrama System is referred to . It is said that pratiloma marriage is unnatural, for, an ox will never mate with a she-buffaloe. The assertion that Vedas belong only to the three higher castes is refuted by pinpointing that persons from the fourth caste are masters in the Vedic Science of astrology and also that in the North, everybody can study the Vedas. The learned, those who attain " nittai" and the Almighty have no Varna or Asram. The pulays are only those who did not wear the sacred ash and visit the Siva temples. Worship of minor deities is looked down upon as they experience birth, death and suffering. Enslavement by God is worth attaining.

A good description of monarchy - the long retinue of the King, the responsible and representative role of the ministers and the advisability of decentralised decision making - is given. The King has become so dominant a figure that the classical Ten limbs of the King are put on the Godhead also, in an attempt to glorify the latter.

Work is emphasised. Those who despise the basic six avocations are disapproved. Bonded labour is mentioned. Hunger is noted as the fire that could not be extinguished. Those who indulge in conspicuous consumption are described as soulless corpses. Danam is preferred to Yagam. Herein one can trace the elements of a Sarvodya order.

அமர்வு நான்கு

சைவத் திருவிழாக்கள்

4.1 சைவத்திருவிழாக்களில் கலை , பண்பாட்டுக் கூறுகள்

முனைவர் அ. அறிவுநம்பி
புதுவைப் பல்கலைக்கழகம்

முன்னுரை

தமிழகத்தில் திருவிழாக்கள் மிகுதி. சைவக் கோவில்களில் காணலாகும் திருவிழாக்களின் எண்ணிக்கை அக்கோவில்களில் காணலாகும் வழிபாட்டு முறைமைகளுக்கு ஏற்ற வண்ணம்அமையும். வழிபாடுகளுடன் ஒன்றிக் கலந்துள்ள சடங்குமுறைகள் கவனிக்கப்பெறவேண்டியவை. அவற்றில் வெளிப்படும் கலை , பண்பாட்டுக் கூறுகளை இனங்காண்பதே இக்கட்டுரையின்நோக்கம்.

கலைக்கூறுகள்

இறைவனின் திருவிளையாடல்களை அடிப்படையாகக்கொண்ட வழிபாட்டு நாட்களில் , இறையின் உலாவிற்கு அப்பால் வேடப்புனைவு , உருவச்சமைப்பு போன்ற கலைக்கூறுகளைக் கொண்ட நிகழ்வுகளும் அமையும். பரமசிவன் காமனை எரித்ததாக அமையும் 'காமதகன விழா'வில் காமனின் உருவம் எரியூட்டப்பெறும். வேடமிட்ட ஆட்கள் உலாவருவர். தெருக்கூத்தின் 'சம்வாதத்தரு' அமைப்பில் எரிந்தகட்சி , எரியாத கட்சி என இரு பிரிவினரின் தருக்கம் 'இலாவணி'யாக அமையும். இதனைப் போல, நாகப்பட்டினம் பகுதியில் பிள்ளைக்கறி கேட்ட திருவிளையாடல்காட்சி நிகழ்வாக (Performance) நடாத்தப்பெறும். பெரும்பாலான அம்மன் கோவில்களின் நேர்த்திக்கடன்கள் யாவும் ஏதேனும் ஒரு கலையுடன் உறவுடையதாக அல்லது கலை போன்ற அமைப்புடையதாக உருவாக்கப்பெறும். இத்தகு கலைக்கூறுகள் இனங்காணப்பெற வேண்டும்.

4.2 அம்பாவாடல் திருவிழா

முனைவர் எஸ். கண்மணி
எஸ். எப். ஆர் மகளிர் கல்லூரி , சிவகாசி

விழா தொடங்கிய நாளும் முடிந்த நாளும் - விழாவைக் குறித்த வேறுபெயர் - 'தைந்நீராடல்' - பாவை செய்து வழிபட்டமையால் 'பாவை நோன்பு' எனல் - சைவர்ஆற்றிய நோன்பை அனைவரும் ஆற்றியமை - பக்தி இயக்க காலத்தில விழாவின் கால அளவில் மாற்றம் - 'மார்கழி நீராடல்' என்ற பெயர் மாற்றம் - விழா தொடங்கிய நாளில் ஏற்பட்ட மாற்றம் - முடிந்த நாளிலும்மாற்றம் - விழா நிகழ்ச்சிகள் - வேதியர் அழல் பேணல் - பெண்கள் நீராடல் - ஐயமேற்றல் - நோன்பு முறை - நாவடக்கம் மன அடக்கம் - நோன்பு முற்றிய பின் நிலை - நோன்பின் நோக்கம் - மழை வேண்டல் - நல்ல கணவன் வேண்டல் - விழாவிலிருந்து தோன்றிய விளையாட்டு - பொம்மைக் கல்யாணம் - முடிவுரை.

4.3 சிவலாய மஹோத்ஸவம் சிவதீக்ஷையே

வி. கணேச சிவாச்சாரியார்
திருவையாறு

சிவாலயமேஹாத்ஸவம் என்பது திவதீக்ஷையே ஆகும். இதைச் ''சாம்பவீ தீக்ஷை என்று சிவாகமம் கூறுகிறது. கொடியேற்றம் முதல் தீர்த்தவாரி முடிய நடைபெறுகின்ற கிரியைகள் , வாகனங்கள் , மற்றும் யாகசாலை இவைகளின் தாத்பர்யம் , கீதையின் வகைகள் , முறைகள் இதனை இக்கட்டுரை விளக்குகிறது.

சிவ தீக்ஷையினால் சிஷ்யனுடைய மும்மலங்களும் நீங்கி , ஆகம்ய முன்வினைகளும் நீங்கிச் சுத்த ஆன்மாவாக செய்து பரசிவத்தோடு சேர்த்து ஆசாரியாபிஷேம் செய்வது போல மஹோத்சவமும் அப்படியே பாவனை செய்து செய்யப்படுவதால் உற்சவம் எனச் சிவாகமம் கூறுகிறது. இதனை இக்கட்டுரை விளக்குகிறது.

4.4 சைவத்திருவிழாக்களும் சமூக ஒற்றுமையும்

முனைவர் ஆர். சந்திரசேகரன் ஆர்
பாரதியார் பல்கலைக்கழகம்

சமூகத்தில் கோயில் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. கோயில்களில் நடத்தப்பெறும் திருவிழாக்களும் வழிபாடுகளும் சமூகத்தோடு தொடர்புடையன. சைவக் கோயில்களில் நாள் , வாரம் , மாதம் என்ற வகையில் நடைபெறும் விழாக்கள் மனிதர்களின் ஆசைகளை நிறைவேற்றும் வகையில் நடப்பதாக நம்பிவந்தனர். இறைவன் மீதுள்ள நம்பிக்கையும்அந்நம்பிக்கையின் பயனாக நல்லவை நடக்கும் என்று நம்புவதும் , தீயவை கழியும் என்று நம்புவதும் ஆரிய மனித உணர்வுகள் திருவிழாக்களோடு தொடர்புடையன. திருவிழாக்களின் போது பல்வேறு சாதியினர் , உயர்ந்தோர் தாழ்ந்தோர் , ஏழைபணக்காரன் என்ற வேறுபாடுஇல்லாமல் நடப்பதை இன்றும் நாம் காணமுடிகிறது. கோயில் திருவிழாக்களை மையமாக வைத்துப் பல்வேறு சமுதாயப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இவை போன்ற தரவுகளின் அடிப்படையில் சைவத் திருவிழாக்கள் சமூக ஒற்றுமையின் அடிப்படையில் நடைபெறுகின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

4.5 சைவ விழாக்களும் மனித மேம்பாடும்

முனைவர் செ. சாராதாம்பாள்
மதுரைக் காமராசர்பல்கலைக்கழகம்

மனித ஆற்றலைத் தனிமனித முன்னேற்றத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் ஏற்றவகையில் ஆக்க வழியில் பயன்படுத்துவது மனித வள மேம்பாடாகும்.

மனிதனின் புற ஆற்றலை மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தை நோக்கிப் பயன்படுத்துவது போல , மனிதனின் அக ஆற்றலை வளப்படுத்தி அதன் வழி அவன் புற ஆற்றலையும் செம்மைப்படுத்தி , தனிமனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் மனித குல முன்னேற்றத்திற்கும் பயன்படுமாறு செய்வது 'மனித மேம்பாடு' என விளக்கலாம்.

பொதுவாகத் தெய்வத்தின் பொருட்டுக் கொண்டாடப்படும் விழாக்கள் அனைத்துமே சமுதாயப் பண்பாட்டை வளர்ப்பதற்கும் ,

மனிதர்களின் மன உணர்வினை வாழ்க்கை நோக்கத்தை மேம்படுத்தும் நோக்கில்தான் அமைகின்றன. இத்தகைய சமுதாயமேம்பாடு நோக்கில் சைவ விழாக்களான சிவராத்திரியும் கந்தர் சஷ்டி விழாவும் எங்ஙனம் அமைகின்றன என்பதை விளக்குவது இக்கட்டுரையின்நோக்கமாகும்.

இக்கட்டுரையில் விழாக்களின் விளக்கங்கள் , கொண்டாடப்படும் முறைகளும் நோக்கமும் , வழிபாடும் விரதங்களின் நோக்கமும் , சைவத் தத்துவ நோக்கில் விழாக்களும் பயன்களும் , மனித மேம்பாட்டு நோக்கில் விழாக்களும் பயன்களும் என்ற அமைப்பில் கட்டுரைக் கருத்துக்கள் விவாதிக்கப்படும்.

4.6 திருக்கார்த்திகை

இரா. சுமதி
கோவிந்தம்மாள் ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்

திருவிழாக்கள்

தனி மனித வாழ்வினை இன்பமயமாக மாற்றுதற்கும் சமுதாய அமைப்பினை ஒருங்கிணைப்பதற்கும் விழாக்கள் கொண்டாடப் படுகின்றன.

விழாக்கள் உலகியலோடும் , ஆன்மீகவியலோடும் தொடர்பு உடையன. அவை கொண்டாடப்படுகின்ற நோக்கத்தையொட்டிப் பல வகைப்படும். ஆன்மீகவியலோடு தொடர்புடையவை திருவிழா என்று கூறப்படுகின்றன.

கார்த்திகை

கார்த்திகை நாள் தென்னிந்திய இந்துக்களின் வாழ்வில் புனிதமானது. இந்நாள் முருகப்பெருமானோடும் , சிவபெருமானோடும் இயைபு உடையது.

கார்த்திகை நாள் போன்று கார்த்திகைத் திங்களும் புனிதமானதாகக் கருதப்படுகின்றது.

திருக்கார்த்திகை விளக்கு ஏற்றுதல்

திருக்கார்த்திகை விளக்கு ஏற்றி இறைவனை வழிபடுதல் பண்டுதொட்டே தமிழகத்தில் இடம் பெறுகிறது. திருக்கார்த்திகை விளக்குக் குறித்துச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன. இவ்விழாவைப் பற்றிய புராணக் கதைகள் சைவ சமயத்தில் மட்டுமன்றி ,

வைணவ சமயத்திலும் இடம் பெற்றுள்ளன. இவ்விழாப்பற்றி இக்கட்டுரை விரிவாக எடுத்துரைக்கும்.

4.7 கோவை - பேரூர் பட்டீசுவர மள்ளர் திருக்கோயில் - நாற்று நடவுத்திருவிழா

முனைவர் தே. ஞானசேகரன்
பாரதியார் பல்கலைக்கழகம்

கோவை பேரூரிலுள்ள பட்டீசுவரச் சிவ ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் ''நாற்று நடவு உற்சவம் '' என்னும் விழாப்பற்றி இக்கட்டுரை விளக்குகிறது. இவ்விழாவினை மள்ளர் என்னும் தேவேந்திர குலவேளாளர்கள் நடத்துகின்றனர். சிவன் , பார்வதி , விநாயகர் ஆகியோர் வேளாண்மை செய்ததை மறுபடியும் நிகழ்த்திக் காட்டும் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.இக்கட்டுரை முதன்மை மற்றும் துணை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. தேவேந்திர குலவேளாளர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மூத்த தமிழ் மரபினர் என்ற கருத்தை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது. ஆன்மீக வரலாறே இவர்களுக்கு இல்லை என்ற தனிச் சிந்தனையை மறுத்து இவர்களுக்கு ஆன்மீக மரபு இருக்கிறது என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

4.8 கொங்கு ஏழு தலங்களின் திருவிழாக்கள்

தி. பெரியசாமி
பாரதியார் பல்கலைக்கழகம்

இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வழிபடுகின்றனர். இவ்வழிபாடு பழமையானது; தொன்மையானது. ஆதிகுடிகள் என்னும் திராவிடர் காலத்தேயும் அதற்கு முன்னும் சைவம் இந்நாட்டில் இருந்திருக்கிறது என்று ஜி.யூ. போப் , ஜான் மார்ஷல் போன்ற மேல்நாட்டு அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். சைவ சித்தாந்தம் சிவ வழிபாடு குறித்து முடிந்த முடிவு என்று பொருள் கொள்ளக் கூடும். சைவ சித்தாந்தம் சைவர்களுடைய கொள்கையைப் பற்றிக் கூறுவது.

சைவ சித்தாந்தம் முப்பொருள்களைப் பற்றிக் கூறுகிறது. பதி , பசு, பாசம் என்ற குணங்களை ஆகமங்கள் மூன்றிற்கு மேற்பட்டதாகவும் விரித்துக் கூறுகின்றன.

திருவிழா

உலகமெங்கும் வாழ்கின்ற மக்கள் தம் வாழ்வில் சில நாட்களாவது ஒரு சேர இன்பத்தில் திளைக்கவேண்டும் என்று எண்ணினார்கள். உள்ளத்தின் இந்த உணர்வே உலகில் விழாக்கள் தோன்ற ஏதுவாய் அமைந்தது. பரந்து வாழும் மக்கள் அனைவரையும் ஒருங்கு கூடச் செய்வன இவ்விழாக்கள் ஆகும். இவ்விழாக்கள் பிறந்தநாள் விழா , நூற்றாண்டு விழா, அரசாங்கத்தினர் கொண்டாடும் விழா , அரசியல் விழா, கோயில் விழா எனப் பலதரப்படும். அவற்றுள் கோயிலில் கொண்டாடப்படும் விழாக்கள் திருவிழாக்கள் என்று சிறப்புப் பெயர் பெற்றன. கோயில் விழாக்கள் மக்களை ஒன்றுபடுத்தவும் , மதச்சடங்குகளை மறவாமல் பாதுகாக்கும் ஆற்றலும் உடையன.

கொங்கு ஏழு தலங்கள்

1. வெஞ்சாமாக்கூடல் , 2. திருமுருகன் பூண்டி, 3. திருப்பாண்டி கொடு முடி, 4. பேரூர், 5. அவினாசி, 6. திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் , 7. பவானி இவற்றின் திருவிழாக்களைப் பற்றி இக்கட்டுரை எடுத்து இயம்புகிறது.

4.9 சைவத்திருவிழாக்கள்

முனைவர் எம். வசந்தமல்லிகா
அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

சைவ சமயக் கடவுளுக்கு எடுக்கப்படும் திருவிழாக்கள் பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் பேசப்படுகின்றன. சைவ சமயத்தின் பழமைபற்றியும் சைவ சமயக்கடவுளைப் பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது. சைவ சமயத் திருவிழாக்களாகிய சித்திரைத்திருவிழா , வைகாசித்திருவிழா, ஆவணித்திருவிழா, விநாயகர் சதுர்த்தி , அறுபத்துமூவர் விழா ஆகிய விழாக்கள் பற்றிப் பல அரிய செய்திகளையும் நுட்பங்களையும் இக்கட்டுரை வெளியிடுகிறது.

4.10 திருமழபாடி ஊடல் உற்சவம்

டாக்டர் சு. வேங்கடராமன்
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்

திருமழபாடித் தலத்தில் நடைபெற்றுவந்து இக்காலத்தில் வழக்கிறந்துபோன ஊடல் உற்சவம் குறித்த அறிமுகமும் ஆய்வுமாக இக்கட்டுரை அமைகிறது. மார்கழிமாதம்திருவாதிரை நாளில் இந்த உற்சவம் நடைபெற்று வந்தது. இறைவன் இறைவி இருவர்க்கும் இடையில் ஊடல் ஏற்பட்டு , இறைவனைத் திருக்கோயிலுள் அனுமதிக்க இறைவி மறுத்துவிட, சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளிப் பாடி அவர்களின் ஊடலைத் தீர்த்து வைக்கிறார் இறைவன் - இறைவி இருவரும் சேர்ந்த கோலத்தில் காட்சி தந்து அருள்பாலிக்கின்றனர். பின்னர், சுந்தரர் பாடி மகிழ, இருவரும் திருக்கோயிலுள் எழுந்தருள்கின்றனர்.இறைவி ஊடிக்கொள்வதால் , ஊடல் எனப்பட்டது. திருவூடல் கண்டவர்க்கு மறுவூடல் இல்லை என்பது மக்கள் வழக்கு.

இவ்விழா நடைபெறும் முறையை விரிவாக இக்கட்டுரை விளக்குகிறது.

4.11 THE CAR FESTIVAL OF LORD SRI NATARAJA

Prof. K. Balachandran
Annamalai University

Tamil Country abounds in temples - both Saiva and Vaishnava temples. These temples have been playing an important role in shaping and deciding the history and progress of our state. Thinking, clarity and wisdom are necessary for a purposeful life. The aim of one's life - is not only to live - but to be away from, our animalistic life, live a humanitarian life and atlast attain the 'moksha'. A life with religion is the real life and a life sans religion is not at all a life. If a life has to have completion and fruition, religion is a must.

Religion exphasises the existence and the necessity of God Almighty. For a prosperous and happy life we need God's blessings. God is shapeless and formless. But for an average man, this may be im-

possible. Worship of Gods is not just a ritual. It is a lively effort, a thinking , meditation and a pleaure.

Each temple has its own unique festivals. In chidambaram Sri Nataraja temple, yearly twice, in the month of Ani (Ani Thirumanjanam) and Markazhi (Markazhi Thiruvadhirai) a ten day car festival is celebrated. What does this Saiva festival signify ? The paper purports to explain the relevance and other details of this Saivite festival.

4.12 திருவெம்பாவைத் திருவிழா

யாழ் சுந்தரம்
ஓய்வு பெற்ற தமிழாசிரியர், மதுரை

சு.சந்தரா
மதுரை .

மகளிர் பற்றிய இலக்கிய வகைகளில் பாவை நோன்பும்ஒன்று . இது தொன்மைக் காலம் முதல் தொடர்ந்து வரும் முறைமை. இதனை ,

" வெம்பா தாக வியல்நில வரைப்பு என
அம்பா ஆடலின் ஆய்தொடிக்கன்னியர் " எனப் பரிபாடல் குறிக்கிறது.

மாணிக்கவாசகரின் திருவாசகத்துள் , " எம்பாவாய்" என முடியும் 20 பாடல்கள் திருவெம்பாவை எனப்படுகின்றன. மகளிர் செயல்களுக்கு மணிவாசகப் பெருமான் இலக்கிய வடிவம் தந்தார் ; அவ்விலக்கியம் கோயில் திருவிழாக்களில் இன்றியமையாத இடம் பெற்றமை நோக்கற்பாலது.

" சத்தியை வியந்தது" என முன்னோர் உரைத்த குறிப்பின் வழி த் திருவெம்பாவைத் தத்துவம் உய்த்துணரப்படுவதோடு ,திருவிழா நிகழ்வும் விளக்கப்படுகிறது.

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் , மதுரை.

3. அருள்மிகு திருமறைநாதசுவாமி திருக்கோயில் ,திருவாதவூர் என்ற இரு கோவில்களிலும் நிகழும் திருவெம்பாவைத் திருவிழா ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

'திருவெம்பாவைத் திருவிழாக் காலங்களில் ஏனைய திருமுறைகள் பாடுதல் கிடையாது ; கூடாது '. என்பது இன்றியமையாக்

குறிப்பு. அவ்வழி இவ்விழா நிகழ்வின் பொருண்மையும், தத்துவமும் , உட்பொருளும் விளக்கப்படுவது ஆய்வின்பாலது.

4.13 FESTIVALS OF LORD NATARAJA IN CHIDAMBARAM

Dr. V. Geetha
Annamalai University

Hindu religion consists of mainly two differet groups viz, Saivism and Vaisnavism. People those who are following the Saivism are considered as Saivites. Where as the people those who are following Vaishnavism are said to be Vaishnavites. The Saivites worship the Lord Siva and the Vaishnavites worship the Lord Vishnu. Lord Shiva is worshipped in different names such as Sankarar, Iswaran Natarajar etc.

The aim of this paper is to describe the festivals of Lord Nataraja taking place in Chidambaram. There are two festivals celebrted for Lord Nataraja every year. It is conducted by the Dikshiter and they adopt cultural and Religion activites very systematically.

Under the following heads, the festivals are explained in detail in the paper.

1. Types of festivals.
2. Myth related to these festivals.
3. Differences between these two festivals.
4. Peculiarities/ greatness found in these festivals.
5. Religious and customary activities found in these festivals.

அமர்வு ஐந்து

சைவத் திருக்கோயில்கள்

5.1 தமிழ்க் கல்வெட்டுக்களில் காணும் கோயில் வளர்ச்சியும் அறவியல்தளர்ச்சியும்

முனைவர் கா.அரங்கசாமி
கோபி

சைவத்திருக்கோயில்கள் அறத்தின் தலையூற்றுக்கள். சமுதாய நல மேம்பாட்டு வாழ்வியல் மையங்கள். சிவனே அறவோன் ;அவனது ஊர்தி அறத்தின் வடிவம்; உமாதேவியார் 32 அறங்களின் செயல் வடிவம் . இத்தகு சீர்பெற்றதிருக்கோயில்கள் வளர அறப்பணியும் அறவியல் சிந்தனையும் வளம் பெற்றன. ஆனால் அரசியல் - பொருளியல் - சமய மாற்றங்களால் அறவியல் சிந்தனைகள் தளர்வுற்றன. மீண்டும் நமது திருக்கோயில்கள் மக்கள் வாழ்வின் நலமும் வளமும் நல்கும் சமுதாய மையங்களாக வேண்டும். எனவே அறவியல் தளர்ச்சிக்குரியவற்றைக் கண்டறிந்து போக்குதல் நம்கடன்.அதுவே இக்கட்டுரையின் கருத்தாம்.

நடுகல் - கற்பொறிப்பு - வீரக்கல் - குகைக் கல்வெட்டுக்கள் - தமிழில் கல்வெட்டுக்கள் - பல்லவர் கிரந்தக் கல்லெழுத்துக்கள் - பாண்டியர் சோழர் காலம் - வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் - கல்வெட்டுக்களின் வளர்ச்சி - அரசியல் சமூகப் பண்பாட்டு வரலாற்று ஆவணம் - அறவியல் களஞ்சியம் - காலக்கண்ணாடி- மெய்க்கீர்த்திகள் -செப்பேடுகள் - இலக்கியத்தரம் - விசயநகர ஆட்சி- கல்வெட்டுத்தமிழின் தரம் தாழ்ந்தநிலை நடுகல் வழிபாடு - கொற்றவை கோயில் - ஆலமர் செல்வன் - திணை நிலத்தெய்வங்கள் -முருக வழிபாடு - சிவனே முழுமுதல் மெய்யியல் தெய்வம். சைவக் கோயில்களின் வளர்ச்சி - சோழப்பேரரசு விண்முட்டும் விமானங்கள் கொண்ட திருக்கோயில் வளர்ச்சி - அறவியல் ஆக்கம். பாண்டியர் பணி - விசயநகர ஆட்சி - அறவியல் தளர்ச்சி. அறம் - குறள்தரும் விளக்கம் - 32 அறங்கள் - 'அறமெனப்படுவது' மணிமேகலை - சமய அறவியல் - இடைக்கால இக்கால அறவியல் சிந்தனைகள் - மாந்தவினத்துக்கு வளமும் நலமும் ஆக்கமும் காப்பும் கடமையும் ஆன்மீக உள்ளொளியும் உணர்த்தி வாழ்வாங்கு வாழவைப்பதே அறம் - ''கண்டார் கானா வுலகத்தே காதல் செய்து நில்லாதே .உன் மேல் உண்டு மிக்க நல்லறம் உலகறியச் செய் '' என்பது கல்வெட்டாணை. கோயிலின் அறவியல் சிந்தனை - நிலையம் -

அறப்புறங்கள் - அறக்காப்பகம் - எண்ணிறந்த கோயில் வளர்ச்சி - கொடைகளின் வளர்ச்சி - அறம் செய்வதை விடச் செய்த நல்லறக்காப்பே முதன்மை - கோயில் கட்டுவதை விடக் கட்டியதைக் காப்பதே முதற்கடன்.

5.2 திருவோத்தூர் திருத்தல வரலாறு

ந. அனந்த நாராயணன்
சென்னை

திருவோத்தூர்திருத்தலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ளது. தக்க யாகத்திற்குப் பிறகு இத்தல்த்தில் பார்வதி பிறந்து பேதைப்பருவம் அடைந்தபோது இறைவன் வந்து இறைவியை ஆட்கொண்டான். இக்கோயில் பற்றிய செய்திகள் சம்பந்தர் தேவாரத்திலும் பெரியபுராணத்திலும் காணக் கிடைக்கின்றன. இக்கோயிலின் சிற்பங்கள் சம்பந்தர் காலத்திற்கு முற்பட்டவை. பிற்காலத்திலேயே கற்றளியாக மாற்றப்பட்டிருக்கலாம். இக்கோயிலிலுள்ள செப்புப் படிமங்கள், நடத்தப்படும் திருவிழாக்கள் பற்றி இக்கட்டுரை விரிவான செய்திகளைக் கூறுகின்றது. சோழர்காலத்து முப்பது கல்வெட்டுக்கள் உட்பட மொத்தம் 74 கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. இக்கோயில் ஆதித்த சோழன் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம்எனத் தெரிகிறது. அதைத்தொடர்ந்து பாண்டியர் ,சம்புவராயர் மற்றும் விசயநகரப் பேரரசர் காலத்திலும் திருப்பணிகள் செய்யப்பட்டு வந்துள்ளன.

5.3 சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்

மா. இராமச்சந்திரன்
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்

திருச்செந்தூர் - கன்னியாகுமரிக் கடற்கரைச்சாலையில் பதின்மூன்று கி.மீ. தொலைவில் குலசேகரன்பட்டினம் உள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வூர் சவம் வளர்க்கும் திருத்தலம். இங்குச் சிதம்பரேஸ்வரர் கோவில் உட்படப் பல திருக்கோயில்கள் உள்ளன.

சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் வரலாறு.

இக்கோவில் 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. தில்லை நடராசப் பெருமானின் திருக்காட்சி இத்தலத்தில் கிடைக்கப்பெற்றமையால் ,இது தென்தில்லை என்று அழைக்கப்படுகிறது.

கோவில்அமைப்பு

கோயிலின் தலைவாயில் மேற்கு நோக்கி உள்ளது. சைவ ஆகம விதிப்படி பல மண்டபங்களைப் பெற்றுள்ளது. கோயிலைச் சுற்றிலும் வெளிவீதி உள்ளது. சிற்சபையில் நடராசர் திரு நடனம் புரிகிறார். சுற்றுப்பிரகாரத்தில் மகாகணபதி , குடதிசை விநாயகர் ,சனீஸ்வரர் , சந்திரர் , சூரியன் ,தட்சிணாமூர்த்தி போன்ற தெய்வங்களின் சந்நிதிகள் உள்ளன.

வழிபாடு

சிவாகம முறைப்படி நாள் வழிபாடு நடைபெறுகின்றது. மார்கழித் திருவாதிரை , பங்குனி உத்திரம் போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

5.4 சைவத்திருக்கோயில்கள்

முனைவர் என். காந்திமதி லெட்சுமி
ந.பி.சி. மகாலிங்கம் மகளிர் கல்லூரி ,தூத்துக்குடி

முன்னுரை

உலகில் ஒவ்வொரு சமயமும் தனித் தனியே தன் வழிபாட்டு முறை, பண்பாடு முதலியவற்றிற்கேற்பக் கோயில்களை அமைத்துள்ளன. ஆயினும் நம் தமிழ் நாட்டில் சைவம் பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்த காரணத்தால் பல எண்ணற்ற கோயில்களைத் தன்னிடத்தே கொண்டு சிறந்துள்ளது. உலகின் பல பாகங்களில் இருந்து நம் நாட்டுக்கு வந்து செல்லும் பலரும் இக்கோயில்களின் எழிலையும் அமைப்பையும் கண்டு வியந்து போற்றுகின்றனர்.

திருக்கோயில்களும் சமுதாயமும்

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பதற்கிணங்க மக்கள் வாழ்க்கையில் உயிர்நாடியாகக் கோயில்கள் அமைந்துள்ளன. சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகட்குக் கோயில்கள் காரணமாக அமைந்துள்ளன.

திருக்கோயில்களும் இலக்கியங்களும்

தமிழ் இலக்கியத்தில் கோயில்கள் பேசப்படும் முறைபற்றி ஆராயப்படுகின்றது. புராணங்களில் மட்டுமல்லாமல் , சங்க நூல்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் கோயில்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

திருக்கோயில்களும் மன்னர்களும்

தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் இத்தகைய உயர்ந்த சிறப்படைதற்குப் பெருங்காரணம் இந்நாட்டையாண்ட மன்னர்கள்தாம். பண்பாடுகள் தமிழகத் திருக்கோயில்களால் வளர்க்கப்பட்டன.

முடிவுரை

தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் அமைப்பு, சிறப்பு ,வழிபாடுகள், வழிபாட்டின் நோக்கம் ,திருக்கோயிற் பணிகள் இவற்றை ஆராய்ந்தன. சமயம் தழைத்தோங்க , சமய நெறிகள் வளர மிகப் பெருங்காரணமாக அமைவன தமிழகத்தின் திருக்கோயில்கள்.

5.5 காஞ்சி சிவன் கோயில்கள்

முனைவர் க. குளத்தூரான்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

காஞ்சியில் சைவ சமயம் வளர்ச்சிக்கும் அங்குத் தோன்றிய சிவன் கோயில்களுக்கும் உள்ள உறவினை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பல்லவ, சோழ ,பாண்டிய , விஜயநகர அரசினர் காலத்தில் காலந்தோறும் புதிய அழகியல் , கலைத் தத்துவங்கள் கலைஞர்களிடையே பரிணமித்து வளர்ந்துள்ளதைக் காணலாம். அதே போன்று தத்துவ , சமயச் சிந்தனைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் , பாதிப்புகளும் இக்கோயிற் கலைகளையும் பாதித்துள்ளன. காலந்தோறும் தோன்றிய கோயில்களின் கலை வளர்ச்சிக்குச் சமயம் மற்றும் தத்துவமே முக்கிய காரணங்களாகும். புதிய வடிவங்களும் , வழிபாடுகளும் காலந்தோறும் புதிது புதிதாகத் தோன்றுகின்றன. சமயத் தேவைகளுக்காக இவை ஏற்படுகின்றன. இதனால் எக்காலத்தில் எவ்வாறான மாற்றங்கள் கோயில்களில் ஏற்பட்டுள்ளன என்பதை அவ்வக்காலத்துச் சமய , தத்துவ வரலாற்றுடனும் அழகியல் வரலாற்றுடனும் பார்ப்பது அவசியமாகிறது. எவ்வழிபாடுகள் உயர்நிலை பெறுகின்றன ; தளர்ச்சியடைகின்றன அல்லது புதிதாக

ஏற்பட்டுள்ளன என்பனவற்றைக் கோயிற்கலை வரலாறு மூலமாக அறியலாம். மேலும்கோயிற்கலை பற்றிய தத்துவங்களிலும் அழகியல் சிந்தனைகளிலும் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களுக்குரிய காரணங்களும் வரலாற்று முறையில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

ஆராம்ப காலச் சைவப் பிரிவுகள் பல காஞ்சியில் நிலைபெற்றிருந்தமையை ஏகாம்பரேஸ்வரர் , சோளீஸ்வரர் , காயாரோகினீஸ்வரர் முதலிய கோயில்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. புராணங்களும் , ஆகமங்களும் கோயில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளன. பல்லவர் காலத்துச் சிவன் கோயில்கள் புராண மரபுகளுக்கே பெரிதும் முக்கியத்துவம் அளித்துள்ளன. சோழர் காலத்துச் சிவன் கோயில்கள் ஆகம மரபுகளைப் பெரிதும் அடியொற்றி அமைக்கப்பட்டன. கோயிற் கட்டுவதில் ஒவ்வொரு சிவன் கோயிலும் எந்தெந்த ஆகம மரபுகளைப் பின்பற்றின என்பதைத் தெளிவாக வரையறுக்க இயலாவிட்டாலும் காஞ்சி சிவன் கோயில்கள் அமைப்புகளை ஆராயும் போது அவை ஒரு திட்டமான அமைப்பினைப் பின்பற்றி வந்துள்ளமையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அழகியல் கோட்பாட்டு ரீதியாகவும் வழிபாடுகளிலும் தத்துவப் போக்குகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும் பல்லவர் காலம் முதல் பிற்கால விசயநகர காலம் வரையிலும் இலிங்க வடிவங்களும் சிவமூர்த்தங்களும் கோயில் உறுப்புக்களும் வெவ்வேறு உருவ அமைப்புகளில் வளர்ச்சி பெற்று வந்துள்ளமையைக் காஞ்சிக்கோயில்கள் எடுத்துக் காட்டுகின்றன.

5.6 யாழ்ப்பாணத்துச் சைவக் கோயில்கள் பற்றிய ஆய்வு

முனைவர் அருணாச்சலம் சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணம் இலங்கையின் வடக்குப் பிரதேச மாவட்டமாகும். இங்கு வாழும் பெரும்பான்மையான மக்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாவர். இவர்கள் வணங்கும் கோயில்கள் பற்றிக் காலத்துக்குக் காலம் ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. இவை பற்றிய ஒரு வரலாற்று நோக்காக இக்கட்டுரை அமைகின்றது.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றுப்புகழ்மிக்க கோயில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும். முதலியார் குல.சபாநாதன் என்பவர் 1971 ஆம் ஆண்டு இலங்கையின் புராதன சைவாலயங்கள் என்ற தொடரில் நல்லூர்க் கந்தசுவாமி என்னும் நூலை எழுதினார். 1984 இல் இலங்கை இந்து சமயக்

கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கைத்திருநாட்டின் இந்துக் கோயில்கள் என்னும் நூலை வெளியிட்டது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல கோயில்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. 1985 இல் இம் மாவட்டத்திலுள்ள ஒரு பத்திரகாளியம்மனுடைய கோயில் பற்றி இக்கட்டுரையாளரும் அவருடைய துணைவியார் மனோன்மணியும் ஆய்வு செய்து இத்திமரத்தாள் என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டனர். 1989இல்இவ்விருவரும் வரலாற்றுப் பெருமைமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதிக் கோயில் பற்றி ஆராய்ந்து ஆற்றங்கரையான் என்னும் நூலை வெளியிட்டனர்.

1990 இல் யாழ்ப்பாணத்துக் கோயில்கள் பற்றி மூன்று ஆய்வுகள் வெளிவந்தன. அவை ப. புஷ்பரட்ணம் எழுதிய " சோழர் கால மண்ணித்தலைச் சிவாலயம் " , கா. சிவத்தம்பி எழுதிய " Divine Presence and / or Social Prominence - An Inquiry into the social Role of the places of worship in Yalppanam society , கி.பத்மநாபன் எழுதிய " Murukan, The Divine Child : The kantacami Temple at Nallur " என்பனவாகும்.

1993 இல் வி. சிவசாமி எழுதிய " யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பிரதான விநாயகர் ஆலயங்களும் வழிபாடும்'' என்னும் கட்டுரை வெளிவந்தது. சி. பத்மநாதன் அவர்களால் பதிப்பிக்கப்பட்டு இலங்கை இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 1994 இல் வெளியிடப்பட்ட நூல் இலங்கையின் இந்துக் கோயில்கள் என்பதாகும். இதில் யாழ்ப்பாணத்துக் கீரிமலைச் சிவன் கோயில் , நாச்சியார் கோயில் பற்றிய இரு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு வெளிவந்த இவ்வெழுத்துக்களை ஆராய்ந்து அவற்றின் சிறப்பான பண்புகளை இக்கட்டுரை விரிவாக ஆராயவுள்ளது.

5.7 வரலாற்றில் திருக்குற்றாலத் திருத்தலம்

சொ. சந்திரவாணன்
தொல்பொருள் ஆய்வுத்துறை , குற்றாலம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே வரலாற்றுத் தடயங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் சிறப்புடைய நகர் திருக்குற்றாலம் ஆகும். நுண்கற்கருவிகளும் , முதுமக்கட் தாழிகளும் பழைய குற்றாலத்திற்கு அருகில் 'அமுத கண்ணி ஆற்றங்கரையில்' கிடைக்கின்றன.இது பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பே மனித நடமாட்டம்

இந்த ஊரில் இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

எழுத்துச் சான்று கிடைக்கும் வரலாற்றுக் காலமாக , இங்குள்ள (மலை மீதுள்ள) சன்யாசிப்புடவு என்ற இடத்தில் காணப்படும் மிகப்பழமையான கல்வெட்டைக் குறிப்பிடலாம். கல்வெட்டியல் அறிஞர்களாலும் படிக்கவியலாத நிலையில் அமைந்த மிகத் தொன்மையான எழுத்து வடிவமாக அமைந்துள்ளது. இவ்வெழுத்து உருவ எழுத்திற்கும் ஒலியெழுத்திற்கும் இடைப்பட்ட காலமாக இருக்கவேண்டும்.

இதனையடுத்து இவ்வூரின். காலப்பழமையை விளக்குவது சம்பந்தர், அப்பரின் தேவாரப் பாடல்கள் ஆகும். இவை குற்றால நகரையும் இங்கு எழுந்து அருளும் சிவனையும் சிறப்பாகக் கூறுகின்றனர்.

சம்பந்தரால் பாடப்பட்டிருப்பினும் அவர்காலத்திற்குரிய பழமையான கோயில் அமைப்பு இங்கில்லை. கோயில் உட்பகுதியில் சில தூண்களில் மாறஞ்சடையன் , பரகேசரி போன்ற முற்காலப் பாண்டியர் மற்றும் சோழர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை பழம் கோயில் இருந்ததற்கு ஆதாரம் கூறுகின்றன. பல கல்வெட்டுச் செய்திகளின் வழியே இத்திருத்தலத்தின் வரலாற்றை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

5.8 இராமேச்சுரம் நிறுவப் பெற்ற வரலாறு

பா . சிவநேசன்
அரசு ஆடவர் கல்லூரி ,கும்பகோணம்

கோயில் - ஈச்சரம் - அப்பர் குறிப்பிடும் ஈச்சுரங்கள் இராமேச்சுரம் பாண்டிநாட்டுச் சிவத்தலங்கள் - எட்டாவது தலம் - திருக்கோயில் அமைத்தவர் பெயரால் வழங்கப்பெறல்.

நோக்கம் - இராமன் இராவணனை அழித்த பாவம் நீங்க வழிபட்டமை நிறுவிய வரலாறு - இராமேச்சுவரத்தில் சிவலிங்கத்தை நிறுவுவதற்கு இலிங்கம் கொண்டுவர அநுமார்காசி செல்லல் திரும்பி வரக் காலம் தாழ்த்தவே சீதை மணலால் செய்த இலிங்கத்தை வழிபட்டார் இராமர். எனவே அவ்விலிங்கம் இராமநாதர் எனப்பட்டது. அநுமார் கொணர்ந்ததும் அங்கேயே நிறுவப்பெறல்.

இலக்கியச் சான்றுகள்

இராமன் இராமேச்சுரம் நிறுவியதைக் குறிக்கும் இலக்கியங்கள் - தேவாரப்பதிகங்கள் - பெரியபுராணம் சேதுபுராணம் தேவையுலா -

கூர்மபுராணம் - திருவிளையாடற்புராணம் முதலியன

வரலாறு ஒப்பீடு

திருவிளையாடற் புராணத்தில் வரும்செய்திகளை விரிவாக ஆராய்தல்.

இராமகாவியங்கள்

வால்மீகி, கம்பன் . வால்மீகி , இராமன் இராமநாதரை வழிபட்ட பின்பே இராவணவதம் நிகழ்த்தினார் எனல் - இருவர் காவியங்களிலும் வழிபட்ட குறிப்பு இடம் பெறாமையைச் சுட்டல்

கம்பர் சுட்டாததற்குரிய காரணத்தை ஆராய்தல்

இராமாயணம்இயற்றவேண்டுகோள்விடுத்தோர் - கம்பரின் காலம் - கம்பர் சடையப்பவள்ளல் , 3ஆம் குலோத்துங்கன் எனுமிருவரின் வேண்டுகோளினால் விடுத்திருக்கலாம்.

தேவாரத்தில் இராமேச்சுரம்

தேவாரம் குறிப்பிடும் இராமேச்சுரச் சூழல் - சிறப்பு முதலியன

திருக்கோயிலமைப்பு

தொடக்கம் - வளர்ச்சி நிலைகளை ஆராய்தல் பூங்கோயில் மண்குடிசை - கற்றளி - திருப்பணிகள் - இலங்கை பராக்கிரமபாகு , இராமநாதமுனிவர் , விஜயரகுநாத சேதுபதி முதலியோரது பணிகள் - கல்வெட்டுச்ச ான்றுகள். முடிவுரை.

5.9 காட்டுமன்னார்கோயில் வட்டாரக் கோயில்கள் - ஒரு பார்வை

முனைவர் த. சின்னத்தம்பி
பூம்புகார் கலைக்கல்லூரி

காட்டுமன்னார்கோயில் வட்டம் தமிழகச் சைவசமய வரலாற்றில் ஒரு தனியிடத்தைப் பெற்று மிளிர்கிறது. இக்கோயில் வரலாறுமற்றும் சைவச் , வைணவ இலக்கிய எழுச்சிக்கு இப்பகுதி எங்ஙனம் உதவியது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. சைவத் திருக்கோயில்கள் , சைவ அடியார்கள் , திருநாரையூர் , திருக்கடம்பூர் , திருவோமாம்புலியூர் ,

திருக்கானாட்டு முள்ளூர் , திருமுட்டம் போன்ற தலைப்புக்களில் பல அரிய செய்திகளை இக்கட்டுரை வெளியிடுகிறது. காட்டுமன்னார் கோயில் வட்டத்திலுள்ள சைவத் திருக்கோயில்களைப் பற்றிய பல தலபுராணங்கள் உள்ளன. இத்திருக்கோயில்களிலுள்ள கல்வெட்டுக்கள் சைவ சமய நூல் வளர்ச்சிக்கும் தமிழ் நூல் வளர்ச்சிக்கும் பெரிதும் பயனுடையதாக விளங்குகின்றன. இக்கோயிலில் உள்ள பல இறை மூர்த்தங்கள் பல தத்துவக் கருத்துக்களை விளக்குகின்றன.

5.10 சிவ ஆலய ஓட்டம் - குமரியில் சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் வழிகாட்டும் பல்சமய வழிபாடு

சுகுமாரன் . எஸ்., மற்றும் இராஜ். எ.டி. எஸ்.
ஸ்காட் கிறித்துவக் கல்லூரி, நாகர்கோவில்

பாரதத்தின் தென்கோடியாம் குமரி மாவட்டம் பல்துறையில் புகழ்பெற்றிருப்பதோடு சைவத்திலும் சிறந்து விளங்குகிறது. மொழிவாரியாக மாநிலங்களைப் பிரிக்கையில் அப்போதைய திருவிதாங்கூரோடு இணைந்திருந்த குமரி மாவட்டத்தைப் பிரித்துத் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது. இத்தகைய (திரிசங்கு நிலையில்) குமரியின் திருக்கோயில்கள் பல வகைகளில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. சைவமும் , வைணவமும் தழைத்திருந்த காலத்திலும் மற்ற இடங்களில் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டிருந்த நேரத்திலும் 'அரியும் அரனும்' ஒன்றே என்ற தத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் வாயிலாக உருவான சிவ ஆலய ஓட்டம் மக்களுக்குச் சகோதரத்துவ உணர்வைத் தூண்டி மானுடம் தழைத்து ஓங்க வித்திட்டது என்பது மிகையல்ல.

எழில்மிகுந்த குமரியில் எண்ணிறந்த ஆலயங்களும் சிறு கோயில்களும் ,இயற்கைக் கோயில்களும் இருப்பினும் புகழ்பெற்ற பன்னிரு சிவ ஆலயங்களை ஒரே நாளில் ஓடி இறைவனை வழிபடுவது சிறப்புடைத்து.இத்திருக்கோயில்கள் முறையே திருமலை ,திருக்குறிச்சி (திக்குறிச்சி) ,திருபரப்பு (திற்பரப்பு) , திருநந்திக்கரை , திருபொன்மனை (பொன்மனை) திரு பன்னிபாகம் (பன்னிப்பாகம்) , திருகல்குளம் (கல்குளம்) ,திருமேலாங்கோடு (மேலாங்கோடு) , திருவிடைக்கோடு , திருவிதாங்கோடு , திருபன்னிகோடு , திருநட்டாலம் ஆகியவனவாகும். இவையனைத்தும் குமரியில் கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் நிலைகொண்டுள்ளன. பல்சமய வழிபாடு இங்கு இருந்த காலத்தும் நண்பர்கள் , உறவினர்கள் மற்றும் பல சமுகத்தினர் ஒன்றாக

இணைந்து பக்தி பரவசத்தோடு 'அரி , அரன்' குறித்த பல்வகைப் பக்தி குரல்கள் எழுப்பிய வண்ணம் காவி ஆடையும் சிகப்புப் பட்டும் அணிந்து மாசிமாதம் 'கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி திதி' திருவோண நட்சத்திர நாளன்று இறைவனை வழிபடுவர். திருமலையில் தொடங்கும் இவ்வழிபாடு திருநட்டாலத்தில் வரும்போது 'அரியும் , அரனும்' ஒன்று என்பதை உணர்ந்து அதன் பின் மும்மூர்த்திகளும்இணைந்த 'தாணுமாலயனைச்' சுசீந்திரத்தில் வழி பட்டு ஓட்டத்தினை நிறைவுபடுத்துவதும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் ' என உணரச் செய்வதும் பெருமை சேர்க்கும் தமிழ்ப் பண்பு.

இவ்வாலய வழிபாடு நிகழும் திருக்கோயில்களின் சிறப்புகள் , வழிபாடு பற்றிய குறிப்புகள் , மக்கள் மத்தியில் உலவும் கதைகள் , பக்தர்கள் எழுப்பும் உணர்ச்சிக் குரல்கள் ,இங்கு நடைமுறையிலுள்ள சகோதரத்துவப் பண்புகள் , பாதுகாக்கப்படும் மரபுகள் மற்றும் நிறைவு நிகழ்ச்சிகள் பற்றி ஆய்ந்து அறிந்த உண்மைகளை விளக்கவிழைகின்றது இக்கட்டுரை.

5.11 நூலக வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு

பா. சுந்தரேசன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

மக்களை மாக்கள் நிலையிலிருந்து விடுவித்துப் பகுத்தறிவு உடையவர்களாக , பண்பாடு மிக்கவர்களாக , சிறந்த சமுதாய உறுப்பினர்களாக மாற்றி அவர்களையும் அவர்கள் வாழ்கின்ற சமுதாயத்தையும் உலக அரங்கில் தலை சிறந்து நிற்கத் துணை செய்வது கல்வி ஆகும். இக்கல்வியை மக்களுக்கு அளிக்கும் பல்வேறு அமைப்புகளில் நூலகங்களும் இன்றியமையாத பங்காற்றுகின்றன. எனவே தான் ''வீட்டுக்கொரு நூலகம் '' என்ற பொன்மொழி வழங்கி வருகின்றது. இந்நூலகங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவை. நூலக வளர்ச்சியில் பல்வேறு அமைப்புகளும் , தனி மனிதர்களும் , சமுதாய நல அமைப்புகளும் தம் பங்களிப்பைச் செலுத்தியுள்ளமையை அறியமுடிகிறது.

சமுதாயத்தில் காணப்படும் பல அமைப்புகளில் ஒன்று சமயம். சமயம் இறைவனை அடைய வழிகாட்டுவதுடன் சமுதாய மக்களின் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில் ஆக்கமும் , ஊக்கமும் அளித்து வருகிறது. சமயத்தின் கூறுகளில் குறிப்பிட்ட இடம் வகிப்பன கோயில்கள்.

இக்கோயில்கள் வழிபாட்டு இடங்கள் என்ற நிலையில் மட்டுமன்றிச் சமுதாய, பொருளாதார , அரசியல் மையங்களாவும் திகழ்ந்துள்ளன. சைவ சமயப் பணிகளில் கோவில்களைச் சார்ந்த மடங்களும் பெரும் பங்காற்றியுள்ளன. பங்காற்றியும் வருகின்றன.

இவ்வகையில் சைவ சமயம் தன் கல்விப் பணிகளில் ஒன்றாகிய கோயில்களில் நூலகங்களை நிறுவிச் சமயப் பணியுடன் மக்களுக்குக் கல்விப்பணியையும் ஆற்றியுள்ளமை குறிப்பிடுதற்கு உரியது ஆகும்.

இவ்வகையில் சைவ சமயக் கோயில்கள் ஆற்றியுள்ள கல்விப்பணியின் ஒரு கூறாகிய நூலகப் பணிகள் பற்றியும், கோயில்களில் நூலகங்கள் இருந்தது பற்றியும் , கல்வெட்டுக்களில் நூலகங்கள் இருந்ததற்கான சான்றுகள் பற்றியும் நூலக வளர்ச்சிப் போக்கில் சைவ சமயத்தின் பங்களிப்புப் பற்றியும் ஆராயும் நிலையில் இக்கட்டுரை அமைகின்றது. சமயம் - சைவ சமயம் -இறைப்பணியுடன் சமுதாய நலம் பயக்கும் பணிகளையும் - கல்விப் பணிகளையும் மேற்கொள்ளும் செயல்கள் இக்கட்டுரையில் விளக்கப்பெறும்.

5.12 சப்தத்தானத்திருவிழா (ஏழூர்த்தலங்கள்) வலம் வருவிழா

புலவர் கோ. சுப்பிரமணியனார்
திருவையாறு

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய சிவபரம்பொருள் அருவுருவுத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள சைவத்திருக்கோயில்கள் தமிழகத்தே ஏராளம் ஏராளம். உலகளாவிய நிலையில் எண்ணற்ற சைவத் திருக்கோயில்கள் இருக்கின்றன; என்றாலும் என்றும் கருணை உள்ளத்தோடு கூடிய இறைவனின் அருளால் அவதரித்த சைவ சமய ஆச்சாரியப்பெருமக்களால் , பாடப்பெற்ற தலங்கள் - கோயில்கள் மிக்க நலப்பாடுடையன எனச் சான்றோர் பலரும் சாற்றுவதுண்டு. பாடல் சான்ற அத்தகைய சைவத்திருக்கோயில்கள் 276 எனக் கணக்கிட்டுள்ளனர்.

அவற்றுள் , அட்டமூர்த்தங்களை உடைய திருக்கோயில்களும் அட்ட வீரட்ட தலங்களும் சப்தவிடங்கத் தலங்களும் சப்தத்தானத்தலங்களும் பஞ்சபதத் தலங்களும் ஆறாதாரக் கோயில்களும் எனப் பல்வேறு பெயர்களில் காட்சியளிக்கின்றன.

தொகுப்புக் கோயில்களாக கொள்ளப்படுவனவற்றுள் , தஞ்சை மாவட்டத் திருவையாற்றைச் சூழ உள்ள சப்தத்தானத் தலங்கள்

குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசரின் பாடல் பெற்ற முத்திரை பதித்த தலங்களாக தொகுப்புத்தலங்களாக மக்களால் போற்றப்படும் தலங்களுள் மேற்குறப்பிட்ட சப்தஸ்தானத் தலங்கள் சிறந்தன .அவற்றின் விழாவும் சிறந்தன.

அவை திருவையாறு , திருப்பழனம் , திருச்சோற்றுத்துறை , திருவேதிகுடி, திருக்கண்டியூர் , திருப்பூந்துருத்தி ,திருநெய்த்தானம் என்பனவே சப்தத்தானத் தலங்கள் எனச் சிறப்புடன் போற்றப்பெறுவனவாம்

இவற்றை நம் ஆய்விற்கு எடுத்துக்கொள்வதன் நோக்கம் , சமயாச்சாரியர்களுள் திருநாவுக்கரசால் மட்டும் தொகுத்துக் குறிப்பிடும் நிலையில், மேற்குறிப்பிட்ட சைவத்திருக்கோயில்களின் அருமைப்பாட்டினை - அதன் உயர்வுத் தன்மையினை நம்மால் ஓரளவு நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது. அங்ஙனம் திருநாவுக்கரசு பெருமானாரால் பாராட்டி உரைக்கும் பாங்கு போற்றற்குரியதாக உள்ளதாதலின் இதன் காரணமறியவே இதனை நம் ஆய்விற்கு எடுத்துக்கொண்டோம்.

5.13 திருப்பெருந்துறைத் திருத்தலச் சிறப்புகள்

முனைவர் செ.சுப்பிரமணியன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சமயநெறியிலும் கடவுட்கொள்கையிலும் தனிச்சிறப்பு வாய்ந்த தொன்மையான மரபினையும் பண்பாட்டினையும் கொண்டிலங்கும் இப்பாரதத் திருநாட்டில் திருப்பெருந்துறை என்னும் சைவத் திருத்தலம் தற்போது ஆவுடையார் கோயில் என்ற பெயரில் புதுக்கோட்டை மாவட்டத் தென் எல்லையில் இருக்கிறது. திருக்கோயிலை நடுவாக வைத்து அதற்கு மேற்கிலும் கிழக்கிலுமாக இவ்வூர் நீண்டு அமைந்திருக்கிறது. நடுவிலே உள்ள கோயிலின் பெயரே , ஊருக்கும் உரிய பெயராக அமைந்து ஆவுடையார் கோயில் என்று அழைக்கப்பெற்று வருகிறது. இறைவன் சிவபெருமான்; ஆத்மநாதன் என்ற திருநாமம் கொண்டு ஆலயத்துக் கருவறையில் அரூபமாக அருள்பாலிக்கிறார். இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையும் யோகாம்பிகை என்று அழைக்கப்பட்டு அரூபமாக சிவயோகம் தருகின்றாள். இத்திருத்தலக்கோயிலைப் பெரிதாக உருவாக்கக் காரணமாக இருந்தவர் திருவாசகம் இயற்றிய மாணிக்கவாசகர்

ஆவார். பக்தனுக்கே முதலிடம் என்ற அடிப்படையில் ஆத்மநாதனிடம் உபதேசம் பெற்ற மாணிக்க வாசகர்க்கே உற்சவம் நடைபெற்று ஆனி , மார்கழி மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பொதுவாகச் சிவ ஆலயங்கள் கிழக்கு அல்லது மேற்கு முகப்பினைக் கொண்டிருக்கும் போது இவ் ஆலயம் தெற்குநோக்கி அமைந்துஇருக்கிறது. அதே நிலையில் மற்ற சிவ ஆலயங்களில் இருப்பது போன்று இங்குக் கொடிமரம் , பலிபீடம் , நந்தி ஆகியன இல்லை. சண்டேகேசுவரர் சந்நிதியும் இல்லை. இக்கோயிலில் நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோயில் சிற்பங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. இங்குள்ள கொடுங்கை ஆறு வகையான கம்பியாகக் கல்லாலேயே அமைந்துள்ளது. கிரேக்கம் , எகிப்து போன்ற நாடுகளின் குதிரைகள் சிலையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. 27 நட்சத்திரங்களின் உருவங்கள் நிலைப்படி ஒன்றிலும் 12 ராசிகளும் கற்சங்கிலிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. சிற்பங்கள் நரம்பு , எலும்பு , ரேகை , நகம் ஆகியன தெரியும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன. சப்தசுரக்கற்கள் இங்குக் காணப்படுகின்றன. நவக்கிரகங்கள் ஒன்றாக ஒரு பீடத்தில் இடம்பெறாமல் தூண்களில் இடம்பெற்று வழிபடப்படுகின்றன. இத்திருத்தலத்தின் இச்சிறப்புகள் விரிவாகக் கட்டுரையில் விளக்கப்படும்.

5.14 சைவத் திருக்கோயில்கள்

திருமதி த. செல்லம்மாள்
குந்தவை நாச்சியார் மகளிர் கலைக்கல்லூரி , தஞ்சாவூர்

திருக்கோயில்கள் , மக்களை ஆன்மீக நெறிக்கு வழிகாட்டி இறையருளைப் பெறுவதற்கு உதவுகின்ற வாயில்கள். ஆன்மாக்கள் இறை அருளில் மனம் லயிக்கும் இடமே ஆலயமாகும். கடவுள் வழிபாடே இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கை.

மக்களின் பசிப்பிணியையும் , உடற்பிணியையும் தீர்த்த அறநிலையங்கள் கோயில்கள் எனலாம். காலந்தோறும் இறைவழிபாட்டுக்குரிய இடமாக மட்டும் அல்லாமல் கலைகளைப் போற்றும் கருவூலமாகவும் சமூக ஒற்றுமைக்கு வழிகாட்டும் இருப்பிடமாகவும் விளங்கியுள்ளன.

சைவ நாயன்மார்கள் ஊர்ஊராகச் சென்று கோயில்கள் தோறும் எழுந்தருளிய இறைவனைப் பாடி இசையோடு சமயம் வளர்க்கக்காரணமாக இருந்தவை கோயில்களே.

சங்க காலச் சோழன் முதல் பிற்காலச் சோழர்கள் காலம் வரை கட்டடக்கலை , சிற்பக்கலை நுணுக்கத்தின் வரலாற்றுச் சான்றுகள் இன்றளவும் நிலைத்திருக்கவும் காலத்தினால் அழியாது , சைவநெறியின் அன்பு நெறியை உலகுக்கு உணர்த்தவல்லனவாய்க் கோயில்கள் அமைந்துள்ளன.

இக்கோயில்கள் வெறும் கலைச் சின்னங்களாக நின்றுவிடாமல், உலகச் சகோதரத்துவத்திற்கும் மனிதநேயத்தோடு கூடிய மனித மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் சமுதாயப் பணி சிறக்கச் சமுதாய நலத்திற்கு உதவும்போதுதான் உண்மையான உயர்வினை அடைய முடியும் என்பதை விளக்குவதே இக்கட்டுரையாகும்.

5.15 நெல்லையப்பர் கோயில் பரிவார ஆலயங்கள்-ஓர் ஆய்வு

முனைவர் மா. செந்தில் செல்வக்குமரன்
தொல்பொருள் ஆய்வுத்துறை ,பாளையம் கோட்டை

தொடக்க காலத்தில் ஒரு குறிப்பிட்ட தெய்வங்களை மட்டும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்துக் கோயில் அமைத்து வழிபடுவது வழக்கமாக இருந்தது. முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய இவை ஐந்தையும் ஐந்நிலத் தெய்வமாக வைத்து வழிபட்டு வந்தனர். இவற்றிற்கெல்லாம் தலையாயதான ருத்திரன் எனும், சிவனை அருவுருவமாக லிங்கவடிவில் வைத்து வழி பட்டனர். இவ்வழிபாட்டுமுறை 2000 ஆண்டுகட்கு முன்னரே இருந்து வந்துள்ளது.

இதன் பின்னர் மன்னர்கள் கோயில் எழுப்பிய காலத்திலும் சிறிய கோயிலை எழுப்பிக் கருவறையுள்ளே இக்கோயிலுக்குரிய தெய்வத்தை இடம் பெறச் செய்வதை வழக்கமாகக் கொண்டனர். இதனை அடுத்து வந்த கால கட்டத்தில் கருவறை, அரை மண்டபச் சுவர்ப் பகுதிகளில் கோட்டங்களை அமைத்துப் பிற தெய்வ உருவங்களை இடம்பெறச் செய்தார்கள்.

நாளடைவில் சிறிய கருவறைக் கோயிலைப் பெரியதாக்கிக் கட்டிய மன்னன் பல திருச்சுற்றுக்களைக் கட்டிப் பெரிய கோயிலாக்கி, ஆகம நூல்கள் வழிச் சில துணைக் கோயில்களை எழுப்பத் தொடங்கினார்கள். இதன் காரணமாகக் கோயில் திருச்சுற்றைச் சுற்றிப் பல துணைக் கோயில்கள் தோற்றலாயிற்று. இத் 'துணைக் கோயில்கள்' பரிவார ஆலயங்கள் என்றும், கோயிலின்றிக் காணப்படும் தெய்வங்கள் 'பரிவாரத் தெய்வங்கள்' என்றும் அழைக்கப்பட்டன.

ஒரு சிவன் கோயிலைச் சுற்றிப் பல சிவன் கோயில்கள் பரிவார ஆலயங்களாக அமைந்துள்ளன. இதற்குரிய காரணம் காணும்போது பல தலங்களுக்குச் சென்று வழிபட வசதியற்றோர் ஒரே தலத்தில் பல சிவத் தலங்களுக்குச் சென்று வழிபட்ட பலன்களைப் பெறலாம் என்ற காரணத்தால் பல லிங்க உருவங்களைக் கொண்டே கோயில்களை எழுப்பியுள்ளனர். இவை தவிர ஆளும் மன்னர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்பத் தங்களின் இஷ்ட தெய்வத்தைத், தாங்கள் ஆண்டதின் நினைவாகப் புதுக்கோயில் எழுப்பி அதனுள் எழுந்தருளச் செய்வர்.

நெல்லையப்பர் கோயிலில் 171 பரிவார ஆலயங்கள் இருந்தன என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவற்றில் குறிப்பிடத் தக்கவை பொல்லாப் பிள்ளையார், திருச்சிற்றம்பலமுடையார், சுப்பிரமணியப் பிள்ளையார், தென்முகக் கடவுள் ஆகிய தெய்வங்களின் துணைக் கோயில்கள் ஆகும். 171 துணைக் கோயில்களும் எந்தெந்தக் காலத்தில் எதனால் ஏற்பட்டன என்றும், எந்தெந்தத் தெய்வத்திற்குத் துணைக்கோயில்கள் ஒன்றிற்கு மேல் தோற்றுவிக்கப்பட்டன என்றும் அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

5.16 கொங்கு நாட்டில் சிவன் கோயில்கள்

புலவர் வீ. சொக்கலிங்கம்
தலைமையாசிரியர் , ஈரோடு

கொங்கு நாட்டில் காணப்படும் பாடல் பெற்ற தலங்கள், வைப்புத் தலங்கள் ஆகியவை தவிர முந்நுற்றுக்கும் மேற்பட்ட சிவாலயங்கள் இத்திரு நாட்டில் காணப்படுகின்றன. இவைகளில் சிவலிங்கத் திருமேனிக்குப் பதிலாக வேல்களாக நட்டுத் தொன்றுதொட்டு வழிபட்டுவருகிறார்கள். இக்கோயில்களின் மூலஸ்தானம் பற்றிய கருத்துக்கள், அபிஷேக ஆராதனை பற்றிய கருத்துக்கள் ஆகியன குறிக்கப்படுகின்றன. இக்கோயில்களில் முருகனுக்கும் விநாயகனுக்கும் தனிச்சந்நிதிகள் காணப்படுகின்றன. அம்பாளுக்கென்று தனிச்சந்நிதி இல்லை. பண்டார வகுப்பினர் அர்ச்சகர்களாக உள்ளனர். அர்ச்சகர்கள் தம் வாயைத் துணியால் கட்டிக்கொண்டு அர்ச்சனை செய்கிறார்கள். இப்பகுதியில் வாழும் மக்களின் நம்பிக்கைகள் பற்றியும் பல அரிய செய்திகளை இக்கட்டுரை வெளியிடுகின்றது. இக்கோயில்கள் சைவத் திருக்கோயில்களாகவே கருத்தப்படவேண்டும் என்ற கருத்தை

இக்கட்டுரை வெளியிடுகின்றது.

5.17 திருமுதுகுன்றம், பழமலைநாதர் கோயிலில் ஐந்து

முனைவர் சு. தங்கத்துரை
கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி, விருத்தாசலம்

''சிவாயநம''என்னும் ஐந்தெழுத்து வினைகளைச் சுட்டெரித்து ஆன்மாவின் அறியாமையை அழித்துவிடுகிறது. உயிரின் ஆணவ மலத்தைப் போக்குவதற்கு ஐந்தெழுத்து சிறந்த கருவியாகும். அதை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருந்தால் கூற்றுவனிடமிருந்து விடுபடலாம் என்கிறார் ஞானசம்பந்தர் (3. 22. 1).

ஐந்தெழுத்தைக் கோயிலில் வந்தவுடன் தங்களை அறியாமலே சிந்திக்கும் நிலை வரவேண்டும் என்பதற்காகவே ஞானிகள் பல உத்திகளைக் கோயில்களில் அமைத்திருப்பதைக் காணமுடிகிறது.

சமயக்குரவர்களாலும், அருளாளர்களாலும் பாடப்பட்ட நடுநாட்டுத்தலங்கள் 22இல் ஒன்றான, முத்தித்தலங்களுள் ஒன்றான, விருத்தகாசி என அழைக்கப்படுகின்ற திருமுதுகுன்றம் பழமலைநாதர் கோயிலில் ஐந்து எந்தெந்த வகையில் அமைந்திருக்கின்றது என்பதை விளக்குவதே இந்தக்கட்டுரை.

ஐந்து கோபுரங்கள், ஐந்துப்பிரகாரங்கள் (திருச்சுற்றுகள்), ஐந்து கொடி மரங்கள், ஐந்து தீர்த்தங்கள், ஐந்து நந்திகள், ஐந்து மூர்த்தங்கள் என அமைந்திருப்பது பழமலைநாதர் கோயிலின் சிறப்புகளில் ஒன்றாகும்.

தேரோடும் வீதி, பஞ்சவர்ணத் திருச்சுற்று, கைலாயத் திருச்சுற்று, வன்னியடித் திருச்சுற்று, அறுபத்துமூவர் திருச்சுற்று என ஐந்து திருச்சுற்றுகளைக் கொண்டது இத் திருக்கோயில்.

நான்கு திசை நுழைவாயிலிலும் நான்கு 7 நிலைகளையும் 7 கலசங்களையும் கொண்ட கோபுரமும், கைலாய்த்திருச்சுற்றை முடித்துப் பழமலைநாதர் கோயிலின் உட்செல்லும் முகப்பில் கண்டராதித்தன் கோபுரம் (5 நிலைகளையும் 7 கலசங்களையும் கொண்டது) ஒன்றும் ஆக ஐந்து கோபுரங்கள் உள்ளன. கண்டராதித்தன் கோபுரம் செம்பியன்மாதேவியால் கட்டப்பட்டது.

திருமணிமுத்தாறு சிவனால் படைக்கப்பட்டது எனப் புராணம் கூறுகிறது. இதில் புண்ணியமடு என்று ஓரிடம் இருக்கிறது. அதிலிருந்துதான் கோயிலின் சிறப்பு அபிடேகங்களுக்குத் தீர்த்தம் எடுத்துவருவர். இதுதவிரக் கைலாயத் திருச்சுற்றில் நான்முகனால்

உருவாக்கப்பட்ட அக்கினி தீர்த்தமும், திருமாலால் உருவாக்கப்பட்ட சக்கர தீர்த்தமும், குபேரனால் உருவாக்கப்பட்ட குபேர தீர்த்தமும், வன்னியடித் திருச்சுற்றில் வன்னிமரத்திற்கு மேற்குப்பக்கம் நான்முகனால் உருவாக்கப்பட்ட நித்தியானந்த கூபமும் ஆக ஐந்து தீர்த்தங்கள் காணப்படுகின்றன.

ஐந்து நந்திகள் பரிணாமவளர்ச்சியைக் காட்டுவது போல இடைக்கழி மண்டபம், அறுபத்துமூவர் திருச்சுற்றின் முகப்பில், மகாமண்டபம், நூற்றுக்கால் மண்டபம், தெப்பக்குளத்தின் மேற்குப்பக்கம் ஆகிய இடங்களில் ஒரே நேர்கோட்டில் வலதுபக்கம் சரிந்து சிவனைப் பார்ப்பதுபோன்ற ஐந்து நந்திகள் உள்ளன.

ஐந்து கொடிமரங்கள் பஞ்சாட்சரத்தை நினைவூட்டும் வகையில் நூற்றுக்கால் மண்டபத்தில் ஒன்றும், வன்னியடித் திருச்சுற்றின் நான்கு திசைகளில் நான்கும் ஆக ஐந்து உள்ளன.

விநாயகர், பழமலைநாதர், பெரியநாயகி, முருகன், சண்டிகேசுவரர் ஆகிய ஐந்து மூர்த்தங்களும் இங்குச்சிறப்பாக அமைந்துள்ளன.

பஞ்சாட்சரத்தை, பஞ்சபூதத்தை, சிவனின் பஞ்சமுகத்தை நினைவூட்டும் வகையில் பழமலைநாதர் கோயிலில் இவை அமைந்திருப்பது நடுநாட்டுச் சிவத்தலங்களில் இல்லாத சிறப்புகளில் ஒன்றாகும்.

5.18 அன்பே சிவம்

மா.த.தயாபரன்
ஆர்க்காடு

பண்டைய காலத்தில் மன்னர்கள் திருக்கோயில்கள் அமைத்து அதன் மூலம் மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்தும், பல கலைகளை வளர்த்தும் அரசாட்சி செலுத்தினார்கள். மக்களும் ஒழுக்கமாகவும், நேர்மையாகவும் இருந்தார்கள்.

உத்திரமேரூர் சாசனத்தில் திருக்கோயிலில் 'மக்கள்சபை'யை (குடவோலைமுறை) எப்படித் தேர்ந்தெடுத்தார்கள்? சபைக்குத் தகுதி இல்லாதவர்கள், தேர்தலில் நிற்க முடியாது. அக்காலத்தில் திருக்கோயில்கள் நீதி மன்றங்களாகவும் செயல்பட்டன.

தற்சமயம் தமிழகத்தில் பலச் சைவ திருக்கோயில்களுக்கு 100 வருடங்களாகக் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. நம் தமிழகத்தில்தான் சிவாலயங்கள் அதிகம் உள்ளன. அதனால் தான்

''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்று மணிவாசகப் பெருமான் கூறி உள்ளார். வேலூர் (வடஆர்க்காடு), சென்னை, செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும சுமார் 200 சிவாலயங்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. சமீப காலமாக மக்கள் மேற்கத்திய நாகரிகங்களாலும் தங்கள் தேவைகளை அதிகரித்துக் கொண்டதாலும் சைவத் திருக்கோயில்கள் கவனிப்பார் அற்று உள்ளன.

திருக்கோயில்கள் மூலம் மக்களுக்குப் பக்தியும், ஒழுக்கமும் சிறப்பாக இருக்கும். ஒழுக்கத்தின் மூலம் மக்களும், வருங்காலத் தலைமுறையும், நல்ல நிலை அடையக் கோயில்கள் மூலம் தான் தொண்டாற்ற முடியும்.

5.19 திருச்செங்காட்டங்குடி - கணபதீசுவரர் கோயில் - ஓர் ஆய்வு

திருமதி தனவதி
தஞ்சாவூர்

திருச்செங்காட்டங்குடி, நன்னிலம் தாலுகாவின் ஒரு பகுதியாகும். கருவறை அர்த்தமண்டபம், சோழர் காலத்துக் கலைப்பாணியைக் காட்டுகிறது. முன்மண்டபம் விசய நகரக் காலத்தைச் சார்ந்ததாகும். இம்மண்டபத் தூண்கள், விசயநகரக் கலைப்பாணியை வெளிப்படுத்துகிறது. பூ முனைப் போன்ற போதிகைப்பகுதி, விசய நகர கலைப்பாணியின் பிரதிபலிப்பாகும்.

கருவறை, அர்தமண்டபச் சுவர்களில் இடம் பெறும், பிரம்மா, தட்சிணா மூர்த்தி, இலிங்கோத்பவ உருவங்கள் சோழர் கலைப்பாணியில் அமைந்திருக்கின்றன. அர்த்த மண்டபச்சுவரில் இடம்பெறும் துர்க்கையின் காலடியில் இருபக்தர்கள் தங்கள் தலைகளைத் தேவிக்கு அரிந்து கொடுப்பதுபோல் தோற்றம் காட்டுகின்றனர். சோழர்காலக் கோயிலில் இதுபோன்ற சிற்பம் இடம் பெறுவது ஓர் தனிச்சிறப்பாகும்.

கோயில் திருச்சுற்றில் வலம்புரி விநாயகர் இடம் பெறுவது மற்றொரு தனிச்சிறப்பாகும். இச்சிற்பம் வாதாபியிலிருந்து கொண்டு வரப்பட்டதென்றக் கருத்துமுண்டு. இக்கோயில், சிறுத்தொண்டரோடு தொடர்பு பெற்றிருப்பது மற்றொரு தனிச்சிறப்பாகும். இன்றும் இவ்வூர் வீதியில், சிறுதொண்டருக்குத் தனிச் சன்னதியுள்ளது. சிறுதொண்டரின் நினைவாக அமுது படைக்கும் விழா இனிது நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் வீரசைவம் வளர்ச்சி பெற்றிருந்ததென்பதை இவ்விழா

வெளிப்படுத்துகிறது.

திருச்சுற்றில் எட்டுத் திருமூர்த்திச் சிற்பங்களைக் கொண்ட பெருமையும் இக்கோயிலுக்குண்டு. இதுபோன்ற அட்டமூர்த்தி மண்டபம் வேறெந்தக் கோயில்களிலும் இடம்பெறவில்லை. பைரவர், ஊர்த்துவதாண்டவ மூர்த்தி, கஜசம்ஹாரமூர்த்தி, அந்தகாசர மூர்த்தி போன்றவை சோழர் காலத்தில், இக்கோயிலுக்குத் தனிப்பெருமை சேர்க்கிறது. சோழர்காலத்திலும் இக்கோயில், வீரசைவத்தலமாக விளங்கியிருக்கலாமென்று கருத இடமிருக்கிறது. சோழர்காலச் செப்புத் திருமேனிகளும் பலவுண்டு. இக்கோயில் சிற்பங்களைஉருவாக்கும் ஒரு பட்டறையாகவும் இருந்திருக்கலாமென்று கருத இடமிருக்கிறது.

5.20 ஈழநாட்டு மாதோட்ட நன்னகர்த் திருக்கேதீச்சரம்

ச. நந்தினி
சென்னைப் பல்கலைக்கழகம்

'' மாதோட்ட நன்னகர் மன்னித் - தேவி தன்னோடுந் திருந்து கேதீச்சரத்து இருந்த எம்பெருமானே '' என்று திருஞானசம்பந்தரும், '' ஈழநாட்டு மாதோட்டம் '' என்றும் ''மாதோட்ட நன்னகரும் ... திருக்கேதீச்சரத்தானே '' என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் விவரித்த திருக்கோவில் திருக்கேதீச்சரம் ஆகும். நகரம் ''மாதோட்டம் '' எனவும் திருக்கோவில் '' திருக்கேதீச்சரம்'' எனவும் நாயன்மார்களால் குறிக்கப்பெற்றுள்ளது.

இப்போது மன்னாரிலிருந்து தெற்கே ஆறரைகல் தொலைவில் உள்ளது திருக்கேதீச்சரம். மாதோட்ட நகரமாக விளங்கிய அவ்விடத்தில மாந்தைத் துறைமுகம் முன்னர் இலங்கையின் வடகடல் துறைமுகமாக இருந்தது. கேது வழிபட்டதால் கேதீச்சரம் எனக்கூறப்பெறும்.

சூரபன்மனின் மனைவியின் பாட்டன் பெயர் துவட்டா. அவன் துவட்டா எனவும் மகாதுவட்டா எனவும் கூறப்படுகின்றான். அவன் பிள்ளைப்பேறின்றிப் பின் பாலாவி மூழ்கித் திருக்கேதீச்சரப் பெருமானை வழிபட்டுப் பிள்ளைப்பேறு பெற்றான் எனவும் அதனால் திருக்கேதீச்சரம் சுற்றிப் பெரிய நகரத்தை நிர்மாணித்தான் எனவும் கூறப்பெறும். அவன் பெயர் வழி மகாதுவட்டா என அமைத்த அந்நகரம் பின்னாளில் ''மகாதோட்டம் '' என மருவிற்று என்பர்.

மகாலிங்க மூர்த்தம் , பாலாவி தீர்த்தம் ,வன்னிவிருட்சம் உடைய திருக்கேதீச்சரத்தை - கேது , மகாதுவட்டா ,மண்டோதரி ,இராவணன் ,

மாலியவான், மயன் ,பதுமகோமளை ,சூரபதுமன் ஆகியோரும் ; திருமால், பிரமன் ,இந்திரன் ஆகிய தேவர்களும் ; அகத்தியர், பிருகு போன்ற முனிவர்களும் , அர்ச்சுனனும், நாகர்கள் , பாண்டிய, சேர , கலிங்கவிஜயன், விஜயன்குரு உபத்தீசன் ஆகியோரும் வழிபட்டதாகச் செய்திகள் காணக்கிடக்கின்றன.

பௌத்த ,சிங்கள நூல்கள் வழியாலும் ,திருஞானசம்பந்தர் , சுந்தரர் பாடல்களாலும் , சிதம்பரக்கல்வெட்டாலும் , பிற புராண இலக்கியச் செய்திகளாலும் திருக்கேதீச்சர வரலாறு அறியப் பெறுகிறது.

முற்காலத்தும் மணலால் மூடப்பட்டு வெளிவந்து , நாயன்மார் காலத்தில் செழித்திருந்து , போர்த்துக்கேயரால் கி.பி. 16 - இல் அழிக்கப்பெற்றது திருக்கேதீச்சரம். ஆறுமுகநாவலர் அவர்கள் வழி , சைவ அன்பர்கள் செயல் முயற்சியால் ஆலயம் 1894 -இல் கண்டுபிடிக்கப்பட்டது. மூன்று குடமுழுக்குகளுக்கு மேல் பெற்றது. இன்று ஆலயம் அழிக்கப்பட்டதாகச் செய்தி.

திருஞான சம்பந்தர் திருப்பதிகத்திலேயே கருத நின்ற இடமாவது எனச் சுட்டப்பெற்றது திருக்கேதீச்சரம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகத்தில் ''மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி '' ஆவர் என்று சுட்டப்பெற்ற வழி திருக்கேதீச்சரத்தான் மூன்றாவதாக மகாலிங்கத்தான் அமையும் ஆணை அறியப்பெறுகிறது.

சைவம் நிகழ்கால நிலையில் ஈழத்தில் காணப்பெறுவதைத் திருக்கேதீச்சரம் வழி அறியும் போது உலகில் சைவக் கோவில்களைத் தொன்மை , பெருமை , நன்மை ஆகிய மூன்றாலும் காப்பதற்காக ஆவன செய்யும் நோக்கில் இக்கட்டுரை சமர்ப்பிக்கப்படுகிறது.

5.21 சைவக்கலை மரபு : திருநீறு மடலும் பொக்கணமும்

டாக்டர் இராசு பவுன்துரை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சைவ சமய மரபில் திருநீறு (விபூதி) அணிவது என்பது ஒரு சிறப்பிற்குரிய வெளிப்பாடாகும். சைவர்களின் புறத் தோற்றத்தில் சைவக் கோட்பாட்டினைப் புலப்படுத்தும் குறியீடாகத் திருநீறு அமைகின்றது. இந்த ஆய்வில் 'காரணாகமம்' வாயிலாகத் திருநீறு அணிவதன் சிறப்பிற்குரிய விளக்கம் அளிக்கப்படுகின்றது. திருநீறு வைப்பதற்குரிய திருநீற்று மடல்களும் , பொக்கணமும் எவ்வாறு சைவ மரபில் இடம் பெற்றுள்ளன என்பதைச் சைவக் கலை மரபின் துணையோடும்

வரலாற்றுச் சான்றுகளுடனும் இக்கட்டுரையில் கூற முயற்சிக்கப்பட்டுள்ளது. மடல்களின் வகைகள் , அதன் கலைச்சிறப்பு , சமய வெளிப்பாடு போன்றவை இந்த ஆய்வில் இடம் பெறுகின்றது. கல்வெட்டுகள் , செப்பேடுகள் , இலக்கியங்கள் போன்றவற்றின் சான்றுகளுடன் ஒரு கலை வரலாற்று விளக்கமாக இக்கட்டுரை அமைகின்றது.

5.22 சைவத்திருக்கோயில்கள்

முனைவர் பி. பாலச்சந்திரன்
அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்.

சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம் சைவம் எனப்படும். இச்சமயம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இச்சமயம் போற்றும் சிவபெருமான் 'உருத்திரன்' என்ற பெயரால் முற்காலத்தில் வழங்கப்பட்டுள்ளார். இவ்விறைவனின் உறைவிடமாக விளங்கும் சைவத் திருக்கோயில்கள் பற்றியே இக்கட்டுரை அமைகிறது.

முற்காலத்தில் கோயில்கள் எவ்வாறு உருவாக்கம் பெற்றன என்பதையும் , திருக்கோயில்களின் வகைகள் பற்றியும் , இக்கோயில்களின் விளக்கம் பற்றியும் , இவற்றின் பயனாகப் பக்தி நெறி மக்களிடையே பெறும் முக்கியத்துவம் பற்றியும் , இப்பக்தி நெறியால் மனிதன் பெற்ற முக்கியத்துவத்தையும் , இம்மனித உடம்பையே திருமூலர் திருக்கோயிலாகச் சித்திரிக்கும் விதத்தையும் எடுத்துரைக்கிறது.

மனித உடம்பின் அங்கங்கள் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றனவோ அதைப்போலத் ,திருக்கோயிலின் அங்கங்களான கருவறை ,கோபுரம் , பிரகாரம் , பலிபீடம் , கொடிமரம் போன்றவற்றைப் பற்றியும் , இத்திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பற்றியும் எடுத்துரைக்கிறது.

திருக்கோயில்கள் சமுதாயத்தில் நாகரிக , பண்பாட்டு வளர்ச்சிக்கு எவ்வாறு துணை புரிகின்றன என்பதையும் ,இயற்கைச் சூழல்களினால் ஏற்றத்தாழ்வுகள் நிகழும் போது சாதி ,மத வேறுபாடில்லாமல் சமுதாய மக்களுக்கு எவ்வாறு துணை புரிகின்றன என்பதையும் , கலைகளின் பிறப்பிடமாகவும் , சமுதாய ஒருமைப்பாட்டையும் ,சகோதரத்துவத்தையும் பேணிக்காக்கும் நிறுவனங்களாக எவ்வாறு சைவத் திருக்கோயில்கள்

அமைகின்றன என்பதையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

5.23 திருப்பெருந்துறை - ஆவுடையார் கோயில்

இரா . பிரகதீஸ்வரி
அறந்தாங்கி

இப்புண்ணிய பாரத தேசத்தில் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் எண்ணிலடங்காச் சைவத்திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் ஒரு தனித் தன்மையுடனும் ,நீண்ட வரலாற்றுடனும் சிறப்புப்பெற்று விளங்குகின்றன. அத்தகைய திருக்கோயில்களில் ஒன்றுதான் புதுக்கோட்டை மாவட்டத்தின் அறந்தாங்கியில் இருந்து 14 கி.மீ தென்கிழக்கே அமைந்துள்ள ஆவுடையார் கோயில் என்ற திருப்பெருந்துறை. வரலாற்றுக் காலத்தில் பாண்டிய நாட்டின் கிழக்கு எல்லையாகவும் , சோழ நாட்டின் தெற்கு எல்லையாகவும் திகழ்ந்த இத்தலத்தைப் பெரியாளுடையார்கோயில் எனவும் அழைப்பர்.

இதன் சிறப்பம்சங்கள்

மூர்த்தி , தலம் ,தீர்த்தம் , வனம் , புரம் , தொண்டர்கள் என ஆறு சிறப்புக்களைக் கொண்டது. இங்குதான் இறைவன் குருந்தமரத்தடியில் அமர்ந்து அடியார்க்குச் சிவஞானபோதத்தை உபதேசித்தார். மாணிக்கவாசகர் இத்தலத்தைத் திருப்பணி செய்ததுடன் இங்குதான் திருவாசகத்தையும் அருளிச் செய்தார். இங்குள்ள இறைவன் ஆத்மநாதரும், இறைவி யோகாம்பிகையும் அரூபமாகக் காட்சி அளிக்கின்றனர்.

எல்லாச் சிவன் கோயில்களிலும் லிங்க திரு உருவமும் , அம்மன் கோயில்களிலும்அம்மன் நின்று கொண்டு அருள்பாலிக்கும் திருஉருவமும் காட்சியளிக்கும். ஆனால் இங்கு மட்டும் ஆவுடையார் என்ற பீடம் மட்டுமே உண்டு. அம்மனும் அவ்வாறே அரூபமாகக் காட்சியளிக்கிறார்.

இது அத்வைதத் திருத்தலம். ஏனைய சிவாலயங்கள் போல் இங்குக் கொடிமரம் , நந்தி , பலிபீடம் எதுவும் இடம் பெறவில்லை. அதேபோல் விநாயகர் , முருகன் , நடராஜர் , நவக்கிரகங்கள் , வீரபத்திரர் திருவுருவங்கள் இங்கு இருந்தபோதிலும் சுவாமி , அம்பாளுக்கு நிகரான பெருமைகளை மாணிக்கவாசகரே பெறுகிறார். ஆனி ,மார்கழி மாதங்களில் நடைபெறும்திருவிழாக்களின் போது இறைவனுக்குரிய ஆடையாபரணங்கள் , வாகனங்கள் ,தேர்த்திருவிழா , வழிபாட்டு உரிமைகள் அனைத்தும் மாணிக்கவாசகருக்கும் இங்குச் சமமாக வழங்கப்படுகின்றன.

புழுங்கல் அரிசி, முளைக்கீரை , பாகற்காய் போன்றவைதான் இங்கு நைவேத்தியப் பொருட்கள் என்பதும் ஒரு புதுமையாகும்.

5.24 பதினெட்டாம் நூற்றாண்டுச் சிவன் கோயில்கள்

தி. புஷ்கலா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

அண்மையில் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறைக்கு 18 -ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் 160 பெருஞ்சுருணைகளில்கிடைத்தன. சுமார் 2100 கிராமங்களுக்கான வருவாய் பற்றிய கணக்குளைக் கூறும் இவ்வாவணங்களில் ஒவ்வொரு ஊரிலும் காணப்படும் கோயில்கள் பற்றிய செய்திகளும் இடம் பெறுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 18-ஆம் நூற்றாண்டில் செங்கற்பட்டு கோயில்கள் , சிறப்பாகச் சைவக் கோயில்கள் பற்றிக் கூற இக்கட்டுரை முற்படுகிறது.

இவ்வாவணங்கள் ஒவ்வொரு கிராமத்தின் நிலஅமைப்பு ,ஊர் அமைப்பு மற்றும் மானியங்கள் பற்றிக் கூறுமிடத்து ஒவ்வோர் ஊரிலும் காணப்படும் கோயில்கள் , அவற்றின் எண்ணிக்கை , அமைவிடம் , நிலப்பரப்பு , கோயிலைச்சார்ந்த இடங்கள் , கோயில்களுக்குச் சர்வமானியம், சுரோத்திரியம் போன்ற பெயர்களில் அளிக்கப்பட்டு வந்த மானியங்கள் மற்றும் சிறப்புரிமைகள் , மொத்த விளைச்சலிலிருந்து கோயில்களுக்கென ஒதுக்கப்பட்ட மேரைகள் , சுதந்திரங்கள் போன்றவை பற்றிய செய்திகளைத் தருகின்றன.

செங்கற்பட்டுப்பகுதியில் பாடல்பெற்ற மற்றும் பாடல்பெறாத சைவக் கோயில்கள் பல இருந்திருப்பதை இவ்வாவணங்கள் வழி அறியமுடிகிறது. கல்வெட்டு , செப்பேடுகள் , திருமுறை நூல்கள் போன்றவற்றில் கோயில்கள் பற்றிய குறிப்புகள் காணப்படினும் சிறப்பாக அவற்றின் அமைவிடம் , நிலப்பரப்பு ,கோயில்கள் பெற்று வந்த சிறப்புரிமைகள் , வருவாய் போன்ற கூடுதல் செய்திகள் அவற்றில் கிடைப்பதில்லை.

ஆனால் செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் 18-ஆம் நூற்றாண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் காணப்பட்ட கோயில்களின் எண்ணிக்கையையும் , அவற்றின் நிலையையும் , அவை மக்களின் வாழ்வியலோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினையும் , முக்கியத்துவத்தையும் நன்குணர்த்துகின்றன.

இத்தரவுகளின் அடிப்படையில் செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் சிறப்பாகச் சைவக் கோயில்கள் , அவற்றின் சிறப்பு போன்றவற்றைப் பற்றிக் கூற இக்கட்டுரை முனைகிறது.

5.25 கல்வெட்டுகளின் வழித் திருக்கோயில் செய்திகள்

முனைவர் எம். மனோன்மணி
த.சா.அ.க.அ. தமிழ்ச்கல்லூரி,பேரூர்

சமயவாயில்கள் - கல்வெட்டுக்கள்

கல்வெட்டுகள் முற்காலச் சமயநிலைகள் , அரசியல் சமுதாயச் சிறப்புகள் , அரசு ஆணைகள் , கோயில்கள் , கோயிற் சிறப்புகள் , மக்களின் சமயவுணர்வுகள் இவற்றை வரலாற்றுக்குத் துணை புரியும் பாங்கில் விளக்கியுள்ளன. எனவே வரலாற்றறிஞர் இவற்றை ''உண்மை வரலாறுகளைக் குறிப்பாகச் சமய வரலாறுகளையுணர்த்தும் பழைய வெளியீடுகளாக விளக்குவர். ஆகவே ஒரு நாட்டின் சமய வரலாற்றைத்தெளிவாக்கக் கல்வெட்டுக்களை முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளலாம். இவ்வகையில் கொங்கு நாட்டுச் சைவ சமய வளர்ச்சிகளை இங்குள்ள கல்வெட்டுகள் தெளிவாகக் காட்டுகின்றன. சமய வளர்ச்சிகளையறிந்து கொள்ளும் வகையில் இவற்றைச் சமய வாயில்களாகக் கூறலாம்.

கோயில் செய்திகள்

அரசர்களும் , பொதுமக்களும் கோயில்களுக்கு மானியங்கள் அளித்தல் , அறவோர்க்கு ஊர் அளித்தல் , அறச்சாலைகளுக்கு நிவந்தங்கள் அளித்தல் , கோயில்களில் மண்டபங்கள் எடுத்தல் , கோயில் திருப்பணிகள் செய்தல் , நந்தா விளக்குத் தருதல் , விளக்கு எரிக்கப் பொன் தருதல் , திருவிழாக்கள் நடத்தமானியம் அளித்தல் ,அரசர்கள் அல்லது அடியார்களின் பிறந்த நாளைக் கோயில்களில் கொண்டாடித் தானமளித்தல் முதலிய பலவகைச் செய்திகளை விளக்குகின்றன.

மன்னர் மக்கள் ஆதரவு

மன்னர்கள் தங்கள் ஆட்சியாண்டுகளில் அனுமதித்த ஆணைகளைக் கல்லில் வெட்டி அவற்றைக் கோயில்களில் இடம்பெறச் செய்தனர். கொங்குநாட்டுக் கல்வெட்டுக்களில் பெரும்பான்மையும் சமயச் செய்திகளே இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. மன்னர்களும் ,மக்களும்

கோயிலுக்கும் கோயிற் பணியாளர்களுக்கும் கொடுத்த கொடைகள் அவற்றில் தெளிவாக இடம் பெற்றுள்ளன. இதனால் அவர்கள் சமயம் வளரத் தாம் அளித்த கொடையை என்றும் நிலைபெறச் செய்யும் நோக்கில் கல்வெட்டுகளுக்கு ஆதரவு தந்தமையும் தெளிவாகிறது.

சமயக்கொடை

கோயில்களில் இடையறாது இறைப்பணி நடைபெறுதற்கும் , வழிபாடுகள் விழாக்களைத் தடையின்றி நடத்துவதற்கும் மன்னர்களும் , மக்களும் அதிக அளவில் தானங்களைச் செய்துள்ளனர்.இவர்களின் இத்தகு கொடைகளால் சமய வளர்ச்சியும் , சமயப்பற்றும் புலனாகின்றன. கோயிலுக்குச் செய்யப்பட்ட தானங்களைக் குறிக்கும் கல்வெட்டுகளில் தானமளித்த அரசர்கள் , அரசியர்கள் , அதிகாரிகள் , படைத்தலைவர்கள் , பணியாட்கள் ஆகியோர் பெயர்களும் காணப்படுகின்றன. சமயக் கொடை பெரும்பாலும் 1. நந்தாவிளக்கு எரிப்பதற்காக , 2. பூசைப்படித்தரத்திற்காக, 3. நாள்தோறும் மலர்மாலை வழங்குவதற்காக ,4. திருப்பதிகம் விண்ணப்பிக்க, 5.இசைக்கருவிகள் ஒலிப்பதற்காக, 6 நாட்டியம் ஆடுவதற்காக, 7. திருவிழா எடுப்பதற்காக , 8. கோயில்திருப்பணி செய்தற்காக ,9. திருமேனிகள் எழுந்தருளுவித்தற்காக , 10. இன்னபிற பணிகளுக்காக அளிக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது. இத்தகைய பணிகளுக்கு எவ்வெவற்றைத் தானமாகக் கொடுத்துள்ளனர் என்பது பற்றிய செய்திகள் விரிவாக இடம் பெறுகின்றன.

5.26 கோயில்

முனைவர் எம்.ஏ. மாணிக்கவேலு
விவேகானந்தா கல்லூரி,சென்னை

சிதம்பரத்திற்குக் கோயில் என்ற பெயர் ஏன் வந்தது என்பதைப்பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

சிதம்பரம் என்ற சொல் பற்றியும் இதற்குரிய வேறு பெயர்கள் பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பெற்றுள்ளன. காரைக்கால் அம்மையார் பாடல்களில் 'சிதம்பரம்' பற்றிய குறிப்பு இல்லையென்பதால்திருமூலர் காலத்தில்தான் 'சிதம்பரம்' என்ற கோயில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். கோயில் என்ற சொல் சிதம்பரத்தைக் குறிப்பதை 'க்ஷேத்திரவெண்பா ' 'கோயில் நான்மணிமாலை' ஆகிய நூல்களின் மூலம்

காணலாம். தேவாரத்திருமுறைகள் சிதம்பரத்தில் கிடைத்ததால் அதற்குக் 'கோயில்' என்ற சிறப்புப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். மேற்கூறப்பட்ட கருத்துக்களின் வன்மை மென்மைகளை இக்கட்டுரை எடுத்துக் கூறுகின்றது.

5.27 சைவத்திருக்கோயில்களும் தலமரங்களும்

முனைவர் வே. இரா.மாதவன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழர் தம் இறைவழிபாட்டில் தாவரங்களை மிகுதியும் பயன்படுத்தியுள்ளமைக்குச் சான்றாக விளங்குவன தலமரங்களாகும். அருள் நிறைந்து விளங்கும் அருமை பெருமை மிக்க புண்ணியத்திருத்தலங்கள் எழுவதற்கு நிழல் தந்துதவிய மரங்கள் தலமரங்கள் என்னும் நிலையில் இவை பற்றிய ஆய்வு எண்ணங்கள் மலர்கின்றன.

மரங்களில் இறைவன் தங்குவதாகத் தமிழர் நம்பினர் என்பதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. யாவரினும் பெரியவனான சிவபெருமான் ஆலமரத்தில் தங்குவதாகப் பரிபாடல் போன்றவை விளக்கக் கணலாம். இத்தகைய மரங்களே ஆதிகோயில்களாம். மரத்தடியில் இறைவனை வழிபடும் நிலைமாறிக் கல்லாலும் செங்கல்லாலும் கோயில்கள் எழுப்பிய நிலை தோன்றிய பின்னர் அம்மரங்கள் அத்தலத்திற்குரிய மரங்களாயின. இவ்வகையில் ஒன்றிற்கு மேற்பட்ட மரங்களும் சில கோயில்களில் தலமரங்களாக விளங்குகின்றன.

தலமரத்தின் பெயரால் அத்தலம் விளங்குவதும் தலத்திறைவன் பெயர் வழங்கப் பெறுவதும் ஒப்பிடற்குரியன.

பெரும்பான்மையான சிவன் கோயில்களில் வில்வம் , வன்னி, கொன்றை போன்ற மரங்கள் தலமரங்களாக உள்ளமை, அவற்றின் மருத்துவப் பயன்பாடுகள், தல புராணங்கள் தரும் வரலாற்றுக் குறிப்புகள், பழமையான மரவழிபாடும் நம் சமயமரபாகப் போற்றப்பட்டமை போன்றவை ஆய்வுப் பொருள்களாகின்றன.

திருமுறை ஆசிரியர்கள் பாடல் பெற்ற சைவத்திருக்கோயில்களில் காணும் தலமரங்களின் சிறப்பும் பெருமையும் மட்டுமன்றிமனிதவள மேம்பாட்டிற்கான அவற்றின் பயன்பாடு குறித்தும் இக்கட்டுரையில் ஆராயப்பெற்றுள்ளது.

5.28 குண்டலினித் திருக்கோயில்

பொன். முனியப்பன்
காந்தி கல்வி நிலையம் , கூகலூரி

தன்னை உணரத் தவம் வேண்டும். அத்தவம் மூலாதாரத்தில் தொடங்கவேண்டும். அதன் மூலமாக ஆறு ஆதாரங்களையும் அடைந்து மேன்மைபெறும் நிலையை மாணிக்கவாசகர் விளக்குகிறார் . ஆவுடையார் கோயில் எனப்படும் திருப்பெருந்துறைக் கோயிலைக் குண்டலினித் திருக்கோயில் என்பர். ஆறு ஆதாரங்களை அமைப்பாகக் கொண்டது இக்கோயில். உடல் அமைப்பே திருக்கோயில் அமைப்பு என்பதை விளக்க மணிவாசகர் அமைத்த கோயில் திருப்பெருந்துறைக் கோயில். இக்கோயிலின் சிறப்பினைத் திருமூலர் வாக்கினை அடிப்படையாகக் கொண்டு பலவாறாக இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

5.29 தேவேந்திர குல மக்களின்கோயிற் சிற்பங்கள் - ஓர் அறிமுகம்

ந. வியாசராயர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழகம் சமயக் கலை மரபுச்சின்னங்களின் வளமை மிக்கதாகும். இச்சமய மரபுகளைப் பெருஞ்சமய மரபு எனவும் , குறுஞ்சமய மரபு எனவும் வகுத்து ஆய்வு செய்யும் முறை பழக்கத்தில் இருந்து வருகிறது. பெருஞ்சமய மரபுகளையே இதுவரை பெருவாரியான ஆய்வுகள் கண்டு வருகின்றன.

மிகச்சில முனைப்புகளே குறுஞ்சமய மரபுகளை ஆயத் தலைப்பட்டுள்ளன. அவ்வகையில் இக்கட்டுரை ஒரு முயற்சியாகத் தேவேந்திர குல மக்களின் கோயிற் சிற்பங்களைக் குறித்து அமைகிறது. இது ஓர் அறிமுக முயற்சியேயாகும்.

இவ்வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் , முசிறி வட்டத்திலுள்ள தேவேந்திர குல மக்களின் சமய வழிபாட்டு இடங்கள் மட்டுமே ஆய்வுக் களமாகின்றன.

1. மள்ளாண்டவர் 2. பட்டாயி 3. உதிரக்கருப்பு
4. பெரியக்காள் 5. பெரியண்ணன் 6. ஒத்தை பனைக் கருப்பு
7. மின்னடியார் போன்ற சிறு தெய்வ வடிவங்கள் ஆய்வு செய்யப்

பெற்றன. அவற்றை விளக்கம் செய்து அறிமுகப்படுத்துவதே இவ்வாய்வின் வடிவமைப்பாகும்.

5. 30 நடராஜீச்சுவரம்

முனைவர் வெ. வேதாசலம்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, மதுரை

சிவபெருமானை நாட்டிய நாயகனாக வழிபடும் மரபு தொன்றுத்தொட்டு தமிழ்நாட்டில் நிலவி வந்துள்ளது. நடனமாடும் சிவனை நடேசர் , நிருத்தேசுவரர் என்று அழைக்கப்படும் மரபு வடநாட்டில் உள்ளது. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் இவர் கூத்தாடும் பெருமானடிகள் , கூத்தாடும்தேவர் , ஆடல்வல்லான் , நாட்டீசுவரத்தாழ்வார், அம்பலத்தாடுவார் ,அம்பலக்கூத்தன் என்று பலவாறாகக் குறிப்பிடப்படுகின்றார் . ஆனால் நடனமாடும் சிவபெருமானை நடராஜர் என்று அழைக்கப்படும் வழக்கம் தமிழ்நாட்டில்கி.பி.13ஆம் நூற்றாண்டிளவிலேயே தோன்றியிருக்கிறது. இதனைப் பாண்டி நாட்டில் திருவேகம்பத்து என்ற ஊரில் கண்டறியப்பட்ட பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்று வெளிப்படுத்துகிறது. இக்காலத்திற்கு முன்னர் இலக்கியங்களிலும் இப்பெயர் வழக்கினைக் காணமுடியவில்லை. சிவன்கோயில் மூலநாயகருக்கு '' நாடராஜீச்சுவரர்'' என்று பெயரிட்டு அவருக்குக் கோயில் எடுப்பித்துள்ளது தமிழ்நாட்டில் சைவவரலாற்றில் புதிய செய்தியாகும். பிற்காலப் பாண்டிய அரசரின் குருவாக விளங்கிய சோமநாததேவர் '' நமச்சிநல்லூர்'' என்ற பெயரில் ஊர் ஒன்றினை ஏற்படுத்தி அதில் ''நடராஜீச்சுவர முடையர்க்குக்'' கோயில் எடுப்பித்துள்ளார். செல்வத் திருவாரூர் தட்சிணகோளகி மடத்தினைச் சார்ந்த இச்சைவச்சாரியார் இவ்வூரிலேயே ''திருஞானசம்பந்தர் மடம் '' என்ற பெயரில் சைவமடம் ஒன்றினையும் தோற்றுவித்துள்ளதை இப்புதிய கல்வெட்டு உணர்த்துகிறது.

தில்லையம்பல நடராஜர் மீது எல்லையற்ற காதல் கொண்டவராய்ப் பாண்டிய மன்னர்கள் இருந்தமையின் விளைவே பாண்டிநாட்டில் நடராஜீச்சுவரம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. பாண்டியர்கள் சோழநாட்டை வெற்றி கண்ட வேளைகளில் எல்லாம் தில்லைக்குச் சென்று நடராஜரைத் தரிசிப்பதைப் பாக்கியமாகக் கருதினர். முற்காலப் பாண்டிய மன்னனான வரகுணபாண்டியன் தில்லைக்குச்

சென்று வந்தபின் தோற்றுவிக்கப்பட்டதே பாண்டிநாட்டுப் பொருப்புமேட்டுப்பட்டியில் கிடைத்த பத்தாம் நூற்றாண்டுக் கால்மாறியாடும் நடராஜர் செப்புத்திருமேனியாகும். பிற்காலப் பாண்டிய மன்னர்களும் சோழநாட்டுப் படையெடுப்பின் போதெல்லாம் தில்லைக்குச் சென்று வழிபடுவதைத் தங்கள் மெய்க்கீர்த்தியிலும் கல்வெட்டுக்களிலும் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர்.

5.31 திருவெண்காடு - சுவேதாரண்யேசுவரர் கோயில்

முனைவர் வேலுசுவாமி சுதந்திரன்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

சீர்காழியிலிருந்து , காவிரிப்பூம் பட்டினம் செல்லும் வழியில் இத்தலம் அமைந்திருக்கிறது. சோழர் , பாண்டியர் , விசயநகரர், மராட்டியர் காலக் கட்டடக்கலைச்சிறப்பை இக்கோயிலில் காணலாம். மேற்குக் கோபுரங்கள் இரண்டும் , கிழக்கு உட்கோபுரமும் , கருவறையும் , அர்த்த மண்டபமும் ,சோழர் காலக் கட்டடக் கலைப்பாணியைப் பிரதிபலிக்கின்றன. முன்கோபுரமும்,அம்மன் சன்னதியும் , பாண்டியர் காலப் படைப்பாகும். அகோரமூர்த்தி, காளி, துர்க்கை , சன்னதிகள் விசயநகரக் காலத்தைச் சார்ந்தனவாகும். மெய்கண்டார், சூரியன் , சந்திரன் ,அக்னி சன்னதிகள் மராட்டியக் காலத்தினைச் சார்ந்தவை. சோழ மன்னர்களால் கட்டப்பட்ட இத்திருக்கோவில் பாண்டியர் , விசய , நகர ,மராட்டிய மன்னர்களால் விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பது இக்கோயிலுக்குத் தனிச்சிறப்பு காட்டுகிறதெனலாம்.

சோழர் காலச் சிற்பக்கலைக்கு இக்கோயிலின் , திருச்சுற்றுப்பகுதியிலிருந்து வெளிக்கொணரப்பட்ட வெண்கலச் சிலைகளே , நல்சிறந்த எடுத்துக்காட்டாகும். அர்த்த நாரீசுவரர் ,கல்யாண சுந்தரமூர்த்தி, பிச்சாடனார் , இடபவாகன மூர்த்தி, கண்ணப்பன் சிற்பங்கள் இக்கோயிலின் சிற்பக்கலைப் பெருமைக்கு நல்சிறந்த எடுத்துக்காட்டாகும். இடபவாகன மூர்த்தியின் தலைப்பாகை தனியழகைக் கொண்டதாகும். விசயநகரக்காலக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக , அர்த்த மண்டபச் சுவரில் இடம் பெறும் சட்ட நாதர் ,திருச்சுற்றில் இடம் பெறும் இலக்குமிச்சுதைச்சிற்பங்கள் நல் உதாரணங்களாக அமைகின்றன. கோயில் திருச்சுற்றில் மூன்று குளங்கள் இடம் பெறுவதும் , இக்கோயிலின் தனிச்சிறப்பாகும். அரசியல் , சமய , சமூக , பொருளாதாரச் செய்தியை இக்கோயில் கல்வெட்டுக்கள் வெளிக்காட்டுகின்றன. கலை ,கல்வெட்டுச்

செய்திகளைக் காட்டும் இக்கோயில் தமிழகக் கலை வரலாற்றில் ஒரு தனி இடம் பெறுமெனலாம்.

5.32 சைவத்திருக்கோயில்கள்

கி. ஸ்ரீநிவாசன்
சென்னை

பாடல்பெற்ற தலங்களாகக் கருதப்படும் 275 தலங்களில் குறிப்பிடத்தக்க தலங்கள் சிலவற்றைப்பற்றி இக்கட்டுரை விளக்குகிறது. சைவ சமயக் குரவர்களால் நிகழ்த்தப்பெற்ற அற்புதச் செயல்கள் மற்றும் தேவாரம், திருவாசகம் போன்றவற்றில் இப்பகுதிகளைப் பற்றிப்பாடப்பட்ட வரிகள் தேனினும் இனியவை; தமிழ்மொழியை வளம்பெறச் செய்பவை.

5.33 NITYA-PUJA IN TEMPLES

Mrs .N. Bhuvaneswari
Tamil University

The temples are built according to the agama rules, the daily pujas (nitya-puja) and the festivals are also performed according to the agamas. The Nitya pujas performed in the temples are not followed one and the same agama alone. They follow different agamas. In that way this paper deals withthe type of agama followed by temples in Thiruvaiyaru and Thillaistanam. Whether they are following strictly the agama rules and are there any deviations. If there are diviations why is it so? What are the reasons for their deviations is the subject matter of this paper.

5.34 LORD SIVA AT THIRUPPUNGUR AND KUDALAIYATTUR VILLAGES

Dr. Mrs. G. Santhi
Tamil University

South India, particularly Tamilnadu is famous throughout the world as the land of temples. Famous Temples are found to Lord Siva in many places, with different names.

Lord Nataraja at Chidambaram, Lord Sivaloganathar at Thiruppungur, Lord Sundareswarar at Madurai, Lord Nerikattu Nayakar, at Kudalaiyattur, Lord Brahatheeswara at Thanjavur etc., are various names of Lord Siva in different places.

This paper mainy aims about the temple of Lord Siva with different name in Thiruppungur and Kudalaiyattur Villages. Both the temples are in remote villages and so the worshipping system is keenly observed to find out the influence of little traditional worshipping system in this great traditional worshipping system.

A story was found about the Nandi at Thiruppungur and about the temple at Kudalaiyattur. Both are explained under this paper. Festivals celebrated in these temples are also explained.

Also comparison was done between the two Lord Siva temples in different villages in the last part of this paper.

5.35 A MOTHER AND A MOTHER GODDESS IN SOCIAL WORK: - A Sociological Study of a Saiva Temple in Jaffna

N. Shanmugalingam
University of Jaffna, Sri Lanka

During the last two decades, a significant change has been observed in the sphere of Saiva Temple Tradition in Jaffna. A Durga Temple in the village of Tellippalai, Jaffna has become internationally popular for its unique features of novel rituals and social work.

For the first time in history, an orphanage for destitute female children has been instituted in this Temple,administered by a lady

president. In addition, many social activities such as feeding the hungry,sheltering the displaced, caring for the sick by financing a Cardiography Unit are being carried out.

As a student of Sociology and culture, I have been interested in finding the sociological factors behind Primary data, gathered by field research and participant observation and interview method were used. Temple authorities, benificiaries were interviewed, using purposive sampling method.

By analyzing the data, two interrelated major factors have been identified in relation to this changing phenomena.

01. Rapid and amazing growth popularity and wealth of this Temple.
02. Availability of a living mother with power to direct and control the administration and finance of the said Temple.

This new data reiterates the studies that reveal the sympathetic nature of mother Goddesses. But here we find a living mother, symbolizing the Mother Goddess.

5.36 EVOLUTION OF THE NAVAGRAHA WORSHIP

K.R. Sita
Thanjavur

Men worshipped at first nature. In vedic Age Surya, Chandra, Indra, Agni, Yama, Nirriti, Varuna, Vayu, Soma and Isana were worshipped . In Puranic Age Vedic Deities were relegated as Dikpalakas, Siva, Vishnu and Brahma emerged as Puranic Deities. Then Brahma got dropped. Siva, Vishnu and Sakthi emerged as three great deities. Construction of temples for these three. Rise of Bhakti Movement in Tamilnadu in 6 - 9th Century A.D. around Siva and Vishu.

Nayanmar's contribution - Tevaram - Tiruvasakam etc. Alwars' Contribution Nalayira Divya Prabhandam - Tiruvoimoli

Shanmatha Sthapana by Sri sankara in 8th Century (sauram, Ganapatyam, Kaumaram besides the worship of the Cultic Trinity) Fag end of Vijayanagar period- installation of a set of Navgrahas in Siva temples. Sri chakra in Vishnu temples. Gnanasambandar's belief -

Kols(Planets) become friendly to the devotees of Siva - Hence his criticism of the Navagraha worship. Anthromorphic worship of Navagrahas revealed by the excavation of Navagraha stone idols. They are stored in Madurai Museum. Ramanujar and Meykandar's contribution of keep the worship by Sthalapuranas, Temple publications Poems, Astrologers, Nadi Jothidars etc.

Importance of Navagraha worship increased by the Navavarna Krithis composed by Sri Muthuswamy Dikshitar

Association of one graph to a particular Siva temple. Then each Navagraha was attached to 2 or more temples. These temples became famous and rich. First only Navagrahas were installed. Then Dampathi- Sameda Navagrahas appeared. Now Navagrahas with their consorts and children are installed for worship in separate sannidhis.

Conclusion

Hinduism is a dynamic religion and not a static one.

5.37 SIVA TEMPLES IN ANCIENT AND MEDIEVAL

Prof. S.K. Sitrampalam
University of Jaffna , Sri Lanka.

The antiquity and continuity of Hinduism and its related forms of worship from the Pre-Buddhist phase of Sri Lankan history and authenticated by sources. Sinhala - Buddhists have absorbed in popular practice the worship of Hindu Gods. Tamil Hindus follow it as their fundamental religion. Compared to South India sources are meagre, conditioned by the position occupied by Hinduism in Sri Lankan History.

Histoy of the Siva Temples is surveyed according to hisotrical periods namely Anuradhapura, Polannaruwa and Post Pollanaruwa periods. These periods also witnessed political and cultural influences emanating from Thamilakam.

Moreover coming of the Brahmins, artisans, military groups and mercantile guilds from Thamilakam led to a synthesis of foreign cultural elements with indigenous forms. This led to the development of Temple Art and other related forms.

Architectural and Sculptural remains confirm the development of these art forms and also employment of artists following the Silpasastra tradition which endured. This corroborated by Sculptures.

Brahmins were employed in the Temple and settlements known as Caturvedimangalam existed. Evidence for the nature of organisation, donations, ritulas, festivals, consecration ceremonies etc. is available. The state, individuals, bodies like " Mahessa " too maintained Temples.

5.38 THE SABHANAYAKA TEMPLE AND SAIVISM

Dr. L.K. Sivanesan
Periyar EVR College, Tiruchirappalli

The Sabhanayaka Temple of Chidambaram, also known as Tillai, were Lord Siva as Nataraja, is performing the "Dance of Bliss", is closely associated with Saivism. Saivism is spread to international level by the Icon of Lord Nataraja and therefore, the Universal brotherhood, and Human upliftment are the two ideals of the Saivites for whom the Temple stands as the liber Sacrorum.

The growth of Saivism in Tamil Country is also closely synchronized with the growth of the Temple. When the Temple came to the final shape, Saivism has also reached the mature stage and like the fame of the cosmic dancer, Saivism became, Universal. Along the Temple, a Town also emerged, and thus the present temple city of Chidambaram, became the centre of the World. The city also became the seat of many Saiva Mathas; the place of many religious festivals, many saints visited, the Lord of the city; many saints and Siddhars lived here and composed Saivite poetry. It is in the Temple Tiruppathikams were preserved for a long Time. The Temple complex consists many sculptures, icons and also the centre of dance and music to promote Saivism. Saivism so to say , is shaped to the present form at the Temple of Sabhanayaka, of Chidambaram.

5.39 THE DEVELOPMENT OF THE SAIVA TEMPLES AND ITS ARCHITECTURAL AND SCULPTURAL PROGRAMMES IN THE TRANSVAAL, REPUBLIC OF SOUTH AFRICA

Udhandan Govenden
South Africa

The Hindu Temple is the nucleus of the Hindu community. It has become an integral part of the Hindu way of life. In the Province of Transvall, Republic of South Africa, the Hindu temple has lost its tratitional outlook, and has evolved form an idea into a formidable structure.

The early designs of shrines, have played a major role in contributing towards the development of monumental structures. These designs vary from region to region, but the initial idea of the sanctum sanctorum and a careful selection of deities have become formalized into given regions.

Although some of the early cultures have disappeared in India, things remained entrenched in the belief system, rituals and realizing religious practices of Hindu worshippers at the local temples. All temples architecture have recognised the importance of the Vastu purusha and have applied this principle in the architectural development of the temple in the Transvall, Republic of South Africa.

At present, there is a distinct shift among Hindus to move from traditional cultic form of worship to a more intellectual and philosophical approach. The modern shrines have therefore a sobriety and refinement to their designs. The architecture and sculpture or iconography of the temple have been interwoven. The development of the moden Sivan Temples have been the forerunners to this concept. The structure is merely an emblem whilst the sculpture programmes have become instruments by which the Jivatman is brought close to the paratman. The present study undertaken by the researcher concludes that the Hindu temple is regarded as a symbol of the Divine and its analysis resembles a strong relationship between the architectural and the sculptural programme of the temples.

அமர்வு ஆறு

கலையும் பண்பாடும்

6.1 சைவமும் தேவார இசையும்

முனைவர் இ. அங்கயற்கண்ணி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தேவாரப்படல்களின் இசை வாயிலாக எவ்வாறு கலையும் பண்பாடும் வளர்ந்துள்ளன என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் மையக்கருத்தாகும். தேவாரப்பாடல்கள் சைவ நெறித்தழைக்கவும் புறச் சமயங்கள் நாட்டிலிருந்து விலகவும் வழி வகுத்தன. தேவாரப்பாடல்கள் ஓதுவார் மரபில் எவ்வாறு பாடப்பட்டன என்பதோடு தற்காலத்தில் எவ்வாறு பாடப்பட்டு வருகின்றன என்ற செய்திகளும் இக்கட்டுரையில் அடங்கும். பண் பற்றிய ஆராய்ச்சி , பாடல்களின் அமைப்பு ,தாளம் ,இசை பற்றிய செய்திகளும் இதில் ஆராயப்படுகின்றன. பிற்காலத்தில் திருப்புகழ், கீர்த்தனை , கிருதி , பதம் போன்றவை தேவாரப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டவை. அருணகிரி நாதர் இராமலிங்க சுவாமிகள் ஆகியோரிடம் தேவாரத் தாக்குதல் இருப்பதைக் காணமுடிகிறது.

6.2 அருளாளர்களின் ஓவியங்கள்

முதுமுனைவர் ம. சா. அறிவுடைநம்பி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழகத்தில் கோயில்கள் மிகுதி. சங்க இலக்கியங்களில் பல்வேறு கோயில்கள் இருந்தமையைக் காண முடிகின்றது. இருப்பினும் இன்றைய நிலையில் பல்லவர் காலத்தில் எழுப்பப்பெற்ற குடைவரைக் கோயில்களே மிகப் பமையானவையாகும். இத்தகு கோயில்களில் ஓவியங்கள் , சிற்பங்கள் போன்றவவற்றைக் காண முடிகின்றது.

ஓவியம் , சிற்பம் , இசை , நாடகம் , நாட்டியம் போன்ற நுண்கலைகள் அக்காலத்தில் கோயில்களை மையமாகக் கொண்டே வளர்ச்சி அடைந்தன. பல்வேறு கலைகளையும் பண்பாடு பழக்க வழக்கங்களையும் ஓவியங்களிலும் சிற்பங்களிலும் பதிவு செய்திருப்பதைக் காண முடிகின்றது.

ஓவியங்கள் சேகரிக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் கோயில் சுவர் , பலகை , செப்பேடு , கண்ணாடி , காகிதம் போன்றவற்றில் காணப்படும் சைவ சமய அருளாளர்களின் ஓவியங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

பிற்காலச் சோழர் , மராத்தியர் , சேதுபதி ஆகிய மன்னர்களின் காலத்தில் வரையப்பெற்ற கண்ணப்ப நாயனார் , திருஞானசம்பந்தர் , சுந்தரர் , மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமய அருளாளர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரித்துக் காட்டுவதுப் பல சான்றுகளுடன் விளக்கப்படுகின்றது. இவ்வோவியங்களில் காணப்படும் அக்கால மக்களின் பண்பாடு , பழக்கவழக்கங்கள் , ஆடை அணிகலன்கள் , ஓவிய மரபு போன்றவற்றை வெளிக்கொணரும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

6.3 தஞ்சைச் சிவத் திருத்தலத்தின் சோழர் கால வண்ண ஓவியங்கள்

இரெ. அன்பரசன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சோழர் கால ஓவியங்களில் சிறப்பு பெற்றவை சோழ மன்னன் முதலாம் இராஜராஜன் தஞ்சாவூரில் கட்டிய பிரகதீஸ்வரர் ஆலயத்தின்உட்சுவரில் காணப்படுபவையே ஆகும். நாயக்கர்கள் ஆட்சியின்போது இவ்வோவியங்கள் மீது சுண்ணாம்புச் சாந்து பூசித் தங்கள் ஓவியங்களைத் தீட்டி மறைத்தனர். 1933 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் திரு. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் நாயக்கர் கால ஓவியங்களுக்கு உள்ளே இருந்த சோழர் கால ஓவியங்களைக் கண்டு பிடித்து அவ்வோவியங்களுக்குப் புத்துயிர் கொடுத்தார்.

முந்தைய கலத்துப் பல்லவர் , பாண்டியர் காலத்து ஓவியக்கலை வளர்ச்சியிலிருந்து சிறிதும் குன்றாத நிலையிலேயே சோழர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் இருந்து சோழர்கால ஓவிய வளர்ச்சியும் , மக்களிடமும் , மன்னர்களிடமும் ஓவியக்கலைக்கும், கலைஞர்களுக்கும் இருந்து வந்த மதிப்பும் , ஆதரவும் விளங்கும்.

மக்களின் வாழ்க்கை முறை , சிவபெருமான் மீது அவர்கள் வைத்திருந்த அளவு கடந்த நம்பிக்கை , மாறா அன்பு , அசைக்க முடியாத

பக்தி ஆகிவயற்றை இவை விளக்குவதோடு இராஜராஜனின் போர்த்திறமை, அவர் போரில் காட்டிய மதிநுட்பம் பற்றியும் கறுப்பு , மஞ்சள் , பழுப்பு , செம்பழுப்பு , சிவப்பு , ஊதா, பச்சை , மஞ்சள் கலந்த பச்சை , இளநீலம் , வெள்ளை ஆகிய வண்ணங்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் பெரிய புராணத்தில் இடம் பெற்றுப் புகழ் பெற்றவர்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளும் காட்சிகளாகத் தீட்டப்பட்டுள்ளன. சிவபெருமான் முதியவர் வேடத்தில் வந்து சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமணத்தைத் தடுத்துத் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்ற காட்சியும் ஆலமரத்தின் கீழே சிவபெருமான் அமர்ந்திருப்பது போன்ற காட்சியும் தீட்டப்பட்டுள்ளன. மற்றொரு ஓவியத்தில் யானையில் சுந்தமூர்த்தி நாயனாரும் அவர் நண்பர் சேரமான் பெருமாள் நாயனாரும் குதிரையில் அமர்ந்து கைலாயம் செல்லும் காட்சியும் , சிவபெருமான் புலித்தோலின் மீது யோக தட்சிணாமூர்த்தியாக அமர்ந்திருப்பது போன்றும் தீட்டப்பட்டுள்ளன. இன்றைய தில்லையம்பதி போன்றும் நடுவே பார்வதியும்சிவனும்ஆடுவது போன்றும் சிவபிரானுக்கு முன்னே அரசத் தோற்றத்துடன் கரம் கூப்பி நிற்பது போல் ஓர் ஆணுருவமும்அவருக்குப்பின்னே மூன்று அரசியர் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. இதை ஒரு பிரிவினர் இராஜராஜன் என்றும் மற்றொரு பிரிவினர் சேரமான் என்றும் கூறுகிறார்கள். மற்றொரு ஓவியம் கருவூர்த் தேவரும் இராஜராஜனும்ஒன்றாக இருப்பது போல்தீட்டப்பட்டுள்ளது.

வடக்குச் சுவர் முழுவதும் திரிபுராந்தகரின் போர் விளக்கப்பட்டுள்ளது. இதில்சிவன் 'ஆடல்'நிலையில் உள்ளது. இதுவே பல்லவர் கால ஓவியத்தில் அமர்ந்த நிலையில் உள்ளது. மேலும் இங்குள்ள நடனமாது ஓவியமும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கி.பி.17 ஆம் நூற்றாண்டில் நாயக்கர் காலத்தில் திருப்பணி நடந்தபோது இவ்வோவியங்கள் மறைக்கப்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

6.4 சைவக்கருத்து வெளிப்பாட்டில் தமிழ் நாடகம்

முனைவர் க. இரவீந்திரன்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

சங்க காலம் முதற்கொண்டு இலக்கியங்களில் சுட்டப்பெற்றுள்ள வரலாறும் , கல்வெட்டுக்கள் , சுவடிகள் எனப் பதிவு செய்யப்பெற்றுள்ள வரலாறும் தமிழ் நாடகம் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ச்சி

பெற்றுள்ள நிலையையே காட்டுகின்றன. கலை காலத்திற்குட்பட்டது ; மக்கள்மனநிலைக்கேற்ப மாற்றத்திற்குட்பட்டது. அதனால் தான் நாடகம் மக்களின் கலையாக நின்று வாழ்கிறது. இவ்வகையில் கடவுளர் வழிபாடு சார்ந்த நாடகம் மாற்றம் பெற்றுக் கடவுளர் நெறிகளைப் பரப்பும் நாடகமாகவும் , மக்களை நல்வழிப்படுத்தும் நாடகமாகவும் செயலாக்கம் பெறுதற்குச் சைவ சமயக் கூறுகள் கதை மூலங்களாகவும் கருத்துக்களாகவும் தமிழ் நாடகங்களில் இடம் பெறத் தொடங்கின. இப்பொருண்மைத் தொடர்பாக இவ்வாய்வு அமைகிறது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் அரங்கேற்றப் பெற்றதாக அறியப்படுகிற இராசராசேசுவர நாடகம் முதல் இருபதாம் நூற்றாண்டில் படைத்தளிக்கப் பெற்றுள்ள சிவலீலா , கந்தலீலா ,பார்வதி கல்யாணம், திருவிளையாடல் , திருக்குறிப்பு நாயனார் , எறிபத்த நாயனார் (மனம் மலரும் நேரம்) முதலான பல நாடகங்களுக்கும் மூலமாக அமைந்திருப்பது சைவக் கருத்துக்களே.

அன்பு ,மனிதநேயம் ,சகோதரத்துவம் போன்ற நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான ,மக்களை நல் வழிப்படுத்துவதற்கு ஏற்ற கருத்து வெளிப்பாட்டிற்கு சைவ இலக்கியங்களை நாடக ஆசிரியர்கள் கதைமுகமாகக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. மட்டுமல்லாமல் ஒரு நல்ல நாடகத்திற்குத் தேவையான கருத்து வெளிப்பாட்டிற்கு ஏற்ற கதைகளையும் ,கட்டுக்கோப்பு மிக்க காட்சிகளையும் சைவ இலக்கியங்கள் கொடையாக வழங்கியுள்ளன. குறிப்பாகப் பெரிய புராணத்தைக் குறிப்பிடலாம்.

இனிய தமிழிசையை மக்களுக்கு அறிமுகப்படுத்தவும் இவ்வகை நாடகங்கள் உதவியுள்ளன. குறிப்பாக, டி.கே.எஸ். சகோதரர்கள் படைத்தளித்த சிவலீலா நாடகத்தைக் குறிப்பிடலாம். 'சிவலீலா நாடகத்தை தெவிட்டாத தெய்வ அமிர்தம் என்றே சுருங்கக் கூறுவேன் ... தெய்வ பக்தியின் மேம்மையையும் , தமிழின் உயர்வையும் ஓங்கச் செய்வது இந்நாடகம் ' என அறிஞர்கள் போற்றினர்.

எனவே சைவத்தையும் தமிழையும் கலந்து கருத்து வெளிப்பாட்டு நிலையில் தமிழ் மக்களுக்கு நல்ல பக்தி நெறியோடு தமிழுணர்வையும் புகட்டுவதில் தமிழ் நாடகங்கள் உதவுவதற்குச் சைவமும் இனிய பங்களிப்பைச் செய்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

6.5 பண்பாட்டுப் பாரம்பரியமும் கலைகளும்

எதிர்மான சிங்கம்
கொழும்பு , இலங்கை

ஈழந்தின் கிழக்கு மாநிலத்தில் மட்டக்களப்புப் அப்பாறை ஆகிய இரு மாவட்டங்களையும் உள்ளடக்கிய பாரம்பரியப் பிரதேசங்களின் துளந்தலமான பண்பாட்டுப்பாரபரியங்களையும் , கலைகளையும் இக்கட்டுரை விளக்குகிறது.வடக்கே லெருகல் தொடக்கம் , தெற்கே குழுக்கள் ஆறுவரை பரந்து கிடக்கும் எழுது மைல் விஸ்ரணம் கொண்ட மாநிலப் பாரம்பரியம் மிகவும் பழமையும் , சிற்பும் வாய்ந்தாகும்.

மட்டக்களப்புத் தமிழரின் வரலாற்றுப் பண்பாட்டுக்குத் தமிழ்நாட்டுத் தமிழர் , பாழ்ப்பாணத் தமிழர் தொடர்புகளும் , இஸ்லாமியர், சிங்களர் தொடர்புகளும் , பேர்ந்துக்கேயர் , ஒலாந்தர் , ஆங்கிலேயர் தொடர்புகளும் தலாக அமைந்தன. இதன் மூலம் பண்பாட்டுப் பாரம்பரியத் தில் தாக்கம் ஏற்பட்டது. இதனைத் தெளிவாக அறிந்து கொள்ள மட்டக்களப்பு மான்மியம் , மட்டக் களப்புத் தமிழகம் , வரந்துன் கலித்திரட்டு . நாட்டுப் பாடல்கள் மாநில உபகதைகள் ,மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்வும் , ஆகிய நூல்களும் நாடு காட்டும் பரவணிக் கல்வெட்டும் , முக்குகள் ஏற்பாடு முதலியனவுமே உதவிகின்றன.

சமூகப் பண்பாடு , சாதிப்பண்பாடு , சமயப் பண்பாடு , ஒழுக்கமுறைப் பண்பாடு என்பவை தனித்தனி விரிவாகக் கட்டுரையில் ஆராயப்படவுள்ளன. குழந்தை பிறப்பு தொடக்கம். திருமணம் , குடும்ப வாழ்வு , மரணம்வரை ஒவ்வொரு சடங்குகளும் தனித்தனியாகப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டு விளங்குகின்றன.

கலைகளைப் பொறுத்தமட்டில் பழங்காலத்தில் பெருவழக்கமாகவும் , தற்போது அருகியும் வருகின்ற பாரம்பரியக் கலைகளான நாட்டுக் கடந்து , கொழுப்பு முறிப்பு , வசாறன் ஆடல் , குறலைக் கடத்து ஆகியவை பற்றித் தனித்தனி விரிவாகக் கட்டுரையில் ஆராயப்படும். கடத்துக்கள் பற்றி வடமோடி தென்மோடிப் பிரிவுகள் அதனிடையே காணப்படும் ஆப்பம் , பாட்டு , தாளம் , உடை ,தப்பனை மந்தளம் , சல்லரி ஆகியவற்றின் சிறப்புக்கள் விளக்கப்படவுள்ளன.

கொழும்பு முறிப்பு விளையாட்டான மிகப் பழமையான கலையாடல் கண்ணகி அம்மன் சடங்கோடு உள்ள தொடர்புகள் , கொழும்பு முறிப்பாடல்களின் சிறப்பம்சங்கள் வரந்தன் கூத்தும் அவற்றின் சிறப்பு முஸ்லீம் மக்களது தனித்துவக்கலையான 'களிகம்பு ' வசந்தன் இரண்டிற்குமுள்ள தொடர்புகள். கிராமிய மக்களின் வாழ்க்கை முறையினை இவை எடுத்துக்காட்டும் சிறப்ப. வரந்தன் கலிந்திரட்டு

நூலில் அடங்கியுள்ள ஆறு பிரிவுகளிலும் சொல்லப்பட்டுள்ள விடயங்கள், பழங்காலத்தில் மக்கள் உபயோகித்த நெல்லினங்கள் பற்றிய விவரங்கள் ,அடுத்துக் குறவைக் கூத்து தற்போது கிழக்குமாநில மக்கள் தமிழ் , முஸ்லீம் மக்களிடையே விரவிக் காணப்படும் பாங்கு சங்க கலைக் குறலைக் கடத்திற்கும் தற்போது கிழக்கு மாநில கிராமப்புறங்களில்காணப்படம் குறைவியருதலுக்கும் உள்ள தொடர்புகள், பெண்களுக்கே தனித்துவமான இக்கலை பற்றிய சிறப்பம்சகங்ள இங்கு ஆராயப்பட்டுள்ளன

6.6 படையல் முறையில் சமூகப் பண்பாடு

டாக்டர் மு. கண்ணன்
ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர்

நாட்டுப்புற இலக்கியம் என்பது கிராமத்து மக்களின் பண்பாடுகளை உள்ளடக்கியதாகும். அதுபோல் நாட்டுப்புறச் சமயம் என்பது நாட்டுப்புற மக்களின் பண்பாடு , சாதி நிலைப்பாடு, பொருளாதாரநிலை, சமுதாய அந்தஸ்து போன்றவற்றை வெளிப்படுத்திக் காட்டப்பயன்படும் ஓர் நிறுவனமாகும். நிறுவனமாக்கப்பட்ட சமயங்களுக்குள் மதப்பூசல்கள் நிகழ்வதைப்போன்றே நாட்டுப்புறச் சமயத்திலும் சாதிப்பூசல் , பொருளாதாரப்பூசல் , மக்கள் தொகை ஆதிக்கம் பிற சாதியினரை அடக்கியாளத் துடிக்கும் மேல் வர்க்கத்தினரின் ஆதிக்க நிலை போன்றவைகள் திருவிழாக்கள் நிகழ்ச்சிகளில் இழையோடிக் காணப்படும். தெய்வ உருவாக்கத்திலும் , வழிபாட்டிலும் , திருவிழா அமைப்பிலும் , பலியிடுதலும் , வழிபடுவோரின் சாதியத்தன்மை வெளிப்படுவதைப் போன்றே தெய்வத்திற்காகப் படைக்கப்படும் படையலிலும் சாதிய நிலைப்பாடுகளைக் காணமுடிகிறது.

படையலில் சைவப் படையல் என்றும் அசைவப் படையல் என்றும் இருவகையாக அமைந்தாலும்தெய்வத்தை வழிபடுகின்ற மக்களின் பொருளாதார மேம்பாட்டின் அடிப்படையிலும் சமூக அந்தஸ்தின் அடிப்படையிலுமே படையல் அமைகிறது எனலாம். மேலும் தாங்கள் வணங்கும் தெய்வம் தங்கள் இனத்தைச் சேர்ந்ததாக மக்களால் நம்பப்பட்டால் அத்தெய்வத்திற்கு அசைவப்படையலும் , பிறசாதியிலிருந்து உருவாகித் தாங்கள் வழிபட நேர்ந்தால் அத்தெய்வத்திற்குச் சைவப் படையலும் படைக்கப்படுகிறது.

தெய்வப் படையலில் மக்கள் பயன்படுத்தும் பொருட்களே மிகுதியாக இடம் பெறுகிறது. ஏனென்றால் மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருட்கள் தெய்வத்திற்குப் படைக்கப்படுவதால் அத்தெய்வம் தங்களுடைய வாழ்க்கையோடும். தங்கள் இனத்திற்கும்காவலாக அமைகிறது என்று பிறர் நம்புவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் நம்பிக்கை கொள்கின்றனர் எனலாம். நம்பிக்கையின் அடிப்படையிலே சிறு தெய்வ வழிபாடும் , தெய்வத்திற்கான படையலும் அமைகிறது எனத் தெளிவாகிறது.

6.7 சிவராத்திரி வழிபாடு காட்டும் பண்பாட்டு மரபுகள்

முனைவர் கு. கதிரேசன்
ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,திருச்செந்தூர்

சைவ சமயத்தில் சிவராத்திரி விழா - சிவபெருமான் சிவராத்திரி தொடர்பு - சிவராத்திரி தொடர்பான தொண்டும் - வட்டராத் திரிபுகள் - சிவாலயங்களில் சிவராத்திரிவிழா - நாட்டுப்புறச் சிறுதெய்வக் கோயில்கள் சிவராத்திரி விழா - சிவராத்திரி விழா அன்றும் இன்றும் - வழிபாடும் வழக்குகளும் - நம்பிக்கைகள் - வழிபாட்டுச் சடங்குகள் - வாழ்வியற் பிரதிபலிப்புகளும் - சிவராத்திரி வழிபாடும் -முரண்பாடுகளும் உண்மைகளும் என்ற தலைப்புகளில் அரிய செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது. சிவராத்திரி விழாவும் வழிபாடும் வாழ்வியல் பிரதிபலிப்புக்கள். அவை மக்களுக்காக மக்களை அடிப்படையாகக் கொண்டு மக்களே உருவாக்கிக் கொண்டவை.

6.8 சமய நெறியில் பண்பாடு

பன்மொழிப்புலவர் த. கனகரத்தினம்

மக்கள் வாழ்வில் அனைத்து நிலைகளிலும் சமய நம்பிக்கை ஆழமாக வேரூன்றியுள்ளது. சமய நம்பிக்கையற்ற மக்கள் வாழ்விற்கூட சமயநம்பிக்கைள் கொண்ட கூறுகள் காணப்படுகின்றன. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்தோன்றிய சமயம் , சைவமாகும். இச்சமய நெறியில்

சிறந்த பண்பாடு வளர்ந்து வந்துள்ளது. இந்த நாகரிகத்தின் பழைமையையும் சிறப்பையும் அகழ்வாராய்ச்சிகளும் மற்றும் சான்றுகளும் நிறுவிவருகின்றன.

சமய நெறியில் வளர்ந்த பண்பாட்டினைச் சங்க இலக்கியங்களிலும் திருக்குறள் முதலிய நூல்களிலும் காண்டல் கூடும். திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் பெரியபுராணம் கந்த புராணம் ஆகியனவும் வளர்த்த பண்பாட்டினையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

சமய நெறியில் வளர்ந்த பண்பாடுகளே சமூக நலனைப் பேணிக்காக்க வல்லன. ஒரு சமுதாயம் நிலைத்து நிற்பதற்கு நெறிமுறைகளையும் (Norms) விழுமியங்களையும் (Values) முறையாகப் பின்பற்றி நடத்தல் வேண்டும். சமயம் தான் நெறிமுறைகளையும் விழுமியங்களையும் ஒழுக்கம் சார்ந்ததாக அறிவுறுத்துகின்றது. சமயந்தான் இவற்றுள்ளும் சிலவற்றைப் புனிதத்தன்மையாக்குகின்றது. எனவே தான் சமயம் என்பது மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் ஓர் உயிரோட்டமுள்ள சமுதாய நிறுவனம் எனலாம்.

பண்பாடு என்பது புவிப்பரப்பு அல்லது நாடு சார்ந்தாக அமைவதைக் காணலாம். மொழி , இனம் , சமயம் இடம் என்பன சார்ந்ததாகவும் பண்பாடுகள் அமையலாம்.

பண்பாடு ,என்பது இலக்கியம் ,கவிதை ,நடனம் இசை கோவில்கள் , சடங்குகள் ,வேதமந்திரங்கள் தொழில்கள் போன்றசில கூறுகள் மட்டும் ஆகாது. இது மக்களின் நடத்தைமுறைகளைக் கட்டுக் கோப்பான நிலையில் செயற்படுத்தும் ஒரு மிகப்பெரும் அமைப்பாகும். ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரக்கணக்கான பண்பாட்டுக் கூறுகள் உள. இவ்விடயமாகப் பண்பாட்டு மானிடவியல் ஆய்வாளர் கருத்துக்களும் ஆராயப்படுகின்றன. பண்பாடுகள் மாற்றத்திற்குட்படுவனவா ? சமய நெறிவழிவந்த பண்பாடுகளின் சிறப்பு யாவை ? என்பனவும் விளக்கம் பெறுகின்றன.

பண்பொழுக்க வாழ்வு பொது வாழ்விற்கு அவசியம் . முன்னாளில் இசைபட வாழ்ந்த மக்களின் குணநலன்களைப் புராண இதிகாசங்கள் காட்டுகின்றன. இலக்கியக் கலாநிதி பண்டித மணி ச. கணபதிப்பிள்ளை அவர்கள் காட்டும் கந்தபுராணக் கலாசாரம் - பண்பாடு பற்றிய ஆய்வும் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றது.

6.9 கல்வெட்டில் சைவக் கலைகள்

முனைவர் அ. கிருட்டினன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சமயமும் கலையும் ஒன்றையொன்று தாங்கி நிற்பவை. பக்திக் காலத் தொடக்கம் முதல் இறைவனை வழிபட இசையும் நாடகமும் பெரிதும் உதவின. இசையின் சிறப்பைப்பற்றி இக்கட்டுரை விளக்குகின்றது. கல்வெட்டு ஆராய்ச்சிகளின் அடிப்படையில் நாடகம், கூத்துக்கள் பற்றிய பல செய்திகளையும்இக்கட்டுரை வெளிப் படுத்துகின்றது. கலைகளின் வளர்ச்சிக்குச் சைவக் கோயில்கள் அடிப்படையாக விளங்கியதோடல்லாமல் அக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களின் கலைக்கூறுகளை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

6.10 பண்பாட்டுக் கலைக்கூறுகள் - நால்வர் பாடல்கள் வழி ஓர் ஆய்வு

A.N.கிருஷ்ணவேணி
சென்னைப் பல்கலைக்கழகம்

சமூக வாழ்க்கையில் பிரதான பங்கு வகிப்பது மதம். வாழ்க்கையில் மதம் பெறும் முக்கியத்தினடிப்படையிலேயே இந்துப் பண்பாடு. பௌத்தப் பண்பாடு, இஸ்லாமியப் பண்பாடு, கிறித்தவப் பண்பாடு என்று பண்பாட்டினையே மதவழிப் பாரம்பரியத்துடன் நோக்க முடிகிறது. இதே போன்று கலையை எடுத்துக்கொண்டாலும் இந்துக்கலைகள், பௌத்தக் கலைகள் , இஸ்லாமியக் கலைகள் , கிறித்தவக் கலைகள் என்று மதச் செல்வாக்கினடிப்படையில் பண்பாட்டை வெளிப்படுத்தும் நிலைகளிற் பாகுபடுத்தி நோக்க முடிகிறது. பண்பாடு - கலை என்ற இரண்டுமே ஒரு குறிப்பிட்ட சமூகம் பின்பற்றும் மதத்தின் வழிப்பட்டதாக வளர்ச்சி பெறுவன.

ஒரு குறிப்பிட்ட சமூகம் தனது வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட- பௌதிகப் பொருட்கள் , மத நடைமுறைகள் , ஆத்மார்த்தக் கருத்துக்கள் கலை , விஞ்ஞானம் , இலக்கியம் போன்ற வற்றின் தொகுதியாகவே பண்பாட்டினை இனங்காணலாம்.

கலை என்பது மனிதனாற் படைக்கப்பட்டது. மனிதத்திறன் ,

மனித ஆற்றல் வழியாக உருவாக்கம் பெற்றவையே கலைகள் . பொதுவாக, நுட்பமாக வடிவமைக்கப்பட்டவை என்ற வகையில் கட்டடம், சிற்பம், ஓவியம் , இசை , நடனம் , நாடகம் , இலக்கியம் என்ற ஏழனையும் நுண்கலைகளாகக் கொள்வது மரபு. இந்த நுண்கலைகளையும் சமயம்சார் கலை வடிவங்கள் (Religious Arts) சமயஞ்சாராத கலை வடிவங்கள் (Secular Arts) என்று பாகுபடுத்தி நோக்கலாம். கோயிற் கட்டடங்கள் , வழிபாட்டிற்குரிய சிற்பங்கள் , கோயிற் கட்டடத்தை அழகுபடுத்தும் சமயச் சார்பான ஓவியங்கள் , கோயிற்பண்பாட்டுடன் தொடர்புடைய இசை , நடனம் , நாடகம் , இலக்கியம் என்று கலை வடிவங்களை மதச் சார்புடன், மத வழிப் பண்பாட்டை வெளிப்படுத்தும் கலைகளாக இனங்காணலாம்.

மத வழிப் பண்பாடு ,மதம்சார் கலை வடிவங்கள் என்ற கருத்துக்களைஇலக்கியங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம். சமயம் என்பது நம்பிக்கைகள் , சடங்குகள் , ஐதீகம் போன்ற அம்சங்களை உள்ளடக்கியது. இவை வெளிப்படுத்தப்படுவதற்கும் , பேணப்படுதற்கும், கையளிக்கப்படுவதற்கும் இலக்கியத்தையே நம்பியிருக்க வேண்டும். இலக்கியம் என்பது சமூக உறவுகளையும் , சிந்தனைகளையும் அச்சமூகத்தில் வாழும் மக்களது வாழ்க்கையிற் தோன்றும் உணர்ச்சிகளையும் மொழி மூலம் வெளிப்படுத்துவதாகும்.

இத்தகைய பின்புலத்தில் தமிழகத்திற்த் தோன்றிய சமய குரவர்களின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு , அப்பாடல்களில் சைவப்பண்பாடு , கலை சித்திரிக்கப்படும் முறைமையை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

6.11 தேவாரமும் , ஓதுவார்களும் (கல்வெட்டு , சிற்ப , ஓவிய வழி ஆய்வு)

குடவாயில் பாலசுப்ரமணியன்
சரசுவதி மகால் நூலகம் , தஞ்சாவூர்

'' தேவாரம்'' - எனச் சைவ உலகு உச்சிமீது வைத்துப் போற்றும் மூவர் திருப்பதிகங்களைப் பல்லவர் காலந் தொட்டுத் தொடர்ந்து திருக்கோயில்களில் விண்ணப்பிக்கும் மரபு தமிழகத்திற்கே உரிய சிறப்பாகும். இப்பனுவல்களை இறை முன்பு பாடிவந்த பெருமக்களைத் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் என்றும் , திருப்பாட்டு ஓதுவார் என்றும் , பிற பெயர்களிலும் குறிக்கப்பெற்ற பல்வேறு மரபுகளை மன்னர்களின் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

தேவாரம் என்ற சொல் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பெற்றது என்பது குறித்து , இலக்கியங்கள் , கல்வெட்டுக்கள் இன்னபிற சான்றுகள் வழி ஆய்வதும் , குறிப்பாக வைணவ ஈடு வியாக்கியானம் கூறும் விளக்கம் காண்பதும் இக் கட்டுரையின் சிறப்புக்களாகும்.

தற்போது திருக்கோயில்களில் மூவர்பாட்டைப் பாடும் மரபினரை ''ஓதுவார் '' என அழைக்கின்றனர். இப்பெயர் எக்காலந்தொட்டுப் பயின்று வருகின்றது என்பது பற்றியும் , திருப்பதியம் விண்ணப்பம் செய்த வர்களின் தகுதிகள் , அவர்கள் பெற்ற சிறப்பு போன்ற வரலாற்றுச் செய்திகளை ஆராய்வதும் இக்கட்டுரையின் ஓர்அங்கமாகும்.

இராசராசேச்சுரவம் எனும்தாராசுரம்திருக்கோயிலில் ஒரு தேவாரப் பதிகமே சிறப்பு வடிவம் பெற்றிருப்பது குறித்து எடுத்துரைப்பதும் இதுவரை சிவாச்சாரியர்கள் எனக் கூறப்பெற்று வந்த நூற்று எண்மர் படிமங்களும் தேவாரம் பாடும் ஓதுவா மூர்த்திகளுடையதே என்ற கருத்தைத் தொல்லியல் வரலாற்றுச் சான்றுகளோடு மெய்ப்பிப்பதும் இக்கட்டுரையின் அரிய பகுதிகளாகும் .

பைந்தமிழ்ப் பதிகங்களாம் தேவாரப் பாடல்களைப் பாடிய பின்பே ஆரூர்த்தியாகப்பெருமான் கருவறை நாளும் திறக்கப்பட்ட அரிய செய்தியைக் கி.பி.1700 ஆம் ஆண்டு ஓவியப்படைப்பொன்றின் மூலம் காட்டுவதும் இக்கட்டுரையின் சிறப்பம்சங்களுள் ஒன்றாகும்.

ஓதுவா மூர்த்தி ஒருவர் சிறந்த ஓவியப்படைப்பாளியாகத் திகழ்ந்து, ஆயிரத்தளியின் அமைப்பொன்றினைத் தம் தூரிகையின்துணையால் காட்டியிருக்கும் பாங்கையும்இக்கட்டுரை பகர்கின்றது.

6.12 தஞ்சை மராட்டிய மன்னர்களின் சைவ சமயப்பணி

ஆ. குணசேகரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு கி.பி.1678 முதல் 1855 வரை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்கள் சிறந்த சிவபக்தர்களாகத் திகழ்ந்தனர். இவர்களின் குலதெய்வம் சந்திரகளலீசுவராவார். இம்மன்னர்கள் பல கோயில்களைக் கட்டியுள்ளனர். ஏற்கெனவே இருந்த கோயில்களைப் புதுப்பித்துக் குடமுழுக்கும் செய்துள்ளனர். தஞ்சை மராட்டிய மன்னர்கள் சைவம் , வைணவம் , இசுலாம் , கிறித்துவம் போன்ற சமயங்களுக்குப் பல அறப்பணிகளைச் செய்துள்ளனர். இவற்றுள் சைவசமயத்திற்கு இவர்கள் செய்த பணிகளை மட்டும் இக்கட்டுரை

ஆராய்கிறது.

இலக்கியம், கல்வெட்டுகள் , செப்பேடுகள் , மோடி ஆவணங்கள் ஆகியவற்றைத் தரவுகளாகக் கொண்டு தஞ்சை மராட்டிய மன்னர்களின் சைவ சமயப்பணி ஆராய்ப்படுகிறது.

சிவன் கோவில்களுக்கும் காசிமடத்திற்கும் செய்த அறப்பணிகள், சிவவழிபாடு போன்றவற்றையும்இக்கட்டுரை ஆராய்கிறது.

6.13 கலையும் பண்பாடும் மூவர் தேவாரத்தில் இசைக்கலை

முனைவர் அ. கோபிநாத்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

ஆயகலைகள் அறுபத்து நான்கு - ஓவியம் சிற்பம் - இசை நடனம் ஆகிய கலைகள் - வடமொழியாளர் லலித கலை எனப்படும் - கோமளக்கலை ஆகிய நுண்கலைகள் -இசைக்கலையின் ஏற்றமும் சிறப்பும் தமிழிசையின் தொன்மையும் மேன்மையும் - தொல்காப்பியர் காலந்தொடங்கி அமையும் தமிழிசை -தேவாரத்திருமுறை காலத்தில் தமிழிசை பெற்றிருந்த வளமையும் சிறப்பும்.

தேவாரம் பாடிய மூவர் முதலிகள் - திருஞானசம்பந்தர் - திருநாவுக்கரசர் சுந்தரர் இவர்கள் பண்ணும் - பயனும் - சமுதாய மறுமலர்ச்சிக்கும் ஏற்றத்திற்கும் போற்றிப் பாடிய பாடல்கள் - பண் சுமந்த பாடல்கள் தாளத்தின் தந்தை திருஞானசம்பந்தர் - தாண்டக வேந்தர் திருநாவுக்கரசர் - தம்பிரான் தோழன் சுந்தரர் பாடல்களில் காணலாகும் பண்ணும் பயனும் - பாடற் பொருள் காலத்திற்கும் வேளைக்கும் ஏற்கும் பண்கள்.

சமுதாயப் பயன்பாட்டிற்காகவும் - பண்பாட்டிற்கேற்பவும் அமைந்த பண்கள் - தேவாரப் பண்ணினை இடம் நோக்கி - இருக்கும் இறை நோக்கித் தம்மை எதிர்நோக்கியுள்ள அடியார் துயர் களைய - பிணி அகல - வறுமை தீர - உயிருய்யப் பாடிய உயிரோட்டப் பாடல்கள் ; விடந்தீர்க்க - ஆண்பனை காய்த்துக் குலுங்கப் பாடிய அற்புதப் பணிகள்.

பண்பாடு தோன்றப் பண்பாடும் முறை - தமிழிசைபாடும் - பாட வேண்டிய முறை தேவாரப் பாடல் பாடிய வகை - பாடிய மரபு ஆகியன மனத்துட் கொண்டு பாட வேண்டிய நிலை.

சைவ மரபு போற்றவும் - பண்பாடு சிதையாது இருக்கவும் உரிய பண்ணில் பாட வேண்டிய முறை - பண்ணை அல்லது இராகம் மாற்றிப் பாடாமல் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாகவும்

பின்னைப் புதுமைக்குப் பேர்த்தும் அப்பெற்றியனை வெறுமனே பூசியாது இசையோடு பாடல் பண்மாறாது பாடிப் பயன் பெறுதல் - பண்பாடும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ; சொற்களைச் சிதைத்தலோ விருப்பத்திற்கு இழுப்பதோ புதிய பாணியில் மாற்றவோ செய்யாமல் பழைய மரபிலேயே திருமுறைகளைப் பாடுதல்.

தாளக்கருவி இசைத்துப் பாடுதல் நலம் ; தாளத்தோடு பாடுதல் நல்லது ; இயலாவிடின் வாய்ப்பாடலே தக்கது ; கைகளில் சொடக்கு போட்டு பாடும் முறை கூடாது ; தவிர்க்க வேண்டும். பாடலை அனைத்து இடங்களிலும் பாடும்படி ஏற்பாடு செய்தல் மரபுவழிப் பாட அறிந்த பழைய ஓதுவார்கள் முறையைப் பின்பற்றுதல் தக்கது ; கருநாடக வழியில் இழுத்து இசைப்பது கேட்கச் சுவை கூட்டலாம் ; அது பண்பாட்டை - மரபு வழி வந்த பண்பாட்டைச் சிதைக்கும் ; எனவே தேவார இசை நெறியில் மரபுவழி வந்த பண் முறையைப் பின்பற்றுதல் தக்கதாம்.

6.14 தேவாரப் பண்ணிசைப் பிடாரர்

முனைவர் ஞானாம்பிகை குலேந்திரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

இந்திய இசை வரலாற்றில் மூல இசையுடன் கிடைக்கும் மிகப் பழமையான பாடல்கள் தேவாரங்கள் என்று அறியப்படுகின்றன. சம்பந்தர், நாவுக்கரசர் , சுந்தரர் ஆகிய சைவ நாயன்மார் மூவரும் (கி.பி. 600 - 900) சிவப் பரம்பொருளைப் பண்ணிசைத்துப் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களை இன்றளவில் பாடுபவர்கள் ஓதுவார் பரம்பரையினராவர். ஆனால் இற்றைக்கு ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் தேவாரப் பாடல்களைத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பண்ணிசைத்துப் பாடியோர் பிடாரர் என அழைக்கப்பெற்றிருக்கின்றனர். நீண்ட வரலாறு கொண்ட தேவாரப் பண்ணிசை மரபின் தொடர்ச்சிக்கு இப்பிடாரர்களின் பங்கு குறித்து இக்கட்டுரை அணுகப்படுகிறது.

தேவார நாயன்மார் காலத்திலேயே தேவாரத்திருப்பதிகங்கள் கோயில்களில் முறையாகப் பாடப் பெற்றதைத் , '' திருப்பதியம் பாடுவார்'' '' திருப்பதியம் விண்ணப்பம் செய்தார் '' போன்ற பல்லவர் காலக் கோயிற் கல்வெட்டுக் குறிப்புக்கள் உறுதி செய்கின்றன. இருந்தும் , சோழமாமன்னன் இராசராசன் காலத்தில் (கி.பி.985 - 1014) தேவாரப் பாடல்கள் வழக்கில் அருகி இருந்ததாகவும் ,நம்பியாண்டார் நம்பிகள் துணைக்கொண்டு தில்லைத்திருக்கோயிலில் அடைந்து கிடைந்த

தேவாரத் திருப்பதிகங்களை மீட்டெடுத்து அவற்றை ஏழு திருமுறைகளாக வகுப்பித்தும் , திருநீலகண்ட யாழ்ப்பாணர் வழிப் பாண்மகளைக் கொண்டு பாடல்களுக்குப் பண்ணடைவு செய்தும் சைவ உலகிற்குப் பெருந்தொண்டாற்றினான் என்பது வரலாற்று உண்மை. அருமருந்தெனக் கிடைத்த தேவாரத் திருப்பதிகங்களைப் பண்ணிசையோடு பேணிக்காக்க விழைந்த இராசராச சோழன் தான் கட்டி எழுப்பிய இராசராசேச்சுரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயிலில் நாளும் தேவாரப் பண்ணிசை பாடப் பிடாரர்கள் நாற்பத்தெண்மரை நியமித்தான். அவர்களுக்கு உணவும், ஊதியமும் வழங்கினான். சிவத்தகைமையும் இசைத் திறமையும் பெற்ற பிடாரர் பரம்பரை தலைமுறை தலைமுறையாகத் தொடர்வதற்கான ஏற்பாடுகளையும் செய்தான் . இதனால் தேவாரம் பாடும்இசைவாணர் மரபொன்று தமிழகத்தில் தோற்றம் பெற்றது. காலங்காலமாக இவர்கள் வழிவந்தோர் இன்றளவும் கோயில்களில் தேவாரப் பண்ணிசை பாடும்முறையைப் பாதுகாத்து வருகிறார்கள். இந்த வகையில் இந்திய இசையின் தொன்மையையும் தொடர்ச்சியையும் உறுதி செய்யும் தேவாரப் பண்ணிசை மரபிற்கு வலுவூட்டிய பிடாரர்களின் முதன்மையான பங்களிப்பு இக்கட்டுரையின் ஆதாரத் தெளிவுடன் தரப்படுகிறது.

6.15 தமிழிசை - முத்துத் தாண்டவர் கீர்த்தனைகள்

முனைவர் சண்முக . செல்வகணபதி
அரசர் கல்லூரி. திருவையாறு.

தமிழகத்தில் பக்தி மார்க்கத்தை வளர்த்த பெருமை பண்சுமந்த பாடல்களுக்கு உண்டு. தேவார முதலிகள் போல் தமிழிசையைச் சீகாழிமுத்துத்தாண்டவன், தில்லை விடங்கரும் மாரிமுத்தாப்பிள்ளையும் , சீகாழி அருணாசலக்கவிராயரும் வளர்த்தனர். இவர்களுள் ஒருவரான சீகாழி முத்துத்தாண்டவர் நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பிய திருஞான சம்பந்தர் போல் சீகாழியில் பிறந்து , உமைதந்த அமுதுண்டு, இசையால் இறைவனை வழிபட்டவர் ஆவார் . தில்லையம்பலவாணனை நாள்தோறும் பாடிவழிபட்டார். இவர் பாடிய பாடல்களில் 60 கீர்த்தனைகளும் 25 பதங்களும் தற்போது கிடைத்தன. இப்பாடல்கள் சைவ சமயக் கோட்பாடுகளை எடுத்துரைக்கும் முகத்தான் அமைந்துள்ளன.

1. இசை , ஆடற் கலைகள் மூலம் இறைவனை வழிபடல்
2. நாயக நாயகபாவனையில் அமைந்துள்ளவை.
3. கீர்த்தனையால் இறைவனை வழிபடும் மரபுத் தொடக்கம்

4. பத இலக்கியம் மூலம் மதுர பக்தியை வெளியிடல்

5.ஏசலின் மூலம் இறைவனின் பெருமையைக் கூறல்.

6. தில்லையின் சிறப்பு , ஆடல்வல்லானின் அருள் நிகழ்ச்சிகள்

7. மாணிக்கவாசகர் பேறு

8. இராமலிங்க அடிகளார் , தொட்டியக்கலை சுப்பிரமணிய முனிவருக்கு முன்னோடி.

9. கீர்த்தனைகள் தரும் இறை நிலை

10. பதங்கள் காட்டும் இறை நிலை

6.16 பழங்குடியினரிடையே காணலாகும் சிவன் குறித்த செய்திகளும் , வழிபாட்டு நிலைமைகளும்

-முனைவர் வே. சிதம்பரநாதபிள்ளை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

பொதுவாகப் பழங்குடியினர் இயற்கையை வழிபட்டு வருபவர்கள் என்பது நாம் அறிந்த ஒன்றே. காலப்போக்கில் பலதரப்பட்ட மக்களிடையே பழகுகின்ற வாய்ப்புகள் ஏற்பட்ட / ஏற்படுகின்ற காரணத்தினால் சில பழங்குடியினரின் பழக்க வழக்கங்களில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. இப்பழக்க வழக்கங்களில் வழிபாடும் ஒன்று , உருவம் அமைத்து வழிபடுகின்ற நிலையில் சிவன் குறித்து இவர்கள் அறிந்துள்ள செய்திகளும் , வழிபாட்டு நிலைமைகளும் குறிப்பிடத் தகுந்தவையாகும். இவை குறித்த கருத்துக்கள் வாய்மொழி இலக்கியம் (விடுகதை) வழியாகவும் , கல்வெட்டுகள் மற்றும் இலக்கியங்கள் மூலமாகவும் தருவதற்கு இக்கட்டுரை முயற்சி செய்கிறது. இக்கட்டுரையில் குறும்பர்கள், சோல நாயக்கர்கள் (சோள நாயக்கர்கள்) , காணிக்காரர்கள் மற்றும் வேடர்கள் ஆகிய பழங்குடியினரை அடிப்படையாகக் கொண்ட சிவன் குறித்த செய்திகளும் , வழிபாட்டு நிலைமைகளும் குறித்த கருத்துக்கள்இடம் பெறுகின்றன.

6.17 சைவத்திருக்கோயில்களில் ஆடற்கலை

திரு. என். செல்வராசு
அரசினர் மேல்நிலைப்பள்ளி, அய்யம்பேட்டை

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனும் அலகிற் சோதியனுமான, அம்பலத்து ஆடும் ஆடல்வல்லானே சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் ,ஆடற்கலைக்கு இலக்கணம் கண்டவன் குடியாக் கொண்ட கோயில்களில் பண்ணும் பரதமும் சைவத்தின் இரு கண்களெனப்போற்றி வளர்க்கப்பட்டன. இக்கலைகள் அவற்றைப் படைத்தவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டன. தேவதாசிகள் எனப்பட்ட தளிச்சேரி பெண்டிரின் சிவத் தொண்டினைப் பெறாத சிவாலயங்களே அந்நாளில் இல்லை எனலாம்.தஞ்சை போன்ற கோயில்களில் 400க்கும் மேற்பட்ட ஆடல் மகளிரின் சிவப்பணி சிரமேற்வைத்துப் போற்றப்பட வேண்டியதாகும்.

சிற்பங்கள்

ஆடற்கலைக்கே அடித்தளமான காரணங்கள் தஞ்சைக் கோயிலில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. இவற்றின் சிறப்பு சிவபெருமானே இம் முத்திரைகளை ஆடிக்காட்டுவதாக அமைத்து உள்ளதாகும். தமிழகச் சிவாலயங்களில் இறைவனின் பல்வேறு நிலைகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு அடுத்தப்படியாக பெருமளவிலுள்ள சிற்பங்களைக் காணும்போது ஆடற் கலைக்கே அதிகம் முக்கியத்துவம் தரப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. எனவே நாட்டியக்கலைக்கு நடைபாவாடையிட்டவை சைவத்திருக்கோயில்களே என்ற உண்மை பெறப்படுகிறது. பதியிலார் எனப்பட்ட எண்ணிறந்த பெண்டிர் தம்மை எம்பெருமானுக்கே அர்ப்பணித்து ஆடற்கலை வழியே சிவப்பணி ஆற்றிச் சிறந்ததை இம்மாநாட்டில் நினைவு கூர வேண்டியதும் ஒரு சிவத் தொண்டேயாகும்.

பரதத்தின் பாணிகள்

பந்தணைநல்லூர் , வழுவூர் , திருவாரூர் , தஞ்சாவூர் போன்ற சிவத்தலங்களில் தழைத்து வளர்ந்த ஆடற்கலையே இன்று அகில முழுதும் அனைத்துத்தரப்பினராலும் வணங்கி வரவேற்கப்படுகிறது. இது சைவ சமய கலைக்கும் ,பண்பாட்டிற்கும் அளித்த மிகப்பெரிய கொடையாகும்.

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் சப்தவிடங்கத் தலங்களான திருவாரூர் , திருநள்ளாறு , திருநாகைக் காரோணம் , திருக்கறாயில் திருக்கோளிலி, திருவாய்மூர் ,திருமறைக்காடு ஆகிய

தலங்களில் திரு வீதிகாண எழுந்தருளும் போது இன்றும் வழக்கிலுள்ள சிறப்பு நடனங்கள் வேறெங்குமே காணமுடியாத அற்புதங்களல்லவா ? இவை பற்றியும் இவை தொடர்பான பாரம்பரிய முறைகள் பற்றியும் முக்கிய தகவல்களும் சைவ உலகு இன்றைய நிலையில் தெரிந்து கொள்ள வேண்டிய சிறப்புத் செய்திகள் ஆகும்.

மொத்தத்தில் ,இம்மண்ணிற்குப் பண்ணுடன் பரதத்தையும் தந்த சிவபெருமானின் வழியொற்றிச் சகல சிவாலயங்களும் அன்னாளில் அவற்றைப் போற்றி வளர்த்து இன்றைய கலை உலகிற்கு அளித்துக் கலைப்பணியிலும் சிவப் பணியிலும் பெரும் பங்கையாற்றி மங்காப்புகழ்பெற்றுள்ளன என்றஉண்மை நிறுவப்படும்.

6.18 சைவ இலக்கியங்களில் இசைக்கலையும் , தாளச் செய்திகளும்

-முனைவர் ந. சேஷாத்திரி
தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

''காண்பதற்கு எளிமையாகவும் , பயில்வதற்கு அருமையாகவும் இருப்பது கலை '' என்று புகழேணி எனும் வானொலி நிகழ்ச்சியில் கூறினார் நாட்டியப் பேரொளி பத்மா சுப்பிரமணியம். இக்காலத்தவர்கள் பாடும் அடாணா எனப்படும் யாழ்முரியை ஞானசம்பந்தப்பெருமான் அன்றே பாடினார். உமையம்மையின் அழகுக்குத் தான் நிகராக மாட்டோம் என்று மான் திரும்பிக் கொண்டது '' தகும் தகும்'' என்று பொருள்படும் படி மத்தளம் இசைத்ததாகப் பிரபுலிங்கலீலை பகர்கிறது. அத்தகைய பெருமை வாய்ந்த தாளக்கருவிகளை நுட்பமாக ஆய்ந்து புதுமைகளை உலகிற்கு வழங்கியவர் திராவிடச்சிசு என்று ஆதிசங்கரரால் அழைக்கப்பட்ட ஞானக்குழந்தையாவார்.

குற்றம் இல்லாத தாளக்கருவி என்று அழைக்கப்படும் தவிலை முதன்முதலில் அறிமுகம் செய்த பெருமை அருணகிரி நாதரையே சேரும். தாளக்கட்டின் அடிப்படையிலேயே அவர் திருப்புகழைப் பாடியிருக்கிறார். அவருக்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் தேவார ஆசிரியர்களாகத்தான் இருக்கவேண்டும்.

ரக்தி , வலந்தலைப் பொருத்தம் , கூடு, விரலடி , கிடிகட்டி, ரவைஜாதி , ஏறுசக்கரம் , இறங்குசக்கரம் , துத்துக்காரம் , ஒத்துமூச்சு , தன்னக்காரம் , அகாரம் , கைத்தாளப்பிடி, தொம் ,கும்கீ, '' தா '' ஆகிய சொல்லாட்சிகள் நாதசுரத்திலும் , தவிலிலும் பயின்று வருகின்றன.

இவையெல்லாம் தேவார ஆசிரியர்களின் திருப்பாடல்களின் வழியாகத்தான் வந்திருக்கவேண்டும் என்பது சைவமடங்களின் தலைவர்கள் ஆதரித்துவந்த பாங்கிலிருந்து தெரிகிறது. நாதசுரம் என்ற குழற்கருவி , முசுகுந்தச் சக்கரவர்த்தியின் கோரிக்கையை ஈடேற்றுவதன் பொருட்டுச் சிவபெருமான் திருக்கயிலையிலிருந்து , தியோகேசராகத் திருவாரூருக்கு எழுந்தருளிய போது , அவருடன் வந்த பரிவாரங்களில் ஒன்று எனத் திருவாரூர்ப் புராணம் கூறுகிறது.

'' நட்டமிடுமதமத்தர் சுத்தநித்த
வட்டத்தி னுக்கிசைய ஒத்திக்க னத்ததன
வட்டத்தை ஒத்திட்டதோர்
தாளவட் டங்கொட்டு கைப்பாணி '' என்று

கைத்தாளமிடுதலைக் குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் குறிப்பிடுகிறார்.

ஆலய வழிபாட்டிற்கென்று தோன்றிய முழவுக்கருவிகளில் ஒன்றுதான் கிடிகிட்டி !. இறைவனின் வீதியுலாக்களின்போது தவிலுக்கு அடுத்த இடத்தைப் பிடித்திருந்தது. 40 ஆண்டுகளுக்கு முன்புதான் மறையத் தொடங்கியது.

பம்பை என்ற இசைக்கருவியைச் சிவபெருமானே இசைத்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

சைவத்தின் பெருமையை உணர்ந்துதான் இந்தியத் தொலைக்காட்சி '' சத்தியம் , சிவம் , சுந்தரம் '' என்று தன்னுடைய குறிக்கோளை வெளிப்படுத்தியது. கல்லாலமரத்தின் கீழ் நால்வர்க்கு ஆண்டவன் சொல்லாமல் சொல்லிய திறத்தை அமைதி வழிக் கல்விக்கு (Teaching thro' silence) குறியீடாக அமெரிக்கா அமைத்திருக்கிறது.

6.19 கடை முழுக்கு

சு. தமிழ்வேலு,
அ.வ.அ. கல்லூரி, மயிலாடுதறை .

திருவாவடுதுறை ஆதினத்தின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில்களுள் ஒன்று மயிலாடுதுறை மாயூரநாதசுவாமி திருக்கோயிலாகும். இக்கோயிலில் எண்ணற்ற திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் முக்கியமான திருவிழாக்கள் இரண்டு. ஒன்று , வசந்த காலத்தில் நடைபெறும் சைத்ரோற்சவம். மற்றொன்று ஐப்பசி மாதத்தில் நடைபெறும் துலா மாத விழா எனப்படும் கடைமுழுக்கு ஆகும்.

கடைமுழுக்கு என்பது ஐப்பசி மாதம் முதல் தேதியிலிருந்து கார்த்திகை முதல் தேதி வரை நடைபெறும் விழாவாகும்.

காவிரி ஆற்றின் மயிலாடுதுறை படித்துறைக்கு இடப தீர்த்தம் என்று பெயர்.

இத்தீர்த்தத்தில் இம்மாதம் முழுவதும் மாயூரநாதசுவாமியின் தீர்த்தவாரி நடைபெறும். இது சமயம் பக்தர்களும் நீராடுவர். குறிப்பாக முதல் நாளும் , அமாவாசை அன்றும் , கடைசி நாளும் கார்த்திகை முதல் நாளும் அதிக அளவில் நீராடுகின்றனர். ஐப்பசி மாதத்தின் கடைசி நாள் நீராடுதலைத்தான் கடைமுழுக்கு என்கின்றனர். இதற்கு அடுத்தநாள் (கார்த்திகை முதல் நாள்) முடவன் முழுக்கு என்கின்றனர்.

இம்மாதம் முழுவதும் காவிரிக் கரைக்குச் சுவாமி புறப்பாடு உண்டு. குறிப்பாகக் கடைசிப் பத்து நாள்கள் வீதியுலாவும் உண்டு. இந்த நாட்களில் நடக்கின்ற நிகழ்வுகளைத் தொகுத்துத்தரும் போக்கில் இக்கட்டுரை அமையும்.

தமிழகத்தில் நிகழும் , பிற நீராடல்களுடன் இந்நீராடல் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகக் காவிரியில் நிகழும் பிறநீராடல்கள். இத் தீர்த்தத்தில் நிகழும் நீராடல் உற்சவத் தினால் ஏற்படக்கூடிய சமூக நிகழ்வுகள் விளக்கப்பட்டுள்ளன.

6.20 கட்டுமான மரபில் இலிங்க வடிவங்கள்

பேராசிரியர் கோ. தெய்வநாயகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

இந்தியக் கலை வரலாறு பழைமை மிக்கது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொடர்ந்து வரும் மரபு உடையது. நடப்புச் செயன்மையில் இருந்த வருவது. அவ்வகையில் இந்தியாவின் தொல்லியல் நாகரீகச் சிறப்பைப் புலப்படுத்தும் அரப்பா அகழாய்வுப் புலப்பாடுகள் முதல் இன்று வரை இந்தியாவில் தொடர்ந்து காணலாகும் ஒரு வடிவம் தான் ''இலிங்கம் ''. இவ் இலிங்க வடிவத்தைக் கட்டுமான மரபு நோக்கில் கண்டு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இந்தியக் கட்டக்கலை வரலாற்றைச் சற்றே கூர்ந்து காண்போமானால் கீழ்வரும் பல்வகையான வடிவங்கள் கட்டுமான வடிவங்களாகவும் அவற்றின் கூரை வடிவங்களாகவும் கொள்ளக் கிடக்கின்றன.

அவை :

1. சதுரம் (தட்டை) கிடை நிலை குத்திட்ட நிலை
2. நீள் சதுரம் (தட்டை) இடைநிலை , குத்திட்ட நிலை
3. வட்டம் (தட்டை)
4. பட்டகம்
5. கூம்பகம்
6. உருளை
7. கோணம் (அறுகோணம் , எண்கோணம்)

இவ்வடிவங்கள் தனித்தும் ஒன்றுள் ஒன்று கலந்தும் தேவைக்கும் படைப்போன் பயனாளனின் விருப்பத்திற்கும் ஏற்ப வடிவாக்கம் பெற்று எழிலார்ந்த இந்தியக்கட்டுமான வடிவங்களை உருவாக்கியுள்ளன. இவை ஒவ்வொன்றின் ஆழ்புலத்திலும் அறிவியற் தொழில் நுட்பக் கூறுகள் பொதிந்துள்ளன.

அவற்றுள் ஒன்றான உருளை வடிவத்தாலான '' இலிங்க '' வடிவத்தின் இயல்புகளை அறிவியல் தொழில்நுட்ப அடிப்படையில் கட்டுமான மரபியல் நோக்கி ஆய்ந்து சில புலப்பாடுகளைக் காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

6.21 பல்லவக் கலை மரபுக்குரிய இலங்கைச் (இசுறுமுனியாச்) சிற்பங்கள் - ஒரு மீள் பரிசீலனை -

திரு. பரமு புஸ்பரட்ணம்
இலங்கை

இலங்கையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குக் குறையாத வரலாறு கொண்ட இந்து மதம் சார்ந்த கட்டடச் சிற்பக்கலைகள் பண்டு தொட்டுத் தமிழகக் கலைமரபின் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ச்சியடைந்தன. ஆயினும் பெரும் கலைப்படைப்புக்கள் என்று கூறக்கூடிய கட்டடச் சிற்பக்கலை மரபு கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் வளர்ச்சியடைந்திருந்ததாகத் தெரியவில்லை. இதற்குத் தமிழகத் தொடர்பால் இங்கும் அழியக்கூடிய பொருட்களால் இக்கலைகள் ஆக்கப்பட்டிருந்தமை காரணமாகும். தமிழகத்தில் பல்லவர் ஆட்சியோடு தோன்றிய பக்தி இயக்கமும் , கட்டடச் சிற்பக்கலையில் அது ஏற்படுத்திய பாரிய மாற்றமும் சமகாலத்தில் இலங்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வழிவகுத்தன. இதற்கு அநுராதபுரம் , நாகந்தா , தெவிநுரை , திருகோணமலை, மாதோட்டம் , குருக்கள் மடம் , சித்துள்பல ஆகிய

இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பல்லவக்கலை மரபை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஆலயங்களும் , அவை தொடர்பான சிற்பங்களும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவற்றுள் பண்டைய இராசதானியான அநுராதபுரத்திற்குத் தெற்கே ஒரு மைல் தொலைவில் உள்ள இசுறுமுனியாச் சிற்பங்கள் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும். ஆதியில் ஈஸ்வர வழிபாட்டுடன் தொடர்புடைய இவ்விடம் பண்டைய தமிழ் மன்னர்களின் அரசியல் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததைப்பாலி இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. மீண்டும் பல்லவர் ஆட்சியில் தமிழர்களின் செல்வாக்கிற்கு இவ்விடம் உட்பட்ட போது இந்து மதம் மறுமலர்ச்சி அடைந்ததற்கு இங்குள்ள சிற்பங்கள் சான்று பகர்கின்றன. இச்சிற்பங்களைக் கொண்ட பாறையின் அமைப்பு மாமல்லபுரத்தில் அகன்ற பாறையில் இயற்கையாய் அமைந்த இடைவெளியை வானத்தில் இருந்து விழும் கங்கையெனக் கற்பனை செய்து , அதன் இரு மருங்கிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளதை ஒத்துள்ளன. இங்குள்ள சிற்பங்களைச் செதுக்குவதில் பின்பற்றப்பட்ட கட்டுப்பாடு அணிகலன்கள் அதிகமின்றி மனிதனின் சொந்த உருவ இலட்சணங்கள் வெளிப்பட்டிருத்தல் , கை , கால் நெடிதாகக் காட்டப்பட்டிருத்தல் , நீண்ட கண்கள் , தடித்த உதடுகள், முகம் நீண்டு அகலமாக இருத்தல் , சிற்பத்தில் காணப்படும் எளிமை , மென்மை பொருந்திய அம்சங்கள் ஆகியன பல்லவக்கலை மரபின் ஒப்பற்ற கலைப்படைப்பாகிய மாமல்லபுரம் சிற்பங்களை அப்படியே ஒத்திருக்கின்றன.

இங்குள்ள சிற்பங்களுள் கலைவரலாற்றாசிரியர்களைப் பெரிதும் கவர்ந்த சிற்பமாக 'மனிதனும் குதிரைத் தலையும்' கொண்ட சிற்பம் காணப்படுகிறது. கலைவரலாற்றாசிரியர்களில் பலர் இச்சிற்பம் பண்டைய சிங்கள மன்னர்களின் லௌகீக வாழ்வு சம்பந்தப்பட்டதென விளக்கம் கொடுத்து , இதன் கலைமரபை வடஇந்தியாவுடன் தொடர்புபடுத்தி யுள்ளனர். ஆனால் இச்சிற்பத்தின் கலைமரபு , அது வெளிப்படுத்தி நிற்கும் கருத்து , காலம் என்பன பெருமளவிற்குப் பல்லவக் கலைமரபின் செல்வாக்கைப் பிரதிபலிப்பதாக உள்ளது. இதைத் தமிழகத்தில் உள்ள பல்லவச் சிற்பங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதே இவ்வாய்வின் கருப்பொருளாகும்.

6.22 தற்காலக் கலாச்சாரமும் சைவமும்

திருமதி கு. பொன்னி
அரசு கலைக்கல்லூரி ,சிதம்பரம்.

முன்னுரை

பிரபஞ்சத்தையும் கோடானுகோடி உயிர்களையும் செலுத்துகிற கடவுள் , பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருப்பவன் , ஒன்றாகி , உடனாகி , வேறாகியும் நின்று உயிர்கள்தோறும் உறைபவன்.

உயிர் வாழ்க்கை

வாழ்க்கை என்பது உயிர் போகும் பாதை. அறியாமை தவிர்த்து , அறிவு வளர்த்து , பொறிகளில் தூய்மைகாத்து , நல்வாழ்வு வாழ, நெறி காட்டுவது சமயம் , இம்மை ,மறுமை மட்டுமன்றி, எழுமைக்கும் ஏற்ற வழிகாட்டுகிறது.

கலை

கலை , சமய வெளிப்பாட்டின் ஒரு பகுதியே. தோன்றி வளர்ந்ததும் சமய மண்ணில் தான் ! இவை இரண்டும் மனித சமுதாயத்தை நெறிப்படுத்துவன. மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் நாட்டியத்தின் நாயகர்களாய், சிவனும் சக்தியும் இருக்கிறார்கள்.

நாகரீகம்

கலை பண்பாடாகி , நாகரிகமாய் வளர்ந்து வந்த காலக்கட்டங்கள் பிறழ்ந்து , தொன்மையும் , பண்பும் இழந்து , கலாச்சாரச் சீர்கேட்டினால் பாதைமாறிச் செல்கிறது. ஞானவெளியில் நின்றாடும் பெருமானே மானுடத்தை நல்வழிப்படுத்த வேண்டும். '' கலியுகத்தில் பக்தியினால் முத்தியாதலால்'' சமயமே மனித வாழ்வை முறைப்படுத்த வேண்டும்.

உளவியல்

மனிதனுக்கு மட்டுமே உள்ள பெரு சக்தி சிந்தனை. மனமே நிலைக்களவாய் , தெளிவே சிவமாய் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துகிறது , சமயம் . அறிவியல் ஆராய்ச்சி தற்போது வெளிப்படுத்திய உளவியல் கருத்துக்களைச் , சமயப் பாடல்கள் முன்பே கூறிவிட்டன.

அவாவறுத்தல்

அவாவறுத்தலால் அழிவற்ற பேரானந்தம் கிட்டும். மனித

ஆசைகள் அழிவை அளித்துக் கொண்டிருக்கும் நிலையில் மருந்தில்லா நோய்கள் தீர ஒரே மருந்து சமயம் !

தாயன்பு

தாயாகிக் குழந்தை வளர்த்தல் அரியகலை. அண்டசராசரத்தின் அன்னை மானுடக் குழந்தைக்குக் பாலூட்டினாள், நோயின்றி வாழ்தலும் ஒரு கலையே ! மருந்தீஸ்வரனாய் நின்று மக்களைப் பேணுகிறான் மகேசன்

பெண்ணியம்

ஆண்டவனே உமை ஒரு பாகனாய் , அம்மையப்பனாய்ப் பெண்ணிற்குச் சம பங்களித்து பெண்ணியக் கருத்துக்களை உணர்த்தினான்.

நீதி

மனித நாகரிகத்தின் மையமே நீதியாகக் குடியாட்சிச் சட்டங்கள் '' நாமார்க்கும் குடியல்லோம்'' நிலைப்படுத்தியது சமயம்.

முடிவுரை

ஒலி, ஒளியாய் , நீதியாய் , உளவியலாய், தத்துவமாய் , கலாச்சாரப் பெட்டகமாய் , பண்பாட்டுக் காவலர்களாய் , நாகரிகத் தூண்களாய் நின்று கலை வழி , கவலை நீக்கி , பண்பாட்டு வழி அமைத்து மருவில்லா நாகரிகம் கண்டது சைவம் !

6.23 சங்கச்சமுதாய மாற்றமும் முருக வழிபாடும்

பெ. மாதையன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சமூக மாற்றம் ஒவ்வொன்றும் அவ்வச் சமூகஞ் சார்ந்த பல்வகைக் கூறுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். சங்க இலக்கியத்தே இடம் பெற்ற பல்வகையான தொன்மங்களும் இவ்வகையில் சமூக மாற்றங்களை வெளிப்படுத்துவனவாய் உள்ளன. அவற்றுள் முருகன் தொன்மமும் ஒன்று. இத்தொன்மம் வெளிப்படுத்தும் மூவகைச் சங்கச் சமூக மாற்றங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

முன்பழந்தமிழ் , பின்பழந்தமிழ் எனும் இரு வகைக் காலங்களிலும் செல்வாக்குப் பெற்றுளள முருகன் முன்பழந்தமிழ்க் காலத்தே

அகத்திணையில் களவுத் தெய்வம் , புறத்திணையில் வீரத்தெய்வம் எனும் இருவேறு பரிமாணங்களுடன் காட்சி தருகின்றான். முழுக்க முழுக்கத் தமிழ்த் தெய்வமாகவே விளங்கும் முருகனுடன் சூர்த்தொன்மம் இணைத்துப் பேசப்படுகிறது. இக்காலப் பகுதியில் அக இலக்கியங்களில் வெறியாட்டுடனும் புற இலக்கியங்களில் வீரத்துடனும் கொற்றவையுடனும் இணைத்துப் பேசப் பெற்றுள்ளான். வெறியாட்டில் பேசப்பெறும் முருகனிடம் இனக்குழுச் சமுதாயத் தெய்வக் கூறுகளையும் வீரத்துடன் இணைத்துப் பேசப்பெறும் முருகனிடம் வீரயுகக் காலகட்டக் கூறுகளையும் காண்கிறோம்.

பின்பழந்தமிழ்க் காலப் பகுதியில் பரிபாடலிலும் திருமுருகாற்றுப் படையிலும் முழுக்க முழுக்க வடபுலக் கந்தனின் கூறுகளைத் தாங்கிய ஆறுமுகனாய் முருகன் மாற்றம் பெற்றுவிடுகிறான். இங்கு வைதீக மதச் சாயல்கள் முழுக்கப் படிந்த முருக வழிபாட்டு மரபுகளைக் காண்கிறோம். பிற வைதீகக் கடவுளர்களுடன் இணைத்துப் பேசப்பெறும் குடும்பச் சூழல் உருவாக்கப் பெறுகின்றது.

முருகனின் இவ்மூவகை இயல்பு மாற்றங்களும் விளக்கப்படுவதுடன் இவை ஒவ்வொன்றுக்கும் காரணமாய் அமைந்த இனக்குழுச் சமூகம் , வீரயுகச் சமூகம் , வைதீகச் சமூகம் எனும் சமூகப் பின்னணிகளும் ஆராயப்படவுள்ளன.

6.24 தமிழ் கோயில் கலைகளும் பண்பாடும்

முனைவர் ஜி. வசந்தா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

வாழ்க்கையின்அனுபவகங்களுக்கு உருவும் , உயிரும் , தெளிவும் , ஒழுங்கும் , அளிப்பது கலையேயாகும். வாழ்க்கையின் சின்னஞ்சிறு விவரங்களும் கலையினால் பொருள் உடையதாகுகின்றன. நாம் அனுபவிக்கும் யாவும் கலையினால் இன்பமும் அனுபவமும் பெற்று விடுகின்றன.

இயற்கையில் காண்பதை அப்படியே வடிவமைப்பது மேனாட்டுக் கலை. ஆனால் இந்தியக் கலைஞன் அப்படியல்ல. ஒன்றை அல்லது ஒரு உருவைப் பார்த்து வடிவமைக்காமல் இயற்கையின் தோற்றத்தின் பின் புலனாகக் காணும் கருத்தையோ பாவத்தையோ தான் கலையாக வடிக்கின்றான் . புலனறிவால் காணும் உண்மையை அவர்கள் 'அசத்' அல்லது மாயை எனக் கொண்டனர்.

இத்தகு சீரிய பண்பு நலன்களை விளக்கும் கலைகள் , அவை உணர்த்தும் பண்பாடும் ஒரு நாட்டின் பண்பாட்டு வரலாற்றினை அறிய உதவுகின்றன. இவ்வகையில் தமிழகக் கோயில்களால் அறியப்படும் கட்டடக்கலை , சிற்பக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை போன்ற கலைகள் யாவுமே ஒரு நாட்டின் பண்பாட்டின் கூறுகளாகும். இக்கட்டுரை தமிழகத்தின் கோயில் கலைகளையும் அவை பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் திறனையும் ஆராய்கின்றது.

6.25 தமிழ் இலாவணிப் பாடல்களில் சைவமும் வைணவமும்

இராக. விவேகானந்தகோபால்
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் .

முன்னுரை

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் காலத்தில் மகாராட்டியத்திலிருந்து தஞ்சைக்கு வந்த கலைகளுள் ஒன்றே நாட்டுப்புற நிகழ்கலை வடிவான இலாவணியாகும். இந்த இலாவணி மராட்டி மொழியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மாறித் தமிழ் மொழியில் உருவான போழ்து இதன் நோக்கும் போக்கும் மாறுபடலாயிற்று. தத்துவம் , சிருங்காரம் ஆகியவற்றை உட்பொருளாகக் கொண்ட மராட்டி இலாவணி , தமிழில் உருவான போழ்து தத்துவம் , சிருங்காரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட காமன் கதையை மையமாகக் கொண்டது. இதனால் எதிர்ப்பாட்டு மரபில் '' காமன் சிவனால் எரிந்தானா - எரியவில்லையா ? '' என்ற நிலையில் '' எரிந்தகட்சி எரியாதகட்சி இலாவணி '' உருவானது.

தத்துவ விவாதம்

காமன் திருமாலின் மகனாகவும் , ரதி சிவனின் மகளாகவும் புராணங்கள் கூறுவதால் எரிந்த கட்சி இலாவணி பாடுவோர் சிவனைப் போற்றுபவர்களாகவும் , எரியாதகட்சி இலாவணி பாடுவோர் திருமாலைப் போற்றுபவர்களாகவும் காட்டப்படுகின்றனர். இதில் சிவ-சக்தி வாதம் எடுத்துரைக்கப்படுகின்றது. சிவனையும் சக்தியையும் மையமாக வைத்துப் பல்வேறு புராண, தத்துவ வினாக்களும் விடைகளும் பாடல் வடிவில் இடம் பெறுகின்றன.

சிருங்கார விவாதம்

காமன் '' காதற் கடவுளாகக் '' கற்பிக்கப்படுவதால் காதலின் மூலமே உயிர் உற்பத்தி உண்டாதல் காட்டப்படுகின்றது. இதனால் ஆண், பெண் இனக் கவர்ச்சி , இனச்சேர்க்கை , கரு உருவாக்கம் , உயிர் உற்பத்தி ஆகியவை பற்றிய பாடல்கள் '' எரிந்த கட்சி - எரியாதகட்சி இலாவணியில்'' பாடப்படுகின்றன. இவை படித்தறியாப் பாமர மக்களுக்குப் பாலியல் கல்வி ஊட்டுவதற்காகவும் , சிருங்காரச் சுவை காட்டி இலாவணி நிகழ்ச்சியினை விறுவிறுப்புடையதாக மாற்றுவதற்கும் பயன்படுகின்றன.

சைவமும் வைணவமும்

சைவமும் ,வைணவமும் இந்து மதத்தின் இரு பிரிவுகள் . இரு கண்கள் ; ஒரு கால கட்டத்தில் இவ்விரு பிரிவுகளும் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டு ஒருவரையொருவர் வெறுத்தனர். இந்நிலையை மாற்றுதவற்காகச் சிவனின் மகளான ரதிக்கும் , திருமாலின் மகனான மன்மதனுக்கும் மணம் செய்வித்த புராணம் உருவானதோடு, சிவன் பெரியவரா ? திருமால் பெரியவரா ? என்ற இவ்விவாதத்தில் இருவரையும் சமமாக்கி நிகழ்ச்சியை முடிக்கும் எரிந்தகட்சி - எரியாதகட்சி இலாவணி மக்களின் அறியாமை நீங்க எழுந்த அரிய ஓர் நிகழ்கலை வடிவமாகும்.

முடிவுரை

உருண்டோடும் கால வெள்ளத்தில் அவ்வப்போது ஆங்காங்கே உருவாகும் குழலுக்குத் தக்கவாறு பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கும் கலைகளும் மானிடர்க்கு அறிவுறுத்தும் கலைகளாக உருமாற்றம் பெறுகின்றன. அவ்வகையில் மராட்டிய மண்ணிலிருந்து கொண்டுவரப்பட்டுத் தமிழ் மண்ணில் ஊன்றப்பட்ட '' இலாவணி'' என்னும் கலை தமிழ் மயமாகி இங்குள்ள மக்களின் தேவையை நிறைவு செய்வதாக மாறியது.

6.26 இந்தியாவும் சமூக சமய ஒற்றுமையும்

பேராசிரியர் V. வினாயகப்பெருமாள்
திருவனந்தபுரம்

நமது பண்பாடு உலகின் பழங்காலப் பண்பாடுகளில் ஒன்றாகும். அனேக இன மக்களின் வரவும் சிந்து நதிக்கரை நாகரிகமும் அதன் அடிப்படையாகும். இந்து சமயத்துடன் ஒப்புமையுடையது அது. நால்வகை வேதங்களும் , சாதியும் தோன்றக் காரணத்தை ஆராய வேண்டும். இராமாயணம், பாரதம் முதலியனவும் சாக்ரட்டீஸ் , புத்தர் , கன்பூஷியஸ் ஆகியோருடைய கருத்துக்களும் இதற்கு அடிகோலின. தென்னிந்தியாவின் தனிப் பண்பு திராவிடப் பண்பாடாகும். சேர , சோழ , பல்லவ , சைவ சமயக் குரவர்களும் பண்பாட்டினை வளர்க்கத் துணை புரிந்தனர். புத்தர் , அக்பர் போன்றோரின் கொள்கைகள் உலகளாவிய கொள்கைகளாகும். பதேபூர்சிக்ரியில் உள்ள இபாரத்கானா எல்லா மதத்தலைவர்களும் கூடி ஆய்வு செய்யம் இடமாக இருந்தது. இராஜாராம் மோகன் ராய் அமைத்த பிரம்ம சமாஜம் சமய ஒற்றுமைக்கு அடிகல்லாகும். ஈஸ்வர சந்திரவித்யா சாகர் , விவேகாந்தர் , இராமகிருஷ்ண பரமஹம்சர் யாவரும் ஒற்றுமையைப் பிரச்சாரம் செய்தவர்களே. கந்தகூரி விரேசலிங்கம் ஆந்திரத்தில்தலைசிறந்த சீர்திருத்தவாதி.கேரளத்தில் சங்கராச்சரியார் பண்பாட்டையும் தெய்வீக உணர்வையும் வளரச் செய்தவர். தயானந்த சரஸ்வதி சிலை வணக்கத்தையும் சாதி மறைகளையும் அறவெறுத்தவர். அன்னிபெஸன்ட் அம்மையாரின் தொண்டு எடுத்துக் கூறத்தகுந்தது இந்திய நாட்டின் தேசியஒருமைப்பாட்டிற்குப் பல்வகை மதங்களும் ஆற்றிய தொண்டினையும் , காந்தியடிகளின் இந்து - முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட தியாக உணர்வையும் எடுத்தக்காட்டுவது மிக அவசியம். தற்போதைய இனவெறி , சாதிவெறி , வகுப்புக் கலவரங்கள் நீடித்தால் இந்திய நாடே அழிந்து போகும் , பாபர் மசூதி இடிக்கப்பட்ட சூழ்நிலையை ஆய்ந்து இனியாவது இத்தகைய வெறிச்செயல்கள் நடைபெறாமல் காக்க ஆவன செய்வது மக்களதும் , தலைவர்களும் கடமையாகும்.

6.27 கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்களில் சிவபக்தி நெறி

முனைவர் ந. ஜெயவித்யா,
தமிழ்ப் பல்கலைக்கழகம்

'' ஏழிசையாய் இசைப்பயனாய் , '' பண்ணவனை பண்ணின் வரும் பயனானை'' என்று பாடி இசையின் மூலம் இறைவனை அடையலாம் எனக் கண்டனர் பெரியோர்கள். அந்த வகையில் இசையின் மூலம் இறைபக்தியைத் தமிழோடிசை பாடிப் பரப்பியவர்களில் கோபாலகிருஷ்ண பாரதியார் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர் தனது பாடல்களில் காட்டும் சிவபக்தி நெறியின் சிறப்பினை விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

கோபாலகிருஷ்ண பாரதியார் தெய்வத்தைப் பாட்டுடைத் தலைவனாகவும் தன்னை நந்தனாகவும் கொண்டு , அத்தெய்வத்தின் பெருமைகளைப் போற்றியும் , பெருங்கருணைத் திறத்தை வியந்தும் , அவனருளை வேண்டி , பக்திப் பொருளை முதன்மையாகக் கொண்டு பல பாடல்கள் இயற்றியுள்ளார்.

பக்தியைக் கீர்த்தனைகளின் மூலம் கையாண்ட முறை , பக்தியை வெளிப்படுத்தக் கூடிய ராகங்களைக் கையாண்டுள்ள தன்மை ஆகியவற்றையும் , கோபாலகிருஷ்ண பாரதியார் தன் உள்ளக் கருத்துக்களை விளக்கத் தேர்ந்தெடுத்த சிவபக்தர் நந்தனைப் பற்றியும் , அவர்தம் தொழில் மற்றும் பக்திச் சிறப்புக்களைப் பற்றியும் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது.

இறையருளால் மெய்யறிவு வரப்பெற்ற நந்தனார் இறைவனின் அற்புதத்தை வியந்து பாடுவதாகவும் , பின்னர் பிறவித் துன்பங்கள் நீங்கப் பெற்று ஈறில்லா இன்பந்தரும் இறைவன் திருவடிப் பேற்றைப் பெறுவதற்குப் பாடுவதாகவும் , முக்தியடைவதாகவும் அமைந்துள்ள பாடல்களின் தன்மை , அதற்குரிய ராகங்கள் , ராகத்தின் குணம் , சுவை ஆகியவற்றையும் விளக்குகிறது.

தமிழர் பண்பாட்டு மரபுகளும் முதன்மையான இசை என்னும் இன்கலையை பக்தி உணர்வின் வெளிப்பாட்டுக்குரிய துணையாகக் கொண்டு சிவபக்தி நெறியை விளக்கிய தன்மையும் இக்கட்டுரையின் ஆய்வுப் பொருளாக அமைகின்றது.

6.28 கவுத்துவங்கள் காட்டும் இறை வழிபாடு

ஹேரம்பநாதன்
தஞ்சாவூர்

கலைகளின் கொலுவிடமாக ஆலயங்கள் திகழ்கின்றன. இறைவனைக் கலைவடிவில் காண்பது நம்மரபு. ஆடல்வல்லானாக இறைவனையும் , வீணை மீட்டும் நிலையில் சரஸ்வதியையும் , குழல் ஊதும் நிலையில் கண்ணனையும் ,மத்தளம் இசைக்கும் நிலையில் நந்தியம் பெருமானையும் கண்டனர்.

திருக்கோவில்கள் வளர்த்த கலைகளுள் ஆடலும் , பாடலும் முக்கிய இடம் பெறுகின்றன. ஆடற்கலையின் மூலம் சிவபெருமான் ஐந்தொழில் புரிகின்றான். ஆடலின் இருநிலைகளாகத் தாண்டவம் , இலாஸ்யம் இறைவனும் இறைவியும்தந்தனர். இறைவனுக்குரிய வழிபாடுகளில் ஆடல் முக்கிய இடம் பெற்றிருந்தது. இதன்காரணமாக அக்காலத்தில் தேவதாசிகள் திருக்கோயில்களில் பணிபுரிந்தனர்.

ஆலய வழிபாட்டிற்கென்றே கவுத்துவம் என்ற ஆடல் உருப்படி தோற்றம் பெற்றது. பஞ்சமூர்த்திகவுத்துவம், நவசந்தி கவுத்துவம் , காளி கவுத்துவம் , நாச்சியார் கவுத்துவம் , விஷ்ணு கவுத்துவம் போன்ற கவுத்துவங்கள் இன்று உள்ளன. ஆனால் இவை இன்று ஆலயவழிபட்டில் இடம் பெறாமல் முழுமையாக மறைந்து வருகின்றது. இக்கவுத்துவங்கள் தஞ்சைப் பெரிய கோவில் , திருத்தவத்துறை திருவிடைமருதூர் , உப்பிலியப்பன்கோவில் , மன்னார் குடி ஆகிய ஆலயங்களில் நடத்தப்பட்டு வந்துள்ளன.

விநாயகர் , முருகன் ,ஞானசம்பந்தர் , நடராசர் , சண்டிகேஸ்வரர் ஆகிய தெய்வங்களின் பெயரில் பஞ்ச மூர்த்தி கவுத்துவமும் , பிரம்மா , இந்திரன் , அக்னி , எமன் , நிருதி , வாயு, வருணன் , குபேரர் ,ஈசான்யம் ஆகிய திக்குப் பாலகர்கள் பெயரில் நவசக்கவுத்துவமும் அந்தந்தத் தெய்வங்களுக்கு உகந்த. இராகம் , பண் , தாளம் , வாத்யம் , நிருத்தம் இவற்றுடன் இயற்றப்பட்டு நடந்தேறிவந்தன. இவை கோவில் திருவிழாக்காலங்களிலும் , திருவாதிரை நன்னாளிலும் பாடப்பட்டும் , ஆடப்பட்டும் வந்தன. ஆனால் இன்று ஓரிரு கவுத்துவங்கள் மட்டும் நாட்டிய நிகழ்ச்சியில் இடம் பெற மற்றவை மறைந்து விட்டன.

தமிழர் தம் இறைவழிபாட்டில் முக்கியப் பங்கேற்ற இக்கவுத்துவங்கள் மறைந்து வருகின்ற இக்காலகட்டத்தில் சைவ சமய ஈடுபாடுள்ள பெரியோர்கள் முன்வந்து இக்வுத்துவங்களுக்குப் புத்துயிர் அளித்துக் காத்திட ஓர் அறைகூவலாக இம்மாநாட்டில் இக்கட்டுரையைக் கொண்டுவரமுனைகின்றேன்.

இக்கட்டுரையானது செயல் மூலம் விளக்கக் கூடிய வகையில் அமைந்திடின் மிக்க சுவையோடு பயனுடையதாகவும் அமையும் என்பதனைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

6.29 SAIVA SAMAYA -K- KURAVAR -TAMIZH-th-THEVARA MOOVAR

Dr. Indira Srinivasan
Chennai

"Thevaram - hymns " are the earliest examples of the music of ancient periods of our country and these show us the cream and effence of " Sacred-music" (religious one) which prevailed among TAMILS. These were preserved till today in the same olden manners by the "ODUVAARS" who were employed at the temples for reciting them.

Thevaram - hymns are the outpouring inspirations coming out of the hearts of the " inspired - souls", who sung the lyric and music simultaneously as they breathed the fragrance of devotion to God.

The "Thevaran hymns" were sung by the 3 famous saints called as " Thirugnaana - sambandar", and "Appar" (Thirunaavukkarasar) of 700 A.D. ; and " Sundaramurthi Naayanar " of 900 A.D. Their hymns (songs) show their (Individual souls) yearnings to mingle with the (universal - soul) " God", getting themselves auestruck with the grandeur beauty and greatness of their Gods. Thus they have served their utmost to the religions - development of SAIVISM too, simultaneously, thus in a "3D" (three - dimensional way) !

The aim of this paper is to give a brief - history of these 3 saints of Music and describe how they served through their music lives for the development of Saivism too simultaneously and also by showing a few examples of their songs and meanings of them.

6.30 SCULPTURE AND ARCHITECTURE OF TANJORE BRHADISVARA TEMPLE An Aesthetic Approach.

S. Manivannan
Rajah's College , Thiruvaiyaru

The present paper deals with the "Aesthetic" aspects of the sculpture and architecture of the Tanjore Big Temple. It is a middle Chola Temple and it introduces new Siva forms and architectural features. Many forms of Siva are present in the various niches of the temple. In style and form these sculpture and architecture deviated from the Pallava as well as the early Chola temples. The middle Chola art style is unique and its is represented in the Big Temple.

All the formal and aesthetic elements of the Big Temple's Sculptures and architecture are analytically discribed here to exhibit their uniqueness and idenity. The sculptures and architecture are analysed intrinsically and their symbolic connotations are shown. The difference between the early, middle and later Chola temples architecture and sculptures are also explained aesthetically and structurally.

6.31 FOLK WORLD VIEW OF GOD SIVA

Dr. I. Muthiah
Madurai Kamaraj University

The present socio-political conditions of Tamilnadu compell the scholars to study the religion, art and literature and other cultural aspects of the subaltern. Hence, Folk Religion, and important area in Subaltern studies is taken for this paper. Folks conceptural world of God differs in many aspects with the Elite Philosophy of God. They construct the conceptual world of God based on their experience generated by their environmental, socio-cultural, economical and political conditions. As their experience differs from that of the Elite, their concept of God is also different from them. In this way, Folk

world view of God Siva has large differences with the Elite Philosophy of God Siva. So, this paper proposes to bring out the available information regarding God Siva from Folk Traditions such as rituals and Oral narratives and explain the world view of god Siva under the following topics.

1. Folk Construction of the image of Siva
2. Earthly Qualities of Siva
2.1 Food Habbits of Siva
2.2 Earthly activities
2.3 His earthly relations with Human beings
3 Relations of God Siva with other Elite and Folk Gods

6.32 A STUDY OF SAIVA CULTURAL WORDS IN TAMIL NADU

Dr. S. Radhakrishnan
Tamil University

The Saiva religion is one of the oldest religions in the world. It is also followed predominantly by the people of India. There are many famous schools (Madangal) and shrines for this religion in South India to familiarise the doctrines of Saiva culture across times and areas. The activities of Saiva religion are inseperable from the deep rooted culture of the people, especially the Tamils. Saiva religious culture was a living and uniting force among the people of Tamilnadu. People belonging to this religion used to name their children from Saiva nomenclature. But, today the custom of naming their children from their religious culture is not seen as a rigid phenomenon among the people belonging to their religion. The method of Saiva religious concept and its implementation in the life of people are now eroding. In the activities of the people today, we are able to predict the flavour of the Saiva culture through words of things and their activities. To have a photographic study of the modern day Saiva culture, I collected words

from the people of Saiva culture living in Thanjavur , Thiruvarur and Nagappattinam districts. Through this paper try to give a clear picture of the present day Saiva religious culture prevailing in the above districts of Tamil Nadu.

6.33 ASSIMILATION OF NATIVE GODS INTO THE ALIEN PANTHEON
(with special reference to Sumerian and Indus culture)

Dr. K.Raja
Bharathidasan University

It is a natural process for an alien cutlure, which tends to protrude into the native culture by unlawful means, to impose its own traditions in order to nullify the resistance of teh native and to safegaurd its own theism. Thus the invaders maintain a balance by assimilating consiously or unconsiously the images and patterns of worship into their pantheon and make a compromise with the natives. The extend of assimilation goes beyond the limits of identity, which is native ?" and " Which is alien?".

The Sumerian culture and the indus culture were the best exapmles of the native traditions into which the alien traditions were imposed. Rather to flourish collaterally, the native and the alien traditions were assimilated and fused together so as to cohese into a single tradition.

The Sumerian native tradition was assimilated by theAssyrian invaders. *Inanna*, " the Mother Earth"became the Assyrian *Ishtar*; *Utu*, the "Sun god" of the Sumerians turned into *Samash* in the Assyrian pantheon; *Ningursu*, the "Goddess of the Underworld " became *Ninurta*.; An, the all powerful supreme diety was replaced by *Marduk*. The priests of the Babylonian temples claimed that *Marduk* was the only God and the others were merely his various manifestations. But the Bobylonian's attempt to introduce monotheism did not succeed because the priests of local resisted; so the old gods continued to be worshiped.

Indus culture, which flourished simultaneously with the

Sumerian culture in the Mohanjadar- harappa region also experienced the same imposition of the Aryan worship on their native tradition during the Aryan invasions. The Indus people (Dravidians) worshiped Mother Goddess*(Sakthi/Kali)*, *Siva, linga* (unification of *Siva/sakthi)*. Animismsl so prevalent in their culture, which is attested by the figures of Bull, Serpent in the seals of Indus excavations.

The Aryans who subjugated the Indus people by their superior battle techniques, imposed their pantheon on the natives. The concepts of *Indra, Varuna, Dyaus, Rudra* and thier continual war to suppress the local resistance were the main focus of prayers found in Rg veda. *Siva* hardly found in Rg veda. It was *Rudra*, the god of howling powers with malignant characters (RVI:114 1,9,10). This *Rudra* takes the shape of the *Siva* (of the natives), the God of beningant characters. The fusion of *Rudra* and *Siva* was well attested in later samhitais and Upanishads. Consequently the linga worship was accepted on the basis of Linga purana. Also the Mother Goddess*(Sakthi, Kali)* and Bull were incorporated in the system. This kind of fusion and assimilation made the Savaite tradition as a colloidal tradition of Primarily the Dravidian with notable Aryan elements.

அமர்வு ஏழு

சித்தர்கள்

7.1 தமிழகத் திருக்கோவில்களில் சித்தர்கள் வழிபாடு

மரு. ச. அரங்கராசன்
அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையம்,மெலட்டூர்

கோயில்களின் தோற்றமும் வகைகளும்

சங்க காலத்தில் சைவம் , வைணவம் , சமணம் , பௌத்தம் ஆகிய சமயச் சார்பான கோவில்கள் இருந்தன . '' பள்ளி '' என்பது சமணர்களுக்கும் , ''விகாரம்'' பௌத்தர்களுக்கும்உரியது. பெருங்கோவில் மாடக்கோவில் , கரகக்கோவில் , ஞாழல் கோவில் , கொகுழக் கோவில் , இளங்கோவில் ,கணிக்கோவில் ,ஆலக்கோவில் என்று எட்டுக் கோவில்களை அப்பர் குறிப்பிடுகின்றார். பல்லவர்கள் காலத்தில் பாறைகளைக் குடைந்து , கோவில்கள் அமைக்கும் முறை ஏற்பட்டது. பள்ளிமீ; படைக்கோவில் , பஞ்சாயதனக் கோவில்; ஆயிரதளி மாடக்கோவில், சமாதிக்கோவில் என்ற வகைகளும் உள்ளன. '' இராச சிம்ம பல்லவனால் எழுப்பப்பட்ட காஞ்சி கைலாச நாதர் கோவிலில் உள்ள அகத்தியர் கோவிலே, தமிழகத்தில் அகத்தியருக்கான முதல் கோவிலாகும் '' இராச சிம்ம பல்லவனின் காலம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு . எனவே 1300 ஆண்டுகளாகச் சித்தர்கள் வழிபாடு தமிழகத்தில் உள்ளது.

சித்தர்களின் வழிபாடு

சித்தர்கள் அடங்கிய இடங்களே சமாதிக் கோவில்களாகும். சில கோவில்களைச் சித்தர்களே அமைத்துள்ளனர். சிவ ஆலயங்களின் திருச்சுற்றுகளில் சித்தர்களின் திருமேனிகள் உள்ளன. வேறு சில கோவில்களின் தூண்களில் திருவுருவங்கள் காணப்படுகின்றன. ஆலயங்களில் சித்தர்களுக்கு வழிபாடுகளும் , திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன. இவற்றை விவரமாக ,இக்கட்டுரையில் காணலாம்.

7.2 தமிழர் இறைநெறிக்கோட்பாடு மறு உருவாக்கத்தில் சித்தர்கள் பங்கு

சு. அரங்கராசு
அரசு கலைக்கல்லூரி , கோயம்புத்தூர்

தமிழகத்தில் சித்தர்கள் , சித்தர்கள் தோன்றிய காலம் , சமூகம் , வரலாற்றுப் பின்னணிகள், இறைநெறியும் சமயநெறியும், தமிழகத்தில் வைதிக நெறியின் தோற்றமும் வளர்ச்சியும்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழர் இறை நெறிக்கோட்பாட்டுக்கு ஆற்றிய பணிகள். சைவம் x வைணவம் முரண்பாடும் உடன்பாடும். வேதாந்தத்தின் செல்வாக்கு. அத்வைதம். துவைதம் - விசிஸ்டாத்வைதம் முதலான கோட்பாடுகள் உணர்த்தும் சமூக வரலாற்றுப் பின்னணிகள், மெய்யியல் சிக்கல் , நெருக்கடியைத்தீர்க்கச் சமய மெய்யியலாளர் முனைதல். வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் முரண்பாடும் உடன்பாடும்.

இசுலாமிய நெறியின் தோற்றம் வளர்ச்சி மூன்றாவது சமயத்தின் வரவால் முதலிரண்டு சமயங்களுள் நிகழ்ந்த சீர்திருத்த நடவடிக்கைகள். சங்கரருக்கும் , இராமானுஜருக்கும் நெருக்கடியை வெளிப்படுத்திய விதங்கள். சீர்திருத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் விளைவுகள்.

சித்தர்கள் தோற்றம். சைவ சித்தாந்தத்தை மீட்டுருவாக்கும் முயற்சி. சித்தர் மருத்துவம்,சித்தர் இலக்கியம் காட்டும் சித்தர் மெய்யியல் (தத்துவம்) தமிழர் இறை நெறிக்கோட்பாட்டை மீட்கும் சீர்திருத்த நடவடிக்கைகள். விளைவுகள்.

ஜெர்மனி, சீனா, முதலான நாடுகளில் சமயச் சீர்திருத்தங்கள். பழைமை வாதம் - சீர்திருத்த வாதம். இரண்டும் பழைய சமுதாயம் (நிலவுடைமை) புதிய சமுதாயம் (முதலாளியம்) ஆகிய இரண்டு சமுதாய அமைப்புகளுக்கு இடையில் நடந்த உரையாடல். (கருத்தாடல்). கருத்தாடலை அனுமதித்த மேற்குச் சமூகத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி , இன்றைய சீனம் , ஜப்பானியம் - முதலான நாடுகளின் வளர்ச்சி. கருத்தாடலை அனுமதிக்காத இந்தியாவின் இன்றைய நிலை. உலகச் சகோதரத்துவத்திற்குச் சமய நெறிகள்.

சித்தர் பாடல்கள் - மெய்யியல்- வழிப் பெறப்படும் தமிழ்ச் சைவம். சித்தர் மரபு. தாக்கம் , விளைவு - வளர்ச்சி , பட்டினத்தடிகள் - திருமூலர், அருணகிரியார்,தாயுமானவர் , வள்ளலார் வழியில் தொடரும் தமிழ்ச் சைவம் . பழந்தமிழர் இறை நெறிக் கோட்பாட்டின் மறு உருவாக்கம் ஆதல்.

7.3 சூபி மெய்ஞ்ஞான இலக்கியங்களில் சித்தர் பண்பாட்டின் தாக்கம்

முனைவர் பீ.மு. அஜ்மல்கான்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சூபி மெய்ஞ்ஞான இலக்கியங்கள் என்பன இஸ்லாமிய ஆன்மீகக் கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்டு அமைவன. இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் இத்தகு இலக்கியங்கள் கணிசமான எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளன. இவ்விலக்கிய ஆக்கங்களுக்குக் காரணமாணவர்கள் சூபிகள் என அழைக்கப்பட்டனர். இவர்களுள் பெரும்பாலானவர்கள் 16-ஆம் நூற்றாண்டிற்கும் 18-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவர்கள்.

சித்தர் பண்பாடு என்பது தமிழகத்தில் இடைக்காலத்திற்குப் பின்பு குறிப்பாக 16-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குப்பின் கி.பி.18ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் பக்தி மார்க்கத்தில் தோன்றி வளர்நத கலச்சாரம் எனலாம். இது இந்து சமயக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

தமிழகத்தின் வரலாற்றில் கி.பி 16, 17 ,18 - ஆம் நூற்றாண்டுகளில் சூபிக் கலாச்சாரமும் , சித்தர் பண்பாடும் ஒன்றையொன்று எதிர்கொண்டன. இதன் விளைவு , ஒரு பண்பாடு பிறிதொரு பண்பாட்டின் கூறுகளைக் கிரகித்துக் கொண்டது, தன்வயப்படுத்திக்கொண்டது. இதற்குச் சான்றாக எத்தனையோ சூபிக் கவிஞர்களுடைய மெய்ஞ்ஞான இலக்கியங்களின் உள்ளடக்கக் கருத்துக்களை எடுத்துக்காட்ட முடியும்.

சித்தர் பண்பாடடின் தாக்கத்தால் சூபி மெய்ஞ்ஞான இலக்கியங்களில் உமையார் , கணபதி , நந்தி , வாலை மனோன்மணி ஆகியோர் பாடுபொருளாக்கப்பட்டனர்.இந்து சமயத்தின் 'பரம் பொருள் ' பல்வேறு நிலைகளில் சூபி மெய்ஞ்ஞான இலக்கியங்களில் உட்பொருளாக அமைந்துள்ளன.

சூபி நெறி இந்தியப் பின்புலத்தில் தோன்றிய சூழல் சித்தர் பண்பாட்டுடன் அதீதமான நெருக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நெருக்கம் பதினெண் சித்தர்களுள் ஒருவராகச் சூபி கவிஞர் மஸ்தான் சாகிபு அவர்களுக்கு இடமளித்தது.

தமிழகச் சித்தர்களின் வாழ்வும் , அடிப்படைகளும் பெரிதும் சூபிகளுடைய கோட்பாட்டுடன் ஒத்திருந்தது. இதன் பயனாய் சூபித் ததுவமும் தமிழ்ச்சித்தர்களின் வாழ்வும் , வாக்கும் , இறைஞானப் பாதையும் ஒன்று எனக் கூறுமளவிற்கான ஒற்றுமைக் கூறுகள் வளர்ந்தன. சூபித்துவம்

,சித்தர் பண்பாடு ஆகிய இரு வேறு வழியிலான இறைஞானப் பாதையின் நெருக்கத்திற்குத் தமிழகம் தக்கதொரு ஆன்மீகப் பலத்தை அளித்துள்ளது.

7.4 சித்தர்களின் நோக்கில் சைவமும் அதன் நெறி முறைகளும்

-முனைவர் க. இளமதிசானகிராமன்
பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்.

சித்தத்தை நிலை நிறுத்திச் சிவனை வழிபட்டவர்களாய் அவனோடு இரண்டறக்கலக்கும் மேன்மையை உணர்ந்தவர்கள் சித்தர்கள். அவர்களின் வாழ்வியல் முறைகள் சரியை, கிரியை, யோகம் , ஞானம் எனும் நால்வகை நெறிகளையும் கைக் கொண்டன. அவ்வகையில் சைவ சமய நெறிமுறைகளோடு தொடர்பு கொண்டவை என்றாலும் அந்நெறிமுறைகளையும் கடந்ததாய் நிற்பதாலேயே தங்களுக்கென்று எந்தச் சமய முத்திரையும் குத்தப்படாமல் தனித்து நிற்கின்றார்கள். தாங்கள் தனித்து நின்றாலும்.

'' சைவம் என்பது என்ன ? சமயங்கள் எப்படி வந்தன ? சிவன் எப்படிப்பட்ட தன்மையுடையவன் ? பக்தி என்பது எவ்வாறு இருக்கவேண்டும் ? அக்காலத்தவர்களின் பக்திமை எவ்வாறிருந்தது ? அதனால் அவர்கள் பெற்ற மேன்மை என்ன ? இக்காலச் சைவ நெறிமுறைகள் எவ்வாறு உள்ளன ? அவற்றினின்றும் மேன்மை நிலையை அடைய அவர்கள் என்னென்ன செய்ய வேண்டும் ? ஞானநிலையில் '' அவனேதானாய் தானே அவனாய்'' மாற வேண்டிய நிலையினைப் பெறுவது எப்படி ? அவ்வழியினைக் காட்டும் குரு எப்படிப்பட்டவராய் இருத்தல் வேண்டும் ? என்ற பல வினாக்களுக்குத் தங்கள் பாடல்களில் விடைகளை எழுதிச் சென்றுள்ளார்கள்.

வெறும் சாத்திரச் சம்பிரதாயச் சடங்கு முறைகளை நாள்தோறும் செய்வதாலேயே தங்களது கடமை முடிந்து விட்டதாகக் கருதும் தன்மையினைச் சித்தர்கள் மறுத்து மொழிவதால் அவர்களைச் சமய மறுப்பளார்கள் என்று கூறுகின்றார்கள். அக்கருத்து முற்றிலும் தவறானதாகும். சடங்கு முறைகளை மட்டிலும் கைக்கொண்டிராமல் மனநிலையாலும் மேன்மையடைய வேண்டும் என்பது தான் அவர்களின் வேண்டுகோள்.

சைவத்திருமுறைகளின் கருத்துக்கள் சித்தர்களின் கருத்திற்கு அரண் சேர்ப்பவை. எட்டாம் திருமுறையாக விளங்கும் மாணிக்க வாசகரின் திருவாசகமும் , பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமூலரின்

திருமந்திரமும் சித்தர்களின் கொள்கைகளைப் பரப்பும் இலக்கியங்கள்.அவை கூறும் கருத்துக்களைப் பின்பற்றினால் சைவ சமயம் உலகில் மிக உயரிய இடத்தைப் பெறும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

7.5 தமிழர் கலையும் , பண்பாடும் சித்தர்கள் வழங்கிய கொடையும்

பேராசிரியர் சி. இராமச்சந்திரன்
பழனி

'' எல்லாம்வல்ல சித்தர் '' நமது இறைவன் சிவபிரான். '' சித்தர் சீகாமணி '' என்றும் அழைக்கப்படுவார். நமது முருகவேள் சித்தர் திருக்கூட்டத் தலைவர். அவரது தலை மாணாக்கர் அகத்தியர் , நவகோடி சித்தர் கணத் தலைவர்.

தமிழர் கலையும் , பண்பாடும் சித்தர் பெருமக்களால் வளர்க்கப்பட்ட வரலாறு உண்டு. ஆலமர் செல்வனாம் இறைவன் , அன்று ஆலின் கீழிருந்த அறம் , பொருள் , இன்பம் , வீடு என்று மறை நூல் தந்துள்ளான். தென்முகக் கடவுள் , பதி , பசு , பாசம், அனாதி என்றும் , பதியைப் பசு பற்றி , பாசம் நீக்கி , இறை இன்பம் பெற அருளவந்தார். இறையன்பு , தொண்டர் நெறி , தவசீலம் , ஞானம் சாதனமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

குருவருளும் , திருவருளும் துணை வந்து உதவக் காண்கின்றோம். முத்தி நிலையும் உண்டு. அதற்கு மேம்பட்ட சித்திநிலையும் உண்டு. சித்திப் பெருவாழ்வும் சன்மார்க்க இலட்சியமாகக் கொள்ளப்பட்டது.

'' மரணமிலாப் பெருவாழ்வு'' என்று வழங்குவர். இதனை அருள வந்த முருகவேள் சாகாக் கல்வியினை அகத்தியருக்கும் மற்றும் சித்தர் கூட்டத்ததிற்கும் , வையத்தவருக்கும் அருளி வாழ்வளித்து வருகின்றார்.

இதனை ஓதாது உணர்ந்ததாக வள்ளலார் அருள்வார். கற்றதெல்லாம் சாகாக் கல்வியென்றும் , அதனை முருகனிடம் கற்றதாக வள்ளலார் அருள்வர்

விநாயகர் அகவலில் மூலாதாரத்து மூண்டெழு கனலை , பிங்கலையால் எழுப்பி , அமுதநிலை , ஆதித்தன் இயக்கம் , குமுத சகாயன் அரளி உதவும் விநயாகர் அகவல் தந்துள்ளார் ஔவை. ஔவை தந்த ஞானக் குறள் சாகாக் கல்விப் போதனை தருகின்றது. வள்ளுவர்

சாகாக் கல்வியினை விரிவாகப் பல நூல்களில் வழங்கிச் சித்தருக் கெல்லாம் சித்தரானேன் என்பார்.

ஆனால் உலகோர் முதலில் நம்பவில்லை ,'' பொய்யன் '' என்றனர். பின்னர் ஏலேலசிங்கர் போன்ற பெரும் தனவந்தர்களும் , வள்ளுவரிடம் வந்து கற்றுத் தெளிந்தனர்.

பழனியில் தண்டபாணி சுவாமி திருமேனியை மூப்பூவினால் உருவாக்கினார். பழனிப் போக நாதர். சிதம்பரம் கூத்த பிரான் மதிப்பிட முடியாத பொன்னால் வடிக்கத் திருமூலர் உதவிய வரலாற்றைப் போகநாதன் அருளியுள்ளார். தஞ்சைப் பெரிய கோவில் வளரக் கருவூரார் உதவிய செய்தியுண்டு. அத்தனை வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயங்களும் சித்தர் உறவில் எழுந்தவை.

தமிழ்மொழி முத்தமிழாய் மலர்ந்தது. இயல் , இசை நாடகம் என்பதாக ஏழு இசையாய் , இசையின் பயனாய் இறைவன் எல்லாம் வல்ல இறைவனாம் சித்தராய் விளங்குவார்.

'' என்னை இறைவன் நன்றாகப் படைத்தான் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே '' என்றார் திருமூலர்.

எனவே இறை இன்பம் , சித்தர் நிலை , தமிழ் மனம் சித்தி நிலையாம் சித்தர் மகிமை பேசக் காண்கின்றோம்.

7.6 சித்தர் - '' சித்தர்கள் நிலையும் பத்தாம் திருமுறையும்''

பேராசிரியர் ரெ. கண்ணன்
திண்டுக்கல்

பக்தி வளர்ச்சிக்கு முதன்மை கொடுப்பது பன்னிரு திருமுறை. பத்தாம் திருமுறையோ திருமூலராம் சித்தர் அருளிய திருமந்திர மகிமையும், சித்தர்கள் பெற்று வாழும் சித்திப் பெரு வாழ்வு நிலையும் விளக்க வந்த ஒப்பற்ற ஒரு மறை நூலாகும்.

தாம் பெற்றுள்ள பெருவாழ்வு நிலையையும் நன்நோக்கத்தையும் மிக உறுதிபடத் தெளிவுபடுத்துவார் , திருமூலர்

தாம் அருளும் மந்திர மறைப்பொருள் ஊன் பற்றி நின்ற ஒன்று என்றும் மீண்டும் உறுதிப்படுத்துவார்.

இவ்வாறு உடம்பின் பயனைக் கண்டு உணர்த்த வந்த பெம்மான், உடம்பின் புனிதத்தை இங்குப் பேண வேண்டிய கடமையினத் தெளிவுபடுத்துவார்.

இவ்வாறு சித்தர்கள் உடலைப் பேணுவது பற்றியும் காயத்தைச்

சித்தி பண்ணுவதன் அவசியத்தையும் நன்கு உணர்த்தி , என்றும் நிலை பெற்று வாழும் சித்திப் பெருவாழ்வு நிலையினையும் திருமூலர் விளக்கவே, தமது மறைநூலை அருள வந்தார் !

7.7 சித்தர்களின் தியானநெறி - சில தனித்தன்மைகள்

ப. கருணாநிதி
தலைமையாசிரியர் , திருத்தணி

சித்தர்கள்

வரலாற்றுக்கு எட்டாத காலத்தில் இருந்தே சித்தர்கள் தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர். வீடுபேறு பெறுவதுடன் மரணத்தையும் வெல்லுதல் அவர்களின் நெறியில் காணப்படுகிறது.

தியான நெறி

மரணமிலாப் பெருவாழ்வு பெறும் குறிக்கோளுடன் சித்தர்கள் வகுத்துள்ள நெறி தனித்தன்மைகளுடன் விளங்குகிறது.

சித்தர்களின் தியானநெறி 'வாசி' என்னும் நுண் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டது. வாசியை நடுநாடியில் செலுத்துவதால் சித்தியும் முத்தியும் ஒருங்கேக் கிட்டும் என்பது அவர்தம் கோட்பாடு.

வாசியின் துணையால் செய்யப்படும் தியானப் பயிற்சிகளில் கிழ்நிலைக் குண்டலினி கீழ் ஆதாரங்கள் , மேல் ஆதாரங்கள், நிராதாரங்கள் ஆகியவை பற்றிச் சித்தர்கள் விளக்குகின்றனர்.

பயன்கள்

சித்தர்களின் தியான நெறியில் பழகுவதால் உடம்பு நோயின்றி விளங்குதல் பற்றியும் பல்வேறு ஆதார நிலைகளில் மனதை நிறுத்துவதில் உண்டாகும் உலகியல் அருளியல் நலங்கள் பற்றியும் சித்தர்கள் விரிவாக கூறி இருக்கின்றனர்.

தனித்தன்மைகள்

உடம்பைக் கற்ப மருத்துகளால் பக்குவப்படுத்தித் தியானப் பயிற்சியில் பழகுதல் ,ஆறாதார மேலாதார நிராதாரங்களில் உணர்வை நுண்மை ஆக்குதல் , பரம்பொருளுடன் கலக்கும் போது உடம்பையும் மரணமில்லாமல் விளங்கச் செய்தல் ஆகியவை சித்தர்களின் தியான நெறியின் தனித்தன்மைகளாகத் திகழ்கின்றன.

முடிவுரை

சித்தர்களின் நெறியில் வந்த நெறியே சைவ சித்தாந்தம் என்று கூறலாம். சைவ நெறியில் சித்தர்களின் தியான நெறி மேலும் விரிவாகவும் சிறப்பாகவும் விளக்கப்படவேண்டும். சித்தரகளின் தியானநெறி பல்வேறு அலைக்கழிவுகளால் உடல் நலமும் மனநலமும் இழந்து துன்புறும் இன்றைய உலகிற்கு அருமருந்தாக அமையும்.

7.8 ஓம் நமச்சிவாய

அ.குணசேகரன்
மேலைச்சிவபுரி

சிவபெருமான் படைத்தல் , காத்தல் , அழித்தல் , மறைத்தல் அருளுதல் ஆகிய ஐந்தொழில்களை அருளாளர்கள் வழியாக உயிர்கள் உய்வடையும் பொருட்டு நடத்தி வருகிறார். நாயன்மார்களின் வாழ்க்கைச்சரித்திரம் அனுபவ சாஸ்திரம் ஆகும். மாணிக்க வாசகத்தின் திருவாசகம் பக்தி எப்படிச் செய்யவேண்டும் என்று நமக்குக்காட்டுகிறது. நால்வர் பெருமக்களின் கவிகள் முன்வினையின் அடிப்படையில் உருவாகும் துன்பத்தை வெற்றிகரமாக அனுபவித்துவிட உதவுகிறது.

சித்தர்கள் இப்பூமியில் நிரந்தரமாக இருந்து வழிபாட்டுக் கொள்கையை வலியுறுத்தி உயிர்களுக்கு உதவி வருகிறார்கள். உதாணரத்திற்குப் பழனி மலையில் போகர், முருகப்பெருமானைப் பிரதிஷ்டை செய்தார். அதன் நிமித்தமாக வழிபாட்டுத்தன்மை நாளுக்கு நாள் வளர்ந்து உயிர்கள் பயன்பெற்று வருகின்றன.

தென்பொதிகை மலையின் அவடிாரத்தில் அமைந்துள்ள தென்காசி நகரின் வடகீழ்த்திசையில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது ஆய்க்குடி கிராமம்.

கடையெழு வள்ளல்களில் ஒருவனான ஆய் அண்டிரன் வாழ்ந்த ஆய்க்குடி கிராமத்தின் அருகில் கீழ்த்திசையில் உள்ள கம்பிளிக்குத் தென்புறம் 2 கிலோ மீட்டர் தூராத்தில் அமைந்துள்ளது மகாலிங்க மலை.

இம்மலையின் பன்னெடுங்காலமாகச் சித்தர் பெருமக்கள் அருள்மிகு மகாலிங்க சுவாமியைப் பூஜித்தும் ,மனமுருகி வரும் அன்பர்களின் குறைகள் தீர்த்தும் அருள் வழங்கி வருகிறார்கள். அவர்களின அருள்வாக்கின்படி அருள்மிகு மகாலிங்க சுவாமி பிரதிஷ்டை செய்யப்பெற்று நித்திய பூஜையும், மாதத்தோறும் பௌர்ணமி இரவு சிறப்புப் பூஜையும் திருப்பணிக்குழுவினரால் நடத்தப்பெற்றுவருகிறது.

இங்குள்ள சித்தர் பெருமக்களின் செயல்பாட்டினைக் கட்டுரையாக எழுத விரும்புகின்றேன்.

திருச்சிற்றம்பலம்.

7.9 சித்தர் யார் ?

C.S. குப்புராஜ்
சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை

சித்தர்கள் என்ற சொல் யாரைக்குறிக்கும் ? சித்தர்களுக்கும் ஏனைய அருளாளர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை ?

சித்தர் இலக்கியங்களில் காணப்படும் அபூர்மான , புரட்சிகரமான கருத்துக்கள் என்னென்ன ? அவை மரபுடன் கூடிய சைவ சித்தாந்த கருத்துக்களுடன் எந்த அளவுக்கு ஒத்துப்போகின்றன அல்லது முரண்படுகின்றன ?

தமிழ்நாட்டில் வாழ்ந்த முக்கியமான சித்தர்களும் அவர்களது படைப்புகளில் உள்ள தனித்தன்மைகளும் , சித்தர் நூல்கள் சில பன்னிரு திருமுறைகளிலும் இடம் பெற்றிருக்கின்றன.

சைவ சித்தாந்தத்தின் மூலநூலாகிய திருமந்திரத்தினை இயற்றிய திருமூலரையும் , அண்மைக் காலத்தில் வாழ்ந்து , உடலோடு மறைந்துவிட்ட திருவருட்பிகராச வள்ளலார் இராமலிங்க அடிகளையும் சித்தர் எனக் கொள்ளாமா ?

சித்தர்களில் பலர் தாங்கள் கூற வந்த கருத்துக்களை நேரடியாகக் கூறாமல் சங்கேத மொழிகளில் கூறியிருக்கிறார்கள் இது ஏன் ?

சைவ சித்தாந்தக் கொள்கைகளின் விளக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அநேக சித்தர்கள் உதவி இருக்கிறார்கள். ஆனால் சிலர் குறை கூறியும் இருக்கிறார்கள். அவர்களைச் சிலர் நாத்திகப் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் இதன் பொருத்தமின்னை என்ன ?

சித்தர்களின் வைத்திய முறைகளும் அவர்களது சமுகத் தொண்டும் , சித்த வைத்திய முறைகள் பரவலாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை . ஏன் ?

சித்தர்கள் ரசவாத முறையில் கூடத் தேர்ச்சிப் பெற்றிருந்தார்கள்.

சித்தர்களைப் பற்றி இக்கால இலக்கியங்கள் என்ன கூறுகின்றன ?

இன்றையச் சமுதாயச் சூழ்நிலையில் சித்தர்களின் கருத்துக்கள் எந்த அளவுக்குப் பயன்படும் ? இந்த ஞானத்தினைப் பரவலாக மக்களும் இளைய சமூதாயத்தினரும் ஏற்றுக் கொள்வதற்குச் சித்தர்களை எவ்வாறு

அறிமுகப்படுத்தலாம். ?

மேலே குறிக்கப் பெற்றுள்ள வினாக்களுக்கு விடைகாண இக்கட்டுரை முயலும்.

7.10 சித்தர்கள்

எஸ்.வி. கோபிநாத்
அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் பாலிடெக்னிக் , பழநி.

கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றால் , கண்டு தெளிந்தவர்கள் '' சித்தர்கள் '' என்கிறார் டாக்டர். தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். பக்தி நெறியின்றி வேறு நெறியால் கடவுளைக் கண்டு தெளிந்து இரு வினையொப்பு நிகழுங்காலும் உடலோடு உலாவுவோர் சித்தர் என்கிறார் திரு. மு. அருணாசலம்.

சித்தர்கள் பதினெண்மர் என்பர். அவர்கள் அகத்தியர் , போகர் , கோரக்கர் , கைலாசநாதர் ,சட்டைமுனி, திருமூலர் , நந்தி , கன்கண்ணர் , கொங்கணர் , மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, கமலமுனி, இடைக்காடர், புண்ணாகீசர், சுந்தஞானந்தர் , உரோமரிடி, பிரமமுனி ஆகியோர்.

சித்தர்கள் சகல கலா வல்லவர்களாக , சாகாக்கலை கண்டவர்களாக, ஜோதிடம் , மருத்துவம் முதலான நூல்களை இயற்றி உள்ளனர். ஞான நெறியிலும் , சித்த மருத்துவ நெறியிலும் அவர்கள் அருளிச் செய்த செயல்கள் ஈடு இணையில்லாதனவாம்.

சித்தர்கள் பாடல்களில் காணப்பெறும் வாலை, சத்தி , மனோன்மணி, இறைவனது ஆற்றல் எனப்படும் குணமாகும்.

சித்தர்கள் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெற்றவர்கள் . அழியாத உடம்மைப் பெற்றவர்கள் . உடம்பு அழியாமல் பாதுகாக்கும் முறையை அறிந்தவர்கள்.

மனித நேயத்தையும் , ஆன்மநேயத்தையும் '' ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்னும் ஒப்பற்ற கருத்தையும் பறைசாற்றுவதே சித்தர்களின் நெறி.

7.11 ஈழத்துச் சித்தர் மரபு

சாந்தி நாவுக்கரசன்
கொழும்பு , இலங்கை

குறிப்புரை

0.1 சித்தர்கள் எனப்படுவோர் யார் ? எமக்கு எவ்வழி காட்டினார்கள் ?

சித்தர் என்பார் யார் ? வெகு சிக்கலான , சிரமமான கேள்விதான். சுவாமி காரை சித்தர் அவர்கள் சித்தருக்குப் பின்வரும் இலக்கணம் கூறுகிறார்.

" சித்தியெனில் கண்கட்டு வித்தையல்ல
சில்லறையாம் கருமத்துச் செய்கையல்ல
மித்தையெனும் சூனியமாம் மாயமல்ல
மின்னணுவாம் விஞ்ஞான வியப்புமல்ல
சித்தியெனில் ஈசனுடன் ஒன்றாம் சித்தி
சிவனாலானவனே தான் சித்தன் சித்தன்

சீவன் சினாவது தான் சித்து. தம்மைத்தாமே அறிந்து , தலைவனை அறிவபர் சித்தர். அவர்கள் நல்வினை, தீவினைப் பயனால் உண்டான ஊனத்தை, சடலத்தை மீண்டும் எடுத்தலை மாற்றவல்ல " சாகாக்களை" என்னும் மருந்தை சரப்பயிற்சி மூலம் அடைந்து பேரின்ப வெள்ளத்தில் திளைப்பவர்கள் எண்ணியதை எண்ணியதாங்கு எய்தி , வரும்பொருள் அறிந்து செயற்கரிய செய்பவர்கள் சித்தர்கள்.

சித்தர் செயல்களில் முதன்மையானது உண்ணாமல் ,உறங்காமல் , இடம்பெயராமல் , வெயில் , மழை , பகல் ,இரவு எனப் பாராமல் சமாதியிலிருத்தலாகும். அவர் எவர் கூறுவனவற்றையும் செவி மடுக்காதவர். எவருடன் பேசாதவர். பற்றற்றவர். என்றாலும் ஞானம் , இரசவாதம் , சமாதிநிலை கைகூடியவர்களிடம் உறவு கொண்டு வாழ்பவர். அவர்கள் இவ்வுலகில் இருந்தாலும் ஏதோ ஓர் உலக வாழ்வை எண்ணி அதற்காக மனதை ஒருமைப்படுத்திக் கொண்டவர். மனம் பேதமற்றது போல் இருந்தாலும் எத்தாழிலைச் செய்தாலும் அவரது உண்மையான குறிக்கோள் ஞானம் அடைதலே.

தமிழகத்தில் புகழ் பெற்ற சித்தர்கள் பற்றிய வரலாறும் , அவர்களின் சாதனை பற்றிய நோக்கும்.

பதினெண் சித்தர்கள் கும்பமுனி , மச்சமுனி,சுந்தரனார் ,இராமதேசவர் , பதஞ்சலி, போகர் , சட்டைமுனி , கருவூரார் , கமலமுனி, குதம்பைச் சித்தர் , தன்வந்திரி, வான்மீகர் , திருமூலர் ,பாம்பாட்டிச் சித்தர், இடைக்காடர் , கோரக்கர் ,கொங்கணார் , நந்தீசர்.

ஈழத்துச் சித்தர்கள் யார் ? அவர்களின் வரலாறு , போதனைகள் . சிறப்பாக யோகர் சுவாமிகள் பற்றி அறிதல்

(கடையிற் சுவாமிகள் முதல் , நயினாதீவுச் சுவாமிகள் ஈறாக 16 சித்தர்கள்)

சித்தர்கள் சமுதாய மக்களுக்கு கூறும் அறிவுரைகள் என்ன ? அவற்றைச் செய்ய வேண்டியவை, செய்ய வேண்டாதவை என இரு பிரிவுகளாகப் பகுத்து நோக்கல்

இவ் வெண்ணக் கருக்களை மையமாக வைத்தே எனது கட்டுரையின் விரிவு அமையும்.

7.12 சித்தர்கள் கண்ட வானசாஸ்திரம்

வை.வ. சிவப்பிரகாசம்.
தஞ்சாவூர் .

பூவுலகில் சிறந்து விளங்குவது பாரத தேசம் ஆகும். அதனிற் புண்ணிய பூமியாக மிளிர்வது தென்னகம். இதனையே மாணிக்வாசகப் பெருமான் ''தென்னாடுடைய சிவனே போற்றி எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி '' எனப் போற்றுகின்றார். கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் எனவும் , கடவுளைக் கண்டவர்கள் சித்தர்கள் எனவும் - தேவாரம் கூறுகின்றது. அட்டமாசித்திகளைப் பெற்றவர்கள் பதினெண்மர் ஆவர். சித்தர்கள் எண்ணிக்கையில் அடங்கார்.

சித்தர்கள் '' ஒன்றே குலம் ஒருவனே தேவன் '' என்பவர்கள். அன்பே சிவம் , அன்பே தெய்வம். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனத் திருமூலர் கூறினார். சித்தர்கள் சாதி - சமயம் கடந்த ஞானக்கடவுளர்கள் ஆவர். இவர்கள் வைத்தியம் , ஞானம் , சாகாக்கலை,ஆன்மீகம் , அவதாரங்கள் , வானசாத்திரம் போன்ற கலைகளைத் தங்களுடைய இலக்கியங்களிலேயே எடுத்துக் கூறியுள்ளார்கள். சித்தர்கள் செய்த ஆய்வை இன்று அறிவியல் ஆராய்ச்சி உறதிப்படுத்கின்றது. பிரபஞ்சத்தில் உள்ள கிரகங்களைக் கொண்டு சூரியன் , சந்திரன் , பூமி ,புதன் , சுக்கிரன் , வியாழன் , சனி , ராகு , கேது இன்னும் மற்ற கிரகங்களுடன் நட்சத்திர மண்டலங்களையும் பூமியில் இருந்து அதனதன் தூரங்கள் தன்மைகள் மின் காந்த செயல்களைக் கண்டு மனித குலத்திற்கு அருளினார்கள். இவ்வாய்வுகள் மனித குலத்திற்கும் , வான மண்டலத்திற்கும் உள்ள தொடர்புகளை அறிந்து மனித வாழ்வு விதிப்படி நடப்பதும் அவ்விதியை 6வது அறிவு கொண்டு

சீர்ப்படுத்திக்கொள்ளும் வழியையும் உலகிற்குத் தந்தவர்கள் சித்தர்கள்

7.13 சித்தர்களின் வாழ்வியல் கோட்பாடு

முனைவர் முல்லை. வீ. சண்முகம்
அறிஞர் அண்ணா அரசு ஆடவர் கலைக்கல்லூரி, நாமக்கல்.

1.0 முன்னுரை

மானுட வாழ்வியலின் மேன்மைக்காகவும் மனித நேயத்தின் சீர்மைக்காகவும் வரலாற்றில் அழுத்தமான பதிவுகளைச் செய்தவர்கள் சித்தர்கள். பழைய சனாதன மரபுகளைப் புறக்கணித்து அவற்றின் எதிர்மறை மரபுகளுக்காகச் செயல்பட்டார்கள். சித்தர் பாடல்களில் காணப்படும் பாடுபொருள்மீதான பொதுப்பண்பை அடியொற்றிச் சித்தர்களின் வாழ்வியல் கோட்பாட்டைக் கண்டறிவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

1.1 சித்தர்கள் யார் ? ஒரு விளக்கம்

சிந்தை தெளிந்திருப்பவன் எவனோ - அவன் சித்தன் - அறிவு கைகூடப் பெற்றவர்கள் சித்தர்கள். பெரும்பான்மைச் சித்தர்கள் வாழ்நத காலம் கி.பி.11 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.16 ஆம் நூற்றாண்டு வரை எனத் தீர்மானிக்கலாம்.

2.0 சித்தர்களும் சமூக வியல்பார்வையும்

மக்களின் வாழ்வியற் சிக்கல்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் கண்டறிவதே சித்தர்களிடம் முனைப்பாக இருந்தது. தங்கள் எண்ணங்களையும் அனுபவ ரீதியான முடிவுகளையும் பாடல்களாய் வெளிப்படுத்தினர்.

2.1 வேதம் - சடங்கு - சாத்திரங்களைப் புறக்கணித்தல்

2.2 தீண்டாமையையும் வருணாசிரமத்தையும் எதிர்த்தல்.

2.3 மூட நம்பிக்கையையும் பொய் வேடப்புனைவையும் கண்டித்தல்.

2.4 யோகத்தையும் ஞானத்தையும் பரிந்துரைத்தல்.

3.0 தொகுப்புரை

ஆன்மிக ரீதியான ஆய்வைச் சித்தர் செய்து கொண்டே ஒடுக்கப்பட்டோரின் சமூக விடுதலைக்காகவும் குரல் கொடுத்தனர். தங்களின் சமகாலச் சமூகத்தை அவதானித்து - மதிப்பிட்டு மனித வழ்வியலின் மேன்மைக்காகச் சிந்தித்துள்ளனர். சுருக்கமாகச் சொன்னால் தமிழ்ச் சிந்தனை மரபில் அனுபவ ரீதியாக வெளிப்பட்ட ஓர் அறிவுத் துறையாகவே சித்தர்களின் வாழ்வியல் கோட்பாடு அமைந்துள்ளது.

7.14 சிவவாக்கியர் சிந்தனை

மா. சிவபாக்கியம்
கோவிந்தம்மாள் ஆதித்தனார் கல்லூரி , திருச்செந்தூர்

சிவவாக்கியர்

சிவவாக்கியர் சித்தர்களுள் முதன்மையானவர். சைவ நெறிகளைச் சமுதாய முன்னேற்றத்திற்கான வழிமுறைகளாக்கி மக்களிடையே படரவிட்டவர். அவர்தம் சீரியச் சிந்தனைகள் மனிதச் சமுதாயத்தை அமைதிப் பாதையில் வழி நடத்திச் செல்லத்தக்கவை.

இன்றைய சமுதாயம்

இன்றைய சமுததாயம் அறிவியலின் துணையினால் உயர்ந்த நாகரீக நிலையை எட்டியுள்ளது ,ஆடம்பரப் போகப் பொருட்களைப் பரப்பி வைத்துள்ளது. ஆயினும், சமுதாயத்தில் அமைதி சீர்குலைந்து வருகின்றது.

ஆண் பெண் என்ற இனம் மதம் ,சாதி, மொழி, நாடு என்ற மண்ணெல்லை, பொருளாதாரம் எனும் பல்வேறு பாகுபாடுகளை வகுத்துக்கொண்டு , மனித இனம் போராடிக் கொண்டிருக்கிறது. இதனால் சமுதாய அமைதி குலைந்து ,மனித மனம் அழிவை நோக்கித் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது.

பிரபஞ்சத்தின் குலைவு

மனிதனின் பேராசையின் விளைவாலான ஆடம்பர வேட்கை மனித இனத்தை மட்டுமின்றி , இந்தப் பிரபஞ்சத்தையே நிலைகுலைத்துக் கொண்டிருக்கிறது.

சிவவாக்கியரின் தீர்வுகள்

சிவவாக்கியர் ஒருவனே தேவன் என்ற சமய சமரசத்தை வலியுறுத்தி , உண்மையான ஆன்ம வளர்சிக்கு வழிகாட்டுகிறார். அவரது சிந்தனைகள் ஆணுக்குப் பெண் அடிமை என்ற அவல மாந்தரை அச்சுறுத்துகிறது. ஒன்றேகுலம் என்பது அவர்தம் சமுதாய ஒருமைப்பாட்டுச் சிந்தனை. வெவ்வேறு நிலைகளில் நின்று, இச்சமுதாயத்தின் பிரச்சினைகளை ஊடுருவிப் பார்க்கின்ற சிவவாக்கியர் அவற்றுக்குத் தீர்வுகளையும் வழங்குகின்றார்.

அழியாத சிந்தனை

சிவவாக்கியரின் சிந்தனை இந்த நூற்றாண்டிற்கு மட்டுமின்றி, எந்த நூற்றாண்டிற்கும் பொருந்துவதாகி, மனிதச் சமுதாயத்தை அமைதியான பேரின்ப வாழ்வில் திளைக்கச் செய்ய வல்லது.

7.15 குகையூர் சித்தநாதர்

முனைவர் அ. சிவபெருமான்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் கூகையூர் என்னும் குகையூர் அமைந்தள்ளது. இவ்வூரில் ஐந்து சிவன் கோவில்களும் ஒரு பெருமாள் கோவிலும் , புகழ்பெற்ற வீரன் என்னும் ஐயனார் கோவிலும் அமைந்துள்ளன. ஐயனார் கோவிலுள்ள பகுதி வீரபயங்கரம் அல்லது வீரங்கி என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

குகையூரில் அமைந்தள்ள ஐந்து சிவன் கோவில்களுள் ஒன்று , பஞ்சாட்சர நாதரைத் தலைமையாகக் கொண்ட சித்தநாதர் திருக்கோவிலாகும். இக்கோவில் ஊருக்குப் புறம்பாகத் தென்திசையில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ளது. இக்கோவிலின் கர்ப்பக்கிரகத்திற்கு வெளியே தென்மேற்கு மூலையில் அழகான சித்தர் கோவில் ஒன்று உள்ளது. இச்சித்தர்கோவில் அமைந்த காரணமாக இப்பகுதி மக்கள் எல்லோரும் இக்கோவிலைச் சித்தநாதர் கோவிலென்றும் வழங்குகின்றனர்.

திருமூலர் மரபில் தோன்றிய, குகையூர் சித்தநாதர் இவ்வூரில் குகை என்னும் யோகமடத்தைக் கட்டி , அதில் சிவயோகம் புரிந்து வந்தனர். அந்த யோகமடமாகிய குகையூர் இவ்வூரில் இருப்பதாக இவ்வூரை மக்கள் குகையூர் என்ற பெயராலும் வழங்கலாயினர்.

இச்சித்தருடைய இயற்பெயர் முதலான வரலாறு இதுவரைத் தெரியவில்லை. இவர் சிவயோகம் சமாதியை மேற்கொண்டவர் ; அட்டமா சித்தியிலும் வல்லவர் ; சில அற்புதச் செயல்களைச் செய்தவர். இவர் நடத்திய அற்புதச் செயல் ஒன்றால் கவரப்பட்ட மாலாங்கன் என்னும் சிற்றரசன் இவருக்கு அணுக்கத் தொண்டனாயினான்.

எனவே, இக்கட்டுரையில் குகையூர் சித்தநாதர் அமைந்துள்ள திருக்கோவிலும் , கோயமடம் என்னும் குகையின் அமைப்பும் , குகையூர் சித்தநாதரின் அற்புதச் செயல்களோடு இன்னபிற செய்திகளும் ஆராயப்பட உள்ளன.

கட்டுரையாளர் நேரடியாகக் கள ஆய்வு செய்து இக்கட்டுரையை எழுதியள்ளார்.

7.16 பட்டினத்தார் வெறுப்பின் தத்துவம்

முனைவர் து. சீனிச்சாமி
தமிழ்ப்பல்கலைக்கழகம்

பட்டினத்தார் சித்தர்களில் ஒருவரா என்ற கோள்விக்கு ஆம் என்று விடைகூறுவது எளிதல்ல. மருத்துவ அறிவுமட்டும் பெற்றார், மருத்துவ அறிவும் சமூகநிதிஉணர்வும் கொண்டோர் ,உடம்பினை வெறுக்காது கடவுளை உள்ளத்தில் கண்டோர் எனச்சில முதன்மையான பண்புகளைச் சித்தர்களின் எழுத்துக்களில் காணலாம். பட்டினத்தார் பாடல்களும் எப்படியோ சித்தர் பாடல்கள் என்ற வரிசையில் இடம் பெற்றுவிட்டன. பிறசித்தர்களிடமிருந்து மட்டுமல்ல - புலனின்பத்தை இழித்துரைக்கும் பிறரிடமிருந்தும் பட்டினத்தாரைத் தனிப்படுத்திக்காட்டுவது அவரின் பெரு வெறுப்புணர்வாகும். பட்டினத்தாரின் கவிதைகள் தமிழ்க்கவிதை வரலாற்றில் ஒரு தனித்துவமான அனல் எழுச்சிஎனலாம் ; வெறுப்பு என்பதன் அக்கினிக்குஞ்சு எனலாம். பெண்ணின்பம் மட்டுமல்ல , பெண்ணுடலும் , மனிதஉடல், மனிதவாழ்வு - என அனைத்தையும் மூர்க்கமாய் வெறுக்கும் சினத்தின் மொழியாக அவர்கவிதை காணப்படுகிறது. உடம்பை வெறுப்பது யோகநெறியை வெறுப்பது எனக் கொள்ளலாமா ? இவ்வெறுப்பு பொதுத்துத்துவ வெளிப்பாட்டுக்கூறு என்பதைவிட, தனிநபர் உணர்ச்சிப்பா (Personal Lyric) க் கூறு என்ற நிலையிலேயே ளெியீடுபெற்றுள்ளது.

மனவழி அலைத்திடும் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொருள் அறியா அழுக்குறு மனமும்
ஆணவமலத்துதித்து அளைந்ததில் உளைந்திடும்
நிணவைப்புழுவென நெளிந்திடுசிந்தையும் (கோயில் திரு அகவல் 3:8-11)

மனத்துள் மூண்டு கிடக்கும் ஒரு பெரு நெருப்பைப் பட்டினத்தார் பாடல்கள் காட்டுகின்றன. அவர் ஆளுமையின் ஒரு கூறு தான் இது. இது தனிநபர் ஒருவர்க்கே உரியதா ? பொது மூலங்கொண்டதா ?அல்லது சமூக வாழ்வு அவருக்கு வழங்கிய - சமூக அனுபவத்தின் வழிவந்த மனமுறிவுநிலையா ? திரும்பத்திரும்ப வரும் உடல் உறுப்புகளின் மீதான வெறுப்புக்கள் , திரும்பத் திரும்ப வரும்தன்னிரக்க - குற்றஉணர்ச்சி வெளிப்பாடுகள் , மூலம் வாழ்கைபற்றிப் பட்டினத்தாரின் 'மனம் உடைந்த' பார்வையை அறியமுடியாமல் இல்லை. தனிநபர் - சமூகம் என்ற பிணைப்பில் பட்டினத்தார் அனுபவச்சரடுகள் ஒரு தத்துவத்திற்குள் வருகின்றன. இதற்கும் மேலாக, '' சிவபதம் குறுகுதல்'' என்ற இறை உணர்வும் உள்ளோடிச் சேர்கின்றது. சிவபதம் குறுகுதல் என்பதுடன்

உடம்பை முழுதும் வெறுப்பதும் நிகழ்கிறது ஆயினும் ,

'' உடலுக்குள் நீ நின்று உலாவினதைக் காணாமல்
கடல்மலை தோறும் திரிந்து கால் அலுத்தேன் பூரணமே''

(பூரணமாலை - 23)

என்று எழுதும் போது உடம்புளே உத்தமன் கோயில் கொண்டதைக் கூறும் சித்தர்மரபும் இவ்வெறுப்புடன் கலக்கிறது. ''அவிப்பரிய தீயாம் என் ஆசை'' (முதல் வன்முறையீடு - 40 : 2) எனத் தீயில் நின்று கவிதைத் தவம் புரியும் பட்டினத்தாரின் அக உளைவுகளின் மோதல்களும் முரண்களும் சித்ததத்துவத்தை நோக்கித் தனித்துவமான ஓர் அனுபவப்பாங்கில் இணையும் நிலையைக் கவிதைக் குவியல்களினூடே கண்டு பிடிக்கமுடியும் என்பதைஇக்கட்டுரை ஆராய்கிறது.

7.17 அறிவியல் தத்துவம் - சித்தர்களின் பார்வையில் ஓர் ஆய்வு

முனைவர் சுபாவினி ஆர்.காந்தி
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

இக்கட்டுரையானது சித்தர்களின் விஞ்ஞான நோக்கையும் , அவர்களின் அறிவியில் ஆய்வுத்திறனையும் , ஞான உண்மைகளையும் ஆய்ந்து நோக்கி , சித்தர்களின் இறையனுபவம் பற்றி எடுத்துக்காட்டுவதேயாகும். சித்தர்களின் தத்துவம் என்பது அறிவு கொண்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஞ்ஞான,மெய்ஞ்ஞானப் பேரறிவுக் களஞ்சியமாகும். இக்களஞ்சியமானது சரியை , கிரியை , யோகம் மற்றும் ஞானம் என்கிற நான்கு நெறிகளில் அடங்கியுள்ளது.இந்த நான்கு நெறிகளுமே, உள்ளம் என்கின்ற பேரறிவின் துணைக் கொண்டு மன ஆற்றலால் இயங்குகிறது என்பதே சித்தர்களின் அடிப்படைத் தத்துவமாகும். இவ்வடிப்படை நான்குமே அனைத்துலக ஒருமைப்பாட்டினை உருவாக்கும் மாண்பினை எடுத்துக்காட்டுகிறது.

நமக்கு வெளியே உள்ள அகலிடம் இந்த பரந்த வையமாக விரிந்திருக்கிறது. ஆனால் சித்தர்களுடைய மன உலகில் அது இறைவன் அமர்ந்திருக்கும் அகலிடமே ஆகும். மேலை நாடுகளில் , அறிவியல் துறைகளில் பற்பல புதுமைக் கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்தி ளிவருகின்ற முடிவுகள் நம் சித்தர்கள் கூறும் தொன்மைப் பேருண்மைகளை அப்படியே உறுதிப்படுத்துகின்றன. மேலை நாட்டின் சில அரிய கண்டுபிடிப்புகளானது நம் நாட்டுச் சித்தர்களின்

கருத்துக்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

7.18 பாம்பாட்டிச் சித்தாந்தம்

முனைவர் பெ. சுயம்பு
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

சித்தர்கள்

சித்தர்கள் அறிவின் (சித்) அடித்தளத்தில் நின்று ஆன்மவியலை ஆராய்கின்றனர். தாங்கள் ஆராய்ந்து துணிந்த முடிவுகளைச் சமுதாயத்தின் முழுமையான மேம்பாட்டிற்கு உரிய கருவியாக மாற்றியவர்கள். ஓர் இறைக்கொள்கையின் அடிப்படையில் அனைத்து உயிர்களிடமும் சகோரத்துவத்தைச் சித்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஒன்றே குலம் ; ஒருவனே தேவன் என்ற கொள்கையினால் இவ்வுலகம் இறையுலகமாக மாறும் என்பது சித்தர்களின் திடமான நம்பிக்கை. சித்தர்களின் கொள்கைகள் அவர்களைச் சைவ சமயத்தின் சீருதிருத்தச் செம்மல்களாக இனம் காட்டுகின்றன.

பாம்பாட்டிச் சித்தர்

பாம்பாட்டிச் சித்தர் பாண்டிய நாட்டவர். பாம்பாட்டி ஒருவர் நல்லபாம்பினை ஆட்டுவிப்பது போன்று பாடல்களை அமைத்துள்ளார். தன்னிலை உணர்ந்த உயிர் பாம்பாட்டியாகவும் குண்டலினி சக்தி நல்லபாம்பாகவும் படிமம் செய்யப் பெற்றுள்ளன. குண்டலினி சக்தி வாயிலாகப் பேரின்பம் (வீடு) எய்துதலைச் சித்தர் பரிந்துரைக்கிறார்.

குறிக்கோளும் வழிமுறையும்

இவ்வுலகம் பேரின்பத்தில் இடையீடின்றித் திளைக்க வேண்டும் என்பது பாம்பாட்டிச் சித்தரின் குறிக்கோள். அதனை எய்துதற்கான நெறியினை இறைவன்து அருள் குருவாகி உணர்த்தும். ஜீவன் முக்தர் நிலையில் வாழ்பவர் குரு. அவர் உயிர்களின் இயல்பினையும் , இறைவனைப் பற்றுதலின் வாயிலாக அவை பேரின்பத்தை எய்தவியலும் என்பதனையும் உணர்த்துவார்.

ஒத்த இயல்புடைய பொருள்களே பொருந்தும். பற்றற்ற இறைவனோடு கலத்தற்கு உயிர்கள் இருவகைப் பற்றுகளையும் நீங்குதல் வேண்டும்.இறைவன் சுத்தப்பரவெளியாக உள்ளான். பற்றற்ற மனமுடைய

உயிர்கள் வெளி என்ற நிலையை எய்தவியலும். இந்நிலையை எய்துதற்கு மனவொருமைப்பாட்டுடன் , இறைவனது பெயரை மவுனமாக உருவேற்றுதல் சிறந்த நெறியாகும்.

இன்பத்தில் திளைப்பதற்கும் துன்பத்தில் உழலுவதற்கும் மனமே காரணம் என்பது சித்தரின் கொள்கை

தனி மனிதனின் ஒவ்வொரு வாழ்வியல் கூறையும் சமுதாயம் பாதிக்கிறது. எனவே அவனது முழுமையான நிலைத்த இன்ப வாழ்விற்குச் சமுதாயத்தின் இன்பமயமான அமைப்பு இன்றியமையாதது. அவ்வமைப்பினை அன்பும் அறவொழுக்கமும் உடைய யோக நெறியால் உருவாக்கவியலும் . ஒவ்வொருவரையும் தன்னலமற்ற கருமயோகியாக-சித்தராக உருவாக்கல்லது பாம்பாட்டிச் சித்தரின் சித்தாந்தம்.

7.19 சைவ சமயத்தில் சாகாக்கலை

திருமதி. செல்வம்கோபால்.
அருள்மிகு பழநியாண்வர் மகளிர் கலைக்கல்லூரி, பழநி.

முன்னுரை

ஆன்மா - இறை - மும்மலத்தால் உழலும் ஆன்மா - மலம் கடந்து சித்தத்தைச் சிவமாக்கி - அகப்பயிற்சியால் தானே சிவமாகிச் சிவ ஒளியில் கலப்பதுதான் - ஆன்மாவின் பயணத்தின் எல்லை. சிவத்தைச் சிந்திப்பதற்கு மனப்பக்குவம் தேவை. நல்ல மனம் படைக்கத் திடமான உடல் - நோயற்ற தேகம் தேவை. ஆகவே சித்தர்கள் தேகத்தைக் கல்பமாக்க முனைந்தனர். அது முதற் முயற்சியே , முடிந்த முடிவல்ல , முடிந்த முடிவை நோக்கிப் போகும் பயணம் - சாகாக்கலையை நோக்கிச் சென்றது.

தேகத்தின் நிலை

சாதாரண மானிடர்க்கு உருவாக்கும் நோய்கள் 3 நாடிகள் 96 தத்துவம் , வாத ,பித்த, சிலேத்தும - நோய்கள். அதற்குரிய தீர்வுகள் இந்த முயற்சியில் ஒருபடி மேலே செல்வது தான் சாகாக்கலை கல்பமாக்கும் மூலிகை வர்க்கங்கள்பாசாண செந்தூரவர்கங்கள் ரசவாதத்தின் பங்கு , மருந்து உடலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் ,உணவு பக்குவங்கள்

காயகல்பமும் , சாகாக்கலையும்

காயம் கல்பமான உடல் யோகப்பயிற்சி பிராணயாமம் ஒழுக்க

முறைகளைக் கடைபிடித்தல் , அட்டாங்க யோகப்பயிற்சி பெறல் பஞ்ச பூதத்தைத் தன்னுள் காணல் பஞ்ச பூதத்தில் தான் கலந்திருத்தலை உணரும் உணர்வு நிலை உடலை இறைவனின் கோயிலாக்குவது முதற்படி ,இறைவனைத் தன்னுள் கண்டுத்தரிசிப்பது இரண்டாம் படி ,இறைமயமாதல் மூன்றாம் படி , உபதேசிப்பது நான்காம் படி , கருணைப் பேரருளாளன் அனைத்துயிருக்கும் உதவுவது ஐந்தாம்படி, இந்த ஐந்து படிகளைக் கடைப்பிடிக்கும் யோகி சாவதில்லை. மீண்டும் வருவதும் இல்லை. அவனே நினைத்தால்தான் சாவான். ஐந்தொழில் ரகசியமும் அவன் அறிந்த உண்மைகளாகும்.

முடிவுரை

''மாங்காய் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்குத் தேங்காய்ப்பால் எதற்கடி '' என்ற கேள்வி கேட்கும் துணிவு அவர்கள் சமுதாயத்திற்குத் தங்கள் அனுபத்தை விதைத்த பாங்கு அவர்களது. போதனையைச் சாதனையாக்கிக் கொண்டோர் வரிசை. அந்த சாகாக்கலை இந்தியாவில் இன்று எந்த நிலையில் இருக்கிறது ? முடிந்த கலையா ? அல்லது தொடர்ச்சியா ? இதை ஒரு சிந்தனக் குழு அமைப்பாக (School of Thoughts) மாற்ற முடியுமா ? அல்லது பயிற்சி கொடுப்பதால் சமுதாயத்தில் ஏற்படும்மாற்றங்கள் எல்லாரும் அமரராகும் நிலை. இந்தியா உலகிற்கு வழங்கும் நிலையினை இந்த (School of Thoughts)அமைப்பு உறுதியாக வழங்கும் என்பது உண்மை.

7.20 சித்தர்களின் காயசித்திச் சிந்தனைகள்

முனைவர் சோதிபாய் தேவதாஸ்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

மனிதப் பிறப்பால் கிடைத்த உடம்பை நோய் நொடிகளின்றி நல்ல நலத்தோடு வைத்திருப்பது அறிவுத்திறம் வாய்ந்த அனைவரின் கடமையாகின்றனது. '' சித் '' என்னும்அறிவில் மேலோங்கிய சித்தர்கள் சாதாரண மனிதரினும் பல படிகள் மேலே சென்று சிந்தித்தனர். ஞானம் எய்த உதவும் இக்காயத்திற்கு வரும் நோய்களைக் கட்டுப்படுத்தி , நரை, திரை, பிணி ,மூப்பின்றி வாழ முனைந்தனர். அதன் விளைவே சித்தம் செய்யப்படும் பலப்பல மருந்துகளை உருவாக்கிச் சித்த மருத்துத்தை வளர்த்ததாகும். அவர்கள் கோதமர் , அகத்தியர் முதலாய பதினெண்மர் ஆவர்.

சித்தர்கள் காயசித்திக்கெனச் சிந்தித்தபோது முதலில் உடம்பின்

இயல்பை ஆராயந்தனர். ஐம்பூதங்களாலும் 96 தத்துவங்களாலும் அது அமைந்திருப்பதை உணர்ந்தனர். அடுத்து நோய்க்கான காரணங்களை ஆராய்ந்தனர். வாதம் , பிதம் , கபம் என்னும் மூன்றின் மிகையால் அல்லது குறைவால் தான் நோய்கள் உண்டாகின்றன என அறிந்தனர். செலவில்லாமலேயே நாக்கு , மொழி , வழி , சிறுநீர் , மலம் , நாடி, தொடுதல் ஆகியவற்றால் நோய்களைக் கண்டறிந்தனர். நாடிகளில் உருவாகும் பல்வேறு நடைகளால் பலவிதமான நோய்களைக் கண்டறிந்தர். நோய்களுக்கேற்ற மருந்துகளை இயற்கைப் பொருள்களிலிருந்தே தயாரித்தனர். '' சித்த மருத்துவம் '' என்ற நூல் இவற்றை விரிவாக ஆராய்ந்துள்ளது. சித்த மருத்துவப் பாடல்களைப் புரிந்து கொள்வது மிகக் கடினம். மருத்துவம் ,யோகம், ஞானம் ஆகியவற்றில் ஆழ்ந்த பயிற்சியிருந்தால் தான் அவை விளங்கும்.

சித்தர்கள் தம் காயசித்திக்கெனவும் ,மக்களின் உடல் நலம் பேணவும் கற்பங்கள் , சூரணங்கள் ,கியாழங்கள் (கஷாயங்கள்) கிருதங்கள் (நெய்கள்) ,தைலங்கள் , பற்பங்கள் , சுண்ணங்கள் போன்றவற்றைச் சித்தப்படுத்தினர். ஒவ்வொன்றும் உடலை நோயின்றிச் செய்வதில் பெரும்பங்காற்றின. பின்விளைவுகள் அற்றவையாக இருந்தன. காயசித்திக்கெனத் தங்கமும் உருவாக்கப்பட்டது. ஆனால் அத்தங்கத்தால் தெய்வத்திருமேனிகள் செய்து காயசித்தியும் ஞானசித்தியும் எய்த வேண்டுமேயன்றிச் சுயநலத்திற்காக இருக்கக்கூடாது என யூகிமுனிவர் எச்சரிக்கிறார்.

காயசித்தி பெற ஒருவன் குருவிடமிருந்து தசதீட்சைகளைப் பெறவேண்டும். மௌனம் என்பதுதான் அப்போது ஞானவரம்பும் ஆகும். இவற்றைச் சித்தர்களின் ஞானப்பாடல்கள் என்னும் சித்தர் பாடல்கள் (இரு பாகங்கள்) மெய்ப்பிக்கின்றன.

7.21 இடைக்காட்டுச்சித்தரின் இலக்கிய உத்திகள்

இராம. தனசேகரன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சித்தர் எனப்படுபவர் பூரண அருளை அடைந்தவரும் , பதினெண் கணத்துள் ஒரு சாராரும் , அஷ்டமாசித்தி பெற்றவரும் ஆவர். சித்தர்களைக் காய சித்தர் , ஞானச்சித்தர் , சன்மார்கச்சித்தர் என மூவகைப்படுத்துவர். இவர்களுள் இடைக்காட்டுச் சித்தரும் ஒருவர் ஆவார். இவர் கி.பி.15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். விஷ்ணுவின் அவதாரமாகக் கருதப்படுபவர்.

இடைகாட்டுச்சித்தர் பாடல்களின் அமைப்பு முறையானது காப்பு - தாண்டவராயக் கோனார் கூற்று - நாராயணக் கோனார் கூற்று - பலரொடு கிளத்தல் - நெஞ்சொடு கிளத்தல் - அறிவொடு கிளத்தல் - சித்தத்தொடு கிளத்தல் - குயிலோடு கிளர்த்தல் - மயிலெடு கிளர்த்தல் - அன்னத்தொடு கிளர்த்தல் - புலலாங்குழலூதல் - பால் கறத்தல் - கிடை கட்டுதல் எற்றவாறு அமைந்து உள்ளது.

இடைக்காட்டுச் சித்தருடைய பாடல்களின் தொடக்கப் பகுதியில் தாண்டவராயக் கோனாரும் நாராணயக்கோனாரும் உரையாடும் நிலையில் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. பிற்பகுதியில் நெஞ்சையும் , அறிவையும், சித்தத்தையும் , குயிலையும் , மயிலையும் , அன்னத்தையும் , புல்லாங்குழலையும் முன்னிலைப்படுத்தி அவற்றுடன் பேசுதல் போல இறையியல்பு , உயிரியல்பு ,உலகியல்பு ஆகியவைகள் கூறப்பட்டுள்ளன.

இடைக்காட்டுச்சித்தர் தம் ஆன்மீகக் கருத்துக்களை வெளிப்படுத்த உரையாடல் , உவமை , உருவகம் மற்றும் பல்வேறு சந்தங்கள் ஆகிய உத்திகளைப் பயன்படுத்தியுள்ளார்.

இவரது பாடல்களில் உவமைகளும் உருவகங்களும்மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இறையியல்பு உரைத்தல் , வினைநீக்கம் , இறைவனுடன் ஆன்மா ஒன்றுதல் ஆகியவற்றினை விளக்க உவமைகளையும் தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்த உருவகங்களையும் கையாண்டுள்ளார்.

இடைக்காட்டுச் சித்தர் தம் கருத்துக்கள் மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் எளிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அத்துடன் பாமர மக்கள் பாடி மகிழ்தற்கு ஏற்ற வகையில் பல்வேறு சந்தங்களையும் தம் படைப்பில் கையாண்டுள்ளமையை அறியமுடிகின்றது.

7.22 அகப்பேய்ச் சித்தரின் பாடல்களில் இறை , உயிர் பற்றிய சிந்தனைகள்

முனைவர் ம. திருமலை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தமிழ்ச் சித்தர்களுள் குறிப்பிடத்தக்கவர் அகப்பேய்ச்சித்தர் .90 பாடல்கள் இவர் பாடியனவாகக் கிடைக்கின்றன. இவற்றில் மனித மனத்தைப் பேயாக உருவகம் செய்து , அதற்கு உயர்ந்த சிந்தனைகளை உரைப்பது போல இவர் தமது பாடல்களை அமைத்திருக்கின்றார்.

இறை , மனித மனத்தின் இயல்பு , இறைவனை உணரதக்க வழி

முறைகள் பற்றிய பல கருத்துக்கள் அகப்பேய்ச் சித்தரின் பாடல்களில் காணக்கிடைக்கின்றன.

இறையின் இருப்பினை உலகத்தில் காணப்படும் ஓசை , அசைவு, சக்தி என்ற நிலைகளில் உணரவியலும் . எனவே இறை என்பது உலகத்தை இயக்குகின்ற சக்தி என்ற கருத்து பெறப்படுகின்றது.

இறைவனை அடைய , அனுபவம் பெற மனம் ஒருமைப்பட வேண்டும் என்ற கருத்தை அகபேய்ச்சித்தர் கூறுகின்றார். மன ஒருமைப்பாடு என்பது உள்முகத் தரிசனங்களின் மூலம் தான் ஏற்படக் கூடும். இதன் மூலம் ஏற்படும் முதிர்ச்சி இறையனுபவத்திற்கு வழி வகுக்கும் என்ற கருத்து உள்ளது.

உலகப் பொருட்களின் மீதான பற்றுக்களை விடுதல் , பிறவி நீக்கம் அடைதல் , மனத்தின் அலைபாயும் தன்மைகளை மாற்றுதல் , சமயங்கள் என்ற அமைப்பு , அவற்றின் பல்வேறு கருத்துப்பள்ளிகள் முதலியன மனித வாழ்வினை மேலும் சிக்கலாக்குகின்ற தன்மை முதலான பல செய்திகள் அகப்பேய்ச்சித்தரின் பாடலகளில் கூறப்பட்டுள்ளன.

பொதுவாகச் சித்தர்கள் நிறுவன சமய முறைகளின் மீது மனநிறைவற்றவர்கள் ; சமூக வாழ்க்கை ,இம்மைப் பயன்கள் முதலிய பிரத்தியட்சங்களை வற்புறுத்துபவர்கள் . இப்பின்னணியில் அகப்பேய்ச் சித்தரின் சிந்தனைகள் இக்கட்டுரையில் ஆராயப்படவிருக்கின்றன.

7.23 பட்டினத்தார் காட்டும் நிலையாமை

இரா. நளினிகாந்தம்
தமிழ்ப்பல்லைக்கழகம்

சைவத் துறவியருள் ஒருவராகவும் , சித்தருள் ஒருவராகவும் எண்ணப்பெறுபவர் பட்டினத்தார் . பட்டினத்தார் பெரு வணிகர் , பூம்புகார்ச் செல்வர் , மகப்பேறில்லாத பட்டினத்தாரின் வளர்ப்பு மகனாக விளங்கும் மருதவாணன் '' காதற்ற ஊசியும் வாராதுங்காண் கடைவழிக்கே'' என்று தன் தந்தைக்குச் செல்வ நிலையாமையை அறிவுறுத்தி மறைந்தான் .பின்பு பட்டினத்தார் துறவு பூண்டார் என்பது வரலாறு.

பட்டினத்தாரின் பாடல்களில் உடம்பை இழுக்கு என்று உரைக்கின்ற கருத்து நிரம்ப உள்ளது. பெண்ணை இகழ்ந்துரைக்கும் இடங்களும் உண்டு.தமக்கு அறிவுறுத்தப்பெற்ற செல்வ நிலையாமை மட்டுமின்றிப் பிறவேறு நிலயாமைகளையும் பட்டினத்தார் விரிவாக எடுத்துரைக்கின்றார். உலக நிலையாமை , யாக்கை நிலையாமை ,

இன்பம் நிலயாமை ஆகிய எல்லாவற்றையும் மிக விரிவாகப் பேசுகின்ற சித்தர் பட்டினத்தாரே. பட்டினத்தாரின் பாடல்களில் காணப்பெறும் கருத்துகளுக்கு நேர்பொருள் கொண்டு பெண்ணை வெறுக்கிறார் என்றும், உலகைத் தூற்றுகிறார்.என்றும் கருதுதல் கூடாது. மன அழுத்தம் வாய்ந்த துறவின் பரிணாமத்தைப் பட்டித்தாரின் பாடல்கள் காட்டுகின்றன. பொறிபுலன்களை அடக்கி ஆள்வதில் இமயமாக நின்ற அவர் தம் மன உறுதியை அவருடைய பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

தமிழில் கிடைப்பவற்றில் முதல் நூலான தொல்காப்பியம் கூறும் பல்வேறு நிலையாமைக் கருத்துகள் பட்டினத்தார் கூறும் நிலையாமைக் கருத்துகளோடு ஒப்பிடத்தக்கன. பட்டினத்தார் கூறும் நிலையாமை சைவ சித்தாந்தக் கருத்துகளோடு ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கன. தனு , கரண , புவன போகங்களை மாயை வழியாகப் படைத்துக் கொடுக்கும் இறைவனின் திருவுள்ளம் மனிதன் பல்வேறு நிலையாமைகளை உணரவேண்டும் என்ற கருத்துடையதே ஆகும். இக்கோட்பாட்டைப் பட்டினத்தார் பாடல்கள் மெய்ப்பிக்கின்றன. பட்டித்தார் கூறும் நிலையாமை பௌத்த சமய ஆசிவக நெறிகள் கூறும் நிலையாமையிலிருந்து வேறுபட்டதாகும்.

7.24 சித்தர் - பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள்

கு. நாகராசன்
ஈரோடு.

தமிழ்நாட்டினர்க்குத் தனிப்பெருஞ் சிறப்பினைத் தேடித்தந்தது சைவ நெறி. எந்நாட்டவர்க்கும் இறைவனாக விளங்கும் தென்னாட்டு இறைவனை நேரே கண்டு அவன் திருவருளைப் பெற்றுள்ளார் நமது பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள். தான் பெற்றதோடு மட்டுமல்லாமல் பிறரையும் பெறச் செய்யக் கூடிய அற்றல் பெற்றிருந்தார். தெய்வ அனுபவங்களை உணர்வு நிலயில் வெளிப்படுத்தும் தோத்திரங்களாகவும் தெளிவு கூறி அறிவு நிலையில் விளக்க வல்ல சாஸ்திரங்களாகவும் 6666 பாடல்களை அருளி உள்ளார்.

பரமபதி நிலையினை உலகிற்கு உணர்த்திய தவசீலர். பாம்பன் சுவாமிகளின் நூல்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்களில் ஏற்படும் சந்தேகங்களைப் போக்குகின்றன. கற்போரின்மனதில் எழக்கூடிய சந்தேகங்களைப் போக்குவதன் நிமித்தம் வினா விடைப் பகுதி போன்றவற்றைப் படைத்து ,பதி, பசு, பாசத் தொடர்பினை விளக்கியுள்ளார்.

சுவாமிகள் துறவின் இன்றியமையாமையைக் கூறி நம்மைத் தெளிவு படுத்துகிறார். சுவாமிகளின் பாடல்கள் சொல் , பொருள் , தொனி, மேற்கோள் , உவமானம் எனப் பல்சுவைகளையும் ஒருங்கே கொண்டுள்ளன.தமது ''சைவ சமய சரபம் '' என்னும் நூலில் சிவபெருமானே வேதங்களை அருளிச் செய்தவர் என்று தெளிவாகக் குறிப்பிட்டு உள்ளார். பிரார்த்தனை செய்யும் போது முருகனிடம்

''எனைத் தள்ளி னாலுமெனை நம்பினவர்த் தள்ளேல்''

என்று வேண்டுகின்றார்.

வடமொழி கலவாத சுத்தத்தமிழ்ச் செய்யுள்கள் கொண்ட சேந்தன் செந்தமிழ் எனும் நூலை 1906 ல் வெளியிட்டுள்ளார். தவிரச் சைவ சமயத்தைத் தூற்றியவர்கள் மீது வழக்குத் தொடுத்து வெற்றியும் பெற்றுள்ளார். நக்கீரர் , அருணகிரிநாதர் , அகத்தியர் ,திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் , தாயுமான அடிகளார் , திருவள்ளுவர் , பட்டினத்தார் , சேக்கிழார் ஆகிய அருட்செல்வர்களின் சித்தாந்தங்களைப் பல இடங்களில் மேற்கோள் காட்டி உள்ளார். 1917 ல் திராவிடன் பத்திரிக்கையின் சிவநிந்தையை எதர்த்துப் போராடி வெற்றி பெற்றார்.

நாம் வடமொழி, தமிழ்மொழி இரண்டையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது சுவாமிகளின் மொழி பற்றிய கருத்து. முருகனை வழிபடுவோர் ,சைவ சமயத்தினர் , (குக சிவ சமம்) என்கிறார். சுவாமிகளின் வாழ்க்கை மிகவும் தெய்வத் தொடர்பு உடையதாகவும் பல அருள் நிகழ்ச்சிகளை உடையதாகவும் இருந்தது. தவம் ,வைராக்யம் ஆகியவற்றின் பிறப்பிடமாக வாழ்ந்தார் . சுவாமிகளின் சண்முகக் கவசம் பாராணயம் செய்து நன்மை பெற்றிருப்பவர்கள் கணக்கிலடங்கார். சைவத்தின் பெருமையை நிலைநாட்டச் சுவாமிகள் பல தீவிர முயற்சிகள் மேற்கொண்டார். எனவே இத்தருணத்தில் சுவாமிகளின் நெறியைப் போற்றி வணங்குவது சைவர் ஒவ்வொருவரின் தலையாய கடைமையாகும்.

7.25 சித்தர்களின் சமூகச் சிந்தனைகள்

டாக்டர் க. நாராயணன்
தாகூர் கலைக்கல்லூரி, புதுச்சேரி.

1. சித்தர்கள் தம் ஆன்ம விடுதலையோடு தாம் வாழும் சமுதாயத்தைப் பற்றியும்எண்ணியுள்ளனர். சமய ஒருமைப்பாடு , சாதி ஒருமைப்பாடு தனிமனித வாழ்க்கையறம் ஆகியன பற்றிய சித்தர்களின்

சிந்தனைகள் இக்கட்டுரையின் கருப்பொருளாகின்றது.

2. தமிழகத்தில் நிலவிய சமயங்களுக்கிடையே ஆதிக்கப் போட்டியும், பகைமையும் வளர்ந்தன. அதன் காரணமாக மக்கள் தமக்குள் பகைமை பாராட்டிப் பிளவுண்டு வாழ்ந்தனர். சித்தர்கள் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையைப் பரப்பி மக்களிடையே வளர்ந்த சமயப் பகைமையைப் போக்கிட முனைந்தனர்.

3. வேதியர் பண்பாட்டின் தாக்கமும் , வேதியர் நெஞ்சில் வேரோடித் தழைத்துவிட்ட இனமுதன்மைக்கருத்தும் தமிழகத்தில் இனப் போராட்டங்கட்கு வழிவகுத்தன. வேதியரின் தன்னல உணர்வு, போலிச்சடங்குகள் ஆகியனவற்றைச் சுட்டிக் காட்டி இனவேற்றுமையும் உயர்வும் அவர்களிடம் தலையெடுக்காதிருக்கச் சித்தர்கள் முயன்றனர்.

4. பிறப்பில் உயர்வு தாழ்வு கூறுவதும் , சாதிப்பிரிவுகளைப் பலவாக உருவாக்குவதும் , சமூக மதிப்பிட்டில் செயற்கையான இழிவு சிறப்பு காட்டுவதும் மக்களின் சமூக வாழ்வில் ஒற்றுமையின்மையை உருவாக்கின. இதற்கு மாறாகப் பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லையென்றும், சாதிப்பிரிவுகள் செய்ற்கையானவை யென்றும் மனிதன் தன் பண்பாட்டாலும் ஒழுக்கத்தாலும் உழைப்பாலுமே சமூக மதிப்பைப் பெற முடியும் என்றும் சித்தர்கள் உறுதிபடக் கூறுகின்றனர்.

5. சமூகக் கட்டுப்பாடுகளாலும் ,அரசியல் நெருக்கடியாலும் உருவாக்கப்படும் சமூக மாற்றங்கள் நிலைத்திருக்கும் தன்மையன அல்ல. தனிமனித உள்ளத்தில் ஏற்படும் மாற்றமும் செயல்களில் வெளிப்படும் அறமும் தழைத்தால் மட்டுமே நிலையான சமூகச் சீர்மையை எட்டமுடியும் என்று சித்தர்கள் கூறுகின்றனர்.

6. நல்லுணர்வு ஊறும் உள்ளம் , அறஞ்செய்தலை முதன்மையாகக் கொண்ட இல்லறவாழ்க்கை , வறியவர்கட்கு ஈதல் வேண்டும் என்ற எண்ணமும் செயலும் , செம் பொருள் காணும் தெளிந்த சிந்தையும் உடைய தனிமனிதர்களால் ஆன சமூக வாழ்வில் சீர்மையும் அமைதியும் நிலைத்திருக்கும் என்பது சித்தர்களின் எண்ணம்.

7.26 சித்தர்கள் அளித்த அறிவியல் தத்தவம்

முனைவர் ச. பரிமளா
தமிழ்ப்பல்கலைக்கழகம்

இன்று , எந்தவொரு நாட்டின் வளர்சசியும் முன்னேற்றமும் அந்நாட்டின் அளப்பரிய அறிவியல் வளர்ச்சி என்ற அளவுகோலைக் கொண்டே கணக்கிடப்படுகின்றன. ஆனால் , அதே வேளையில் அந்நாட்டின் பெருமையும் சிறப்பும் பாரம்பரியமும் அவற்றின் தொன்மையான கலைகளையும் தத்துவங்களையும் வரலாற்றுச் சின்னங்களையும் முன்னிறுத்தியே மதிப்பீடு செய்யப்படுகினற்ன. அவ்வகையில் பழம்பெருமைவாய்ந்த தமிழகத்தின் சிறப்புக்கு உறுதுணை செய்த சித்தர்களின் அறிவியல் தத்துவங்களை இன்றைய அறிவியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தி ஆய்ந்து அவற்றை மனித வள மேம்பாட்டிற்கு ஏற்றதாக வெளிப்படுத்தும் ஒரு சிறு எளிய முயற்சியே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

இன்று அறிவியல் தொடர்பான பல செய்திகளை அறிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில எண்ணிறந்த பல அறிவியில் நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுக்கு எல்லாம் முன்னோடியாகப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தாவரவியல் , விலங்கியல் ,மண்ணியில் , விண்ணியல் , கனிம இயல் என்று பலதுறை அறிவியல் தொடர்பான பல்வேறு செய்திகளை மிக நுணுகி ஆராய்ந்த இயற்கை தந்த செல்வங்களை உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்துவதற்குரிய பல வழி முறைகளைச் சித்தர் தம் நூல் திரட்டுகளிலிருந்து நாமறிய முடிகின்றது. தமிழகத்தின் இயற்கை வங்களைப் பயன்படுத்தி மரபு சார்ந்த பல வகையான மருந்துகளைக் கண்டறிந்து அவற்றை மக்கள் பற்பங்கள் , செந்தூரங்கள் மற்றும் சுண்ணங்கள் என்னும் மருந்துப் பொருள்களாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற எளிய வழி முறையில் தொகுத்தளித்திருப்பது இன்றைய அறிவியல் ஆய்வுகளுக்கு உட்படுத்த வேண்டிய அரிய செய்திகளாகத்திகழ்கின்றன.

குறிப்பாகக் ''கடலுயிரியல் '' (கல்லுப்பு , கணவாய்ஓடு, முத்து,பவளம் ,சங்கு , அம்பர், நண்டு ,மீன் ,இறால் மற்றும் ஆமைகள்) குறித்துச் சித்தர்கள் அளித்துள்ள அறிவியல் செய்திகளை இக்கட்டுரை விவரிவாக எடுத்துரைக்கின்றது.

7.27 திருநாவுக்கரசர் சித்தரே

மீ. பாலமுருகன்
அங்கப்பா கல்லூரி , கோவை .

பக்தி வழியில் தாம் கண்ட இறைவனைப் பாமர மக்களும் எளிதில் உணரச் செய்தவற்கு இசைப்பாடல்கள் பாடியும் தம்மையே ஒப்புக் கொடுத்தும் வாழ்ந்து காட்டியவர்கள் நாயன்மார்கள்.

யோக சித்தியைப் பயன்படுத்தித் தமக்குள் இருக்கும் குண்டலினியை ஆறு ஆதாரங்களில் நிலை நிறுத்தி ,மக்களைப் பக்தி வழியில் ஈர்த்தற்கு எண்ணற்ற சித்துக்கள் செய்து இறைவனோடு கலந்தவர்கள் சித்தர்கள்.

எனவே நாயன்மார்கள் வேறு சித்தர்கள் வேறு என்பது உறுதி.

'' யாவும் யாரும் கழறியன அறியப் பெறுதல்'' என்ற சித்தனைக் கைவரப் பெற்றிருந்தவர் சேரமான் பெருமாள் நாயனார். எனவே நாயன்மார்களில் சிலர் கூடச் சித்தர் நிலையை அடைந்தவர்கள்தாம்.

தேவார முதலிகள் மூவருமே யோகசித்தி கைவரப்பெற்றுச் சித்தர் நிலை அடைந்தவர்கள் , திரநாவுக்கரசர் , நாயன்மார்நிலையிலிருந்து வளர்ச்சி பெற்று , சித்தர் நிலை அடைந்தவர் என்று காட்டுவதுவே இக்கட்டுரையின் கருது கோளாகும்.

மூச்சை உள்நிறுத்தும் கும்பகப் பயிற்சியால் தான் அப்பர் தம்மை நீற்றறையில் இட்ட போது யோக சமாதி நிலையில் இருந்து , இறைவன் திருவருளால் தம் உடலைக் காத்துக் கொண்டார். இஃது அவர் செய்த சித்தாடலாகும். இச்சித்தாடலையே ''தீயின் மேலிருத்தல் '' என்று தாயுமானவரும் ; '' நெருப்புக்குள் மூழ்குதல் '' என்று பாம்பாட்டிச்சித்தரும் குறிக்கின்றர்.

7.28 சித்தர்கள் கண்ட சமுதாயம்

டாக்டர் அ. பாஸ்கரபால் பாண்டியன்
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்

சித்தர்கள் சமுதாயத்திற்கு நல்வழிகாட்டிய அறநெறியாளர்கள். ஒப்பற்ற சமுதாயத்தை அமைத்திட விரும்பியவர்கள் அவர்கள். அவர்கள் அமைத்திட விரும்பிய சமுதாயம் எப்படிப்பட்டது என்பதையும் , சித்தர்கள் தலை சிறந்த சீர்திருத்த வாதிகள் என்பதையும் இக்கட்டுரை நிலை

நாட்டுகிறது. திருமூலர் , சிவவாக்கியர் , இடைக்காடர் , கடுவெளி , பாம்பாட்டி , குதம்பை ,அகப்பேய், கொங்கணர்,தேரையர், பத்திரகிரி, காகபுண்டர் , அழுகுணிச்சித்தர், ஆகியோர் பாடகள் முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளப்பெற்றுள்ளன.

பொய்பேசுதல், நல்லோரை நிந்தித்தல் , பெண்களை இகழல் , சாதிவேறுபாடு காட்டுதல் , பிறர்க்கு உதவி செய்யாமை , அண்டினவர் கட்குக்கொடுக்காமை, வாது பேசுதல் , வழக்குகள் பேசுதல் , ஆசை கொள்ளல் , ஆடம்பரமாக வாழ்தல் , புறங்கூறுதல் , கஞ்சா , அபினி போன்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், போன்ற சீர்கேடுகள் மறையவேண்டும் என்று கருதிய சீர்திருத்தவாதிகள் சித்தர்கள். இத்தகைய கருத்துக்கட்குச் சான்றுகள் தரப்பெற்றறுள்ளன.

பசித்தோர்க்கு உணவு கொடுத்தல் தலைசிறந்த சமுதாய அறமாகச் சித்தர்களால் பாடப்பெற்றுள்ளது. கோயிலில் இருக்கும் ஆண்டவன் உள்ளத்திலும் உள்ளான் என்னும் ஆன்மீக அறம் சித்தர்களால் பேசப்படுகிறது. ஐம்புல அடக்கம் , குடும்பக்கட்டுப்பாடு ஆகியனவும் பெரிதும் வலியுறுத்தப்பெற்றுள்ளன. ஊரும் சதமல்ல, உற்றாரும் சதமல்ல, என்னும் நிலையாமைக் கோட்பாடும் அதே நேரத்தில் யோகம் ,மருத்துவம், அடக்கம் ஆகியவற்றின் மூலம் உடம்பைப் பேணுவதின் தேவையும் பாடப்பெற்றுள்ளன. புதிய தொரு சமுதாயம் மலர்ந்திட , சீர்கேடுகள் மறைந்திடச் சித்தர் பாடல்கள் துணைநிற்கின்றன. இவற்றை ஆராய்ந்து " சித்தர்கள் கண்ட சமுதாயம் " எப்படிப்பட்டது என்று நிலை நாட்டுகிறது இந்த ஆய்வுக் கட்டுரை.

7.29 சித்தர்கள் நோக்கில் மனித மேம்பாடு

மருத்துவர் . எஸ். பிரேமா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சித்தர்கள் என்போர் மக்கட் சமுதாயம் மேம்படத் தங்கள் அறிவு, ஒழுக்கம் , ஞானம் , யோக வலிமையால் பெருந்தொண்டாற்றிய சான்றோர்களாவர் எண்வகைச் சித்திகளும் கைவரப்பெற்றுச் சித்தத்தைச் செம்பொருளின்பால் வைத்த தவமுனிவர்களாவர். அவர்களால் அருளப்பெற்ற நூல்கள் சங்க காலம் முதற்கொண்டு இன்றுவரை வழங்கி வருகின்றன. தமிழகத்தில் நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் சித்தர்களாகவே போற்றும் மரபு உள்ளது. அவர்கள் அருளிச் செய்துள்ள நூல்களின் அடிப்படையில் மனித மேம்பாடு பற்றிய செய்திகளுள்

சிறப்பானவற்றைச் சுருக்கமாகக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மனித மேம்பாடு என்பது உயிர்வகையுள் ஆறறிவும் பெற்று மக்களுடம்பினராக விளங்குவோருடைய மேன்மைச் சிறப்பினைக் குறிப்பதாகும். ஏனைய உயிர்கள் பெரும்பாலும் உடம்பாலும் சிறுபான்மை உணர்வாலும் வாழ்வனவாகும்.மனம் என்னும் ஆறாவதாகிய பொறியை உடைய மக்களே மனிதர் எனப்படுகினற்னர். மனிதர் என்றால் மனிததன்மை என்பது பொருள். மனிதர்கள் உடம்பாலும் மன உணர்வாலும் எண்ணம் சிந்தனை என்னும் அறிவாலும் வாழ்பவர்கள்.

அதனால் மனிதர்கள் உடம்பாலும் உளத்தாலும் அறிவு ஞானத்தாலும் அடையும் மேம்பாடே மனித மேம்பாடாகின்றது. அம்மூவகையாலும்மனிதர்கள் மேம்படச் சித்தர்கள் கூறுமிடத்து உடல் மேம்பாட்டிற்கு மருந்தினையும் உள்ளத்தின் மேம்பாட்டிற்கு அறநெறி நீதிமுறை ஒழுக்கங்களையும் சிந்தனை மேம்பாட்டிற்கு ஞானயோகத் தத்துவங்கையும்மிக விரிவாகக் கூறிச்சென்றுள்ளனர். உடல் மேம் பாட்டிற்குரிய மருந்துபற்றிக் கூறுமிடத்து உணவு முறைகளையும் ஒழுக்கத்தால் உடல் தூய்மையுறும் முறைகளையும் சுற்றுச் சூழல்களைக் காப்பாற்றிக் கொள்ளும் முறைகளையும் பற்றிக் கூறுகின்றனர்.

உள்ளம் (மனம்) உணர்வு மேம்பாட்டிற்கு அன்பு , அருள் , வாய்மை ,அழுக்காறின்மை தீவினையச்சம் , ஈகை முதலிய அறநெறிகளையும் திருக்கோயில் வழிபாடு முதலியவற்றையும் விரிவாகக் கூறுகின்றனர்.

சிந்தனை எண்ணங்களின் மேம்பாட்டிற்குப் பெரியோரைப் போற்றுதல், தியானம் , யோகம் , தத்துவ ஆராய்ச்சி , சீவகாருண்யம் , சகோரத்துவம் முதலியவை பற்றித் தெளிவாகக் கூறுகின்றனர்.

உலகில் மக்கட் சமுதாயத்தில் நிகழ்ந்துவரும் சாதிப்பூசல்கள் சமயச் சண்டைகள், இனப் பாகுபாட்டுக் குரோதங்கள் முதலியவை மனித மேம்பாட்டிற்குத் தடையாக இருப்பதையும் அவை தடையாகாவண்ணம் எற்றத்தாழ்வுகள் பாராட்டாமல் ஒற்றுமையோடு வாழவேண்டிய கட்டாயம் பற்றியும் சித்தர்கள் கூறியுள்ளனர். சிவவாக்கியர் போன்ற சிவசித்தர்கள் மிக்க கடுமையாகவும்திருமூலர் போன்ற சித்தர்கள் மென்மையாகவும் மனித மேம்பாட்டிற்கு ஏற்புடையவை பற்றியும் ஏலாதவை பற்றியும் விளக்குகின்றனர். மனிதமேம்பாடு என்பது மனிதவளம் மேம்பாடென்பதைப் சித்தர்கள் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் கூறியுள்ளனர்.

7.30 சித்தர்கள் யார் ?

சி. மகாராசன்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

கடவுளைக் காணமுயல்வோர் பக்தர். பக்தி செய்து கடவுளுக்காகக் கரைந்து உருகி அழுது அவர்கள்செய்யும் முயற்சி பலவகைப்பட்டது. அதைப் பக்தி நெறியில் காணலாம்.

ஆனால் கடவுளைக் கண்டு தெளிந்தவர் சித்தர். இது தேவாரம் காட்டும் வேறுபாடு.

பரம்பொருள் அல்லது பரப்பிரம்மம் மூன்று பெரிய இயல்புகளைக் கொண்டது. சச்சிதானந்தம் என்பதைச் சத் + சித் + ஆனந்தம் எனப் பிரிக்க வேண்டும்

சத் என்பது உண்மை
சித் என்பது அறிவு
ஆனந்தம் என்பது மகிழ்சசி

இம்மூன்று பெரிய இயல்புகளில் சித் என்ற அறிவை மட்டும் எடுத்துக்கொள்வோம்

அறிவு முதலில் சூழ்நிலையை அறிவதாகத் தோன்றினாலும்அது தன்னையே தான் அறிகிறது.

தன்னையே தானறிந்தால் சித்தி
தன்னைத்தானே அறிந்தவர் சித்தர்

சித்து விளையாடினால் தான் சித்தர் என்று பொருளல்ல. சித்து வியையாடுபவர்கள் எல்லாருமே சித்தர்களாகிவிட்டார்கள் என்றும் கருதலாகாது.

சித்தர்கள் தான் ஆதி அறிவியல் மேதைகள். அறிவியல் இன்று பல அடிப்படைகளைக் கொண்டு பல கருவிகள் மூலம் கண்டறிந்த உண்மைகளைப் பல கருவி இணைப்புகள் மூலம் பயன் வடிவமாக மாற்றியமைப்பதை அவர்கள் எத்துணையுமின்றித் தாமே முயன்று தமக்குள் ஆழ்ந்து நிறைவேற்றியவர்கள்.

அவர்கள் அழிந்துவிட்டார்கள். அவர்கள் இன்று இல்லை. அவர்கள் கதை முடிந்துவிட்டது என்றுமுடிவு கட்டுவது பிழை. அவர்கள் அழியவில்லை. அவர்களுக்கு அழிவே இல்லை.

சித்தர்கள் ஆத்ம சாதனை புரிந்து அரும்பெரும சித்திகள் பெற்று அழிவற்ற அமரநிலை எய்தியவர்கள்.

சித்தர்கள் பற்றி நமக்குக் கிடைக்கும் செய்திகள் ஆதாரபூர்வமானவை அல்ல. செவிவழிச் செய்திகளையும் , பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்பட்டுவரும் வரலாறுகளையும் வைத்துச்

சித்தர்கள் யார் என்னும் ஆய்வு செய்ய முனைவதே இக்கட்டுரையின்நோக்கமாக அமைகிறது.

7.31 சித்தர் நெறியைத் '' திருமந்திரம் '' வாயிலாகக் காணல்

அ. மலர்
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம்.

சித்தர் என்ற சொல்லாட்சியும் பொருளும்.

சித்தர் மரபின் முன்னவராகத்திருமூலர் அறியப்படல். சித்தர் நெறியின்தோற்றுவாய்.

சமூக அசைவியக்கத்தின் வெளிப்பாடாகச் சித்தர் நெறி அமைந்த நிலை.

கடவுள் வழிபாடு என்பது வெற்றாரவாரச் சடங்காக மாறியபோதும், நடைமுறைத் தேவைகளைக் கருத்தில் கொள்ளாது , சமயம் சமூகப்பிரக்ஞையிழந்து இறுகிய சித்தாந்தமாக ஆனபோதும் , கல்லில் கடவுளைக் கண்டவன் மனிதனில் கடவுளை மறுதலித்தபோதும் , இடங்களைப் பிரிவினராக எதிர்நிலை ஒழுங்கு பற்றிப் பேசிய நிலை.

பிழைக்கும் நிறுவனமாகச் சமயம் மாற்றப்பட்டபோது கலகக்குரல் எழுப்பிய நிலை.

இயற்கையின் இயக்கத்தோடு முரண்படாது , உலகியல் வினைப்பாடுகளை உதறிவிடாது , உலகியல் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த வழிகாட்யடி நிலை.

அரசு நிறுவனம் மற்றும் அதிகாரவட்டங்களால் மறுக்கப்பட்டு எதிராக விளங்கியமை

உயிரின் உயர்வினை உணர்த்தியமை

ஒன்றே குலம் ஒருவனே தேவன்,

அன்பே சிவம் ,

என்பது போன்ற விழுமியக் கோட்பாடுகளை மனிதச் சமூகத்திற்கு அளித்தமை.

சைவ சமயத்துடனான சித்தர் மரபின் உறவு நிலை. கருத்தியல் அளவோடு நின்றுவிடாது, சமூகப் பயன்பாட்டு அடிப்படையில் சித்தர்களின்செயல்பாடு. உருவ வழிபாடு, அகவழிபாடு குறித்தசித்தர் நிலை.

7.32 சித்தர்கள்

பா. மாசிலாமணி
மருத்துவர் , பாண்டிச்சேரி

சித்தர்கள் பல்வேறு சித்திகளை அடைந்து சித்தர்கள் என்ற பெயரைப் பெற்றனர். சித்தர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக வாழ்ந்ததற்குச் கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. சித்தர்கள் எல்லோரும் ஜீவ சமாதி ஆகியுள்ளனர். ஒவ்வொரு கோயிலிலும் இச்சமாதிகள் உண்டு. யோக சமாதியை எவர் ஒருவர் கடக்கிறார்களோ அவர்களே சித்தர்கள். எல்லா இடத்திலும் இறைவனைக் காண்பவர்கள் சித்தர்கள் போன்ற பல அறிய கருத்துக்களை இக்கட்டுரை விளக்குகிறது.

7.33 சிவவாக்கியரும் ரபீந்திரநாத் டாகுரும்

முனைவர் சொ. முத்தையா
விஸ்வ பல்கலைக்கழகம், சாந்திநிகேதன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் பாடல்களுக்குச் சிறப்பானதோர் இடம் உண்டு. அவற்றுள் , சிவவாக்கியர் பாடல்களுக்குத் தனி இடம் உண்டு. இதே போன்று வங்க இலக்கிய வரலாற்றில் ரபிந்திரநாத் டாகுர் படைப்புகளுக்குச் சிறப்பானதோர் இடம் உண்டு. பொதுவாகவே சித்தர்கள் சாதி சமய வேறுபாடு அற்றவர்களாக விளங்கியவர்கள். நாடு , மொழி, இனம் ஆகிய குறுகிய எல்லைகளைக் கடந்தவர்கள். ஆன்ம நேய ஒருமைப்பாட்டை - எம்மதமும் சம்மதம் என்ற சமரச சன்மார்க்கத்தை வளர்த்தவர்கள். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதே அவர்களின் சமயக் கோட்பாடு. போலிச் சடங்குகளையும் , பொருளற்ற செயல்களையும் , மூட நம்பிக்கைகளையும் கண்டித்தவர்கள் . கடவுள் உண்டு என்று கூறும் சித்தர்கள் உருவ வடிவத்தை ஒப்புவதில்லை. உருவெளியையே ஒப்புகின்றனர் இறைவன் மனக்கோயிலின் உள்ளிருப்பதாகவே கூறுகின்றனர். சித்தர் மரபில் வந்த சிவவாக்கியரும் இக்கருத்துடையவராகவே காணப்படுகிறார். சிவவாக்கியரைப் பேலாவே டாகுரும் சாதி சமய வேறுபாடு அற்றவராகவும் , நாடு மொழி , இனம் ஆகிய குறுகிய எல்லைகளைக் கடந்தவராகவும் , ஆன்ம நேய ஒருமைப்பாட்டை - எம்மதமும் சமம்மதம் என்ற சமரச சன்மார்க்கத்தை வளர்த்தவராகவும் ,'ஒன்று என்று இரு ; தெய்வம் உண்டு என்று இரு '

என்று பட்டினத்தார் பாடியது போல் சமயக் கோட்பாடு உடையவராகவும் , போலிச்சடங்குகளையும் பொருளற்ற செயல்களையும் , மூடநம்பிக்கைகளையும் கண்டித்தவராகவும் விளங்கினார். சிவவாக்கியர் போலவே டாகுரும் இறைவன் மனக்கோயிலின் உள்ளிருப்பதாகவே கூறுகிறார். இருவரும் இறைவனைப் பாடித் தொழுதவர்கள். சிவவாக்கியர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருக்க ,டாகுர் வங்காள மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர். சிவவாக்கியர் வாழ்க்கையும் வரலாறும் சரியாக அறிய முடியாதவாறு அமைந்திருக்க , டாகுரின் வாழ்க்கையும் வரலாறும் தெளிவாக அறியக் கூடியதாக அமைந்துள்ளது. இவ்வாறு ஒரு சில் ஒற்றுமை , வேற்றுமைக் கூறுகள் இருவரிடையேயும் காணப்படுகின்றன.

சிவவாக்கியரும் , டாகுரும் காலத்தாலும் , இடத்தாலும் , மொழியாலும் வேறுபட்டுக் காணப்படினும் கூறுகின்ற கருத்தால் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றனர். சிவவாக்கியரின் கருத்து டாகுரின் கருத்தில் எதிரொலிக்கிறது. இருவேறுபட்ட மொழிகளில் காணப்படும் கருத்து ஒற்றுமையைச் சுட்டிக் காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

7.34 சித்தர் நெறி

முனைவர் இரா. மோகன்
மதுரை காமராசர் பல்கைலக்கழகம்.

1. தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் பாடல்களுக்குச் சிறப்பான இடம் உண்டு. எனினும் , சித்தர்கள் நிலை இன்னும் விளங்காத ஒரு புதிராகவே உள்ளது.

2. 'சித்தர்கள் யார் ?' என்ற வினாவுக்கு அறிஞர்கள் தந்துள்ள பலவகை விளக்கங்கள் ; பக்தர் - சித்தர் வேறுபாடு ; சித்தர்களின் கருத்துக்கள்.

3. சித்தர்களின் கடவுட் கொள்கை : தெய்வம் உண்டு - ஒன்று - உள்ளத்தின் உள்ளே உள்ளது.

4. சித்தர்களைக் 'கிளர்ச்சியாளர்' எனச் சுட்டலாம் ; அவர்கள் சமுதாயக் கொடுமைகள் பலவற்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்துள்ளனர்.

5. சாதிக் கொடுமையைச் சாடும் பகுதிகள் சித்தர் பாடல்களில் பரவலாகக் கணாப்படுகின்றன.

6. சித்தர் பாடல்களில் பெண்ணின் பெருமையைப் போற்றிக்

கூறும் இடங்களும் உள்ளன.

7. சித்தர்கள் மனச் செம்மைக்கே முதன்மை தந்துள்ளனர் ; மனத்தை வசப்படுத்தி , ஒருமைப்படுத்துவது பற்றியே அவர்கள் ஆழ்ந்து சிந்தித்துள்ளனர்.

8. சித்தர்கள் உடம்பின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்திருந்தனர். அவர்கள் உடல் ஓம்பலை உயிரை வளர்க்கும உபாயமாகவே கருதினர்.

7.35 சித்தர் யாப்புத்திறன்

முனைவர் கா.கோ.வேங்கடராமன்
அ.அ.அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

சித்தர் பாடல்களை அடிவகைப்பகுப்பாய்வு , முத்தமிழ் யாப்பு , வண்ணம் , வனப்பு ,யாப்பும் மொழியியலும் எனப் பன்முகமாக இக்கட்டுரை ஆய்கிறது.

அகவல் , வெண்பா , விருத்தம் போன்ற பழையமரபுப் பாடல்களும் , சிந்து , கீர்த்தனை ஆகிய புத்திசை யாப்பு வகைகளும் சித்தர் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

இயலினும் இசையும் , இசையினும் நாடகமும் நெகிழ்ச்சியுடையவை. இயல் பொருண்மை அழுத்தத்தையும் , இசை மிக்கோசைப் பண்பினையும் , நாடகம் தாள மேம்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டவை. இவ்வகையில் நோக்கின் விருத்தங்கள் இசைப்பாடல்களே. சித்தர் பாடல்களில் இயல் , இசை , நாடகம் என்ற மூவகையாப்புக்களும் ஒன்றியுள்ளன. இயல் யாப்பினை ஆய்ந்த இலக்கணா இதுகாறும் இசை , நாடக யாப்புக்களை ஆயாது விட்டு விட்டனர். எனவே, முத்தமிழ் முழுமையுறா நிலையிலுள்ளது.

சித்தர் பாடல்களின் வண்ணங்கள் இசைத்தன்மையை மிகுவிக்கின்றன.

விருந்தும் , புலனும் இயைந்ததொரு வனப்பினைச் சித்தர் பாடல்கள் மேற்கொள்கின்றன. யாப்பின் ஓசை , எதுகை முதலியவற்றின் அடிப்படையில் சித்தர் கால ஒலியியலை விளங்கிக் கொள்ளமுடிகிறது.

முடிவாகக் கூறுங்கால் சித்தர் பாடல்கள் தமிழ் யாப்பு வடிவ வராலாற்றில் ஒரு திருப்பம் எனல் தகும்.

7.36 சித்தர்களின் சமய மெய்யியற் சிந்தனைகள் . ஈழத்துச்சித்தர்களோடு தொடர்புபடுத்திய ஓர் ஆய்வு

மா. வேதநாதன்
யாழ் பல்கலைக்கழகம் , இலங்ககை

சைவப்பண்பாட்டு வரலாற்றில் சித்தர்களின் சிந்தனைகள் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. அகிலமெங்கும் சித்தர்கள் வாழ்ந்து வந்ததாக அறியப்படுகின்றபோதும் '' தமிழகச் சித்தர் மரபு'' தனித்துவ முடையதாகத்திகழ்கின்றது. இதனை அவர்களுடைய பாடல்கள் நன்கு உறுதி செய்கின்றன. ஈழத்திலும் சித்தர்மரபு இருந்து வருவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். ஈழத்துச் சித்தர்களின் வாழ்க்கை முறைகளிலிருந்தும் ,அவர்களது பாடல்கள் மூலமும் அவர்களது சமய மெய்யியற் சிந்தனைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. தமிழகச் சித்தர்கள் மற்றும் ஈழத்துச் சித்தர்கள் பாடல்களின் துணைக்கொண்டு அவர்கள் கூறும் சமய மெய்யியற் சிந்தனைகளை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழகத்திலும் , ஈழத்திலும் வாழ்ந்த சித்தர்களின் வாழ்க்கை வரலாறு மிகச் சுருக்கமாக இக்கட்டுரையில் இடம் பெறும்.

சித்தர் என்பதன் விளக்ககமும் ,தமிழ் இலக்கியங்களில் வரும் சித்தர் பற்றிய செய்திகளும் , அவர்கள் கூறும் சமய மெய்யியற் சிந்தனைகளும் இக்கட்டுரையில் இடம் பெறும்

சித்தர்களின் சிந்தனைகள் சமுதாயத்தில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் இக்கட்டுரை ஆராய்வதாக அமையும்.

சித்தர்களின் சிந்தனைகள் சமுதாயத்தில் ஏற்படுத்திய செல்வாக்கின் காரணமாகத் தமிழகத்திலும் , ஈழத்திலும் சித்தர்களுக்கென ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. இது பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப்படும்.

ஈழத்துச் சித்தர்களுள் குறிப்பாக டோகர் சுவாமிகள் கூறும் சைவ சித்தாந்தச் சிந்தனைகள் இக்கட்டுரையில் சிற்ப்பாக ஆராயப்படும்.

தொகுத்துக் கூறுமிடத்துத் தொன்று தொட்டு இன்றுவரை தமிழகத்திலும் , ஈழத்திலும் வாழ்ந்து வந்த சித்தர்களின் சமய மெய்யியற் சிந்தனைகளை அறிந்து கொள்வதும் ,அவை சைவப்பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் , செல்வாக்கினையும் தனித்துவத்தையும் வகுத்துக் கூறுவதும் இவ்வாய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

7.37 சித்தர் பாடல்களில் மக்கள் நெறிப்படுத்தம்

இரா. வேலாயுதம்
சென்னைப் பல்கலைக்கழகம் ,

சித்தர்களைப் பதினெண் சித்தர் என்பர். அவர்களையும் நாதசித்தர் முதலாகப் பலவகைகளில் பாகுபடுத்துவர். சித்தர்களுக்கு எட்டுவகை சித்தி பேசுவர். ஆயினும்எட்டுக்கு மேலும், அனுபவங்களால் பல்வேறு நிலைகளிலும் கட்டுப்படுத்தப்பட முடியாத நிலையில் சித்தர்களின் அனுவங்களைக் காண முடிகிறது. சித்தர்களின் '' தன்மை'' குறித்த கூறுகளைக் கொள்ளாமல் ,மக்களோடு அவர்கள் தொடர்பு கொள்ளும் தன்மையில் , அவர்களின் பாடல்களில் மக்களை நெறிப்படுத்தும் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மக்களை நெறிப்படுத்துவதற்குக் காலந்தோறும் அறிஞர்கள் பல்வேறு மொழிநடைகளில் மக்களிடம் தொடர்பு கொண்டுள்ளனர். பெரும்பாலும் சித்தர்கள் எளிமை மொழி வடிவத்தில் மக்களோடு தொடர்பு கொண்டதால் , மக்களை நெறிப்படுத்தும் கொள்கைகளை எடுத்துக்காணுவது இன்றியமையாததாகிறது. ஏனெனில் , தனித்தனியே அவர்களால் கூறப்படும் கருத்துக்கள் உயர்நிலைக் குறிக்கோள் நோக்கி ஒரு முகப்படுத்துமாறு கூறப்பட்டுள்ளவனா என்பதனைக் காணுதற்காகும். மக்கள் மொழியில் - மக்களோடு எளிதில் தொடர்பு கொள்ளும் நிலையில் அமைந்த சித்தர் பாடல்களை மனிதர்களை நெறிப்படுத்தும் அமைப்பிலேனும் ஒருமுகப்படுத்திப் பார்த்தல் அவசியமாகிறது. அவ்வகையில் ஓரளவு காணுதற்கு இக்கட்டுரை விழைகிறது.

மக்களை நெறிப்படுத்தல் என்பது மனிதனின் நடத்தையை நெறிப்படுத்தல் ,மனிதனின் வாக்கை நெறிப்படுத்தல் ,மனிதனின் நோக்கை நெறிப்படுத்தல் , மனிதனின் செயலை நெறிப்படுத்தல், மனிதனின் அனுபவத்தை நெறிப்படுத்தல் ஆகியவைகள் தொடங்கி ஐம்புல அனுபவங்களை நெறிப்படுத்தலே அடிப்படை.அதற்குத் தலையாயதாக நெறிப்படுத்த வேண்டிய ஒரு கருவி 'மனம்' என்பதாகும். அதனை ஒட்டியே அறிவு செம்மைபெறுகிறது. எனவே , மனத்தின் அடிப்படையில் ஐம்புலன்களையும் அறிவையும் நன்னெறிப்படுத்தும் தன்மையில் மக்களை நெறிப்படுத்தும் கொள்கை வெற்றி பெறுகிறது அவ்வகையில் சித்தர் பாடல்கள் அமையுமாற்றைக் காணலாம்.

7.38 சித்தர்களும் அவர்கள் ஆய்ந்த கலைகளும்

சூ. வேலுசாமி

சித்தர்களும் சைவ நெறியைப் பின்பற்றியவர்களே. கொல்லா நெறியே குருவருள் நெறி எனப் போற்றினார்கள். பேரின்பம் பெறுவதையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டார்வகள். அனைத்துயிர்களும் பயன்படும் வகையில் பல அரிய கருத்துக்களைச் சித்தர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள். சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் முரண்பாடில்லை என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. இவர்கள் ஆய்ந்த கலைகள் 27 என்பதை இக்கட்டுரை தெளிவாக விளக்குகிறது. திருமூலர் சித்தர் திருக்கூட்டத்தைச் சார்ந்தவர்.

7.39 வள்ளலாரின் மருத்துவ அறிவியல் சிந்தனைகள்

முனைவர். நே. ஜோசப்
தமிழ்ப்பல்கலைக்கழகம் .

இந்திய நாட்டில் அகத்தியர் முதலான பதினெண் சித்தர்களும் திருமூலர் வள்ளுவர் ஆகியோரும் பண்டைய சித்தர்களில் குறிப்பிடத் தக்கவர் ஆவர். பிற்காலத்தில் தோன்றியவர்களில் வள்ளலார். , சிவவாக்கியர் போன்ற அருளாளர்கள் முக்கியம் வாய்ந்தவர்கள். இவர்கள் உயிர் , உடலை ஒம்பி வளர்க்க வழிகள் பல வகுத்தனர். உட்கொள்ளவேண்டிய உணவின் வகைகள் உட்கொள்ளும் காலம் மற்றும் அளவு போன்றன பற்றிய நெறிமுறைகளைத் தெள்ளத் தெளிவாக வகுத்தளித்துள்ளார்கள். நம் முன்னோர்களாகிய அச்சித்தர்கள் மனித குலத்துக்குப் போதித்த உண்மைகளைக் கடைபிடிப்போமாயின் நாம் நோயற்ற வாழ்வு வாழலாம் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் எல்லாச் சித்தர்கள் கூறும் அறிவுரைகளையும் ஒருவர் கடைப்பிடிப்பது அரிதாகும் இதனை மனதிற்கொண்டு பிற்காலத்தில் தோன்றிய வள்ளலாளரின் மருத்துவச் சிந்தனைகள் எளிமையாக இருப்பதால் அதனைக் குறித்து ஆராய்வது இக்காலத்தின் கட்டாயமாகும்.

வள்ளலார் இயற்றிய திருவருட்பாவில் மனிதன் வாழ்வதற்குரிய நெறிமுறைகைளைத் தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றார். இந்த உடம்பைப் பொன் போலக்காத்து வளர்க்க வேண்டும் என்று வள்ளலார் வற்புறுத்துகின்றார். மனிதன் இந்த உடல் மூலமாகத் தான் திருவருளை

அடைய முடியும் என்றும் வேறு எந்தப் பிறவியாலும் முடியாது என்றும் வள்ளலார்திட்டவட்டமாகக் கூறுகின்றார். மேலும் ,இறைவனை நினைத்து மகிழ்வதற்கு இவ்வுடலின் இன்றியமையாமையும் வள்ளலார் எடுத்தியம்புகிறார். எனவே ஆரோக்கிய வாழ்விற்கு வள்ளலார் கூறும் கருத்துக்கள் கீழ்வரும் பிரிவுகளை மையப்படுத்தி இக்கட்டுரை அமைகின்றது.

1) இறைவனே அருமருந்து
2) இறவனை இயக்க வடிவாக்கிக் காணவேண்டும்.
3) உடம்பு பற்றிய கருத்துக்கள்
4) உணவுபற்றிய கருத்துக்கள்
5) மன அமைதிக்கு வழிவகைகள்
6) வள்ளலார் கூறும் மூலிகைகள்

போன்றனவாகும்.

7.40 SIDDHARGALIN REJUNUVATION AND ANTI-AGING PROCESS -A BULL'S EYE VIEW FROM SIDDHA LITERATURE.

Dr. V. Ravishankar
NewDelhi

The numerous afflictions of the body and mind of man must have its origin right from the time of his advent on earth, he must have suffered such afflictions. Naturally a number of methods for combating, curing these ill health conditions, rejunuvation of body and alive long without any ailments have been described in Siddha texts. A well systematised medical knowledge was developed alongwith the Dravidian Civilization. It catered the needs of the society lived in Sangam period (i.e) around 2000 B.C. and popularly known as "Siddha Medicine".

This medical science comprises of special knowledge of Philosophy, Kayakarpam, Tantra, Astrology and Alchemy apart from the vast therapeutic recepies. Kaya karpa methods (The science of rejunuvation and anti-aging process) are widly discribed in the Siddha literture. These were mainly divided into two parts (1) thorugh yogic practics and vasi (method of inhalation and exhalation of air through nose). 2) through Parpam, Chendooram and others compound

preparations prepared in Kayakarpa methods using Karpa mooligaigl (medicinal plants which has the properties of rejunuvations and anti-aging process). Available classical literatures are Tirumoolar Tirumanthiram - 3000, Tirumoolar karukkadai - 600, Bogar kalpa murai - 300, Bogar - 7000, Konganar Karpa murai - 100 elaborately discribes the methods of preparation of Kaya Karpa medicines, their method of preparation and uses, norms and other technique to be followed during the course of treatement, do's and dn's for achieving longevity and antiaging. Not only the simple preparations like " Pancha Mooligai karpam " used for udal chudu but also the highly complicated compound preparations like " Ayakantha chendooram " and "Doovathavsa Ilakiyam " which delays untimely death and increases the life span of the individuals are found in literature.

Siddhargal stressed the use of black varities of the common plants like Kadukttai (Terminalia chebula Retz.), Karisalai (Eclipta alba L.) , Thulasi (Ocimum sanctum L.), Seenthil (Tinospora cordifolia (willd.) muers.), Vembu (Azadirachta indica A. Juss.), Brammi (Bacopa monnieri L.). Penal), Vallarai (Centella asiatica L) , Vilvam (Aegle marmelos (l.) Corr., Palasu (Butea monosperma (Lam.) Kunte), Kondrai (Pon0 Cassia fistula L.), Chiramoolam (Plumbago zylanica L.) kattrazhai (Aloe vera Mill.), for use in the preparaion of Kayakarpa drug(or) compound preparations of Kayakarpa medicines. There is also mention about the method of cultivation of black variety of these plants in our garden iself using Serankottai (Semecarpus anacardium Linn. f.) as fertilizer . Use of specialised salt " kattuppu " during the period of treatment of Kayakarpa described in Siddha texts are also discussed.

அமர்வு எட்டு

திரு மடங்கள்

8.1 கனம்பட்டி மாணிக்கவாசகர் மடம்

முனைவர் புலவர் செ. இராசு
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டக் கனம்பட்டியில் மாணிக்கவாசகர் திருமடம் உள்ளது. 56ஆம் பட்டமாக அம்மடத்தின் தலைவராகத் தவத்திரு இராசலிங்க மாணிக்கவாசக சுவாமிகள் உள்ளார்கள்.

திருவாசகம் அருளிய மாணிக்கவாசகரிடம் சோழநாட்டு வாட்போக்கி மாணிக்க பண்டிதர் சீடராக அமர்ந்தார். நீங்கா நிழல்போல் குரு மாணிக்கவாசகருடன் யாத்திரை செய்த மாணிக்கப்பண்டிதருக்குத் தில்லையில் ஞான தீட்சையும் , சிவானந்த வெள்ளத்தால் ஞானாபிடேகமும் அளித்துத் தம் பெயரையும்தந்து தாம் வணங்கி வந்த மீனாட்சி சுந்தரேசுரரையும் வழங்கிக் கொங்கு நாட்டில் சமயப்பணி ஆற்றக் கூறினார்.

அவர் வழியினர் கொங்கு நாட்டில் அவிநாசி, விசயமங்கலம் ஆகிய இடங்களில் மாணிக்கவாசகர் பெயரில் மடங்கள் ஏற்படுத்தினர். கொங்கு நாட்டில் பல கோயில்கட்குப் பிரதான மடாதிபதியாகவும் , குருத் தானிகராகவும் திருவிழாவில் காப்புக் கட்டுவிக்கும் உரிமை உடையவர்களாகவும் திருமடத் தலைவர்கள் உள்ளனர்.

ஆயிரக்கணக்கான அடியார்கள் தாய்ப்பசுவிடம் வரும் கன்றுபோல் தம் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைக் கூறி நிவாரணம் பெறுகின்றனர். மந்திரம் ஆவதாகிய திருநீறு பெற்று நோய்நீக்கமடைகிறார்கள். வேளாளர்கள் நிலம் அளித்துள்ளனர். வணிகக் குழுக்கள் மகமைக் கொடை அளித்துள்ளன. இதற்கு ஆவணங்கள் உள்ளன.

அம்மடத்தின் தலைவர்களாகிய அருளாளர்கள் பல அற்புதங்களைச் செய்துள்ளனர். யாழ் கதிரைவேற்பிள்ளை , சூளை சோமசுந்தரநாயக்கர், ஈசான சிவாச்சாரியார் போன்ற பலர் தீட்சை பெற்றுச் சீடராக இருந்துள்ளனர்.

பல கல்வெட்டுக்கள் கனம்பட்டி மாணிக்கவாசகர் அவர்கள் அருளாட்சி நாளில் வெட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது எந்த மடத்திற்கும் இல்லாத புதுமை . ஆற்றுப்படை , தூது , சதகம் , மாலை , பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங்கள் உள்ளன. பல செப்பேடுகளும் ,

படடயங்களும , ஓலை ஆவணங்களும் , ஓலைச்சுவடிகளும் மடத்தில் உள்ளன.

கேரள மாநிலம் சித்தூர் ,பாலக்காடு , கொடுவாய் , கொல்லங்கோடு ஆகிய இடங்களுடன் மடத்துக்குத் தொடர்பு உண்டு. பல கொங்கு நாட்டு இலக்கியங்களில் புகழப்பட்டுள்ளனர்.

'' மண்டலத்தி லே விசைய மங்கை நகர் மாணிக்கப்
பண்டிதராம் எங்கள் குரு பாதம் மறவோமே''

என்பது ஒரு பாடல் பகுதி.

8.2 பேரூராதீனம் - வீர சைவ மடம்

வி. உமாபதி
கோயம்புத்தூர்.

நமது தமிழ்நாட்டில் தலை சிறந்து விளங்கிய அருளாளர் பலருள் தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளும் ஒருவர். இவர் தொண்டை நாட்டில் கி.பி.17 ஆம் நூற்றாண்டில் தோன்றி வீரசைவ நெறியை மேற்கொண்டொழுகியவர் எனக் கூறுவர்.

திருக்கயிலாயப் பரம்பரை ,திருவாவடுதுறை ஆதினத்தவரான துறையூர் சிவப்பிரகாச தேசிகரிடம் உபதேசம் பெற்றவர்.

'' தில்லைப்பதிமேய சிவப்பிரகாசனேயோ'' (வைராக்கிய சதகம் , தோ - 22)

''என் உளம்புக்க சிவப்பிரகாசன் என்கோ'' (வைராக்கிய சதகம், தோ - 49)

என வருவதனால் இதனை அறியலாம்.

அக்காலத்தில் வீரசைவ நெறியைப் பேணி வளர்த்துவந்த ஆதினங்களுள் பொம்மபுர ஆதீனம் சிறந்து விளங்கியது. அதில் சிவஞான பாலைய சுவாமிகள் எழுந்தருளி மக்களுக்கு அருள் வழங்கி வந்தார்கள். அவரைக் கண்டு வணங்கி அருள் பெற்ற சாந்தலிங்க சுவாமிகள் அவருடைய திருவருட் குறிப்பின்படி சிவப்பிரசாக சுவாமிகளின் தங்கை ஞானாம்பிகையம்மையைத் திருமணம் செய்து கொண்டனர்.

பின்னர்ச் சாந்தலிங்க சுவாமிகள் பல தலங்களையும் வழிபட்டுக் கொங்கு நாட்டையடைந்தனர். கொங்கு நாட்டில் அவிநாசி முதலிய தலங்களை வழிபட்டு இறைவனுடைய திருவருட் குறிப்பின் படி திருப்பேரூர்என்றும் தலத்தில் திருமடம் அமைத்துத் தங்கியிருந்தனர். இவ்வாறாகத் திருப்பேரூர்திருமடம் கி.பி.17ஆம் நூற்றாண்டில் சாந்தலிங்க

சுவாமிகளால் நிறுவப்பட்டதாகும்.

இம்மடத்தின் முதல் ஆதீன கர்த்தராகிய இவர் மக்கள் உய்யும் பொருட்குக் கொலை மறுத்தல் , வைராக்கிய சதகம் , வைராக்கிய தீபம் , அவிரோதவுந்தியார் என்னும் நூல்களை அருளிச் செய்துள்ளார்.

இத்திருமடத்தின் சார்பாகக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. இத்திருமடத்தின் ஆதீனத் தலைவராகத் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் இருந்து சமயப்பணியும் தமிழ்ப்பணியும் ஆற்றி வருகிறார்.

8.3 திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் சமுதாயத் தொண்டுகள்

கதிர்வேலு

பால்நினைந்தூட்டும் தாயாய் வந்து திருஞான சம்பந்தப் பெருமானின் தீந்தமிழ் கேட்ட உலகைக் காக்கும் உமையம்மை சிறுமியாய் வந்து கேட்ட இன்தமிழ் தான் குமரகுருபரரின் கொஞ்சும் தமிழ். ''ஆரியன் கண்டாய் ! தமிழன் கண்டாய் ! '' '' வடமொழியும் ,தென் தமிழும் ஆனான் கண்டாய் '' என்று வடக்கே சைவமும் ,தமிழும் பரப்பிய ஒரே திருமடம் திருப்பனந்தாள் ''ஸ்ரீ காசிமடம் '' தான் என்றால் மிகையாகாது .

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளால் ஏற்படுத்தப்பட்ட திருமடம் தான் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம். சைவத்திருமடங்களில் திருப்பனந்தாள் மடம் சில தனித்தன்மைகளை உடையது. அகில இந்தியாவையும் இந்துஸ்தானி மொழியையும் தெற்கிற்கு அறிமுகப்படுத்தியது. அறக்கட்டளைகள் நிறுவுவதில் அற்புதங்கள் செய்வது. தமிழ்மொழி வளர்ப்பிலும் , தமிழ் ஆராய்ச்சியிலும் ,தமிழ்ப்பண் ஆராய்ச்சியிலும் பல சாதனைகளைப் புரிவது. பல் ஆயிரக்கணக்கான தர்மங்கள் செய்வது. எண்ணற்ற திருக்கோயில்களுக்குக் குடமுழுக்குகளும் , உழவாரப்பணிகளும் செய்வது, பொது தருமங்கள் , அகதி நன்கொடைகள், தண்ணீர்ப்பந்தல் , குளியல் கட்டடம் , ஒளிவளர் விளக்குகள் , பசுப்பரிசு, கோ சம்வர்த்தனம் , படிக்காசு நிதி , கல்லெழுத்துத் தருமங்கள் புரிவது. திருமுறை வளர்ச்சிக்கும் , கல்வி அபிவிருத்திக்கும் , சைவசித்தாந்தத்தை உலகளாவப் பரப்பவும் , அன்னதானம் செய்யவும் வைத்தியப் பணிகளுக்கும் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு வரும் மடம் தான் திருப்பந்தாள் மடம் . பண்ணும் , பரதமும் , கல்வியும் , தீஞ்சொற்பனுவலும் , தமிழுலகம் போற்றும் வண்ணம். தொண்டாற்றும் திருமடம் ஸ்ரீ காசிமடம். மனிதகுல மேம்பாட்டிற்கும் பேதமற்ற சமூக

அமைப்பிற்கும் , மதநல்லிணக்க அடையாளத்திற்கும் , ஒருமைப்பாட்டிற்கும் , மனித நேயத்திற்கும் சின்னமாக அமைந்த திருமடம் திருப்பனந்தாள் காசிமடம்.

திருப்பனந்தாளைத் தவிர்த்து 1. சிதம்பரம் , 2. இராமேச்வரம் 3. ஸ்ரீவைகுண்டம் 4. ஆச்ரமம் 5. காசிஆகிய இடங்களில் மடங்களை அமைத்துக் காசி முதல் , கன்னியாகுமரி வரை மடங்கள் கொண்ட ஒரே திருமடம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் என்ற பாராட்டும் பெற்றது.

8.4 மராட்டியர் காலத்துச் சைவ மடங்களின் பணிகள்

மு. ரெ. கலைச்செல்வி
தமிழ்ப்பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டின் தென் கிழக்குக் கரையில் அமைந்துள்ள தஞ்சைப் பகுதியைக் கி.பி. 1676 முதல் 1855 வரை மராட்டிய மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். சுமார் 180 ஆண்டுகளாகத் தஞ்சையை 13 மராத்திய அரசர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர். இந்து சமயத்தின் காவலர்களாகத்திகழ்ந்த அவர்கள் அனைவரும் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாவர்.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆட்சி செய்த வளம் பொருந்திய காவிரி நாட்டின் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சைவ சமயத்தைப் பரப்புவதற்கு எனப் பல ஆதீனங்களும் , மடாலயங்களும்தோன்றிச் சைவ சமயத்தை வளர்த்து வருகின்றன. அவற்றுள் காஞ்சி காமகோடி மடம் , தருமபுரம் , திருவாவடுதுறை , திருப்பனந்தாள் மடம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இம்மடங்கள் சைவம் தழைக்கப்பாடுபட்டது மட்டுமன்றிச் சிவப்பணி , தவப்பணிகளோடு , கல்வி , கலை, தொழில், சமயம் , சமுதாயம் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இச்சைவ மடங்களுக்கும் தஞ்சை மராட்டியர்களுக்கும் இருந்த தொடர்பு , அவர்கள் பொறித்த மடத் தம்பிரான்களின் திருவுருவச் சிலைகள் , தம்பிரான்கள் மன்னர்களுக்கு அளித்த பரிசுகள் ஆகியவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது. மேலும் மராட்டியர்கள் மடங்களுக்கு அளித்த நிலக் கொடைகள் , கிராமங்கள் , சர்வமானியங்கள் , தானியங்கள் ,அறக்கொடைகள் ஆகியவற்றை ஆவணங்கள் , செப்பேடுகள் , கல்வெட்டுக்கள் ஆகியவற்றின் மூலமாக இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

8.5 இசை வளர்ச்சியில் திருவாவடுதுறை ஆதீனத்தின் பங்கு

முனைவர் இரா. கலைவாணி
தமிழ்ப்பல்கலைக்கழகம்

சைவ ஆதீனங்கள் சிவநெறி தழைத்தோங்கவும் சைவ சமயம் சிறந்து மிளிரவும் பல வழிகளிலும் இறைத்தொண்டு புரிந்து அரும்பணி ஆற்றி வருகின்றன. அத்தகைய சைவ ஆதீனங்களுள் காலத்தால் முந்தியது திருவாவடுதுறை ஆதீனமாகும்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் தமிழ் கற்றவர்கள் இசை கற்றவர்கள். இசையோடு தமிழ் கற்றவர்கள் பலராவர். இவர்களுக்கு இவற்றைக் கற்பித்தலின் வழி ஆதீனம் , தமிழுக்கும் இசைக்கும் தொண்டாற்றித் தமிழையும் , இசையையும் வளர்த்துள்ளது. இங்கு ,தமிழ் பயின்ற பலர் தமிழ்த் துறையில் சிறந்த வித்தகர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் இசை பயின்றவர்கள் பலருண்டு.இவர்கள் ஆதீனத்தின் வழிபாட்டிற்கும் திருவிழாவிற்கும் இசை நிகழ்ச்சியை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். கலைஞர்கள் இவ் வாதினத்தில் பாடுவதையே பெருமைக்குரியஒன்றாகக் கருதினர். இசையை இறைவனுக்கு அர்ப்பணித்து இசைத்தொண்டு புரியவும் தங்களது திறமையை முழுமையாக வெளிப்படுத்தவும் அக்கலைஞர்களுக்குத் திருவாவடுதுறை ஆதீனம் வழிவகுத்துக் கொடுத்துள்ளது.

பழந்தமிழ் நூல்களில் உள்ள இசைக்குறிப்புகளை எல்லாம் பாதுகாத்துச் சிறந்த அறிஞர்களைக் கொண்டு அவ்வப்போது நூல்களாகப் பதிப்பித்து இசை உலகிற்குப் புதிய சான்றுகள் பலவற்றை அளித்துள்ளது.

இசைக்கலைஞர்களையும் தமிழ் மூதறிஞர்களையும் அவரவர் திறமையறிந்து பாராட்டி அவர்களின் சிறப்பை வெளிக்கொணர்ந்தது.

இவ்விதமாக இசைக்கலைஞர்களை வளர்த்தும் இசை தொடர்பான செய்திகளைப் பதிப்பித்தும்இன்றைய இசை ஆய்வுகளுக்குத் தேவையான பல சான்றுகளை இசை வளர்ச்சிக்கு அளித்தும் திருவாவடுதுறை ஆதீனம் ஆற்றியுள்ள தொண்டுகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நுவல் பொருளாக அமைகிறது.

8.6 சைவ சமய வளர்ச்சிக்கு திருவாவடுதுறை ஆதீனத்தின் பங்களிப்பு

கு.திருமாறன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

இந்து சமய வரலாற்றில் மிகத் தொன்மை வாய்ந்த சமயமாகச் சிறந்து விளங்குவது சைவ சமயம். அக்கால மன்னர்கள் ஆட்சி முறையில், அவ்வவ் மன்னர்களால் போற்றப்பட்ட சமயங்கள் வளர்ச்சியடைந்தன.

கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை நின்றவர்கள் சமயக் குரவர்கள், திருஞான சம்பந்தர் , திருநாவுக்கரசர் , சுந்தரர் , மாணிக்க வாசகர் முதலானோர் ஆவர்.

பின்னர் களப்பிரர்கள் ஆட்சிக் காலத்தில் சைவ சமய வளர்ச்சியில் தேக்கநிலை ஏற்பட்டது. அக்காலங்களில் வீற்றிருந்த அரசர்களும் குறுநில மன்னர்களும் பௌத்தம் , சமணம் போன்ற மதங்களின் தாக்கத்தால் தொன்மைச் சமயமாம் சைவத்தை வளர்க்கத் தவறினர். பௌத்த மடங்களும் சமண மடங்களும் எழுச்சியுற்றிருந்தன.

பிற்கால சோழர்கள் காலத்தில் சைவசமயம் போற்றப்பட்டு எழுச்சியுறத் தொடங்கியது. சைவ சமயத்தைப் பரப்புவதற்கான சைவத் திருமடங்கள் தோன்றலாயின. இவ் வகையில் 14 - ஆம் நூற்றாண்டில் கும்பகோணத்திற்கு அருகே தோன்றியது திருவாவடுதுறை ஆதீனம் ஆகும்.

மெய்கண்டார் ,மாதவச் சிவஞான முனிவர் போன்றோர் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு அரும்பணி செய்தனர். அரிய சுவடிகள் சேகரித்து அவற்றைப் பாதுகாத்து பலருக்கும் பயன்படும் வகையில் வெளியிடப்பட்டன. இதன் தொடர்ச்சியாக சைவ சமயத்தைப் போற்றும் நூல்கள்

விடுதலைக்குப் பின் , அரசால் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தோற்றுவிக்கப்பட்ட பின் , திருமடங்களுக்கு வருவாயை அளித்த கோவில்கள் பல அரசின் தலையீட்டிற்கு உள்ளாயின.

திருமடங்கள் செய்துள்ள பணிகள் அளவு சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு அரசுகள் செய்துள்ளனவா .. இக்கால கட்டத்தில் ஆதீனங்களின் பணி இன்ன வகையில் அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்பது குறித்தும் இக்கட்டுரை அமையும்

8.7 செட்டிநாடும் திருமடங்களும்

N. வள்ளி
காரைக்குடி

செட்டிநாட்டைத் தாயகமாகக் கொண்ட நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் என்ற நகரத்தார்கள் சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனப் போற்றியவர்கள்.

18,19 ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் ஈட்டிய நகரத்தார்கள் தாங்கள் ஈட்டியதில் ஒரு பகுதியை மகமைப் பணமென எடுத்து வைத்து அதில் காலத்திற்கேற்ற பலவிதமான அறப்பணிகளைச் செய்தார்கள்.

முடிமன்னர் ஆட்சிக்குப் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழகக் கோயில்கள் ஒரு சில சைவத் திருமடங்களைத் தவிரப் பேணுவாரின்றி இருந்தபோது நகரத்தார்கள் சைவத்திற்குத் தங்களால் ஆன தொண்டினைச் செய்தார்கள். குறிப்பாகப் பாடல் பெற்ற தலங்களைத் தேடிச் சென்று திருப்பணி செய்தார்கள். தொழில்துறை காரணமாகச் சென்ற நாடுகளிலும் இந்து சமயத்தின் தூண்களாக விளங்குகின்ற ஆலயங்களை நிறுவி, அங்கெல்லாம் சைவத்தையும் , தமிழையும் திராவிடச் சிற்பக்கலை மரபையும் நிலை நாட்டினார்கள்.

தாங்கள் திருப்பணி செய்த கோயில்களை யொட்டிக் கோயில் வழிபாடுகள் சிறப்புற நடைபெறுவதற்காகவும் , கோயிலுக்கு வழிபட வரும் அடியார்களின் நலன் கருதியும் , கோயிலைத் தழுவிய குடிகள் , குடிகளைத் தழுவிய கோயில் என்ற அமைப்பில் பலவித ஏற்பாடுகளைக் கோயில் தழுவிய பணிகளாகச் செய்தனர்.

கோயில்களை ஒட்டி நந்தவனங்கள் , பசுமடங்கள் ,அன்னதான மடங்கள் ,சத்திரங்கள் , விடுதிகள் , ஊருணிகள் , தேவார திருவாசகப் பாடசாலைகள் ,வேத பாடசாலைகள் , பல்வகை மடங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தினர்.

மேற்கண்டவை சைவ , சமய வளர்ச்சிக்கு எவ்விதம் உறுதுணையாய் இருந்தன என்பதை விவரிப்பதே கட்டுரையின் நோக்கம்.

8.8 சைவத் திருமடங்களும் கிறித்தவத் திருமடங்களும்

ஆ.ஜான் துரை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

'' அன்பேசிவம்'', ''அன்பே கடவுள் '' ஆகிய கோட்பாட்டில் ஒன்றித்துச் சைவ சமயமும், கிறித்தவ சமயமும் மனுக்குல மாட்சிமைக் குத்திருமடங்கள் வழியே வழங்கிய பங்களிப்பு அளத்தற்கரியது.

இவ்வாய்வில் பண்டைத் தமிழகத்தின் கொங்கு நாட்டை எல்லைகளாகக் கொண்ட பகுதிகளில் தோற்றுவிக்கப்பட்ட சைவ , கிறித்தவ மடங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு காலக் கட்டத்திலும் இம்மடங்கள் சமயம் , கல்வி, மருத்துவம் ஆகியவற்றின்மூலம் சமுதாய மேம்பாட்டுக்கு ஆற்றிய பணிகள் குறிப்பிடத் தகுந்தவை. அவை ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்யப்படுகின்றன.

8.9 SAIVA MATHAS OF NADU NADU

Prof.S.Kadirvelu

In the Tamil country , Tondai Mandalam is not only the oldest; but also an important region. So goes the aphorism "Tondai Nadu Sandror Udaitthu", The heart of Tondai mandalam Nadu Nadu is an inner sub-division between the Southern Vellaru and the Southern Pennaiyar. According to Arnorld J. Toynbee certain regions of a nation was closely connected with great scholars ; religion and other human faculties. In this Nadu Nau the Saiva sect of Hindu Religion was very much popularised by various Mathas extinct and living eg, in Tirukoilur, Tiruvennai Nallur, Tiruvannamalai, Tirumanickuzhi, Tirunavallur, Tiruchopuram, Tirupathiripuliyur, Tirthnagiri, Thirumayilam; we have so many Mathas, under whose radiation the Saivism efflurencesed to international level and echoed. This paper tries to explain the services of Marai jnana sambadar, Tilagavathiyar, Meikandar, Ramaeinga Adigal of Vadalur, Jananiyar Adigalof Cuddalur, Janaprakasa Swamigal and Arumuga Navalar, Umapathi Sivachariyar of Chidambaram of the greatest Saivite sees

who popularised Saivism through the activities of those saints to propagate Saivism for universal brotherhood and human upliftment. In order to attract the common people pontiff of the Mathas conducted many religious schools in the temple and incepted important festivals, so that the people may get this participation and the great saints were patronised by the Mathas.

8.10 SOCIAL SERVICES OF SAIVA MUTTS IN EARLY THANJAVUR DISTRICT

T.PADMANABAN,
Tamil University ,

All religions try to spread their objectives among people concerned with the Soul. But the religions of the Western Countries realised that dealing with the Soul only was not sufficient and a religion should offer SOUP, SOAP to perpectuate the Soul. Attending of the social needs of the people became a part of religious institutions. Though Saivism and Saivic Temples where more in number in the early Thanjavur District, the statistics reveals that conversion from Saivism to Chiristianity was dominating in this District. When alanysed the reason behind the success of the Christianity was found out that they not only propagated religious services but also rendered Social Services to the Society providing Education. Employment and Medical facilities.

This strategy was followed by the Saiva Mutts of the early Thanjavur District. Social Services extended by these Mutts are described briefly.

1) DHARMAPURAM MUTT.

This Mutt had established a Library containing more than 500 Palmleaf Manuscripts and 12,000 printed books. It has books in nearly 20 languages. Even its contempary Saraswathi Mahal Library did not possess books in so many Languages. To provide educational services the Mutt has established many Educational Institutions. Gramaphone records of Devaaram and Correspondence Course on Saiva Sidhandham are worth mentioning.

2) THIRUVAVADUDHURAI MUTT

A Scholarly Library which U.Ve. Swaminatha Iyer worked as a Librarian, and many branch Libraries at various places; Publications of Religious Books; conducting of Schools and Hospitals are praise worthy.

3) THIRUPPANANTHAL SRI KASI MUTT

Establishing Sri Swaminatha Swamigal Senthamil College; maintaining of Sri Sakalakalaa Valli Library with many branch Libraries; Publication of religious books; offereing a prize for the first rank holder in Vidhwan Examination in the University of Madras; financial help for translation of religious works are noteworthy.

4) SRI SARANKA DESIKENDRA SWAMIGAL BIG MUTT, KUMBAKONAM

This Mutt has collected books on Veera Saivaism and Maintains it Otta Kuthar Library.

Besides Religious services, The Social Services of Saiva Mutts attract the society towards Saivism.

8.11 SAIVA MONASTERIES AND THE TAMIL SOCIETY

Dr. C. K. Sivaprakasam
A.V.V.M.Sri Pushpam College,Poondi,

The long history of Saivism in the Tamil country bear a testimony to the origin and grwoth of various schools of Saivism and their institutions in the Tamil Country. The Saiva Monasteries of different denominations grew into full fledged institutions having their own identity in the medieval period. A focus is mainly made on the Saiva monasteries and their impact on the medieval Tamil Society. Tamil country witnessed the multifarious activities of the Saiva mathas widely distributed in space and time. They provided the institutional basis fo the spread of Bhakti ideology. The preceptors of Saiva monasteries of various schools were active in ecclesiasticl work and attracted both the elite and the masses into thei fold. These institutions

consolidated the social basis of the Saiva religion through their educational, welfare and Charitable deeds.

The importance of the medieval Saiva monastic movement lies in its liberal traditions. Indeed the Catholicity and the humanistic flexibility of Saivism were very much represented by Saiva monasteries.

The Tamil Saiva mathas of Thanjavur region in the 12th - 13th Centuries were the pioneer institutions of the great Saiva Adheenams of Thanjavur district of the later period which voice the Saiva Siddhanta of the South. Predominently headed by the non-Brahmin spiritual heads, these Adheenams devoted themselves to Tamil Philosophy and religion. The religions and spiritual oriented institutions attained caste overtones in the 17th and 18th Centuries and served the society with a different purpose.

அமர்வு ஒன்பது

சிவ மூர்த்தங்கள்

9.1 சிவமூர்த்தங்களுள் நடராச மூர்த்தி

Dr. A. Anandanatarajan
Annamalai University.

உலகவுயிர்களின் உய்திக்காகச் சிவபரம்பொருள் அருவம் , அருவுருவம் , உருவம் ஆகிய திருமேனிகளை எடுக்கும். உருவத்திருமேனிகளாகிய மகேசுவரமூர்த்தங்கள் இருபத்தைந்து என்றும் , அறுபத்து நான்கு என்றும் அருளாளர்கள் கூறுவர்.

மகேசுவர மூர்த்தங்களுள் நிருத்த மூர்த்தியாகிய நடராசப் பெருமானது வடிவ அமைப்பு எப்படியுள்ளது என்பதையும் , ஆடற்கோலத்தைத் திருமூலர் முதலிய அருளாளர்கள் எங்ஙனம் கண்டு காட்டுகின்றனர் என்பதையும் , நடராச மூர்த்தி எங்ஙனம் சைவ சித்தாந்த மெண்கண்ட நூல்களில் காட்சியளிக்கிறார் என்பதையும் ஓரளவு அலசி ஆராயும் நோக்கத்தில் அமைவதே இக்கட்டுரை.

நுண்ணணுவிலிருந்து பேரண்டம் வரையிலுள்ள எல்லாப் பொருள்களும் ஒருவகை வியத்தகு இயக்கத்தில் உள்ளன. உலக இயக்கங்களின் உயிர்த்துடிப்பு பொற்சபையில் நடம்புரியும் நடராசனது திருக்கூத்தால் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இயக்கம் என்பது உலகில் காணலாகும் மாபெரும் அறிவியல் தத்துவமாகும் ; இவ்வுண்மையை நடராசமூர்த்தத்தில் பொருத்திப் பார்த்தால் , '' அணுவில் தாண்டவம்'' அறையில் ஆடி அம்பலத்தில் ஆடுதல் , '' உலகு அம்பலவிதம் (உலகம் பலவிதம்) '' முதலிய சொற்றொடர்களுக்குப் பொருள் புலப்படும்.

மெய்கண்ட நூல்களும் பிறவும் நடராசமூர்த்தத்தில் படைத்தல் , காத்தல் , அழித்தல் , மறைத்தல் , அருளல் ஆகிய ஐந்தொழில்களைக் காணுந்திறமும், திருவைந்தெழுத்துடன் அத்திருமேனியைப் பொருத்திக் கூறும் பாங்கும் வழிவழியே போற்றற்குரியவை.

மேலும் , நடராசர் சிதாகாசத்தில் 'லயசிவம்' ஆகவும் , மந்திர மூர்த்தி நிலையில் 'சதாசிவம்' ஆகவும் , ஆலயங்களில் அதிகார மூர்த்தி நிலையில் 'சபாபதி' ஆகவும் விளங்குகிறார். பஞ்ச உலோகங்களை அளவுடன் சேர்த்து , அக்கலவையால் உருவாக்கிய நடராசர் திருமேனி , அருளாளர்களேயன்றி அறிவியலுலகமும் வியக்கும் வண்ணம் உள்ளது.

9.2 இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள்

செல்வி. சோ.கி. கல்யாணி
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

எந்தவொரு சமயத்திலும் சித்தாந்த வேதாந்தக் கருத்துகள் அனைவரையும் சென்றடைவது கடினம். எளிய, படிப்பறிவற்ற மக்களையும் சமயத்திற்குள் உள்ளிழுக்கப் புராணக்கதைகள் பயன்பட்டன. மற்றொரு புறம் அருளாளர்கள் தமது அனுபூதியைப் பாடல்களில் பொதிந்து வைத்தனர். மேற்கூறப்பட்ட நிகழ்வு ஒருவரிசைப்படி நிகழவும் கூடும். அதாவது அருளார்கள் பாடல்களில் அனுபூதியாக வெளிப்பட்டவை , புராணக் கதைகளாகிச் சித்தாந்த உண்மைகளாக நிலைபெறலாம். சிலசமயம் இவ்வரிசை முறையானது மாறவும் கூடும். காலத்தின் துணைக்கொண்டு இவ்வரிசை முறையை முறைப்படுத்தலாம்.

உருவமற்ற இறைவனைச் சான்றோர் உருவம் உடையவனாகக் கற்பித்தனர். அவற்றிலொன்று நடராசர் உருவம். 'ஆடத்தெரியாத கடவுளை நான் நம்பத்தயாராயில்லை' என்றார் நீட்சே. தமிழக எல்லைக்குள்ளேயே இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்களும் இயற்றப்பெற்றமை தமிழரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது. சைவ சாத்திரங்களிலும் குமரகுருபரர் பாடல்களிலும் இடம்பெற்ற தாண்டவக்கோலம் பற்றிய உண்மையானது , புராணக்கதைகளிலும் , உலோகத்திருமேனிகளிலும் எவ்வாறு எளிமையாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது என்று காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

இறைவனது செயல்கள் ஐந்தொழிலாகப் பகுக்கப்பட்டு இருந்தாலும் ,இறைவனது நோக்கம் , திருவுருவங்கள்அனைத்தும் அருளையே முதன்மையாக உடையன என்பது துணிபு. அவ்வகையில் இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்களின் விளக்கம் ; இயற்றப்பெற்றஇடம் ; நோக்கம் ; புராணக்கதைகள் ; இலக்கியச் சான்றுகள்; உலோகத்திருமேனிகள் வழி இங்கு விளக்கப்பெறுகின்றன. அவ்வகையில் உலகச் சகோதரத்துவத்திற்கும்மனிதகுல மேம்பாட்டிற்கும் இறைவனது தாண்டவத் திருமேனிகளும் வாயிலாக அமைந்துள்ளதைக் கட்டுரை நிறுவுகிறது.

9.3 சைவப் படிமக்கலை - ஊற்றுக்களும் ஓட்டங்களும்

ப. கோபாலகிருஷ்ணன்

சைவத்தில் படிமக்கலை தனக்கெனச் சிறப்பான மரபுகளையும்வரலாற்றையும் கொண்டது. இக்கலைமரபின் ஊற்றுக்கள் பற்றிய கருத்துக்களை வகுத்தும் தொகுத்தும் கூறுவது இக்கட்டுரையின் முதல் நோக்கமாகும். இத்துறை பற்றிப் பல்வேறு கருத்தோட்டங்கள் காணப்படுகின்றன. வடநாட்டிலும் தென்னாட்டிலும்கிடைக்கப்பெறும் பல்வேறு சான்றுகளின் துணைக்கொண்டுஇக்கலை மரபின் ஊற்றுக்கள் இவ்வாய்வுக் கட்டுரையில் ஆராயப்படும்.

சைவப்படிமக்கலையின் அடிப்படைகளை எடுத்துக் கூறுவது அடுத்த சிறப்பம்சமாகும். இப்படிமங்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களாகிய மரம் , கல், உலோகம் போன்றவற்றின் முக்கிய அம்சங்கள் சுருக்கமாக ஆராயப்படும். சைவப்படிமங்களில் முக்கியத்துவம் பெறும் கையமைதிகள் , படிமநிலைகள் , தலைக்கோலங்கள் , அணிகலன்கன், அடையாளப் பொருட்களாகிய ஆயுதங்கள் போன்ற கலையம்சங்கள் பற்றியும் இவ்வாய்வுக் கட்டுரையில் விளக்கங்கள் இடம் பெறும்.

சைவப்படிமங்களைக் காலங்காலமாகக் கலை நுட்பத்தோடு உருவாக்கிக் கலை உலகிற்கு அர்ப்பணம் செய்த சிற்பக் கலைஞர்களின் கலைத் தொண்டின்மேன்மை பற்றியும் இக்கட்டுரையில் ஆராய்ப்படும்.

சைவப் படிமக்கலையில் முக்கியத்துவம் பெறும் சில படிமங்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு அவற்றின் சமய, தத்துவ , கலையம்சங்கள் எடுத்துக் கூறப்படும் . சிவலிங்கம் , தட்சணா மூர்த்தி, இலிங்கோற்பவர் , நடராசர் , சோமாஸ்கந்தர் போன்ற படிமங்களின் சுருக்கமான விளக்கங்கள் இடம் பெறும்.

சைவப்படிமக்கலையைக் கலையுலகுக்கு அறிமுகம் செய்து வைத்த ஆய்வாளர்கள், கலைஞர்கள் பற்றியும் இவ்வாய்வுக்கட்டுரையில் எடுத்துக்கூறப்படும்.

தொகுத்துக் கூறுமிடத்துச் சைவப்படிமக்கலையின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் கிடைக்கப்பெறும் சான்றாதாரங்களைப் பயன்படுத்திக் கலைக்கண்ணோட்டத்தில் இவ்வாவுக் கட்டுரையில் வகுத்துக் கூறுவதே முக்கிய நோக்கமாகும்.

9.4 சிவமூர்த்தங்கள்

தி.வே. கோபாலய்யர்

'' சிவ '' என்ற சொல் இருக்குவேதத்திலேயே 57 இடங்களில் பயிலப்பட்ட சொல் எனினும் , அச்சொல் தொல்காப்பியத்திலோ , சங்க இலக்கியத்திலோ , காரைக்கால் அம்மையார் பிரபந்தங்களிலோ இடம் பெறவில்லை. ஆனால் சிவபெருமான் உருவத்திருமேனியையும் திருவிளையாடல்களையும் குறிக்கும் முக்கண்ணன், காரி உண்டிக்கடவுள், மணிமிடற்று அண்ணல் , பைங்கட்பார்ப்பான் , சலதாரி , ஆதிரையான் முதலிய பல சொற்றொடர்களைச் சங்க இலக்கியம் பயன்படுத்தி உள்ளது. அவன் வடிவம் பற்றிச் சங்க இலக்கியம் யாழ்கெழுமணிமிடற்று அந்தணன், ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை ஒருவன் , கொன்றைத்தாரன் மாலையன் கண்ணியன் , முந்நூல் மார்பினன், நுதலது இமையா நாட்டத்தன் , பிறைசூடி , கணிச்சிவேல் முத்தலைச் சூலக்கையினன் , செய்யோன் , செஞ்சடையன் , புலித்தோல் உடையன், விடக்கறைமிடற்றன் , பார்வதிபாகன் , காளைவாகனன், காளைக் கொடியன், சிறந்தை இரட்டும் விரலன் , காடமர் ஆடலன், கொடுகொட்டி பாண்டரங்கம் காபாலக்கூத்தினன் , கங்கையைத்தரித்தவன் , பூதப்படையினன் , கல்லால் நிழலன் , மலைவில்லில் பாம்புநாண் கொளீஇ ஒருகணை கொண்டு மூஎயில் செற்றவன் , கூற்றுவனை அடர்த்தவன் என்ற செய்திகளைக் குறிப்பிடுகின்றது.

தேவாரம் இவற்றோடு அந்தகன் ,காமன் , சலந்தரன் , தக்கன் முதலியவர்களை அழித்து , பிரமன் தலைஒன்றனைக்கொய்து அதன்கண் இல்லந்தோறும் பிச்சை ஏற்றமை , சிங்கம் புலி , யானை ஈருரி போர்த்தமை, ஆமையோடு , பன்றிக்கொம்பு , பாம்பு , பஞ்சவடி, பட்டு , ஒற்றைக்கோவணம் அணிந்தமை , மானையும் தீயையும் ஏந்தியமை , இருவர் காணாவகையில் தீத்தம்பம் ஆயினமை, திருமாலை வாகனமாகவும் அம்பாகவும் , தேவியாகவும் கொண்டமை , விசயன் பின்வேடனாய்ச் சென்றமை , அடியார்பலருக்கு அவ்வப்போது உதவியமை போன்ற பல செய்திகளைக் குறிப்பிடுகின்றது. வீரட்டத்தலங்கள் பலவற்றில் அவ்வவ்வீரச் செயல்பற்றிய உலோகச் சிலைகள் உள்ளன. சோமாஸ்கந்தவடிவம் பல்லவர் கோயில்கள் பலவற்றிலும் , கலியாணக் கோலம் திருமறைக்காடு , திருவீழிமிழலை முதலிய பலதிருத்தலங்களிலும் இலிங்கத்திருமேனியின் பின்னர்க்கருவறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. சிவபெருமானுடைய பல திருவிளையாடல்கள் பற்றிய பல வடிவங்கள் வாகாடகர்காலத்து எல்லோரா முதலிய இடங்களிலும் ,தேவாரகாலத்துக்குப்

பிற்பட்ட கருவறைச்சுவர்கள் ,தூண்கள் , கோபுரங்கள் முதலியவற்றிலும் காணப்படுகின்றன.

சிவமகாபுராணம், சிவபராக்கிரமம் , உபதேசகாண்டம் முதலிய நூல்களில் சிவபெருமானுடைய 64 மூர்த்தங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் 40 பற்றிய குறிப்புக்கள் தேவாரத்தில் உள்ளன.

9.5 சங்க இலக்கியங்களில் தட்சிணா மூர்த்தியின் தொல்கூறுகள்

மு. சுதர்சன்
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

சிவ வழிபாடு சிந்துவெளி நாகரிகத்திலிருந்து தொடங்குகிறது. தமிழகஇலக்கியச் சான்று நிலையில் இப்போது கிடைத்துள்ள சங்க இலக்கிய நூல்களே தொன்மையானவை. இவற்றுக்கும் சிந்து வெளி நாகரிகத்திற்கும் இடையிலான தொடர்பினல் ஓர் இடையறவு காணப்படுதல் அறிஞர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சங்க நூல்களில் தொன்மைச் செய்திகள் பல இடம் பெற்றுள்ளன. சிவன் பற்றிய செய்திகள் புறநானூறு , பதிற்றுப்பத்து , அகநானூறு ,கலித்தொகை , பரிபாடல் ஆகியவற்றில் சிதறிக் காணப்படுகின்றன.

புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தில் சிவன் பற்றிய செய்தி மையக் கருத்தாக அமைகின்றது ; கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் கொற்றவையுடனான பகுதிச் செய்திகளாக அமைகின்றது. பிற இடங்களில் பாடலின் மையக் கருத்தை விளக்குவதற்கான துணைமைக் கூறாகவே சிவன் பற்றி செய்திகள் அமைந்துள்ளன. இக்கருத்துக்களில் ஆலமர் செல்வன் பற்றிய கருத்துக்கள் இக்கட்டுரையில் சிறப்பாகச் சுட்டப்படுகின்றன.

சைவ சித்தாந்தமானது தென்னிந்தியாவிற்கே சிறப்பாக உரிய தமிழர் சமயமாகும். தென்னிந்தியாவிலே வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழம் பெரும் சமயம் சைவம். ஆரியர் வருகைக்கு முற்பட்ட இச்சமயம் தமிழ் மக்கள் நெஞ்சத்தில் நிறைந்து விளங்குகிறது.

- ஜி.யு. போப்

சைவத்தைப் போலவே யோகமும் சூரியருக்கு முற்பட்ட மக்களிடையே தோன்றியதாகும்.

- சர்ஜான் மார்ஷல்

இக்கூற்றுக்களின் பினனணியில் சங்க இலக்கிய ஆலமர்

செல்வனை இக்காலத் தட்சிணா மூர்த்தியின் தொல்வடிவக் கூறாகக் கருதக் கூடிய வாய்ப்பினை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

9.6 மணிவாசகர் காட்டும் சிவன் போகவடிங்கள்

முனைவர் சி.திருச்சிற்றம்பலம் .
அரசு ஆடவர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்.

சைவசமயக் கருவூலமாம் பன்னிரு திருமுறையுள் எட்டாவது திருமுறையாக வைத்து எண்ணப்பெறும் திருவாசக நூலையருளிய மணிவாசகர் காட்டும் சிவன் போக வடிவங்கள் என்னும் பொருள் குறித்த இக்கட்டுரையின் முதற்பகுதியான "மணிவாசகர் வாழ்வும் வாக்கும் " எனும் பகுதியில் மணிவாசகர் வரலாறு - காலம் - பாடற்றொகைச் சிறப்பு ஆகியவை குறித்து ஆராயப்பெற்றுள்ளமையுடன் மணிவாசகர் வாழ்வில் இறைவன் உருக்கொண்டு ஆற்றிய உதவிகள் பற்றியும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

அடுத்து, திருவாசகப் பாடல்களில் சிவபெருமான் அருவவடிவங்கள் சுட்டிக் காட்டப்பெற்றுள்ள திறம் குறிப்பாக ஆராயப்பெற்றுள்ளது.

மூன்றாவது பகுதியில் சிவபெருமான் அருவுருவடிவங்கள் பற்றிய திருவாசகத் தொடர்கள் குறிக்கப்பெற்று ஆராயப்பெற்றுள்ளன.

நான்காவது பகுதியில் சிவபெருமானுடைய உருவ வடிவங்களில் போகவடிவங்கள் , யோகவடிவங்கள் பற்றிய தொடர்கள் ஆராயப்பெற்றுள்ளன.

ஐந்தாவது பகுதியில் சிவபெருமான் சக்தியுடன் இணைந்து அருள் தரும் போக வடிவங்கள் பற்றிய மணிவாசகரின் பாடற் குறிப்புகள் விரிவாக ஆராயப்பெற்றுள்ளன. குறிப்பாக மாதொரு பாகன்வடிவம் குறித்தும் - அவ்வடிவில் இடம்பெற்றுள்ள அம்மையின் பாதாதி கேச வருணனைத் தொடர்கள் பற்றியும் சிறப்பாக ஆராயப்பெற்றுள்ளன.

கட்டுரை முடிவில் இதுகாறும்ஆராயப்பெற்ற மெய்ம்மைகள் தொகுத்தளிக்கப்பெற்றுள்ளன.

9.7 ஆனந்த நடராஜர்

டி. பாலசுப்பிரமணியன்

ஆனந்த நடராஜர் தத்துவமும் அணுவியல் விஞ்ஞானம் மற்றும் உண்மைகளும் எங்ஙனம் ஒத்துப்போகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். அறிவியல்படி அணுவின் அமைப்பு முறையினை இக்கட்டுரை விரிவாக விளக்குகிறது. அதன்பின் ஐந்தொழில் புரிந்த இறைவனின் பேராற்றல் , பேரறிவு , அருள்வடிவம்ஆகியவைகளை மிகத் தெளிவாக இக்கட்டுரை விளக்குகிறது. இறைவன் ஒன்றாய் , உடனாய், வேறாய் இருக்கும் தன்மையினை எடுத்துக்காட்டி அது எங்ஙனம் அறிவியல் கருத்துக்களோடு ஒத்துப்போகிறது என்பதை ஆய்வியல் நோக்கில் இக்கட்டுரை நிறுவுகிறது.

9.8 அட்ட மூர்த்தங்கள்

முனைவர் அரு. மருததுரை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

சைவ வழிபாட்டில் சிவபெருமானின் பல்வேறு வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் மக்களிடையே சிறப்பிடம் பெற்றுள்ள வடிவங்களான அட்ட மூர்த்தங்களைப் பற்றி இக்கட்டுரை சிந்திக்கின்றது.

'' ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அருளுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்'' என்பது அப்பரடிகள் கூற்று. இறைவனின் திருவடிகளைக் கண்டு நமக்குக் காட்டியவர்கள் அருளாளர்கள். மூவர் முதலிகள் தம் கண்ணினும் கருத்தினும் நெஞ்சினும் பதிந்த பல வடிவங்களைத் தங்கள் பாடல்களின் வழி நமக்குக் காட்டியருளியுள்ளனர்.இவ்வடிவங்கள் சமய வரலாற்று நோக்கிலும் விரிவாக விளக்கப் பெற வேண்டிய நிலையில் உள்ளன.

எண்பெரும் வீரச்செயல் வடிவங்களான பிரமன் தலையைக் கொய்தமை , அந்தகாசுரனை அடர்த்தமை, முப்புரம் எரித்தமை, சலந்திரனைத்தடிந்தமை , யானையை உரித்தமை, காமனை எரித்தமை , காலனை உதைத்தமை ஆகிய வரலாற்று வடிவங்கள் மூவர் முதலிகள் வலியுறுத்திய வழி நின்று வடிவச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் சிந்திக்கப்பெறும்.

வீர வடிவங்களின் வழியாகப் பெறப்படும் மெய்ப்

பொருட்கருத்துக்கள் சான்றோர் துணைக் கொண்டு விளக்கப்பெறும். இன்றைய வழிபாட்டு நிலையில் மக்களிடையே இவ்வரலாறுகள் பெற்றுள்ள இடம் சிந்திக்கப்பெற்றுத் தலச்சிறப்புக்கள் விளக்கப்பெறும்.

திருவுருவ வழிபாட்டில் மூவர் முதலிகள் மக்களை ஈடுபடச்செய்து நெறிப்படுத்திய திறம் ஆராயப்பெறும். சிற்ப ஆகம நூல்களின் நெறிநின்று வடிவங்களின் பொருண்மை நோக்கப்பெறும். எண்ணிறந்த வடிவங்களை இறைவன் கொண்டிருந்தாலும் மரபு வழியாக இவ்வெட்டு நிகழ்ச்சிகளைக் குறிக்கும் வடிவங்கள் சமய வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றதற்கான நிலை விளக்கப்பெறும்.

எண்பெரும் வீரச்செயல்கள் , வீரச்செயல்களின் வழியாகப் பெறலாகும்தத்துவக் கருத்துக்கள் , வடிவ விளக்கங்கள் , மூவர் தரும் வடிவக்குறிப்புக்கள், வழிபாட்டில் இவ்வரலாறுகளும் வடிவங்களும் பெற்றுள்ள இடம் என்ற வகையில் இக்கட்டுரையின் பெருட்பண்பு அமையும்.

9.9 கொங்கு நாட்டுச் சிவத்தலங்களிலுள்ள சிவமூர்த்தங்கள்

செ. விசுவநாதன்
எஸ்.ஆர்.கே. கல்லூரி, கோயம்புத்தூர்

கொங்கு நாட்டிலுள்ள அவிநாசி , அன்னூர் , திருமுருகன் பூண்டி, பேரூர் , வடமதுரை போன்ற தலங்களிலுள்ள சிவமூர்த்தங்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும் கொங்கு நாட்டிலும் சைவ சமய வளர்ச்சி மற்றும் சிவன் வழிபாடு எத்துணை அளவு மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதையும் அறிகின்றவகையில் இக்கட்டுரை அமைகின்றது. சிவபெருமானின் உருவ அமைப்பு , இலிங்கத்தின் அமைப்பு முறை , இலிங்கத்தின் வகைகள் ஆகியவை பற்றி இக்கட்டுரை பல கருத்துக்களை விளக்குகிறது.

9.10 அம்பலத்தான் ஆடல்

ஸ்வர்ணா சோமசுந்தரம்
கோயபுத்தூர்

இறைவன் நடத்தும் ஐந்தொழில் கூத்து உயிரின்பொருட்டே நடைபெறுகிறது என்னும் கருத்தினை உண்மை விளக்கம், சிவஞானசித்தியார் போன்ற சாத்திர நூல்களின் துணைக்கொண்டு இக்கட்டுரை தெளிவாக விளக்குகின்றது. சிவஞானம் உதித்ததன் பயன் பின்னைப் பிறவி அறுத்தல் என்னும் கருத்து திருவுந்தியார் , சித்தியார் பாடல்கள் மூலம் விளக்கப்படுகின்றது. ஸ்தூல பஞ்ச கிருத்தியம், சூக்கும பஞ்ச கிருத்தியம் ,அதிசூக்கும் பஞ்ச கிருத்தியம் ஆகிய கருத்துக்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. திருமூலர் கருத்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் கண்ட தில்லைக்காட்சி , திருநாவுக்கரசர் கண்ட காட்சி , மாணிக்கவாசகர் கண்ட நிருத்த தரிசனம் ஆகியவை மேற்கோள்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

9.11 A UNIQUE IMAGE OF HARIHARA

Dr. T. Chandrakumar
Tamil University

The composite image of Siva and Visnu is called Harihara or Sankara Narayana. There are several images in Tamil Nadu which speak of the unifiction of the two aspects retaining individual characters and emblems. Saiva egalitarian conceived this form to avert the disputes of frenzied supremacy of one on other and to establish oneness of allpervading Supreme God. There are Saiva temples having images consecrated or shrines dedicated. Harihara is therefore, included as one of the Gods in Saiva pantheon and hence occupy a place in Saiva inconography and cononical lierature. In other words, this form has undoutedly a strong Saiva flavour. There are a few instances in which Harihara is also included in Vaisnava contexts and convictions.

This paper, based upon an unique image of Harihara, aims to analyse how the form of Harihara is viewed from the Vaisnavite angle taking examples from literature and art.

அமர்வு பத்து

திருமுறைகள்

10. 1 திருஞான சம்பந்தர் தேவாரத்தில் அகப்பொருள் கூறுகள்

சா. அங்கயற்கண்ணி
திருநெல்வேலி

சங்க இலக்கியம் அகம் , புறம் எனுமிரு பாகுபாடுகளை உடையது. சங்க இலக்கியத்திற்குப் பின் எழுந்த பக்தி இலக்கியமும் அகப்புற மரபுகளின் கூறுகளை உட்கொண்டே வளர்ந்து வந்துள்ளது. தொல்காப்பியமும் அகப்புற மரபுகளை விரிவாகப் பேசுகின்றது.

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் முதல் மூன்று திருமுறைகளை அருளிய ஆளுடைய பிள்ளையாகிய திருஞான சம்பந்தரது பாடல்களில் காணப்பெறும் இலக்கியக் கொள்கைகள் குறித்த பல அய்வுகள் வெளிவந்துள்ளன. அகப்பொருள் கூறுகளின் தாக்கம் அமையப்பாடுதல் என்பது அக்கொள்கைகளுள் ஒன்றாகச் சுட்டப்பெறுகின்றது.

அகப்பொருள் கூறுகளாகத் தொல்காப்பியமும் பிற இலக்கண நூலாரது விளக்கங்கள் மற்றும் திருஞான சம்பந்தர் தேவாரமான முதல் மூன்று திருமுறைகளில் உள்ள சில பதிகங்களில் இடம்பெறும் அகப்பொருள் கூறுகளையும் , சங்க இலக்கிய அகநூலான குறுந்தொயில் உள்ள அகப்பொருள் கூறுகளையும் ஒப்பிட்டாய்தல் என்பனவும் இவ்வாய்விற்குரிய பொருள்களாகக் கொள்ளப் பெறுகின்றன.

10.2 அன்பு மணியும் அருள் வாசகமும்

பேராசிரியர் முனைவர் இரா. அரங்சகாமி

செ. சௌந்தரராசப் பெருமாள்
பாரதியார் பல்கலைக்கழகம்

இன்றமிழ் ஓர் ஒப்பற்ற பக்தி மொழித் தமிழ்ச்சமயம் - சைவ சமயம். ஒரு பெருங்கொடை. நாயனமார் நால்வருள் மாணிக்கவாசகர் படைப்பு திருவாசகம் தமிழ் அன்பு நெஞ்சினைக் கனியவைக்கும் ஒரு

பெரிய சமயக் களஞ்சியம்.

அன்பு நிறை மணிவாசகர் நம் உள்ளங் கவர் கள்வர் - திருவாசகப் பெருமை நீங்கா நினைவு மிக்கது. பிறவி நீக்கும் மாமருந்து திருவாசகத்தேன்.

பன்முகப் பார்வை - (1) அன்பு நெஞ்சம் (2) இறையுண்மை (3) உவமை நலன் (4) நாடகப்பாங்கு (5) மெயப்பொருள்

(1) அன்பு நெஞ்சம்

தாயின் சிறந்த தயாபரன் - அன்பானொடு யாவருங்காணப் பட்டிமன்றம் ஏற்றிய நாயகர் ஞாலத்துள்ளே நாயினுக்குத் தவசிட்டு ஆட்கொண்ட அருமை நாயகர், பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை எனச் சாதி குலம் பிறப்பு அறுத்துச் கற்றாவின் மனம் போலக் கசிந்துருகி வேண்டி நிற்றல்

(2) இறையுண்மை

' அம்மையே அப்பா ஒப்பிலா மணியே' ! என்று பரவுதல் என் நெஞ்சில் நீங்காதான் - ' சொற்பதம் கடந்த தொல்லோன் ', 'இன்பமும் துன்பமும் இல்லான் ' வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி நின்று யாம் எனது எனும் செருக்கு இல்லான் - தாயினும் சாராப் பரிந்து உலகு புரிந்தந்த ஆன்மீக வள்ளல் - பிறப்பு ,இறப்பு மாயசக்தி தொடக்கம் அறுத்தோன் பால் நினைந்து ஊட்டும் சாவப் பரிந்து நின்று அன்பு சொரிந்தோன் - ஆண்டான் அடிமைத் தொடர்பு

(3) உவமை நலன்

தமிழ் அணிவகையுள் உவமை நலங்கள் மிக்க ஒன்று திருசவாகம். அலைகடல் - பித்தன் - மெழுகு - பசுமரத்தாணி என்பதைப் பெண்ணையும் - இருதலைக் கொள்ளியின் உள்ளெறுப்பு ,எறும்பிடை நாங்கூழ் ,மத்துறு தயிர் ,கடலினுள் நாய் நக்கியாங்கு .. ,வெள்ளத்துள் நாவற்றியாங்கு .. ,வாழை மரத்தின் மனம் கனிவித்தல் என்ன -இவ்வாறு உலகப் பொருள்களில் உவமைகள் சிறத்தல்

(4) நாடகப் பாங்கு

நாடமே உலகு. திருவெம்பாவையின் பாடல்களில் நாடக நயம். சிறுமியர் உரையாடல் போக்கும் நிலையும் , நாடகப் பாங்கினை விளக்கும் மாணிக்க வாசகர் உள்ளம் -

(5) மெய்ப்பொருள்

திருவண்டப் பகுதி - பிறவிப் பெருங்கடலுள் அஞ்செழுத்தின் புணை - உள்ளக் கருவை என்றும் கண்டிலா நாயகன் காட்டும் மெய்ப்பொருள் தத்துவம். வினைப் பிறவி போக்கும் மெய்ப்பொருள் நலன். மெய்ப்பொருள் காணும் மாணிக்கவாசகர் சிந்தையை உளராகக் காணும் பொது நோக்கு - ஓர் உயரிய கண்ணோட்டம்.

10.3 திருநாவுக்கரசருடைய பக்திச் சிறப்பு

செல்வி சி. அருண்மொழிச் செல்வி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

நாயன்மார்களுள் சிறப்பு வாய்ந்தவர் திருநாவுக்கரசர் ஆவார். பொதுவாகத் திருநாவுக்கரசருடைய பக்தியின் சிறப்பு எங்ஙனம் உள்ளது என்பது பற்றியும் , சிறப்பாக அவர்காட்டும் பக்தியின் வழிப் பக்தன் எங்ஙனம் உலகக்கட்டிலிருந்து விடுபட்டு , சிவனது பெருமையை அறிந்து,'சிவானுபவம் ' பெறுவான் என்பது பற்றியும் இக்கட்டுரை நுணுகி ஆராய்கிறது.

ஆழ்ந்து , அகன்று , நுட்பமாக அமையும் பொருட்டு, திருநாவுக்கரசருடைய தேவாரத்திலிருந்து 'திருவங்கமாலை' , 'நமச்சிவாயத்திருப்பதிகம்' என்னும் இரண்டு பதிகங்கள் மட்டும் இக்கட்டுரைக்குக் களங்களாக அமைகின்றன. திருநாவுக்கரசரின் இப்பதிகங்கள் சிவனின் இயல்பு , திருவைந்து மந்திரத்தின் சிறப்பு , உலகின் நிலையாமை , பக்தனின் தாழ்ந்த தன்மை , பக்தன் பக்தியின் வழிப் பெறும் அனுபவம் , இறைவனுடைய ஓங்கிய புகழ் முதலியவற்றைச் சீரிய முறையில் செப்புகின்றது. இப்பதிகங்களில் சிறப்பாக 'ஓம் நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் துன்பக் கடலினைக் கடப்பதற்குத் தோணியாக அமைந்து , சிவனருள் கூடிட வழியாக அமைந்திருத்தலின் பெருமை பேசப்பட்டிருக்கின்றது. மேலும் இறைவன் உயிர்களிடத்து ஏற்றத்தாழ்வுகளைப் பார்க்காமல் ,உயர்ந்த குலம்,தாழ்ந்த குலம் என்று எண்ணாமல் அனைத்து உயிர்கட்கும் தன் அருட்கடாட்சத்தை வழங்கிக் கொண்டிருத்தலின் சிறப்பு இக்கட்டுரையில் ஆய்வு நிலையில் எடுத்தியம்பப் பெறுகிறது.

பொதுவாகச் சைவசித்தாந்தத்திலும் , சிறப்பாகத் திருநாவுக் கரசருடைய இப்பதிகங்களிலும் பேசப்பெறும் பக்தியின் சிறப்பை ஆய்வதால் , ஒருவன் உலகின் பாற்பட்ட உறவுகள் அழிந்து பட் டு ,

அழியா நிலைப் பேறுடைய இறைவனிடம் ஆட்படுதலால் அவனுக்கு இவ்வுலகிலும் இறையுலகிலும் கிடைக்க வேண்டிய அனைத்துப் புருஷார்த்தங்களும் குறைவறக் கிடைத்திடும். வாழ்க்கையில் ஒருவன் எவ்வளவுதான் துன்பம் அடைந்தாலும் அவன் சிவனை 'நமச்சிவாய' மந்திரத்தின் வழியாக நினைத்துக் கொண்டே இருப்பானேயாயின் அவனுக்கு அனைத்துத் துன்பங்களும் நீங்கிப் பேரின்பப் பயணம் அமையும். இவ்வாறாக அமையும் பக்தியால் ஒருவனது உள்ளத்தில் சிவன் அமர்ந்து ,அவனுடைய உடல் மற்றும் உள்ளத் தொடர்புடைய செயல்பாடுகளை முறைப்படி நடத்தி வைத்து , 'அவனருளாலேயே அவன் தாள் வணங்கி' என்னும் பேருண்மைக்கு ஏற்றபடி, பக்தனைத் தன்னை வணங்க வைத்து அவனுக்கு அருள் பாலிக்கின்றான்.

மேலேகண்ட பக்தியின் கூறுகள் ' இக்கட்டுரையில் ஆராயப்பெற்று, இத்தகுப் பெருமைவாய்ந்த பக்தி இன்றைய சமுதாயத்தையும் , தனிமனிதனையும் முறைப்படுத்தி வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் என்பது நுணுகப்பெறும்.

10.4 தேவாரத்தில் சைவ சமய மெய்யியற் சொற்கள்

டாக்டர் சபா. அருணாசலம்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி , தேவகோட்டை

பல்லவர் காலத்தில் தோன்றிய தேவாரம் ,திருமந்திரம் , திருவாசகம் இவற்றிற் காணப்படும் சைவ சமயம் பற்றிய கருத்துக்கள் வளர்ச்சியடைந்து 2 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிவஞான போதம் முதலிய சைவ சமய மெய்யியல் நூல்களாக வெளிவந்தன என்று நிலவும் கருதுகோளை ஆய்வதே இக்கட்டுரையின்நோக்கம்.

மணிமேகலைக் காப்பியத்தில் தான் முதன் முதல் சைவ சமய மெய்யியல் கருத்துத் தொகுப்பு குறிக்கப் பெறுகிறது.

(1) அட்ட மூர்த்தங்களில் உறைதல் (2) உயிரும் யாக்கையும் கட்டி நிறுத்துதல் (3) கலை உருவம் ஆதல் (4) உலகங்கள் அனைத்தையும் படைத்து விளையாடுதல் (5) உலகங்கள் அனைத்தையும் அழித்துத்துயர் தீர்த்தல் (6) தன்னின் வேறாகத் தானொன்றில்லாமை எனக் கூறுப்படும் இறைவனது இயல்புகளை எல்லாம் தேவார மூவரும் விளக்கமாகப் பாடியுள்ளனர். பிற்கால மெய்யியல் நூல்களின் தோற்றத்திற்கும் விரிவுக்கும் இவையே நிலைக்களம் ஆகின்றன.

இறைவன் (பதி), உயிர் (பசு) ,மும்மலங்கள் (பாசம்)

இம்மும்பொருள் பற்றிய குறிப்புக்கள் , விளக்கங்கள் , இவற்றைக் குறிக்கும் மெய்யியற் சொற்கள் பின்னர்த் தோன்றிய மெய்யில் நூல்களில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன - அல்லது தோவரத்தில் கூறப்படும் கருத்துக்களுக்கு மெய்யியற் சொற்களைப் புதிதாக மெய்யியல் நூல்கள் உருவாக்கிக் கூறுகின்றனவா - என்பதை ஆய்வதே கட்டுரையாளர் கருதுகோளாகும்.

பின்வருமாறு கட்டுரை அமையும்

(1) தேவாரத்திற்கு முன்னைய சைவ சமய மெய்யியல் கருத்தக்கள் (2) முப்பொருள் உண்மையும் மூவர் தேவாரமும் (3) இறை , உயிர் , அருளல் இயல்புகளைக் குறிக்கும் மெய்யியற் சொற்கள் தொடர்கள் (4) தேவாரமும் சைவ சித்தாந்த மெய்யியல் நூல்களும் (5) ஆய்வு முடிவுகள்.

10.5 பெரிய புராணத் தோற்றத்தின் சமுதாயப் பின்புலம்

க.ப. அறவாணன்
புதுவைப் பல்கலைக்கழகம்

களப்பாளர் ஆட்சிக்காலத்திலும் அதையடுத்த இடைக்காலப் பாண்டியர் ஆட்சியின் போதும் மதுரை மண்டலத்தில் சமணம் வெற்றி நடையிட்டுக் கொண்டிருந்தது. பாண்டிய மன்னர்களும் சமணர்களுக்கு ஆதரவாயிருந்தனர்.

சமண , பௌத்த மத வீழ்ச்சியும் , வட இந்தியாவில் எழுச்சி பெற்ற குப்தர் கால வைதிக சமயத்தின் செல்வாக்கும் குறிப்பிடத்தக்கன. பல்லவர் எழுச்சியுற்ற கி.பி. 4 ஆம் நூற்றாண்டு முதல் வேதக் கல்வியும் சமஸ்கிருதக் கல்வியும் சமயத் துறையிலும் ,ஆட்சித்துறையிலும் செல்வாக்குப் பின்னணியில் கற்பிக்கப்பெற்றன. தமிழகத்தில் வைதிக சமயத்துடன் வர்ணாசிரமச் சமுகக் கோட்பாட்டினையும்நிலை நாட்டிப் பேணிக் காப்பதே அரசரின் முதன்மையான கடமை எனப் பல்லவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர். வடஇந்திய வைதீக சமயம் தமிழரின் மரபுச் சமயத்தையும் , தன்னகத்து உள் வாங்கிக் கொண்டு வளர்ந்தது. தமிழர்தம் மரபுச் சமயம் தன் அடையாளத்தைக் கிட்டத்தட்ட இழந்தது.

இந்நிலையில் வைதிக சமயத்தை வெளிப்படையாக முற்றும் புறக்கணிக்க முடியாத சூழ்நிலையில் , தமிழர் மரபுச் சமயத்தைத் தனித்து அடையாளம் கண்டு மேலேடுக்கும் முயற்சி சைவ சமயக் குரவர்களான அப்பர் , திருஞானசம்பந்தர் , சுந்தரர் ,மாணிக்கவாசகர் ஆகியோரால்

மேற்கொள்ளப்பெற்றது.

சோழர்கள் ஆட்சிக் காலத்தில் மரபு சார்ந்த தமிழரின் சைவ சமயம் முன்னணி இடத்தைப் பிடித்தது. ஓரிருவர் தவிர ஏனைய சோழ அரசர்கள் அனைவரும் சைவ சமயத்தினராக இருந்தனர் என்பது சுட்டத்தக்கது. சோழர் காலத்தில் தமிழர்களைப் பல்வேறு தளங்களில் உயர்த்தி எடுத்துச் செல்லும் முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. அரசியல் தளம் , பொருளாதாரத்தளம் , ஆடல் , பாடல் முதலான கலைத்தளம் , இலக்கியப் படைப்புத்தளம் , சமய நிறுவனத் தளம் ஆகியவற்றில் அன்னோரின் முயற்சி தெளிவான முன்கருதுதலுடன் நிகழ்ந்தது. இக்கருதுதலுக்கும் , அதன் வெற்றிக்கும் இடையே தமிழகத்தில் ஆழப் பதிந்து இருந்த சாதி வேற்றுமை, அரசர்க்கும் , அடித்தளத்தார்க்கும் இடையே நிலவிய தொலைவு ஆகியவற்றை விலக்குவதும் தன் சமயத்தைப் பற்றிய பெருமிதத்தை உணரச் செய்வதும் அவற்றை மக்களிடையே பரப்புவதும் கட்டாயமாக இருந்தன. சமயம் , இலக்கியம் எனும் இரு பின்னணியில் சைவ நூல்கள் பன்னிரு திருமுறை எனும் தொகுப்பு / காப்பு அடையாளத்துடன் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப் பெற்றன. முதலாம் இராசராசன் தொகுப்பிக்க நம்பியாண்டான் நம்பி இவற்றைத் தொகுத்தார். கி.பி.12 ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரால் எழுதப் பெற்ற பெரிய புராணம் 12 ஆம் திருமுறையாக இணைக்கப் பெற்றது.

பெரிய புராணம் எழுதப் பெற்றதற்காகச் சொல்லப்பெறும் கதையை வரலாறாக எடுத்துக் கொள்ள இயலாவிட்டாலும் அக்கதை உணர்த்தும் பின்னணிமெய்ம்மையை மறுக்க இயலாது.

1.சோழ மன்னர் சமணக் காப்பியமான சிவகசிந்தாமணி அழகில் ஆழ்ந்து கொண்டிருந்ததை மடைமாற்றம் செய்யச் சேக்கிழார் பெரிய புராணம்படைத்தார்.

2 சமணத்தில் பெரிதாகப் போற்றப்பெறும் ஸ்ரீ புராணத்தின் எதிரொலி பெரியபுராணம் என்பர்.

3. கி.பி. 6,7,8 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அப்பர் , திருஞானசம்பந்தர் , சுந்தரர் ஆகியோரையும் , பிறரையும் ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்குப் பிறகு நிவை கூர்வது சமய எழுச்சிக்காகவே இருத்தல் வேண்டும்.

4. பெரியபுராணத்தில் அரசர் முதல் திருநீலகண்டர் வரை வலிய, எளிய நாயன்மார்கள் சம நிலையில் பாடப் பெற்றிருப்பது சுட்டத்தக்கது.

5. நந்தர் எனும் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்தவரை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதாகப் படைக்கப்படுவதும் கருதத் தக்கது.

பெரிய புராணம் என்ற படைப்பு இலக்கிய நோக்கிற்காகப் படைக்கப்பட்டது என்பதை விடச் சமய நோக்கிற்காகவும் , சமுதாய சமத்துவ நோக்கிற்காகவும் படைக்கப்பட்டது என்று கூறுதலே மிகப்

பொருத்தமாக இருக்கும்.

10.6 திருமுறை பாடுவதில் சில முயற்சிகள்

ந. ஆறுமுக ஓதுவார்
சென்னை

முயற்சியின் நோக்கம் 1) இசையை வளமைப் படுத்துதல்
2) மாணவர் பரம்பரையை உருவாக்குதல்

விளக்கம் : இந்த ஆய்வுக் கட்டுரை இருவகையாக அமைகிறது. ஒன்று சொல்லில் முயற்சி. மற்றது இசையில் முயற்சி.

ஒவ்வொரு பாடலாக எடுத்துக் கொண்டு ,அதில் வரும் முயற்சிகளை வார்த்தையால் விளக்கி , பின்னர் அதைப் பாடிக் காட்டி , விளக்குவேன்.

ஒவ்வொரு பாடலில் எந்த இடத்தில் திருத்தம் தேவை என்று பாடிக்காட்டி , அது ஏன் தேவை என்று சொல்லி , அதில் நான் செய்த முயற்சி என்ன என்பதையும் தெளிவாகப் பாடிக்காட்டுவேன்

இப்படி ஒவ்வொரு பாடலாக எடுத்துக் கொண்டு , அதில் உள்ள முயற்சிகளை விளக்குவதே இக்கட்டுரையின் வடிவம் ஆகும்.

முக்கிய குறிப்பு

இந்த முயற்சியினால் தற்போது பாடிவருகிற பண்ணில் எந்த மாற்றமும் இல்லை. அந்த அந்தப் பாடலுக்குரிய பண்தான் இசைக்கப்படுகிறது. ஆனால் பண் (ராகத்தை) வளப்படுத்தி இசைக்கப்படுகிறது.

ஆய்வுக்குரிய சில பாடல்கள்

1) வேயுறு தோளிபங்கள் - திருஞானசம்பந்தர் - பியந்தை காந்தாரம்
2) தோடுடையான் ஒரு காதில் - திருஞானசம்பந்தர் - குறிஞ்சி
3) பித்தா பிறைசூடி - சுந்தரர் - இந்தளம்.

10.1 திருமுறைகளும் வெண்பா யாப்பும்

இராகவன் முத்து
காரைக்குடி

திருமுறை இலக்கியங்களில் பற்பல வகை யாப்புகளும் அணிகளும் இடம்பெற்றுள்ளன. யமகம் , மடக்கு , உருவகங்கள் , உவமைகள் இவற்றைத்திருமுறைப் பாடல்களில் பயின்று மகிழ்வும் வியப்பும் எய்தலாம். திருமுறைகள் பன்னிரண்டிலும் குறுந்தொகை , தாண்டகம் , விருத்தம் ,நேரிசை , அகவல் , வெண்பா முதலிய யாப்புப் பாடல்கள் கண்டு போற்றி ஓதி உணரத் தக்கனவாய் அருளப் பெற்றுள்ளன.

வெண்பா யாப்பில் உள்ள பாடல்கள் எட்டாம் திருமுறையில் திருவாசகத்தும் பதினோராம் திருமுறையிலும் மட்டுமே காணப்பெறுகின்றன. மணிவாசகர் வழங்கிய வெண்பாப்பாடல்கள் (திருத்தசாங்கம் 10 ம்திருவெண்பா 11ம் பண்டாய நான்மறை 7ம்) மொத்தம் 28 ஆகும்.

பதினோராம் திருமுறையில் வெண்பாப் பாடல்கள் நிறையக் கிடைக்கின்றன. அவற்றில் அந்தாதி , இரட்டைமணிமாலை , மும்மணிக்கோவை , நான்மணி மாலை முதலாய சிற்றிக்கிய வகைகள் வெண்பாக் கனி பழுத்த சுவைத் தருக்களாக நின்று அருள் நிழல் வழங்குகின்றன.

திருமுறை ஆசிரியர்களில் மொத்தம் பதினொருவர் வழங்கிய வெண்பாக்கள் மொத்தம் 650 ஆகும். இவ்வெண்பாத் திருமுறைகள் யாவிலும்நேரிசை வெண்பாக்களே மிகுதி ; எதுகை , மோனைகளும் காய்ச்சீர் மிகுதி இன்மையும் , வகையுளி இன்மையும் ஆகிய வெண்பா யாப்பின் பேரழகுகள் இவற்றில் மிகமிக எளிதில் இயற்கையாக '' யாற்றொழுக்கு'' நேர்த்தியுடன் இனிமை நிறைய இடம்பெறும். வெண்பாக்களின் தனிச் சொல் அமைந்த நேர்த்தியும் தனிச் சொல்லின் எதுகை இயையும் போற்றுதற்கும் வியத்தற்கும் பின்பற்றுதற்கும் உரியன.

மகுடமாகிய வெண்பாவின் ஈற்றடி , ஆசிரியரின் வித்தகம் காட்டும் .திருமுறை வெண்பாக்கள் செழுமையான இலக்கிய ஒளி வீசுவன என்பதும் ஈற்றடி மகுடங்களின் பெருமையால் விளங்கும்.

திருமுறை வெண்பாக்கள் நடையால் எளியன. அவற்றின் மொழிப்பொருள் வகையால் பரம்பொருளின் பண்புகள் முதலிய சாத்திரக் கூறுகளும் பேசப்பெறுவன ஆகும். வெண்பாக்களில் திருமுறை இலக்கியத்துக்குரிய தனிப்பெருமையாகிய கற்பனை , உவமை , உருவகம் முதலிய செழுமைப் பகுதிகளும் மிகமிக நிறைவாக இடம்பெற்று

இலக்கிய இன்பமும் பத்திச் சுவையும் கலந்து ஊட்டுகின்றன.

வெண்பாத் திருமுறைகளில் நெஞ்சறிவுறூத் துறையும் , அகப்பொருள்ப் (தூதுப்) பகுதிகளும் அருளாளர்களின் வாழ்வியல் அகச் சான்றுகளும் சொல் விளையாட்டுக்களும் நிறைந்து மிளிர்கின்றன. இறை முன்னிலைப் பாடல்கள் ஆகிய வெண்பாக்கள் நினைந்து ஓதி நெகிழப்பெரிதும் துணை செய்வனவாம்.

திருமுறை வெண்பாக்களை ஓதி மகிழ்வதால் பெறலாகும் பயன்களும் நலனும் அளப்பரியன. அதனால் பெருகலாம் தவம் , பேதைமை தீரலாம். பழுத்த தமிழ்ப் புலமையும் இறையருள் பெருந்திருவும் பொருந்தலாம்.

10.8 உலக சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டுக்கும் திருமுறைகள்

இரா. இராசசேகரன்
சென்னை

இக்கட்டுரை உலகச் சகோதரத்துவத்திற்குச் சைவம் , மனித மேம்பாட்டுக்குச் சைவம் என்னும் இரு பிரிவுகளில் பகுக்கப்பட்டுள்ளது. சாதி, தகுதி , தொழில் , பால் வேறுபாடு அற்ற சமுதாயத்தை உருவாக்குவது பற்றியும் தொண்டு , உலக ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பற்றியும் கூறப்படும் கருத்துக்கள் முதல் பகுதியில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. தனிமனித மற்றும் குடும்ப உறவில் அல்லல் நீங்கி நல்லன பெருக்கும் மனித இன மேம்பாட்டுக்குரிய சிந்தனைகள் திருமுறைகளில் வெளிப்பட்டுள்ள நிலை இரண்டாவது பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. குடும்ப வாழ்க்கை முறை பற்றியும் , சமூக உறவுகள் பற்றியும்திருமுறையில் கூறப்பட்டுள்ளஆக்கபூர்வமான கருத்துக்கள் இக்கட்டுரையில் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

10.9 திருமுறைகளின் சிற்றிலக்கியங்களில் இறைத்தன்மை

முனைவர் இரெ. இராச பாண்டியன்
திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவாரூர்

தெய்வச் சிவனடியார்கள் பாடிய பாடல்களின் தொகுப்புகள் பன்னிரண்டு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் நாற்பத்தேழு சிற்றியலக்கிய வடிவங்கள் அடங்கியுள்ளன. அந்தச் சிற்றிலக்கியங்கள் ஒவ்வொன்றும் தாம் மேற்கொண்ட இலக்கிய வடிவங்கள் வழியாக இறைவனின் கருணையை வெளிப்படுத்துகின்றன.

திருமுறையார்கள் சித்தாந்தக் கருத்துகளில் துறைபோகியவர்கள் தாம். எனினும் , திருமுறைகள் தோத்திர நூல்கள் என்ற காரணத்தால் சித்தாந்தக் கருத்துகளை அங்கொன்றும் இங்கொன்றுமாகப் 'பாலில் படு நெய் போல் ' பாடியுள்ளனர். அவர்கள் சித்தாந்தத் தன்மையுடன் இறைவடிவைத் தங்கள் பாடல்களில் வடித்துக் காட்டியுள்ளனர்.

சிவமும் சக்தியும் வேறு வேறு அல்ல ; இரண்டும் ஒன்று தான். செயலற்று இருக்கும் வடிவைச் சிவம் என்றும் செயலாற்றும் போது அவ்வடிவைச் சக்தி என்றும் கொண்டாடுகிறோம். இது சித்தாந்த முடிவு. ஆதலால், சிவத்தையும் சக்தியையும் ஒன்றாக்கி 'அர்த்த நாரீசுவரர் திருவுருவம்' முதன்மையுடையதாகச் சிற்றிலக்கியங்களில் போற்றப்பட்டுள்ளது.

இறைவன் ஒருவன். அவனில் பேதங்கள் இல்லை. அவனே ஏகனும் அனேகனுமாக இருக்கிறவன் என்பது சித்தாந்த முடிவு.

உயிர்களின் பால் அளவற்ற கருணைகொண்டவன் இறைவன். உயிர்களுக்கு அருள்புரியும் திருக்கருணையால் அவன் அவ்வுயிர்களைத் தடுத்தாட் கொள்ளும் அருட்கொடையாளன் என்பது சித்தாந்த சாரம். இறைவனின் இத்தன்மையைத் திருமுறையாளர்கள் தங்கள் திருப்பதிகங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் பாடியுள்ளனர்.

ஆக்கல் , காத்தல் , அழித்தல் ஆகிய முத்தொழில்களுள் சங்காரத் தொழில்புரியும் சங்கரனே முழுமுதற் கடவுள் என்பது சித்தாந்த முடிவு. ஏனைய , இறைவடிவங்கள் அனைத்தும் பிறப்பும் இறப்பும் பெற்று அதனால் வினையாற்றி வாட, சிவபெருமான் ஆதி அந்தம் அற்றவனாகக் காட்சி அளிக்கிறான்.

அயனும் மாலும் அறியாத மேனியன் சிவன். அறிவானாகவும் அறிவிப்பானாகவும் அறிவாகவும் அவனே விளங்குகின்றான். இருசுடராகவும் ஆகாயமாகவும் நிலமாகவும் நீராகவும் வளியாகவும் இயமானாகவும் தோன்றுகிறான்.

இன்று நமக்கு எளிதில் காட்சி தந்து அருள்புரியும் சிவன் , அன்று

திருமாலுக்கும் நான்முகனுக்கும் அளக்க இயலாத் தன்மையன் ஆனவன்.

சிவன் அன்பென்னும் வலைக்குள் அகப்படும் மலையானவன். ஆணவத்தை அழிக்கும் ஆற்றல் ஆனவன் என்பதைத் திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தில் கண்ணப்பரை ஆட்கொண்டதையும் கயிலை மலையைப் பெயர்த்த இராவணனின் கையைப் பெயர்த்ததையும் திருமுறையார்கள் சிந்தித்துள்ளார்கள்.

எந்த வடிவமாய் இருந்தாலும் அந்த வடிவத்தின் தன்மைக்கேற்ப அதில் தங்கும் தண்ணீரைப் போல இலக்கியத்தின் எல்லாத்தன்மைகளிலும் பொருந்திக் கருணை வழங்குபவன் இறைவன். சிற்றிலக்கியக் கடலில் உப்பாகக் கலந்து நிறைந்து விளங்கும் சிவனின் தன்மைகளில் சில துளிகளை இந்த ஆய்வில் கண்டோம்.

10.10 திருமுறைகளில் சீர்திருத்தச் சிந்தனைகள்

முனைவர் பெ. இராமலிங்கம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தனி மனிதர்களின் கூட்டுறவாலான அம்மைப்பே சமுதாயம் ஆகும். சமுதாயம் சீராகச் செயல்படவும் சமுதாயத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படவும் சமுதாயத்தினுள் பல்வேறு அமைப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றே சமயம் ஆகும். சமயம் குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட சமூகவியலாளர்களும் மானிடவியலாளர்களும், சமயம் பல்வேறு சமுதாய, தனிமனிதச் செயல்பாடுகளைக் கொண்டுள்ளமையை விளக்குவர்.

இச் சமயத்தின் அடிப்படையில் தோன்றியனவே பக்தி இலக்கியங்கள் ஆகும். சமுதாயத்தில் காணப்பட்ட சாதிமுறை அடிப்படையிலான வேறுபாடுகள் , பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பால் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் , சமுதாய மதிப்புகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் ஆகியவற்றைக் கண்ணுற்ற இறை அருளாளர்கள் இத்தகைய சமுதாயத் தீங்கு விளைவிக்கும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றி , மக்கள் அனைவரையும் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழச் செய்து , இறையன்பில் ஈடுபடுத்தி மறுமையில் பேரின்பப் பெருநிலையை எய்தச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் தமிழ்ச் சமுதாயத்தில் பக்தி இயக்கம் தோன்றியது. இப்பக்தி இயக்கத்தில் ஈடுபட்ட சைவ சமய அருளாளர்களால் இயற்றப்பட்டனவே திருமுறைகள் என அழைக்கப்படுகின்றன.

இத்திருமுறைகளில் இறைவனின் பெருமைகளைக் கூறுமிடத்தும் உலகியல் நிலைகளை விளக்குமிடத்தும்அடியார்களின் பண்புகளைச் சுட்டுமிடத்தும் பல்வேறு சமுதாய , பொருளாதார , சமய , அரசியல் , பால் அடிப்படையிலான சீர்திருத்தச் சிந்தனைகள்இடம்பெறக் காணலாம். தனிமனித நிலையிலும் சமுதாய நிலையிலும் திருமுறைகளில் அறிவுறுத்தப்பெறும் சீர்திருத்தச் சிந்தனைகளை இனம் கண்டு விளக்கும் நிலையில் இக்கட்டுரை அமைகின்றது.

10.11 திருமூலர் தத்துவத்தில் மனித நேயம்

முனைவர் எஸ். இராஜேந்திரன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

உலகில் தோன்றிய உயிர்களுள் மனிதன் ஒருவனே உயர்ந்தவனாகக் கருதப்படுகின்றான். மனிதன் மட்டும் உலகையும் ,தன்னையும் அறிந்து அதற்கேற்ப வாழ்கையை அமைத்துக் கொள்ளும் அறிவுத்திறனைப் பெற்றுள்ளான். மனிதனின் வாழ்வும் மேம்பாடும் அவனது கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஒரு மேம்பட்ட வாழ்வை அளிக்கத்தக்க கொள்கைகளில் மனித நேயம் ஒரு சிறந்த கொள்கையாக விளங்குகின்றது. மனித நேயம் என்பது , மனிதனை மையப்படுத்தியும் , மனிதனின் பிரச்சினைகளுக்கு முதலிடம் கொடுத்தும் மானிட வாழ்வை மேம்படுத்துகின்ற ஓர் உயரிய கருத்தாகும். இக்கருத்து திருமூலரின் திருமந்திரத்தில் பரந்து காணப்படுகின்றது. இத்திருமந்திரத்தின் அடிப்படையில் திருமூலரின் மனித நேயத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சர்வ சமய சமரச நோக்கு , மனித குலம் முழுவதையும் ஒன்றாகக் காணும் ஒருமைக்காட்சி , எல்லாக் கோவில்களிலும் ஒரே தெய்வத்தைக் காணுகின்ற பார்வை , அஹிம்சை நெறி முதலிய கோட்பாடுகள் , திருமூலரின் தத்துவங்கள் மனித மேம்பாட்டிற்கு எவ்வளவு உதவுகின்றன என்பதற்கு ஆதாரங்களாகும். மேலும் மனித சேவையே மகேசன் சேவை , சமுதாயத் தொண்டே இறைவழிபாடு என்று பகர்கின்ற திருமூலரின் தத்துவங்கள் மனித நேயத்தை வெள்ளிடை மலை எனக் காட்டுகின்றன.

‘‘ சித்திரங்களும் , ஓவியங்களும் அமைந்த மாடங்களையுடைய கோவிலில் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளை காணிக்கையாகச் செலுத்தினால் அது நடமாடும் உடம்பாகிய கட்டிடத்தில் வாழும் இறைவனுக்கு ஒப்பாகி அடியார்களைச் சாரா. ஆனால் நடமாடும்

அடியார்க்கு நாம் ஒன்று கொடுத்தால் -அது படம் ஆடும் மாடக் கோயிலில் இருக்கும் இறைவனைச் சாரும் '' என்ற திருமூலரின் மனித நேயக் கொள்கை மனிதனைத் தெய்வமாக்கி , மனித சேவையைத் தெய்வ வழிபாடாக்கி , உலக சகோதரத்துவத்திற்கும் , மனித மேம்பாட்டிற்கும் வழி வகுக்கின்றது.தற்காலத்திற்கு மிகவும் தேவையான மனித நேயக் கொள்கை திருமூலரின் பாடல்களில் பொதிந்துள்ளதை இக்கட்டுரை ஆய்கிறது.

10.12 அப்பர் தேவாரத்தில் சமூகக் கட்டுப்பாட்டுச் சிந்தனைகள்

முனைவர் தா. ஈசுவரபிள்ளை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தனி மனிதர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அமைப்பே சமுதாயம் ஆகும். சமுதாயம் சீராகச் செயல்படவும் , சமுதாய ஒற்றுமை காக்கப்படவும் , சமுதாய உறவுகள் நன்கு பேணப்படவும் சமுதாய ஒழுங்கு தேவை. சமுதாய ஒழுங்கை நிலை நாட்டத் துணைபுரியும் காரணிகளில் சமுதாயக் கட்டுப்பாடு (Social Control) இன்றியமையாததாகும்.

சமூகக் கட்டுப்பாட்டுச் செயலிகள் என மக்கள் வழக்காறுகள் , ஒழுக்கவிதிகள் , சமுதாய மதிப்புகள் என்பன சமூகவியலாளர்களால் குறிப்பிடப்பெறுகின்றன. சமூகக் கட்டுப்பாட்டைப் பேணுவதில் ஒரு சமுதாயததின் பண்பாடும் இன்றிமையாத பங்காற்றுகின்றது. சமூகக் கட்டுப்பாட்டைப் பல நிலைகளில் சமூகவியலாளர்கள் வகைப்படுத்திக் காட்டுகின்றனர்

சமுதாயக் கட்டுப்பாட்டு வழி முறைகளாக அழுத்தம் (Pressure) இணங்குவித்தல் (persuation), பயன்கள் (rewards), தண்டனை (Punishment), எச்சரிக்கை (warning), கருத்தேற்றம் (suggestions)என்பன சமூகவியலாளர்களால் குறிப்பிடப்பெறுகின்றன.

சமுதாயத்தில காணப்பெறும் நிறுவனங்களில் (Institutions) சமயமும் ஒன்று ஆகும். சமயம் பற்றி ஆராய்ந்த சமூகவியலாளர்கள் அது குழு ஒற்றுமையை நாடுவோர்க்கு வாய்ப்பளித்தல் , சமுதாய ஒற்றுமையைக் காத்தல் , சமுதாய ஒட்டும் தன்மையைப் பேணுதல் , சமுதாய மதிப்புகளைக் காத்தல் , சமுதாய நிலைப்புத்தன்மைக்குப் பாடுபடல் , பண்பாட்டைப்பேணுதல் , சமூகக் கட்டுப்பாட்டை உருவாக்கல் முதலான பல்வேறு சமுதாயச் செயல்பாடுகளைக்

கொண்டுள்ளமையை விளக்குகின்றனர்.

இவ்வகையில் சமயம் சமுதாய நிறுவனம் என்ற நிலையில் அது இறை உணர்வை ஊட்டுதல் , இறைப்பற்றைவளர்த்தல் இறைவன் பெருமைகளைப் போற்றுதல் என்ற நிலைகளில் மட்டும் நின்றுவிடாது சமுதாயமும் , சமுதாய உறுப்பினர்களாகிய தனிமனிதர்களும் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய சிந்தனைகளையும் வெளிப்படுத்தக் காணலாம்.

அப்பர் பெருமானின் சிந்தனைகள் சமூகவியலாளர்கள் கூறும் சமூகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளுடன் எவ்வாறு ஒத்துக் காணப்படுகின்றன என்பதை ஆராயும் நிலையிலும் , சமயம் என்பது சமதாயக் கட்டப்பாட்டுக்குத் துணை புரியும் சமுதாய நிறுவனமே என்பதை நிறுவும் நிலையிலும் இவ்வாய்வு அமைகின்றது.

மேலும் , இக்காலத்தில் சமூகவியல் அறிஞர்களால் கூறப்பெறும் சமுதாய நலச்சிந்தனைகளும் வழிமுறைகளும் ஏறக்குறைய 1300 ஆண்டுகட்கு முன்னரே அப்பர் பெருமானால் வலியுறுத்தப்பெறும் சிறப்பும் இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

10.13 திருவாசகத்தில் பத்தி நெறி

பொ.நா. கமலா
சிவகாசி

தோற்றுவாய்

அன்பு பல்வேறு நிலைகளில் பல்வேறு பெயர்களைப் பெறுகிறது. ஆண்டவன் மாட்டு அடியார் செலுத்தும் அன்பு முதிர்ச்சி பத்தி. மாணிக்கவாசகர் இறைவன் மீது பத்தி செலுத்தியவர். அவர் திருவாசகத்தில் இறைவனைப் பத்தியினால் வாழ்த்தி வழிபடும் பல நிலைகளையும் விளக்கியுள்ளார். மனம் , மொழி, மெய் ஆகியவற்றைத் தனித்தனியாகக் கொண்டும் , முக்கரணங்களையும் அவனுக்கே உரிமையாக்கியும் வழிபட்டுள்ளார்

இறைவன் திருவடிப்பேற்றைப் பெற அடிமையாகவும் , சேயாகவும் தோழனாகவும் , நாயகியாகவும் நின்று அழுது அழுது அவனருளைப் பெற முயன்ற மாணிக்கவாசகரது பத்திநெறிகளை விளக்குவது திருவாசகம்.

1. அடிமை நெறி

ஆட்கொண்ட அண்ணலின் ஆணைக்கு அடங்கி நடப்பது

அடிமைக்கு அழகு. 'காயத்திடு',வதும் 'கழற்கீழ் வைப்ப'தும்அவன் பொறுப்பு எனத் தனக்கென்று இச்சை யொன்றில்லாது பத்திப்பணிவோடு விளங்கியவர் வாதவூரர். 'அடிமை சால அழகுடைத்தா'க ஆற்றிய அடிகளார் உடல் , பொருள் , ஆவி அனைத்தையும்அவனுக்கே ஒப்புவித்தவர்.

2. சேய்நெறி

தாயன்பினும் சிறந்தது இறையன்பு என்பது மணிவாசகர் கருத்து. சிவபெருமான் திருவடிகளைக் குழவி நிலையில் நின்று சிக்கெனப் பிடித்துத் தனக்கு அருளுமாறு வேண்டுகிறார் அடிகளார். கற்றாவின் மனம் போலக் கசிந்துருகி , அடம்பிடித்து அழுது அவனைப் பெற விழைந்ததைத் திருவாசகத்தில் காண இயலுகிறது.

3) தோழமை நெறி

இறைவனுக்குத் தோழனாக இருந்து உரிமை பாராட்டியவர் திருவாசகமுடையார். தமக்கு அருளாவிடில் இறைவனுக்கு நேரும் வழி குறித்துப் பேசினார். '' என்னை நீ ஆட்கொள்ளாவிடில் '' குணமிலி , மானிடன் , தேய்மதியன் ' என்றுன்னைப் பழிப்பன் ' எனத் தோழமை நெறியில் நின்னு ஏசினார் . இறைவன் தோழனாகிய மணிவாசகருக்கும் 'இன்பம் பெருக்கி இருளகற்றித் துன்பம் தொடர்வறுத்து' அளினான்.

4) காதல் நெறி

கடவுளைத் தலைவனாகவும் , ஆருயிரைத் தலைவியாகவும் பாவித்துக் காதல் ஒழுக்கத்துறைகளின் வாயிலாகக் கடவுள் தத்துவத்தைத் திவாசகம் எடுத்துரைக்கிறது. மணிமொழித் தலைவியார் தலைவனின் நலத்தைப் பாராட்டுகிறார். இறைவனுடன் ஊடியும், கூடியும் , மயங்கியும், முயங்கியும் , மகிழ்ந்தவர் மணிமொழியார்.

இறைவனோடு ஒன்றாகி ,

'எனை நானென் பதறியேன்பக லிரவாவது மறியேன்'

எனத் தலைவன் திருவடியில் தலைப்பட்டார் . அவர் உள்ளத்துள் ஊறும் பத்தியின் அளவு ஆரா இன்பத்தை ,பேரின்பத்தைப் பெற்றார்.

இறுவாய்

உழவாரப் படைகொண்டுதிருத்தொண்டு செய்த அப்பரின் அடிமைநெறி , இறைவனைத் தாயாகப் பாவித்த ஞானசம்பந்தரின் சேய்நெறி , தோழனாகப் பாவித்து உரிமை முழுக்கம் செய்த சுந்தரரின் தோழமை நெறி ஆகிய பத்திநெறிகளோடு , தலைவனின் அருளை வேண்டும் காதல் நெறியில் நின்றும் இறைவன் திருவடிப் பேற்றைப் பெற

முயன்றவர் வாதவூரர் என்பது திருவாசகத்திலிருந்து புலப்படுகிறது.

10.14 திருமுறைகளின் வழிபாட்டு முறைகளும் மகளிர் பங்கேற்பும்

முனைவர் திருமதி தி. கமலிகஜேந்திரன்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்

" ஏறுடை யீசன் இப்புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும் வந்தருளி " இவ்வுலகினை உய்விக்கும் செயல்பாட்டினை விதந்துரைக்கும் சைவத் திருமுறைகளின் வழிபாட்டு முறைகளையும் , மகளிர் பங்கேற்ற நிலையினையும் இக்கட்டுரை கண்டறிய முற்படுகிறது.

சிவன் என்பது இறைவனும் இறைவியும் ஒன்றுபட்டிருக்கும் நிலையைக் குறிப்பது . "ஆண் - பெண் சமத்துவம் " என்று உலகளாவிய நிலையில் பேசப்பட்டு வரும் கருத்தாக்கமும். உமையொரு பாகனாய்ச் சிவனது திருவுருவம் நார்த்தமலை போன்ற திருத்தலங்களில் காட்சியளிப்பதும் சைவத்தின் விலைமதிப்பற்ற கொடையாகும்.

நல்ல மலர்களை மாலையாகத் தொடுத்து அணிவித்தல் , நாவில் தழும்புண்டாகும்படி சிவனை ஏத்திப் பாடுதல் , திருவடிகளுக்கே ஆளாகும் வண்ணம் அன்பினால் மனம் நெகிழ்தல் , அன்பினால் மனம் உருகுதல் , திருக்கோயில்களைத் திருவலகிட்டு விளக்கம் செய்தல் , திருமெழுக்கிடுதல் , என்று மனத்தின் செயல் , மொழியின் செயல் , உடலின் செயல் என்று மனமொழி மெய்களின் வழி இறைவனை வாழ்த்தி வழிபடும் முறைகள் விதந்தோதப்பட்டுள்ளன.

இறைதொண்டு , அடியார் தொண்டு என்று இறையன்பர்களையும் இறைவடிவாகக் கண்டு தொண்டாற்றி வழிபடும் நிலை குறித்தும் , வன்தொண்டு , மென்தொண்டு என்ற வரையறைகளும் சித்தரிக்கப்படுகின்றன. இவ்வழிபாட்டு முறைகளில் மகளிரது பங்கேற்பு இருந்த நிலை பரிசீலிக்கப்படுகிறது.

10.15 காரைக்கால் அம்மையார் - ஓர் உளவியல் பார்வை

செல்வி. த. கலா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

காரைக்கால் அம்மையார் சிவனடியார்களுள் மூத்தவர். நம்மைப் போன்று இல்லற வாழ்வு வாழ்ந்தவர். ஆயின் துறவு நெறியில் பக்தி நெறியில் தலை நிமிர்ந்து நின்றவர். ஆதலின் அவர் இறைவனையே நேரில் காணும் சிறப்பினைப் பெற்றவராவார். இத்தகு உயரிய நிலை அடைந்ததற்கு வாழ்வைத் துறந்த நிலை துணை நின்றது எனலாம். அத்துறவுக்கு உளவியல் அடிப்படையும் ஒரு காரணமாகும். இக்கட்டுரை காரைக்கால் அம்மையாரின் வரலாற்றை மகளிர் உளவியல் பார்வையில் காண முற்படுகிறது.

இகவாழ்வாம் தாம்பத்திய வாழ்வில் போராட்டம் வரும் சூழல்களில் மகளிர் மனம்திரிகிறது , போராடுகிறது , குழப்பமடைகிறது. ஓர் தெளிவுக்கும் வந்து விடுகிறது. அத்தெளிவு எல்லோர்க்கும்வந்து விடுவதில்லை. திலகவதியார் ,மணிமேகலை ,ஔவையார் போன்ற மகளிர் சமுதாயத்தொண்டுக்காகவே தம் இகவாழ்வைத் துறந்தவர்களாயினர். அந்த வகையில் நம் காரைக்கால் அம்மையாரும் , இகவாழ்வில் வெறுப்புண்டு துறவு பூண்டவராவர். இவர்களின் துறவுக்கு அடிப்படைக் காரணம் யாது? உளவியலுக்கும் துறவு நிலைக்கும் தொடர்புண்டா ? பாமரர் போராட்ட வாழ்வு பேய்பிடித்தலில் சிக்குகிறது. ஆயின் அறிஞர் தம் போராட்ட வாழ்வே துறவிலும் பண்பாட்டிலும்தியாகத்திலும் , நுழைந்து பரஞானம் பெறுகிறது.

இவற்றையெல்லாம் பெரியபுராணம் காட்டும் வரலாறுகளுடன் ஆய்வு செய்கிறது இக்கட்டுரை. உளவியலுக்கும் துறவு நிலைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அது தியாக நிலையில் தொண்டு நிலையில் நிலைக்குமாறு உயர்வடையும் சூழலை இக்கட்டுரை நிறுவ முனைகிறது.

10.16 முதல் திருமுறையில் ஆடற் குறிப்புகள்

மருத்துவர் இரா. கலைக்கோவன்
முனைவர் மா. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம், திருச்சி

சிலப்பதிகாரம் சுட்டும் பதினோராடல்களில் ஓராடலுக்கு மட்டுமே உரிமையுடையவராகக் காட்டப்படும்சிபெருமான் ஆடல் நாயகராக

உயர்த்தப்பட்ட காலம் பக்தி இலக்கியக் காலம். காரைக்கால் அம்மையாரும் திருமூலரும் அப்பரும் சம்பந்தரும் தத்தம் பாடல்களில் இறையாடல் நிகழ்வுகளைச் சிறக்க வண்ணித்துச் சிவபொருமானை ஆடல் தலைமைக்கு அழைத்துச் சென்றனர். இவர்தம் பதிகத் தரவுகள் இரண்டு நூற்றாண்டுக் கால ஆடற்கலை வரலாற்றைத் தொட்டுக்காட்டுகின்றன.

எண்பத்தெட்டுத் திருத்தலங்களைப் போற்றிச் சம்பந்தர் பாடியிருக்கும் நூற்று முப்பத்தாறு பதிகங்களின் தொகுப்பே முதல் திருமுறை. சம்பந்தரின் இந்த நூற்று முப்பத்தாறு பதிகங்களுள் ஐம்பத்து மூன்று பதிகங்களில் ஆடல் பற்றிய தரவுகள் உள்ளன. இரண்டு பதிகங்களில் பெரும்பாலான பாடல்கள் இறைவனின் ஆடல் குறிப்போடு முடிகின்றன. அய்யாறு , பாம்புரம் , அன்பிலாந்துறை , முதுகுன்றம் , குடந்தைக் காரோணம். நள்ளாறு ஆலவாம் இணைந்த திருப்திகம் ஆகிய ஆறு பதிகங்களில்மங்கையர் ஆடல் பேசப்படுகிறது. பல பதிகங்களில் பத்திமையுடையோர் ஆடிப்பாடி இறைவனை ஏத்துவதும் வழிபட்டு மகிழ்வதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆடல் நாயகரான சிவவெருமானின் ஒப்பனை , தோற்றம் ,அவரது ஆடல் அமைவுகள் ,ஆடலின்போது அவர் ஏந்தியிருக்கும் பொருட்கள் ஆடலுக்கான இசை, அதை எழுப்பிய கருவிகள், அந்தக் கருவிகளை இயக்கியவர்கள், ஆடலுக்கான பாடல், அதைப் பாடியவர்கள், உடனிருந்தவர்கள், மகிழ்ந்து நோக்கியவர்கள் , இணைந்து ஆடியவர்கள் , ஆடிய போதுகள், அவர் ஆடலுக்கு அமைந்த களம் என்று பல அரிய செய்திகள் முதல் திருமுறையில் விரவிக்கிடக்கின்றன. அவை பல்வேறு தலைப்புகளின் கீழ் முறையாகத் தொகுக்கப்பட்டு இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

10.17 திருமுறைகளில் சீர்திருத்தச் சிந்தனைகள்

த. காமராஜ்
மாநிலக் கல்லூரி , சென்னை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுறைகளுள் ஏழாம் திருமுறையை அருளிச் செய்தவர். அவருடைய வாழ்வியலில் இறைவனே நண்பனாக அவருக்கு வாய்க்கிறார். மேலும்அவர் நிலவுலகத்தில் இருந்த மன்னன் சேரமான் பெருமாளின் நண்பனாகவும் விளங்கினார். அதனால் அவருக்கு தம்பிரான் தோழர் , சேரமான் தோழர் என்ற இரு பெயருண்டு. நட்பு நெறியை விளக்கிய சுந்தரர் வாழ்வியலைப் பனிரெண்டாம் திருமுறை

தெளிவு படுத்துகின்றது. சுந்தரரும் இறைவனைத் தோழனாகப் பெற்றுப் ''பிழை தவிரப்பெறும் '' நெறி என்ற ஒன்றை ஏழாம் திருமுறையில் தெரிவிக்கின்றார். சமய அடிப்படையில் சுந்தரர் வாழ்வியலையும் அவருடைய பாடல்களையும் எடுத்துக் கொண்டு நட்பு நெறியைச் சமயத்திற்கான மக்கள்த் தொடர்புக் கருவியாக அறியலாம்.

. நட்புத் தொடர்பான தலைப்பில் நீதி இலக்கியமான திருக்குறள் பல அதிகாரங்களைப் பேசுகின்றது. அதில் நட்பு என்ற தலைப்பில் அமைந்த அதிகாரமும் ஒன்று. அவ்வதிகாரத்தில் பத்துத் திருக்குறள்களையும் எடுத்துக் கொண்டு வாழ்வியல் விளக்கமாக ஏழாந்திருமுறை , பனிரெண்டாந் திருமுறை ஆகியவகைளின் துணை கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்வியலை இணைத்துக் காண இவ்வாய்வு விழைகின்றது.

நட்பு என்பதைக் கொள்கை அளவில் விளக்குதோடு சைவ சமய வாழ்வியலாக விளக்குந்தன்மையில் ஏழாந்திருமுறை , பனிரெண்டாந்திருமுறைகளின் இணைப்பில் சுந்தரர் வாழ்வியல் எடுத்துக் கொள்ளப் பெற்று இன்றைய சமூகத்திற்குச் சைவ சமயச் சமூகத்திற்கு 'நட்பு' அமைய வேண்டும் தன்மையை விளக்கும் கட்டுரையாக அமைகின்றது.

10.18 திருமுறை இலக்கியங்களில் தமிழ்மொழி புதுமையாக்கமும் எளிமையாக்கமும்

ஆ. கார்த்திகேயன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

மொழி வளரச்சியைத் தீர்மானிக்கிற முக்கிய கூறுகளில் புதுமையாக்கமும் எளிமையாக்கமும் அடங்கும். புதுமையாக்கம் என்பது காலத்தையும் இடத்தையும் கடந்த மொழி, பரிமாற்றத்துக்கும் மொழிப் பரிமாற்றத்தின் வேகத்தையும் எட்டலையும்அதிகப்படுத்துவதற்கும் தொழில் நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்துவதும் மொழியில் புதிய சொற்கள் , புதிய வடிவங்கள் , புதிய நடைகள் ஆகியவற்றை உருவாக்கி மொழி வளத்தை விரிவுபடுத்துவதும் , புதிய சமூக மதிப்பீடுகளை வெளியிடும் வகைளில் அமையும் மொழிப்பொருள் அமைப்பு மாறுதல்கள் செய்வதும் ஆகும். எளிமையாக்கம் என்பது பேச்சு மொமிக்கும் எழுத்து மொழிக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைத்துப் படிக்காத பாமரனும் மொழியை எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில்

சொற்களையும் வாக்கிய அமைப்பையும் எளிமைப்படுத்துவதாகும். புதுமையாக்கமும் எளிமையாக்கமும் எல்லா மொழிகளிலும் எல்லாக் காலத்திலும் நடைபெறும்.

சைவமும் தமிழும் ஒன்றாகவே கருதப்பட்ட திருமுறை இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் புதிய பண்பாட்டு மாறுதல்களும் , புதிய சமூக மதிப்பீடுகளும் தமிழகத்தில் ஏற்பட்டன. இம்மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் மொழியும்தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. இவற்றை அக்காலத்தில் மொழியில் ஏற்பட்ட புதுமையாக்கம் எனவும் எளிமையாக்கம் எனவும் கொள்ளலாம்.

இக்கட்டுரை திருமுறை இலக்கியங்களில் ஏற்பட்டுள்ள மொழி புதுமையாக்கம் மற்றும் எளிமையாக்கம் குறித்து விவரிக்கிறது.

10.19 சூர்ணி : திருமுறைகள்

சீ. கிருஷ்ணன்
சிங்கப்பூர்

சைவ சமயம் சாத்திரம் , தோத்திரம் , ஆகமம் , புராணம் எனும் நால்வகை நூற்களையும் கொண்ட தனிப்பெரும் சமயமாகும். இவற்றில் நால்வரின் பாடல்கள் கொண்ட தேவாரத் திருமுறைக்குத் தனிப்பெரும் சிறப்புண்டு. வேதாகமங்கட்குச் சமமாக இவை கருதிச் சைவச்சோன்றோர்களால் போற்றிப் புகழப்பட்டுள்ளன.

இவற்றை நமக்கு அழிவுபடாது காத்து முறைப்படுத்தித் தந்த பெருமன்னன் இராஜராஜ சோழன் என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. நம்பியாண்டார் எனும் சைவப் பெரியாரைப் பணிந்து தில்லைத் திருக்கோயிலிற்குள் சென்று செல்லரித்துப் போகும் தருவாயில் இருந்த தேவாரப்பாடல்களை மீட்டு முறைப்படுத்தித் தமிழ் மண்ணில் உலவ விட்டான். திருமுறையின் திருப்பாடல்கள் யாவும் இறைவனது திருமொழியேயாகும். அடியார்களின் அகத்தே எழுந்தருளி அவர்கள் தம் சிந்தையை ஆட்கொண்ட இந்தத் தேவாரப்பாசுரங்களைத் தனது இன்னருளின் வெளிபாடாக உலகிற்கு அளிதுள்ளான் இறைவன். சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் ''பித்தா '' என அடிஎடுத்துக்கொடுத்து உதவினார். திருஞான சம்பந்தாருக்கு அம்மை வடிவில் ஞானப்பாலை வழங்கினார். திருநாவுக்கரசரின் பாடல்களை மகிழ்ந்து ' நாவுக்கரசு ' என்று பெயரிட்டதோடு எக்காலமும் வாழுமாறு அருள்பாலித்து அவர் தம் திருதாண்டகங்களைக் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தார்.

திருமுறைகளின் தோற்றத்தால் வெறும் சங்கத் தமிழாக இருந்த தமிழ் தெய்வத்தமிழாற்யிற்று.

இந்தத் திருமுறைகள் தெய்வத்தமிழாகப் பற்பல ஆற்றல்களை பெற்றிருந்ததோடு ஆழமான தத்துவக் கருத்துக்களையும் கொண்டு பிற்காலத்தில் சைவ சித்தாந்த நூல்கள் எழுவதற்கும் மூலமாகத்திகழ்ந்தன.

தேவாரத் திருமுறைகள் வெறும்தோத்திரங்கள் மட்டுமல்ல -- மாபெரும் சிந்தனைப் புரட்சியைக் கொண்டு வந்த இலக்கியங்களுமாகும்.

சித்தாந்தமும் திருமுறைகளும் அறிஞர் தம் ஆய்வுப் பொருளாகவே இருந்து விடாமல் அன்பர்களின் நெறியாகவும் திகழவேண்டும்.

10.20 பெரியபுராணம் - ஒரு சமூக நீதிக் காப்பியம்

முனைவர் ச. கிருட்டின மூர்த்தி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

பெரிய புராணம் சைவ அடியார்களின் வாழ்வுச் சூழலை விளக்குவது. பெரியபுராணம்தோன்றிய காலத்தில் சமுதாயத்தில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் சாதி அடிப்படையிலும் பொருளாதார அடப்படையிலும் நிலவின என்பதற்குப் பெரிய புராணமே சான்றாகும் . சமுதாயத்தில் பல்வேறு ஒடுக்கப்பட்ட சாதியினரும் இறைவனை அடையமுடியும் என்பதைப் பெரியபுராணம் நியாயப்படுத்துகின்றது. எந்தப் பிரிவினராயினும் இறைவன் முன்னால் சமம் என்பதை இக்காப்பியம் ஆணித்தரமாக எடுத்துக் கூறுகின்றது.

ஒருமைப்பாடு என்பது ஏதேனும் ஒரு பொதுமைக் கருத்து ஒன்றினால் தான் பெறப்படும். அது கல்வி , செல்வம் , சமயம் போன்ற ஏதேனும் ஒன்றாகவும் அமையலாம். அக்காலகட்டத்தில் சமயம் ஒன்றுதான் மனிதஇனத்தை ஒருமைப்படுத்தும் என்ற அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்திருந்ததால்தான் பல்வேறு பிற்பட்ட சமுதாயத்தினரையும் சேக்கிழார் உயர்த்திக்காட்டினார்.

எவ்வகையிலேனும் சமத்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்ட வேண்டும் என்பதையும் , அவற்றை மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்பதையும் அடிப்படையாகக் கொண்டுதான்சேக்கிழார் பெரிய புராணத்தைப் படைத்திருப்பார் என்று கூறலாம். இறைவனை அடைதல் என்ற ஓர் உண்மைப் பயனைச் சமுதாயத்திலிருக்கும் எப்பிரிவினரும் அடையமுடியும் என்பதைப் பெரியபுராணம்

விளக்குவதால் அதனை ஒரு சமூக நீதிக் காப்பியம் என்று கருதலாம் என்பது இக்கட்டுரையில் ஆய்ந்து கூறப்பட்டுள்ளது.

10.21 எட்டாவது திருமுறையின் இசைத் திறன்கள்

கிருஷ்ணவேணி சண்முகம்
மலேசியா

திருவாசகம் இசைச் சுவை நிறைந்தது என்பதனாலேயே திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்ற வாசகம் தோன்றியது. திருவாசத்தில் காணப்படும் இசைத்திறனை முன்னோர் மொழிபொருளைப் (இசைநயம்) போற்றுதல் , தற்காலத்து நாட்டுப்புற இசை வடிவங்களைப் பயன்படுத்துதல் , புதிய இசைவடிவங்களை உருவாக்கியிருத்தல் என்ற மூன்று நிலைகளில் இக்கட்டுரை ஆய்ந்து கூறுகிறது.

10.22 திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சைவ சித்தாந்தம்

முனைவர் வ. குருநாதன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சைவ சமய நூல்களைப் பொதுவாகத் தோத்திர நூல்களென்றும் சாத்திர நூல்களென்றும் இருவகைப்படுத்தி இயம்புவர். இவை முறையே பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களுமாகும். திருமுறைகள் பலவும் பதியாகிய இறைவனைப் பெரும்பாலும் முன்னிலைப்படுத்தி நேர்படத் துதிப்பன. மெய்கண்ட சாத்திரங்களோ மெய்ப்பொருள்களாகிய முப்பொருள் இயல்புகளை முறைப்படுத்தி மொழிவன. இவற்றை முறையே சைவ சமய இலக்கியங்களாகவும் இலக்கணங்களாகவும் எண்ணலாம்.

சைவத் திருமுறை இலக்கியங்களின் சாரமாகச் சித்தாந்த சாத்திங்கள் எழுந்தனவென்பதும் இசையும்.

அம்முறையே , பன்னிரு திருமுறைகளில் முதல்மூன்று திருமுறைகளாகத் திருஞானசம்பந்தரின் தேவாரப்பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்களின் களங்கள் பலவற்றைப் பரவலாகப் பார்க்கலாம்.

பதி, பசு, பாசமென்ற முப்பொருள் இயல்புகளும் தத்துவக்குறிப்புகளும் பலப்பல பாடல்களில் பதிந்து விளங்குகின்றன. இறைவன் உயிர்களிடத்தே ஒன்றாய், வேறாய், உடனாய், உறையும் அத்துவிதநிலை சிறப்புற அமைந்து காணப்படுகின்றது. புலன்கள், பொறிகள் , குணங்கள், கரணங்கள் போன்ற தத்துவ நிலைகளும் அவற்றின் தாத்துவிகங்களும் பரவலாகப் பாடப்படுகின்றன. உயிர்களின் இருவினை, மும்மலங்களை ஈடழித்து இறைவன் ஆட்கொள்ளும் அருள்நிலைகளும் அழகுற மொழியப் பெறுகின்றன. சிவத்தின் ஆணையாம் சத்தியின் தன்மை , பரையின் பான்மை பற்பல பாடல்களின் இசைந்து வருகின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஏகபாதம் , எழுகூற்றிருக்கை போன்ற பாடல்கள் சித்தாந்தக் கருத்துக்களின் செழுங்களங்களாய்ச் சிறந்து விளங்குகின்றன. அவற்றின் விளக்கங்களைக் கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

10.23 திருநாவலூரர் - திருவாதவூர் தம் உருவகங்கள் - ஓர் இலக்கியப் பார்வை

ச. குமார்
கேரளப் பல்கலைக்கழகம்

மிழில் எழுந்த பக்தி இலக்கியம் பெரியதும் சைவ , வைணவச் சார்புடையதே. இந்து மதத்திற்கு இரண்டு கண்களாக இவ்விரு சமயங்களும் திகழ்கின்றன. சைவ சமயம் உலகப் பெருஞ்சமயங்களுள் ஒன்று. இச்சமயத்திற்கு இரண்டு கண்களாகத் திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் விளங்குகின்றன.

திருமுறைகளுள் முதல் எட்டுத் திருமுறைகளைப் பாடியவர்கள் 'சைவக் குரவர்கள்' என்று அழைக்கப்பெறும் திருஞானசம்பந்தர் , திருநாவுக்கரசர் ,சுந்தரர் , மாணிக்கவாசகர் என்ற நால்வராவர். இந்நால்வருள் சுந்ததர் தம் தேவாரத்தில் அமைந்த உருவகங்கள் குறித்தும்(ஏழாம் திருமுறை) , மாணிக்கவசாகர் தம் திருவாசகத்தில் அமைந்த உருவகங்கள் குறித்தும் (எட்டாம் திருமுறை) இங்கு ஆய்வு செய்யப்படுகின்றது.

சுந்ததர் பாடியவை ஏழாம் திருமுறையில் அமைந்த பதிகங்கள் 1000-ஆகும். 100 பதிகங்களில் மொத்தம் 1026 - பாடல்கள் அமைந்துள்ளன. இவர் நெறி, சகமார்க்கம் என்ற யோக முறையாகும்.

மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும்

எட்டாம் திருமுறையில் அமைகின்றன. இவர் ஞான மார்க்கத்தவர் ஆவார்.

திருவாசகம் சைவ வேதமாகத் திகழ்கின்றது. இந்நூல். சிவபுராணம் தொடங்கி , அச்சோப்பதிகம் ஈறாக 51 - பிரிவுகளில், 4 - அகவல்களும் , 652 - விருத்தங்களுமாக மொத்தம் 656 - பாடல்களைக் கொண்டு அமைகின்றது.

சுந்தரர் தம் தேவாரத்திலும் மாணிக்கவாசர் தம் திருவாசகத்திலும் இறைவனது பண்பையும் உருவையும் விளக்கும் நிலையில் உருவகங்கள் சிறப்பான பங்கு வகிக்கின்றன. அடியவர் தம் பக்தி அனுபவங்களுக்கு இலக்கிய வடிவம் வழங்கவும் உருவக அணி துணைநிற்கின்றது.

பக்திப் பாடல்களின் இலக்கியச் சிறப்பிற்கு மொழித்தளத்தில் உருவகம் ஆற்றும் பங்கை மதிப்பிடவும் , பக்தி இலக்கியப் பாங்கிற்கு ஏற்ப உருவகத்தில் நேர்ந்துள்ள வளர்ச்சி மாற்றங்களை இனங்காணவும் சுந்தரர் , மாணிக்கவாசகர் இருவர் தம் பக்தி அநுபவத்திற்கு ஏற்ப உருவக ஆட்சியில் ஏதேனும் குறிப்பிடத்தக் வேறுபாடுகள் பொருந்தியுள்ளனவா என்பதை ஆய்ந்து காணவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

10.24 திருமுருகாற்றுப்படை - நக்கீரர் வரையும் ஓவியம்

வே. கோபால்
அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி , பழநி.

முருகாற்றுபடை பத்துப்பாட்டில் முதற்பாட்டு எனினும் திருமுறைத் தொகுப்பிலும் இணைக்கப்பட்டுள்ளது. திருமுருகனின் செய்திகள் அனைத்தும் இந்த நூலில் கூறப்பட்டுள்ளன.

முருகன் உறையும் இடங்கள்

1. குன்று அமர்ந்து உறைதலும் உரியன்
2. அலைவாய்ச் சேறலும் நிலையிய பண்பே
3. ஆவினன் குடி அசைதலும் உரியன்
4. ஏரகத்து உறைதலும் உரியன்
5. குன்று தோறாடலும் நின்றதன் பண்பே
6. பழமுதிர் சோலை மலை கிழவோனே

ஆறு உறைவிடங்கள் கூறப்பட்ட போதிலும் அவ்விடங்களின் தலைப்புகளில் கூறப்படும் செய்திகள் , அவ்வுறை விடங்களுக்கு மட்டும் உரியனவல்ல என்ற கருத்து இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

10.25 பத்தாந்திருமுறையும் உலக மேம்பாடும்

கோ.ச. கோமதி முத்துக்குமரன்

1.0. முன்னுரை - பத்தாம் திருமுறை எது ? அதன் பகுப்பாய்வுப் பொருள் யாது ? அது பத்தாவதாக ஏன் வைக்கப்பெற்றது.அதன் மூலம் தொன்மைச் சிறப்புகள் - புதுமைகள் யாவை ? அதன் அமைப்பு உலக மேம்பாட்டிற்கு உதவுமா ? எவ்வாறு ? அத்திருமுறையை உலக மேம்பாட்டிற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கான விடைகளைக் கண்டறிந்து உலகு மேம்பட உழைக்க வழிகாட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

1.1 விளக்கம் : தேவாரம் - 1- 7 , திருமுறை , திருவாசகம் - எட்டாம் திருமுறை ஒன்பது - திருவிசைப்பா - 9, திருமூலர் திருமந்திரம் - 10.

2.1.0 பகுப்பாய்வுப் பொருள் முத்தித்திருமுறை முதல் ஆதிதிருமுறை ஈறாக முப்பது பொருள்.

3.1.0 பத்தாவதாக ஏன் வைக்கப்பெற்றது ?

3.11 அறிஞர் கருத்து - துடிசைகிழார் 3.1.2 ஆய்வாளர் கருத்து - திருமறைகளின் நிறைவு - எண்ய - முடிவு எண் - முத்தி . அ = , 2 = 2 , சூலம் 3 பிரிவு - முத்தொழில் முப்பொருள் பற்றி விளக்குவது இணையார் திருவடி. எண்கணிதப்படி ஒன்று. ஐம்பொறி ஐம்புலன்கள் உடையவை ஒன்றுபடுத்துவது.

4. தொன்மையும் மூலமும்

5. சிறப்பும் புதுமையும்.

6. பத்தாந்திருமுறையும் உலக மேம்பாடும் - திருமுறை அமைப்பும்

7. உலக மேம்பாட்டிற்குப் பத்தாம் திருமுறையைப் பயன்படுத்துதல்

8. முடிவுரை

10.26 சேக்கிழார் காட்டும் மனித மேம்பாட்டிற்கான சிந்தனைகள்

முனைவர் கோமதி சூரியமூர்த்தி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சைவத் திருமுறைகள் மொத்தம் பன்னிரண்டாகும். அவற்றை அருளிச் செய்த அருளாசிரியர்கள் இருபத்து ஏழு பேர் ஆவர் , அவர்களின் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்து 12 ஆம் நூற்றாண்டுவரை ஆகும். அந்நூல்கள் சிவனையும் , சிவகுமாரர்களையும் , சிவனடியார்களையும் போற்றும் அருள் நூல்களாகும். ஒரு பூமாலையில் பூக்கள் தோறும் ஊடுருவிச் செல்லும் நார் போல் நூல்கள் முழுவதும் ஆங்காங்கே பல அறக்கருத்துக்கள் நிரம்பியுள்ளன. அவை மனித மேம்பாட்டிற்கு வழி காட்டுவன. எடுத்துக்காட்டாகச் சேக்கிழார் அருளிய , பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்துள்ள திருத்தொண்டர் புராணத்திலிருந்த மனித மேம்பாட்டிற்கான சிந்தனைகளை ஆராய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம். மனித மேம்பாட்டிற்கு முதற்கண் வேண்டுவது அன்பு என்னும் பண்பு. அடுத்து அறவழியில் நிற்றல். இல்வாழ்வான் , வணிகர் , ஆள்வோர் முதலியோர் பின்பற்றவேண்டிய அறங்கள் எவை என்பன எடுத்துக்காட்டுக்களுடன் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன. எல்லோரும் ஓரின மக்கள் என்பதை உணர்த்த , சாதி வேற்றுமை மிகுந்திருந்த அக்காலத்திலேயே அடியவர்கட்கிடையே சாதி வேற்றுமை பாராட்டாமை , தீண்டாமை ஒழிப்பு, கலப்புத் திருமணம் , சமபந்தி போஜனம் முதலியன நடைபெற்றுள்ளமை சான்றுகள் காட்டி இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது. மனித மேம்பாட்டிற்கு மக்கட்பேறு, கல்வி பற்றிய சில சிந்தனைகள் இக்கட்டுரையில் காரண காரியத்துடன் விளக்கப்படுகின்றன.

10.27 சுந்தர மூர்த்தி நாயனார் பதிகங்களில் இசை

முனைவர் ராம. கௌசல்யா
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, திருவையாறு.

சைவம் இசை உலகில் அளித்த கொடை தேவாரப் பனுவல்கள் ஆகும். தேவாரம் பாடிய மூவருள் சுந்தரமூர்த்தி நாயனார் தம்பிரான்

தோழராக விளங்கியவர். 7-ஆம் திருமுறை சுந்தரர் பாடிய 100 தேவாரப் பதிகங்களைக் கொண்டு விளங்குகிறது. இவை ,'பித்தா பிறை சூடி ' எனத் தொடங்கும் இந்தளப்பதிகம் முதல் '' தானெனை முன் படைத்தான்'' என்றமுதற் குறிப்பை உடைய பஞ்சமப் பண்ணிலமைந்த பதிகம் ஈறாக முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

பழந்தமிழகத்தில் இசைக்கலை சிறந்து விளங்கி இருந்திருக்கிறது. அக்காலத்தின் இசை நூல்களும் , பாடல்களும் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள இசைப் பாடல்களுக்கும் பாடுகின்ற முறை தெரியவில்லை இன்றைக்கு இசையோடு - பாடப்பட வேண்டிய முறையோடு - நமக்குக் கிடைக்கும் முதல் இசை வடிவம் தேவாரமே ஆகும். இந்தியப் பக்தி இசையின் முன்னோடியும் தேவாரப் பதிகங்களே ஆகும். தேவாரகாலத்தில் பாடி வந்த பண் முறை என்ற இராகப் பகுப்பு முறையிலேயே தேவாரப் பதிகங்களும் அமைந்துள்ளன. தேவாரப் பதிகங்களில் 23 பண்கள் கையாளப்பட்டுள்ளன. இவற்றிற்கு இணையான இராகங்களும் ஓதுவாமூர்த்திகளால் காக்கப்பட்டு வந்த மரபின் அடிப்படையில் இனம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் 17 பண்கள் சுந்தரரால் கையாளப்பட்டுள்ளனவாகக் கிடைத்துள்ளன.

இன்று கிடைத்துள்ள தேவாரப்பாக்களில் செந்துருத்தி (மத்தியமாவதி) என்ற பண்ணில் சுந்தரர் பாடியதே கிடைக்கின்றது. தக்கேசிப்(காம்போதி) பண்ணிலமைந்த இவர் தம் பாக்கள் உள்ளத்தை உருக்கும் வண்ணம் கத்தாங்கத்தில் பாடப்படுகின்றன.

'' மண்மேல் நம்மைச் சொற்றிமிழ் பாடுக'' என்று சிவபெருமானால் பணிக்கப்பட்ட பெருமை உடையவர் சுந்தரர். ஆதி சைவர் மரபில் வந்த சுந்தரரிடம் ' நீ பாடும் பாடல்களே அர்ச்சனை ஆகும்' என்று மனமுவந்து கூறிப் பதிகங்களைக் கேட்டுப் பெறுகிறார் இறைவனார்.

சுந்தரர் தோழமை நெறியை மேற்கொண்டவர். இவர் பாடல்கள் , இறைவனுடன் ஊடியும் , கெஞ்சியும் , தன் குறைகளைக் கூறி நொந்தும் உள்ளத்தை உருக்கும் சொல்லாட்சியுடன் உணர்வைப் பிரதிபலிக்கும் பண்களில் வெளிப்பட்டவை.

10.28 பெரியபுராணத்தில் சொற்களில் பண்பாடு

முனைவர் மு. சதாசிவம்
அரசு அருங்காட்சியம் , சென்னை.

நம் செந்தமிழ்ப் புவலர்களுள் பண்பாட்டுச் சொற்களைப் பண்பாட்டுடன் கையாளும் பாங்கு மிகக் கைவரப் பெற்றவர் சேக்கிழார் பெருமானே யாவர். அவருடைய திருத்தொண்டர் புராணம் முழுதும் பண்பாட்டுச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட காப்பியமாகவே மிளிர்கிறது. சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

1) காம இன்பத்தைக் கடிவதே பத்தியொழுக்கத்தின் பான்மையாதலின் 'மக்கள் காம இன்பத்தைத் துய்த்தனர்' என்ற கருத்தைக் கூற வந்த இடத்தில் அதை வெளிப்படையாகக் கூறாமல் இனச் சொற்களைப் பயன்படுத்தி அக்கருத்தினை உய்த்துணர வைக்கிறார்.

2) திருநீலகண்ட நாயனார் இளமை இரத்தம் துள்ளும் காளைப் பருவத்தில் மனைவியோடு பெறும் இன்பத்துடன் பிற இன்ப மகளிருடனும் இன்பந்துய்க்கும் இயல்பினராயிருந்தார் என்பதைச் சேக்கிழார் எவ்வளவு நயப்பாட்டுடன் உணர்த்துகிறார். '' இளமை மீதூர இன்பத் துறையினில் எளியர் ஆனார்.'' என்பது ஓர் அற்புதமான வரி. தாம் போற்றும் சிவனடியாரான திருநீலகண்டர் இளமையில் காம வயப்பட்டொழுகினார் என்பது உலகியல் நோக்கில் சிவனடியார்க்கு ஓர் இழுக்கினைத் தரவல்லதே. 'இளமை மீதூர' என்ற சொல்லினால் அக்குற்றம் இளமைத் துடிப்புள்ளவர்களுக்கு இயல்பான தொன்றே என்று ஒரு சாமானத்தைத் தர விரும்புகிறார். எனினும் குற்றம் குற்றந்தான் என்பது சேக்கிழார் உள்ளத்தை உறுத்துகிறது. அதனால் அக்குற்றத்தின் கடுமையைக் குறைக்க விரும்பி ''எளியர் ஆனார் '' என்று குறிப்பிடுகிறார். 'காமாந்தகாரன்' என்ற சொல்லுக்கும் 'இன்பத் துறையினில் எளியர் ஆனார்'என்ற தொடருக்குமிடையே கருத்தொற்றுமையிருந்தாலும் பண்பாட்டொற்றுமை இல்லை எனலாம். தாம் சொல்ல வந்த ஒரு கருத்தை அது பொதுமக்கள் பார்வையில் தவறானதாயிருப்பின் அக்கருத்தின் கடுமையைக் குறைக்கச் சொல்லினிமையைக் காட்டும் திறன் சேக்கிழார்க்கே மிகவும் கைவந்த கலையாகும்.

10.29 ஆளுடைய பிள்ளையாரின் அகப்பொருட் பதிகங்கள்

வெ. சத்யநாராயணன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

1. தமிழிலக்கிய மரபின் தொடக்க நிலையாகச் சங்க இலக்கியங்கள் கருதப்பெறுகின்றன. இவற்றின் பல்வேறு அக இலக்கிய மரபுகளும் புற இலக்கிய மரபுகளும் பிற்கால இலக்கிய வளர்ச்சிக்குரிய அடிநிலையாய் அமைகின்றன.

2. சங்க இலக்கியத்தில் பின்பற்றப்பட்ட அகப் பொருண் மரபு பக்தி இலக்கியத்தில் நாயக - நாயகி இலக்கிய உத்தியாய் வெளிப்பட்டது.

3. சங்க இலக்கிய அகமரபுகளின் தொடர்ச்சி திருஞானசம்பந்தரின் பதினாறு பதிகங்களில் காணப்படுகின்றது.

   திருஞான சம்பந்தர் பதிகங்களில் முந்தைய அக இலக்கிய ஆளுமையின் தாக்கத்தை இப்பதினாறு பதிகங்கள் வழி உணரலாம்.

4. கருப்பொருள் வருணனைகள் பக்தியியக்கக் கோட்பாடுகளை விளக்கத் துணை நிற்கும் புதுமையை இப்பதிகங்கள் உணர்த்துகின்றன.

5. அகப்பொருள் மாந்தர் மரபில் தலைவன் , தலைவி , தோழி ஆகியோரின் பண்பு உணர்வு நிலைகள் ஆகியன எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

6. இவ்வகையில் மரபுகள் பேணப்படும் தன்மையனவாய் அமைதலும் மாறுபாடுகளுக்குரியவாய் அமைதலும் இக்கட்டுரை வழி விளக்கப்படுகின்றன.

10.30 சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் செல்வர்

முனைவர் சிவ. சண்முகசுந்தரம்
காஞ்சிபுரம்

சைவ சமயம் தழைத்தோங்கவும் மக்களை நன்னெறிப் படுத்தவும் பக்தி உணர்வினை ஊட்டி வரும் திருவருட் களஞ்சியங்களே பன்னிரு திருமுறைகள்.

இத்திருமுறைகளில் 18327 பாடல்கள் உள்ளன. இப்பாடல்களுள் 324 பாடல்களில் செல்வர் , செல்வன் , செல்வம் ஆகிய சொற்கள் வாயிலாக 328 இடங்களில் நேர்ப்பொருளாலும் குறிப்பாலும் சிவபெருமானைக் குறிக்கின்றன. இம் மூன்று சொற்களும் அடைமொழிகளால் மற்றவர்களையும் வேறு பொருள்களையும் உணர்த்துகின்றன. செல்வர் , செல்வன் என்னும் சொற்கள் பொருள் உடையவரைக் குறிக்கும் சொற்களாகவும் திருமால் , பிரம்மன் , முருகன், வினாயகர் , சம்பந்தர் , முனிவர் , அடியார் , இந்திரன் , பர்வதாசன் , இராவணன் , சோழன் , சூரியன் ஆகிய பொருள் தரும் சொற்களாகவும் திருமுறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. செல்வம் அருட்செல்வம் , பொருட்செல்வம் என இரு வகைப்படும். இவ்விரு பொருள்களுடன் வினைச் சொல் ஆகக் கொள்ளும் முறையிலும் செல்வம் என்னும் சொல் பயின்று வந்துள்ளது.

சிவனைக் குறிக்கும் சொற்கள் வழிபடப்படும் தலத்தால் , நேர்ப்பொருளால் குறிப்புப் பொருளால் , அடைமொழியால் , சிறப்புச் சொற்றொடரால் சுட்டப்படும் இடங்கள் தொடர்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. செல்வர், செல்வன் என்னும் சொற்கள் சிவனைத் தவிர மற்றவர்களைக் குறிக்கும் தொடர்கள் , அத்தொடர்கள் அவர்களைக் குறிக்குமாறும் , செல்வம் என்னும் சொல் எந்தெந்த பொருள்களில் வந்துள்ளன என்பனவும் அச்சொற்கள் பயின்று வரும் பாடல் தொடர்களும் அளிக்கப்பட்டுள்ளன. அச்சொற்கள் அட்ட வணைப்படுத்தியும் கொடுக்கப்பட்டுள்ளன.

சிவனது சிவந்த பாதம் பெற நிலையற்ற சுகபோகம் தரும் செல்வத்தையும் உலகப் பற்றுகளையும் துறத்தல் வேண்டுவது போலச் செல்வர் , செல்வன் , செல்வம் ஆகிய சொற்கள் தரும் பிறபொருள்கள் தவிர்த்துச் சிவனைக் குறிக்கும் தொடர்களாக வரும் பாடல்களின் சிறப்பினை அறிந்து அப் ல்களைப் படித்து இவ்வுலகில் பெற வேண்டிய செல்வம் அனைத்தும் பெற்று அவற்றின் வாயிலாக இம்மையில் சிவன் தாள் நினைந்து அவன் அருள் திறந்தினைப் புகழ்ந்து பாடி மறுமையில் செல்வர் சேவடி பெறுதலை நோக்கமாகக் கொண்டே

இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது அறிய வேண்டுவதொன்றாம்.

10.31 ஆன்மீக வளர்ச்சிக்குப் பன்னிருதிருமுறை யாப்புக் கூறுகள்

முனைவர் ந. சண்முகம்
ஸ்ரீராம் கிருஷ்ண மிஷன் வித்தியாலயக் கலை அறிவியற் கல்லூரி ,
கோவை.

பக்தி இலக்கியத்தில் தமிழ் யாப்புக் கூறுகளோடு பல வடமொழி யாப்புக் கூறுகளும் தமிழ் யாப்பிலக்கணம் ஏற்றுக் கொள்ளும் வகையில் புகுந்தன. பக்தி இலக்கிய யாப்புக் கூறுகள் வெறும் கவித்திறத்திற்கு மட்டுமல்ல. அவை ஆன்மீக உள்ளுணர்வை வளப்படுத்தும் தன்மையது என்பதை வெளிக்கொணர இக்கட்டுரை முனைகின்றது.

வடமொழியாப்புக் கூறுகளான மாலை மாற்று , சக்கரம் , சுழிகுளம், ஏகபாதம் எழுகூற்றிருக்கை , கோமூத்திரிகை போன்ற மிறைக்கவி வகைகளை யாப்பருங்கலம் கூறுகின்றது (சூ. 96) .அவற்றில் 'சக்கரம்' என்தபற்குச் ' சாவவும் கெடவும் பாடுதற்கும் ' மனத்தது பாடுதற்கும் பற்றாம் ' என யாப்பருங்கல விருத்தியுரைகாரர் விளக்கம் கூறுகிறார். இவ்விளக்கத்தை எதிரது போற்றல் உத்திமூலம் வாழ்த்தவும் , வாழவும் இம்மிறைக்கவிகள் உதவும் எனவும் கொள்ளலாம்.

பன்னிரு திருமுறையைப் பாடிய சைவப் பெரியோர்கள் பலர் தமிழோடு வடமொழியையும் பழுதறக்கற்று அனுபூதி பெற்றவர்கள்.அவர்கள் தாம் பெற்ற அனுபூதியையும் உள்ளுணர்வுகளையும் பிறரும் பெறும் வகையில் தம் செய்யுட்களில் யாப்புக்கூறுகளில் திறம்பட அமைத்து உலகுக்கு அளித்துள்ளனர். ஞானசம்பந்தர் தேவாரத்தில் மாலைமாற்று (பதி.375) , சக்கரம் (பதி..209), திருகோமூத்திரிகை (பதி 210), ஏகபாதம் (பதி. 127), திருவெழகூற்றிருக்கை(பதி. 128), திருவிராகம் (பதி.345) போன்ற செய்யுட்கள் கிடைக்கின்றன. இவற்றின் யாப்புக் கூறுகள் எவ்வாறு ஆன்மீக வளர்ச்சியை உருவாக்குகின்றன என்பதை ஆராய்கிறது.

உள்ளுணர்வைத் தூண்டுவதே உண்மையான ஆன்மீக வளர்சசி. மாலைமாற்று என்ற யாப்பு வடிவம் உடல் உள்ளுறுப்புக்களை நேர்முகமாகவும் எதிர்முகமாகவும் தூண்டுதல் செய்கின்றது. உள்முக உணர்வுத் தூண்டுதலுக்கு வளிநிலைப் பயிற்சியும் ஆதார இயக்கமும் தேவை. அப்பயிற்சியைப் பன்னிருதிருமுறை யாப்பு அமைப்பு

உருவாக்குகின்றது என்பது இவ்வாய்வின் மூலம் பெறப்படுகின்றது.

10.32 திருமுறைகள் - திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம்

பேரா. ஓ. சம்புலிங்கம்

எட்டாம் திருமுறை மணிவாகப் பெருந்தகையின் திருவாசமும் திருக்கோவையாரும். சிவனின் நான்கு வேதத்தையும் ஓதினாலும் எவர் கண்ணிலும் நீர் வரா. ஆயின்திருவாசகத்தை இங்கு ஒருமுறை ஓதினாலோ கருங்கல் மனமும் கரைந்து , கண்களீ தொடுமணற்கேணியில் சுரந்து நீர் பாய அன்பராகுவர் என்பார் சிவப்பிரகாசர். பக்குவமடைந்த ஆன்மாவை ஆட்கொள்ள இறைவன் தானே காட்சிக்கு எளிதாய்க் குரு வடிவில் வந்து அருள் செய்வான் என்பதற்கு மணிவாசகரின் வாழ்வே சான்று. திருவாசத்தின் உணர்த்தும் திறனை இருகூறாகிக்காண்பர் அறிஞர். ஒன்று , ஞானாசிரியானாய் வந்து ஆட்கொண்ட ஆண்டவனை அனுபவித்து ஆனந்தத்தில் பீறிடும் உணர்ச்சி. இரண்டு விட்டுப் பிரிந்தமையால் அவனைக் காணாமல் , கண்டு அனுபவிக்க ஏங்கித் தவிக்கும் துடிப்பு.

திருவாசகம் 51 பகுதிகளைக் கொண்டது. 54 தலங்களைப் பற்றிக் கூறுவது. 'நமசிவாய' எனத் துவங்கி ஊதியமே என முடிவது. உலகத்து உயிர்க்கெலாம் ஊதியம் நமசிவாய என்ற ஐந்தெழுத்தே என அறுதியிட்டுரைப்பது. நீத்தல் விண்ணப்பம் திருவாசகத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று. கடையவனே எனத் தொடங்கிக் கடையவனே என முடியும் அந்தாதித் தொடையால் ஆன 50 பாடல்களைக் கொண்டது. பிறவிப் பெருங்கடலை நீந்த இறைவனது திருவடித்துணையை வேண்டுவது. பிரபங்க வைராக்கியம் என்றும் இதனைக் கூறுவர்.

இக்கட்டுரை இதனை முக்கூறாக்கிப் பார்க்க விரும்புகிறது

(1) உலக வாழ்வாம் பாடுகளைத் தாங்கப் பெறாமல் முறையீடு செய்தல்

(2) ஆட்கொண்ட அவன் விட்டுவிட்டுச் சென்றதனால் மணிவாசகர் படும் தவிப்பு

(3) இறைவனின் தோற்றப் பொலிவும் பேரருட்செயலும்.

10.33 திருமுறைகள் வரலாற்றின் தொடர்ச்சியில் சைவ சித்தாந்தத்தின் பன்முக வளர்ச்சி

முனைவர் வெ. சாந்தாமணி
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி , கோயமுத்தூர்

வாழும் தத்துவத்தின் நோக்கும் போக்கும். சைவ சித்தாந்தம் தோற்றம். சில அடிப்படைகள். சங்க கால இயற்கை அடிப்படையில் தோன்றிய தமிழர் இறை நெறிக்கோட்பாடு. தொல்காப்பியத் திணைஇறைநெறிக் கோட்பாடு. குறள் கூறும் தெய்வ நெறிக்கோட்பாடு.

சமய பௌத்த இறை நெறிக்கோட்பாடு சமயக் கோட்பாடாதல். வளரும் சமூகச் சூழலுக்கு ஏற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ளும் சமயத் தத்துவம். வேதாந்தமும் சித்தாந்தமும் வானவில் கூட்டணி அமைத்தல். சமண பௌத்த மறைவுக்குப் பின் இரு கோட்பாடுகளும் இணைந்து , வைணவ, சைவ சமய நெறிகள் தோன்றுதல். சமண பௌத்த சமயத் தத்துவங்களின் சாற்றைச் செரித்துக் கொண்டு வைணவ, சைவ சமயங்கள் தம்மைப் புதுப்பித்துக் கொள்ளல். முதல் நெருக்கடியை எதிர்கொண்டு முறியடித்த நிகழ்வுப் போக்கு. சைவமும் , வைணவமும் வணிக வர்க்கத்தை எதிர்த்த நிலக்கிழார்ச் சமயங்களாகத் தோன்றுதல்.

சித்தர்கள் வழியில் சைவசித்தாந்த வளர்ச்சி . சித்தர் காலத்தில் சைவ சித்தாந்தத்திற்கு நிகழந்த நெருக்கடிகள். சித்தர்கள் தொடர்ச்சியாக வள்ளலார் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றுதல் . இஸ்லாமியம் கிறித்துவம் சமயங்களின் வழியே தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றிய நெருக்கடி. வைதிக நெறிக்கு எதிராகச் சைவநெறி சாதிசமய வேறுபாடுகளைத்தவித்த சமய நெறி ஏற்றல் சமூக நல்லிணக்கத்திற்கு -தேசிய ஒருமைப்பாட்டிற்கு - ஏற்பச் சைவம் தன்னைத் தகவமைத்துக் கொள்ள - சமயக் காழ்ப்பற்ற நடைமுறைக்கு ஏற்ப - சைவசித்தாந்தம் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளல் -உலகம் முழுதும் பிற நாடுகளின் சமயம் சார்ந்த பண்பாட்டுத் தாக்கமும், படை எடுப்பும் ஒரு சேர நிகழும் காலகட்டத்தில் சைவம் தமிழர் சமுதாயத்தில் நிலைபெறத் தமிழ்ச் சைவம் தமிழர் சைவமாகப் பரிணாம வளர்ச்சி பெறல்

10.34 திருமுறை கூறும் அறநெறிகள்

முனைவர் ச. சாம்பசிவனார்
மதுரை காமராசர் பல்கைலக்கழகம்

திருமுறைகள்

'' சிவனெனும் ஓசையைத் தமக்கேயுரிய செம்மேனி யெம்மானாகிய பரம்பொருளின் புகழ் பரவும் அருளாளர்களுடைய அமுதத்தமிழ் வாக்குக்களின் தொகுப்பே திருமுறை !'' (வை. இரத்தினசபாபதி , திருமறைத் தெளிவே சிவஞானபோதம்). திருஞானசம்பந்தர் முதலாகத் தெய்வச் சேக்கிழார் ஈறாக 27 அருளார்கள் அருளியனவே பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. இத் திருமுறைகளைத் 'திருநெறிய தமிழ்' என்றும் கூறலாம்.

திருமுறை கூறும் 'அறநெறிகள்'

சைவசித்தாந்தம் கூறும் பொருள்கள் மூன்று. அவை '' பதி , பசு , பாசம் '' இவற்றைக்குறித்து விரிவாகப் பாடவந்த திருமுறை அருளாளர்கள் ,இவை வாயிலாக மன்பதை உய்வதற்கான பல நெறிகளையும் வகுத்துச் சென்றுள்ளனர் '' இறைவன் ஒருவன் உளன்'' எனும் நம்பிக்கை ; உயிர்கள் எண்ணில் பலவாம் ; அவ்வுயிர்களைப் பிணித்திருப்பது 'பொல்லாத ஆணவம்' ; வினைக்கேற்பப் பிறவிகள் அமையும் ; இறைவன் திருவருட்டுணையால் ஆணவமலத்தினின்றும் உயிரானது உய்வுபெற்று, இறையடி இன்பத்தில் திளைக்கும் என்று இவ் அருளாளர்கள் கூறுவன அனைத்துமே மன்பதைமேம்பாடு அடைவதற்காகன நெறிகளே ! எனினும் ஞானசம்பந்தர் போன்றோர் , 'தூய தொண்டுநெறி' யினையும் மேற்கொண்டு , மன்பதை உய்யவும் வழிகாட்டியுள்ளனர்.

''சைவம் உயர்ந்தது' என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் சைவம் வளர்ந்து விடாது. சைவ சமயத்தைச் சார்ந்தோர் , திருமுறைகளின் வழி நின்று , தொண்டுளம் கொண்டவர்களாக விளங்குதல் வேண்டும் .'

முடிவுரை

எக்குலத்தவராயினும் எச்சாதியினராயினும் எந்நிலை யினராயினும் 'அவர் சைவர்' எனின் , அவரையும் நம்மவராகக் கொண்டு உதவுவதே , மன்பதை உய்வதற்கான நன்னெறி. சைவத்திருமுறைகளும் சைவ சித்தாந்தமும் கூறும் நெறியும் இதுவே !.

10.35 உலக சகோதரத்திற்கும் , மனித மேம்பாட்டிற்கும் சைவம்

முனைவர் இரா. சாவித்திரி

சைவத் திருமுறைகள் விளக்கம் - பனிரெண்டு திருமுறைகள் - மூவர் தேவாரம் ஏழு திருமுறைகள் அன்பேசிவம் - சைவ சமயம் தத்துவத்தின் அடிப்படை - காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினால் சிவனருள் சித்திக்கும் - அன்புக்குக் கட்டுப்பட்டவன் கடவுள் - நாயன்மார்கள் அன்பின் சிறப்பு - பக்தி இயக்கமாய் உருவெடுத்த காலம் - அடிப்படை மூவர் தேவாரம் . நான் எனும் செருக்கை அறுத்து நல்லெண்ணம் நெஞ்சில் பூண்டால் வாழ்வு சிறக்கும் - வையகம் மேலோங்க உலக சகோதரத்திற்கும் , மனித மேம்பாட்டிற்கும் மூவர் தேவாரப் பாடல்கள் உறுதுணை செய்வதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சுந்தரர் தோழமை நெறி - பெரிய புராணத்தின் பெருமை - நாயன்மார் பக்தித்திறம் - நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்துருகுதல் - பக்தி நெறி விளக்கம் முழுமையுறல் உலக உயிர்களிடையே அன்பு சகோரத்துவம் - மனித உயிர்களிடையே இகல் நீக்கி மனித மேம்பாட்டிற்குத் தேவாரப் பாடல்கள் உறுதுணையாவதை உணர முடியும் - மனத்தடை மாசு நீக்கல் - மன்னுயிரையும் தன்னுயிராய் மதித்தல் - சிவவேடம் தன்னையும் சிவனாய் நினைத்தல் -தன் முனைப்பு அகற்றல் - அன்பைப் பெருக்குதல் - இடர் நீக்குதல் பகை நீக்குதல் பகைவனுக்குப் அருளும் பாங்கு - இக்காலச் சமுதாயம் - இயந்திர வாழ்க்கை - மனிதன் மனிதானக இருக்க உதவுதல் - வாழ்க்கையில் உயர் மதிப்புகளைப் போற்றல் - மனித மேம்பாட்டிற்கு அடிப்படை பண்பட்ட மனம் - புனிதப் பணி பண்பட்ட மனம் உருவத் தேவாரப் பாடல்கள் வழிகாட்டும்.

10.36 திருவாசகம் காட்டும் பக்தி வெளிப்பாட்டு உத்திகள்

முனைவர் எச். சித்திரபுத்திரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

பக்தி இலக்கிய நூல்களில் குறிப்பிடத்தக்கன திருமுறைகளாகும். எல்லாம் வல்ல இறைவன் அருளைப் பெறப் பல்வேறு சூழல்களில் நாயன்மார்களால் பாடப்பெற்ற பன்னிருதிருமுறைகளில் எட்டாம்

திருமுறையான திருவாசகமும் அடங்கும். 'திருவாச கத்தேன்','திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் ', 'அல்லல் அறுத்து' ஆனந்தம் ஆக்குவது ' எனப் பலவாறு போற்றப்படும் திருவாசகத்தில் பல குறிப்புகள் உள்ளன. பாடும் நாவிற்கு இனிய சுவையகவும் பிறவிப் பிணிக்கு மருந்தாகவும் உள்ள திருவாசகத்தில் மாணிக்கவாசகர் இறைவன் அருளைப் பெறுவும் பக்தி நிலையை வெளிக்காட்டவும் மனம் , வாக்கு , செயல் நிலையிலான பல பக்தி வெளிப்பாட்டு உத்திகளைக் கையாண்டுள்ளார். அவற்றுள்; (1) இறைவனின் பெருமை / பண்புகளைக் கூறி வேண்டுதல் (2) பிற தெய்வங்களுடன் ஒப்பிட்டு வணங்குதல் (3) தன் குறை / நிறைகளைக் கூறி வேண்டுதல் (4) தன்னைத் தாழ்த்தி வேண்டுதல் (5) அழுது வேண்டுதல் என்பன குறிப்பிடத்தக்கன. மன வழிபாடு (அகவழிபாடு) , வாக்கு வழிபாடு, செயல் வழிபாடு எனும் வழிபாட்டு முறைகள் திருவாசகப் பாக்களில் மேலோங்கி நிற்கின்றன. பக்தி நிலையை வெளிக்காட்ட மாணிக்கவாசகர் மொழியைக் கருவியாகக் கையாளும் திறனும் உத்தியும் கற்று மகிழ்வுறத்தக்கன. '' சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்'' எனும் திருவாசகக் கூற்றிற்கு ஏற்பச் சொற்களிலும் சொற்றொடர்களிலும் பொருள் வளம் மிகுந்து காணப்படுகின்றது. திருவாசகததில் உள்ள ஒவ்வொரு சொல்லும் கருத்தும் மாணிக்கவாசகரின் பழுத்த உள்ளத்திலிருந்து வெளிப்பட்டனவாகும். அவரவர் சித்தாந்த அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஏற்பவே திருவாசகத்தின் உண்மைப் பொருளை விளங்கிக் கொள்ள இயலும்.இவ்வகையில் இக்கட்டுரையில் 'திருவாசகத்தில் காணும் பக்தி வெளிப்பாட்டு உத்திகள் ' பல்வேறு நிலைகளில் விளக்கப்படுகின்றன.

10.37 சைவத்திருமுறைகள்

முனைவர் எம்.பி. சியாமளா
சென்னை

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது திருவருள் வழியொழுகும் மெய்யடியார்கள் இறைவனது திருவருளையே கண்ணாகக் கொண்டு தம் அநுபவத்தாற் கண்ட நல்லொழுக்க நெறியினை விரித்தருளிய தெய்வத் தமிழ்ப் பாடல்களே திருமுறை என வழங்கப் பெறுகின்றன. திருமுறைகள் பன்னிரண்டு. அருமறைகளை 'எழுதாக்கிளவி' என்று வழங்குதல் போல் திருமுறைகளை 'எழுதுமறை'

என வழங்குதல் மரபு. தில்லைத் திருக்கோயிலில் அடங்கிக் கிடந்த தேவாரத் திருமுறைகளை வெளிக்கொணர்ந்தவர் நம்பியாண்டார் நம்பி. அவர் சம்பந்தரது அருளிச் செயல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பர் அருளிச் செய்த திருப்பதிகங்களை நான்கு , ஐந்து , ஆறு என மூன்று திருமுறைகளாகவும் , சுந்தரமூர்த்தி அருளிச் செய்தவற்றை ஏழாம் திருமுறையாகவும் வகுத்தருளினார். இவ்வாறு வகுத்தருளியதற்கு கடைப்பிடிக்கப்பெற்ற ஒரு நெறிமுறையும் உண்டு. அது கட்டுரையில் விளக்கப்பெற்றுள்ளது.

10.38 தேவாரம் ஓதும் முறையின் பழமை

பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகங்களை அவருடன் சென்ற அடியார்கள் எழுதியும் பாடியும் வந்தனர் என்பது வரலாறு. சம்பந்தர் பதிகங்களை எழுதி வரும் பணியினை மேற்கொண்ட அடியாரொருவர் , '' புத்தர் சமண் கழுக்கையர்'' எனத் தொடங்கும் பஞ்சாக்கரத்திருப்பதிகப் பாடலைப் பாடிப் , புத்த நந்தியின் மேல் இடி விழச் செய்தமையும் இவ்வுண்மையினை வலியுறுத்துவதாகும்.

சீர்காழிப் பதியில் பிறந்த கணநாத நாயனாரால் ஆதரிக்கப்பெற்ற சிவனடியார்கள் சம்பந்தர் ,அப்பர் ஆகியோர் அருளிய திருமுறைகளை எழுதியும் , வாசித்தும் , பொருள் கூறியும் போற்றிக் காவல் செய்துள்ளார்கள். இவர்கள் பதிகங்களை இவர்களுக்குப் பின் வந்த சுந்தரர் நன்கு பயின்று பின் பாடி மகிழ்ந்துள்ளார் இவ்வுண்மை '' நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக் கரையனும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லியேத்துகப்பானை'' எனவரும் சுந்தரர் வாய்மொழியால் இனிது விளங்கும்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வடநாட்டு இசை நூலாசிரியரான சாரங்கதேவர் என்பார் தாம் இயற்றிய ''சங்கீத இரத்னாகரம்'' என்ற வடமொழி இசை நூலில் , மூவர் திருப்பதிகங்களில் காணப்படும் தமிழ்ப்பண்கள் இவற்றைத் '' தேவாரவர்த்தநி'' எனும் அடை மொழியுடன் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பினை ஊன்றி நோக்குங்கால் அவ்வாசிரியர் வாழ்ந்த காலமாகிய கி.பி. 13 -ஆம் நூற்றாண்டுக்கு முன்பே மூவர் திருப்பதிகங்களும் ''தேவாரம் '' என்ற பெயரால் சிறப்பித்து

வழங்கப்பெற்றன என்பதும் , பண்பொருந்தப் பாடப் பெற்று வந்தன என்பதும் நன்கு பெறப்படும்.

10.39 சிவ புராணத்தில் உயிர்நிலைக் கருத்து

பெ. சீதாலட்சுமி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

பக்தி இலக்கியம் தமிழிலக்கியத்தில ஒரு குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளது. இப்பக்தி இலக்கியங்களில் பன்னிரு திருமுறைகள் சிவபெருமானின் பெருமைகளை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. இவற்றுள் எட்டாம் திருமுறையாக மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் அமைந்துள்ளன. இத்திருவாசகத்தில் சிவனது அனாதி முறைமையான பழமையைச் சிவபுராணம் விரித்துரைக்கிறது. சிவபுராணம் கூறும் உயிர்நிலைக் கோட்பாட்டை விளக்குதல் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

சைவ சித்தாந்த வளர்ச்சிக்குச் சாத்திர நூல்களுக்கு முன்னோடியாகத் தோத்திர நூல்கள் அமைந்துள்ளன. இத்தகைய வளர்ச்சி நிலையில் சிவுபராணம் கூறும் உயிரின் இயல்பு சைவ சித்தாந்தத்தில் உயிர்நிலைக் கோட்பாடுகளுக்கு அடிப்படை வித்தாக அமையுமாற்றை இக்கட்டுரை விளக்குகிறது.

சைவ சித்தாந்தம் கூறும் கேவலநிலை , சகல நிலை , சுத்த நிலை ஆகிவற்றின் மாணிக்கவாசகரின் கருதாளுமையை நோக்கும் போது சகல நிலைக் கோட்பாடு விரிவாகப் பேசப்படுவதை இக்கட்டுரை தகுந்த சான்றுகளுடன் எடுத்துரைக்கிறது.

10.40 திருமூலர் - திருமந்திரத்தின் வாழ்வியல் சிந்தனைகள்

முனைவர் வி. சீத்தாலெட்சுமி
எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி , திருப்பனந்தாள்

தனிமனிதச் சிந்தனைகள்

அன்பு - அறம் - தானம் - நடுவுநிலைமை - பிறன்மனைநயவாமை - பொறையுடைமை - செய்ந்நன்றி அறிதல் -

கல்வி - கேள்வி - கல்லாமை - தீயகுணங்கள் (கள்ளுண்ணாமை , காமம், குரோதம் , உலோபம் , மதம் மாச்சரியம்) பெரியோரைத் துணைகோடல் - கூடாஒழுக்கம் - புறங்கூறாமை - கேடுகண்டு இரங்கல்.

பொதுச்சிந்தனைகள்

நிலையாமை (இளமை , யாக்கை, செல்வம் , உயிர்) அவாஅறுத்தல - துறவு - பக்தியுடைமை தூயபஞ்சாக்கரம் - சிவ இறைபூசனை - முக்குற்றம் (மெய்யுணர்வு - குருதரிசனம் - சிவஞானம் (ஞானோதயம்) - அந்தணர் ஒழுக்கம்.

10.41 திருவாசகத்தில் மகளிர் விளையாட்டும் , மாதவன் அருளும்

முனைவர் சி. சுந்தராம்பாள்
அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் பல்கலைக்கழகம்

அவனருளாலே அவன்தாள் வணங்கிய திறத்தை எடுத்துரைக்கும் 'இறையனுபவப் பாட்டே' திருவாசகம். சொற்பதம் கடந்ததும் , நிலையுள்ளதுமான பேரானந்தத்தை வெளிப்படுத்த மகளிர் விளையாட்டுக்களைக் கருவியாகக் கொண்டுள்ளார் , நூலாசிரியர்.

நாதன்தாள் தன் நெஞ்சில் நீங்காமல் நின்ற திறத்தைச் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக51 தலைப்புக்களில் 656 பாடல்கள் மூலம் தெளிவுற விளக்குகின்றார் மாணிக்கவாசகர். மகளிர் விளையாட்டுக்களை நீராடும்செயலில் ஆரம்பித்துத் திருப்பொன்னூசலில் அமர்ந்து ஆடும் செயல்வரை பத்துத் தலைப்புக்களில் 183 பாடல்களில் விரிவுற எடுத்துப்பசுகின்றார்.

இறைவழிபாட்டு முறை , திருத்தலங்களின் சிறப்பு , அடியவர் முறையீடு , ஆன்ம வெளிப்பாடு இறைவனின் திருவிளையாடல் திறம் , மாலறியா நான்முகனும் காணாப் பரஞ்சோதி அடியவர்க்கு எளியனாகும் தன்மை ஆகிய அனைத்தையும் மகளிர் விளையாட்டுப் பாடல் பகுதிக்குப் பாடு பொருளாக்கியுள்ளார்.

மகளிரை உயிராக உருவகப்படுத்தி அவ்வுயிர் இறைவனைச் சென்றடைய 'அன்பு நெறியே'இறையருள் பெறச் சிறந்த நெறி என்ற தத்துவத்தை முன் வைத்து உள்ளார்.

திருவாசகத்தின் பெருமையைக் கூட்டுவிக்கும்சிறப்பு மகளிர் விளையாட்டுப் பாடலுக்கு அதிகம் உண்டு. 'அன்பு நெறி'யின் விளக்கமாகவே இப்பகுதிகள் அமைந்தள்ளன.

சமூகப் பண்பாட்டுப் பின்புலத்தின் வழி இறையனுபவத்தை மகளிர் விளையாட்டுப் பாடல் பகுதிகள் செம்மையுற உணர்த்துகின்றன எனலாம்.

10.42 சேக்கிழார் பார்வையில் சிவ வழிபாடு

முனைவர் தி. சுந்தராம்பாள்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

திருக்கோவில் வழிபாட்டு முறைகள் - உருவ வழிபாடு , அபிசேகம் , அர்ச்சனை - சேக்கிழார் வைதிகச் சடங்குகளை நேரிடையாகத் தாக்குதல் செய்யாது மறைமுகமாகத் தாக்கும் பாங்கு - வைதிக மறுப்பை வெளிப்படுத்த வாய்ப்பாக அமையும் அடியார் வாழ்க்கை நிகழ்வுகள் - திருநீல நக்கர் -அவர் மனைவி ; கண்ணப்பர் சிவகோசரியார் வழிபாட்டு முறை வேறுபாடு -இறை வழிபாட்டில் அன்பு வழி (பக்தி மார்க்கம்) வைதிக நெறி (விதி மார்க்கம்) - திரு நீறு , உருத்திராக்கம் ஆகிய சைவ சமயச் சின்னங்கள் ஆதல் - உருத்திர மந்திர ஓதுதல் - திருநீறு தரித்தவரை மதித்துப் போற்றுதல் - தோவரப் பாடல்களால் இறைவனை வழிபடுவதே அருச்சனை. தேவாரப் பாடல்களை ஓதி மலர்களை இடுதலே வழிபாடு.சிவவழிபாட்டில் ஐந்தெழுத்து மந்திரம் அன்பு உள்ளம் ஆகிய இரண்டின் இன்றியமையாமை - பக்தன் பிறருக்காக எதனையும்தியாகம் செய்யும் இயல்பு உடையவன். பக்தன் தன்னையும் , தியாகம் செய்யத் தயங்க மாட்டான். பக்தனின் தனித்துவம் மாறும் - ஏன் ? எப்போது ?

10.43 ஒன்பதாம் திருமுறையின் சிறப்பும் சேதிராயரின் வாக்கும்

முனைவர் சி. சுந்தரேசன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் தோத்திரம் , சாத்திரம் , பிரபந்தம் , புராணம் என நான்கு வகையாக அமைந்தள்ளன.

தோத்திரப் பகுதியின் இறுதிப் பகுதியாக அமைந்திருக்கும்

ஒன்பதாம் திருமுறையினைத் திருமாளிகைத் தேவர் , நம்பிகாட நம்பி , கண்டராதித்த சோழன் , வேணாட்டடிகள் , திருவாலி அமுதனார் , புருடோத்தமன் , சேதிராயர் என்ற ஒன்பது பேரும் திருவாய் மலர்ந்தருளிய இருபத்தெட்டுத் திருப்பதிகங்களைத் திருவிசைப்பா என்றும் , சேந்தனார் பாடிய பல்லாண்டைத் திருப்பல்லாண்டு என்றும் வழங்குதல்

திருவிசைப்பா - திருப்பல்லாண்டு அளவிற் சிறியதாயினும் திருக்கோவில் வழிபாட்டில் இடம்பெறும் பஞ்சபுராணத்தில் திருவிசைப்பாவில் ஒன்றும் திருப்பல்லாண்டில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் இத்திருமுறையிலிருந்து இடம் பெற்றிருப்பது இதில் மக்களுக்குள்ள ஈடுபாட்டினை நன்கு வெளிப்படுத்துவதுடன் இதன் சிறப்பும் புலனாகிறது.

பத்தாவது பாடலில் இப்பதிகத்தைப் படிப்போர்க்குக் கிடைக்கும் பெரும்பயனைத் 'துறக்கத்திடை ஆய இன்பம் எய்திருப்பர் ' என்று குறிப்பிடுகின்றது.

10.44 திருவாசக உருக்காட்சிகள் புலப்படுத்தும் பக்தியனுபவம்

முனைவர் பெ. சுப்பிரமணியன்
அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி

உருக்காட்சி வழித் திருவாசகத்தை ஆராய்ந்து மாணிக்கவாசகரின் பக்தியனுபவத்தைப் புலப்படுதுவது இவ்வாய்வின் நோக்கம் ஆகும். அருளியல் அனுபவத்தைச் (Mystic Experience)சொல்ல மாணிக்க வாசகர் திருவாசகத்தில் பொருத்தமான உருக்காட்சிகளைக் கையாளுகின்றார்.

உவமை , உருவகம் , அடைமொழிகள் , வருணணைகள் , சொல்லோவியங்கள் ஆகியன 'உருக்காட்சி' (Imagery)என்றழைக்கப்படும். உருக்காட்சி வழியாக ஒரு கவிஞனின் வாழ்க்கையனுவத்தை அறிய முடியும்.மேலும் உருக்காட்சிகள் , கவிஞன் சொல்ல வருகிற ஒரு கருத்தைவிளக்க, அழுத்தமாகச் சொல்ல ஓர் உத்தியாகக் கையாளப்படுகின்றன. கவிஞனின் புலனுணர்வு அனுபவத்தை உருக்காட்சிகள் சிறப்பாகப் புலப்படுத்துகின்றன.

அருளியல் அனுபவத்தைச் சொல்ல மாணிக்க வாசகர் உருக்காட்சிகளை ஓர் உத்தியாகப் பயன்படுத்துகின்றார். மலர் உருக்காட்சி மூலம் இறைவன் தனதுமலரடியைத் தலையில் வைத்தமையைப் புலப்படுத்துகின்றார். இறைவன் குருந்த மரநிழலில் தனக்குக் காட்சி

கொடுத்ததை மர உருக்காட்சி மூலம் குறிப்பிடுகின்றார். நாய் / தாய் முரண் உரு மூலம் , தனது தாழ்ந்த நிலையினையும் இறைவனின் உயரிய நிலையினையும் குறிப்பிடுகின்றார்.(Theory of opposition)

பக்தியனுபவத்தைப் புலப்படுத்தத் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பொருத்தமான உருக்காட்சிகளைக் கையாண்டுள்ளார்.

10.45 அடியாரை ஆட்கொண்ட அந்தணக் கோலம் (சேக்கிழாரின் வாக்கின் - அடிச்சுவட்டில்)

வி. செல்லாத்தாள்

முன்னுரை

சைவத்தின் பழமைச் சிறப்பு , முழுமுதற் கடவுள் , சைவ சமயத்தின் உட்பொருள், இறைவனின் அருள் வடிவம் , அன்பு அவயவம், திருவுருவ நோக்கம் ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

கட்டுரை மூலமும் - நோக்கமும்

இவ்வரங்கக் கட்டுரையின் புலம் பன்னிருதிருமுறைகள். மூலம் - பன்னிரண்டாந்திருமுறை அருளுள்ளம் கொண்ட அடியாரை ஆட்கொள்ள அம்பலவாணன் கொண்ட வேடங்களில் அந்தண வேடமே அதிகம் ஏன்? என்பதைச் சிந்தனை செய்வதே ஆகும்.

கட்டுரை அமைவு

திருமுறைகள் - அடியார்கள் - உருவம் ஏன் ?

முடிவுரை

மனிதன் மனிதக் குணம் நிறைந்து வழிய வழிவகுப்பது பனுவல்கள். அப்பனுவல்கள் தம்மைக் காத்தருளும் கடவுளுக்கு வகுத்த உருவம் - அவன் எடுத்த உருவம் - இவ்வகையில் - கட்டுரை அமையும்.

10.46 தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பெரிய புராணத்தின் கொடை

முனைவர் க. சேகர்
தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி , மயிலாடுதுறை

முன்னுரை

நமது 'இந்தியத் தேசீயம்' வேற்றுமையில் ஒற்றுமை கொண்டது. இந்தியாவில் பல்வேறு இன , மொழி , மதத்தைச் சார்ந்த மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் , அடிப்படையான தேசீய , மனிதாபிமான உணர்வு அவர்களை இணைக்கிறது . ஒற்றுமையுடன் வாழ வைக்கிறது. இவ்வொற்றுமைக்குப் பல்வேறு காரணங்கள் அமைந்திருப்பினும் அதன் 'இறையாண்மைக்கு'ச் சைவ சமய இலக்கியங்களும் காரணமாகின்றன. அவ்வகையில் தேசீய ஒருமைப்பாடடிற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பன்னிரண்டாம் நூற்றாண்டுக் காப்பியமான பெரியபுராணத்தின் பங்கு எத்தகையது என்பதை ஆய்வதே ,இக்கட்டுரையின் நோக்கம்.

இந்தியத் தேசிய ஒருமைப்பாடும் பெரிய புராணமும்

இந்திய நாடு வேற்றுமையில் ஒற்றுமை காண்பது போலவே , பெரிய புராணக் காப்பியத்திலும் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதே அடிநாதமாக இருந்து இக்காப்பியத்தை இயக்குகிறது.

இவ்வொருமைப்பாட்டிற்கு அன்பு - காதல் - பக்தி - சால்பு - சாதி - தொழில் - வழிபாடு - தொண்டு என்பவை , தடைகளை நீக்கி , 'இணைப்புப்பாலமாக'இயங்கி ஒருமைப்படுத்துவதை நாயன்மார்கள் வாழ்க்கை வழி நின்று இக்கட்டுரை விளக்குகிறது.

பண்பாடு

'பண்படு' என்ற சொல்லிலிருந்து தோன்றியது பண்பாடு. பண்பாடு என்பது ஒரு சமூகத்தின்மேன்மையையும் , சிறப்பையும் நாகரிகத்தையும் விளக்குவதாகும். எனவே , இச்சொல் பற்றிய சொற்பொருள் விளக்கமும் - தமிழர் பண்பாடுகளான விருந்தோம்பல் - மறைபிறர் அறியாமை - கொள்கையில் உறுதி - பகைவனுக்கும் அருளுதல் - மனித நேயம் - நட்பு - நீதி - கற்பு முதலியனவும் பெரியபுரணாத்தின் கொடைகளாக இருந்தவற்றை ஆய்ந்து வெளிக்கொணர்கிறது இவ்வாய்வுக்கட்டுரை.

10.47 சைவத்தில் திருவாசகத்தின் இடம்

தூ. சேதுபாண்டின்

சைவ சமயத்தில் சாத்திர நூல்களாகவும் , தோத்திர நூல்களாகவும் பலநூல்கள் தோன்றியுள்ளன. சைவ நாயன்மார்களுள் ஒருவரான மாணிக்க வாசகப்பெருமான் அருளிச் செய்த 'திருவாசகம்' என்னும் நூல் சைவசயமத்தில் பெறும் இடம் குறித்து ஆய்கிறது இக்கட்டுரை

இந்த ஆய்வுக்குத் திருவாசகம் நூலே முதன்மைச் சான்றாக அமைகின்றது. சைவ சமயம் குறித்த நூல்களும் , ஏனைய திருமுறைகளும் இவ்வாய்வுக்குரிய துணைச் சான்றாக அமைகின்றன.

திருவாசகம் என்ற பனுவலினை (text) அகச்சான்றாகக் கொண்டு மணிவாசகப்பெருமானின் பார்வையில் இறைத்தத்துவம் , இறைவனின்தன்மை - இறைவனின் எளி வந்த தன்மை -இறைவனைப் பெற அடியவர்கள் ஆற்ற வேண்டிய பணி - உயிர்கள் இறைவனை அடையும் வழி போன்றவற்றை ஆய்கிறது இக்கட்டுரை.

10.48 திருக்கோவையாரில் கல்விநலன்

ஞானப்பூஞ்கோதை
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் மற்றும்
தமிழ்க்கல்லூரி, பேரூர்

பன்னிரு திருமுறைகளுள் எட்டாம் திருமுறையாகப் போற்றப்படும் திருவாசகமும் திருக்கோவையாரும் மாணிக்கவாசகரால் பாடப்பட்டவை. திருவாசகத்தில் பாவை மகளிர் அடியார் பெருமக்களைத் தம் காதலராக அடைய வேண்டும் என்று நோன்பு நோற்று வரம் கேட்கின்றனர். ஆனால் நோற்ற நோன்பின் பயனாய்த் தாம் விரும்பிய தொழும்பராம் காதலரைப் பெற்றுப் பெருவாழ்வு வாழந்தமை இந்நூலுள் சுட்டப்படவில்லை. திருக்கோனவயாரில் அவ்வாழ்வின் திறம் கனவு , கற்பு எனும் இருவகை ஒழுக்கங்களில் வைத்து விளக்கப்படுகின்றது. ஆதலால் இந்நூலினைத் '' திருவாசகத்தின் உரைப்பொருள் பற்றிய திருமறை'' எனலாம். '' கோவையார் மேல் உரைப்பொருள் முற்றிய திருவாசகம்''எனவும் கூறலாம்.

திருமணத்திற்கு முன்னர்த் தலைமகள் பெற்ற கல்வியைப் பொதுநிலை எனலாம். பின்னர்ப் பெறுவதனைச் சிறப்புநிலை எனலாம்

அவற்றால் பெறும் நலன்களை முறையே கலையறிவு , மெய்யுணர்வு என்று பகுத்தறியலாம். மணம் புரிந்து இன்புற்று வாழும் தலைமகள் உடையார் முன் இல்லார் போன்று ஏங்கி நின்று கற்க நினைக்கின்றான். ஆதலின் பெறுதற்குரிய கல்வியின் பெருமையினைத் தோழிக்குத் தெய்வநலம் கமழ விரித்துரைக்கின்றான். நன்மைக்கு எல்லையின்றி விளங்கும் கல்வியாகிய செம்பொன் வரையிலான அளவில்லாத அளவினை அடைந்தவர்கள் யாரோ அவர்கள் அம்பலத்தாடும் இறைவனது திருவடியை இடையறாது நினைந்தவர் போன்று அளவிலா நலம் அடைந்தவராவர் எனக் கூறுகிறார். 'கல்வி கரையில்' என்பதனை உணர்ந்தவன் சீரளவில்லாத்திகழ் தரு கல்வி (தி.கோ.பா.308) என்கிறார்.

'' கற்றலின் பயன் இறைவனைத் தொழுதலே
இறைவனைத் தொழுதலின் பயன் கற்றலின் பயனே''

எனும் கருத்து இக்கட்டுரைக்கு மையமாக அமைகிறது.

10.49 திருவாசகத்தில் - சிவபுராணம்

ந. தமிழ்த்தெய்வம்
எம்.வி.எம். முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி , திண்டுக்கல்

முன்னுரை

திருவாசகத்தின் நூன்முகம் போன்றது. ஆன்மாக்களைப் படிப்படியாகத் திருவருள்க் கருணைக்கு ஆட்படுத்தி , இறைஅருள் பெறச் செய்த பிறவித்தளை நீங்க இறையை வாழ்த்தி வணங்கச் செய்யும் , பேரருட் பேறே சிவபுராணம்.

வாழ்த்தும் , வணக்கமும்

நமசிவாய எனும் முதல் சொல் வாழ்த்தாகி அவன் தாளினை வணங்கித் தொடங்குதலை மரப்பாக்கி உளமார நெகிழ்ந்து கசிந்துருகி வாழ்த்தி வணங்கினால் ஆன்மாவுக்குச் ''சிவனே அருளாகி வந்து அவன் தாள் காட்டி உய்விப்பான் என்கிறது.''

மனம் , மெய் , மொழி ஒருமுகமாதல்

இவற்றின் அடக்கமே அவன் அருள்நிலை பெற வழி என்று கூறிய பெருந்தகை

'' பொய்யா வினையேன் என்ற அடி தொடங்கிப் பின் வரும் அடிகளில் சென்ற பிறவிகளின் நிலை - இன்று எடுத்துள்ள பிறவி -

பிறவித்தளையின் இடர் கூறி நைந்து உருகினால் எவ்வாறு இறைவன் உயிர்படும் இன்னல்களைத் தீர்ப்பான் என்பதைக் கூறுகிறார். ''

10.50 திருமந்திரத்தில் வாழ்வியல் அறங்கள்

அ. தனலெட்சுமி இராதாகிருட்டிணன்
அ.து.ம. மகளிர் கல்லூரி , நாகப்பட்டினம்

நூல்களை உலகியல் நூல் , வீட்டியல் நூல் என இரண்டாகப் பிரிக்கலாம் . வீட்டியல் நூல் தோத்திரம் , சாத்திரம் என இருவகையாக அமையும். தமிழில் தோத்திர சாத்திரங்களாக நிலைபெற்றிருப்பவை தெய்வத்திருமுறைகள் பன்னிரண்டும் , சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட ஞானசாத்திரங்களுமாகும்.

பன்னிரு திருமுறைகளும் மந்திர சொரூபமாயினும் சிறப்பாக மந்திரம் என்றே பெயர் பெற்று முன்னும் பின்னும் உள்ள மற்றைத்திருமுறைகளும் மந்திர சொரூபமே என்பதை விளக்கி நிற்பது பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் ஒன்றே. இதனுள் கொல்லாமை , புலால் உண்ணாமை , பிறர் மனை நயவாமை , கள்ளுண்ணாமை , அறம் செய்தல் , அன்புடைமை , எளிய வழிபாட்டு முறை முதலான பல்வேறு வாழ்வியல் அறங்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

10.51 திருமுறைகளில் சிவபூசையின் இன்றியமையாமை

G. திருஞானசம்பந்தம்

'' மானுடப்பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம்
ஆண் இடத்து ஐந்தும் ஆகும் அரன்பணிக்காக அன்றோ''
(சி.சி.182)

பாசச் சேர்க்கையில் துன்புறுகின்ற உயிர் அதிலிருந்து விடுப்பட்டு எந்த வேளையிலும் தன்னுடன் பிரிப்பின்றி இரண்டறக் கலந்து நிற்கும் சிவபரம் பொருளை அறிந்து '' அதுவாகவே'' நின்று சிவபோகம் நுகர்தலே முத்திப் போறாகும். பேரானந்தப் பெரும் பேறாகிய இவ்வீடு பேறு சிவபெருமானது திருவருளால் அன்றிச் சித்திக்காது. திருவருளைப் பெறும் பக்குவம் உயிர்கட்குச் சிவபுண்ணிய வாயிலாகவே உண்டாகும். அச்சிவ

புண்ணியமே ''சிவார்ச்சனை '' எனப்படும் சிவபூசையாம் . இதனைத்திருமுறைகள் எவ்வாறு சுட்டுகின்றன என்பதைக் இக்கட்டுரை ஆய்ந்து கூறுகின்றது.

10.52 பெரியபுராணமும் சிவதீக்கையும்

வெ. திருநாவுக்கரசு
தமிழ்ப் பல்கலைக் கழகம்

உலகெலாம் வாழும் உயிர்கள் அநாதியானவை. இவ்வுயிர்கள் மும்மலங்களினின்று முற்றிலும் நீங்கி முத்தி நெறி அடைதற்குக் குருவருள் வழியினலான திருவருள் வேண்டும். இவ்இறையருளை அடைவதற்குரிய நெறிகளில் குருவழி செய்யப்படும் தொடக்கச் சடங்கு தீக்கை ஆகும். தீக்கை அளித்து மெய்யுணர்வைப் பெருகச் செய்யும் குரு மும்மலம் நீக்கம் கொண்டவராதல் வேண்டும். எண் குணங்கள் கொண்ட இறைவனாகிய நிலை உற்றவராதல் வேண்டும். இந்நிலை கொண்ட ஞான குருவே சிவ தீக்கை அளித்துப் பிறவியறுக்கும் அருளாளராவார். குருவாகி நின்றுதன் முனைப்பற்ற நிலையில் தீக்கை அளித்த அடியார்கள் வரலாறு பெரியபுரணாத்துள் கூறப்பட்டுள்ளது.

பெரியபுராணம் கூறும் அடியார்களுள் குருவாகி நின்றவர்கள் பலர். இறைவன்தானே குருவடிவில் எழுந்தருளியும் , இறையருள் பெற்ற அடியார்களும் குருவாகி நின்று தீக்கை அளிக்கின்றனர். சீர்காழியில் அவதரித்த ஞானசம்பந்தர் தனக்கு உபநயனம் செய்வித்த மறையவர்களுக்கு அவர்கள் முன்னரே அறிந்திருந்த மறைகளில் இருந்த ஐயங்களை அவர்கள் வினவிட அதனைத் தெளிவித்து அஞ்செழுத்து மந்திர உபதேசப் பதிகம் அருளினார்.

இவ்வாறாக இறைவன் , அடியார்கள் தீக்கை அளிக்கின்ற முறைகளைக் கண்வழித் தீக்கை , தொட்டுத் தீக்கை , திருவடித் தீக்கை , மந்திரம் ஓதித் தீக்கை , சமயச் சின்னமளித்துத் தீக்கை , சமய முத்திரை அளித்துத் தீக்கை , தீட்சாநாமம் அளித்தல் , மனதின் வழி நினைத்துத் தீக்கை அளித்தல் என எட்டு வகைகளாகப் பிரிக்கலாம். சிவதீக்கையையும்அளிக்கும் முறையையும் பெரியபுராணம் எவ்வாறு காட்டுகிறது என்பதைப் பற்றிக் கூறுவதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

10.53 திருமுறைகளில் கயிலைக்காட்சிகள்

முனைவர் க. திலகவதி
தமிழ்ப் பல்கலைக் கழகம்

கயிலையின் சிறப்பு

இந்தியத் திருநாட்டின்தனிச்சிறப்புக்களுள் ஒன்றாக விளங்கும் இயமமலை பண்டைக்காலந்தொட்டே இறைவன் எழுந்தருளியிருக்கும் தெய்வீகப் புண்ணிய பெருமலையாக வைத்துப் போற்றப்பட்டு வருகின்றது. சிவபெருமான் மலைமகளுடன் உறையும் இடம் 'கயிலாயம்'எனத் தமிழ் இலக்கியங்களும் , வடமொழிப்புராணங்களும் கூறுகின்றன.

கயிலைமலையின் அமைப்பு

இமயமலையின் ஒரு பகுதியாக விளங்கும் கயிலைமலை 22028 அடி (சுமார் 6690 மீட்டர்) உயரம் உடையது. சுற்றளவு 50 கி.மீட்டர். இம்மலை இமயத்தின் வடக்கிலும் , புனித மானசரோவர் ஏரிக்குத் தென்மேற்கிலும் ஆறு சிமையங்களோடு (சிகரம்) பளிங்கு மலையாகக் காட்சி அளிக்கின்றது. இம்மலை ,திபெத் நாட்டில் பூட்டான் தேயத்து அரசு ஆளுகைக்கு உட்பட்டதால் , இம்மலைக்கு வழிபடச் செல்ல விரும்புவோர் , அவ்வரசாங்கத்தின் அனுமதிபெற்றே செல்ல வேண்டும். தில்லியிலுள்ள வெளியுறவுத்துறை அமைச்சகம் இதற்குரிய முன்னேற்பாடுகளைச் செய்து ஆண்டுதோறும் இறையன்பர்களை அனுப்பிவருகின்றது.

திருமுறைகளில் கயிலைக்காட்சிகள்

இவ்வகையில் திருஞானசம்பந்தரின் கயிலாயச் சிந்தனை - திருநாவுக்கரசரின் கயிலைத் துதிப்பாடல்கள் (திருநெய்த்தானம் திருத்தாண்டகம் - 6-ஆம் திருமுறை, பதிகம் - 41 ; ஸ்ரீகயிலாயம் பதிகம் - 55,56,57(- திருநாவுக்கரசரின் கயிலாயச் சிந்தனை (சரக்கறைத் திருவிருத்தம் ; காப்புத் திருத்தாண்டகம் , திருவாரூர் , திருவேகம்பம் திருத்தாண்டகம்) - திருநாவுக்கரசரின் கயிலைப்பயணம் - திருவையாற்றில் கண்ட கயிலைக்காட்சி ;- காரைக்கால் அம்மையாரின் கயிலைப் பயணம் - கயிலையில் கண்ட காட்சி - கயிலையில் கேட்ட வரம் - சுந்தரரின் கயிலைப்பயணம் - கயிலைக்காட்சி முதலியவற்றை விளக்கும் நிலையில் இக்கட்டுரை அமைகின்றது.

10.54 இனிமைதரும் எட்டாம் திருமுறை திருவாசகம் - ஒரு நோக்கு

எஸ். தெய்வ நாயகம்
கொழும்பு , இலங்கை.

திருவாதவூரடிகள் அருளிய இன்சுவை அமுதங்களில் திருவாசகம் பெரும் சுவை கொண்டது. அக்காலம் , இக்காலம் இரண்டிற்கும் ஏற்புடையதான இந்த இன்சுவை அமுதத்தைப் படித்து உணரும் போது எமது பிறப்பின் மகிமையை உணர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

திருவாசகத்திற்கு உருகாதோர் ஒருவாசகத்திற்கும் உருகார் என்ற பழமொழிக்கு இணங்க அதில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்கள் இறையுணர்வின் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் கனிந்த உள்ளம் கொண்டவர். நிறைந்த அன்புடையவர். இதனால் இறையுணர்வில் படிந்து குருவடிவாய் இருந்த இறைவனிடம்தன்னை முற்று முழுதாக ஒப்படைத்துச் சரணாகதியடைந்துவிட்டார். இந்தச் சரணாகதிப் போக்கினால் தன்னை 'நாயே' என இழித்துக்கூறி இறைவனை நெஞ்சுருகப் போற்றிப் பாடும் பாடல்களாகத் திருவாசகம் அமைந்துள்ளது.

பாடல்களில் உள்ள இனிமை , மெய்ப்பாடு , உள்ளுணர்வு , கருவூலங்கள், இறையருளின் தன்மை ,ஆன்மாவின் புரிந்துணர்வு , குருவடிவின் தோற்றம் என்பன தொடர்பாகச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமையும். உலக இன்பங்களை துய்ப்பவர்கள் இறையருளின் தன்மையைப் புரிந்து அதன்படி ஒழுகவேண்டும் என்பதைத் திருவாசகம் உணர்த்தி நிற்கின்றது. ஒருவர் பிறப்பிலும் இறைவனுடன் இணையும் தகுதியைப் பெறலாம். ஆனால் மனிதப் பிறவியொன்றே இறையருளைப் பெறுவதற்கும் , இறைவனோடு இணைந்து கொள்வதற்கும் ஏற்ற ஒரு பிறவியாகும். இப்பிறவியின் தன்மையை உணர்த்தி வழிப்படுத்தும் திறவு கோலாகத் திருவாசகம் அமைந்து கேட்பவர்க்கும் , படிப்பவர்க்கும் இனிமை தருகின்றது. இந்த இனிமை எந்த எந்த இடங்களில் ததும்பி நின்று எமக்கு மெய்யுணர்வைத் தந்து இறையருளுக்கு எம்மைத் தயார்படுத்திக் கொள்கின்றது என்பதைப் பற்றி ஆராய முற்படுவதே உள்நோக்கமாகும்.

10.55 பக்திக்கும் ஞானத்திற்கும் வயதில்லை

கோ.ப. நல்லசிவம்
தஞ்சாவூர்

திருமுறைகள் சிந்திப்பரியன. ஆயின் சிறந்து செந்தேன் முந்திப்பொழியும் சிறப்புடையன. பந்தித்து நின்ற பழவினை தீர்க்கும் ஆற்றல் கொண்டன. ஆதலின் அவை குறித்துச் சிந்திப்பதும் ஆய்வதும் அவற்றில் தோய்வதும் அதற்காக அவற்றைப் பயில்வதும் பல்வேறு வகைப்பட்ட ஞானத்தை வழங்கும். இத்துணிவில் திருமுறைகளைப் பயில முற்பட்டபோது சில உண்மைகள் என் சிற்றறிவுக்குத் தெளிவாயின. பக்தியும் ஞானமும் ஒன்றோடொன்று தொடர்புடையன. பக்தியும் ஞானமும் யாருக்கும் சித்திக்கும், அதற்கு வயது , படிப்பு, குலச்சிறப்பு போன்ற எதுவும்தேவையில்லை. நெஞ்சார்ந்த அன்பும் உறுதியும் தான்தேவைப்படும்.இவ்வுண்மையைத் திருமுறைகளின் துணைக கொண்டு ஆய்வு செய்ய முற்படுகிறது இக்கட்டுரை.

வருங்காலச் சந்ததியினரை , இன்றைய இளைஞர்களை ஊக்கப்படுத்தி ஆக்கப்பணிகளில் ஈடுபடுத்த இக்கட்டுரை ஒரு தூண்டுகோலாக அமையும். இளைஞர்களே எழுமின் விழிமின் துணிமின், வெற்றிகிட்டும். இதுவே இக்கட்டுரையின் பயனாக அமையும்.

10.56 அப்பர் தேவாரத்தில் வழிபாட்டு நிலைகள்

முனைவர் அ. நலங்கிள்ளி
பிஷப் ஹீபர் கல்லூரி ,திருச்சி.

சமய நெறியில் , இறைவனை அடைவதற்குரிய நெறிகளில் வழிபாடு இன்றியமையாது. அவ்விறைவனை வழிபடுதற்குரிய திருக்கோலங்களும் வடிவங்களும் திருமுறைகளில் கூறப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் பாடல்களில் இவ்வழிபாட்டு நிலைகள் பரவலாக இடம் பெற்றுள்ளன.

இக்கட்டுரையில் அருவம் , அருவுருவம் , உருவம் பற்றிய விளக்கங்கள் முதலில் விளக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து சோமாஸ்கந்தர் , ஆடல்வல்லான், அம்மையப்பர் வடிவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

இறைவனின் வடிவங்களைத் திருக்கோயில்களில் வழிபடும்

நிலையும் மனக்கோயிலில் வழிபடும் நிலையும் இக்கட்டுரையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

மேலும் மனத்தைக் கோயிலாகக் கொண்டு வாழும்அடியார்களை வழிபடுவது சிறந்ததாகக் கருதப்பட்டநிலைகளையும் இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. சிவனை மனக்கோயிலில் கொள்ளும் அடியாரை சிவனாகவே கருதிப் போற்றும் நிலை சைவ மரபில் உள்ளது. சிவனை முழுமுதலாகக் கொண்டு வழிபடுவது என்பதே இதன் அடிப்படைக் கருத்து.

10.57 சம்பந்தர் காட்டும் பக்தி நெறி

கா. நாகராசு
த.சா.அ.க.அ. தமிழ்க் கல்லூரி , பேரூர்.

தென்மைச் சமயமாம் சைவத்தை நிலை நிறுத்த வந்தவர் சம்பந்தர். இறைவனான சிவபெருமான் மீது உயிர்கள் பக்தி செலுத்தும் வழிமுறைகளைச் சம்பந்தர் , தமது பதிகங்களில் பலவிடங்களில் எடுத்துரைத்துள்ளார். அவற்றைத் தொகுத்து அவர்காட்டும் பக்திநெறி பற்றிக்காண்பதே இக்கட்டுரையின்நோக்கமாகும்.

இறைவனை வழிபடும்முறைகளைச் சம்பந்தர் நன்கு புலப்படுத்துகின்றார். திருநீறணிதல் , திருவைந்தெழுத்தோதுதல் முதலிய எளிய வழிபாடுகளே பெரும்பயன்களைத் தரவல்லன என்பதைச் சிலபதிகங்களில் உறுதிபடக் கூறுகிறார். திருக்கோயில் வழிபாடு , இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டுதல் , இறைவனுக்கு மலர்கள் அணிவித்தல் , நறும்புகை , திருவிளக்கு முதலியவற்றை இறைவனுக்குக் காட்டுதல் எனப் பலவகையான சரியை , கிரியை வழிபாடுகளை ஆங்காங்கே எடுத்துரைக்கின்றார். யோக , ஞான வழிபாடுகளும்அவர்தம் பாடல்களில் காணப்படுகின்றன.

இப்படியெல்லாம் இறைவனை வழிபட்டால் , பலவகையான இம்மை மறுமைப் பயன்களைப் பெறமுடியும் என்பதையும் பலவிடங்களில் சுட்டுகிறார். மேலும் , அடியார்களை நாளும் கோளும் நலியாது என்பதைக்கோளறு பதிகத்தில் கூறுகின்றார். எளிய அடியவர்களும் இறைவனுக்கு உவப்பானவர்களே என்று விளக்குவதன் மூலம் எல்லோரையும் இறைவனடிக்கு ஆற்றுப்படுத்துகின்றார். சம்பந்தர் நெறி இக்காலச் சூழலுக்கும் ஏற்ற இனிய நெறிதான் என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

10.58 பெரியபுராணம் காட்டும் பக்திநெறி

முனைவர் நிர்மலா மோகன்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

சிவனையும் , சிவனடியாரையும் போற்றும் மரபில் வந்த திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாறு , அரிய பெரிய உண்மைகள் பலவற்றை உணர்த்தி நிற்கின்றது. காதலாகிக் கசிந்து உருகும் சிவனடியார்கள் பக்தி நெறியில் ஒருவரை ஒருவர் விஞ்சி நிற்கின்றனர். எனினும் பட்டினத்தார் தமது பாடல் ஒன்று மூன்று அடியவர்களது பக்திநெறியைக் குறிப்பாகச் சுட்டுகின்றது. பக்தியில் திளைத்த பட்டினத்தடிகள் . இம்மூவரை மட்டும் குறிப்பாகச் சுட்டுவதற்கு ஏதேனும் ஒரு காரணம் இருக்கவேண்டும். அது என்ன காரணம் என்னும் கண்ணோட்டத்தில் அமைந்துள்ளது இக்கட்டுரை.

10.59 திருமூலர் காட்டும் மானிட வாழ்வியில் நெறிமுறைகள்

ப. பத்மநாபன்
செய்தி மற்றும் விளம்பரத்துறை , புதுச்சேரி அரசு.

தொல்காப்பியர் கூறும் மனிதனின் நிலை - திருமூலம் கூறும் பெறுதற்கரிய பிறவி. மனிதப்பிறவியின் மேன்மை , மனிதப்பிறவி எதற்காக ? மனிதனுக்கான உண்மையான கல்வி , கல்வியின் இன்றியமையாமை , குருட்டுக் கல்வி , கல்லாமை , இல்லற நெறிகள் , பசிப்பிணி தீர்த்தல் , விலங்குகளின் பசிப்பிணியையும் தீர்த்தல், இன்னுரை, இறை வழிபாடு , ஆசையறுத்தல் , கொல்லாமை , புலால் உண்ணாமை , நடுவு நிலமை , கள்ளுண்ணாமை , பிறர் மனைநயவாமை, நிலையாமை (இளமை , செல்வம் , யாக்கை , உயிர்) , சிலம்பு கூறும் அறிவுரை ஆகியவை பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது. திருமூலர் காட்டியுள்ள மானிட வழ்வியல் நெறிமுறைகள் இவ்வாய்வில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

10.60 திருமுறையின் நோக்கும் போக்கும்

முனைவர் த.கோ. பரமசிவம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

வினையை மாற்றமுடியும் , போக்கமுடியும் , முற்றிலுமாக அழிக்கமுடியும் என்னும் நம்பிக்கையை ஊட்டுவது பக்தி இயக்கம். தென்னகத்தே மலர்ந்த இவ்வியக்கம் ஆழ்வாராலும் நாயன்மாராலும் சிற்ப்பாக வளர்க்கப்பெற்றது. அவர்களிடத்து மலர்ந்த திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களும் திருமுறைகளும் மொழிப்பயிரையும் பக்திப் பயிரையும் ஒரு சேர வளர்த்தன, வளர்த்து வருகின்றன. அவற்றுள் சைவத்திருமுறைகளின் நோக்கும் போக்கும் குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்ய முற்படுகிறது.

உயரிய திருமுறையின் நோக்கு என்ன ? திருமுறையின் பொருள் யாது ? திருமுறை வாழ்க்கை யாது ? திருமுறை அற்புதம்பேசுவதா ? அன்பைப் பறை சாற்றுவதா ? திருமுறையின் இலக்கியச் சுவையும் இலக்கண அமைப்பும் அதன்நோக்கை இலக்கை எட்டுதவற்குத் துணை செய்கின்றனவா ? போன்ற வினாக்களுக்கு விடை காண முற்படுகிறது.

குறிக்கோளிலாது கெடும்தன்மை , நிலைபெறுமாறு எண்ணும் விதம் , தேடிக் கண்டு கொண்ட விதம் , பறையும் நாம் செய்த பாவங்கள், முந்தை வினைமுழுதும் ஓய உரைக்கும் பான்மை , எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையாம் தன்மை , பொன்னார் திருவடிக்கு விண்ணப்பம், ஈர அன்பினர் , யாதும் குறைவிலர் போன்ற தன்மைகளை விளக்குவதாகவும் இக்கட்டுரை அமையும்.

10.61 காரைக்காலம்மையார் பாடல்களில் தத்துவக் கருத்துக்கள்

விசு. பழனியப்பன்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சமயக் குரவர் நால்வர்க்கும் முன்தோன்றிய திருமூலர், காரைக்கால் அம்மையார் இருவரும் சமய வளர்ச்சிக்குக் கால்கோளிட்டவராவர். சாத்திரம் பாடிய திருமூலரினும் பக்திப்பனுவல்களில் இறைதத்துவத்தைக் கூறுதற்கு வித்திட்டவர் காரைக்காலம்மையாரே.

உயிர்களின்தோற்றத்திற்கும் மறைவிற்கும் இறைவனே காரணம். பதியாகிய இறைவனைப் பசுவாகிய உயிர்கள் நினைத்திருக்க வேண்டும்.

இறைவனின் சரணார விந்தங்களைச் சார்ந்தால் பாசமறுபடும் : மேலான இருவினையும்வேரறும் , அறிவானும் தானே, அறிவிப்பானும்தானே , அறிவாய் அறிகின்றானும் தானே எனக் காண்பவன் , காட்டுபவன் , அறிவினுள்ளே அத்துவிதமாயக்கலந்து நிற்பானும் அவனே

இவை காரைக்காலம்மையார் பாடல்களில் இடம் பெற்றுள்ள சில தத்துவக் கருத்துக்களாம். இவற்றின் மூலம் சமயத்தத்துவங்களைப் பாடிப் பக்தி இலக்கியம் புனைவோருக்கு முன்னோடியாய் இருந்தது மட்டுமல்லாமல் சாத்திரக் கருத்துக்களின் வளர்ச்சிக்கும் கால் கோளிட்டவராகவும் காரைக்காலம்மையார் காணப்படுகிறார்.

10.62 பக்தி இலக்கியத்தில் திருஞான சம்பந்தரின் இடம்

அ. பாண்டுரங்கன்
புதுவைப் பல்கலைக் கழகம்

சைவ பக்தி இயக்கத்தை முன்னின்று நடத்தியவர்களுள் திருஞானசம்பந்தரே முதன்மையானவர். தம் காலத்தில் அரசர்களின் ஆதரவோடு செல்வாக்குப் பெற்றிருந்த சமண , பௌத்த சமயங்களை வாதில் வென்று சைவத்தையும் தமிழையும் உய்வித்தவர்.

தேவாரம் பாடிய மூவர் முதலிகளில் இவரே முதன்மையானவர். இவர் பாடல்களே முதல் மூன்று திருமுறைகளாக அடைவு செய்யப்பட்டுள்ளன. தத்துவ நோக்கில் இம்முதன்மைக்கு வேறு விளக்கம் கூறப்பட்டுள்ள போதிலும் , தற்கால அளவு கோல்களைக் கொண்டு மதிப்பிடும்போது இவருடைய தலைமையே பெருத்தமானதாகத் தோன்றுகிறது.'

1. பிள்ளைப் பருவத்திலேயே பரசமயங்களை வென்றவர் பரசமயகோளரி
2. முத்தமிழாகரர்
3. இசை விற்பன்னர்
4. முதன் முதலில் மிறைக்கவிகளைப் பாடியவர்.
5. இயற்கை ஈடுபாடு
6. யாப்பில் மேற்கொண்ட புது முயற்சிகள்
7. அவர் ஒரு திருப்புமுனை

என்றும் முறையில் ஆய்வுக் கட்டுரை அமையும்.

10.63 பெரியபுராணம் காட்டும் பெண்கள்

முனைவர் மா. பார்வதியம்மாள்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

உலக மொழிகள் அனைத்திலும் கடவுள் தொடர்பான இலக்கியங்கள் உண்டு. இவ்வகை இலக்கியத்தைச் சமய இலக்கியம் என்று கூறலாம். ஏனைய இலக்கியங்களை நோக்கின் சமய இலக்கியங்கள் மிகக் குறைவே. தமிழில் கி.பி.7 ம் நூற்றாண்டிலிருந்து 10 ம் நூற்றாண்டு வரை சமய இலக்கியங்கள் தோன்றின. 12 ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய சமய இலக்கியமே பெரியபுராணம் ஆகும்.

பெரியபுராணம் முழுவதும் பக்திச் சுவை சொட்டச் சொட்ட அமைந்ததாகும். வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தம் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவல்லவ என்று சேக்கிழாரைப் பாராட்டியுள்ளார். பெரியபுராணம் ஒரு சீர்திருத்த நூல் ஆகும்.அந்தணர் , அரசர் , வணிகர் , வேளாளர் எனும் நான்கு குலத்தவரில் அந்தணரே மேன்மையானவர் என்ற நிலை முன்பு இருந்தபோதும் அரிசன நந்தனைச் சைவ அடியார் ஆக்கினார் சேக்கிழார். சாதி வேறுபாடுகளைக் கைளைய முற்பட்டார். ஆன்மீகத் துறையில் ஈடுபடப் பெண்களுக்கு உரிமையில்லை என்ற காலம் ஒன்று உண்டு. மெய்ஞ்ஞானச் செல்வத்தை ஆண் குலத்துக்கே உரிமையாக்கினர் அக்காலத்தவர். அந்த நிலையை மாற்றிப் பெண்களுக்கும் நாயன்மார் வரிசையில் இடமளித்தார். பெரியபுராணம் காட்டும்பெண்கள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின்நோக்கமாகும்.

10.64 திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சைவ சித்தாந்தம்

முனைவர் சி. பாலு
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சைவ சமயத்தில் சாத்திரங்களும் , தோத்திரங்களும் இருகண்களாகத்திகழ்வன. தோத்திரங்களை அருளிச் செய்தவர்களில் முதல் குரவராக விளங்கும்திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரத்தில் சைவ சித்தாந்தத் தத்துவம் எங்ஙனம் அமைந்திருக்கிறது என்பதை ஆய்வு செய்து காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

இறை, உயிர் , தளை என்னும் முப்பொருள் இயல்பினை எடுத்து

விளக்குவது சைவ சித்தாந்தம் . இறைவன் வேதாகம வடிவினன் . இதனை அருளிச் செய்தவன் சிவபெருமான்.நிலம் , நீர் , காற்று , தீ , ஆகாயம் , சூரியன் , சந்திரன் , உயிர் என்னும் அட்டமூர்த்தமாய் விளங்குகின்றான். உருவம் , அருவம் , அருஉருவம் எனும் மூவகை வடிவத்தை மேற்கொண்டு உயிர்களுக்கு அருள் செய்கின்றான். உருவ வடிவில் , போகம் , யோகம் , வேகம் எனும் மூவகை உருவத் திருமேனி கொள்கிறான். சக்தியோடு இரண்டற விளங்கி உயிர்களின் மேற்கருணை கொண்டு ஆக்கல் , காத்தல் , அழித்தல் , மறைத்தல் , அருளல் என்னும் ஐந்தொழில் புரிந்து மலங்களைப் போக்கி வீடுபேற்றை அளிக்கின்றான்.

மேற்சொல்லிய கருத்துக்களைத் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தில மதுரை , திருவீழிமிழலை, திருமுதுக்குன்றம் , சீர்காழி, அச்சிறுபாக்கம் , திருப்பரங்குன்றம் , காளத்தி போன்ற தலங்களின் பதிகங்களைக் காணுகின்றபொழுது சைவ சித்தாந்தத்தின் கருத்துக்களைத் திருஞான சம்பந்தர் அருளிச் செய்திருப்பதை அறியமுடிகிறது.

10.65 திருமுறைகள் கண்ட இலக்கிய வடிவங்கள்

முனைவர் திருமதி. பா. புவனேசுவரி

சைவத்திருமுறைகள்தோன்றிய காலத்தில் தான் தமிழ் மொழியின் இலக்கியவடிவங்கள் வளர்ச்சிகண்டன. பிற்காலத்தில் எழுந்து பெருவளர்ச்சிகண்ட தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் என்று வழங்கப்பெறும் சிற்றிலக்கியங்களின் அடிப்படைக்கூறுகள் திருமுறைகளில் காணப்படுகின்றன. இறைவன்பால் பக்திகொண்டு பெண்கள் பாடிய மடல் வண்ணங்களும் , வெண்பாக்களும் திருமுறைகளுக்கு முன்னரே இருந்தன என்பதை ஞானவுலாவழியாக அறியலாம். பெண்கள் விளையாட்டுகளின்போது பாடப்பெறுவனவாக அமைந்த அம்மானை, தோணோக்கம் போன்றவை புதிய வடிவங்கள்.கோவையார் அன்புவழி ஒன்றையே இறைவழியாக அறிவுறுத்தும் நூல். அந்தாதி , பல்லாண்டு , திருவிசைப்பா , தொகை , மாலை , கோவை , விருத்தம் போன்ற வடிவங்களைத் திருமுறைகள் அறிமுகப்படுத்துகின்றன.

திருமுருகாற்றுப்படை அறிமுகப்படுத்திய தலபுராணம் என்ற இலக்கியக் கூறு தலங்கள்மேல் பாடப்பட்ட பதிகங்கள் வாயிலாகப் பரவிப் பின்னர் தனிப்பட்ட இலக்கிய வகையாகச் செழித்தது.

இசையுடன் பாடத்தக்க முறையில் திருமுறைப் பாடல்கள் இயற்றப்பட்டன. அதற்கேற்பப் பாக்களின் வடிவ அமைப்பு மாற்றமும் வளர்ச்சியும் கண்டது.

வாழ்க்கை வரலாற்றுக் கூறுகள் , இறைவனைப் பரவும் தோத்திரப்பாடல்களின் கூறுகள் , சமய தத்துவம் கூறும் நூல்கள் , வேதாந்தக் கருத்தினை ஏற்று அவற்றைப் பயன்படுத்தும் பாக்கள் , ஒரே இலக்கினைக் கொண்ட பக்தி ஞான நெறிகளாகிய இருவேறு வழிகளை உணர்த்தும் முறை ஆகிய இவற்றிற்கான அடிப்படை திருமுறைகளால் வகுக்கப் பெற்றுள்ளது.

10.66 நன்னெறி காண நடிக்கப் பழகுவோம்

இ. பேச்சிமுத்து
தியாகராசர் கல்லூரி, மதுரை

இறைவன் மீது மாறாத அன்பு கொண்டு அவன்திருவடியை அடைய அடியவர் யாவரும் முயல்கின்றனர். அம்முயற்சியில் மனோரீதியான போராட்டங்களும் , புறச் சூழல்களினால் ஏற்பட்ட தடுமாற்றங்களும் பெருந்தடையாக இருந்திருப்பதை அறிகின்றோம். இந்நிலையில் அவர்களின் திருத்தோற்றம் ,திருத்தொண்டு , தொண்டர் சார்பு , சிவச்சிந்தனை போன்றவைகளைத் தொடர்ந்து கடைப் பிடித்துள்ளனர். அவையே அவர்களுக்குத் திருவடிப் பேற்றிற்குக் காணரமாயிற்று . எனவே , மனப் போராட்டங்களை மறைத்துக் கொண்டு, வெளியே அவை புலப்படாதவாறு திருதோற்றம் காட்டி , திருத்தொண்டு செய்ததனால்தான் அவர் விரும்பியவாறு இறைக்காட்சி கண்டு , இறையில் கலந்து உய்ய முடிந்தது.

அத்தகைய அடியவர்களின் வழியில் நாமும் நம் தடுமாற்றத்தையும் தடைகளையும் புறங்காட்டாது மறைத்து , சிவச்சின்னம்தாங்கியும் சிவச்சிந்தை கொண்டும் , சிவத்தொண்டு செய்தும் வந்தால் நாமும் வீடுபேறடையலாம். இக்கருத்தைப் பன்னிரு திருமுறைகள் கொண்டு விளக்க முயல்வதே இக்கட்டுரை.

10.67 கண்ணப்ப நாயனாரின் பக்திச் சிறப்பு

சி. பேபிசித்ரா
தமிழ்ப் பல்கலைக் கழகம்

சிவநெறியில் தழைத்தோங்கிய அறுபத்துமூன்று நாயன்மார்களில் கண்ணப்பநாயனாரும் ஒருவர். சிவபெருமானிடமிருந்து பெற்ற இறை அனுபூதியின்அடிப்படையில் அவரது பக்தியின் சிறப்பு பல்லாற்றானும் வெளிப்படுகிறது.

வேடர் குலத் தோன்றலாகிய கண்ணப்பர் இறைவழிப்பட்டுக் குடுமித்தேவர் கோவில் கொண்டுள்ள திருக்காளத்தி மலையை அடைந்தவுடன் உடலளவிலும் உள்ளத்தளவிலும் புளகாங்கிதம் அடைந்தார். இவர் முற்பிறவியில்செய்த தவத்தின் பயனால் இம்மாற்றங்கள் அடையப்பெற்றுச் சிவபெருமானுடையபேரருள் கிடைக்கப்பெற்றார். இறையருள் கிடைக்கப்பெற்ற கண்ணப்பர் இறைவன் மீது அளவுகடந்த பக்தி கொண்டதன் காரணமாக இறைவன் திருவடியின்றிப் பிறிதொன்றை உணராநிலைக்கு உயர்ந்தார். கண்ணப்பரின்அன்பின்மிகுதியை உணர்ந்த சிவபெருமான் உயர்நிலையாம் தன்நிலையிலிருந்து கீழிறங்கி அவருக்குக் காட்சி தந்து அருள் பாலித்தார்.

கண்ணப்ப நாயனாரது இறைமை வாழ்க்கையின் பிழிவாக அமையும் உண்மைகளைக் கண்டறிந்து அவற்றைச் சைவசித்தாந்தக் கருத்துக்களோடு இணைத்துப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம். அத்துடன் கண்ணப்ப நாயனாருடைய சிவநெறியை மற்ற நாயன்மார்களோடு இணைத்துப் பார்த்து அதன்வழி இவருடைய பக்தியின் சிறப்பு எடுத்துரைக்கப்பெறும். மேலும் கண்ணப்ப நாயனாரின் பக்தி நெறியை முறையாக ஆராய்ந்து அதன்வழி வெளிப்படும் உண்மைகளை இன்றைய நிலையில் பகுத்தாய்ந்து அவை எங்ஙனம் பொருளாதாரத்திற்கே முக்கியத்துவம் வழங்கும் இன்றைய சமுதாயத்தை மேம்படுத்திச் சாதி சமய வேறுபாடற்ற ஆன்மீகச் சமுதாயமாக மாற்றும் என்ற கருத்தும் இக்கட்டுரையில் சிறப்பாக ஆராயப்பெறும்.

10.68 திருமுறைகள்

சொ.அ.மணிவாசகம்
பொத்தூர்

திருவாளனாக மனிதன் மலர வேண்டும் - தெய்வத்துள் நிலைபெற வேண்டும். அதற்குத் துணையாக நின்று உதவுவனவே திருமுறைகள்.

திருமுறைகள் தெய்வச்சான்றோர்கள் முறையீட்டுக்கு இரங்கிச் சிவபரம்பொருள் நல்லடியார்கள் வாய்மொழியாக அருளினவே திருமுறைகள். எனதுரை தனது உரையாக என்பர் ஞானசம்பந்தர்.

முறை -அறநூலும் நீதிகாறும் சொல்லும் நெறி என்பர் பரிமேலழகர் - திருமுறைகள் பன்னிரண்டு - ஆசிரியர்கள் இருபத்தெழுவர். பாடல்கள் பதினெட்டாயிரத்து ஐநூறு.

திருமுறை மந்திர ஆற்றல் படைத்தது - மனிதர்களை மட்டும் அல்ல மண்ணையும் திருத்தவல்லது.

திருமுறை சைவர்களது தமிழ் வேதம். வேகத்தை விட்ட அறம் இல்லை என்பர் திருமூலர். தமிழ் வேதம் பாடினார் , தாளம் பெற்றார் என்றார் சேக்கிழார். சம்பந்தர் முதலாகச் சேக்கிழார் வரை அனைவரும் அருள்ஞானம் பெற்றவர்கள். சிவபெருமானைக் கண்ணாரக் கண்டவர்கள். சிவபெருமானும் அவர்களுக்குப் பண்ணையக்காரனாக, தந்தையாக , தோழனாக, குருவாக எழுந்தருளி அருள்பாவித்தார் .

உண்ண உணவும் , ஊர்ந்து செல்லப் பல்லக்கும் , குதிரையும் , பொன்னும் பிறவும் வழங்கினார்.கனவிலும் , நினைவிலும் பேசினார். மந்திரங்களையும் உபதேசித்தார்.

10.69 திருவாசகத்தில் சிவபுராணம்

புலவர் சு. மதியழகனார்
தம்மம்பட்டி

திருவாசகத்திற்குப் பாயிரமாய் அமைவன அதன் முதல் நான்கு அகவல்களே. தேவாரத்தின் முடிவு திருவாசகம் எனின் திருவாகத்தின் முடிபோ திருக்கோவையாரே ஆகும். திருக்கோவையார் காமஞ் சார்ந்த ஞானப்பனுவல் ஆகும் உலகப் பொது மறையாமதிருக்குறளின் அந்தமாயிருப்பதும் காமத்துப்பாலே (சிந்திக்கற்பாலன! நாயகன்

-நாயகிபாவம் , குரு - சிஷ்ய உறவு - சன்மார்க்கம்).

பாயிரத்தில் முதலிடம் பெறுவது சிவபுராணம். திருப்பெருந்துறையில் பரமாசிரியரால் ஆட்கொள்ளப்பெற்ற மணிவாகப் பெருந்தகை தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற , உலகுய்யக் கருதி எடுத்த எடுப்பிலேயே மூலமந்திரத்தை வெளிப்படுத்தும் வகையில் 'நமச்சிவாய வாழ்க' எனத் தொடங்குகிறார்.

எழுதாமறையாம் வடமொழி வேதத்தின் மையமாய் அமைந்த யஜுர்வேத மத்திய பாகமாகிய ஸ்ரீ ருத்திரத்தின் நடுவில் பரமரகசியமாய் அமைந்த ஸ்ரீ பஞ்சாட்சரம் எழுதுமறையாம் தமிழ் மறையில் எடுத்த எடுப்பிலேயே அமைந்துள்ள எளிமையை என்னென்று சொல்வது ! ஐந்தெழுத்தின் அரும்பொருளை விதிப்படி எண்ணுதல் வேண்டும். (காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி .... நமச்சிவாயப் பதிகம் - சம்பந்தர் தேவாரம்)

அடுத்து வாழ்க - 6 , வெல்க - 5 இவை சடங்க மந்திரங்கள் ஆறும் , பஞ்சரிம மந்திரங்கள் ஐந்தும் ஆக சம்மிதா மந்திரங்கள் பதினொன்றனோடும் ஒக்கும். அடுத்து போற்றி - 8 ம் அட்டோத்தரங்களாய் அமைவன. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்பது முதலாக 'முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்' என்பது ஈறாக வருவன மலர் வழிபாடாகும் (புஷ்பாஞ்சலி) , பூ செய் என்பதே பூசை என மருவி வடமொழியில் பூஜை ஆயிற்று , 'அருச்சனை நமக்குப் பாட்டேயாகும்' என்பது இறை வாக்கு.

முழு ஆய்வுக் கட்டுரையில் இவற்றின் திட்ப நுட்பங்கள் விரிவாக ஆராயப்படும்.

10.70 தேவாரப் பதிகங்களில் உலகியல்

சிவ. மாதவன்
தாகூர் கலைக்கல்லூரி , புதுச்சேரி

பக்தி இயக்கம் எழுச்சி பெற்றதன் வெளிப்பாடுகளே தேவாரப் பதிகங்கள் எனக் கூறப்படுகின்ற போதிலும் அவற்றில் உலகியல் நெறிகள் பல விரித்துரைக்கப்பெறுகின்றன. மண்ணுலக வாழ்வை மறுத்துப் பேசும் பாடல்களை அவற்றில் காண்பது அரிது. மனிதர்களின் இன்னல்களுக்கான அடிப்படைக்காரணத்தைத் தேவார மூவர்கள் தத்தம் பதிகங்களில் பற்பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளனர். அவர்கள் கூறும் காரணம் மனித மனத்தின் குறைபாடே வாழ்வின் குறைகளுக்கு - துன்பங்களுக்கு

அடிப்படை என்பதாம்.

இருப்பினும் இம்மூவரும்தம் நெஞ்சுக்கு உபதேசமாகக் கூறிய பதிகங்களில் மனத்தின் இயல்பும் , அதனை நன்னெறியுள் செலுத்துவதன்தேவையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.அந்தக்கருத்துகள் இன்றைய தலைமுறையினர் அறிய வேண்டியவை ; பின்பற்றத்தக்கவை. குறிப்பாக உள்ள உறுதியும் , உள்ளத்துணிவும் இன்றைய சமுதாயம் பெறவேண்டிய பண்புகளாகும். அவை தேவார மூவரால் தெளிவுபடக் கூறப்பட்டிருத்தலை விளக்குவதாக இக்கட்டுரை அமையும்.

10.71 திருஞான சம்பந்தர் தோவரத்துள் நிலையாமைக் கருத்துக்கள்

கோ. மீனாட்சி
கும்பகோணம்

இளமை - யாக்கை - செல்வம் - நிலையாமைக் கருத்துக்கள் - தொல்காப்பியம் - காஞ்சித்திணை - பொருண் மொழிக்காஞ்சித்திணை - எட்டுத்தொகை நூல்கள் - நற்றிணை - இளமை நிலையாமை - குறுந்தொகை - கலித்தொகை - பாலைக்கலி - புறநானூற்றுப் பாடல்கள் - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - திருக்குறள் - ஏலாதி - நான்மணிக்கடிகை - சிலப்பதிகாரக் காப்பியத்துள் நிலையாமை உணர்வு.

பன்னிரு திருமுறை - சிறப்பு - முதன் மூன்று திருமுறைகள் - சம்பந்தர் வாழ்வியல் முறை - பதிக அமைப்புகள் விளக்கம்.

சம்பந்தர் நிலையாமை உணர்வினைத்தனிப்பாடல்களில் வலியுறுத்தல் -திருச்சாய்க்காடு - திருவலிவலம் - திருப்பருப்பதம் - திருவெண்காடு - ஐந்து பாடல்கள்.

பதிகப் பாடல்கள் முழுமையும்நிலையாமைக் கருத்துக்களைக் கூறுதல் - திருத்தூங்கானை மாடம் - திருவாரூர் - சீர்காழி -திருக்கோடிக்கா -திருக்கோவிலூர் வீரட்டம் - ஐந்து பதிகங்கள்

இவை கட்டுரையின் வாயிலாக விரிவாக அறியப்பெறும்.

10.72 திருநாவுக்கரசரின் சிவத்தொண்டு

முனைவர் அ. முத்துவேலன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சமயம் தனிமனிதனை மையப்படுத்தியதாகவோ , தனிமனிதப் பயன்கருதியதாகவோ அமைந்தால் அதனால் சமுதாயப் பயன் ஏதும் இராது. எந்தவொரு சமயமும் சமுதாயத்தை மையப்படுத்தியதாகவும் சமுதாயப் பயன்கருதியதாகவும் அமையவேண்டும். சமயக் கொள்கைகள் சமுதாயத்தை நோக்கியனவாகவும் , சமுதாய மேம்பாட்டையும் வளர்ச்சியையும் சார்ந்தனவாகவும் விளங்க வேண்டும். சமயப் பெரியார்கள் மற்றும்அடியார்களின் செயல்பாடுகளும் அவ்வண்ணமே அமைய வேண்டும்.

திருநாவுக்கரசரை உழவாரப் படையுடன் தான் நாம் காணமுடிகிறது. திருநாவுக்கரசர் ஏந்திய உழவாரப்படை என்பது உழைப்பின் சின்னம் ; தூய்மையின் உருவம் ; கோயில் பலரும் கூடும் இடம் ; அதனால் தூயமைக்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது ; கோயிலின் சுற்றுப்புறம் தூய்மையோடு பராமரிக்கப்படவேண்டும் என்பதை உணர்த்தும்நினைவுப் படிமமாகவே திருநாவுக்கரசரின்தோற்றம் நமக்குக் கிடைக்கின்றது. அவர்தம் வாழ்க்கை வரலாற்றிலும் இவ்வுண்மை நமக்குப் புலனாகின்றது 'திருத்தொண்டு', 'ஆண்ட அரசு பணி செய்து' , 'பற்றறுப்பார் தமை பணிந்து பணிசெய்வீர்' போன்ற தொடர்கள் கோயில்களுக்கும் , அடியார்களுக்கும் அவர் செய்த சிவத்தொண்டைப் புலப்படுத்துகின்றன. திருநாவுக்கரசர் தம் சிவத்தொண்டைப் பொது வாழ்வில் சமுதாயத்தை நோக்கியே செய்து வந்தார் என்பது இக்கட்டுரையில் ஆய்ந்து கூறப்பட்டுள்ளது.

10.73 பெரியபுராணத்தில் குடும்ப வாழ்வியல் விளக்கம்

மு. மூர்த்தி
சென்னைப் பல்கலைக்கழகம்

மக்கள் வாழ்க்கை செம்மை பெறக் காலந்தோறும் பெரியார்கள் பலர் அரும்பணியாற்றியுள்ளனர். மக்களை உயர்நிலைக் குறிக்கோள் அடிப்படையில் ஈடுபடுத்தும் சமய வாழ்வியலடிப்படையிலும் பலர் செயல் மேற்கொண்டுள்ளனர். இறையியலை ஏற்று அனுபவித்து நின்ற

அருளாளர்களும் மக்கள் சமுதாயத்திற்கு வாழ்வியல் நெறிகளைக் காட்டியுள்ளனர். அவர்கள் வாழ்ந்து காட்டியும் அருளிப்பாடுகளால் வெளிப்படுத்தியும் மக்கள் வாழ்வியலுக்கு வழிகாட்டியுள்ளமையை உணரலாம். அவ்வகையில் சைவசமய அருளாளர்கள் வாழ்வியல் மூலமும் வெளிப்பாடுகள் மூலமும் நெறிகள் அறியக்கிடக்கின்றன.

சைவ சமய அருளார்களாக வாழ்ந்து காட்டிய நாயன்மார்கள் வாழ்வியல் எடுத்துக்கொள்ளப்பெற்று , அதில் குடும்ப அமைப்பு விளக்கமுறைகள் இக்கட்டுரையில் ஆராயப்பெறுகின்றது. குறிக்கோள் அடிப்படையில் உயர்ந்த நிலை நோக்கித் தலைவன் , தலைவி , மூத்தோர், பிள்ளைகள் , பணியாளர்கள் முதலானோர் குடும்பத்தில் செயல் மேற்கொண்ட திறம் விளக்கப்பெறுகின்றது.

10.74 பதினோராம் திருமுறையும் அதன் சிறப்புகளும்

பேராசிரியர் டாக்டர் பெ.கு. வரதராசன்
கிருஷ்ணகிரி

சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள்பதினோராம் திருமுறை பற்றிய செய்திகள் காலத்தால் முற்பட்டவர்கள் எனக் கருதற்கிடமான காரைக்காலம்மையார். நக்கீரர் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மற்ற திருமுறைகளுக்கில்லாத சிறப்பு ஒன்று இத்திருமுறைக்கு உண்டு. இறைவனது பாசுரத்தை முதலாகக் கொண்டு இத்திருமுறை விளங்குவதேயாம். திருமுறைகளை வகைப்படுத்தித் தொகுத்தவரான நம்பியாண்டார் நம்பியின் பத்துப் பிரபந்தங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இத்திருமுறைக்குள்ள சிறப்புகளில் இதுவும் ஒன்றாம்.

பிரபந்தமாலை எனப் போற்றத்தகும் இப்பதினோராம் திருமுறை தமிழ் இலக்கியத்திற்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் புதுவன புனைந்த பல சிற்றிலக்கியங்களையுடையது . ஆதியுலா எனப்போற்றப்பெறும் திருக்கயிலாய ஞான உலாவும் அற்புதத் திருவந்தாதியும் பிற்காலத்தில் தோன்றிய இவ்வகையான பிரபந்தங்களுக்கு வழிகாட்டிகளாகும்.

இத்திருமுறை பன்னிரண்டு அருளாளர்களால் பாடப்பெற்ற நாற்பது பிரபந்தங்களையுடையது. பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் தோன்றுதற்குரிய மூலக்கருத்துக்களை ஓரளவு விரித்துரைத்த திருத்தொண்டர் திருவந்தாதி இதில் இடம் பெற்றுள்ளது. இவ்வந்தாதி சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்டது.

10.75 திருமுறைகள்

சூ. விசுவநாதன்
ஈரோடு

திருமுறைகள் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.12 -ஆம் நூற்றாண்டு வரை உருவானவை. அவை அனைத்தும் இறைவன் அருள் தாங்கிய அடியவர்கள் வாக்காகும். அது மட்டுமல்ல, அவை ஆண்டவன் வாக்குமாகும்.இத்தகைய திருமுறைகள் 12 என்பதும் பல காலத்தில்27 பெருமக்களால் இறைவன் முன் விண்ணப்பிக்கப்பட்டவை என்பதும் யாவரும் அறிந்ததாகும். இவற்றில் 11 நூல்கள் இறைவனைப் பற்றியும் சிற்சில இடங்களில் இறையடியாரைப் பற்றியும் காண்கின்றோம் 12 - வது திருமுறையாகிய திருத்தொண்ட்ர் புராணம்அடியவர்களையே மையமாக வைத்துச் சுழலுவதாகும். மற்றவற்றில் இறைவன் மையம். இத்தொண்டர்வரலாற்றில் அடியவர் மையமாகும்.

தமிழர் தம் வாழ்வில் நடைபெற வேண்டிய வாழ்வு நெறிகளை வலியுறுத்தி வழிகாட்டுவன. இறைவழிபாடு இன்றியமையாதது. அத்தோடு கூடவே சமுதாயப் பார்வையும் சமுதாயப் பணியும் அவசியம் என வலியுறுத்துவது.

சமுதாயப் பணியின்றிச் சமயப் பணி சிறப்பு அடையாது என அறிவுத்துவது. மனிதகுல எற்றத்தாழ்வு , பெண்ணடிமை , தாய்மொழியின் ஏற்றமின்மை , இசை நாடனம் ஆகிய நுண்களைப் போற்றியமை , இறைவனை வழிபட்டாலே போதும்.தொண்டு செய்ய வேண்டிய அவசியமில்லை , தனித்தன்மை பாராட்டுவது ; நானே உயர்ந்தவன் நான் பின்பற்றும் கொள்கையே உயர்ந்தது என்பனபோன்ற சமுதாய முன்னற்றத்திற்கு முட்டுக்கட்டையான எண்ணங்களைத் தகர்த்து ஒரு புதிய சமுதாயத்தைச் சமயம் சார்ந்த சமுதாயத்தைக் தொண்டு வழிப்பட்ட சமுதாயத்தை , அன்புவழிப்பட்ட சமுதாயத்தை , உருவாக்க வலியுறுத்துவது வழிகாட்டுவது நம்திருமறைகள். உலகமுாவிய சிந்தனைக்கு , நல்வாழ்வுக்கு வழிகாட்டுவது நம் திருமுறைகள் ஆகும்.

10.76 வேதஞ்சாரா மதங்களும் சைவத் திருமுறைகளும்

முனைவர் ர. விஜயலட்சுமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சங்க காலத்திலும் சங்கத்தை ஒட்டிய காலத்திலும் பெருமளவில் வேதஞ்சாரா மதங்களான சமணம் , பௌத்தம் , ஆசீவகம் ஆகிய மதங்கள் தமிழ் நாட்டில் உள் நுழைந்தன. இம்மதங்களைச் சார்ந்தோர் தமிழ் மக்களைத் தம்பால் ஈர்க்கும் நோக்குடன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் இக்காலப்பகுதிகளில் பெரிதும் வெற்றிபெற்றன. பிறமதங்களின் ஆளுமைக்குட்பட்ட தமிழகத்தை மீட்டுச் சைவ நெறிப்படுத்தவேண்டிய தேவையைச் சைவப் பெரியோர்களும் வைணவப் பெரியோர்களும் உணர்ந்தனர். இதன் விளைவாக மக்களைத் தம்பால் கொணரவும் , சைவ வைணவ உண்மைகளை உணரவைக்கவும் , புதுவழி முறைகளைக் கையாள வேண்டிய தேவையை மக்களிடையே பரப்பினர். இதன் வழிப் புதிய பத்தி வழி உருவானது. இசையுடன் இறைபுகழ் பாடி , கோவில் வழிபாட்டின் இன்றியமையாமையை உணர்ததினர். இவ்வாறுத் இசைவழிபாடிய பாடல்களில் வேதஞ்சாரா மதங்களின் உண்மையற்ற நிலையைப் பல்வகையிலும் வெளிப்படுத்தினர். இவ்வாறு இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பல்வேறு கோணங்களும் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படும். அதற்கான சமூகப் பின்னணியும் மனத்திற் கொள்ளப்படும்.

10.77 திருஞானசம்பந்தரும் இலக்கியப்பணியும்

முனைவர் இரா. ஜெகதீசன்
தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி , மதுரை

இக்கட்டுயில் திருஞான சம்பந்தரின் தோற்றமும் காலமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவரது வாழ்க்கையில் நடந்த சில அற்புதங்களும் நிகழ்வுகளும் விளக்கப்பட்டுள்ளன. திருமுறையின் பண்ணடைவுகளும் , திருமுறை வைப்பு முறையும் ஞானசம்பந்தரின் திருப்பதிய அமைப்பு முறைகளும் மற்றும் சிற்றிலக்கியங்களின் பக்தி நெறியும் விளக்கப்பட்டுள்ளன திருஞான சம்பந்தரின் இலக்கியப் பணியினை விரிவாக இக்கட்டுரை ஆராய்கிறது. சங்க காலத்திற்குப் பின் புதிய மரபுகளைத் தோற்றியும் பழைய மரபுகள் சிதையா வண்ணம் புது

உருவம் கொடுத்து பல்வேறு புதிய இலக்கிய வகைகளை ஞானசம்பந்தர் அறிமுகப்படுத்தியுள்ளதை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும் சம்பந்தரின் இசைப்பணி பற்றியும் இக்கட்டுரை விளக்க முற்படுகிறது. தேவார மூவர்களுள் செவ்வழிபண் அமைந்த திருப்பதிகங்களைப் பாடியவர் திருஞானசம்பந்தர் ஒருவரே என்பது காட்டப்பட்டுள்ளது.

10.78 திருமந்திரம்

வீ. ஜெயபால்
கலியாண சுந்தரம் மேனிலைப்பள்ளி , தஞ்சாவூர்

தொன்மையான சமயமாகிய சைவத்தில் சாத்திரமாகவும் தோத்திரமாகவும் கருதத்தக்கது 10ம் திருமுறை திருமூலர் அருளிய திருமந்திரம். சைவ ஆகமங்கள் இருபத்தெட்டும் தற்போது தமிழ்மொழியில் இல்லாத குறையைத் திருமந்திரம் தீர்த்து வைக்கிறது. இருபத்தெட்டு ஆகமங்களுள் சிறப்பான ஒன்பது ஆகமங்களின் கருத்துக்களைத் திருமூலர் தனது திருமந்திரத்தில் 9 தந்திரங்களாகப் பிரித்து வழங்கியுள்ளார். இதில் சொல்லப்படாத கருத்துக்களே இல்லை எனலாம்.

முதல் தத்திரம் அற நெறிச்செய்திகளையும், இரண்டாம் தந்திரம் புராண வரலாறுகளையும் , மூன்றாம் தந்திரம் இறைவனோடு உயிரை ஒன்றவைக்கும் யோகத்தைப் பற்றியும் , நான்காம் தந்திரம் சக்கரங்களுள் யந்திரங்களைப் பற்றியும் , ஐந்தாம் தந்திரம் சைவநெறிகளான சரியை , கிரியை , யோகம், ஞானம் பற்றியும், ஆறாம்தந்திரம் குருவருளும் திருவருளும் பற்றியும் , ஏழாம் தந்திரம் சிவபூஜை, மகேஸ்வர பூஜை பற்றியும் , எட்டாம் தந்திரம் ஐந்தவத்தைப்பற்றியும் , ஒன்பதாம் தந்திரம் ஸ்தூல , சூக்கும அதிசூக்கும பஞ்சாட்சரத்தைப்பற்றியும் விளக்குகிறது.

மூன்றாம் தந்திரத்தில் விளக்கப்பட்டுள்ள யோக நெறிகளில் 'வாசியோகம்' பற்றி சிறப்பாக இக்கட்டுரையில் கூறப்பட்டள்ளது.

10.79 சைவ சமயக்குரவர் நால்வரின் பக்தி நெறிமுறைகள்

முனைவர் வ. ஜெயா
பாரதியார் பல்கலைக்கழகம்

பக்தியின் அடித்தளம் அன்பே. அன்பின் மூலமாக இறைவனை எளிதில் அடையமுடியும் என்று சைவ சமயக்குரவர் நால்வரும் புலப்படுத்தினர். இறைவனின் கருணை , அருளிச் செயல்கள் , புராணக்கதைகள் , இறை வருணனை , பாடல்கள் புலப்படுத்தும் கருத்துப் புலப்பாட்டுத்திறன் , இறைவனை எளிதில் அடையக்கூடிய முறை ஆகிய கருத்துக்கள் அவர்தம் பாடல்களில் பொதிந்துள்ளன. இறைவனை அடையக்கூடிய மார்க்கங்களாகக் கர்மயோகம் , ஞானயோகம் , இராஜயோகம் , பக்தியோகம் என வகைப்படுத்துவர்.

இந்நால்வர் வாழ்ந்துகாட்டிய நெறியே பின்னர் சைவ சித்தாந்தம் வளர வழிகோலியது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இக்கருத்துக்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

10.80 READY RECKONER TERMINOLOGIES IN THIRUMURAI

Kavignar Raghavan Muthu
Karaikudy

The attempt made here is to focus on a few very prominent lives, sequences, terms out of the Thirumurais, especially THEVARAM (the cluster formed by the first seven Thirumurais) . All the composition , as they seem to be (பசு வாக்கு அல்ல) . They are given existence only by Mercy of Lord, by the inner permeation into the saintly authors. (பதி வாக்கு). Therefore, any section, segment of Thirumurai is noble, holy and divine.

Saint Appar has contributed a good lot of hymns which are simply loved and captivating.

Saint Sundarar and sint Manikavasagar have given ever so many such memonable terminologies. Wonderful enough, such lines sometimes appear to be euqal to definitions or derivative formulae

relating to Lord and devotion to Lord.

To bring to a close , the rich Thirumurais of Saivite Literature is a very affluent ocean of knowledge and Bliss, A handful of pearls, corals and gems - called aptly as " Ready Reckoner Quotes"

இணைபபுகள

அமர்வு ஒன்று

சைவ சித்தாந்தம்

1.1 சைவ சித்தாந்தத்தில் அளவையில்

முனைவர் மு. பொன்னுசாமி
சென்னைப் பல்கலைக்கழகம்

சித்தாந்தம்

பொருள்களைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வது இந்நிலையில் அளவையியலைப் பற்றி இக்கட்டுரை அமைகிறது.

அளவையியல் என்றால் என்ன ?

1. உயிரின் அறிவாற்றல் , 2. ஊயிரின் ஓர் உணர்வு , 3. தன்னை நோக்கி நிற்கும் அறிவாகிய ஆன்மாவினின்றும் செய்திகளை நோக்கி ஓடும் அறிவாகிய சித்சக்தி

அளவையியல் வகைகள்

1. காட்சி , 2. கருதல் , 3. ஆகமம் , 4. அருத்தாபத்தி ,5. உவமை, 6. இன்மை எனச் சிவஞான சித்தியார் ஆறுவகையான அளவைகளைக் குறிப்பிட்டுள்ளது.

காட்சியளவை

ஐம்பொறிகளையும் அந்தக் கரணங்களையும் , வித்தையையும் காட்டாகக் கொண்டு அறியும் ஆன்ம சித்சக்தி

காட்சியளவை வகைகள்

1. வாயிற்காட்சி , 2. மானதக்காட்சி, 3. தன்வேதனைக் காட்சி , 4. யோகக் காட்சி

கருதல் அளவை (அ) அனுமான அளவை

அறியப்படும் பொருளோடு விட்டு நீங்கா சம்பந்தத்திலுள்ள யாதேனும் ஓர் ஏதுவைக் காட்டாகக் கொண்டு அறியும் ஆன்ம சித்சக்தி.

கருதல் அளவை வகைகள்

1. தன் பொருட்டு அனுமானம் , 2. பிறர் பொருட்டு அனுமானம் மேற்கோள் , ஏது. வியாத்தி உரை.

ஆகம அளவை

கருத்தாவின் மொழியைக் காட்டாகக் கொண்டு அறியும் ஆன்ம சித்சக்தி , வகைகள் - கரும காண்டம் , உபாசனா காண்டம் , ஞான காண்டம்

அருத்தாபத்தியளவை

உணவு கொள்ளாதவர் என்று கூறப்படும்

உவமையளவை

பூனையைப் போலப் புலியிருக்கும் என அறிந்து உணர்வது

இன்மையளவை

இன்மையைக் கருவியாகக் கொண்டு இன்மையை அறிதல்

பிற அளவைகள்

பாரிசேடம் , உண்மை , வைதிகம் , இயல்பு

முடிவுரை

கட்டுரையில் இடம் பெற்ற செய்திகள் இன்னது எனக் கூறப் பெற்றுள்ளன.

1.2 அலங்காரம் , அநுபூதியில் சைவ சித்தாந்தம்

முனைவர் ஆர். முருகேசன்
அருள்மிகு பழநி ஆண்டவர் கலை , பண்பாட்டுக் கல்லூரி,
பழநி.

அருணகிரிநாதர், கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அநுபூதிமான். முருக வழிபாட்டைச் சிறப்பித்தவர். இவர் சைவ சித்தாந்த நெறியை மேற்கொண்டோராவர். அவர் தருளியுள்ள கந்தரலங்காரம் , கந்தரநுபூதிப் பாடல்களில் சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிப் பாடியருளியுள்ளார்.

இக்கட்டுரையில் அலங்கார அநுபூதிப் பாடல்களில் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ள இறைவன் முருகப் பெருமானைப் பற்றிய கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

1.3 சைவ சித்தாந்தம்

பேராசிரியர் வை. முருகேசன்

உலகு இறை உயிர் என்னும் முப்பொருள்களை அடித்தளமாகக் கொண்டது சைவ சித்தாந்தம். அம்மூன்றும் உலக மக்களை ஒரு குடும்பமாக இணைப்பன. உலகு நிலையாதது. தோன்றி நின்று அழிவது. அதனால் அது அசத்து. இறை என்றும் நிலையாய் உள்ளது. தோற்றமும் முடிவும் இல்லாதது அதனால் அது சத்து. உயிர் இரண்டு திறப்பட்ட அறிவுடையது. ஒன்றால் அசத்தாகிய உலகையும் சார்ந்து வாழும். மற்றொன்றால் சத்தாகிய இறையையும் சார்ந்து வாழும். அதனால் அது சத்தசத்து. உலகும் இறையும் ஒன்றை ஒன்று அனுபவியாது. உயிரே இரண்டையும் அனுபவிப்பது. அதனால் உலகும் இறையும் போகப் பொருள்கள். உயிரே போகிப் பொருள். இந்த அடிப்படை உணர்வில் நின்று உயிர்களது நீண்ட நெடிய பயண வரலாற்றைச் சித்திரிப்பதே சைவ சித்தாந்தம். ஞானக் கண்ணாலே இறைவனைச் சிந்தையிலே தேடிக்காணும். திருவைந்தெழுத்தைக் கணித்து ஆன்மசுத்தி செய்து கொள்ளும். இங்கு உயிர்கள் சுத்தான்மாவாகும். சுத்தான்மாக்கள் மேலும் அத்துவித நெறியில் நின்று ஏகனாகி இறைபணி ஒழுகும். சிவத்தன்மை பெற்று முத்தான்மாவாகும்.இங்கு மலம்மாயை கன்மங்கள் கெடும். இங்குச் சிவஞானியின் விடயப் புசிப்பை இறைவனும் புசிப்பன். அதைச் சிவஞானி உணர்ந்து அன்பால் இறைவனையே நினைந்திருந்து எடுத்துவந்த உடம்பு விழும்போது இறையருளில் கலந்து வீடுபெற்றுவிடுவான். இது சாத்திர நெறி.

சிவஞானி தன் உடம்பு விழும் காலம் வரை தமிழகத்து நால்வர் நாயன்மார்கள் வழிநின்று சிவனடியார் திருவேடங்களையும் சிவாலயங்களையும் சிவனாகவே கண்டு வழிபடுவான். இதுதோத்திர நெறி. இந்த இரண்டு நெறியும் இணைந்தவொன்றே உண்மையான சைவ சித்தாந்தமாம் என்பது மெய்கண்டார் கோட்பாடாகும். இதனை விரித்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.4 இயற்பியலும் இறையியலும்

ப. வெள்ளியங்கிரி
உசுமானியப் பல்கலைக்கழகம்

இறைவனைப் பற்றி நாம் எண்ணியவை சிந்தித்தவை எல்லாம் கற்கண்டு மலையில் சிற்றெறும்பு கடித்தெடுத்தது எவ்வளவோ அவ்வளவே.. என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுகிறார். எனவே இறையியலை நாம் அறியப்புகும்போது பெரியது என்றும் அளவிடமுடியாதது என்றும் மலைப்பெய்தினாலும் அதனைப் பற்றி நாம் அறிந்தோ அறியாமலோ செய்திகளைப் பெறுகிறோம். கற்கண்டு மலைபோன்று இருந்தாலும் எறும்பு கடித்த துகளிலும் அதன் சுவை வெளிப்படுவது போன்று இப்பிரபஞ்சத்தில் ஒவ்வொரு நிலையிலும் இறைவெளிப்பாடு காணத்தான் செய்கிறது. அவ்விறை வெளிப்பாட்டை எத்தனையோ நபர் எதனையோ பெயர்களால் குறிப்பிட்டாலும் அஃது ஒன்றாகவே செம்பொருளாகவே இருக்கிறது. அத்தகைய மங்களகரமான குணம் உடையதனாலேயே அது 'சிவம்' என்று அழைக்கப் பெறுகின்றது.

இயற்பியலார் பிரபஞ்சத்தைப் பற்றி எவ்வளவோ கூறியுள்ளனர். ஆய்வு செய்துள்ளனர். பிரபஞ்சம் என்பதும் இறைவனின் ஒரு கூறே. இதனை நீக்கி விட்டு இறைவனைத்தனியாக அறியமுடியாது. இறைவனின் இயல்பை மறந்துவிட்டு உலகையும் தனியாக அறியமுடியாது. அப்படி அறியும் அறிவு அறிவற்றதாகவே அமையும். எனவே , இயற்பியலார் கூறும் பிரபஞ்ச இயல்பில் உண்மைச் செய்திகள் இருப்பின் அவை இறைவனின் வரம்பற்ற நிலைகளின் விளிம்பைப் பற்றிய ஒரு சில செய்திகளே எனலாம்.

அமர்வு இரண்டு

சைவ சமயம்

2.1 VEERASAIVAM : A SOCIO - RELIGIOUS REFORM MOVEMENT

Dr. G. Karunanithi
Manonmaniam Sundaranar University

This paper attempts to explain that Veerasaivism is primarily a socio-religious reform movement from socilogical perspective. It also discusses the limitations of this movement and its trends in contemporary times.

This movement was initiated by Basaveswara in Karnataka in eighteenth centurary. One the one hand, it was a social reform movement as it attacked casteism and its resultant factor, ie., social inequality in terms of superiorty of Brahimins over other caste people. On the other hand, it was a religious reform movement because it opposed a series of rituals associated with the Saivism, and preached 'Ishtalinga' worship. It readily accommodated people irrespective of sex, caste, religion and the like, and resulted in the emergence of a new religious sect, viz., Veerasaivism, an offshoot of the Saivism. Later the followers of this sect became Lingayats.

It is needless to say that this sectarian movement got organised mainly to put an end to social inequality and bring about religious reformtion in terms of abolishing rituals and ceremonies associted with the Saivism. Nevertheless, after sometimes, the followers of this faith were slowly infected with caste elements, and their religious practices, in the couses of time, assumed apparently the characteristic features of the rituals of the Saivism. The paper thus , concludes that the movement was unable to realise its goals as it originally aimed at.

2.2 RELIGION, PHILOSOPHY AND MEDICINE IN SACRED ASH : An Anthropological study of Thiruneetruppathigam "

Dr. V. Karuppaiyan
University of Madars

Anthropologists are known for the structural and functional analysis of the aspects of a given culture. As such an attempt has been made in this paper to explain the forms and functions of the sacred ash which is being smeared on the forehead head of a three follower of the Lord Siva with particular reference to ten poems of the baby saint poet Thirugnanasambandar.

To quote Thirugnanasambandar " Samayathil iruppathu neeru means that the sacred ash is in the Saiva religion. A gain he says three Thatthuvamavathu neeru and it means that the sacred ash deals with the philosophy of Saiva religion. Similarly Thirugnanasambandar speaks that the sacred ash cares mental and physical illnesses of man on this world.

There are sixty eight different forms of the sacred ash and they are related to their respetive functions for the survival and maintanance of the human life on this earth as pronomed by Thirugnanasambandar in his prayer songs on the Lord Siviva namely Sundareshwarar of Madurai temple. The full length paper can futher explain the devine truth.

2.3 RELIGION AND SERVICE

Mrs. Vanathy Ravindran

The avenue of service has been given an important place in the Saiva Philosophy from its inception to achieve the grace of God. There has been necessity too on the increase for service amongst society.

Time extends far behind and far beyond. What little man has

to do has to be done quickly, at the place that is assigned to him, to serve the needs his fellow men. The easiest and most pleasant means by which this can be accomplished is by developing a sprit of dedication and devotion to ensure peace, security and prosperity within the parameters allotted to each of us.

All Religions believe that there is a God showering Grace upon all those who profess to abide by that faith alone. The followers of each religion call upon that one God, who is omnipresent, omniscient, and omnipotent to listen to their prayers and help them from all calamities and confer upon all mankind health, prosperity , peace and happiness.

However in spite of great progress in many other areas of life, religous animosity is a flame even today , in many parts of the world. It has to be emphasised that religion is not the root cause of this state of affairs. Religions attempt to implant holy ideals in the heart of man, but man does not allow them to sprout and grow. His egoistic craving for power and competitive success has in most cases, persuaded him to use religion. Religion strives to destroy just this vicious tendency. Therefore it has to be supported and not denied. It encourages people to see God in all living beings specially in the ones that need help. It gives us a deeper understanding of the underliying truth that we are all God's creatures and therefore are one, irrespective of caste or creed or language.

It has always been the Hindu view that everyone has the right to a standard of living adequate for the health and well--being of himself and his family.

Service should be rendered to the limits of one's capacity, neither more nor less. What matters is that something is done to the people in need rather than nothing at all. So the need of today is to educate, emphasise and bring about an awareness in societies, our communities nation-wide, and in our world for the increase in need to wipe a tear, hold a hand, motivate more helping hands. This paper deals with detail the relation between religion and service.

அமர்வு மூன்று

சைவ நூல்கள்

3.1 சைவ சமயச் சொற்களும் தமிழ் அகராதியியலும்

முனைவர் இரா. திருநாவுக்கரசு
தமிழ்ப் பல்கலைக்கழகம்

அகராதி ஆரம்ப காலத்தில் கடினச் சொற்களுக்குப் பொருள் கூறுவதை மட்டுமே அடிப்படை நோக்கமாய்க் கொண்டிருந்தது. மொழியின் காப்பகமாகப் பயன்படத் தொடங்கிய காலம் தொட்டுப் பொதுச் சொற்களும் அகராதிகளில் பதிவு செய்யப்பட்டன. மொழிப் பயன்பாடு பல்வேறு துறைகளில் பரவலானபோது மதம் , அரசியல் , அறிவியல் , தொழில்நுட்பம் , இலக்கணம் போன்ற பல்வேறு துறை சார்ந்த சொற்களும் அகராதிகளில் பதிவு செய்யப்பட்டன. பொது அகராதிகளுக்குள் ஒரு பகுதிச் சொற்களாக இடம்பெற்ற இவை பின்னாளில் சிறப்பகராதிகளின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்தன. இதைச் சைவ சமயம் சார்ந்த சொல் வரலாற்றிலும் காணலாம்.

சைவ சமயம் சார்ந்த சொற்கள் தமிழ் அகராதியியலில் இடம் பெற்றதற்கு நீண்ட வரலாறு உண்டு. நிகண்டுகள், ஒருமொழி அகராதிகள், இரு மொழி அகராதிகள் ஆகியவற்றில் அகராதிகளின் பரிமாணத்திற்கும் , நோக்கத்திற்கும் அளவிற்கும் , தரவு வேறுபாட்டிற்கும், சமுதாயச் சூழலுக்கும் ஏற்பச் சைவ சமயம் சார்ந்த சொற்கள் அகராதிகளில் இடம்பெற்று வந்தள்ளன. சிறப்பகராதிகளும் உருவாகத் தலைப்பட்டுள்ளன. தமிழ் அகராதியியலின் இந்த வரலாற்றுப் பின்னணியை ஆராய்வதுடன் சைவ சமயம் சார்ந்த தத்தது்வ நூல்கள், ஆய்வுகள் , சைவ சமய இலக்கியப் படைப்புகள் எனும் இவற்றின் வளர்ச்சிக்கு ஏற்பப் புதிய கருவி - நூல் உருவாக்கத்திற்கான சில பரிந்தரைகளை முன் வைப்பது இந்த ஆய்வின் நோக்கம். இந்த வகையில் முதல் பகுதியில் நிகண்டுகள் , ஒரு மொழி , இரு மொழி, அகராதிகளில் இடம்பெற்ற சைவ சமயச் சொற்களின் பதிவமைப்பு வளர்ச்சி நிலை விளக்கப்படும்.

இரண்டாம் பகுதியில் சிறப்பகராதிகளின் பதிவமைப்பு விவரிக்கப்படும்.

மூன்றாம் பகுதியில் சைவ சமய நூல்களுக்கான புதுப்புது தேவையைக் கருத்தில் கொண்டு சைவ சமயப் பரவலாக்க நோக்கில் பல்வேறு சிறப்பகராதிகளையும் உருவாக்குவதற்கான பரிந்துரைகள் முன்

வைக்கப்படும். மேற்கண்ட மூன்று பகுதிகளைக் கொண்டதாய் இவ்வாய்வுக் கட்டுரை அமையும்.

3.2 கல்லாடமும் இறைவன் திருவிளையாடல்களும்

எம். ஷீலா

திருக்கோவையாரின் சிறப்புணர்த்தும் நிலையில் எழுந்த நூல் கல்லாடம். புராணச் செய்திகளுடன் சிவபெருமானின் பல்நிலையிலான திருவிளையாடல் செய்திகளும் இதில் கலந்து பேசப்பட்டுள்ளன. அடியார்கள் பற்றியும் , மதுரை நகரில் நிகழ்ந்த இறைவன் திருவிளையாடல்கள் பற்றியும் , முப்புரம் , காமதகனம் , தாருக வனம் பற்றியும் எனப் பலவகையான திருவிளையாடல் செய்திகள் இதில் வந்துள்ளமையால் இது ஒரு முன்னோடி ஆய்வா க உள்ளது.

திருவிளையாடல் பற்றிச் செய்யப்பட்டுள்ள பல ஆய்வுகளும் பெரிய புராணத்தை அடிப்படையாகக் கொண்டனவே. பரஞ்சோதி யாரின் திருவிளையாடல் புராணம் பற்றிய ஆய்வொன்றும் உள்ளது. இவ்வகைமைக்குள் கல்லாடத்தில் அமைந்தள்ள பொதுவான திருவிளையாடல்கள் அடங்காமையின் இங்கு வேறொரு வகைமை தேவைப்படுகின்றது.

அடியார்க்கருளல் , முழுமுதல் எனும் நிலையில் மருள் தீர்த்தல் , அறிவுறுத்தலும் அறிவூட்டலும் , மறவருள் புரிதல் , வினைப்பழி தீத்தலும் தவப்பயன் வழங்கலும் , துயர்போக்கல், அடையாளங்காட்டல் எனும் ஏழு நிலைகளில் கல்லாடத்திலமைந்துள்ள திருவிளையாடல்களை வகைப்படுத்தலாம். அடிமுடிகாணல் , நடனக்காட்சிகள் போல்வன பரவலான ஆட்சி பெறும் இறைவன் திருவிளையாடல்களாகும். முத்தேவர்களுக்கும் முதல்வன் ; அடியார்க்கு எளியன் ; மறவருள் புரிபவன் போல்வன ஏனைய திருவிளையாடல்கள் உணர்த்தும் செய்திகளாம்.

அமர்வு நான்கு

சைவத் திருவிழாக்கள்

4.1 சைவமும் விழாக்களும்

பேராசிரியர் வி . சிவசாமி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலகிலுள்ள அனைத்து மதங்களிலும் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. விழாக்கள் மூலம் பொதுவாக மனிதன் காலம் தோறும் - மிகப்பழைய தற்காலம் தொட்டு விண்வெளிப்பயணத்தினை மேற்கொண்டிருக்கும் இக்காலம் வரை தனது உணர்வுகளையும் , நம்பிக்கைகளையும் வெளிப்படுத்திவந்துள்ளான். இவ்விழாக்கள் இயற்கை நிகழ்வுகள் , குறிப்பிட்ட சம்பவங்கள் , நம்பிக்கைகள் முதலியனவற்றை அடியொற்றி மக்கள் மத்தியிலே கொண்டாடப்பட்டு வந்துள்ளன. இவை மக்கள் ஜனக்குழு நிலையிலும் , பின்னர், சமூக நிலையிலும் வாழ்ந்துவர , அவர்களுக்கிடையிலே ஒற்றுமையினையும், ஒற்றுமை உணர்வினையும் , மகிழ்ச்சியையும் , கலையுணர்வினையும், ஒரே தன்மையான அம்சங்களையும் தொடர்ந்து ஏற்படுத்தி வந்துள்ளன. விழாக்களினூடாக மனிதன் பண்புடையவனாகவும் , பரோபகார சிந்தனையுள்ளவனகாவும் , சமயப் பற்றுள்ளவனாகவும் வாழ்ந்துவர வர வழிகோலப்பட்டுள்ளன. பொதுவாக, விழாக்கள் தனிப்பட்ட மனிதனாலன்றிக் குடும்பத்தினாலோ அல்லது பலரும் சேர்ந்த சமூகத்தினாலோ கொண்டாடப்படுவன.

மனிதனுக்குப் பரம்பெருள் பற்றிய உணர்வு ''தெய்வம் என்பதோர் சித்தமுண்டாக '' , சமய நம்பிக்கைகள் , சிந்தனைகள் முதலியனவற்றின் தாக்கம் விழாக்களிலேற்பட்டு , அவை பெரும்பாலும் சமய விழாக்களாகப் பரிணமித்துள்ளன. இன்றைய நிலையிலே விழாக்கள் இவ்வாறு தென்படுகின்றன . எனவே முக்கியமான விழாக்களைப் பாகுபாடு செய்து. அவற்றின் குறியீடான முக்கியத்துவம் , பெறுமானம் , கலையம்சங்கள் முதலியன சைவ சமய ரீதியிலே இக்கட்டுரையில் எடுத்துக் கூறுப்படும்.

4.2 சைவத் திருவிழாக்கள்

கா. சுப்பிரமணி
நெல்லை

சைவ ஆயலங்களிலும் ஆறு வகைத்திருவிழாக்கள் இறைவன் அமைத்தவை. 1. நித்தியபூஜை காலங்களுடன் சேர்ந்து அமைவது நித்திய விழா. 2. வார விழா (சோமவாரம்). அவைகளின் குறைகளை நீக்க அமைவது நைமித்ய பூஜை ஆகிய 3. பிரதோஷகால விழா (பக்க விழா) பக்ஷம் விழா ஆகியவை பக்க விழாவில் ஏற்படும் குறைகளை நீக்குவதற்கு ,4. மாதவிழாவாகவும் அதனோடு சிறப்பாக. 5 பெருந்திருவிழாவாகவும் நடத்துவது சைவ மரபு. வருஷ விழா(பௌத்ரோத்ஸவம்) 6. கும்பாபிஷேக விழா (பெரும்சாந்தி)

இம்மரபின் அடிப்படையில் மரபு காத்தற் பொருட்டும் அமைவதாகும்.

மரபு என்று சொல்லப்படுவது நாட்டு மக்களின் ஒழுக்கம் , பண்பாடு , நாகரீகம் என்பவற்றின் அடித்தளமாக அமைவது. சைவப் பண்பாட்டின் அடிப்படையில் அமைவதே சைவத்திருவிழாக்கள்.

சைவத்திருவிழாக்கள் தத்துவங்கள்

'ஆறாறு (முப்பத்தாறு) தத்துவங்கள் சைவர்க்கே'

முப்பத்தாறு தத்துவங்களின் அடிப்படை பிற சமயங்களின் கோட்பாடுகள் அனைத்தும் தன்னகத்தே அடங்கியிருப்பவை. இதனை உயிரின் அறிவுப் பரிமாணத்தைக் கொண்டு நிர்ணயிக்க வேண்டியது. இதனடிப்படையில் ஆய்வுக்கட்டுரை அமையும்.

அமர்வு ஐந்து

திருக்கோயில்கள்

5.1 வரலாற்றில் திருக்குற்றாலத் திருத்தலம்

சொ. சந்திரவாணன்

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே வரலாற்றுத் தடையங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் சிறப்புடைய நகர் திருக்குற்றாலம் ஆகும். நுண்கற்கருவிகளும் , முதுமக்கட் தாழிகளும் பழைய குற்றாலத்திற்கு அருகில்'அழுத கண்ணி ஆற்றங்கரையில்' கிடைக்கின்றன. இது பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பே மனித நடமாட்டம் இந்த ஊரில் இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

எழுத்துச் சான்று கிடைக்கும் வரலாற்றுக் காலமாக , இங்குள்ள (மலை மீதுள்ள) 'சன்யாசிப் புடவு' என்ற இடத்தில் காணப்படும் மிகப் பழமையான கல்வெட்டைக் குறிப்பிடலாம். கல்வெட்டியல் அறிஞர்களாலும் படிக்கவியலாத நிலையில் அமைந்த மிகத் தொன்மையான எழுத்து வடிவமாக அமைந்தள்ளது.இவ்வெழுத்து ; உருவ எழுத்திற்கும் , ஒலியெழுத்திற்கும் இடைப்பட்ட காலமாக இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

இதனையடுத்து இவ்வூரின் காலப்பழமையை விளக்குவதது சம்பந்தர் , அப்பரின் தோவரப் பாடல்கள் ஆகும். அவை குற்றால நகரையும் இங்கு எழுந்து அருளும் சிவனையும் சிறப்பாகக் கூறுகின்றன. அப்பர் , சம்பந்தரால் பாடப்பட்டிருப்பினும் அவர்கள் காலத்திற்குரிய பழமையான கோயில் அமைப்பு இங்கில்லை. தற்போதுள்ள அமைப்பு பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு மன்னர்களால் உருவாக்கப்பட்டது என்பதனைக் கல்வெட்டுகள் கொண்டும் கட்டிடக் கலை அமைப்பு கொண்டும் , சிற்ப அமைதி கொண்டும் கணித்துக் கூறலாம்.

குற்றாலத்தின் மற்றொரு சிறப்பு இங்குள்ள சித்திர சபையாகும். தமிழகத்துள்ள பஞ்ச சபையுள் இதுஒன்று. இச்சபை தென்காசிப் பாண்டியர் காலத்தில் 'செப்போடு' வேய்ந்து சேர நாட்டுக் கலைப்பாணியுடன் காணப்படுகின்றது. உள்ளறை ஓவியங்கள் காண இனியன.

கல்வெட்டுக்களாலும் , சிற்பங்களாலும் , செப்பேடுகளாலும் வரலாற்றில் காலந்தோறும் ஏற்பட்ட வளர்ச்சியையும் , மாற்றங்களையும் எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

5.2 நெல்லையப்பர் கோவில் பரிவார ஆலயங்கள்

முனைவர் மா. செந்தில் செல்வக்குமரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தொடக்ககாலத்தில் ஒரு குறிப்பிட்ட தெய்வங்களை மட்டும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்துக் கோயில் அமைத்து வழிபடுவது வழக்கமாக இருந்தது. முருகன் , திருமால் , இந்திரன் , வருணன் , கொற்றவை ஆகிய இவை ஐந்தும் ஐந்நிலத் தெய்வமாக வைத்து வழிபட்டு வந்தனர். இவற்றிற்கெல்லாம் தலையாயதான ருத்திரன் எனும்,சிவனை அரூருவமாக லிங்க வடிவில் வைத்து வழிபட்டனர். இவ்வழிபாட்டு முறை 2000 ஆண்டுகட்கு முன்னரே இருந்து வந்துள்ளது.

இதன் பின்னர் மன்னர்கள் கோயில் எழுப்பிய காலத்திலும் சிறிய கோயிலை எழுப்பிக் கருவறையுள்ளே அக்கோயிலுக்குரிய தெய்வத்தை இடம் பெறச் செய்வதை வழக்கமாக் கொண்டனர். இதனை அடுத்து வந்த கால கட்டத்தில் கருவறை , அரை மண்டபச் சுவர்ப் பகுதிகளில் கோட்டங்களை அமைத்துப் பிற தெய்வ உருவங்களை இடம் பெறச் செய்தார்கள்.

நாளடைவில் சிறிய கருவறைக் கோயிலைப் பெரியதாக்கிக் கட்டிய மன்னன் பல திருச்சுற்றுக்களைக் கட்டிப் பெரிய கோயிலாக்கி , ஆகம நூல்கள் வழிச் சில துணைக் கோயில்களை எழுப்பத் தொடங்கினார்கள். இதன் காரணமாக கோயில் திருச்சுற்றைச் சுற்றிப் பல துணைக் கோயில்கள் தோன்றலாயிற்று. இத் 'துணைக்கோயில்கள்' பரிவார ஆலயங்கள் என்றும் , அழைக்கப்பட்டன.

ஒரு சிவன்கோயிலைச் சுற்றிப் பல சிவன் கோயில்கள் பரிவார ஆலயங்களாக அமைந்தள்ளன. இதற்குரிய காரணம் காணும் போது பல தலங்களுக்குச் சென்று வழிபட வசதியற்றோர் ஒரே தலத்தில் பல சிவத் தலங்களுக்குச் சென்று வழிபட்ட பலன்களைப் பெறலாம் என்ற காரணத்தால் பல லிங்க உருவங்களைக் கொண்டே கோயில்களை எழுப்பியுள்ளனர். இவை தவிர ஆளும் மன்னர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்த் தங்களின் இஷ்ட தெய்வத்தைத் தாங்கள் ஆண்டதின் நினைவாகப் புதுக்கோயில் எழுப்பி அதனுள் எழுந்தருளச் செய்வர்.

5.3 திருச்சிற்றம்பலம் சொற்பொருள் விளக்கம்

டாக்டர் நாகப்பா நாச்சியப்பன்

திருமறைகள் தொடங்கி வடலூர் வள்ளல் பெருமான் இராமலிங்கர் காலம் தொட்டு '' திருச்சிற்றம்பலம் '' எனும் பேரம்பல வழிபாடு எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காண முயல்வதே ஆய்வின் நோக்கமாகும்.

இயற்கை அழகில் தம் உள்ளத்தைப் பறி கொடுத்த பண்டைத் தமிழ் மக்கள் இவ்விடங்களைக் கடவுள் தன்மையாகக் கண்டனர். இயற்கை அழகிலிருந்து வழிபாடும் , வழிபாட்டிடங்களும் தோன்றியுள்ளன. கண்ணுக்கினிய இயற்கையின் பசுமை , காதிற்கினிய இயற்கை ஒலி , மூக்கிற்கினிய நறுமணம் , நாவிற்கினிய நற்கனிகள் , உடலுக்கினிய தென்றல் காற்று ஆக மாந்தர் இனம் இயற்கையில் ஒரு முழுமையான இனிய அனுபவத்தைப் பெற்றது. இயற்கையை வழிபட்ட மக்கள். இறைவனின் அடையாளச் சின்னமாகக் கருவிகளை வழிபடத் தொடங்கிய பொழுது , மரங்களின் அடியில் , மலைச்சாரலில் வைத்து வழிபாடு செய்துள்ளனர்.இவ்வாறே இயற்கை வழிபாட்டு இடங்கள் தோற்றம் பெற்றுள்ளன. பின்னர் இவை மரநிழல் , கொடிக்கூடம் ; காவணம் , குடில் , மண்தளி, சுடுமண்தளி மரப்பலகைகளால் அமைந்த அம்பலம் , குடைவரை , ஒற்றைக்கற்றளி , கற்கோயில் எனப் படிப்படியாய் வந்துள்ளன. கோயில்கள் ஏற்படுவதற்கு முன்பு பொதியில் , மன்றம் , முற்றம் , அம்பலம் போன்ற இடங்கள் அக்கால மக்களின் வழிபாட்டிடங்களாக இருந்துள்ளன.

இயற்கையின் எழில்மிகு சக்தியை வானத்தில் ஞாயிறாகவும் , திங்களாகவும் காற்றாகவும் , நீராகவும், நெருப்பாகவும் , கண்ட மக்கள் அந்த வானத்தை , பெருவெளியை வழிபடத் தொடங்கினர். அந்தப் பெருவெளியின் இயக்கத்தை இறைவனின் இயக்கமாக , நடனமாக , தாண்டவமாக அருளாளர் கண்டு தெளிந்து கூறினார்கள். இயற்கையின் ஒழுங்குப்பாடான இயக்கமே ஆடவல்லானின் ஆனந்தத் தாண்டவமாக உருவகிக்கப்பட்டது.அவ்வியக்கத்தைத் திருக்கோயில் வழிபாட்டில் காட்ட முற்பட்ட நம் தமிழ்ச் சமயச் சான்றோர்கள் திருக்கோயில்களில் கருவறைக்கு இடப்புறமாக அம்பலம் எனப்படும் நிருத்தசபை அமைத்து இயற்கையின் இயக்கத்தை இறைவனின் ஆனந்தத் தாண்டவமாகக் காட்டினர். இவ்வம்பலம் நிருத்தசபை , நடனசபை, சபா மண்டபம் எனப் பலவாறு பெயர் பெற்றுள்ளது.

சபைகளுள் முதன்மையாகக் கருதப்படும் சபை தில்லையில் உள்ளது. இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற திருச்சிற்றம்பலம் , சமயக் குரவர்களால் போற்றப்பெற்ற திருச்சிற்றம்பலம் திருமூலர் பார்வையிலும் , சித்தர்கள் பார்வையிலும் எவ்வாறு அமைந்தது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. திருச்சிற்றம்பலம் எனும் சீரிய வழிபாட்டின் உண்மை வடிவம் என்ன என்பதைக் காண்பதே இவ்வாய்வின் நோக்கும் போக்குமாகும்.

அமர்வு பத்து

திருமுறைகள்

10.1 திருஞான சம்பந்தரும் இலக்கியப் பணியும்

முனைவர் இரா. ஜெகதீசன்
தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி , மதுரை

தமிழ்மொழி உயரியதத்துவச் சிந்தனையை வெளிப்படுத்தி இன்றளவும் உயர்வாழ்விற்கு வழிகாட்டியாய் விளங்கிவருவதையும் ஆடல், பாடல் , இலக்கியம் முதலான பல கலைகள் தோன்றுவதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்துள்ளதையும் வரலாற்றுச் சான்றுகளால் அறிய முடிகிறது. செம்மொழியில் திருமுறைகள் தோன்றிய வரலாற்றையும் பண்ணடைவு செய்த முறையையும் சுருங்க எடுத்துரைக்கின்றது.

தோடுடைய செவியனை உள்ளம் கவரச் செய்த திருஞான சம்பந்தரின்தோற்றமும் தோற்றம்பற்றி ஆய்வாளர்களிடையே நிலவும் கருத்துக்களையும் எடுத்துரைத்து , சைவ சமயத்தின் பெருமைகளை விளக்கும் வண்ணம் அவர் நிகழ்த்திய பத்தொன்பது அற்புதங்களையும் சுட்டி ,இறுதியில் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடிச் சோதியுட் புகுந்து இறையொளியில் கலந்தமையும் எடுத்துக் கூறுகிறது.

திருஞான சம்பந்தரின் பதிகங்களில் 8,9,10,11 ஆம் பாட்டல்களில் காணப்படும் சிறப்புத் தன்மைகளையும் பாடிப்பரவும் அன்பர்களுக்கு இடர்நேராவண்ணம் அருள் நோக்குடன் பதிகத்தின் பலனையும் இணைத்துப் பாடியுள்ளதைக் கூறிச் செல்கிறது.

சிற்றிலக்கியங்கள் தோன்ற பக்தி இலக்கியங்களே அடித்தளமாய் அமைந்துள்ளதையும் வருமொழி, திருவேகபாதம் , திருவெழு கூற்றிருக்கை, திருமுக்கால் , திருவிருக்குக்குறள் , வினாஉரை, திருமாலைமாற்று , திருத்தாளச்சதி, திருவிராகம் , பல்பெயர்ப்பத்து , திருச்சக்கர மாற்று, திருக்கோமூத்திரி , கூடற்சதுக்கம் இன்ன பிற சிற்றிலக்கிய வகைகளைப் பழைய மரபுகள் சிதையாவண்ணம் புதுவடிவம் அளித்து அறிமுகப்படுத்திய பெருமையையும் தேவார மூவர்களுள் செவ்வழிப்பண் அமையப் பதிகம் பாடியவர் திருஞான சம்பந்தரே என்பதையும் இந்த ஆய்வு சுருங்கக் கூறி விளக்க விழைகின்றது.

